# INTRODUCTION

The first part of the Piḷḷai-t-tamiḻ-k-kottu which has been composed in very sweet Tamil, was published on 12th February 1956 by the Government Oriental Manuscripts Library, Madras. In continuation of the above work, the second part is now published. This second part contains nine Piḷḷai-t-tamiḻs. The following are their names :—

1. Makara Neduṅkuḻai-k-kātar Piḷḷai-t-tamiḻ.
2. Tiruveṇṇey Nallūr Vaikuntanātar Piḷḷai-t-tamiḻ.
3. Maṇavai-t-Tiruvēṅkaṭamuḍaiyāṉ Piḷḷai-t-tamiḻ.
4. Rāmaliṅga Svāmikaḷ Piḷḷai-t-tamiḻ.
5. Yōgi Śāttaiyar Piḷḷai-t-tamiḻ.
6. Muttu Vīrappasvāmi Piḷḷai-t-tamiḻ.
7. Vēṅkaṭēśvaran Piḷḷai-t-tamiḻ.
8. Puduvai Aruṇācalam Piḷḷai-t-tamiḻ.
9. Murukappa Tēvar Piḷḷai-t-tamiḻ.

Among the nine Piḷḷai-t-tamiḻs, only the first two and the fourth are complete. In the third work of the Kottu, ' i.e. ', Maṇavai-t-Tiruvēṅkaṭamuḍaiyāṉ Paḷḷai-t-tamiḻ, the first eight paruvams are complete. The ninth Paruvam, i.e, Śiṟupaṟai-p-paruvam contains nine stanzas and the tenth Paruvam, Śiṟutēr-p-paruvam has only one stanza. In the fifth work, Yōgi Śāttaiyar Piḷḷai.t-tamiḻ, Kāppu-p-paruvam, Ceṅkīrai-p-paruvam, and Tāla-p-paruvam are missing entirely. Only one stanza in Śappāṇi-p-paruvam and five stanzas in each of the other Paruvams are found.

In Muttu Vīrappa Piḷḷai-t-tamiḻ each Paruvam contains three stanzas upto Ambuli-p-paruvam. Ciṟṟil paruvam has only one. In Vēṅkatēśvaraṉ Piḷḷai-t-tamiḻ excepting the last Paruvam, the other nine contain only three or four stanzas each.

In Puduvai Aruṇācalam Piḷḷai-t-tamiḻ, the first and the eighth Paruvams have seven stanzas each, the seventh and the tenth Paruvams have six stanzas each and the rest have five stanzas each.

Murukappa Tēvar Piḷḷai-t-tamiḻ has four stanzas in the first Paruvam and three stanzas in the other nine paruvams. In addition, there is one prayer song and one praise song at the end.

1. Makara Neduṅkuḻai-k-kātar Piḷḷai-t-tamiḻ. Kāppu-p-paruvam :—

Sundaramūrtti svāmikaḷ, in response to the wishes of Anapāya cōḻan' composed the original work called "Tiruttoṇḍa-t-tokai". Based on this original work, Karuvūr Nambiyāṇḍār Nambi wrote his "Tiruttoṇḍar-vakai". Later, Śēkkiḻār used the above two works to write his exhaustive work "Periya purāṇam" Mahāvidvān Mīnākṣisundaram Piḷḷai has written a Piḷḷai t-tamiḻ on Śēkkiḻār.

In his work he has made all the Nāyanmārs appearing in all Tiruttoṇḍartokais as protective Gods over Śēkkiḻar in the Kāppu-p-paruvam. Similarly, the author in Makara Neduṅkuḻai-k-kātar Piḷḷai-t-tamiḻ makes the twelve leaders (Āḻvārs) of the Vaiṣṇava sect as protective deities of Makara Neduṅkuḻai-k-kātar in the Kāppu-p-paruvam. In doing so, he has given the place of each Āḻvār and their respective works. The author's name is not known. But from the introduction it is inferred that the author might have been Ragunātha Bhaṭṭar.

2. *Tirvveṇṇey Nallūr Vaikunta Nātar Piḷḷai-t-tamiḻ* :—

Tāla-p-paruvam :—Its author is unknown. Though it is mentioned that the author is Tirumēni-k-kavirāyar, it is not known who he was. But the author was well-versed in Tamil. He was also a Vaiṣṇavaite. It is also seen that he had a great desire in singing the fertility of Veṇṇeynallūr, the native place of the patron of Kamban with songs full of pregnant ideas. It is replete with many figures of speech and beautiful ideas and as such thoroughly enjoyable. The following lines illustrate his imagination and the fertility of Tiruveṇṇey Nallūr.

"வள்ளைக் கமலம் முறுக்குடைந்து. . . . .
தண்ணங்கமலப் பெண்ணமுதின் தவமே தாலோ தாலேலோ"

which appear in the third stanza, show the fertility of wet lands. On one side the tall lotus flower which has blossomed is bending. By its side there is a red lily which is low and folded. The honey drops from the tall lotus flower into the red lily. This scene reminds to the Vaiṣṇavaite author, the beautiful scene of Kṛṣṇa sucking milk from his mother Yasōdha. The excellence of the poet's imagination that we find in this Piḷḷai-t-tamiḻ is wonderful. On the other side, we find a farmer ploughing in the field with a goad in his hand. Next to his field is a pond whose water is crystal. A large expectant shark jumps up from the water towards the sky. The farmer throws immediately his goad at the jumping shark. The goad that is thrown travels with such a speed dashing through the nearby trees that their fruits, plaintains and jack fruits are scattered to the ground. In this passage

the imaginative poet depicts the fertility of Tiruvenney nallūr. This recalls to our mind a poem in Puranānūru that speaks about the skill of archery of Valvil ōri and this amply shows the poet's erudition of Sangam Literature. The rhythmic beauty of his verse fills the readers with great pleasure.

3. Maṇavai Tiruvēṅkaṭamuḍaiyāṉ Piḷḷai-t-tamiḻ :—

The author is unknown. This Piḷḷai-t-tamiḻ abounds in sweetness of its style and rhythm. The author compares the greatness of the kiss of Tiruvēṅkaṭa muḍaiyāṉ with that of the pearls of different places and says the merit of the former is greater. [There is a pun on the Tamil word 'muttam' which means both Kiss and Pearl (s).] In the course of his comparison, he gives a clear description of the origins of different kinds of pearls and proves their defects and deformities. The pearls of the sea are kicked by the waves and caught into the net of the fishermen. The pearls of sugarcane get crumbled as they go into the sugar-mill. And we get pearls from the lotus also; but they spring up from muds. And we get pearls from the tusks of the elephant. These are very small in size and hence defective. And the pearls from the bamboos are tortured by the lips of the fire and lose their lustre. And the pearls that we get from the clouds fall victims to the attack of thunders. Hence all the above Muttams (pearls) prove themselves defective when compared to the Muttam (Kiss) of the child. Tiruvēṅkaṭāmuḍaiyān and it is this kiss the spotless and sparkling Kiss of the sweet, and Vedas-pouring lips that the author longs for.

4. Rāmaliṅga Svāmikaḷ Piḷḷai-t-tamiḻ. The author of this Piḷḷai-t-tamiḻ is one named Sundarar of Ponnēri which is near Madras. He is noted for his scholarship in *Thiruvārutpā* and Śaiva Purāṇas. He is an eloquent speaker. He belongs to the Karuṇīka community. We learn these details from the prefatory poems of Tiru. Vaḍivēlu Piḷḷai, Tiru Paramaśivam Piḷḷai, Tiru. Śōḍasāvadānam, T. K. Subbarāya Chettiar and Aṭṭāvadānam Pūvai, Kalyāṇasundara Mudaliyār. Rāmaliṅga Svāmikaḷ of this Piḷḷai-t-tamiḻ belongs to Vaḍalūr near Chidambaram. He studied all that he should at his early years without going to school but by the grace of Lord Muruka. And though he got married, he renounced at once his marital bliss and turned out a Yōgi. And he dedicated himself to the Lord Tyāgēśar of Tiruvoṟṟiyūr near Madras. At first Rāmaliṅga Svāmikaḷ embraced Śaivism but after perfect realisation preached the equality of all religions and practised religious tolerance. He preached that serving the humanity is the proper way to serve the Lord, and that Jīvakāruṇya is the easiest and only way

to attain Mōkṣa. Broadly speaking, these are two systems of Śaivism Advaita and Dvita. The concept of God in Dvaita Śaivism is transcendental. He is conceived of as the Immutable one who is absolutely beyond the powers of human comprehension. He is the embodiment of the Eight Guṇās. He is pure knowledge. He is the Paramātmā (Supreme Brahman) who creates and lords over all other lives (Jīvātmās) in the world. In order to attain Mōkṣa, the Dvaita school of Śaivism clearly maintains that one has got to free himself from diabolic qualities like Āṇava Karma, and māyā; the three Bonds of Jivātmās. They believe that the Creator and creations are radically different from each other.

According to the system of Advaita, there is no ultimate separate reality for Jīvātmā. The God is Imminent. He is Omniscient, Omnipresent and Omnipotent. He is the *Vāg* (word) and its *Artha* (meaning). He is the one without a second. He is the Director of the Universe and at the same time submits himself to that direction too. The same con ception is found in Tiruvāymoḻi and Maṇivācakam. God remains a the Sky-Land-Air-Light-Heat-Life Truth and Lie. He stands as our King. He is the cause of the untrue feelings of we-ness and oursness in the human beings. And if he wills us to act, who is there among us that cannot submit himself to Him ? One who desires to attain Godhood, i.e., the Omnipresent, Omniscient, and Omnipotent qualities should and must have love and grace in one's heart. He should serve one and all and eradicate their ignorance. He should uphold his kith and kin with great affection towards them and lead them in the path of righteous-ness, the path that leads them to the eternal bliss. It is through dissolving ignorance and attaining the knowledge of God that ond should realise God in one's heart where God and the heart are identical. It is through this way that Vaḷḷuvar, Tāyumāṉavar—Ravīndarar and our Rāmaliṅga Svāmikaḷ attained Godhood.

Sundarar, the author, describes the oneness of religions, which is the discovery of Rāmaliṅga Svāmikaḷ, in his Piḷḷai-t-tamiḻ, in the part of Varukai-p-paruvam. The charm in his description fills the readers with great pleasure.

In the third poem that ends with :—“ பதிநித்ய வறிவாம் முதல் வருக வெண்மணி வருகவே”, the author explains the Advaita doctrine of Sivajñāṉa Bōdham so that all should easily understand and thereby reach the Eternal Bliss, Sat-chid-ānanda *pati-paśu-pāśam* is the Trio of Śaivism. Pati means God whose knowledge is indestructible. This god of perfect knowledge appears as though

he is different from the living beings of the world-whose knowledge is limited and destructible. But He is identified with one and all. The Intellect that paves the way for realising God is called *Paśu. Paśu* is bound by *Pāśam* which is the conglomeration of the three bonds. Āṇava, Karma and Māyā. That which helps *Paśu* to perceive *Pati* abolishing the shackles of *Pāśam*, is called the Intellect. *Pāśm* and Paśu are at the mercy of *Pati*. He who is *Pati* is also Paśu and *Pāśam*. To realise this is the ultimate function of the Intellect of Paśu. This line, "O, Siddhānta! You who say that the three are one!" in his poem gives much food for thought. We recall to our minds the comparison of *Tiruvācakam* with the Vēdas made by Śivaprakāśa Svāmikaḷ, when we look into the comparison Aruṭpā with Śivajñāṉa Bōdham by this author. To quote Śivaprakāśar :—" Whereas the Brahmins' Vēdas may be compared to a golden pot which can be used and profited only by the few intellectuals, the Tiruvācakam is like the mud-pot which can be, and is, possessed even by the poorest people. We do not see the reciters of the *Vēdas* shedding tears out of joy and melting their hearts even when they perceive the purport of the *Vēdas*. But it is a common occurrence that the singers and hearers of even one song in *Tiruvācakam*, which is easily accessible to the laymen, stand melting their stone-hearts, tears overflowing their eyes like the spring-water from the river-bed and the hairs on the body standing straight out of excitement. Such is the powerful effect of Tiruvācakam and all the people who hear it become ready to attain the eternal bliss of the Divine ".

5. Yōgi Śāttaiyar Piḷḷai-t-tamiḻ. The authors of the Piḷḷai-t-tamiḻs of numbers 5, 6, 7, 8 and 9 are not known. Hence the following life-sketches are only of the protagonists of the Piḷḷai-t-tamiḻs Yōgi Śāttaiyar belongs to Aḍiśainagar. He is a lover of poetry. His is a heart which is noted for its courage. He is also endowed with Siddhis. There is a reference to this in the poem number 3 of Śiṟutēr-p-paruvam. He says that even though he was a pig in his previous birth according to a curse now he had worshipped the God once in the forest since the habit of the past birth followed him in this birth too. He was then restored to his human life with the blessings of the Almighty. After his restoration, the merchant of Pavuttirapuri presented him with many lands and brought him to the city. By the Grace of the Lord of the Universe, he obtained the darśan (interview) of Yama and he saw his city of virute with its big wall, dome and tower and felt that it was brought before him. This Piḷḷai-t-tamiḻ abounds sweetness of expression, thought and imagination.

6. Muttu Vīrappasvāmi Piḷḷai-t-tamiḻ.

It is said that the protagonist of this Piḷḷai-t-tamiḻ was called by another name Muttuvīrappa Karuppaṇṇan and it is also said that he was the son of Muttuvīrappar. He was a charitable and virtuous person. As the author was a staunch Vaiṣṇavaite he takes us through his work to Rāma of Kōsalanāḍu where runs the river Ganges ; Kṛṣṇa of Dvārakā who was brought up with great affection by Yaśōdā.

7. Vēṅkaṭēśvaraṉ Piḷḷai-t-tamiḻ. Vēṅkaṭēśvaraṉ of this Piḷḷai-t-tamiḻ belongs to Iḷaśai-p-pati. His army consisted of cavalry and many a troop of elephants. He was a Pāṇḍya and a descendent of Candra kulam. He was noted for his courage and his scholarship. He ruled over the country which contained lands with fertility of water, with great admiration. During his reign, he routed out the poverty from his country. He was a philanthropist. The above facts are known from this Piḷḷai-t-tamiḻ. A perusal of this work will entertain the readers with pleasure.

8. Puduvai Aruṇācalam Piḷḷai-t-tamiḻ. Aruṇācala Narēndran the original writer of this Piḷḷai-t-tamiḻ belonged to the city of Puduvai of Śentamiḻnāḍu. He was the son of the rich and the famous Śaravaṇa Muttu Būpan. He was rich and noted for his learning, He was so charming that even women would aspire for his love. He was modest and polite to every one. He was noted for his philanthropy. His heart was full of love and grace. He had been blessed with the grace of a Guru. We come to know of this from this Piḷḷai-t-tamiḻ. This is rich in thought and full of rhythmic beauty.

9. Murukappa Tēvar Piḷḷai-t-tamiḻ. Murukappa Tēvar of this Piḷḷai-t-tamiḻ was the son of Paḻaniyappa Kuriśil of Iḷaśaināḍu. He was said to be so handsome as Tirumāl. He was well-trained in archery. He was youthful and pious as Mārkaṇḍa. He was noted for his generosity and philanthropy. He was the fountain head of all virtues. This work gives us the above details. This work is to be reckoned as the quint essence of all Alaṅkāras and this is also to be regarded as sumptuous feast to the mind.

The following persons who very generously presented the following copies of manuscripts to this library are to be congratulated upon and thanked :—

| Name. (1) | Address. (2) | Manuscript. (3) |
| --- | --- | --- |
| 1 Tiru. Sundarammaḷ. | Aḻvār Tirunagari, Tirunelveli District. | Makara Neduṅkuḻaik-kātar Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 426 of 1919-20. |
| 2 Tiru. K. Shanmugam. | Kumarakuppam Village, South Arcot District. | Tiruveṇṇeynallūr, Vaikuntanātar Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 3000 of 1951–52. |
| 3 Tiru. Ramānuja Jīyar Svāmikaḷ. | Vānamāmalai Mutt, Vānamāmalai, Nāṅgunēri, Tirunelveli District. | Maṇavai - Tiruvēṅkaḍa Muḍaiyān Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 5706 of 1923–24. |
| 4 Tiru. V. M. Duraisvāmi Piḷḷai. | Madras .. .. | Rāmaliṅgar Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 5708 of 1955–56. |
| 5 Tiru. Kuṇamālai Ammaḷ. | Anumantakkuḍi .. | Yōgi Śāttaiyar Piḷḷai-t-tamiḻ. R. No. 4865 of 1953–54. (This Manuscript was purchased.) |
| 6 Tiru. Śiṅgāravēluk-kavirāyar. | Mithilaippaṭṭi .. | Muttuvīrappasvāmi Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 4979 of 1954–55. |
| 7 Tiru. Veṅgu Śāstriyār. | Kaḷakkāḍu .. .. | Vēṅkatēśvaran Piḷḷai-t-tamiḻ. Vide R. No. 583 of 1924–25. |
| 8. Tiru. Malayappan Piḷḷaik-kavirāyar. | Aḻvārtirunagari .. | Puduvai Aruṇācalam Piḷḷai-t-tamiḻ. R. No. 519 of 1921–22. (After having taken a copy of this Manuscript this was returned to him with thanks.) |
| 9 Tiru. Śiṅgāra-vēluk-kavirāyar. | Mithilaippaṭṭi .. | Murukappatēvar Piḷḷai-t-tamiḻ. R. No. 5281 of 1954–55. |

Thanks are also due to Śrī E. B. Venugopal, former Tamil Pandit of this library, who has been transferred to the Government School for the blinds, Poonamallee, for preparing the press copy. In his absence the proofs were corrected by Srimathi M. Tulasi Ammaḷ who has been transferred to this library in place of the former. My thanks are due to her and also to the Controller of Stationery and Printing, Madras, for printing the book in an attractive form.

MADRAS,
31st August 1958.

T. CHANDRASEKHARAN,
*Curator.*

# முன்னுரை

அமுதத் தமிழால் ஆக்கப்பட்ட பிள்ளைத் தமிழ்க்கொத்தின் முதற் பகுதி யொன்று, இந் நூல் நிலையப் புலமையுடையோரால் 1956-ம் ஆண்டு பிப்ரவரி மீ 12௳ வெளியிடப்பட்டுளது. கலைவலோர் யாவராலும் நன்கு அறியப்பட்டதொன்றேயாகும். அதன் தொடர்புடைய பிள்ளைத்தமிழ்க் கொத்து 2-ம் பகுதியொன்று மீண்டும் வெளியிடப்பட்டுளது. இதன்கண் 9 பிள்ளைத் தமிழ்ப்பகுதிகள் அடங்கியுள. அவை (1) மகரநெடுங்குழைக் காதர் பிள்ளைத்தமிழ், (2) திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ், (3) மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ், (4) இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ், (5) யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ், (6) முத்துவீரப்பசுவாமி பிள்ளைத்தமிழ், (7) வேங்கடேசுவரன் பிள்ளைத்தமிழ், (8) புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ் (9) முருகப்பதேவர் பிள்ளைத்தமிழ் என்பனவாம்.

ஈண்டு, இதன்கண் 9 பிள்ளைத்தமிழ்ப்பகுதிகள் அடங்கியிருப்பினும், முற்றுப்பெற்றனவாகக் காண்பன முதல் இரண்டும், நான்குமேயாகும். மூன்றும் மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத் தமிழில் முதல் எட்டுப் பருவங்களும் நிறைந்து, (9) சிறுபறைப் பருவத்துள் ஒன்பது செய்யுட்களும், (10) சிறு தேர்ப் பருவத்துள் ஒரேயொரு செய்யுளும் கொண்டு உளது.

5 முதல் 9 வரையுள்ள பிள்ளைத்தமிழ்ப் பகுதிக்கண் யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழில் முதல் காப்பு, செங்கீரை, தால் என்ற மூன்று பருவங்கள் காணப்பட்டில. சப்பாணிப் பருவத்துள் ஒரு செய்யுளும், மற்றைய ஒவ்வோர் பருவத்திற்கும் ஐந்தைந்து பாக்களாகவும் அமைந்துள.

முத்து வீரப்பர் பிள்ளைத்தமிழில் பருவத்திற்கு மும்மூன்று பாக்களாக அம்புலிப் பருவம் வரையிலும், சிற்றில் பருவத்து ஒன்றும் பெற்று, மற்றைய ஒழிந்துள. வெங்கடேசுவரன் பிள்ளைத்தமிழில் ஈற்றுப் பருவம் ஒழிந்த மற்றைய வொன்பதும் பருவம் ஒவ்வொன்றிற்கும் பெருமை ஐந்து பாக்களும், சிறுமை மூன்று பாக்களுமாகப் பெற்றுக் காண்கின்றன.

புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழில் முதலும், எட்டும் ஏழேழ் செய்யுட்களும், ஏழும், பத்தும் ஆறாறு செய்யுட்களும், மற்றைய பருவத்திற்கு ஐந்தைந்து பாக்களுமாகப் பெற்றுத் திகழ்கின்றன.

முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழில் முதற்பருவம் நான்கு பாக்களையும், ஒழிந்த 2 முதல் 10 வரையுள்ள பருவங்கள் பருவத்திற்கு மும்மூன்று பாக்களாகவும், துதியும், வாழ்த்தும் ஒவ்வொன்றாகவும் பெற்று முடிந்துள.

**1. மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்**—காப்புப் பருவம் :—அநபாய சோழனது கருத்துக் கிணங்கிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத் தொண்டத் தொகையாம் முதலும், கருவூர் நம்பியாண்டார் நம்பிகள்

பாடிய, திருத்தொண்டர் வகையாம் வழியையும் பின்பற்றிப் பெரிய புராண விரிநூலாம் சார்பு நூல் பாடிய, சேக்கிழார் சுவாமிகளை வைத்துப் பிள்ளைத் தமிழ்ப் பாடிப் போந்த உயர் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் நம் சேக்கிழார் பெருமானைக் காக்க, திருத்தொண்டர் தொகை 11-லுமுள்ள நாயன்மார்கள் அனைவரையும் காப்புப் பருவத்துக் காக்கும் தெய்வமாக வைத்துப் பாடியதை யொப்ப, இம் மகரநெடுங்குழைக்காதர்பிள்ளைத் தமிழின் ஆசிரியரும், இக் குழைக் காதரைக் காக்க, வைணப் பெரியார்கள் 12-வரையும் காப்புப் பருவத்துக் காக்கும் தெய்வமாக வைத்து, அவ்வவரது ஊர், அவ்வவர் இயற்றிய நூல் முதலிய பல கூறிப் போதல் போற்றத் தக்கதாகக் காண்கின்றது. இந் நூலாசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயின், இவரது ஆசிரியர் இரகுநாதபட்டர் என்பது அவையடக்கத்தான் புலனாகின்றது.

இந்நூல் நிலையத்து மகரநெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ்ப் பிரதியில் காணப்படாத கீழ்க் காணும் இரு பாடல்களை ஆழ்வார் திருநகரியிலிருந்து தருவித்து, இத்துடன் இணைக்கப்பட்டுள. இவ்விரண்டும் மகரநெடுங் குழைக்காதர் பிள்ளைத்தமிழின் இறுதியில் இருக்கவேண்டியவை உடன் சேர்க்க முடியாமையால் இந் நூல் நூன்முகத்தில் அமைக்கப்பட்டுள.

### கலித்துறை.

மற்றோ ருவகையி லாக்குலநாதன் மகிழ்ந்து முத்தி
பெற்றோ ருமீள வரும்பேரை யாதிபன் பிள்ளைத்தமிழ்ச்
சொற்றோ ருமின்பங் கனிந்தூறி நாவிற் சுவைபிறக்கக்
கற்றோருங் காமுறக் கேட்போரும் வாழிய காசினிக்கே. (1)

### வாழ்த்து.

குஞ்சர மழைக்கவினி தென்பேரை மகரக்குழைக்
கடவுள் வாழி செல்வ கோகனக
மலர்மாது புவிமாது வாழி யருள்
குடிகொள் சேனேசன் வாழி
தஞ்சமென நம்புவார் நெஞ்சிலுறை செண்பகச்
சடகோபன் வாழி பூதூர்தனி
லவதரித் துலகை உய்வித்த வைணவச்
சமயகுல திலகன்வாழி
வஞ்சமிகு புன்சமய வெங்கலி துறந்தமண
வாளமுனி வாழிஞான மறையாளர்
வேள்விபுரி துறையாளர் சீர்பெருகு வண்மை
நூற் றெண்மர் வாழி
எஞ்சலில் வளம்பெற நாம்பொரறை திருந்தரச
ரென்று மெலிவின்றி வாழி
எங்கள்வள் ளற்குழை பொங்குபிள் ளைத்தமிழ்
நல்லின்ப மெய்க்கவி வாழியவே. (2)

2. **திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்.**—தாலப் பருவம் :—இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. திருமேனிக் கவிராயர் எனக் குறிக்கப்பட்டுளதும், இன்னாரையெனத் தெரியவில்லை. ஆயின் இவ் வாசிரியர் பழுத்த தமிழறிவும், வைணவரும், கம்பனை யாதரித்த வள்ளலது வெண்ணெய்நல்லூரின் வளத்தை வளம்பெறும் பாக்களால் பாடும் பெரு விருப்புடையவர் என்பதும் அறியக்கிடக்குமொன்றும். இதன்கண் அணிவகைகள் பல மலிந்துள, சொற்பொருட்களும் சுவை தருகின்றன. இவரது கற்பனைக்கும் வெண்ணெயின் வளத்திற்கும் எடுத்துக்காட்டாக இப் பருவத்து,

> " வள்ளக் கமலம் முறுக்குடைந்து. . . . . . . . . . . . . .
> தண்ணங் கமலப் பெண்ணமுதின் தவமே தாலோ தாலேலோ "

என்ற 3-ம் பாட்டில் மருதநில வளம் காணப்படுகின்றது.

ஒருபுறத்தே உயர்ந்து மலர்ந்துள்ள தாமரை மலர் ஒரு புறமாகச் சாய்ந்துளது. அதன் அணித்தாகத் தாழ்ந்து, குவிந்த செங்குமுத மல ரொன்றுளது. தாமரை மலரில் உள்ள தேன் வார்ந்து, அணித்தே தாழ்ந்துள்ள குவியிதழ்ச் செங்குமுத வாய்க்கண் இழிகின்றது. இத் தோற்றம் இவ்வைணவ ஆசிரியரது மனக் கண்ணிற்குக் கண்ணன் வாயிதழ்க் குவித்து, யசோதைப் பிராட்டியினிடம் பால் உண்ணுதலை ஒத்துள தாகத் தோற்றுகின்றது. இதில் காணும் தற்குறிப்பேற்ற வணியின் நலம் வியக்கத்தக்கதாக வுளது.

மற்றோர் புறத்தே, உழவன் கையில் தாற்றுக் கோலுடன் வயலை யுழுகின்றான். அவனை யடுத்து ஓர் தெண்ணீர்த் தடம் உளது. அதன் கண்ணுள்ள ஓர் சினைச் சுறுமீனானது, பிறழ்ச்சியால் துள்ளி, வான்வழிப் பாய்கின்றது. அவ் வுழவன் அதைத் தடுக்கு முகத்தான் தன் கைத் தாற்றுக் கோலை அச் சுறவின்மேல் எறிகின்றான். எறிந்த அக் கோல் அயலதாகவுள்ள பழுக் காய்க் குலைகளை யுதிர்த்து, பின் ஆங்காங்கு அண்மைக்கண் உள்ள பலாவின் வாழையின் பழங்களைத் தகர்த்து, வீழ்த்து கின்றது என உயர்வு நவிற்சி அணியையும், வெண்ணெயின் வளத்தையும் ஒருசேர விளக்குகின்றார். தவிர இவ் வுயர்வு நவிற்சி அணிவகையை உணரும்போது, புறநானூற்றில் வல்வில் ஓரி என்பான் எய்த அம்பின் திறத்தை நினைப்பூட்டுகின்றது. இதனால் இவரது பழந் தமிழ்ப் புலமை புலனாவதுடன், பாக்களின் சந்த வினிமையும் படிப்போர்க்கு இன்பம் பயக்கின்றது.

3. **மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ்.**—இதன் ஆசிரியர் பெயரும் அறிய முடிந்திலது. இதுவும் நடைநலமும், ஓசைநலமும் அமையப்பெற்றது. இந் நூல் முத்தப் பருவத்தில் திருவேங்கடமுடையானும் பிள்ளையிடத்துப்பெறும் வாய்முத்தம் சாலச்சிறந்தது எனக் கூறப்போந்தவர், முத்துக்கள் தோன்றும் பலவகையிடங்களை விதந்தோதி, அவ்வவ் முத்தங்கட்குள்ள குறைபாட்டையும் விளக்கி, வேற்றுமை நயந்தோன்றக் கூறுகிறார். எற்றெனின், கடல் படுமுத்து அலைக்கண் அலைக்கப்படும்.

அன்றி வலைக்கண் அகப்படும் சிறுமையது. கரும்பினிடத்தும், கிடைக்கின்றது முத்து. ஆயின் அது கருப்பாலைக் கண்பட்டு உடைபடுகின்றது. தாமரைக்கண்ணும் கிடைக்கின்றது முத்தம். அதுவோ சேறுகிய கறையையுடையது. மீண்டும் முத்து யானையது கோட்டின்கண் கிடைக்கின்றது. ஆயின் என்னென்பது. அது கோட்டிடைப்பட்டு அளவில் குறைந்துபோய், குறையுடையதாகின்றது. மூங்கிற்கண் கிடைக்கும் முத்தமோ வெந்தீயால் துளைக்கப்பட்ட குற்றமுடையது. மேகத்தின் தோன்றுவதோவெனின், இடியால் தாக்கப்பட்டது. ஆதலால் இம் முத்தங்களைப் பெறுவதில் பயனில. நின் குற்றமற்ற, குணவொளி நிறைந்த, வேதம் பொழிகின்ற, கனிவாய் முத்தமே எற்கு வேண்டற்பாலது எனக் கூறிக் கேட்டல் பாராட்டற்பாலதாகும்.

4. **இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ்.**—இந்நூல் ஆசிரியர், சென்னையை யடுத்துள்ள பொன்னேரி தலத்துறையும் சுந்தரர் என்பவராவர். இவர் திருவருட்பாவில் தெளிந்த அனுபவமுள்ளவர். சைவ புராணங்களில் தேர்ந்தவறிவும், சொல்வன்மையுமுள்ளவர். கருணீக மரபினர் என இந்நூற்குச் சிறப்புப் பாயிரம் பாடிய உயர் திரு வடிவேல் பிள்ளையவர்கள், உயர் திரு பரமசிவம் பிள்ளையவர்கள், உயர் திரு சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார் அவர்கள், அட்டாவதானம் பூவை உயர் திரு கலியாண சுந்தர முதலியார் அவர்கள் .பாக்களால் அறிய முடிகின்றது.

இவரது பாட்டுடைத் தலைவராம் இராமலிங்க சுவாமிகள் சிதம்பரத்திற்கருகிலுள்ள வடலூரில் திருவவதரித்து, கற்பன கற்று, இல்லறத்தில் வெறுப்புண்டு, சென்னைக்கருகிலுள்ள ஒற்றியூர் தியாகேசப் பெருமானைக் குருமூர்த்தியாகத் தொழப்பெற்றவர். மற்ற சமயகுரவர்கள் சைவப் பெரியார்களைப் போல் சைவப்பற்று உள்ளவர். எம்மதமும் சம்மதம், அன்பர் பணி ஆண்டவன்பணி, உலக உயிர்களது உறுகண்களைதல் அவ்வுயிர்கள் உய்திபெறத்தக்க வழியிற் பெருந்தொண்டியற்றல் முதலிய கருத்துக்களைக் கொண்டு, செயல் முறையிற் செய்தும் காட்டியவர்.

சைவ சமயத்தார் சைவ தத்துவத்தைத் துவைதம், அத்வைதம் என இரண்டாகக் கூறுவர். துவைதமாவது இறைவன் உலகவுயிர்களிடத்து இருந்து வேறுபட்டு, வேறு ஓரிடத்து வதிபவன். சொல்லையும், மனத்தையும் கடந்து நின்று கடவுள் என்ற பெயரையும் பெற்றுள்ளவன். வாலறிவன். எண்குணத்தவன் விருப்பு வெறுப்பு அற்றவன். அத்தகையவனை உலகவுயிர்கள் அடைந்து ஆராவின்பம் நுகர வேண்டுமாயின் அகப்புறக் கரணங்களை வென்று, ஆணவ, கன்ம, மாயையாம் மும்மலப்பாசங்களைதல் வேண்டும் எனக் கூறியுள்ளனர். இதன் முடிந்த முடிவு உலகைப் படைத்த மூவா முதல்வன் வேறு. அவனால் படைக்கப்பட்ட உலக உயிர்கள் வேறு என இரண்டாகக் கூறுவதேயாகும்.

அத்வைதமாவது இறைவன் உலக உயிர்களினின்று வேறு பட்டவன் அல்லன். வேறோர் உலகத்தவனுமல்லன். சொல்லுமவன். பொருளுமவன். மனத்துடன் உள்ளவனுமவன். உயிர்களுடன் இரண்டறக் கலந்து,

தோன்றாத்துணையாகவிருந்து, கணமும் ஒழியாது அவ்வவ்வுயிர்களை நன்மை, தீமை, அறிவு, அறியாமை, இன்ப துன்பம் முதலிய எச் செயல் கட்கும் ஏவுபவனும், ஏவப்படுபவனுகவும் இருக்கின்றான். அது மாத்திர மின்றி, செய்பவன், செய்விப்பவன், ஆடுபவன், ஆட்டுவிப்பவனுகவும் இருக் கின்றான் என்பதேயாகும். இதையே திருவாய்மொழியும், மணி வாசகமும் "வான், மண், வளி, ஒளி, ஊன், உயிர், உண்மை, இன்மை கோன்ஆகி யான் எனது என்றவரைக் கூத்தாட்டுவானாகி நின்றவன்" என்றும், ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதார் என்றும் கூறுகின்றது. இப்படி எல்லா மாகவும் எல்லாவற்றுள்ளும் உறைபவனுகவுமுள்ள பரம்பொருளை உயிர் கள் அடைய வேண்டுமாயின், அகத்து அன்பு கொண்டு, அதன் ஆக்கமாம் அருள் மீதூரப்பெற்று அன்பால் செழுங்கிளை தாங்கி, அருளால் உயிர் களிடத்துத் தொழும்பு பூண்டு, அவ்வவற்றது புன்மை களைந்து, நன்மை யெய்துமாறு செய்தல் வேண்டும். இம்முறையே இறைவனை இதயத்து இரண்டறக் கலந்து காணுதலாகும். இவ்வழியில் நின்றவர்கள், வள்ளுவப் பெருமகனார், தாயுமானவர். இரவீந்திரர், நம் இராமலிங்கர் முதலி யோராவர்.

சுந்தரர் என்ற ஆசிரியர் இராமலிங்கரது சமரசம் என்ற ஒன்றுபட்ட கருத்தை அவரது பிள்ளைத்தமிழில் வருகைப் பருவத்துள் அமைத்துப் பாடியிருக்கும் திறம், மிக்க மகிழ்வையூட்டுகின்றது.

" பதிநித்ய வறிவாம் முதல் வருக வெண்மணி வருகவே " என்பதீறு கவுள்ள 4-ம் பாவினுள், சிவஞான போதமாகிய அத்வைத கருத்தை உலக உயிர்கள் எளிதில் உணர்ந்து உய்யும் பொருட்டால். பதி, பசு, பாசம் என்ப வற்றுள் பதி, இறைவன், அழியா அறிவினன். இவ்வறிவாம் நித்திய இறைவன் உலகச் சிறுவறிவாம் உயிரினின்று வேறுபட்டான் போல் தோற்றி, அவ்வவற்றினிடத்தே ஒன்றியுள்ளான். அவனை அறிய அறியும் பகுத்தறிவே பசு வென்றும், அந்தப் பசு வென்ற வுயிரானது, ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றின் கூட்டாம் பாசத்தால் கட்டுண்டுளது வென்றும், அப்பாசத்தளையைப் பசுவானது களைந்து, பதியையறிதலே பகுத் தறிவு என்றும் கூறியுள்ளார். மீட்டும் பதியின் அருளின்றி பசு, பாசம் இல்லை. அவனே பதி, அவனே பசு அவனே பாசம். ஈண்டுக் கூறும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் அவனே எனப் பகுத்தறிதல் பசுவின் ஞானம் எனக்கூறி, பின்னும் " முப்பொருளும் ஒன்றெனக் கூறும் சித் தாந்த" என அண்மை விளியால் வலியுறுத்திப் பாடியிருத்தல் உன்னி யுன்னி வியத்தற்குரிய தொன்றாகும்.

இவ்வாசிரியர் சிவஞான போதத்திற்கும், இராமலிங்கரது அருட்பா விற்கும் வேற்றுமைப்பொருள் காட்டியிருத்தலை நோக்கும் போது, நால்வர் நான் மணிமாலை பாடிய சிவப்பிரகாச சுவாமிகள் மணிவாசகர் இயற்றிய திருவாசகத்திற்கும், நான்மறைக்கு முள்ள வேறுபாட்டை வேதமானது ஒரு சிலரால் கொள்ளற்குரிய "பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை" என்றும்,

"வேதமோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்" என்றும்,
திருவாசகமானது யாவராலும் கற்கப்படும்
"மட்கலம் நிகர்க்கு, மதுர வாசக" மென்றும்.

திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என்று கூறியிருத்தல் உளத்திற் போந்து உவகையை யூட்டுவிக்கின்றது.

**5. யோகி சாத்தையர் பிள்ளைத் தமிழ்.**—தவிர ஈண்டுக் காணப்படும் 5, 6, 7, 8, 9 பிள்ளைத்தமிழ்ப் பாடியோரது வரலாற்றை அறிய முடியவில்லை. ஆதலால் பாடப்பட்டவரது வரலாற்றுச் சுருக்கம் மட்டில் ஈண்டுத் தருகின்றேன். யோகி சாத்தையர் என்பார் அடிசை நகரினர். கவியின்பம் நாடுபவர். மனவன்மையுடையவர். பின்னும் இவர் சித்திலும் வல்லவர் என்பதற்குச் சிறு தேர்ப்பருவத்து 3-ம் பாட்டில் "தான் ஏதோ ஓர் சாபத்தால், பன்றியாகப் பிறந்து காட்டிலிருந்தும், முற்பிறப்பின் நாற்றம் மாருது, இறைவனை யொருகால் கண்டு வணங்கி, சாபம் நீங்கப்பெற்றும் பின் பவுத்திரபுரி வணிகன் இவருக்கு நிலம் பல அளித்து, அழைத்து வந்ததாகவும், உலக இறைவனது காரணத்தால், காணும் காரியமாம் காட்சி எனத் தக்கவகையில் எமதரிசனங் கண்டதாகவும், அத்தரும புரியை விலைக் கொண்டாற் போலக் கோவில், மதில், சிகரம், கோபுரம் முதலியவற்றை வருவித்துத் தான் அதன் முன் நிற்பதுபோலவுங் காட்டியதாகக் கூறப் படுவது" ஆதாரமாகின்றது. சொற்சுவை பொருட்சுவை, கற்பனையின்பம் மலிந்து காண்கின்றது இப்பிள்ளைத் தமிழ்.

**6. முத்து வீரப்ப சுவாமி பிள்ளைத்தமிழ்.**—இதன் பாட்டுடைத் தலைவனுக்கு, முத்து வீரப்பக் கருப்பணன் என்ற வேறு ஓர் பெயருண்டென்றும் முத்து வீரப்பர் என்பவரது மகன் என்றும் தெரிகின்றது. இவன் ஐந்தரு வென்னக் கொடுப்பவன். நற்பண்புள்ளவன் என்பனவும் போதருகின்றன. இதனைப் பாடியவர் சுத்த வைணவராதலால், நம்மைக் கங்கை பாயப்பெற்ற கோசல நாட்டு இராமனிடத்தும், துவாரகையில் அசோதைப் பிராட்டியால் பாலூட்டித் தாலாட்டி, வளர்க்கப்பட்ட கண்ணனிடத்தும், அழைத்துப்போந்து காண்பிக்கின்றார்.

**7. வேங்கட்டேசுவரன் பிள்ளைத்தமிழ்.**—இப்பிள்ளைத் தமிழில் வேங்கட்டேசுரன் என்பார் இளசைப் பதியிலுள்ளவர். யானை, குதிரை முதலிய படைகள் மலியப்பெற்ற வரசர்பெருமான். பாண்டிய மரபினர். சந்திர குலத்தவர். பெருவீரன். கலைவலான். நீர்வள நிலவளமிக்க நாடாண்டு,

கலியானது கலிகொள்ளச் செய்தவன். வள்ளன்மையுடையோன் என்பன போன்ற பொருட்கள் பலவும் அறியக்கிடக்கின்றன. இதுவும் படித்து இன்புறத் தக்கதேயாகும்.

8. **புதுவை அருணசலம் பிள்ளைத்தமிழ்.**—செந்தமிழ் நாட்டின் புதுவை நகர்த்தலைவனும், செல்வமும், சிறப்பும் நிறைந்த சரவணமுத்து பூபன் என்பாரது அருந்தவச் செல்வனும், நாவில் கலையருளும், திருவருளும் பெற்றவனுமாவன். அருணசல நரேந்திரன் என்ற இப்பிள்ளைத்தமிழால் பாடப்பட்டவன். பெண்கள் விரும்பும் பேரழகன், இன்சொல்லினன், தருமத்துறை போயவன், அருட்டன்மையன், குருவினது அருள் பெற்றவன் என்பனவும் புலனுகின்றன. இதில் சந்தவினிமையும், பொருட் செறிவும் காண்கின்றன.

9. **முருகப்பதேவர் பிள்ளைத்தமிழ்.**—இப்பிள்ளைத் தமிழால் பாடப் பெற்றவர் இவர். இளசை நாட்டிலுள்ள பழநியப்பக்குரிசில் பயந்த மைந்தர். திருமாலை யொத்த அழகும், வில்வீரமும், மார்க்கண்டேயனைப் போன்ற இளமையும், தெய்வசிந்தையுங் கொண்டவர், கருணைவள்ளல். எல்லா நற்குணங்கட்குமிடமானவர் என்பன பலவும் அறிவதுடன், இந்நூல் ஒன்பான் சுவைக்குமோர் ஒண்கலமாகவும், கற்பார் புலனுக்கு விருந்தாகவும் அமைந்துளதென்பதும் வெள்ளிடை மலையாகின்றது.

1. ஆழ்வார் திருநகரியிலுள்ள உயர் திரு. சுந்தரம்மாள் என்பவர் 1919-20-ல் R. No. 426 உள்ள மகர நெடுங் குழைக்காதர் பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியொன்றை இந் நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

2. திருவெண்ணெய்நல்லூர் வைகுந்த நாதர் பிள்ளைத்தமிழ் R. No. 3,000 உள்ள ஏட்டிதழ்ப் பிரதியைத் தென்னுற்காடு மாவட்ட, குமரக் குப்பம் கிராமத்திலுள்ள உயர் திரு. K. ஷண்முகம் என்பவர் 1951–52-ல் இந் நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

3. நாங்குனேரி வானமாமலை மடத்திலுள்ள வானமாமலை உயர் திரு. இராமனுஜ ஜீயர் சுவாமிகள் 1923-24-ல் R. No. 570 (b) உள்ள மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியொன்றை இந்நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

4. சென்னையில் உள்ள உயர் திரு. U M. துரைசாமிப் பிள்ளையவர்கள் இந் நூல் நிலையத்திற்கு 1955-56-ல் R. No. 5708 உள்ள இராமலிங்கர் பிள்ளைத் தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

5. R. No. 4865 உள்ள யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியை இந்நூல் நிலையத்தார் 1953–54-ல் அனும்நந்தக் குடிக்கண்ணுள்ள குணமாலையம்மாளிடமிருந்து விலைக்கு வாங்கியுள்ளனர்.

6. மிதிலைப்பட்டி உயர் திரு. சிங்காரவேலு கவிராயர் அவர்கள் 1954–1955-ல் R. No. 4979 உள்ள முத்துவீரப்பசுவாமி பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியை இந்நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

7. கள்ளக்காடு உயர் திரு. வெங்கு சாஸ்திரியார் 1924–25-ல் R. No. 583 உள்ள வேங்கடேசுவரன் பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியை இந்நூல் நிலையத்தார், பிரதி பெயர்த்து எழுதிக் கொள்வதற்காகக் கொடுத்து உதவியுள்ளார்.

8. ஆழ்வார் திருநகரி உயர் திரு. மலையப்பப் பிள்ளைக் கவிராயர் இந்நூல் நிலையத்தார்க்கு 1921–22-ல் R. No. 519 உள்ள புதுவை அருணசலம் பிள்ளைத்தமிழ்ப் பிரதியை, பிரதி பெயர்த்து எழுதுவதற்குக் கொடுத்து உதவியுள்ளார்.

9. மேல் 6-ல் முத்துவீரப்பசுவாமி பிள்ளைத்தமிழ்ப் பிரதியைக் கொடுத்துதவிய, மிதிலைப்பட்டி உயர் திரு. சிங்காரவேலு கவிராயர் அவர்கள் மீட்டும் இந்நூல் நிலையத்திற்கு 1954–55-ல் R.No. 5281 உள்ள முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழ் ஏட்டிதழ்ப் பிரதியொன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது பாராட்டற்குரியதாகும்.

அச்சிடுவதற்குரிய பிரதியைத் தயார் செய்து கொடுத்தவரும் முன்பு தமிழ்ப் பண்டிதராக இந்நூல் நிலையத்தில் பணியாற்றியவருமாகிய திரு. E. B. வேணுகோபால் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. அவர் பூந்தமல்லி அரசினரின் கண்ணிலார் பள்ளிக்கு மாற்றப்பட்டிருப்பதால், அவருக்குப் பதிலாக இங்கு மாற்றப்பட்டிருக்கும் திருமதி. துளசியம்மாள் புருப்புகளை ஒப்பு நோக்கினர். எனவே அவருக்கும், இந்நூலை அழகான முறையில் அச்சிட்டளித்த அரசினர் அச்சகத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

சென்னை, தி. சந்திரசேகரன்.
1958-ம் ஆகஸ்ட்டு 31உ.

# பொருளடக்கம்


| | பக்க எண். |
|---|---|
| I. நூன்முகம் ஆங்கிலம் .. .. .. .. | i—viii |
| II. நூன்முகம் தமிழ் .. .. .. .. | ix—xvi |
| III. நூற்பெயர் குறிப்புரையுடன் .. .. .. | |
| 1. மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத்தமிழ் .. .. | 1—63 |
| 2. திருவெண்ணெய் நல்லூர் வைகுந்தநாதர்.. .. | 64—130 |
| 3. மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ் | 130—182 |
| 4. இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் .. .. | 183—236 |
| 5. யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ் .. .. | 237—254 |
| 6. முத்துவீரப்பசுவாமி பிள்ளைத்தமிழ் .. .. | 254—267 |
| 7. வேங்கடேசுவரன் பிள்ளைத்தமிழ் .. .. | 267—291 |
| 8. புதுவை அருணசலம் பிள்ளைத்தமிழ் .. .. | 292—322 |
| 9. முருகப்ப தேவர் பிள்ளைத்தமிழ் .. .. | 323—340 |
| V. செய்யுள் முதற் குறிப்பகராதி .. .. .. | 341—348 |

# பிள்ளைத் தமிழ்க் கொத்து
# பாகம் 2

## மகர நெடுங் குழைக்காதர் பிள்ளைத் தமிழ்

### ஆசிரியர் துதி

சுடர்விடு கமலத் திருமுக மண்டல
　　சோபையு மண்டலமேல்(த்)
துகளறு திருமண் காப்பழ கும்திரீ
　　சூரண விலட்சணமும்

கடல்மடை நின்று திறந்தது போலக்
　　கருணை சுரந்தொழுகும்
கண்களும் வேதத் திருவாய் மொழியுணர்
　　காதுங் *கனிவாயும்

வடவரை மேலிரு சுடரென ஆழி
　　வலம்புரி யும்திகழு
மந்தரத் திண்புய முந்திரு மார்பும்
　　மருவிய முந்நூலும்

படமிசை நடமிடு மிருபத மும்தொழு
　　பாக்கிய மெனக்கருள்வாய்
பட்டர் ரெகுநா தாசா ரியனெம்
　　பரமா சாரியனே. (1,

(1) குறிப்புரை:—வடவரை—வடக்கின் கண்ணுள்ள மலை, மேரு; இருசுடர்—இரண்டு சூரியர்; வடவரை....என—இல் பொருள் உவமை; மந்தரம்—மந்தரமலை; முந்நூல்—பூணூல்; படம்—காளிங்கன் என்ற பாம்பின் படம். இப்பாட்டு இந்நூலாசிரியரின் குருவான பட்டர் ரகுநாதாசாரியார் என்பவர்மீது பாடப்பட்டது போலும்.

### இதுவும் அது

2　இட்டாப் பரம பதந்தரு ஞானத்தின் கேள்விதரு
மட்டா விசாரத்தினறி மறிநோருக் கெல்லாம்
கட்டாணி முத்தம் ரெகுநாதா சாரியன் கா . . .
யட்டார் கமலத் திருப்பாத மான மகத்துவமே. (2)

(2) குறிப்புரை :—மட்டா விசாரம்—அளவற்ற ஆராய்ச்சி; கட்டாணி முத்தம்—பலமுடைய முத்து; கட்டாணி...... ரகுநாதாசாரியன்—உவமைத் தொகை; மட்டு—தேன்; இதுவும் 9, 10 பாட்டுக்களும் கட்டளைக்கலித்துறை.

---

* பிரதிபாடம்.—குண்டலமும்.

3 ஊருக்கு மாறுமுகத் தோனுடைம் முகத்தோ னுக்குமுப்
பாருக்கு முப்பத்து முக்கோடி தேவர்க்கும் பார்க்கில் மறை
வேருக்கும் நான்குமுகத் தோன்றனக் கும்வியன் றிசைக்கும்
ஆருக்குந் தானந் திருப்பேரை வல்லிக் கடைக்கலமே. (3)

(3) குறிப்புரை :—இவைகட்கிடையில் பாட்டெண் 9, 10 எனப்போடப்பட்டுளதால் பல பாட்டுக்கள் விடுபட்டுள்ளன தெளிவு. இவைகள் மூலத்தில் காணப்படவில்லை. திருப்பேரைவல்லி—திருப்பேரையில் எழுந்தருளியுள்ள "குழைக்காது வல்லி நாச்சியார்". ஐம்முகத்தோன்—சிவபெருமான். ஊருக்கும் மாறுமுகத்தோன் எனவும், ஆறுமுகத்தோன் எனவும் பிரித்து மாறின முகத்தையுடைய விநாயகரையோ (அ) முருகனையோ குறிக்கலாம்.

4 மருவல்லி செண்பகப் பூவல்லி மேனி மணங்கமழு
மொருவல்லி வள்ளைக் குழையூடு தாவடி யோடும் விழித்
திருவல்லி நங்குலநா தனுக்கேற்றுச் சிறந்த வின்பம்
அருள்வல்லி சீர்த்தென் திருப்பேரை வல்லிக் கடைக்கலமே. (4)

(4) குறிப்புரை :—வள்ளை—ஓர்வகைப் பூ ; உவமவாகுபெயராய்க் காதினை யுணர்த்திற்று. தாவடி ஓடும்—படையெடுக்கும். இப்பாட்டு சிறப்புப்பாயிரம் போலும்.

## வெண்பா

5 சொற்றேறுந் தேனொழுகுஞ் சொல்லும் பரிமளிக்குங்
கற்றோர்கள் நாவும் கனியுமே—முற்றுமொரு
மாவலிபால்—மூவடிமண் வாங்குந் திருப்பேரைக்
காவலவன் பிள்ளைக் கவி. (5)

## காப்புப் பருவம்.

### நம்மாழ்வார்

6 பூமாது குடிகொண்டு வீற்றிருந் தரசுபுரி
பொற்புலவு பத்மாசனப்
பொழி கருணை யொடு பெருகி ஞானவெள் ளத்தலை
புரட்டுதிரு முத்திரைக் கைக்

கோமானை யெழுதரிய சதுமறையு மள்ளிக்
கொழித்துவண் டமிழ்ப்படுத்திக்
கூறுதிரு வாய்மொழியோர் நாலா யிரஞ் செய்த
குருகைமுனி யைப்பரவுதும்

தேமா நறுங்கனித் தேன்மதகி னூடுபாய்
திருவழுதி வளநாடனைத்
தென்திருப் பேரைநகர் காவலனை நூற்றெண்மர்
சிந்தைகுடி கொண்டிருக்கும்

மாமாலை வருணன்வந் தடிபரவு மாழிநீர்
வண்ணனைப் புயல் வண்ணனை
வானப்பி ரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே. (1)

(1) குறிப்புரை :—நூற்றெண்மர்—சுந்தரபாண்டிய மன்னர் பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீ வைணவர்கள் குடும்பத்தைத் தென்திருப்பேரையில் அமைத்து ஆதரித்தார். இவர்களே மேற்கூறியவர்.

## சரசுவதி

7 அஞ்சிறைய வரிவண் டுழக்கிக் களைக்கால்
அசைத்துப் பொலன்றுதளைந்
தடைகிடந் தாலித்து வாய்மடுத் துத்துதைந்
தளிநறவு கூட் டுண்ணமென்

பிஞ்சுமடன் முகைமுறுக் கவிழும் வெண் டாமரைப்
பீடத்தி னினிதி ருக்கும்
பெடையோதி மஞ்செஞ்சொன் மடமாது வெண்ணிறப்
பெண்ணிரு தாடுதிப்பாம்

பஞ்சனைய பரிபுரத் தளிரடித் துடியிடைப்
பணைமுலைக் கனிவாய் மொழிப்
பைந்தொடிச் சீதையை மணம்புணர் மிதிலையம்
பதிபுகுந் தாதிசனகன்

செஞ்சிலை யிறுத்தமக ரக்குழைக் கடவுளைத்
திருவழுதி வளநாடனைத்
தென்திருப் பேரைநகர் காவலனை வாழ்த்து மென்
செந்தமிழ் சொற்றழையவே. (2)

(2) குறிப்புரை :—ஆலித்து—ஒலித்து ; தான்துதிப்பாம் எனப்பிரிக்க ; பெடை ஓதிமம்—பெண் அன்னம்.

## ஆண்டாள்

8 மண்மகளு மாய்ப்பின்னை மடமகளு மாய்மிதிலை
வருசனக னுக்கு மகளாய்
மங்கலச் சொற்றிருப் பல்லாண்டு செம்பவள
வாய்திறந் தோதிஞேன்றன்

பெண்மகளு மாய்வந் தரங்கேசன் முதலைந்து
பேருக்கு மொருதேவியாய்ப்
பெயர்பெற்று மாலைசூ டிக்கொடுத் தருளிய
பிராட்டியை வணங்கல் செய்வாம்

தண்மதியி னகடுதொடு மாடமா ளிகை நெடிய
தபனியப் பொற் குன்றமும்
சதுமறைக் குரியவேள் வியும்யாக சாலையும்
சன்னிதியி னூற்றெண்மரும்

கண்மணி யெனத்தகைய பிள்ளைக் குழாமுமலி
காவு சூழ் பேரையூ ரன்
கருணையொடு வருணன்டி பரவுமக ரக்குழைக்
கடவுள்சொற் றழையவென்றே. (3)

(3) குறிப்புரை :—பின்னை மடமகள்—நப்பின்னை பிராட்டியார் ; வாய்திறந் தோதினேன்—பெரியாழ்வார் ; திருவரங்கநாதர், திருமாலிருஞ்சோலைநாதர், திருவேங்கடநாதர், ஸ்ரீ வில்லிபுத்தூர் நாதர், வடமதுரைநாதர் ஆகியோர். மதியின் அகடு—சந்திரனின் நடுவிடம்.

## பொய்கையாழ்வார்

9 பாரரா வணனெனும் படுபழிக் கஞ்சாத
பாவிகொலை களவுகபடம்
பழகுபா தகன்மவுலி யொருபதுந் துகள்படப்
பண்டுகோ தண்டம் வாங்கும்

வீரமே கந்திருக் கோவலூ ரிடைகழியின்
வெளிநிற்ப வொவ்வொருவர்மேல்
மிகநெருக் குண்டபுகழ் மூவரிற் பொய்கையார்
மென்சரண மஞ்சலி செய்வாம்

தாரைவேல் விழிபாய வாலிமார் புருவவொரு
சரம்விடுத் துக் கொன்றவன்
தம்பிக்கு மகுடம் கவித்தர சளிக்கின்ற
தாமோ தரக்குழகனைப்

பேரையா திபனைநங் குலநாத னைத்துழாய்ப்
பெம்மானை யம்மானையே
பேசுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ள
பேதமை பொறுத்தருளவே. (4)

(4) குறிப்புரை :—இடைகழி—வாயிற்றிண்ணை ; தாரைவேல் விழிபாய—வாலியின் மனைவியான தாரையினது வேல்போன்ற கண்களில் நீர்பெருக ; தம்பி—சுக்கிரீபன் ; தாம+உதரன்—வடமொழிப்புணர்ச்சி குணசந்தி.

## பூதத்தாழ்வார்

10 ஆரணப் பொருளுன்கும் யோகமோ ரெட்டுநூ
லைந்தொடைந் தெட்டு நியமம்
ஆறுதொண் ணூற்றாறு தத்துவஞ் சித்தியெட்
டைம்புல னடக்கி ஞானக்

காரணச் சுடர்[1]விளக் கேகொண்டி யாவுமொரு
கரை கண்டு புகழ் கொண்டசொற்
கருணு கரக்குரிசில் [2]உயர்பூதத் தார்மலர்
கழலிணை வணங்கல் செய்வாம்

பூரணக் கலைமதியின் நிலவொழுக வாம்பல்மெண
புரிமுறுக் கவிழ் வாவியம்
புனல்படியும் வன்கரா வதுவந் திழுக்கவப்
பொழுதாதி மூலமென்றே

வாரணப் பகடலறி வீரிடக் காத்தருள்செய்
மையாழி நீர் வண்ணனை
வானப்பி ரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே. (5)

(5) குறிப்புரை :—ஆரணப்பொருள் நான்கும்—நான்கு வேதப்பொருள்களும் ; யோகம் ஓர் எட்டு—அஷ்டாங்க யோகங்கள் ; ஐந்தொடு ஐந்து எட்டு—18 ரகஸ்யங்கள் ; நியமம் ஆறு—6 அங்கங்கள் ; (வேதத்தின்) சித்தி எட்டு—அட்டமா சித்திகள் ; ஆம்பல் அல்லி ; கரா—முதலை ; வாரணப்பகடு—கஜேந்திரனென்ற யானை ;.

## பேயாழ்வார்.

11 தெளிக்கும் கொழும்பிரச மூற்றிருக் குங்கலுழி
திரைமண்டி மடுநிறையவே
தேக்கெறியும் வெள்ளப் பெருக்கிற் பொலன்ருது
சிந்தக் குடைந்நுபம்பிக்

களிக்குஞ் சிறைச்சுரும் பிசைமுரல முகைவிண்ட
கடிகமழ் பசுந்தண்டுழாய்க்
கடவுள்திரு வந்தாதி புகலுமயி லையர்கோன்
கழற்கால் [3]வணங்குதுமியாம்

துளிக்குந் திரைப்பொருநை மதகிறெலி யும்பழஞ்
சுருதிமறை யவர்க ளொலியுஞ்
சொல்லரிய பிள்ளைக் குழாவொலியும் மங்கலத்
தூயமுர சத்தொடு பரீஇ

மளிக்குந் திருப்பேரை மணிவண்ண னைப்புயலை
மகரக் குழைக்கடவுளை
வானப் பிரானைநங் குலநாத னைப்புகழும்
வண்டமிழ்ச் சொற்றழையவே. (6)

(6) குறிப்புரை :—கலுழி—நீர்ப்பெருக்கு ; தேக்கெறிதல்—நிறைதல் ; பம்பி—எழுந்து ; திருவந்தாதி—மூன்ருந்திருவந்தாதி “ திருக்கண்டேன் ” என்று தொடங்குவது அது. பரீஇ மளிக்கும்—இன்னிசை அளபெடை.

---

பிரதி பாடம் :—[1] விளக்கொளி கொண்டு பாவுமொரு
[2] உயர்பூத வாழ்வார் கழற்கால் வணங்கல்செய்வாம்
[3] வணங்கல் செய்வாம்.

(7) குறிப்புரை :—தெளி........................கடவுள்—மலர்களினின்று தெளிக்கும் நல்ல தேன் சுரந்துள்ள கலங்கல்நீர் அலைகள் நெருங்கி மடு நிறைய மிக்குள்ள வெள்ளப் பெருக்கில் பொன்மயமான மகரந்தப்பொடிகள் சிந்தவதில் மூழ்கி எழும்பி மகிழும் சிறகுகளையுடைய வண்டுக்கூட்டங்கள் சப்திக்க அதனுலிதழ் விரிந்த வாசனை மிக்க குளிர்ந்த துளப மாலையை யணிந்த கடவுள் (திருமால்) என்க. "வண்டுது பொலிதார் கமழ் குரல் துழாஅய்" என்றுர் பதிற்றுப்பத்திலும். (4-ஆம்பத்து, 1-ஆம் பாட்டு), "நாறுத பூவுடையதனை மிக நாறுவ தொன்றுபோலச் சாதிபற்றிச் சொன்ன சொற்சிறப்பான் இதற்குக் கமழ் குரல் துழாயென்று பெயராயிற்று" என்ற அதன் பழைய உரையையும் நோக்குக பரீஇமளிக்கும்—இன்னிசை யளபெடை. திருவந்தாதி—மூன்றுந் திருவந்தாதி.

## திருமழிசையாழ்வார்.

12 கொந்தார் பசுந்துளவு பழுதுதள் ளிச்செழுங்
குளிர்நறுங் தொடையல் சேர்த்துக்
குலவுமணி முடிமீது கைபுனைந் தாழிமால்
குரைகழ லிணங்கத்திரு

வந்தாதி யொடுதிருச் சந்தம்நூற் றிருபதையும்
அமுதூறு திருவிருத்த
மாகச் சொன் மாலையணி *யோகப்பிரான் மழிசை
யாதிபனை யேபரவுதும்

நந்தா வளம்பெற்ற திருவழுதி நாடும்வள
நகரமு மூரியகோமான்
நாரணன் பூலோகக் காரண னச்சுதா
நந்தகோ விந்தன்முற்றும்

வந்தா தரித்துவரு ணன்பரவு மாழிநீர்
வண்ணனிகர் முகில்வண்ணனம்
வானப்பி ரானதிர் வளைக்கைமக ரக்குழை
மாதவன் சொற்றழையவே. (7)

(8) குறிப்புரை :—கைபுனைந்து—அலங்கரித்து ; நந்தா—கெடாத ; முகில் வண்ணன்—நம்வானப்பிரான் என்க ; அச்சுதன்—அழிவற்றவன்.

## குலசேகராழ்வார்.

13 வள்ளவாய் நெகிழத் துளிக்கும் பசுந்தேறல்
மலர்மங்கை திகழ்வஞ்சியும்
வளமைதரு குடநாடும் ஆன்பொருநை யுங் கொல்லி
வரையுமுரி மைச்சேரர்கோன்

புள்ளவா வுறுநீல மாலிகை கிடந்தபுய
பூதரன் குலசேகரன்
பொருசிலையை நெடியவட வரைமிசை பொறித்தவண்
புகழ்வேந்த னினிதுகாக்க

பிரதி பாடம்—* யோகைப்பிரான்

அள்ளல்வாய்ப் பழனத் தடந்தோறுஞ் சுரிசங்கம்
அகடுளைந் தீன்றமுத்தும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ்க் கும்கமுகின்
அணிமுத்தும் நிலவு காலக்

கள்ளரு நறுமலர்க் குமுதம்விரி பேரைவரு
கருணா கரக் குரிசிலைக்
கடவுளைக் குலநாத னைப்புகழ்ந் தேற்றுமென்
கவிதையின் சொற்றழையவே. (8)

(9) குறிப்புரை :—வள்ளவாய் நெகிழ—கிண்ணம் போன்ற மலரின் வாயானது நெகிழு மாறு ; தேன்துளிப்பதால் மொட்டின் வாய் நெகிழ்கிறது என்க. மலர்மங்கை திகழ் வஞ்சி—திருமகள் விளங்கும் வஞ்சிமாநகரம். இக்கோயிலின்றே செங்குட்டுவன் வடநாடு சென்ற போது பிரசாதம் முதலியன அர்ச்சகர் கொணர்ந்து தந்தார் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. புள் அவாவுறு நீலமாலிகை—வண்டுகள் விரும்பும் நீலமாலை ; புய பூதரன்—புயமாகியமலையை யுடையவன், உருவகம் ; வடவரை—இமயமலை ; பொறித்து அவண் புகழ் வேந்தன் என்க. அவண்புகழ்வேந்தன்—தமிழ் நாட்டோடல்லாமல் அவ்வடநாட்டிலும் புகழ்படு கின்ற அரசன் ; அள்ளல்—குழைசேறு ; கருணாகரன் இராமனது பெயர்களி லொன்றுமாம். அகடு—வயிறு ; சுரிசங்கம்—சுழிந்துள்ள சங்கு.

## பெரியாழ்வார்.

14 விடங்காலும் வாளரா வரசுக்கு முணர்வரிய
மிக்கசங் கத்தமிழினால்
மீனவன் மதிப்பவரி யாசன மிருந்தினிது
வென்றுமூ தூர்மதுரையின்

அடங்காத பரசமய மதமறுத் துக்கிழி
அறுத்துவே ழப்பிடரிருந்
தாழிமா லைக்கண்டு வாழிபா டும்பெரிய
ஆழ்வார் தமைத் துதிப்பாம்

*தடங்கால் கடுக்கக் கடத்தினிற் கல்லுருத்
தவிரமுனி பின்னடந்து
சரண்பங் கேருகத் துகளாழிக் கும்பசுந்
தண்டுழாய்க் கொண்டல் கேணிக்

கிடங்கான திறம்பகட் டிளவாளை துள்ளமைக்
கெண்டைவிளை யாடுபுனல்சூழ்
கெழுதகைய தென்பேரை வளமலி தருந்தூய
கேசவன் சொற்றழையவே. (9)

(10) வாள் அரா அரசு—மாணிக்க ஒளியுடைய பாம்புகட்கு அரசனான ஆதிசேடன் ; கல்வியில் பெரியன் ஆதிசேடன் என்பர். வேழப்பிடர் இருந்து ஆழிமாலைக்கண்டு—வல்லபதேவன் என்ற பாண்டியன் கட்டிய கிழியை அவனது ஐயத்தைப் போக்கி அறுத்த பிறகு அவன் யானைமீது அரச மரியாதையுடன் உலாக்கொண்டுவர அப்போது திருமால் கருடன்மீது காட்சியளித்தார். கல் உரு தவிர—கல்லாகிக் கிடந்த அகலிகை உருவம் நீங்க ; முனி—கௌசிக முனிவர் ;

* தடங்கா வடுக்க கிடக்கின்ற கல்லுருதி.

**சரணபங்கேருகத் துகள் அழிக்கும்**— பாத தாமரையினால் குற்றங்களை நீக்கும். "**கால் வண்ணம் அங்குக் கண்டேன்**" என்ற கம்ப ராமாயணப் பாடலை நோக்குக; **கொண்டல்**—உவமவாகு பெயர்; **கேணி, கிடங்கு ஆன திறம் பகட்டு இளவாளை**—கிணறு, குளம் ஆன நீர்நிலை வகைகளிலுள்ள ஒளிமிக்க இளையவாளை மீன்கள் **கெழுதகைய**—உரிமையுடைய.

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

15 பண்டா லிலையிற் கண்டுயில் கூரான
பராபரர் காவிரி நீர்
படியு மரங்கற் குச்சொன் மாலை
பணிந்தடி யிற்சூட்டி

வண்டார் துளபத் தொடைமுடி சூட்டி
வணங்குந் தவராசன்
மண்டங் குடிவாழ் தொண்ட ரடிப்பொடி
வரமுனி யைத்தொழுவாம்

குண்டா ருத்திப் புனலனல் குமிறக்
கோதண் டம்வாங்கிக்
குழைய வளைத்தொரு பகழி தொடுத்தருள்
*கோமே தகம்வாசத்

தண்டா மரைமல ரும்பே ரையில்வரு
தாமோ தரர் தூயர்
தமிழ்தெரி பிள்ளைக் கவிவழு வாதெழு
தரணியி னிலைபெறவே. (10)

(11) காவிரிநீர் படியும் அரங்கர்—திருவரங்கப் பெருமான்; சொன்மாலைசூட்டி, தொடைமுடிசூட்டி என்க; குண்டு+ஆர்+ உததி. ஆழம் பொருந்திய கடல்; மூன்றாவதடி வருணன்மேல் இராமன் ஏவிய அக்கினி அத்திரத்தைக் காட்டுகிறது. தொண்டரடிப்பொடியாழ்வார்; முன்னைய பிள்ளைத் தமிழ்க் கொத்தின் 109-ஆம் பாட்டில் காண்க.

## திருப்பாணாழ்வார்.

16 வச்சிரக் குலிசபதி முனைவரிமை யாதசது
மறைக் கடவுள் மழுவலாளன்
வந்தடி பணிந்து தொழு மெந்தைக்கு முத்திதரும்
வைகுண்ட பதவியானுக்

கச்சுதப் பச்சைமா லுக்கரு மறைப்பொருட்
கருமணிக் கண்மலர்படைத்
தமல னாதிப்பொரு ளுரைக்கின்ற குரிசில்பா
ணாழ்வாரை யேபரவுதும்

கச்சறப் பொருமிப் புடைத்துச் சினத்துக்
கனத்தடி பரந்து விம்மிக்
கண்கறுத் தமிர்தம் பொதிந்தகுங் குமமுலைக்
கற்புடைச் சீதையாளை

பிரதிபாடம்—* கோமேதக நீலம்.

நச்சிநற் சிலேவளைக்கும் பசுந்தண் டுழாய்
ராமாவ தாரதீர
நாராயணன் வழுதி நாடன்நங் குலநாதன்
நற்றமிழ்ச் சொற்றமிழையவே. (11)

(12) இமையாத முனிவர் எனமாற்றி இமையாக்கண்களையுடைய தேவர்கள் என்க. வச்சிரம், குலிசம் ஒரு பொருட் சொற்கள்; மழுவலாளன்—மழு+வன்மை+ஆளன்—மழுவாயுதத்தை வலிமையுடன் ஆளுபவன், சிவபிரான்; பணிந்து தொழும் எந்தைக்கு, பதவியானுக்கு, மாலுக்கு, பொருட்கு எனக்கூட்டி அவருக்கு அமலனாதிப் பொருள் உரைக்கின்ற குரிசில் என்க. அருமணிக் கண்மலர் படைத்து. அரிய கருமணிகளை யுடைய கண்ணாகிய மலரைப் படைத்ததாலுண்டாகிய பயனை; இது உலோக சாரங்க முனிவர் தன் தோள்மேல் பாணுழ்வாரை ஏற்றிவந்து அரங்கனிடம் சேர்த்ததைக் காட்டும். "என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்ற அவர் வாக்கினை நோக்குக.

### திருமங்கையாழ்வார்.

17 சிறியதிரு மடல்பெரிய திருமடற் றிருமொழி
செழுந்தமிழ் நெடுந்தாண்டகம்
சிறக்கின்ற சொற்குறுந் தாண்டகம் விதிமுறை
தெளித்தவெழு கூற்றிருக்கை
நறியதுள வணியுமுகி லுக்குரைக் குமங்கை
நாற்கவிப் பெருமானைமுன்
நான்மறைப் பொருளுக்கு மெட்டா வரும் பொருளின்
நற்பொருள் கவர் கள்வனைப்
பறிமுதல் திரும்பக் கொடாதனைத் துந்திருப்
பணிசெயும் புகழ் வேந்தனைப்
பலகாலும் நெஞ்சில்வைத் தவனடிக் கமலமலர்
பரிவொடு பணிந்தேத்தும்
உறிமிசை யிருந்தஅளை களவினில் வாரியன்
றுருதிவலே சிந்தாதுணும்
உயர் புகழ்ப் பேரைவரு குலநாதன் முதுகவிதை
உலகெங்க ணுந்தழையவே. (12)

(13) நாற்கவிப் பெருமான்—திருமங்கையாழ்வார்; பறி—சோழனது திறைப் பொருள்கள்; பறி என்பது குழூஉக்குறியால் பொன்னை உணர்த்தும். திருப்பணி—ஆயிரத்தெட்டு வைணவர்களுக்கு அமுது செய்வித்தது. அளை—வெண்ணெய்.

18 முடிக்கும் பசுந்துழாய்ச் சக்கரா யுதக்கடவுள்
முளரியங் கண்ணனுக்கு
முதுமறை தெரிந்துதிரு வந்தாதி யாசிரிய
முறைவழா [1]வடிதொழுது சொல்
வடிக்குஞ் செழுந்தமிழ்ப் பாடலா யிரமுமகிழ்
மாறனுரை செய்தருளவே
வரிசையொடு பட்டோலை *யெழுதுமென் மதுரகவி
வரமுனிவ னைப்பரவுதும்

பிரதிபாடம்.—* எழுதுமொரு. [1] வடிதோறுஞ் சொல்

குடிக்குக் தடந்திரைப் புனல்யாவு மொருமுகங்
கொண்டுபொரு நைபடியவே
கூடுபொரு நைத்துறைக் குலநாத னுயர்மாட
கூடங்க டோறும் நெடுவான்
இடிக்கும் கருங் கொண்டல் கண்படுக் கும்பேரை
எம்பிரான் வானப்பிரான்
இருசரண மலர்சூடும் எனதுகன கவிதையுல்
கெங்கணுந் தழையவென்றே. (13)

(14) திருவந்தாதி—" முயற்றி சுமந்தெழுந்து " என்று தொடங்கும் பெரிய திருவந்தாதி ; ஆசிரியம்—திருவாசிரியம். " செக்கர் மாமுகிலுடுத்து " என்று தொடங்குவது. குடிக்கும்—கடற்கண்முகில் குடிக்கும் ; கண்படுக்கும்—சமாதியணி ; உயர்மாட........................ கொண்டல்—உயர்வு நவிற்சியணி.

## இராமானுசர்

19 முதியகவி நாவலவர் தம்பிரான் திருஞான்
முத்திரைக் கடவுள் திருவாய்
மொழிதனக் குரைவிரித் தெழுதும் [1]பிர வுடவாக்கி
முழுதுமன் பர்க்கு வாழ்வு
புதுநறவு கக்கித் துளிக்குஞ் சரோருகப்
பொற்கழற் கருணாகரன்
புகலரிய பரசமய திமிராரி வண்புகழ்
பூதூ ரனைப் பரவுதுஞ்
சதுமறையு மறிவரிய குலநாதன் முத்தொடலை
தத்தும் தடம் பொருநையான்
தருமநெறி தவறாத திருவழுதி வளநாடு
தழையவரு கருணைமேகம்
விதிமுறையி னொடுதொழுது வருணன்ஆ ராதனைசெய்
விமலன்மக ரக்குழையமால்
விரவுஞ் செழுந்தமிழ்ப் பிள்ளைக் கவிக்குள்ள
மிக்கசொற் றழையவென்றே. (14)

(15) பிரவுடவாக்கி—கம்பீரமான வாக்கையுடையவன்—இகர விகுதி வினைமுதற் பொருளை யுணர்த்தியது. கழல்—தானியாகுபெயர். திமிர+அரி - இருளைக் கெடுக்கும் சூரியன் ; (இவர் பற்றி முன் பிள்ளைத்தமிழ்க் கொத்து 111-ஆம் பாட்டினுரையில் காண்க. பூதூரன் - பெருபூதூரில் தோன்றிய இராமானுசர் குழைய - அ. ஆறும்வேற்றுமையுருபு ; விமலன் - பரிசுத்தமானவன்.

## செங்கீரைப் பருவம்.

20 வானுடரும்பொற் பொகுட்டா சனப்பத்ம
[2]மண்டபத் தினிதிருக்கும்
மறைக் கிழவ னுஞ்சடை முடிக்கடவு ளுங்குலிச
வச்சிரா யுதத்தலைவனும்

பிரதி பாடம்—[1] பிரவுடவாக்கி. [2] மண்டபத் தரசிருக்கும்

பூநாறும் வெட்சியம் தெரியல்புனை குமரனும்
புகர்முகத் தவனுமதியும்
பொங்குசுட ரிரவியுந் துங்கமுனி வரும்நெடும்
பொற்கோவில் வலம் வந்துநம்

கோனாகும் வருணனா ராதனைசெய் மஞ்சனக
கொலுவில்வந் தடிவணங்கிக்
கும்பிட்டு நின்றுசே விப்பநற் சேவைபுரி
கோசலைக் கிருகண்மணியே

தேனாறு பச்சைப் பசுந்துழாய் மேகமே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (1)

(1) வான்நாடர் - தேவர்கள்; மறைக்கிழவன் - பிரமன்; சடைமுடிக்கடவுள் - சிவன்; குலிச வச்சிராயுதத் தலைவன் - இந்திரன்; குமரன் - முருகன்; அம் வெட்சி தெரியல் - அழகிய வெட்சிமாலை; புகர் முகத்தவன் - விநாயகன்.

21 முருகொழுகு பங்கயத் தடமுநீள் குளனுமலை
மோதும் புனற்சுழியினும்
முதிராத விளமணலும் நடைவரம் புஞ்செய்ய
முதுகுரம் புங்கரும்பும்

அருகுநெட் டிலைமுடத் தாழைநீ ழலும்வேலி
அடரும் செழுஞ்சோலையும்
அம்பொற் பசும்பாளை தளையவிழ்க் குங்கமுகின்
அணிவளமும் மதகினூடுஞ்

சொருகுகுழல் மகளிர்குட முலையசைய நுணுகிடை
சுமக்கின்ற பொற்குடத்தும்
சுடர்மணிப் பொற்றடந் தேரோடும் வீதியும்
சுரிமுகச் சங்கமுருந்

திருவழுதி நாடாள பரமபத வீடாள
செங்கீரை யாடி யருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (2)

(2) முருகு - தேன்; நடை வரம்பு - நடக்கின்ற வயல் வரப்புக்கள்; முது குரம்பு - நின்று பாசனக்கால்களுக்கு நீரைத் திருப்பும் அணை; முடத்தாழை - வளைவுபொருந்திய தாழை; சுரிமுகம் - சுழிந்துள்ள முகம் - வலப்பக்கம் சுழிந்தது வலம்புரி எனவும் இடப்பக்கம் சுழிந்தது இடம்புரி எனவும் பெயர் பெறும். இப்பாட்டினால் சங்கமுரும் நீர்வளத்தைக் குறிக்கிறார். இங்ஙனமே, பாகம் 567-ஆம் பாட்டில் தூத்துக்குடிபற்றி வந்துள்ளது காண்க. சொருகு குழல் - "முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா விளைஞர் ஆருயிரும் திருகிச் சொருகும் குழன்மடவீர்." (கலிங்கத்துப்பரணி) நோக்குக.

22 அறுகால் வரிச்சுரும் படைகிடக் குங்குழல்
அரக்கிமண் டோதரிகழுத்
தழகுதா லிச்சரடு தரையில்வீ ழப்பருந்
தாடவெங் கழுகுமொய்ப்ப
மறுகால் நெடுஞ்சிகர மாடமா ளிகையிடிய
வலதுகண் கடைதுடிப்ப
வாசல்தொறு நெய்தலம் பறைகொட்ட லெங்கையழல்
மண்டிவான் முகடுதாவக்
குறுகாத வல்லசுரர் செவியடைப் பக்கொழுங்
குருதிவாய் கொப்புளிப்பக்
கொடியரா வணன்மகுட முடிசிதற வரிசிலை
குழைத்துவெஞ் சமர்முகத்துச்
சிறுநா ணொலிக்கொண்டு விளையாடு மேகமே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (3)

(3) கால - அ-ஆறும் வேற்றுமையுருபு. அடைகிடத்தல் - தங்கியிருத்தல். மறுகால - குற்றத்தை வெளியிட ; லெங்கை - இலங்கை ; குழைத்து - வளைத்து ; மேகம் - உவமவாகு பெயர் ; பகைவரொடு போர் செய்யுந் தொழில்களில் நாண் ஒலித்தலாகிய தொழிலொன்றனையே கூறிக் குறைவுபாடு விளக்கித், தாலிச்சரடு தரையில் வீழ்தல், பருந்து, கழுகு மொய்த்தல், மாளிகை இடிதல், வலதுகண் மகளிர்க்குத் துடித்தல், பறை கொட்டுதல், அழல் தாவுதல், செவியடைத்தல், குருதி கொப்புளித்தல் ஆகிய காரியங்களில் உயர்வு தோன்றக் கூறினமையான் தொழிற் குறை விசேடமாயிற்று.

23 இருகுழையு மணிகுதம் பையுமாட வெயில்விரிந்
திலகுகுறு முறுவலாட
இணைதிருக் கையினணி வளையாட மென்சுரும்
பிசைபசுந் துளபமாடப்
பொருவுமிரு சிலை நுதலின் வேர்வா டவேபொங்கு
புழுதிதிரு மேனியாடப்
புழுகொழுகு கரியகுழல் சரியவரை வடமும்நூ
புரமுந் தயங்கியாட
முருகுவிரி தருநறுங் கமலமதி முகவட்ட
முழுநிலா வீசியாட
முதியவா னவர்முனிவர் அமரர்கோன் *வரல்வளா
முறை யொடுங் காணவந்தார்
திருவரையின் மணியசைந் தாடக் குழைந்தினிது
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (4)

(4) சிலைநுதல் - உவமை ; அரை - இடுப்பு ; ஆட என்ற சொல் பலமுறை வந்து பொருளும் மாறுததனுல் சொற்பொருட் பின்வருநிலையணி.

பாடம்.—* வரல்வளர

24 சந்தன கதம்பப் படீரகுங் குமமுலைத்
தையல்மர கதவல்லிசெஞ்
சடிலேசர் வாமத் திருப்பநான் மறைபரவு
சதுமுகப் பிரமன்நாவில்

இந்துநுதல் வாணிசந் ததமிருப் பப்பணிந்
திருசரண மலர்சூடுவோர்
இதயதா மரைமலரும் நூற்றெண்மர் சிந்தையினும்
இசைபாடி வண்டுகிண்டக்

கொந்தவிழ் நறுங்கமல மலரா சனக் கோயில்
குடியிருக் கும்பரிமளக்
கோமளக் கொடிவல்லி *மாமதுரை யாச்சியர்
குழைக்காதன் நாயகியெனுஞ்

சிந்துரப் பொடியொடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (5)

(5) படீரம் - உயரம்; மரகதவல்லி - பச்சை நிறமுடைய கொடி போன்றவள். திருமாலின் தங்கையாதலால் பச்சை நிறங் கூறினர் "பச்சைமாமலை போல்மேனி" என்று ஆழ்வார் கூறுதல் காண்க. நீலம், கருமை, பச்சை முதலிய நிறங்களை அபேதமாகக் கூறுவது கவி மரபு. சடிலம் - சடை; சடில+ஈசர் - சடிலேசர் - வடமொழிப் புணர்ச்சி, தீர்க்கசந்தி; வாமம் - இடப்பக்கம்; இந்து - சந்திரன்; கொந்து - இதழ்களின் தொகுதி; சிந்துரப்பிடி என இருப்பின் மழகளிறு என்பதற்கு ஏற்கும். நாயகி எனும் பிடி என்றலே ஏற்புடைத்தாகும். மாமதுரை - சிறந்த வடமதுரை. ஈண்டு உமாதேவி சிவபெருமான் இடப்பக்கத்திலிருக்க, சரசுவதி பிரமன் நாவிலிருக்க, குழைக்காதன் நாயகியோ தன்னைப் பணிந்து இரண்டு பாத தாமரைகளைச் சூடுகின்றவரது மனத் தாமரையிலும், திருப்பேரையில் வாழ்கின்ற நூற்றெண்மர் மனங்களினும், கமலமலரிலும் குடியிருப்பவள் என ஏற்றம் கூறினர்.

25 ஒள்ளொளி விரித்தசிறு கிண்கிணியின் நூபுரம்
உபையசர ணத்திடை
ஒளிர்மணிப் பட்டாடை யாடவரை வடமாட
உச்சியின் மிலைச்சு பருதி

நள்ளிடை வயங்குபொற் சூழியத் தொகையாட
நகுநிலா முறுவலாட
நவமணிச் சுட்டியொடு கட்டுப்பொற் பட்டமும்
நன்னுதற் பொட்டுமாடத்

துள்ளியெறி திரைமகர சலராசி படுசெழுஞ்
துய்யசெம் பவளமேனி
தொய்யக் குழைந்தாடு பண்டியுந் தொந்தியுந்
துணைநெடுங் குழையுமாடத்

பிரதிபாடம்—* மாமதுரவாயாள்

தெள்ளமுத மணிவாயின் உள்ளொழுகி வழியவே
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (6)

(6) உபையம் - இரண்டு ; அரை - இடுப்பு ; பருதி - சூரியபிறை, ஆகு பெயர் ; நள்ளிடை வயங்கு - இரவுக் காலத்திலும் விளங்கும் ; சூழியம் - உச்சிக் கொண்டையுள் செருகும் ஓரணி ; சுட்டி - நுதலணியுளொன்று ; மகரம் - சுறுமீன் ; தொய்ய - வருந்த ; துணை - இரண்டு ; பண்டி - வயிறு.

26 நிரையும் பசும்பொனணி *மாடகூ டமுநெற்றி
நிழன்மணிச் சாளரத்து
நெடுநிலா முற்றத்து வாவிதொறு நீராடி
நிறைநறுந் தாதுபூசி
வருமந்த மாருதத் திளையமென் காலசைய
மாவிளங் குயில்கள்கூவ
மயிலாட வளிபாட வேனில்வேள் அரசுபுரி
வழுதிவள நாடுதழைய
விரையுந் தடம்புனற் பெருக்கா றெடுத்தோட
வெழின்மயிற் றழைபீலியும்
இணையிலா மணியுமா ரமும்யானை வெண்கோடும்
எற்றிஎற்றிச் சுருட்டித்
திரைவந்து கரைமோது பொருநையந் தண்டுறைவ
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (7)

(7) நிழல் மணி மாடகூடம் நெற்றிச் சாளரத்து - ஒளிவிடும் இரத்தினங்கள் பதித்த மெத்தைக் கட்டடங்களின் மேனிலே முகப்பிலுள்ள சன்னல் வழியே நுழைந்து ; நெடுநிலா முற்றத்து - சந்திரக் காந்தக்கல் பதித்த நிலவின்பம் துய்க்கும் திறந்த மேன் மாடத்தில் ; வாவிதொறும் நீராடி - அம்முற்றத்தில் சந்திர காந்தக்கல் நிலவினுல் உருகுவதனுல் வாவி அங்கு உண்டென்றும் அவ்வாவியினிடை, தென்றல் காற்று சன்னல் வழியாகச் சென்று படிவதனை நீராடுகிறதென்றும் கூறினுர், தற்குறிப்பேற்ற வணி வகையால். கால் - காற்று ; மா இளங்குயில்கள் - மாமரத்திலுள்ள இளமையான குயில்கள் ; அளி - வண்டு ; வேனில் வேள் - மன்மதன் ; முருகனுக்கும் வேள் என்ற பெயருண்டாதலால் வேறுபாடு காட்ட "வேனில் வேள்" என்றுர். ஆரம் - சந்தனம் ; ஏற்றி - தாங்கி ; எற்றி - அடித்து ;

27 எத்திக்கும் வண்புகழ் தழைத்ததிரு வாய்ப்பாடி
இடையர்தம் குடில்கள்தோறும்
இடுகயிற் றுறியடுக் கியமணிக் கலசத்
திருக்குந் தயிர்க்கட்டிகண்
டொத்திக்கை யிட்டுரல் மிதித்தேறி யடிகுந்தி
ஒருதிவலே சிந்தாமலே
ஒண்பவள வாய்மடுத் துண்டிடுங் கள்வனென்
றுரலொடு கட்டியவர்கை

பிரதிபாடம்.—*மாடகூ டமுமேடை.

மத்திட் டடிப்பவிரு கண்பிசைந் தழுதரையின்
மணிபொத்தி யாடிமறுகால்
வாயூறி யச்சுவை கனிந்தாய்ச்சி யாடைபட
வற்றக் கறந்து காய்ச்சுந்

தித்தித்த பாலுக்கு மிச்சித்து நின்றவா
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (8)

(8) மணிக்கலசம் - அழகிய குடம்; ஒத்திக்கையிட்டு - செய்யப் பழகுதல் இக்காலத்தில் நாடகம் நடித்தற்குமுன் ஒத்திகை யிடுதல் காண்க; அடிகுந்தி - கீழே உட்கார்ந்து; மடுத்து விழுங்கி; ஆடை - பாலின்மேல் படியும் எடு; பாலுக்கும் என்ற இறந்தது தழுவிய எச்சவும் மையால் தயிரை உணர்த்தினர். இடையர் - குறிஞ்சி, மருதம் என்ற இருநிலத்திற் கிடைப் பட்ட முல்லை நிலத்தில் வசிப்பதால் இப்பெயர் காரணப் பெயராயிற்று. "தந்தம் உறியிலவர் வைத்த தயிர்பால் வெண்ணெயெட்டாமல் குந்தி உரலின்மிசை யேறி கொடுங்கோவியர் முன் கூத்தாடி.........." என்றார் பிறரும். "பொத்த வுரலைக் கவிழ்த்து அதன்மேலேறி தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்...." என்ற ஆழ்வார் வாக்கும் நோக்குக.

28 தாதவிழ் பசுந்துளவ மாலையா டச்சிறிய
தமனியச் சுட்டியாடத்
தருணமர கதவயிர வலையமா டப்பொன்
தடந்திருத் தோள்களாடக்

காதுமணி தருமகர குண்டலமு மாடக்
கவின்பொலியு மேனியாடக்
கதிர்முத்த வடமாட மதுரித்த செந்தமிழ்
கற்றவர்கள் கொண்டாடவே

வாதுபுரி கொடிய சேனைபதி யிராவணனை
மனவலிகள் திண்டாடநீள்
*வானத் ததிர்ந்துதுந் துமியாட மலர்மாரி
வானவர் பொழிந்தாடவோர்

சீதர முகுந்த பேராயிர முகந்தவா
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (9)

(9) தமனியம் - பொன்; சீதரன் - இலக்குமியை மார்பில் தரித்தவன்; உகந்தவன் - மகிழ்ச்சியுடன் ஏற்றவன்; துந்துமி - பேரிகை;

29 அலைவளைக் குங்கருங் கடலும்வான் முகடுதொடும்
அம்பொற் கொடிக்குழா மொய்த்
தாதவன் பொற்றடந் தேர்தடுக் குஞ்செம்பொ
னணிமாட கூடங்களும்

பிரதிபாடம்—*வானத் திருந்துதுந் துமியாட

நிலைவளைக் கும்புக ழிலங்கா புரத்திறைவ
நெடியரா வணன் மகுடமும்
நீலிதா டகைமார்பு *மாரீச னெடுகரனும்
நெட்ரே வதிகாயனுங்

கொலைவளைக் குங்கும்ப கன்னனும் நிகும்பனும்
குறுகாத வல்லசுரரும்
கொடியவா லியுமரா மரமேழு முருவக்
குழைத்துவடி வாளிதொடவெஞ்

சிலைவளைக் குந்திருக் கைத்தா மரைக்கொண்டல்
செங்கீரை யாடியருளே
செல்வத் திருப்பேரை வல்லிக்கு மணவாள
செங்கீரை யாடியருளே. (10)

(10) மாளிகைகளில் கட்டிய கொடிகள் சூரியன் தேரைத்தடுக்கின்ற அத்தகையுயரமான மாடக்கூடங்கள் என்க. நீலிதாடகை - பழையனூர் வணிகன் கதையில் வந்துள்ள நீலியை யொத்துப் பாசாங்கு செய்யும் தாடகை; கருநிறமுள்ள தாடகை என்னலுமாம். நீலி - இகரவிகுதி வினைமுதற்பொருளை யுணர்த்தியது. நீலம் - நீல் எனக் கடைகுறைந்தது. கைத் தாமரை - உருவகம்; நெட்டுரம் - நீண்டஉரம் (பலம்); உரம் - ஊரம் என நீட்டல் விகாரம் பெற்றது. நிகும்பன்—கும்பகன்னன் குமாரன், இராவணனுக்கு அம்மான் எனலுமாம்.

## தாலப் பருவம்

30 கயங்கொண் டலம்பித் திரையெறியுங்
கடல்சூழு முலக முழுவதும் வெண்
கவிகை நிழற்கீ ழினிதடக்கிக்
†கருணை புரிய நாடொறுநின்

றியங்குஞ் சரங்க ளனைத்தையுமற்
றெல்லா வுயிருந் தன்னுயிர்போல்
இரங்கிக் காக்கு மரசர்பிரான்
என்ற சரத பெருமானு

முயங்கும் ‡பிராட்டி மூவர்க்குள்
முதன்மைத் தலைவி யாம் சிமிழ்ப்போல்
முற்று முலைக்கோ சலைவயிற்றின
முளைத்து மடிமேற் கிடந்துதனி

வயங்குங் கிரண மரகதமா
மணியே தாலோ தாலேலோ
மகரக் குழையே யென்னிருகண்
மணியே தாலோ தாலேலோ. (1)

(1) கயம் - ஆழம்; அரசர்பிரான் என் தசரத பெருமானும் எனப் பிரிக்க; சிமிழ் - செப்பு; முளைத்து - தோன்றி; தனி - ஒப்பற்று; வயங்கும் - விளங்கும்; சரங்கள்—இயங்கும் பொருள்கள்.

---

பிரதிபாடம்—*மாரீச னும்பார். பிரதிபாடம்—†கருணை யிரிந்து.
‡ பிராட்டி மார்மூவ ரவர்க்குள் முதன்மைத் தலைவியெனு முற்று.

(3) தவளம் - வெண்மை; திங்கள் திருவதனம் - சந்திரன் போன்ற முகம்; மருங்கில் திளைக்கும் கொடிபோல் கொடி - இடையைப்போன்று அசையும் கொடி, அக்கொடிபோன்றுள்ள புற்கொடி; சந்தான உவமை; முகடு, சூளிகையின் உச்சியிலுள்ள தலையணி வகை போன்று; இணக்கும் - பொருந்தும்; கான்று - உமிழ்ந்து (வெளியிட்டு); துணர்பூங் கொத்து; சுரபி - காமதேனு; இப்பாட்டில் புல்வளம் பற்றிக் கூறப்பட்டுளது காண்க.

33 இடிக்குங் கடுஞ்சொற் கொடும்பாவி
இழைக்குந் தறுகட் கஞ்சன்விடுத்
திடுகோக் களிற்றின் புகர்முகத்தின்
ஏந்தும் பிறைக்கிம் புரிமருப்பை

ஒடிக்குந் தடக்கைச் செழும்புயலே
யுணர்வுக் குணர்வே யென்னுயிரே
ஒழியாப் பிறவிக் கடல்சுவற்றி
யுயர்வீ டளிக்கும் பெருமானே

முடிக்கும் பசுந்தண் துழாய்மாலை
முடிக்கும் குழக வானவர்க்கும்
முதுநான் மறைக்கு மெட்டாத
மூலப் பொருளே பாகுபெற

வடிக்குந் தமிழ்த்தென் திருப்பேரை
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ (4)

(4) தறுகண் - கொடுமை; கோக்களிறு - பட்டத்துயானை (குவலயாபீடம்); புகர்முகம் - ஒளிவாய்ந்த படாமணிந்த முகம்; பிறைக்கிம்புரி - மருப்பு பிறைச் சந்திரனையொத்த; பூண் கட்டிய தந்தம்; சுவற்றி - வற்றச் செய்து; முடிக்கும் இரண்டில் முன்னது தலை யுச்சியையும் பின்னது அணியையும் காட்டியது. குழகன் அழகையுடையன்; பாகுபெற - வெல்லப்பாகு போன்று இனிப்புப் பெற ஒழியாப்......................பெருமானே - 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற குறளை நோக்குக.

34 கருது சமய மோராறுங்
கணிக்கும் பொருளே யுவட்டெறியுங்
கருணைக் கடலே செழுங்கமலக்
கண்ணு கண்ணின் உள்மணியே

*திருகு சினவா ளவுணர்படச்
சிலைக்கால் வளைத்துப் போர்முகத்துச்
செல்லும் புயலே யுறியில் வெண்ணெய்
திருடும் குழகா பேய்முலைப்பால்

பருகும் பவளக் கனி வாயா
பசுந்தார்த் துளவ மணிமுகுந்தா
பங்கே ருகச்செஞ் சரணநெடும்
படப்பாந் தளின்மேல் நடித்துநெட்டை

* பிரதிபாடம்.—திருக்குஞ்

மருதந் தவழ்ந்து சகடுதைந்த
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ. (5)

(5) சமயம் ஓர் ஆறு - சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம், என்பன உவட்டெறிதல் - பெருக்கெடுத்து அலை வீசுதல் ; திருகு சினம் - மாறுபாடு செய்யும் கோபம். பட - அழிய ; பாந்தள் - பாம்பு (காளிங்கன்) மருதம் - தோட்டத்தில் குபேரன் சாபத்தினால் தோன்றிய நளகூபரன், மணிக்கிரீவன் ஆகிய இரு மருத மரங்கள் ; சகடு - சகடாசூரன் மாயமாய் எடுத்துவந்த சக்கர வடிவம்.

35 சொல்லற் கரிய இரணநெடுஞ்
சுடரா ழியினாற் கதிர்மறைத்த
சுருதிப் பொருளே குருகூரன்
சொற்பா வமிர்தங் கனிந்தசெவிச்

செல்வக் குழகா பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவ மணங்கமழுந்
சிகரப் புயபூ தரமுகுந்த

வல்லிக் கமலப் பொகுட்டுமட
வனஞ்சேர் வழுதித் திருநாடா
வடிவைத் தொருமு வுலகமுமன்
றளக்கும் புயலே சேறுடைக்கும்

மள்ளல் பழனத் திருப்பேரை
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலே தாலேலோ. (6)

(6) சொல்லற்கரிய..........பொருளே- முன்னைய பிள்ளைத் தமிழ்க் கொத்து 129-ம் பாட்டு உரை பார்க்க. குருகூரன் - நம்மாழ்வார் ; புயபூதரம் - உருவகம். அடிவைத் தொரு................புயலே - முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து. 189-ம் பாட்டு உரை பார்க்க. மள்ளல்பழனம் - வளமிக்க கழனிகள்.

36 இடையிற் றொடியக் கனத்தடிகொண்
டிளகித ததும்பிப் பணைத்திறுமாந்
தேந்துங் களபப் புள்கமுலை
யிலவத் துவர்வா யம்புயம்பெரன்

பெடையைத் தழுவி யனுதினமும்
பிரியா திருக்குந் திருமார்பா
பெருவா ருதிசூழ்நிலவனையப்
பெண்ணுக் கிணங்கும் புயசயிலா

படையிற் சுமந்த கொழுநுழைந்த
பழனக் கொழுஞ்சேற் றினில்வரம்பிற்
பாகு படுநெட் டிலைக்கரும்பிற்
பசும்பூங் காவில் மணலினில்வாய்

மடையிற் பணிலந் தவழ்பேரை
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ. (7)

(7) அடிகொண்டு - பரந்து ; களபப்புளகம் முலை - கலவைச் சாந்து பூசிய மகிழ்ச்சி கொண்டுள்ள முலை ; இலவத்ததுவர்வாய்—இலவம்பஞ்சு போன்ற மிருதுத் தன்மை யுடைய உதடுகளையுடைய பவளம் போன்ற வாய் ;அம்புயம் பொன்பெடை - தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியாகிய பெண் ; வாருதி - கடல் ; நிலவலையப் பெண் - பூமிதேவி ; கொழு - கலப்பையில் கட்டியிருக்கும் இரும்பு, இதனைக் [ கார் ] என்பர். பணிலம் - சங்கு ; சங்குகளின் சிறப்பை 21-ம் பாட்டினுறையில்காண்க.

37 அடியாற் பிறவிக் கடல்சுவற்றி
அழியாப் பரம பதங்கொடுக்கும்
ஆழிப் புயலே பணமகுடத்
தடல்வா ளரவின் கண்பிதுங்க

நடியா நிற்கும் ஒருகுழக
நாரா யணசீ தரமுகுந்த
நண்ணும் புலவன் கணிகண்ணன்
பின்பாய்ச் சுருட்டிச் சொற்றமிழ்க்குப்

படிமேல் நடக்கும் இருசரண
பங்கே ருகவன் றனல் கொழுந்தப்
பரவைக் கொருகாய் கணைதொடுத்துப்
பாரப் புயபூ தரத்திலங்கும்

* வடியார் திகிரிப் படைசுமந்த
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ. (8)

(8) ஆழி - சக்கரம் ; பணமகுட........குழக -காளிங்கன் மேல் கண்ணன் நடித்த வரலாற்றை நோக்குக. நண்ணும்புலவன்........இரு சரண ..—முன்னைய பிள்ளைத் தமிழ்க் கொத்து 593-ம் பாட்டின் குறிப்பு நோக்குக. பங்கேருக இரு சரண என மாற்றுக. அன்று அனல்....மாலே - முன்னைய பிள்ளைத் தமிழ் கொத்து 198-வது பாட்டின் உரையில் காண்க. கொழுந்த - சுவாலிக்க ; காய்கணை - அக்கினிக் கணை ; வடி ஆர் - கூர்மை பொருந்திய.

38 கருணை பெருகி யுவட்டெறியும்
†கற்று நிரையின் பின்னடந்து
கானந் தழைப்பத் துணைக்கமலக்
கழற்கால் பின்னிக் கன்றேருகுன்

பிரதிபாடம்.—* வறிவார் பிரதிபாடம்.—† கண்ணு

றுருகும் படிவேய்ங் குழல்வாய்வைத்
தூதும்புயலே சுவடியவர்தம்
ஒழியாப் பிறவித் துயரகற்றி
உள்ளத் திருக்குந் திருக்கறுத்து

நிருதர் குலமும் வேரறுத்த
நிமலா சமரா நீடுந்திகிரி
நீலக் குழகா மணநாற
நிறைக்கும் பசுந்தண் டுழாய்முகுந்த

வருணன் பரவும் இருசரண
மாலே தாலோ தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ (9)

(9) கன்று + ஆ- கன்றோடு கூடிய பசு ; திருக்கு - மாறுபாடு.

39 விடவா ளரவக் கயிறுசுற்றி
வெற்பிற் பிணித்து விசித்திறுக்கி
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
விண்ணோ ரமுதங் கடைந்தவந்நாள்

அடருங் கிரணக் கவுத்துவமும்
அருளுந் திருவுந் தடமார்புக்
கமைத்துத் திருப்பா லாழியினும்
அரங்கத் தினுங்கண் டுயில்பெரும

குடவால் வளைசூ லுளைந்துசெந்தேன்
கொழிக்கும் பொலன்று மரைப்பொகுட்டிற்
குளிர்முத் துயிர்ப்பக் கருவென்னக்
கொணர்ந்தஞ் சிறைய விளம்பேட்டு

மடநா ரைகள்கண் டடைசெறிக்கும்
வளஞ்சேர் நாடா தாலேலோ
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே தாலோ தாலேலோ (10)

(10) அரவம் - வாசுகி எனும் பாம்பு ; வெற்பு - மந்தர மலை ; கவுத்துவம் - கௌஸ்துப ரத்தினம் ; திரு - இலக்குமி ; குடவால் வளைசூல் உளைந்து - குடம் போன்ற வெண்மையான சங்குகள் கருப்ப வேதனைப்பட்டு ; அடை செறிக்கும் - அடைகாத்தலைச் செய்யும் - குடவால்..........வளஞ்சேர் நாடா ..—முன்னைய பிள்ளைத் தமிழ்க்கொத்து 166-ம் பாட்டின் குறிப்பிலும் இங்ஙனமே உளது காண்க.

## சப்பாணிப் பருவம்

40 அரமகளிர் தங்கழுத் தணியும்நாண் கழலாமல்
ஐந்தரு வடிக்கெடாமல்
அயிரா பதப்பெரும் பகடொளித் தோடிநீள்
அலைகடற் புக்கிடாமல்

திரளவடி கொண்டதெள் ளமுதமது கொள்ளைபோய்த்
தேவர்கள் நடுக்குருமல்
தெய்வேந்திர னுக்கரசு மகுடபங்கம் வந்து
சிறைச்சாலை * யுட்படாமற்

கரதூடணன் திரி சிரா நிகும் பன்கும்ப
கன்னன்இந் திரசெயித்துக்
கலங்காத ராவணன் மடியலங்காபுரங்
கனல் கொழுந் தப்பெருவிரல்

சரடுபூட் டிச்சிலைக் கடைக்குழைக் குங்கொண்டல்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசொறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே (1)

(1) ஐந்தரு - கற்பகம், பாரிசாதம், சந்தானம், அரிசந்தானம், மந்தாரம்; அடி - ஆதி; பகடு - யானை; திரிசிரா - விசிரவசுவிற்குக் காலையிடத் துதித்த குமரன். இவன் சூர்ப்பணகையால் தூண்டப்பட்டு இராமபிரானிடம் யுத்தத்திற்கு வந்து இரண்டு தலையிழந்து பிறகு ஒரு சிரத்துடன் மாயத்தால் யுத்தஞ் செய்திறந்தவன். மற்றும் திரிசிரா என்ற இராவணன் குமாரனையும் கூறலாம். இவன் அனுமனால் கொல்லப்பட்டவன்.
சரடு - நாண்; கடைக்குழைக்கும்—நுனி வளையுமாறு செய்யும்.

41 அமரர்கின் னரர்முனிவர் கிம்புருட ரும்பரவும்
அயிராபதப் பாகனும்
அம்பரத் திடையுலவு கங்கைப் பெரும்பரவை
அலையெறிய விட்டசடிலத்

துமையையொரு பங்குடைக் கடவுளுந் தொழுதுளம்
உவப்பவம ராடுசுடர்வேல்
ஊறுபடு நயனப் படீரகுங் குமமுலைக்
கொல்குமொரு நுண்மருங்குற்

குமுதவாய் மடமங்கை தேவகிக் குள்ளங்
குழைந்துகண் களிகூரவே
கோசலைக் கினியகைக் கோமளக் குழவியே
கோதிலா மழைவள்ளலே

தமரவரி வண்டடை கிடந்தமுளரிக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே (2)

(2) கின்னரர் - மனிதவுடலும் குதிரை முகமுடையவரும் யாழிசை வல்லவருமான ஒரு சார் தேவ சாதியார் கிம்புருடர் - பதினெண் கணத்துள் ஒருவராய் மானுட முகமும் படைத்த தேவ சாதியார். அயிராபதப்பாகன் - இந்திரன்; அம்பரம் - ஆகாசம்; பரவை - கடல்; சடிலம் - சடை அமர் ஆடு சுடர்வேல் ஊறுபடுநயனம் -

* பிரதிபாடம்;—யுட்புகபுமர்

சண்டையிடுதற்கமைந்த சுடரும் வேலையே துன்பப்படுத்துகின்ற கண்கள்; படீர குங்கும முலை – செஞ் சாந்து பூசிய முலை; படீரம் – சந்தனம் எனவும் கொள்ளலாம் நயனமும், முலையும் மருங்குலும் வாயுமுடைய மடமங்கையெனப் பொருள்கொண்டு உம்மைத் தொகையாக்குக; தமர வரி வண்டு – இசைக்கின்ற வரிகளையுடைய வண்டுகள்.

42 வேதங்க ளோடைந்து பூதங்க ளுமயன்
விதிக்கின்ற பல்லுயிர்களும்
மிக்கவைம் பொறிகளு மெட்டெழுத் துநின்று
விளையாடு மொரு குழவியே

ஏதங் களைந்தடியர் இருவினை தணந்துபேர்
இன்பத் திருத்துமொளியே
இலகுசுடர் வேல்விழி துரோபதை தனைச்சிறிதும்
எண்ணாது துகிலுரிதரும்

போதந்த வேளைவந் துதவுசீ தரதுழாய்ப்
பூதரப் புயமுகுந்த
பொருவரிய வண்டகோ ளகைமுகடு கீறியப்
பொன்னுலகின் மேவிபாரி

சாதங் கொணர்ந்தருள் பின்னைக் களித்தவன்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே (3)

(3) அயன் – பிரமன்; எட்டெழுத்து – ஓம் நாராயணாய நம .. என்ற அஷ்டாக்ஷர மந்திரம்; தணந்து – நீங்கி; பூதரம் – மலை; கோளகை – உருண்டை வடிவம்.. பின்னை, நப்பின்னை – கண்ணன் தேவியருள் ஒருத்தியானதால் கணவனுடைய பொருள் பற்றிக் கூறினாரெனலாம். சத்தியபாமைக்காக கொணர்ந்ததை ஒற்றுமை பற்றி பின்னைக் கென்று ரெனலுமாம்.

43 அடங்காத வெழுபது வெள்ளஞ்சே னையுங்கை
அமைக்கும் படைத்தலைவரும்
அனுமன்முத லாயசுக் கிரீபனுஞ் சென்றுகடல்
அணைகட் டிலங்காபுரந்

தொடர்ந்தேறி யொருசிலைக் கடைகுழைத் தடுகணை
துரந்திரா வணனை மகுடந்
துகள்படுத் திச்சனகி சிறைமீட்ட தண்ணந்
துழாய்க்காள மேகங்கொடு

விடந்தாவு பஃறலைக் கட்செவி கிடந்தாட
விரிதிரைக் கங்கையாட
வேணியா டக்கரளி தன்னுடன் வாதாடும்
வெள்ளிப் பொருப்பனன்பாற்

தடந்தாரு வேரோடு புறந்தாள் கொணர்ந்தமால்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) விடம் தாவு பல் தலைக் கட்செவி-விஷம்பரந்திருக்கின்ற பல தலைகளையுடைய பாம்பு. கண்ணையே செவியாக உடையதென்று காரணப் பொருள்படும். வேணி - சடை; வெள்ளிப் பொருப்பன், சிவபிரான்; தடதாரு - பெரிய பாரிசாதமரம்; கண்ணன் சத்ய பாமை பொருட்டு பாரிசாதத்தை வேரோடு கொணர்ந்த போது இந்திரனும் மற்ற திக்குப் பாலகர்களும் எதிர்க்க அவர்களை வென்றார். அஷ்ட திக்குப் பாலகரில் சிவபிரானும் ஒரு வரானதால் அவரை மட்டும் சிறப்பித்தார் ஆசிரியர். இதனை "வயினதேயன் மேல் பாரிசாதத்தினை வைத்துப் .............................. எயில் எரித்தவன் பெருவிட எங்கனம் வளைந்தார்" என்று வரதராஜ அய்யங்கார் அருளிய பாகவதத்தில் காண்க.

44 மண்டுதிரை யெறிமகா சலராசி யேழுநெடு
வரையேழு மகிலமேழும்
வானகமு முயர்திசையும் வயிறடங் கப்புவன
வாய்மடுத் துங்கரந்துமுன்

உண்டுமிழ நீல்நிறக் குழவிநெடு வாலிமார்
புருவவொரு சரம் விடுக்கும்
ஒண்டிறற் செங்கைத் தடங்குரிசில் வேதாந்த
உபநிடத ஞானதீபம்

புண்டரிக மலர்முகை முறுக்குடையு மோடையிற்
புக்கிடங்க ர்க்குவெருவிப்
போரானை மூலமென் றேதாமுன் ஓடியொரு
புள்ளரசு மீதுவருபைந்

தண்டுழாய் புனைகொண்டல் அண்டர்நா யகளினிது
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென் திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) மகாசலராசி ஏழு—ஏழு சமுத்திரங்கள்; கரந்து மறைத்து; இடங்கர்—முதலை; குழவி வாலி மார்பு உருவ சரம் விடுக்கும் என்பதில் சாதிக் குறை விசேட வணி அமைந் திருத்தல் காண்க. யுகப் பிரளய காலத்தில் திருமால் உலகங்களை யெல்லாம்முண்டு ஆலிலையில் பாற்கடலகத்தே யோக நித்திரை செய்வார். பிரளயம் குறைந்த பின்பு பிரமனை ஏற்படுத்திச் சிருட்டிப்பார். இவ்வரலாற்றையே முதலிற் கூறிய வடிகள் காட்டின.

45 வண்ணந் தழைந்தகட லுலகமுழு தும்பரதன்
மணிமுடி கவிப்பநீவெவ்
வனமே கெனுஞ்சிறிய தாய்சொற் றலைக்கொண்டு
மணிநெடுஞ் சீரை சுற்றிப்

பெண்ணென்ற சீதையொடு மிளையவன் றன்னொடும்
பெருங்கா னகம் புகுந்த
பெம்மான் நறுந்துளவ மாலிகா பரணன் முது
பேரின்ப வீடளிக்கும்

கண்ணன் சிலைக்கடை குழைத்திலங் காபுரங்
கட்டழிக் குந்தேவர்கோன்
கருணைப் பெருக்காறு உவட்டெடுத் தலைமண்டு
காளமே கந்துளிபடுந்

தண்ணந் தடந்திரைப் பொருநையந் துறைவனொரு
சப்பாணி கொட்டியருளே.
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே (6)

(6) சீரை—மரவுரி ; சிறியதாய்-கைகேயி. மாலிகா ஆப்ரணன்-தீர்க்க சந்தி பெற்ற வட மொழித்தொடர் ; மாலிகா-மாலை.

46 உடுக்குந் திரைக்கருங் கடலாடை நிலவலையம்
உதரத்தி னுள்ளடக்கும்
ஒரு சிறிய குறளுரு வமைந்தநெடு நேமிமால்
உபயசர ணாரவிந்தத்

தெடுக்கும் பனிக்குறுந் திவலைபடு மலரிட்
டிலஙறுஞ்சிவரு ணன் பரவுவோன்
இசைபாடி யொருகோடி யறுகால் துதைந்தாடும்
ஈர்ந்துழாய்ப் படலைமாயன்

மடுக்குங் கொழுஞ்சுடர்ப் பருதிவா னவனுதைய
வரைபசும் புரவிமுட்டி
வருமணிப் பொற்றடந் தேரினுக் கிடுஞ்சித்திர
வட்டாழி யெட்டிமுட்டித்

தடுக்கும் பொலன் புரிசை சூழ் வழுதி நாடனொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (7)

(7) 'நீவெவ்வனம் ஏகு ' எனும் சிறியதாய்—ஆதிசூழ் ................ பூழி வெங் கானம் நண்ணி ........................" என்ற கம்ப ராமாயணப் பாட்டை நோக்க.

47 மானவே லரசர் தொழு மிதிலா புரிச்சனகன்
மாதேவி மணிமுன்கைமேல்
வைத்துமுத் தாடும் பசுங்கிளி யெனத்தூய
மஞ்சனஞ் செய்து செம்பொன்

மேனிமுழு வது நலுங் கிடுசெய்து கொங்கைக்கு
மென்களப மள்ளியப்பி
விரைநறுந் தார்குழலின் மீதணிந் தஞ்சனம்
விளங்குகட் கடையினெழுதிக்
கூனிளம் பிறைநுதற் கத்தூரி தீட்டிநற்
குளிர்மணிச் சுடிகை நாற்றிக்
கோல்வளை திருத்திமணி மேகலை மருங்கினிற்
கொய்து கொய் தினி துடுக்குஞ்
சானகி பெருங்காம வெள்ளத் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலை செறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (8)

(8) நிலத்திற்குக் கடலை ஆடையெனல் கவி மரபு. " நீராரும் கடலுடுத்த நில மடந்தைக்கு " எனும் மனோன்மணி வாழ்த்தினை நோக்குக உதரம்—வயிறு ; குறளுரு—வாமன வடிவம் ; படலை—மாலை ; மடுக்கும்—(உலக முழுவதும்) நிறைக்கும் ; பருதி வானவன், இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. உயர்ந்த பொன்மயமான புரிசை (மதில்) சூரியன் தேரின் சக்கரத்தை எட்டிப் பிடித்துத் தாக்கித் தடுத்தன என்பதினால் உயர்வு நவிற்சியணி தோன்றக் கூறி யுள்ளமை காண்க. மான—பெருமை வாய்ந்த ; சனகன் மாதேவி—சனகன் மனைவி — முத்தாடும் — முத்தமிடும். மஞ்சனம் செய்து—நீராட்டி ; குழலின் மீது விரைநறுந்தார் அணிந்து என்க ; தார்—மாலை ; அஞ்சனம்—மை கூன்—வளைந்த ; கத்தூரி—கத்தூரிப்பொட்டு ; சுடிகை நாற்றி—நெற்றிச் சுட்டியெனு

கக்கக் கொழுங்குருதி நரிபிடுங் கத்தசை
கவர்ந்துயிர் குடிப்ப மறலி,
கருநிறத் தாடகையை வதைபடுத் தச்சிலைக்
கடைகுழைத் *தடுகணை தொடுந்
தொக்கிற் பெருந்தவக் கவுசிகன் வேள்வியுஞ்
சுருதி நூல் முறைமுடித்துச்
சொல்லரிய மிதுலா புரிச்சனகன் விற்கண்ட
துண்டப் படுத்து மெங்கோன்
செக்கச் சிவக்குங் கொழும்பவள வார்கதிர்ச்
செஞ்சடா டவிமணிமுடிச்
சிவசங்க ரக்கடவுள் கண்கள்களி கூரச்
சிறந்தருள் புரிந்து சங்கு
சக்கரத் துணைச்செங்கை யொக்கச் சிவப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (9)

(9) மறலி உயிர் கவர்ந்து குடிப்ப என்க. தொக்கு இல்—பற்றில்லாத ; சடர்+அடவி—உருவகம்.

* பிரதி பாடம்—தடுகணைதொடுத்.

49 படநடுங் கக்கண் பிதுங்கப் பணுமுடிப்
பஃறலைக் கட்செவியின்மேற்
பவுரிமுறு கித்திருகி நடனஞ் செயுஞ்சரண
பங்கேருகக் குழகன்வெவ்

விடரகற் றிச்சென்ன வலையறுத் துத்தொண்டர்
ஈடேறி * வீடு குடிபுக்
கெக்கால முமர சிருப்பக் கடைக்கணேக்
கின்னருள் புரிந்த நெடுமால்

மடமயிற் சாயற் பசுங்கிளிளை யங்குதலை
மணிவல்லி தூயவல்லி
வளருந் திருப்பேரை வல்லிகுங் குமமிறுக
மதச்சந்த னப்பாளிதத்

தடமுலைச் சுவடுபொரு துமுதமணி மார்பனொரு
சப்பாணி கொட்டியருளே
சந்தனச் சோலைசெறி தென்திருப் பேரைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (10)

(10) கட்செவி—ஈண்டு காளிங்கன் என்ற பாம்பு; பவுரி—மண்டலமாயாடும் கூத்து வகை; முறுகித் திருகி—விரைந்து முறுக்கி நெடுமால் கடைக்கண் நோக்கின் அருளினால் தொண்டர் துன்பம் நீங்குவதோடு பிறவியும் நீங்கி வீடுபேற்றையடைந்து எக்காலமும் தலைமை பெறுகிறார்கள் என இரண்டாமடிக்குப் பொருள் காண்க. பசுங்கிளிளை அம்குதலை—மணிவல்லி கிளிபோன்ற மழலைச்சொல் கூறும் அழகிய வல்லிக்கொடி யொத்தவள். வல்லி உவம வாகுபெயர். குங்குமம் இருக என்க. மதம்—மான்மதம் (கஸ்தூரி); பாளிதம்—குழம்பு.

## முத்தப் பருவம்

50 சொற்ற நான் மறைபுக் கிருக்குமிட மாதலால்
சுரிசங் கிடம் புரிவதால்
துய்ய மலர் மாளிகைச் செல்விபே ரமுதந்
துளிக்கு மென் றின்புறுதலான்

மற்றுலகின் வாழ்பல் லுயிர்க்கிரங் குஞ் சத்திய
வாய்மைகுடி கொண்டுறைதலால்
மங்கலப் புனித மாஞ் சகலமுந் திருவுள
மகிழ்ந்திரங் கிச்சிறிது நீ

முற்றுரு மதியொடே அறுகெருக் கும்நரு
மொய்க்குஞ் செழுங்கொன்றையும்
மூரித் திரைப்பாய் சுருட்டித் தருங்கங்கை
முதுநீரும் விரவு சோதிக்

* பிரதி பாடம்—வீடது புகும் எக்காலமும்.

கற்றைவார் சடைமுடிச் சிவனுமய னுந்தொழக்
கனிவாயின் முத்தமருளே
காவு சூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் முத்தமருளே. (1)

(1) நான் மறை—இருக், யசுர், சாமம், அதர்வணம் என்ற வேதங்கள் ; துய்ய மலர் மாளிகைச் செல்வி—திருமகள் ; சத்தியவாய்மை—ஒரு பொருட் பன்மொழி ; முற்றுரு மதி—பிறைச் சந்திரன் ; நரு—வாசனை ; மூரி—பெரிய ; "முற்றுரு சடை முடி" வரை சிவனுக்கடைமொழி ; வேதங்கள் தங்குவதால், சங்கினை இடப்பக்கம் கொள்வதால், திருமகளின் அதராமிர்தம் துளிக்கும் என்று நினைப்பதால் வாய்மை குடிகொண்டிருப்பதால் சிறிது நீ கனியின் முத்தம் அருள் என்று பொருள் கொள்க. ஆழி நீர்வண்ணன் கடல் நீர் ஒத்த நிறமுடையவன் (நீலவண்ணன்).

51 தழைமடற் பச்சைப் பசும்பூக மணிமிடறு
தளையவிழ்க் கும்பாளைவாய்த்
தருமுத்த மும்பச் செனக்கிரண *முட்குமுது
தாற்றிளங் கதலிவாழை

யுழைமுத்து முடலிழுக் குண்டுரியு மென்கரும்
பொளிர்முத்து மாலைவாயிட்
டுடனெருக் கும்பொழுது கணுவினில் வெடித்துதிரும்
உம்பர்வான் முகடுதூங்க

மழைமுத்த முந்துளி படும்போது செவ்வுக்கு
வாராது வடிவுதகரும்
வளர்புண்ட ரீகப் பொகுட்டுமுத் தஞ்சிறைய
வண்டுகால் கொடுதுவைக்கும்

கழைமுத்த முங்கதிர் வெதுப்புண்டு நீறுமொரு
கதிர்முத்து நிகரல்லவே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ண நின்
கனிவாயின் முத்தமருளே. (2)

(2) பூகம்—பாக்குமரம் ; தாற்று—குலை ; பச்செனக் கிரணம் உட்கும்—பச்சை நிறம் பொருந்திய கதிர்களானவை அச்சந் தருகின்ற 7-ம் வேற்றுமை உருபு. கதலி வாழை—ஒரு பொருட் பன்மொழி ; உழை உம்பர் வான் முகடு—மேலுள்ள வானத் துச்சி ; மழை—மேகம் ; செவ்வு—முத்துக்களின் நிறை அளவு ; இப்பாட்டில் பல விடங்களில் முத்துக்கள் உண்டாதலைக்கூறி இவரது முத்தத்திற்கு அவை நிகரல்ல என்கிறார். பாக்கு மரங்களீன்ற முத்தும், வாழை மரங்களீன்ற முத்தும் உடலுக்கு ஓர் இழுக்குண்டாகாச் செய்து பிரியும். மெல்லிய கரும்பினின்று தோன்றிய முத்து ஆலையிடம் ஆட்டும் போது கணுவிடையில் வெடித்துக் கீழே உதிரும். மேகத்தினின்று தோன்றிய முத்து மழைத்துளிகளாகப் பெய்யும்போது சரியான எடை அளவுக்கு வராமல் உருவம் சிதறி விடும் தாமரையினின்று தோன்றிய முத்தும் வண்டு கால் கொண்டு துவைப்பதனல் விகாரப் படும். மூங்கிலினின்று தோன்றிய முத்தும் அக்கினியால் தாக்கப்பட்டு சாம்பராகி விடும். ஒப்பற்ற சந்திரனிடம் தோன்றிய முத்தும் உன் கனிவாய் முத்துக்கு ஒப்பல்ல. எனவே முத்தம் கொடுப்பாய் எனப் பொருள் கொள்க. காவு—சோலை.

*பிரதி பாடம்—மட்டுமுது.

52 முனியுமிள வலுமுடன் வரத்தன் திருத்தாளின்
முளரித் துகட்கருங்கல்
முனியிட்ட சாபந் தவிர்த்துமுன் னுருவெய்த
முதுகருணை யோடளித்துச்

சனகன்மிதி லாபுரிச் சிலைவளைத் துச்சீதை
தனைமணம் புணர்தண்டுழாய்
சக்கரா யுதக்கடவுள் குலநாதன் முத்தோடலை
தத்தும் தடம் பொருநையான்

இனியசது மாமறைக் கொருமுதல்வன் வருணன்வந்
தெக்காலமும் *பரவுகார்
இலகுகொடி மணிமாட வழுதிவள நாடனுற்
றெண்மரொடும் விளையாடுமால்

கனியுமமு தும்பாகு மூறிக் கலந்தசொற்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் முத்தமருளே. (3)

(3) முனி—விசுவாமித்திரர் ; இளவல்—இலக்குமணன். முளரித் திருத்தாளின் துகளி னுல் கருங்கல் சாபம் தவிர்த்து என்க. முனி இட்ட என்பதில் முனி கௌதமரை காட்டுகிறது. கார்..மாடம்..உயர்வு நவிர்ச்சியணி ; கார்—மேகம்.

53 பொருதிரை சுருட்டுமணி மகரசல ராசிதரு
புதுமுத்த முங்கைதொடேம்
புலவுநா றிச்சுற வெறிந்துடல முவரிப்
புனற்பங்க மூடெழுதலால்

பருகமது ரித்தபா கூற்றிருந் தொழுகும்
பசுங்கரும் பீன்ற முத்தும்
பலமொழிக் கபடுபடு மாதலா லதனையும்
படுபழி யறிந்து வேண்டேம்

இருநிலத் துச்சிவத் துக்கண்ட முங்கறுப்
பென்றுவேய் முத்துத்தொடேம்
இனிமேலும் நினதுகனி வாய்முத்தி னுக்குவமை
ஏதெடுத் துக்கூறுவேன்

கருதுமுது நான்மறைக் கொருமுதல்வ னேசெழுங்
கனிவாயின் முத்தமருளே
காவுசூழ் தென்பேரை யாழிநீர் வண்ணநின்
கனிவாயின் முத்தமருளே. (4)

*பிரதி பாடம்—பரப்புவோன்.

(4) மகரசலராசி—சுறுமீன் வசிக்கின்ற கடல் ; பங்கம்—சேறு ; பாகு—உற்றிருந்து இருநிலத்துச்......................வேய்—இத் தொடரினுல் மூங்கிலில் முத்தாயிருந்த சிவபிரானைக் குறிக்கிருர். இவ்வரலாற்றினை முன் பிள்ளைத்தமிழ்க் கொத்தின் 369ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

54 உலைவளைக் குங்கொழுங் கனல்வாய் துருத்திவைத்
தூதவெம் பொறிசிந்தவெந்
துருகுங் கருங்க லுருக்கோ டிரும்புவைத்
தொன்று யடித்து நீட்டித்

தலைமடுத் ததைமுனை படுத்திக் குணக்கறத்
தட்டியர மிட்டராவிச்
சமைந்தொப்ப மிட்டுக்கடைந்தவடி வேல்பொரு
தடங்கட் செழுங்குமுதவாய்

மலைவளைக் குஞ்செழுங் களபகுங் குமமுலை
மடந்தைதெய் வீகமோக
மடமயிற் சீதைப் பிராட்டியை மணம்புணர்
வளமருவு மிதிலாபுரிச்

சிலைவளைக் கும்பசுந் தண்டுழாய் மேகமே
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே. (5)

(5) உலை—கொல்லனது உலக்களம் ; உருகும் கருங்கல் உருக் கோடு..........நீட்டி—கல்லினுலும் மண்ணினுலுமான சிற்றுலைகளில் இரும்புக் கனியங்களின் பொடியைக் கட்டைக் கரியுடன் சேர்த்து உருக்கி 70–80 ராத்தல் நிறையுள்ள இரும்புக் கட்டிகளை அக்காலத்தில் உற்பத்தி செய்தார்கள். இதில் கட்டைக் கரி என்பதே உருக்குக் கல்லா யிருக்கலாம். குணக்கு அற—கோணல் நீங்க ; அரம்—இரும்பை அராவுகின்ற ஓர் கருவி. உலைவளை..........வேல் வரை வேலுக்கு அடைமொழி கூறிச் சிறப்பித்து அங்கனமுள்ள வேலினையே போர் செய்கின்ற கண்ணின் கூர்மைக்கு உவமை காட்டின திறம் வியக்கத்தக்கது.

55 பம்புதிரை வாருதி வடிம்பலைப் பத்துளி
படுங்ககன முகடுகோத்துப்
பரக்கும் படிக்குமுன் பெய்தகல் மாரியிற்
பதறியா நிரைகெடாமல்

தம்பமற் றிடையர்மடி யாதேழு நாளுமுது
தடவரை யெடுத்தேந்துமென்
தாமரைச் செங்கைத் தடங்குரிசி லேசங்கு
சக்கரா யுதக்கடவுளே

கம்பமத மால்யானை மூலமென் றேதவொ
கருடன் பிடர்த்தலைவரும்
காராழி மணிவண்ண பேராயி ரம்பெற்ற
கருணு கரக்குரிசிலே

செம்பவள முங்குமுத முங்கவிரு மொத்தநின்
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே. (6)

(6) பம்பு—நெருங்குகின்ற ; வடிம்பு—ஓரம். ககனம் முகடு கோத்து—ஆகாயத்தூச்சியில் நெருங்கி ; ஆநிரை—பசுக்கூட்டம் ; தம்பம் பற்றுங்கோடு—, சார்பு ; தடவரை—கோவர்த்தனமலை. பிடர்த்தலை—கழுத்தினிடம் ; கருணாகரன்—இராமருக்கு வழங்கும் பெயர்களில் ஒன்று. செம்பவளமும்..................கவிரு..........வாய்— பல பொருளுவமை.

56 பொங்குவெண் திங்களங் கவிகைவரு மிரணியன்
புகலவவன் மதலையப்பேர்
புகலரமல் எந்தைநா ராயண னெனப்பெயர்
புகன்றதிலே முந்துகோபித்

தங்கைமலர் மீதுசங் காழியேந் தியப்பிரமன்
அவிர்சடைப் *பெருமானுளம்
அஞ்சிப் பதுங்கித் திரிந்தனர் மறந்தனைக்கொல்
அரியெங் கெனப் †புடைத்துப்

பங்கமுறு மக்கனகன் மார்பம் பிளந்திழி
பசுங்குடர் பிடுங்கிரத்த
பானம்பண் ணித்தடந் தோள்மாலை சூடவே
பண்டுகளி கொண்டோர் தூணிற்

சிங்கவடி வாய்வந்த வெங்கள்குல ‡நாதனே
திருவாயின் முத்தமருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதநின்
திருவாயின் முத்தமருளே. (7)

(7) திங்கள்—அம்கவிகை—சந்திரனையொத்த வெண் கொற்றக் குடை ; எந்தை—எம்+ தந்தை. மருவுமொழி ; அம்பிகை மலர் மீது சங்கு ஆழி ஏந்தி—திருமால், ஏந்தி—ஏந்துதலையுடையனென இகர விகுதி வினைமுதற் பொருளைக் காட்டியது. அவிர் சடைப் பெருமான்—சிவன் கனகன்—பொன்னிறமான இரணியன் ; சிங்கம்—நரசிங்கம்.

## வேறு.

57 மூவா முதலா வுலகமொரு
மூன்றும் பரவ வங்குரித்து
முத்திக் கொருவித் தாகவந்த
முதுநான் மறையின் குலக் கொழுந்தே

§கோவா தொளிரும் மரகதமே
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே
கோவேத் தியரு ளக்கமலம்
குடிபுக் கிருக்கும் பெருமாளே

பிரதி பாடம் :—* பெருமாறு முன் † புடைப்பப் ‡ நாதநின்
பிரதி பாடம் :—§ கோவா வொளிரும்

தாவா வளமைக் கோசலைக்கோர்
தவமே தவத்தின் பயனேயச்
சனகன் றருசா னகிவேட்ட
தடங்கைக் களிறே போரேறே

தேவா வமிர்தங் கனிபவளத்
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் தமிழ்ப் பேரைச்
செல்வா முத்தந் தருகவே. (8)

(8) மூவா—அழியாத ; அங்குரித்து—முளைத்து ; கோவாது—கோர்க்காது ; கோவேத்தியர்—ஈண்டு வேதியர் வேத்தியர் என விரிந்தது. தாவா—கெடாத ; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

58 துளிக்குந் திருப்பாற் கடன் முகட்டுத்
தூய தரங்கத் தனந்தபுரத்
தொருவா விருகண் துயில்கூருஞ்
சோதிச் சுடரே பேரின்ப

மளிக்குங் கருணைக் கருங்கடலே
அழியா வீட்டுக் கொருவிளக்கே
அமுதங் கடைந்து திரட்டி யெடுத்
தமரர்க் குதவும் பெருமானே

களிக்குஞ் சுரும்பர் துதைந்துழத்தேன்
கக்குங் கமல முறுக்குடையுங்
கழனித் தடஞ்சூழ் திருநாடா
கண்ணு வரிகே சவமுகுந்தா

தெளிக்கும் பொருநைத் தடந்துறைவா
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலுந் திருப்பேரைச்
செல்வா முத்தந் தருகவே. (9)

(9) தூய தரங்கத்து அனந்தபுரத்து—இது கடலலை வீசும் திருவனந்தபுரம்போலும் மேலும் ஒருவா—நீங்காமல் திருப்பாற்கடலிலும் திருவனந்தபுரத்திலும் யோகநித்திரை கொள்ளும் சோதிச்சுடர் என்க.

59 சந்தா டவியும் பாதிரியுந்
தடந்தா மரையும் விளைவயலுஞ்
சதுமா மறையும் விழாவொலியுந்
தழைக்கும் பிள்ளைக் குழா வொலியும

நந்தா வளமைத் திருவழுதி
நாடா பரம பதவீடா
நறுந்தா தளையும் பசுந்துளவ
நாரா யணசீ தரமுகுந்த

கொந்தார் மலர்ப்பூங் கரியகுழற்
கொவ்வைக் கனிவாய் மணிமுறுவற
கொடிபோ னுடங்குந் துடியிடைக்கோ
மளக்கோ குலக்கோ சலையளித்த

சிந்தா மணியே மரகதமே
திருவாய் முத்தந் தருகவே
தெள்ளிப் பயிலும் தமிழ்ப் பேரரச
செல்வா முத்தம் தருகவே. (10)

(10) சந்த(ம்) + அடவி—சந்தாடவி—சந்தன மரங்கள் சூழ்ந்த காடுகள் ; சந்தம்—சந்தனம் ; நந்தா—கெடாத ; தாது—மகரந்தம் ; கொந்து—கொத்து ; கொவ்வைக்கனி—கோவைப்பழம் ; கோகுலம்—அரசகுலம்.

## வாரானைப் பருவம்

60 விதுரன் மனையில் அடிசில் நுகரும்
விரகன் வருக வருகவே
விதர ணிகமும் அறிவு முடைய
விமலன் வருக வருகவே

அதிரு மணியும் அரையின் வடமும்
அசைய வருக வருகவே
அழகு கரிய குழல்கள் சரிய
அபிமன் வருக வருகவே

புதிய மதியின் வதன வெயர்பு
பொலிய வருக வருகவே
பொழியு நறவு விரவு துளவு
புனையு மனகன் வருகவே

மதுர முறுசெவ் வதர வமுதம்
உதரம் வழிய வருகவே
வருணன் வருடு முபைய சரண
வரதன் வருக வருகவே. (1)

(1) விதுரன் மனையில் அடிசில் நுகர்ந்தது கண்ணவதாரத்தில். விதரணிகம்—சாமர்த்தியம் ; அனகன்—திருமாலுக்கொரு பெயர் ; உதரம்—வயிறு ; உபையசரணம்—இரு கால்கள். அபிமன் என்று தன் காலத்திலுள்ள ஓர் மனிதனை உவமை கூறியது வீரத்தில் சிறத்தலான் போலும்.

## வேறு.

61 எரியு மனல் கதுவும்விழி நிருதரொடு சமர்புரியும்
இகல் தொலைய விடுகணையினன்
இருவினையு மொருசிறிது தொடரவரி தெனவரும்
எவர்தமையு மடிமைகொளுமால்

முரிபுருவ நுதல்வனிதை சனகிமுலை முகடுழுத
முகலளித விதரணமுளோன்
முருகுவிரி தருதுளவு மணமலிய நெடியமணி
முடியினணி பெறவணிகுவோன்

உரியசது மறையுமுனி வரருமய னொடுபரவும்
உபையபரி புரசரணநீ
டுலகமுழு வதுமுதர மமையவொரு துனி நுகரும்
ஒளிரும்ரவி குலமரபினோன்

நெறியமரு தமுமுதிய சகடுமுதை விதரணிகன்
நிமலன்அர வணைதுயிலுமால்
நெறியுமகி மையுமளவில் குணனும்வடி வழகுமுடை
நிகரில்முகில் வணன் வருகவே. (2)

(2) அனல் கதுவும் விழி—நெருப்பு மூளும் கண்கள்; நிருதர்—நிருததிக்கிலுள்ளவர், இராட்சதர்; அடிமை கொளும்மால் என்க; முரி புருவம்—வளைகின்ற புருவம், வினைத்தொகை லளிதம்—இனிமை; அயன்—பிரமன்; நீடு உலக முழுதும் நுகர்ந்தது—யுகப்பிரளயத்தின் போது; ரவிகுலம்—சூரியகுலம், இக்குலத்தில் இராமனாக அவதரித்தது நோக்கி; நெறிய மருதம்—வழியிலுள்ள இரண்டு மருத மரங்கள்; சகடு—சக்கரவடிவாய் வந்த சகடாசூரன்; நிமலன்—மலமற்றவன், கடவுள்.

## வேறு.

62 புகல ருஞ்சது மறைய ருந்தவர்
புலவர் பண்டிதர் மலர் கொடே
புதிய பங்கய சரணவ ணங்கிய
புனித வெண்டிரை யுததி சூழ்

செகம டங்கலு நொடியி னுண்டுமிழ்
திரும ணந்தொளிர் மருமவோர்
திரிபு ரந்தழல் படமு னிந்தருள்
சிவன யன்றொழ வருகவே

தகர முங்கிய பரிம ளங்கமழ்
தருத டம்புய சயதரா
சமர்மு கந்தனில் நிருதர் வெம்படை
சரியி டுஞ்சிலை யபிமநீள்

மகர குண்டல மசைய வம்பொனின்
மணிவ டஞ்சுடர் விரியவே
மணம லிந்தலர் துளவ ணிந்தருள்
மகர வண்குழை வருகவே. (3)

3. உததி—கடல்; திருமணந்து ஒளிர் மரும—இலக்குமி சேரப் பெற்று பிரகாசிக்கின்ற மார்பையுடையவனே; ஓர்—ஒப்பற்ற; தகரம் முங்கிய—மயிர்ச்சாந்து நிரம்பிய; அபிமன்—என்பது அபிம எனத் தொக்கது.

63 கலைம ணந்தொளிர் தவளவெண்பிறை
கதுவி டுஞ்சிலை நுதலினுள்
கவின்ந லந்தரு *சனகி சம்பிரம
கனத னம்பொரு துழுதமால்

உலைமு கந்தனி லடிபடும் பொழு
தொளிரு மொண்சுடர் வயிரவா
ளொடுமு னிந்தட ரவுணர் பொன்றிட
உயிர்அ டுஞ்சமன் வருகவே

திலக மஞ்சரி துளவசைந்தொளி
திகழ வண்டின முரலவே
செழுந றுந்துகள் முகைவிரிந்தலர்
சிறிய பங்கய மெனுநறு

மலர்ம டந்தையு நிலமடந்தையு
மருவு திண்டிறல் வரதநீள்
மகர குண்டல மசைய விங்கெதிர்
மகர வண்குழை வருகவே. (4)

(4) தவளம்-வெண்மை ; கதுவிடும்—ஒக்கும் ; சம்பிரமம்—களிப்பு வாய்ந்த ; வாள்—ஐவகைப் படையிலொன்றான வாளாயுதம் ; பொன்றிட—இறக்க ; சமன்—யமன் ; திலக—கடவுளரில் திலக மொத்தவனே ; மஞ்சரி துளவு—தளிரையுடைய துளப மாலை ; நறு—செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சம் செய்து எனத்திரிந்து நின்றது.

64 உளநெ கிழ்ந்திரு பொழுதும் வந்தனை
யொடுமு வந்தெதிர் பரவவே
உபைய செஞ்சரண் முடிபுனைந்தொளிர்
உயர்ப தந்தரு கருணைமால்

அளைக வர்ந்திடை மகளிர்தங்குடில்
அணைத ருங்கயி றதுகொடே
அடிபடும்பொழு துடல்கு ழைந்தழு
தழுது நின்றவன் வருகவே

குளநி ரம்பிய புனலினுங்கரை
குலுகும் வண்டலு மதகுநீள்
குவளை யம்படு கருநெருங்கிய
குளிர்ந றும்பொழில் இடையும்வாய்

வளைமு ழங்கிய குருகையம்பதி
மருவு நங்கைகண் மணி நன்று
வலவ னிங்கித கவிதை கொண்டருள்
மகர வண்குழை வருகவே. (5)

பிரதிபாடம்—* சனகி சம்பிரசம்

(5) வந்தனையொடு—வணங்குதலோடு ; அளை—வெண்ணெய் ; குடில் அணைதரும் கயிறு கொடு—தம் வீட்டிலுள்ள பசு முதலியவற்றை பால் கறத்தற்கு அணைத்துற்காகும் கயிறு கொண்டு ; குவளை அம்படுகர்—குவளை மலர்ந்துள்ள அழகிய நீர் நிலை ; வால்வளை—வெள்ளிய சங்கு ; குருகை அம்பதி—திருக்குருகூர் ; நங்கை—உடைய நங்கையார். நம்மாழ்வார் தாயார். நல்நாவலவன் இங்கிதம் கவிதை கொண்டு—திருமாலையே துதிக்கும் நன்மை பொருந்திய நாக்கினின்று தோன்றும் பாட்டுக்களில் வல்லவரான நம்மாழ்வாரின் இனிய

## வேறு.

65 முடிமீ தொளிர்சூ ழியத் தொகையின்
முழுவெண் டிங்கட் கற்றைநிலா
மூரிக் கடல்சூழ் தருபுவன
முற்றுந் தழைய வடிந்தவள்ளைக்
கொடிபோ லொசியுங் குழையுமணிக்
குழையுங் குழைய வுடல்குழையக்
குழைத்து நுதலி னிடுதிலதக்
குறிவேர் வழிய விடைகழியின்
அடிமே லடிவைத் திருகைசுவர்
அதனைப் பிடித்து வருதலிற்றள்
ளாடி *வருகத் தளிர்ப் பின்மலர்
அங்கை பதித்துத் தவழ்ந்தெனது
மடிமீ திருந்து களபமுலை
வள்ளத் தமுதுண் டிடவருக
மகரக் குழையே யென்னிருகண்
மணியே வருக வருகவே. (6)

(6) சூழியத் தொகையின்—உச்சிக் கொண்டையுள் செருகும் அணித் தொகுதி போன்ற ; மூரிக்கடல்—பெரிய கடல், பழமையுள்ள கடலுமாம் ; கற்றை நிலாவும் கடலும் சூழ்ந்த புவனம் என்க. வடிந்த—பிறரைவசமாக்குகின்ற ; திலதம் குறிவேர்வு அழிய—பொட்டானது குறிய வேர்வையினால் அழியவும் ; இடை கழி—வாயிற்றிண்ணை ; தளிர்ப்பின் மலர்—தளிர்த்தலுடன் கூடிய மலரொத்த ; முலைவள்ளம்—உருவகம் ; வள்ளம் — கிண்ணம் ; இப்பாட்டுடன் கீழ் வரும் பெரியாழ்வார் திருமொழியை நோக்குக :—

" ஓடவோடக் கிங்கிணிகள் ஒலிக்குமோசைப் பாணியாலே பாடிப்பாடி வருகின்றாயைப் பற்பநாபனென்றிருந்தேன் ஆடியாடி அசைந்தசைந்திட்டு அதனுக்கேற்ற கூத்தையாடி ஓடியோடிப் போய்விடாதே உத்தமா ! நீ முலையுணாயே".

66 பண்டா லிலையின் அரங்கத்துப்
பாலாழியிற்கண் டுயில்கூரும்
பச்சைப் புயலே பணிமகுடப்
படப்பாந் தளின்கண் பிதுங்கநறுந்
தண்டா மரைச்செஞ் சரண் பெயர்த்துத்
தள்ளிக் கடைவால் பிடித்துநெறி
தழைக்கும் படிக்கு நடம்புரிந்த
தலைவா கடல்சூ ழுலகமுழு

பிரதிபாடம்—*வழுதத்

துண்டா தரவோ டுமிழ்ந்தளந்த
ஒளியே யொளிரு மரகதமே
ஒருவா ணுதல் பண் டுளங்களிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து

வண்டார் தருவின் மலர் கொணர்ந்த
மாலே வருக வருகவே
மகரக் குழையே என்னிருகண்
மணியே வருக வருகவே. (7)

(7) ஆலிலையினும், திருவரங்கத்தினும், பாற்கடலில் அனந்தன் மீதும் யோக நித்திரை செய்யும் திருமால் என்க. பணமகுடம்—பருத்த தலையுச்சி, பின்னர் படம் என வரவே முன்னைய பணம் பருமையை உணர்த்தியது. பணமகுடப் . . . . தலைவா—இது கண்ணன் காளிங்கன் என்ற பாம்பினது கர்வத்தையடக்கிய செயலைக் காட்டுகிறது. ஆதரவு—விருப்பம். உலகம் அளந்தது—திருவிக்கிரமாவதாரத்தில்; ஒரு வாள்நுதல்—சத்தியபாமை; தரு—பாரிசாத மரம்; இதன் வரலாறு 43-ஆம் பாட்டில் காண்க.

67 சிந்தா மணியே மரகதமே
தேவே தேவர் பெருமானே
தேடும் பொருளே நாடோறுஞ்
செய்யுந் தவமே தவப்பயனே

எந்தாய் நந்தா விளக் கொளியே
எங்கட் குயிரே பரகதியே
எழுதா மறையின் வடிவே சொல்
எழுத்தெட் டினுக்கு மொருமயமே

கொந்தார் துளவப் பசுந்தாமக்
கோவே நிருதர் குலக் கூற்றே
கூடும் புனல்நீ ராடிவலங்
கொண்டு திருமஞ் சனக்கொளுவில்

வந்தா தரித்து வருணனடி
வணங்கும் புயலே வருகவே
மகரக் குழையே என்னிருகண்
மணியே வருக வருகவே. (8)

(8) சிந்தாமணி—தேவ மணியின் ஒன்று, நினைத்ததைக் கொடுக்கும்; ஆதரித்து—விரும்பி;

68 ஆரா வமுதத் திலவிதழின்
அமுதத் திவலை மார்பொழுக
அரைநாண் வடமு மருங்கசைய
அரிய குழையுங் குண்டலமுஞ்

சீரார் திருவிற் பொலியுநுதல்
தீட்டும் குறிவேர் வரும்பவருள்
செய்யுங் கமல முகமிலங்கத்
திருத்தாட் டுணைப்பொற் றண்டையொலி

பார்மீ தெங்கள் செவிகுளிரப்
பழகு நெறிநா டொறும்வளரப்
பசுந்தார்த் துளவு மணங்கமழும்
படிநீ நடந்துன் னடிபெயர்த்தென்

வாரார் களபக் குரும்பைமுலை
வள்ளத் தமுதுன் டிடவருக
மகரக் குழையே என்னிருகண்
மணியே வருக வருகவே. (9)

(9) ஆரா அமுதம்—உண்ணத் தெவிட்டாத அமுதத்தையுடைய; இலவு இதழ்—இலவம் பஞ்சொத்தமென்மையான இதழ்; இட்டும் குறி—எழுதும் பொட்டாகிய அடையாளத்தில்; நாள்+தோறும்—நாடொறும்; வார் ஆர் களபம் குரும்பை முலை—கச்சு பொருந்

69 அருமைப் பெருமான் பிறவியொழித்
தருளும் பெருமான் கரதலச்சங்
காழிப் பெருமான் யானவர்க்கும்
அருநான் மறைக்கு மெட்டாத

தருமப் பெருமான் பசுந்துளவத்
தாமப் பெருமா னேழுலகும்
தழைக்கும் படிக்கன் றளந்தநெடுஞ்
சரணப் பெருமான் மன்னுயிர்க்குங்

கருமப் பெருமான் முத்திவழி
காட்டும் பெருமா னம்பொருட்டுக்
கமலா சனத்து வீற்றிருக்குங்
கன்னிப் பெருமான் தமிழ்க்குருகும்

பெருமைப் பெருமா னென்னருமைப்
பிள்ளைப் பெருமான் வருகவே
பேரா யிரம்பெற் றுயர்ந்ததிருப்
பேரைப் பெருமான் வருகவே. (10)

10) கரதலம்—கையிடம்; தாமம்—மாலை; சரணம்—பாதம்; கன்னி—இளமை; தமிழ் குருகும் . . பெருமாள் முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 593-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

## அம்புலிப் பருவம்

(சாமம்)

70 மதியுடைத் தாயமண் டலம்பெற்று வான்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வடியிட்ட தெள்ளமுத மயமாகி யானந்த
மகரா லயத் தெழுதலால்

நதியொடர வறுகெருக் கணியுஞ் சடைக்காட்டு
நம்பனுக் *கொருகண்ணதாய்
நாடொறு முயிர்ப்பயிர் தழைப்ப வருள்பொழிவதால்
நற்றுணை யுனக்கிவன் காண்

முதிரிவிளை யுங்கொழும் பவளக் குலைச்சாலி
மூடுதொறும் வாய்மடை தொறும்
மூரிப் பகட்டுவரி வாளை வெடிதாவியலை
மோதும் புனற்கேணியும்

அதிருமணி மதகும்வளை யுகள்வழுதி நாடனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (1)

(1) சந்திரன்மீது செல்லும்போது :—மதி உடைத்தாய . . . வருதலால்—வளமற்ற கர்க்கடக இராசியை யுடைத்தாகிய இடத்தைப் பெற்று வானில் பூரணச் சந்திர தேவனாக வருவதால், மதி—கர்க்கடக ராசி ; வடியிட்ட . . . எழுதலால்—வடிகட்டின தெள்ளிய அமுதம் போன்று தூய வெண்மை நிறமாகிச் சுறு மீன்கள் வசிக்கும் மகிழ்ச்சிமிகும் பாற் கடலில் பிறந்ததனால் ; மகராலயம்—தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர் சுறு மீன் தங்கியிருக்குமிடமெனவே கடலாயிற்று. சந்திரன் அமுதம் கடைகையில் பாற் கடலில் பிறந்தது நோக்குக. நதியொடு . . . கண்ணதாய்—கங்கையோடு பாம்பு அறுகம்புல், எருக்கம்பூ முதலியவைகளை யணியும் சடைத் தொகுதியுடைய சிவனுக்கு ஒப்பற்ற இடக் கண்ணாகி ; நம்பன்—சிவன் ; நாள்தொறும் . . . பொழிவதால்—தினமும் ஓரறிவுயிர் களாகிய பயிர்கள் தழைக்குமாறு அருட் கிரணங்களைப் பொழிவதால் கண்ணாய் பொழிவதால் எனக்கூட்டுக. சந்திரனுக்கு "லதாதிபன்" என்றும் "ஓஷதி ராஜா" என்றும் வடமொழி யில் பெயருண்டாதலால் "உயிர்ப் பயிர் தழைப்ப" என்றார்.

மகரக்குழை நாதர் மீது செல்லும்போது மதி உடைத்தான . . . . வருதலால்—சந்திர குலத்தாரால் ஆளுதலையுடைத்தாய பாண்டிய நாட்டிலே தலத்தைப் பெற்று உயர்ந்த பூரணமான அறிவுடைய கடவுள் என்று கூறுவதால் ; மதி—இலக்கணையால் சந்திர குலத் தைக் காட்டிற்று. மண்—பாண்டிய நாடு ; வான் முழுமதிக் கடவுள்.

"வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்". என்ற குறளைக் காண்க. வடி இட்ட . . . . . எழுதலால்—வடிகட்டின தெளிவான பாலின் மயமாகிய கடலில் மகிழ்ச்சி கொண்டு யோக நித்திரை புரிவதால் ; ஆனந்தம்—மகிழ்ச்சி ; எழுதல்—பள்ளி கொண்டு எழுந்தருளியிருத்தல் ; நதியொடு . . . . கண்ணதாய்—கங்கையோடு, அரவு முத லியவைகளை அணிகளாக அணியும் சடைத் தொகுதியுடைய சிவனுக்கு ஒப்பற்ற தன் வலப் பாகத்தைக் கொடுத்தவராய் . . . . பொழிவதல்" தினமும் பக்தருயிர்களாகிய பயிர் கள் தழைப்பதற்கு அருள் செய்வதால் ; பவளக் குலைச்சாலி—பவளம் போன்று குலைக் கதிர் களையுடைய செந்நிறமமைந்த நெல். மூடு—வேர் ; வாய்மடை—வாய்க்காலின் மடை ; மூரிப்ப கட்டு வரி வாளை—வலிய பெரிய வரிந்த வாளைமீன் ; வெடிதாவி—மேலெழும்பி ; கேணி—வயல் ; வளை உகள்—சங்குகள் புரளும் ; இங்ஙனமே 16, 32-ஆம் பாட்டுக்களில் வந்துள்ளமை காண்க

## தானம்

71 இருவினைச் செனனவலை கட்டறுத் தழியாத
இன்பவீ டெய்தும் பொருட்
டிணைமலர்ச் சேவடி யடைந்தவர்க் குதவிடுவன்
இவன்வருண னுதரிக்கும்

பிரதி பாடம்—* ஒரு கண்ணதாய்.

*திருநதிச் சமுகதீர்த் தத்துறைத் தீம்புனல்
திவலையொரு சிறிதுபடிலோ
செகமண்ட லத்துன்முக மண்டல முயற்கறை
சிதைத்துவண் டடைகிடப்ப

முருகுவிரி தருநறுங் குமுதவாய் மடமங்கை
முகிண்முலை மணம்புணர்ந்து
முன்னும் களங்கமற் றப்பாலும் வைகுண்ட
முத்திமண் டலமெய்தலாம்

அருமறைக் குரியவொரு பொருளா யிருப்பனிவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (2)

ஊழிக்காலத்து, திருமால் சிவனை வலப்பாகம் தாங்கினர்.

(2) துறை—நீர்த்துறை ; தீம்புனல்—இனிய நீர் ; கறை—களங்கம் ; ஈண்டு "திருநதிச் சமுக தீர்த்தம்" ஒன்று உண்டு போலும். வண்டடை . . . . மணம் புணர்ந்து—வண்டுகள் செறிந்திருக்கும் வாசனை மிக்க குமுத மலர் போன்ற வாயையுடைய பெண்களின் மொட்டொத்த முலைகளைச் சேர்ந்து (சந்திரன் காம விகாரனுதலால் வருதற்கு இங்ஙனம் கூறினர் போலும்) முன்னும்—முதற் கண் ; அப்பால்—அதன் பிறகு சந்திரனுக்கு முதலில் கலிங்கத்தையகற்றி மகளிர் விரும்பும்படி செய்து சிற்றின்பம் அனுபவித்த பிறகு பேரின்ப மாகிய வைகுண்டத்தையும் கொடுப்பான் என்றார்.

72 வெவ்வரா விடமொழுகு கறையணற் பகுவாய்
விழுங்கிமீ ளவுமுமிழ்தரும்
மிச்சிலென் றுலகிலுரை செய்வர்அத னுலுடல்
வெளுத்தற மெலிந்துகுப்புற்

றெவ்வுலக முந்திரிந் தாவதென் பெரியோரை
எளியோர் துணைக்கோடல்நன்
றிருகனற் கட்செவிப் பகைமுடித் தற்குவண
னிவனிட்ட வேவல்கடவான்

செவ்வுபட வெட்டிரட் டித்தகலை யுடையநீ
சிந்திப்ப தற்கரியவாந்
திகழருங் கலைகளறு பத்துநா லுடையவொரு
செம்மலிவன் வைகுண்டமாம்

அவ்வுலக முந்தரக் கர்த்தனிவன் அஃதறிந்
தம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) வெம்மை+அரா=வெவ்வரா—கொடிய ராகு எனும் பாம்பு ; கறை அணல்—விடமுடைய கீழ்வாய் ; பகு—பிளவுபட்ட ; வாய் விழுங்கி—மூன்றும் வேற்றுமைத் தொகை ; மிச்சில்—எச்சில் ; அற—முழுதும் ; குப்புற்று—தலைகவிழ்ந்து ; "பெரியோரை . . .

பிரதிபாடம்—* திருசந்திச்,

நன்று "—இது பழமொழி ; கட்செவி—பாம்பு ; உவணன்—கருடன் ; செவ்வு—அழகு ; எட்டு இரட்டித்த கலை—பதினாறு கலை ; வைகுண்டமாம் அவ்வுலகு—வைகுண்டமாகிய அந்த உலகம் ; இராகு இரகண காலத்தில் சந்திரனை விழுங்கி உமிழ்வதால் எச்சிலென்றவனை யாவரும் ஏச அப்பழியால் தன் உடல் வெளுத்து மிகவும் மெலிந்து தலை கவிழ்ந்து எல்லா வுலகங்களையும் சுற்றி யார் அப்பழியைப் போக்குவார் என்று திரிவதனால் என்ன பயன் ? "செயற்கரிய செய்யும் பெரியோரான திருமாலை அங்ஙனம்" செய்யா எளியோர் துணைக் கொள்ளல் நன்று எனவே விரைந்து வா. மற்றும் இராகுவாகிய பகையை முடிக்கக் கருடன் இத்திருமாலிட்ட ஏவலைத் தவறாது செய்வான் என்பதனால் தானம் கூறினார். மற்றும் மூன்றாவது வரியில் சந்திரனுக்கு 16 கலைகள் கூறித் திருமாலுக்கு 64 கலைகள் கூறியதனால் பேதமும் கூறினர். "பெரியோரைத் துணைக்கொள்" என்பது மூதுரை.

## பேதம்

73 பைத்தலை நெடுஞ்சுடிகை விடமொழுகு கட்செவிப்
படவரவு தொடரினும்நீ
படரொளி மழுங்கிவான் முகடொளிக் குவைபெரும்
பாம்புதீண் டிக்கிடந்த

நித்திரை மயக்கத்து மொளிமழுங் கானிவன்
நெடியவா னிடை நுழைந்து
நிலையிலா தோடித் திரிந்துழல்வை நீயிவன்
நீடூழி யடிபெயர்ந்து

மூத்தவா ணகைவிமலை யடிவருட வானவர்கள்
முனிவரஞ் சலிசெய்யநீள்
முத்திதரும் வைகுண்டம் வீற்றிருப் பானந்த
முறைமுறை தெரிந்துபார்க்கில்

அத்தகைமை தோறுமுன் னிலுமுயர்ந் தவனிவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (4)

(4) குறிப்பு.—சுடிகை—தலை ; அரவு—இராகு ; பெரும் பாம்பு—ஆதிசேடன் ; தீண்டி—பொருந்தி ; நித்திரை—யோக நித்திரை ; சிறிய இராகு எனும் பாம்பின் சாயை தொடர்ந்தாலே ஒளி மழுங்கி வான் முகடொளிப்பவன் சந்திரன் என்னும் பெரிய பாம்பாகிய ஆதிசேடன் தீண்டிக் கிடந்த மயக்கத்திலும் ஒளி மழுங்கவில்லை என நயம் தோன்றியது. விமலை—இலக்குமி; உன்னினும்—உன்னைக் காட்டினும் ; ஈண்டு இல்—ஐந்தாம் வேற்றுமை உறழ் பொருவு; இங்கு இரு வகை பேதங்கள் கூறப்பட்டன காண்க.

## தண்டம்

74 செங்குருதி யலைமண்டி யாறெடுத் தோடச்
சிலைக்கால் வளைத்துவிசயன்
தேத்தரச னைக்கொன்று கூற்றருந் தும்படி
சினத்தடும் போர்முகத்துப்

பொங்குகதி ராயிரந் தங்குசெஞ் சுடரவன்
பொழுதுகா ணுமலொளிர்செம்
பொன்னிறத் திகிரியா லிவன்மறைத் தனனன்று
போதாக் குறைக்கொளிரும்வெண்

சங்குகொண் டுன்னையு மறைத்திடா மற்கலை
தளர்ந்து மெலி வெய்துறுமல்
நாதள வெருப்பொடி யெடுத்தெறியா மல்முன்றில்
தவழ்ந்துவிளை யாடவாவென்

றங்கைமலர் விரல்குனித் துனையழைத் தனனிலன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (5)

(5) குறிப்பு—தேத்தரசன்—சிந்து தேசத்தரசனை சயத்திரதன்; சயத்திரதன்—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 129-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. கூற்று—யமன்; திகிரி—சக்கரம்; சங்கு கூறினார் தண்ணிய கதிர்கள் வீசலால்; எருப் பொடி எடுத்தெறிதல்—பிள்ளைத் தமிழ்க் கொத்து 129-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. வாரா விட்டால் சங்கு கொண்டுன்னை மறைத்து விடுவான் என்றதால் தண்டமாயிற்று.

## பேதம்

75 கூறருந் துதியைநீ யுடையவ னிவனமார்
கூறருந் துதியையுடையான்
குறைபடு தடங்கலைக ளுடையநீ யிவனுமோ
குறையாத கலைகளுடையான்

வீறுதரு முருவிலி மதிக்குடையன் நீயிவன்
விதரண மதிக்குடையவன்
விண்ணிடைக் கரந்தொளி யொளித்திடுவை நீயிவன்
வேதநுட் பொருளி னொளியான்

ஊறுபட வோடித் திரிந்திளைத் திடுவைநீ
ஒருநாளு மிளையானிவன்
உவரிப் புனற்பங்க *மூடுதித் திடுவையிவன்
உம்பரா ழியினுதிப்பான்

ஆறலை புரட்டுபொரு நாநதி நெடுந்துறைவன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (6)

(6) குறிப்பு.—சந்திரன். மகரக்குழையன்.

1. கூறுதற்கரிய துதியை என்னும் திதியை உடையவன். தேவர்கள் கூறிப் புகழ்கின்ற தோத்திரத்தைப் பெற்றவன்.

பிரதிபாடம்—* வூடுதிப்பாய் இவன்,

| சந்திரன். | மகரக்குழையன். |
|---|---|
| 2 குறைகின்ற 16 கலைகளைப் பெற்றவன். | குறையாமல் வளர்கின்ற 64 கலைகளைப் பெற்றவன். |
| 3 பெருமை மிக்க உருவமற்ற மன்மதனுக்கு வெண்கொற்றக் குடையாகவுள்ளவன். | திறமைமிக்க அறிவு உடையவன். |
| 4 வானிடை மறைந்து ஒளிப்பான். .. | இவன் வேத நூட் பொருளில் ஒளியாக விளங்குவான். |
| 5 துன்பம் பட மேரு மலையைச் சுற்றியோடியோடித் திரிந்து இளைப்பவன். | ஒரு நாளும் களைப் புறுதவன். |
| 6 உப்புத் தன்மையுடைய நீரும் சேறும் உடைய இவ்வுலகக் கடலில் உதிப்பவன். (கடற் கண் சந்திரன் தோன்றுவதுபோல் தெரிவதால் இங்ஙன் கூறினர்.) | மேலுள்ள பாற்கடலில் ஆலிலை மேல் குழைந்தையாகத் தோன்றுவான். |

அலை ஆறு புரட்டும்—அலைகள் வழியிலுள்ளவைகளைப் புரட்டிச் செல்லும்.

## தண்டம்

76 சந்தப் படாமுலைத் தார்க்குழற் கோமளத்
    தையல்சா னகிபொருட்டுத்
தடமதி லிலங்கா புரம்பொடி படுத்தித்
    தகர்த்துமுடி பத்துமண்மேற்

சிந்தச் சரந்தொட்ட சிலைவீர ராகவன்
    சிறுகுழந் தைப்பிள்ளையாய்த்
திருவிரல் தலைசுட்டி யுனையழைத் தால்வரச்
    செய்யா திருக்கமுறையோ

முந்தப் பெருந்தக்கன் வேள்வியிற் றேவர்கள்
    முறிந்து திசை கெட்டோடுநாள்
முழுமதிக் கடவுள்நீ பரிபவப் பட்டகதை
    மொழியக் கணக்குமுண்டோ

அந்தக் கணக்கின்றும் வந்திருக் கின்றதினி
    அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமாதவனுடன்
    அம்புலீ யாடவாவே. (7)

(7) குறிப்பு.—சந்தப் படாம் முலை—சந்தனக் குழம்பு பூசி உடையால் மறைத்த முலை ; திருவிரல் தலை சுட்டி—விரலைத் தலைக்கு மேல் தூக்கிச் சுட்டி ; பரிபவம்—அவமானம். முந்த . . . . கணக்கும் உண்டோ—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்தின் 505-ஆம் பாட்டின் குறிப்பினை நோக்குக.

## தானம்

77 தவநெறிக் கவுதமன் பன்னியக லிகைபுரந்
    தரனொடு மணந்தவதனால்
தவமுனி அறைந்தசா பத்தில்வன் கல்லுருத்
    தாங்கிய தொழித்த தெங்கோன்

புவனமொரு மூன்றுமீ ரடியா லளக்கின்ற
பொற்கழற் றுகளுனக்கும்
புனிதபூ ரணசெவ்வி முகமண்ட லக்கறைப்
புரைதீர வரமளிக்கும்

சிவனுமய னும்வெள்ளை யயிரா பததத்தனும
செஞ்சுடர்க் கடவுளோனும்
தேவர்முப் பத்துமுக் கோடியு மறுமுகச்
செம்மலுங் கைம்மலைக்கோட்

டவனுமுறை முறைபரவு நிகரில்முகில் வண்ணனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ண னெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (8)

(8) குறிப்பு.—தவநெறி . . . எங்கோன்—பிள்ளைத் தமிழ்க் கொத்து 504-ஆம் பாட்டின் குறிப்புரை நோக்குக. இராமாவதாரத்தில் அகலிகை சாபம் நீக்கினர். புவனம் . . . பொற்கழல்—பிள்ளைத் தமிழ்க் கொத்து 118, 189-ஆம் பாட்டுக்களின் குறிப்பில் காண்க. புரை—குற்றம்; வெள்ளை அயிராபதத்தன்—இந்திரன்; செஞ்சுடர்க் கடவுளோன்—சூரியன்: அறுமுகச் செம்மல்—முருகன்; கைம்மலைக் கோட்டவன்—தும்பிக்கையையுடைய மலை யொத்த யானைத் தலையையும் தந்தங்களையு முடைய விநாயகன்.

78 விண்டடவி முகமாயி ரங்களு மொளித்துநெடு
வெளியின்வந் தொருமுகமதாய்
வெண்டிரைக் கங்கைப் பெரும்புனல் பரந்தென
விரிந்தவவ் வெள்ளத்தின்மேல்

தண்டரள மணியுமிழ்ந் தாகாய நள்ளிடை
தயங்கிய சலஞ்சல மெனத்
தாரகைக் குலமொடு * தவழ்ந்துமேன் மேல்நீ
தலைப்பட்ட வாதலானும்

புண்டரிக மலர்முகை முறுக்குடைந் தலருமொரு
பூவெனப் பொலிவுபெற்றாய்
புலரிய மதிவள முரைக்கில்முழு மதியெனப்
புகல்கின்ற துண்மைகண்டாய்

அண்டபகி ரண்டமும் நிரம்பிய இவன்றனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (9)

(9) குறிப்பு.—அடவி—தொகுதி; நெடுவெளியின்—பரந்த ஆகாயத்தினின்றும்; நள்—இரவு; விண்டு அடவி . . . பெரும்புனல்—பகீரதன் தவத்தினுல் வந்த கங்கை தன் தொகுதி பொருந்திய ஆயிரம் முகங்களும் சிவபிரான் சடையில் தாங்கி மறைத்து அதில் ஒரு முகத்தை

பிரதிபாடம் :—* தளர்ந்துமேன் மேல்நீ,

யீடுத்துவிட அது சென்று பரந்த நீர் போன்றுள்ள மேக மற்ற நிர்மலமான ஆகாயத்தில் இரவில் முத்து மணிகள். உமிழ்ந்தது போன்ற நக்ஷத்திரக் கூட்டங்களோடு சலஞ்சலம் போன்று சந்திரன் விளங்குகிறான் என்க. வலம்புரி பல சேர்ந்தது சலஞ்சலமாகும். முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 451-ஆம் பாட்டின் குறிப்பில் சலஞ்சலம் பற்றிக் காண்க. புண்டரிகம்—தாமரை ; பகிரண்டம்—அண்டத்தின் வெளி.

### பேதம்.

79 என்னென்று நிகராவை யிருளன்றி நீயன்பர்
இதையவிருள் நீக்கவறியாய்
இருவிசும் பிற்பொலிகு வாயிவன் புவனங்கள்
எங்கணும் பொலிவதோராய்

பொன்னந் தகட்டிதழ்க் குமுதமல் லாலுளப்
புதுமலர் திறக்க வறியாய்
போலியல் லாவுனைப் போலியென் றுல்வந்து
புதுநிலா மணிமுன்றில்வாய்

மன்னுஞ் சரோருகப் படுகரும் புளினவெண்
மணற்குன்ற முஞ்சோலையும்
மடவனப் பெடையோடு கூடிப் புணர்ந்தக
மகிழ்ந்துபிரி யாதுசெஞ்சூட்

டன்னங்கள் விளையாடு தென்பேரை மாயனுடன்
அம்புலீ யாடவாவே
ஆழிநீர் வண்ணனெனும் வாழிமா தவனுடன்
அம்புலீ யாடவாவே. (10)

(10) குறிப்பு.—என் என்று நிகராவை—மகரக்குழையனின் எவ்வொப்புமைக் கென்று தான் ஒப்பாகுவாய்.

| சந்திரன். | மகரக்குழைநாதர். |
|---|---|
| 1 உலகப் புறவிருளை நீக்குவான் .. .. | பக்தர்கள் மனத்தின் அஞ்ஞான விருளைப் போக்குவான். |
| 2 ஆகாயத்தில் விளங்குவான் .. .. | உலகம் எல்லாவற்றிலும் விளங் குவான். |
| 3 பொன் தகட்டினையொத்த இதழ்களையுடைய அல்லி மலரை மலர்த்துவான் .. .. | மனமாகிய புது மலரினைத் திறப் பான். |

போலியல்லா உனை—ஒப்பில்லாத உன்னை ; புது நிலா மணி முன்றில் வாய்—புதிய நிலவொளிகாலும் முத்துக்கள் உள்ள முன்றிலினிடம் ; படுகர்—நீர்நிலை புளினம்—மணல்திட்டு ; அனப்பெடை—பெண் அன்னம் ; அகமகிழ்ந்து—மனமகிழ்ந்து. செஞ் சூட்டு அன்னம்—சிவந்த உச்சிக்கொண்டையுடைய ஆண் அன்னம் ; 'வந்து மணி முன்றில் வாய் பேரை மாயனுடன் ஆடவா' என இயையக்க. மூன்றுவது வரி பேரைக்கு அடைமொழியாக வந்தது.

**சிற்றில் பருவம்.**

80 களிக்குஞ் சுரும்பர் துதைந்துழுது
கணைக்கா லசைத்துச் சில்லோசை
கனிந்தூற் றிருப்ப மிழற்றுதொறுங்
கக்குங் கலுழி நறவுபரி
மளிக்கும் பசுந்தார்ச் செழுந்துளவு
மணக்கும் குழகா கார்மேக
வண்ணா கருணை மடைதிறந்து
வழியும் புயலே பேரின்பம்
அளிக்கும் பெரும் தெருவீதி
யருகே வழிக்குப் புறம்பாக
வறியாப் பருவப் பெண்களொடுத்
தமைக்கும் வண்ட லிதுகண்டாய்
தெளிக்குந் தமிழ்த்தென் திருப்பேரைச்
செல்வா சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே (1)

(1) துதைந்து—நெருங்கி; ஊற்றிருப்ப—பெருக்குமிக; மிழற்றுதொறும்—ஒலிக்குந்தோறும்; நறவு கலுழி—தேன் வெள்ளம்; முதலடி துளவுக்கு அடைமொழியாக வந்தது. வண்டல்—மகளிர் விளையாட்டு.

81 வேண்டக் கிடையா வாரமுதம்
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்
வெற்பைப் பிடுங்கி மத்தாக
விடவா ளரவக் கயிறுசுற்றிப்
பூண்டக் கணமே சுவைமதுரம்
பொங்கிப் பெருகக் கடைந்தெடுத்துப்
புலவர்க் களிக்கும் பெருமானே
பொருந்தா நிருதர் போரேறே
காண்டற்கரிய கொழுங்கிரணம்
கக்கும் பசிய மரகதமே
கதிரா ழியிற்செங் கதிர்மறைத்த
கருணைப் புயலே பூமகள்கை
தீண்டச் சிவக்கும் பொலன் தாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (2)

(2) கடல்—பாற்கடல்; வெற்பு—மந்தரமலை; விடவாள் அரவம்—வாசுகி; புலவர்—தேவர்; பசிய மரகதமே—ஈண்டு நீல நிறமுடையவனுயிருந்தும் பச்சை, செம்மை, எனக் கூறுதல் கவி சமயம். பூமகள்—இலக்குமி. முதலடி பாற்கடல் கடைந்தது பற்றிக் கூறுகிறது. வெற்பு—மந்தரமலை. கடல்—பாற்கடல்.

82 வள்ளைக் குழைவேற் கருநெடுங்கண்
மதிவா ணுதற்கோ மளப்புளக
வனமா முலைக்குங் குமச்சுவட்டு
மடவா ரொடும்போய் விளையாட

அள்ளிக் குடிக்கும் தடம்பொருநை
யாற்றிற் கூடு புனற்றுறையின்
அருகிற் சிறுபேதை யர்களொடுத்
தடங்கா விருப்ப மீதூர்ந்து

தள்ளிப் பரல்மாற் றரும்பசும்பொன்
தகட்டின் வயிடூ ரியங்குயிற்றிச்
சமைக்குந் திருமா மணிமுறத்துத்
தருந்தா மரைக்கைச் செப்பமணல்

தெள்ளிக் கொணர்ந்து தரவிழைத்த
சிறியேம் சிற்றில் சிதையேலே
*தெளிக்கும் தமிழ்த்தென் திருப்பேரைச்
செல்வா சிற்றில் சிதையேலே
பொருநைத் தடந்துறைவ
சிறியேம் சிற்றில் சிதையேலே (3)

(3) வள்ளைக் குழை—வள்ளைப்பூ வொத்த காது; கோமளம்—இளமை; வனம்—அழகு; குடிக்கும்—நீர் குடிக்கும்; ஆற்றில் கூடு புனல்துறை—ஆற்றில் சேரும் நீர்த்துறை; குயிற்றி—பதித்து; மாற்றரும் பசும் பொன் தகட்டினால் செய்த வைடூரியம் பதித்து உள்ள அழகிய முறத்திலே—பரல் (பருக்கைக் கற்களை) தள்ளி மணல் தெள்ளி எடுத்துச் செய்த சிற்றில் என்க.

83 தருக்கா மலர்ப்பூம் பொழிலும் வயல்
தடமும் தருதென் திருப்பேரை
தழைக்கும் படிநூற் றெண்மர் தொழுந்
தாமோ தரசீ தரமுகுந்த

வொருக்கா லெனுமவ் விருக்காலும்
உணராப் பொருளே பரஞ்சுடரே
ஒருவா ணுதல்பண் டுளங்களிப்ப
உயர்வான் முகடு கிழித்தெழுந்து

மருக்கால் நறுமென்மலர் கொணர்ந்த
மதமோ பதிஞ் றுயிரங்கோ
வலாமங் கையர்கள் புளகமுலை
மணந்து கனிவா யமுதமுண்ட

பிரதிபாடம் :—* திரையார்.

செருக்கோ வுனக்கீ தியல்பன்று
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே (4)

(4) தருகா—மரங்கள் சூழ்ந்த சோலை; ஒருக்கால் ஒப்பற்ற பிரிவு வேதத்தாலும் அறிய முடியாதவன் என்றபடி; இருக்காலும்—இருக்கு வேதத்தாலும்; ஒருவாள் நுதல்—சத்தியபாமை; மருகால்—வாசனை வெளிவிடும்; நறு—தேன்; மலர்—பாரிசாதமலர்; புளகம்—புடைப்பு (பக்கங்களில் பருத்தல்); கனிவாய்—கொவ்வைக்கனிபோன்ற சிவந்த உதடுகளையுடைய வாய்; அமுது—இங்கு அதராமிர்தம்; பதினாறாயிரம். . . .உண்டு பிள்ளைத் தமிழ்க் கொத்து 213-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

84 கோவே கோவா மரகதமே
கொடும்போ ரரக்கர் குலக்கூற்றே
குளிர்பூந் துளவத் திருத்தொங்கல்
குவவுத் தடந்தோட் காயாவாம்

பூவே பூவின் பொலன்பொகுட்டுப்
புதுமென் மணமே வருள்சுரந்து
பொங்கிப் பெருகி யுவட்டெறிந்து
பொழியும் புயலே கற்பகப்பூம்

காவே முதுகோ சலைதவமே
கண்ணே கண்ணின் உள்மணியே
கதிர்நித் திலவெண் மணல்நினது
காலி னுறுத்தக் கடனன்றே

தேவே தேவப் பெருமானே
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே (5)

(5) குவவு—திரட்சியமைந்த; உவட்டெறிதல்—பெருக்குமிகுதல்; நித்தில வெண் மணல்—முத்தினைப்போன்ற வெள்ளிய மணல்;

85 வன்னக களபப் புளகமுலை
மடவா ரெனுங்கோ வியர்கள்திரு
வாய்ப்பா டியிற்புக் களைகவர்ந்த
மணிவாய்க் கள்வ னென்றுகட்டி

யுன்னிப் பொருமி யழவடித்த
துண்டே லவர்கள் விளையாடும்
ஒளிர்நித் திலவெண் மணல்சிற்றில்
உனக்கின் றளிக்க முறைகண்டாய்

கன்னிக் கமுக மிடற்றொடியக்
காய்க்கும் பசுங்காய்க் குலைசிதறக்
கதலிக் குலங்க ளடிசாயக்
கயல்பாய்ந் துகண்டு வாலறையுஞ்

செந்நெல் பழனத் திருப்பேரைச்
செல்வா சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (6)

(6) வன்னம்—அழகு ; அளை—வெண்ணெய் ; உன்னிப் பொருமி அழ—பின்னும் அச் செய்தியை நினைத்துத் தேம்பித் தேம்பி அழுமாறு ; உனக்கு இன்று அளிக்க முறை—அன்று கோவியர்கள் அழ அடித்ததனால் அவர்கள் மக்கள் இப்போது விளையாடும் சிற்றிலை நீ கலைப்பதனால் “உனக்கு இப்போது கேட்டது கொடுக்க” முறையாகும். கயல் மீன்கள் தாவும்போது வாலினால் நீரை யறையும். அக் கயல்கள் தாவும் வேகத்தினாலும் நீர் தெறித்த வேகத்தினாலும் இளைய பாக்கு மரங்களின் முனைப் பாகங்கள் ஒடியவும், அதன் காய்களையுடைய குலைகள் சிதறவும், வாழை மரங்கள் அடியோடு சாயவும் செய்தன. இதனைச் சூழ மேதி இறங்கும் துறையில் . . . வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க . . . ” என்ற குற்றாலக் குறவஞ்சியோடு ஒப்பிடுக. செந்நெல் பழனம் தேன் கெண்டை மீன்கள் நிறையப் பெற்ற வயல் ; செந்நெல்—செந்நெல் என்று கொண்டு சாலி நெல் விளையும் கழனி என்றுமாம்.

86 பண்ணே றியமென் குதலைமொழி
பவளக் கனிவாய்க் குறுநகையும்
பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயமுங் கண்டழகு

கண்ணே றெளியேம் பட்டனமென்
றெண்ணிக் கருத்து வேறுபடக்
கணக்கன் றுலகின் மன்னுயிர்க்குங்
காவற் கடவுள் நீயன்றோ

மண்ணே ழையுமுண் டுமிழ்ந்தளந்த
மாலே வேலைப் புனல்சுவறி
மறுகக் கணைதொட் டிடுமுகுந்தா
வருணன் *திருவா ராதனைசெய்

தெண்ணீர்ப் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
தெளிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை
செல்வா சிற்றில் சிதையேலே. (7)

(7) பாரித்து—பருத்து ; கண்ணேறு—திருஷ்டி தோஷம் ; மொழி, வாய், நகை, புயம் ஆகியவைகளின் அழகு கண்டு “எளிமையையுடைய நாங்கள் திருஷ்டி செய்தோம் என்று நினைத்து மனம் மாறுபடக் கலைப்பதில் தவறில்லை என்றாலும்” உலகிலுள்ள எல்லா வுயிர்க்கும் நீ காக்கும் தெய்வமல்லவா எனவே எங்களையும் காக்க வேண்டாவா” ஆகையின் சிற்றில் சிதையாதே என்கிறார்கள். வேலைப்புனல் . . . முகுந்தா—கடல் நீர் வற்றிச் சிதைய அக்கினிக் கணைவிடும் இராமா.

---

பிரதிபாடம்.—திணமா ராதனைசெய்.

87 தடிக்குஞ் சிகரப் படாம்பொதிந்த
தடமா முலேக்குங் குமச்சுவட்டுத்
தழைக்குங் குறுங்கண் *சுரந்தொழுகித்
தருபா லசோதை மகிழ்ந்தூட்ட

குடிக்கும் புயலே யிலங்கையில் வெங்
கொடும்போ ரரக்கர் குலக்கூற்ருய்க்
குனிக்குஞ் சிலேக்கைத் தடங்களிறே
கோவே பசுந்தண் டுழாய்மாலே

முடிக்கும் †பெருமை முத்தொழிற்கு
மூவா முதலே யழியாத
முத்திக் கொருவித் தாகவந்து
முளேக்கும் பொருளே பாகுபெற

வடிக்கும் தமிழ்த்தென் திருப்பேரை
மாலே சிற்றில் சிதையேலே
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே சிற்றில் சிதையேலே. (8)

(8) தடிக்கும் சிகரப் படாம் பொதிந்த தடமாமுலே—கனத்த மலேச் சிகரம் போன்ற உடையணிந்துள்ள பெரிய சிறந்த முலே என்க. கனத்த முலே—மலேச் சிகரம் போன்ற முலே, உடையணிந்துள்ள முலே எனக் கூட்டுக. குனிக்கும்—வளேக்கும்; முத்தொழில்—ஆக்கல், அழித்தல், படைத்தல்; மூவா முதல்—கடவுள்;

88 கொத்தோ டசையப் பசுந்துளவங்
குடக்கூ டரும்பி முளேத்தெழுந்து
கொழிக்குந் தவளப் பிறைநுதலில்
குறுவேர் வொழுக வணிந்தசுட்டி

முத்தா னதுவெண் ணிலவெறிப்ப
முகத்தா மரையின் நகையிலங்க
முதுகுண் டலமும் வார்காதும்
முழுமா மணிப்பொற் சோதிவிட

அத்தா வருணன் தினம்பரவும்
அரிகே சவநா ரணமுகுந்த
அடல்வா ளரவிற் கண்டுயிலும்
ஆழிப் புயலே ஆய்ச்சியர்கை

மத்தா லடிப்ப வெண்ணெ யுண்ட
வாயா சிற்றில் சிதையேலே
மகரக் குழையே நூற்றெண்மர்
வாழ்வே சிற்றில் சிதையேலே. (9)

(9) குடக்கு ஊடு—மேற்குத் திக்கினிடையில்; பிறை நுதலில்—பிறையையொத்த நெற்றி; அத்தா—அத்தன் என்பதன் விளி; வாள் அரவு—ஆதிசேடன்.

பிரதிபாடம்.—* சார்ந்தொழுகித். † பொருளே.

89 அன்போ டணைத்து முலைகொடுத்தின்
அமுதூற் றிருக்கும் புனலாட்டி
அருங்கண் *கடைக்கஞ் சனம்தீட்டி
ஆரம் திருத்திப் பட்டுடுத்தி

உன்பே ரிடுவே னெனக் †குழவிக்
குள்ளத் தயவாற் றனிசமைத்த
உயர்மாளிகையும் ஆடரங்கும்
ஒளிர் வேதிகையும் நீயழிக்க

வன்பா லோடி வரவுனக்கு
வழக்கன் றுலகிற் சிறுபேதை
மகளிரிருந்தும் விளையாடும்
வண்டல் துகட்சே வடிபடுமே

தென்பே ரையின்நங் குலநாத
சிறியேம் சிற்றில் சிதையேலே
திரையார் பொருநைத் தடந்துறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (10)

(10) அமுது ஊற்றிருக்கும் புனல்—பால் பெருகியிருக்கும் நீர்ப் பொருட்கண்; வேதிகை—திண்ணை; வன்பு—கொடுமை; வண்டல்—பருக்கைக்கல்; துகள்—புழுதி; வண்டல் துகள் உம்மைத் தொகை இங்ஙனம் முன் பிள்ளைத் தமிழ்க் கொத்தில் 178-ஆம் பாட்டில் வருவது காண்க.

## சிறுபறைப் பருவம்

90 ‡வானுரு முப்பத்து முக்கோடி யுஞ்சது
மறைக் கடவுள் நான்முகவனும்
மழுவலா ளனுமறு முகச்செம்ம லுங்கைம்
மலைக்கோட்டு வேழமுகனும்

ஏனோரும் வச்சிரக் குலிசபதி யும்மகிழ்ந்
தெண்டிசா முகபாலரும்
இருவிழியு மிருசெவியு மிதையதா மரைமலரும்
எக்கால முந்தழையவே

கானூறு பச்சைப் பசும்பூக மடல்விண்டு
கக்கும் கொழும்பிரசமும்
கதலிக் கொழுங்கனி யுடைந்து வழிமதுவும்
கலந்தோடி யலைமண்டியத்

தேனூறு பாயும்வயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்
சிறுபறை முழக்கியருளே. (1)

பிரதிபாடம்.—* கடைக்கஞ் சனமெழுதி. † குழுவுக்கு. ‡ வர்னுடர்.

(1) வான் ஊர்—ஆகாய உலகில் பொருந்தியுள்ள முப்பத்து முக்கோடி—என்பது தொகைக் குறிப்பாய்த் தேவர்களைக் காட்டியது. கடவுளாகிய நான்முகன்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை முன் சிவனையும் இந்திரனையும் கூறி மிகுந்த அறு திசை பாலர் எனக் கூறுது எண் திசைப் பாலர் என்றார். அவர்கள் இருவரையும் சிறப்பு நோக்கிக் கூறியது பற்றி. பூகம்—பாக்கு மரம்; கான் ஊறு—பூக்கள் மிக்க; பிரசம்—தேன், முக்கோடி தேவர் முதலியவர் தழைக்குமாறு சிறுபறைமுழக்குக என்க.

91 பூவருங் கொன்றைச் செழுஞ்சடா டவிமுடிப்
புனிதபூ ரணனிரட்டும்
பொற்றுடி யெனச்சொல் திறம்பாத கனகவிப்
புலவர்திண் டிறம்மென்னவும்

மேவுகதிர் மணிமகுட கோடிநிபு டஞ்செய்யும்
விருதரசர் மணிவாசலின்
விதரணக் கொடை வெற்றி மணவொலி கறங்குதெரு
வீதிமும் முரச மெனவுந்

தாவுசீ ரிட்டுடன் விசித்திறுக் கித்தொனி
தழைந்ததொண் டகமென்னவும்
தவருது சதிமுறையின் அண்டகோ ளிகைமுகடு
தடவியது செவிடு படுவோர்

தேவதுந் துமியெனத் திருவழுதி வளநாட
சிறுபறை முழக்கி யருளே
தென்திருப் பேரைவரு நுங்குழைக் *காதவொரு
சிறுபறை முழக்கியருளே. (2)

(2) புனிதபூரணன்—சிவன்; துடி—உடுக்கை; கனக இப்புலவர்—பொன்னுலகிலுள்ள தேவர்; திண்டிறம்—மிக்க வலி, அதிவீரம்; நிபுடம்—நெருக்கம்; விருது அரசர்—பல வகை வெற்றிப் பட்டங்களைப் பெற்ற அரசர்; கறங்கு—ஒலிக்கின்ற; கொடை வெற்றி மணம்—உம்மைத் தொகை; விசித்து—கட்டி; தொண்டகம்—குறிஞ்சி நிலப்பறை; சதி முறை—தாளவொத்து முறை.

92 †கறைகெழுமு சமரில்வடி வாளொரீஇ இராவணன்
கைகளிரு பதும் விழுதுபோல்
காறுடர் மண்ணில்வீழ் குப்புற்று நிற்குநிலை
கண்டுதிரு வுளமிரங்கி

உறுதிபட வின்றுபோய் நாளைக்கு வாவென்
றுரைத்தராகவவெருவியன்
றோராளை மூலமென் றோதாமு னோடிவந்
துதவுமா தவசீதர

நறையொழுக மடன்முக முறுக்கவிழ்ந் தலருமொரு
நளினப் பொகுட்டாசன
நள்ளிடை வதிந்துபைந் தாதளைந் திசைபாடி
நாகிளம் பேடையோடுஞ்

சிறைவண்டு கண்படுக் கும்வழுதி நன்னாட
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் *காதவொரு
சிறுபறை முழக்கியருளே. (3)

(3) கறை கெழுமு—இரத்தக் கறை பொருந்திய; வாள் ஓரீஇ—வாளாயுதம் நீங்கி—வாள் என்பது இங்கு உபலட்சணமாக மற்ற ஆயுதங்களையும் உணர்த்தியது. கைகளிருபதும் கால்களும் தொடர்ந்து விழுவதுபோல மண்ணில் வீழ்ந்து குப்புற்று நிற்கும் நிலை என்க. கால்+துடர்—காறுடர்—உரைத்த ராகவ என்க. நறை—தேன்; நளினம்—தாமரை; நள்—இரவு; நாகு இளம்—மீமிசைக் கிளவி; சிறைவண்டு நளினப்பொகுட்டாசனத்தில் தங்கி மகரந்தங்களைப்பூசி இசை பாடி இளைய பெண் வண்டுகளோடும் இரவில் தூங்கும் அத்தனை நீர்வளம்மிக்க வழுதிநல் நாடு என்க.

93 அண்டபகி ரண்டமு மதிர்ந்துகுல வரையேழும்
அசையாமல் எண்டிசைதொறும்
ஆழிகவுட் கம்பக் கடாக்களிறு நிலைபெயர்ந்
தடிச்சுவ டெடுத்திடாமற்

கொண்ட வடவைக்கனல் கண்பிதுங் கக்கொடுங்
கோளரா வுடல் முடங்கக்
†குலுங்காம லாமைநெடு முதுகுளுக் காவண்ட
கோளகையின் முகடுவெடியா

விண்டடவு தாரகைக் குலமடங் கலுமண்ணில்
வீழாமல் உயர்செழும்பொன்
மேருகிரி சாயாமல் ஓடியிரு கரைதொறும்
வெண்ணிலா வுமிழுமுத்தம்

தெண்டிரை சுருட்டுபொரு நாநதி நெடுந்துறைவ
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் *காதவொரு
சிறுபறை முழக்கியருளே. (4)

(4) வரை எழு—கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம் எம கூடம், நீலகிரி; ஆழி கவுள் கடாக்கம்பம் களிறு—கடல்போன்ற கதுப்பினின்றும் ஒழுகும் மத நீரையுடைய நடுக்கத்தைச் செய்யும் எட்டுத்திக்கு யானைகள்; வடவைக் கனல்—பெண் குதிரை முகத்தின் வடிவோடு கடற்குள் தங்கியிருந்து யுகாந்தத்தின் மேலே கிளம்பி உலகத்தை எரித்து விடுவதாகக் கருதப்படும் தீ; கொடுங்கோள் அரா—கொடிய கொலை புரியும் விஷத்தையுடைய பாம்பு ஈண்டு எட்டுத்திக்குப் பாம்புகளை காட்டிற்று. அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகா பதுமன், சங்க பாலன், குளிகன் என்பன. ஆமை—திருமாலின் ஓர் அவதாரமான ஆமை மந்தர மலையைத் தாங்கியது நினைத்து அதன் முதுகு உளுக்கா என்றார். உளுக்கா—நெளிக்காமல்; உளுக்கா—வெடியா—ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம்; தாரகை—நட்சத்திரம்; வெண்நிலா உமிழும்—வெண்மையான நிலவொளி வெளிவிடும்; முத்தம்—அம் சாரியை.

---

பிரதிபாடம்.—* காதமுகில. † குறுங்காமல.

94 கங்கா நதிச்செழும் புனல்யமுனை சரசோதி
கற்பூர சுவை மணக்கும்
காவிரி யெனத்தேவர் வடியிட்ட வமுதெனக்
கமழுந் திருப் பொருநையும்

மங்காத சதுமறைக் குரியவேள் வியும் விழா
வணியும்மக வொலியு நாளும்
வளமைபெறு குலநாத பரமபத வீடாள
வயல்கடொறும் வாய்மடைதொறும்

சங்கார வாரஞ்செய் தகடுளைந் தலறித்
தவழ்ந்தேறி முத்துயிர்க்குந்
தண்ணந் தடத்தா மரைப்பொகுட் டாசனத்
தமனியப் பொற்கோவிலிற்

செங்கா லனந்துயிலும் வழுதிவள நன்னாடு
சிறு பறை முழக்கியருளே.
தென்திருப் பேரைவரு நங்குழைக் *காதவொரு
சிறுபறை முழக்கியருளே. (5)

(5) கங்கை, யமுனை, சரசுவதி, காவிரி போன்ற தேவர் வடிகட்டின அமுதம்போல வாசனை வீசும் நிறையுடைய பொருநையென்றார். அவைகளைப்போன்ற புண்ணிய நதியாதலால் காவிரிக்கு மட்டும் கற்பூர சுவை மணக்கும் என்றார். வாசனைத் திரவியத்திற்காகும் கற்பூர மரங்களை அடித்து வருவதால், கற்பூர சுவை மணக்கும் என்றார் பரமபத வீடு ஆள—பரமபதமாகிய வீட்டினை ஆட்சி புரிபவனே சங்குகள் ஆரவாரஞ் செய்து அகடு (வயிறு) உளைந்துஅலறி வயல்கள் தோறும், வாய்மடைதோறும் தவழ்ந்து ஏறி முத்துக்களை ஈனும். அத்தகைய நீர்வளமிகுந்த வழுதி நாடு என்க

## வேறு

95 பொருதிரை யெறிசல ராசி யுடுக்கும்
புவனத் திருமாதும்
பொங்கு சினந்தலை மண்டட வடுஞ்சமர்
புக்கெதிர் வருவோர் செங்

குருதி படும்படி பொருது மணம்புணர்
கொற்றக் குலமாதும்
கோதறு வண்புகழ்ச் சேரனு கூலக்
கோமள மாமாதும்

மருமலி சததள மண்டப மீது
மகிழ்ந்துறை பூமாதும்
வடகலை தென்கலை முழுது முணர்ந்த சொன
மங்கையும் நாடோறும்

பிரதிபேதம்—* காதமுகிலே.

திருவுளம் [1]கிளர்தர வழுதி நன் [2]னாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குல [3]நாதன்
சிறுபறை கொட்டுகவே. (6)

(6) திரை எறி சலராசி—அலைவீசும் கடல்; புவனத் திருமாது—பூமிதேவி; தலை மண்ட—நெருங்கிக் கலக்க; கொற்றக் குலமாது—வெற்றித் திருமகள்; கோமளமாமாது—புகழ்த்திரு; வண்புகழ்சேர் அனுகூல—எனப் பிரிக்க; சததளம்—தாமரை; பூமாது—இலக்குமி; சொல்மங்கை—கலைமகள்; திருஉளம் கிளர்தர—மகிழ்ச்சி மிக; அஷ்ட இலக்குமிகளில் வெற்றித்திரு, புகழ்த்திரு உண்டாதலால் இங்ஙனம் கூறினர்.

96 உழுதுழு திசைபயில் அளியொரு கோடி
உதைந்து துதைந்தாட
ஒளிர்மடன் முகையவிழ் துளவணி மால் குரு
கூர னுவந்தோதும்

பழுதறு முதுதிரு வாய்மொழி நூல்செவி
பற்பல புகுநேயன்
பண்டுல கங்களை யுண்டுபி னளவு
படுத்துந் [4]திருமாலால்

முழுமறை முறையிடு மிருசரணலையன்
மூரிக் கயமூடு
முதுபுன லோடையு மகழியும் வாள்வளை
மொய்க்கும் கழனியினும்

செழுமலர் மணமலி வழுதிநல் நாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில் வரு நங்குல நாதன்
சிறுபறை கொட்டுகவே. (7)

(7) உழுது—கிண்டி; அளி—வண்டு; குரு கூரன்—நம்மாழ்வார்; நூல் பற்பல செவி புகு நேயன் என்க மூரிக்கயம் ஊடும்—ஆழ்ந்த நீர்நிலையிடையும்; மலர்—தாமரை மலர், "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்பதால்.

97 புவனமு மண்ட கடாகமும் வேலைப்
புணரித் திசையெட்டும்
பொங்கழல் கதுவிய கண்களி யானைப்
புகர்முக மலையெட்டும்

குவடு படும்பொலன் வடவரை முதலாம்
குலகிரி யோரெட்டும்
கொடுவிட முடவுடல் பஃறலை மகுடக்
கோளர வோரெட்டும்

பிரதிப்பாடம்—[1] மகிழ்தர. [2] நாடா. [3] நாதா.
[4] பிரதிப்பாடம்—திருமாமர்ல.

தவமுனி வர்சுரர் மகபதி முக்கட்
சடைமுடி யுடையோனுஞ்
சதுமுகன் அறுமுகன் ஒருகொம் பேந்திய
தந்தி முகத்தோனும்

செவிகுளி ரத்திரு வழுதிநல் நாடன்
சிறுபறை கொட்டுகவே
தென்பே ரையில்வரு நங்குலநாதன்
சிறுபறை கொட்டுகவே. (8)

(8) அண்டகடாகம்—அண்டகோளத்தின் சுவர்; வேலைப்புணரி—ஒரு பொருட் பன்மொழி; வேலைப்புணரித்திசை—கடல் சூழ்ந்த திசைகள்; அழல்கதுவிய—நெருப்பு மூளுகின்ற; களி—மதம்; குவடு—சிகரம்; வடவரை—மேருமலை; முடவுஉடல்—வளைகின்ற உடல்; மகபதி—இந்திரன்; முக்கண் சடைமுடியோன்—சிவன்; ஒரு கொம்பு....முகத்தோன்—

## வேறு

98 அளிசுற்றிய தண்டலைப் பொதியத்
தருஞ்சாரலிற் பைங்கிழங் கெடுக்கும்
அம்பொற்குழி யிற்சுடர் விரிக்கும்
*அருங்கால்வயி ரங்கிடந் திமைப்பத்

துளிபட்டொழு கும் வரை யருவி
சுழிக்குந்தொறும் பொன்னொழுக் கெறியச்
சுவையூற் றிருக்கும் புனற் பொருநை
சுருட்டுந்திரை செம்மணி கொழிப்பத்

தளைவிட்டல ரும்பசும் பாளைத்
தலைப்பூங்கமு கமணி மிடற்றுத்
தாங்கும்பவ ளக்குலை கவிப்பத்
தடஞ்சால்வழி யூர்ந்தக டுளைந்து

வளைமுத்துயிர்க் கும்வயற் பேரை
மாலே சிறு பறைகொட்டுகவே
†மகரக்குழை யேநூற் றெண்மர்
வாழ்வே சிறு பறைகொட்டுகவே. (9)

(9) அளி சுற்றிய தண்டலை—வண்டுகள் மலருக்காகச் சூழ்ந்த சோலை; பைங்கிழங்கு எடுக்கும் அம்பொன் குழி—பசிய வள்ளிக்கிழங்கைத் தோண்டி எடுக்கும் அழகிய குழி; அம் பொன்—மீமிசைக் கிளவி: குழியில் வயிரம் கிடந்து இமைப்ப என்றார் இரத்தினங்கள் மலைக்கல்லில் தோன்றுவதனால். செம்மணி—பவளம்; பாளை தலை பூகமுகம்—பாளையை உச்சியிலேயுடைய அழகிய பாக்கு மரம்; பவளம் குலை—பவளம் போன்ற செந்நிறக் குலைகள்; தடம்சால் வழி ஊர்ந்து—நீர்நிலையினின்று ஏர் ஓட்டிய சால்வழியே ஊர்ந்து; அகடு—வயிறு; வளை முத்து உயிர்க்கும்—சங்குகள் முத்துக்களை ஈனும். இப் பாட்டினால் மலைவளம், அருவிவளம், நதிவளம், சோலைவளம், வயல் வளம் குறித்தார்.

---

பிரதிபாடம்—* அங்கால்வயி. வருணன் பரவு திருசரண மாலே சிறுபறை கொட்டுகவே.

### வேறு

99 நீறுபடு தவளவெண் பொடியாட வார்சடை
நெடுந்திரைக் கங்கையாட
நிலவாட முகைமுறுக் கவிழ்தும்பை யாடஅரன்
நின்றாட அமரராடப்
பாறுபடு நெட்டிலைச் சுடர்வேல் விடுங்கொடும்
படையிரா வணன் மருடமோர்
பத்துந் தகர்ந்தாட வெம்பேய் குறும்பேய்
பறந்தலைக் கவந்தமாடத்
தாறுபடு கதலிக் கொழுங்கனி யுடைந்து வழி
சாறுமாங் கனியின் நறவும்
தருமுடப் பலவின்நற் கனியுடைத் துப்பெருகு
தண் நறவும் அலை மண்டியே
சேறுபடு பழனவயல் சூழ்வழுதி நாடனொரு
சிறுபறை முழக்கியருளே
தென்திருப் பேரைவரு நங்குழைக் காதமுகில்
சிறுபறை முழக்கியருளே. (10)

(10) வார்—நீண்ட ; பாறுபடுவேல்—மாமிசத்திற்காகப் பருந்து சுற்றும் வேல் ; பறந்தலை—போர்க்களம் ; கவந்தம்—தலையற்ற குறையுடல் ; தருமுடப்பலவு—மரமாகிய வளைந்த பலா ; மூன்றாவது அடியில் முக்கனிகளின் தேன் கூறி அது மிக்கு நதியாகி வயலில் பாய்கிறது என வளம் கூறியது காண்க. முதலடியில் கூறிய அரன், அமரர் ஆடுவது மகிழ்ச்சியால் என்க.

### சிறு தேர்ப் பருவம்

100 உரைக்குஞ் சதுமா மறை தனக்கும்
உயர்வா னவர்க்கு மெட்டாத
உண்மைப் பொருளே கன்றொடுகுன்
றுருதும் படி வேய்ங் குழலூதி
நிரைக்கும் பின்னே நடந்தருளும்
நீலப் புயலே போரேறே
நிமலா சமரா டிடுங்கொடிய
நிருதர் குலத்துக் கொரு கூற்றே
வரைச்சந் தகிலும் செம்மணியும்
மதவா ரணக்கிம் புரிமருப்பும்
மயிற்பீ லியும்வெண் நித்திலமும்
வாரிச் சுருட்டிக் கரைபொருது
திரைக்குந் திவரத்தண் பொருநைநதிச்
செல்வா தடந்தே ருருட்டுகவே
தென்பே ரையின் நம் குலநாதா
செம்பொன் தடந்தே ருருட்டுகவே. (1)

(1) நிரை—பசுக்கூட்டம் ; வாரணம்—யானை ; கிம்புரிமருப்பு—கிம்புரிப் பூண் கட்டிய தந்தம் ; வரைச்சந்து—மலையிலுள்ள சந்தனமரம்.

101 மேல்பால் முளைக்கும் பிறையெயிற்று
வெங்கண் கொடிய நிருதர்குழாம்
வெல்லுந் தடக்கைச் சிலை ராமன்
விரிதெண் டிரைநீர்க் கடன்முகட்டின்

பாலா டரவிற் கண்டுயிலும்
பசுந்தரார்க் குழகன் கஞ்சனவிடு
பாரச் சகடு மருதுமொடி
படத்தாள் நெரிக்கும் ஒருமுகுந்தன்

கால்பாய் புனலிற் கேணியினிற்
கழுநீர்க் குழியில் வாய்மடையில்
கருஞ்சேற் றினில்நல் அருங்கயத்திற்
கமழ்பூந் துறையில் வெகுண்டெழுந்து

சேல்பாய் வழுதித் திருநாடா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே
தென்பேரையின்நம் மூலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே. (2)

(2) பிறை எயிற்று—பிறைச் சந்திரனையொத்த பல்; பால் ஆடு அரவின்—பால்போன்று வெள்ளிய படங்களுடன் ஆடுகின்ற ஆதிசேடன் மீது; சகடும் மருதும்—எண்ணும்மை; மருதும் ஒடிபட—மருத மரங்களும் உரலிற் கட்டிய கயிற்றுடன் தவழ்ந்து சென்று ஒடிபடுமாறு; தாள் நெறிக்கும்—பாதத்தால் நொருங்கச் செய்யும்; கால் பாய் புனல்—கழனிகளுக்குப் பாயும் வாய்க்கால் நீர்; கேணி—கிணறு; கழுநீர்க் குழி—செங்கழுநீர் மலர்கின்ற குளம்; கயம்—நீர்நிலை.

102 உருவா யுயிரா யுணர்வாகி
உள்ளும் புறனு முளனாகி
உரைக்கும் சமயம் ஆறினுக்கும்
ஒன்றும் பலவு மாயடங்கி

அருவாய் நிறையும் நின்பெருமை
ஆர்க்குந் தெரிய வசமன்றே
ஆழிப் புயலே யருட்கடலே
அரிகே சவசீ தரமுகுந்தா

மருவார் பொழிலில் கேணியின்வாய்
மடையில் சுழியில் படுவரம்பில்
வளைமுத் தீனுந் திருவழுதி
வளநாட் டுறையெம் பெருமானே

பிரதிபாடம்—* வளைமுத் துயிர்க்கும்.

தெருவீ தியின் நூற் றெண்மர்தொழச்
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே
தென்பே ரையின்நம் குலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே. (3)

(3) சமயம் ஆறு—அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம், என்பன. அவ்வாறு சமயங்களையுடையன ; கேணியின்வாய்—வாய் ஏழாம் வேற்றுமை உருபு.

103 அன்பாற் பணியத் தினம் வருணன்
ஆரா தனைகொண் டருள்முகுந்த
அடியா ராசைப் புரிமுறுக்கி
அரும்பொற் கயிற்று வடம்பூட்டி

வன்பால் விடுத்து நெகிழ்ந்த நெஞ்சம்
மணிவீ தியினள் ளிடைநினைந்து
வந்து ததிய ரிருமருங்கும்
மகிழ்ந்து முறையே பிடித்திழுப்பப்

பொன்பாற் பொருந்துஞ் செழுந்திலதம்
புவனித் திருவாள் நுதல்திலதம்
பொங்கிப் பரந்த சலராசி
புடைசுற் றியபூ லோகத்துத்

தென்பால் திலத மெனும் பேரைச்
செல்வா தடந்தேர் உருட்டுகவே
செழுந்தார்த் துளவு மணங் கமழும்
தேவே தடந்தேர் உருட்டுகவே. (4)

(4) பக்தர்களது ஆசையாகிய புரி முறுக்கிய கயிற்றினால் தேரில் வடம் பூட்டி, கொடுமையால் நினையாமல் விட்டு இப்போது உருகுகிற மனமாகிய அழகிய வீதியில் இரு பக்கமும் வந்து இரவிலும் நினையும் வைணவ அடியார்கள் இருபுறமும் பிடித்து மகிழ்ந்து இழுப்ப செல்வ தடந்தேர் உருட்டுக என முடிக்க. நள் இடை—இரவில் ; ததியர்—வைணவ அடியார்களைக் குறிக்கும் வழக்கு ; பொன்பால்—இலக்குமியிடம் ; புவனித்திருவாள்நுதல் திலதம்—பூமாதேவியிடும் ஒள்ளிய நெற்றிப் பொட்டு ; சலராசி—கடல் ; புடைசுற்றிய—பக்கங்களில் சூழ்ந்த ; இலக்குமியின் பொட்டுபோலும், பூமாதேவியின் பொட்டுபோலும் பூலோகத்துத் தெற்கிலுள்ள பொட்டுப் போலும் உள்ள பேரை என்க.

## வேறு

104 தருநீழ லிடையினிது வீற்றிருக் கும்புரந்
தரனு முனி வருமுளரிச்
* சதுமறைக் கடவுளும் முக்கட் கொழுங்கனிச்
சடைமுடிச் சிவனும் வெஞ்சூர்

பொருகிரண வேலுடைப் பரமன்முரு கேசனும்
புகர் முகத் தவனு மதியும்
பொங்குளைப் பச்சைப் பசும்புரவி யேழ்கட்டு
பொற்றடந் தேரிரவியும்

பிரதிபாடம்—* சதுமுகக்

பெருவாச வற்புக நெருக்குண்டு சன்னதிப்
பேறுண்டு இட்டு மென்றே
பிறங்குபொற் கருடக் கொடிக்கம்பம் வலம்வந்து
பெருகவஞ் சலிசெய்திடத்

திருமேனி மண்டபத் தரசிருக் குங்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
தென்திருப் பேரைவரு நம்குழைக் காதமுகில்
சிறுதே ருருட்டியருளே. (5)

(5) தருநிழல்—கற்பக மர நிழல்; சூர்—சூரபத்மன்; பரமன் முருகேசன்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை; புகர் முகத்தவன்—விநாயகன்; எழ பசும் புரவி கட்டு பொன் தடந்தேர் இரவி என்க. கட்டு தேர்—வினைத் தொகை; உளை—கழுத்தின் மயிர். இரவி—சூரியன்; சன்னதிப் பேறு உண்டு (அது பின்னராவது) இட்டும் என்று நினைத்து என்க. பிறங்கு—விளங்கு.

## வேறு

105 தந்தா னெனக்கு வரமிரண்டும்
தலைநா ளுரைத்த சொற்படிக்குன்
தகப்பன் புரந்த முறைதருமம்
தழைப்ப வொருகோ லோச்சியெங்கும்

நந்தா வளமைப் பரதனிந்த
நாடா ளுவன் நீ காடாள
நடவென் றுரைத்த சிற்றவை சொல்
நலமேற் றலைகொண் டொருப்பட்டுக்

கொந்தார் குழலி சனகியொடுங்
கூடப் பிறந்த விளவ லொடும்
கொதிக்கும் பரல்வெங் * கானகம் போய்க்
குறுகும் பொழுதுங் குளிர்ந்தலர்ந்த

செந்தா மரைபோல் திருமுகத்துச்
செல்வா தடந்தோ உருட்டுகவே
தென்பே ரையின் நம் குலநாதா
செம்பொன் தடந்தேர் உருட்டுகவே. (6)

(6) தலை நாள்—கைகேயி சம்பாசூரன் யுத்தத்தில் கணவனான தசரதனுக்கு உதவி செய்த காலத்தில்; சிற்றவை—கைகேயி; நலம் தலைமேல் கொண்டு எனப் பிரித்துச் சேர்க்க; ஒரு பிட்டு—சம்மதித்து; இப் பாட்டுடன்—கம்பராமாயணம், ஆழிசூழ் உலகமெல்லாம் . . . அரசனென்றான் "இப்பொழுதெம் மனோரால். . . செந்தாமரையினை வென்ற தம்மா" "மெய்த்திருப்பதம். . . சித்திரத்தினலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கு முகத்தினை . . . " என்ற கம்ப ராமாயணப் பாடல்களை ஓர்ந்துணர்க.

பிரதிபாடம்—* கொடுங்கானல்.

106 மத்தா லடிப்ப உரல் மிதித்து
மலர்த்தாள் குந்திட் டுறியில் வெண்ணெய்
வாரிக் களவி லுண்டமணி
வாயா பரம பதந்தனக்கோர்

வித்தா கவும்வந் தங்குரிக்கும்
வேதப் பொருளே யருட்கடலே
விரைநா றியபூம் பசுந்துளவ
மெய்யா பொருவெங் கரிமருப்பு

முத்தோ டிலுஞ் செம்மணியும்
மூரித் திரைபாய் சுருட்டிமிக
முழங்குங் கூடு புனல்துறைவ
முதுவாள் அரக்கன் தலைகள் பத்துங்

கொத்தோ [1] டீவஞ் சுருவாளி
[2] கொடுக்குந் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்கும் தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேர் உருட்டுகவே. (7)

(7) குந்தி—உட்கார்ந்து ; குந்தி இட்டு என்க. ஈண்டு இகரம் தொகுத்தல் ; அங்குரித்தல்—முளைத்தல். கூடு—ஒன்றோடொன்று பொருந்தும் ; கொத்தோடு ஈர் அம் சருவாளி—கொத்தோடு அறுத்துப் பூமிக்குத் தரும் அழகிய சுரீரென்னும் அம்பையுடையவனே ; கொடுக்கும்—வளைந்த.

107 புழைத்திண் திறல்கை மதசலதி
பொழியும் பிறைக்கிம் புரிக்கோட்டு
புகர்மா விடங்கர்க் குடைந்துவெரீ இப்
புதுப்பூங் கேணித் தடம்புனல் நின்

றழைக்கும் புயலே நெட்டரவின்
ஆடும் குழகா வொரு நாளும்
அழியாப் பரம பதந்தியர்க்
கருள்சீ தரமா தவமுகுந்தா

மழைக்கொந் தளகக் குரும்பைமுலை
மதிவா ணுதற்சா னகிபொருட்டு
மதில் சூழ் இலங்கை அரக்கன்மணி
மகுடஞ் சிதறக் கோதண்டங்

குழைக்குந் தடக்கை ரெகுராமா
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் திருப்பேரை
கோவே தடந்தேர் உருட்டுகவே. (8)

பிரதிபாடம்—[1] டறுக்கும் சருவாணி. [2] கொழிக்கும்.

(8) புழைதிண் திறல் கை—துளைகளையுடைய வலிய திறமை மிக்க துதிக்கை; புகர்மா—கசேந்திரனாகிய யானை; இடங்கர்—முதலை; முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 164-ம் பாட்டினுரை காண்க. புயல்—உவமையாகு பெயர்; நெட்டரவு—காளிங்கன்; மழை கொந்து அளகம்—மேகம் போன்ற தொகுதியான கூந்தல்; குரும்பை—தென்னங்குரும்பை; கொடிஞ்சி—தாமரைப் பூப்போன்ற ஓர் உறுப்பு. இது தேரின் முன்பாகத்திடுவது.

108 வாலப் பிறைவாள் நுதல் மடவார்
மலர்க்கை வளைகீழ் விழத் தொழுவோர்
மாறுப் பிறவி வேரோடி
வானத் தமரர் களிகூரச்

சாலப் பெருகும் வாழ் அசுரர்படத்
தருமா தவர்கள் கொண்டாடத்
தருமந் * தழைப்பப் புகழ்க் கவிதைத்
தமிழ்நா வலவர் ஈடேற

ஏலக் குழல்சா னகிகழுத்தின்
இடும்மங் கலநாண் வாழ்வேற
எக்கா லமும்நூற் றெண்மர்குழாம்
இதயத் திருந்து மகிழ்கூர்ந்து

கோலத் தெருவில் விளையாடிக்
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்கும் தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேர் உருட்டுகவே. (9)

(9) வாலப்பிறை வாள்நுதல்—வெள்ளிய பிறைச் சந்திரனையொத்த வளைந்த ஒளி வாய்ந்த நெற்றி; வளை—வளையல்; பிறவி வேரோடல்—பிறவியாகிய காரணம் அழிய; அமரர் .... கொண்டாட—அசுரர் படுவதால் அமரர் களிகூர்ந்தனர். மாதவர் கொண்டாடினர்; ஏலம் குழல்—மயிர்ச்சாந்து பூசிய கூந்தல்; கோலம்—அழகு.

109 மருவார் நறுமென் மலர் கொணர்ந்து
வணங்கி இருசே வடி சொரிந்து
மயங்கும் புலன்கள் ஐந்து மொன்றாய்
வருணன் செயும்பூ சனையுவந்த

திருமா முகிலே தமிழ்க் குருகுஞ்
செல்வக் குழகா பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குந்
செழுந்தார்த் துளவப் புயமுகுந்தா

அருநான் மறைநூற் றெண்மரும்வந்
தங்கீ கரித்து வடம் பிடிப்ப
அம்போ ருகப்பூந் திருவும்முந்நீர்
அவனித் திருவும் மருங்கிருப்பக்

பிரதிபாடம்—* தழையக் கன கவிதைத்

தருமா மணிப்பொன் மறுகின் நெடுங்
கொடிஞ்சித் தடந்தேர் உருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் திருப்பேரைக்
கோவே தடந்தேர் உருட்டு கவே. (10)

(10) பாட்டு அயர்ந்து—பாட்டுக்களால் மெய்மறந்து; வடம்—தேர் வடம்; அம்போருகப்பூ—தாமரைப்பூ; இதிலுள்ள திரு—இலக்குமி; முந்நீர் அவனி—கடல் சூழ்ந்த பூமி அவனித்திரு—பூமிதேவி.

(மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழ் குறிப்புரையுடன் முற்றும்.)

(திருமேனி கவிராசரவர்)

## திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதர் பிள்ளைத் தமிழ்.

110 இருமைக்கு நன்மை யியம்புகேன் செய்ய
ஒருமைக் கிசைநீ யுளமே—பெருமை முகில்
வண்ணக் கருமணியே வைகுந்த நாதனையே
எண்ணக் கருதி யிரு. (1)

(1) இயம்புகேன்—சொல்லுவேன், க் எதிர்கால இடை நிலை; உளமே கருதியிரு என இயைக்க. முகில் வண்ணக் கருமணி—மேகம் போன்ற நிறத்தவனான நீலமணி யொத்தவன்.

---

### காப்புப் பருவம்.

### திருமால்.

111 பொன்பூத்த பங்கயப் பஞ்சரப் பூங்கிளி
புனத்துழாய் மலர் வனத்துப்
போந்து விளையாடச் செழும்பற்ப ராகம்
புனைந்தவிள வெய்யில் காட்ட

மின்பூத்த முத்தாரம் வெண்ணில வெறிப்பமணி
மெய்யிந்திர நீலமேய்ப்ப
வெண்ணெய்ப் பதிக்குள் வாழ் வைகுந்த நாதனை
விருப்பமொடு வந்து காக்க

கொன்பூத்த சங்காழி சிலைதண்டு வாள் செங்கை
கொண்டமை குறிப்புணர்த்தக்
கோகநக நாள்மலர்ச் சேயரிக் கட்கடைக்
கூர்க் கருணை கொண்டு கொப்பூழ்

முன்பூத்த அகிலாண்ட முற்றுந் தழைப்பவாண்
முதிர் பரந் தாமமேவி
முத்திக்கு வித்தாகி யத்திக்கு முன் தோன்று
முழுமுதற் பச்சை முகிலே. (1)

(1) பங்கயப் பஞ்சரம்—தாமரை மலராகிய கூடு; பூங்கிளி என்று திருமகளைக் குறித்தார். பதுமராகம் என்னும் மாணிக்க வகை. பற்பராகம்—“புனத்துழாய் மலர் வனத்துப் போந்து விளையாட என்றார் திருமகள் துளபமாலை தரிக்கும் மார்பில் இருத்தலால். மெய் இந்திர நீலமணி எய்ப்ப என்க. கொண்பூத்த—பெருமை பெற்ற; சங்கு. . . . வாள்—பஞ்சாயுதங்களையும் குறித்தார். நாள் கோகநக மலர் சே அரிகண்—அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற சிவந்த அரிபரந்த கண்; கொப்பூழ் முன்பூத்த—கொப்பூழிலிருந்து தோன்றிய பிரமனால்; அத்தி—கசேந்திரனாகிய யானை; முகில்—உவமையாகு பெயர்.

## திருமகள்.

112 தத்துறுத ரங்கமெறி முத்தநில வின்கதிர்
தரச்சுடர் பெருஞ்சலதி ராசனருள் மாமகள்
தத்தையிள மென்குதலை மைத்தகுழல் கெண்டைவிழி
சற்றென் நுடங்குமிடை யாள்கனக மேனியாள்
பத்துறுதொ ழும்பர்தன் விழிக்கடையின் இன்பம்வர
பற்றவருள் இந்திரைகு ணாகரி மனோகரி
பற்பமெனு மம்பொன்மல ரிட்டதவி சின்கண்வளர்
பச்சைமயில் செங்கமலப் பாதமுடி சூடுவாம்
கத்துருவின் மைந்தரிடை புத்தமுது தந்தவர்
களைப்பணியெ னும்படிசெய் நீள்பறவை வாகனர்
கற்பமொரு செங்கைநொடி யொப்பவுண ருந்துயில்
கருத்துமகி ழுங்கருணை மால்பரம பூருடர்
வித்தும மென்றவித ழிற்கழை யிசைதிசை
விரித்தருள் முகுந்தநவ நீதபுர நாயகர்
விற்பணிலம் நந்தக மெழுத்திகிரி கொண்டய்ய
வெற்பணிசை சந்ததமும் ஓதுதமிழ் வாழ்கவே. (2)

(2) தத்துறு . . . . சலதிராசன்—தத்துகின்ற அலை வீசுகின்ற முத்துக்காளனவை நிலவுக்கிரணங்களைத்தர ஒளி மிக்க பாற்கடல் பெற்ற சலதிராசன் என்றார்—எல்லாக் கடல்களுக்கு வருணன் அரசனானதால்; தத்தை—கிளி; மைத்த—கறுத்த; நுடங்கும்—அசையும்; கனக மேனி—பொன்னிற உடல்; "பத்துஉறு தொழு உம்பர் தன் விழி" என்க. பத்து—பத்தி; உம்பர்—தேவர்; பத்து, தொழு என்பவற்றிலுள்ள உகரம் "உயிர்வரின் உக்குறள் . . . ஓரோ விழி" என்ற விதியால் கெட்டது. இந்திரை—இலக்குமி; பற்பம்—பதுமம், தாமரை; தவிசு—ஆசனம்; கமலபாதம் உவமைத்தொகை, கத்துருவின் . . . . . . . வாகனர்—கத்துருவின் மைந்தரான பாம்புகட்குத் தேவாமிர்தம் எடுத்து வந்து தந்து அவர்களைப் பின்பு அடங்கு என்று கூறும்படி செய்த கருடனை வாகனமாகக் கொண்டவர். கத்துரு—காசிபர் மனைவி, 104 பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றவள். பாம்புகட்குத் தாய். உச்சைச்ரவம் என்ற வெள்ளைக் குதிரையின் வாலில் தன் பிள்ளைகளில் ஒருவன் உதவியால் மறுவுண்டாகச் செய்து தன் சக்களத்தியான விந்தையைச் சபதப்படி அடிமை கொண்டவள். விந்தையிடம் பிறந்த கருடனும் அடிமை வேலை செய்து பின் நீக்க தேவாமிர்தம் எடுத்துவர தேவர்களுடன் போர்புரிந்து வென்று இந்திரனால் பாம்புகளைத் தின்ன வரம் வாங்கி அமுத கலசத்தை எடுத்து வந்து தந்து அடிமையை விடுவித்தான். ஒப்பந்தப்படி இந்திரன தேவாமிர்த கலசத்தைக் கவர்ந்துகொண்டான். கற்பம் ஒரு செங்கை நொடி ஒப்ப உணரும் துயில்—கற்ப காலத்தை ஒரு கைந்நொடிப் பொழுது காலம் போன்று அறியும் யோக நித்திரை; பூருடர்—புருடரின் நீட்டல் விகாரம்; வித்துருமம்—பவளம்; நவநீதபுரம்—வெண்ணெய் நல்லூர். வில் பணிலம் நந்தகம் எழுதிகிரி—வில், சங்கு, வாள், தண்டு, சக்கரம்.

## பிரமன்.

113 செங்கமல மிசைதோன்றி வெண்கமல மங்கையைச்
சேர்ந்துமறை நான்குமுறையும்
திருவதன நான்கு பெற்றெண்கரம் வருந்த வெண்
திசைகள்புவி பதினாலுயிர்த்

தங்கமல நாகபதி நால்வாய் மதக்களி
றமைத்துச் சுமக்க வைத்தோர்
அண்டமா மிவ்வா றநேகாண்ட கோடிசெயும்
அந்தணனை வந்தனை செய்வாம்

சங்கமல வெள்ளையம் புயமலர் திங்களோ
தனியிவை அனந்தமென்ன
தவளநிற மென்பவள வாய்ப்பொலன் சிறையனந்
தத்திவிளை யாடுபொய்கை

யுங்கமல வயலுநிறை நாடுசூழ் வெண்ணெய் நகர்
உத்தமனை மத்தமாவுக்
குதவிபுரி கொண்டலைத் தொண்டருக் கெளியனை
உரைத்தமுத் தமிழ்தழைகவே. (3)

(3) வெண்கமல மங்கை—வெள்ளை தாமரையில் வீற்றிருக்கும் சரசுவதி ; உறையும்—தங்கும் ; உயிர்த்து—படைத்தலைப்பெற்று ; அம் கமல நாகபதி நால்வாய் மதக்களிறு அமைந்துப் பதினுலுலகங்களைச் சுமக்க வைத்து—என்க ; அம்கமல நாகபதி—அழகிய தாமரைப்பூப் போன்ற படங்களையுடைய நாகங்கட்டுத் தலைவனுகிய ஆதிசேடன் ; நால்வாய்—தொங்கும் வாய், வினைத் தொகை ; களிறு—ஈண்டு எட்டு யானைகள் திசைகளைத் தாங்கும் ; அந்தணன்—பிரமன் ; திருவதனம் நான்கு பெற்றது—திலோத்தமையைப் படைத்து அவள் அழகைக் கண்டு விரும்பியபோது அவள் நான்கு திசைகளிலுமோட அங்கங்கு ஓரோர் முகங்கொண்டு பார்க்க நான்கு முகம் ஆயிற்று. இது ஓர் வரலாறு. சங்கு அமல வெள்ளை அம்புயமலர் திங்களோதனி—சாரங்கமென்னும் சங்கோ குற்றமற்ற சரசுவதி தங்கும் வெள்ளைத்தாமரை மலரோ பூரண சந்திரனோ ஒவ்வொன்றுதான் ; இவை—பின் வரும் அன்னங்களைக் குறித்த சுட்டு ; அனந்தம்—பல ; "தவள . . . . அனம்" வெண்ணிறமும் பவளம்போன்ற மெல்லிய சிவந்த வாயும், பொன்னிறமொத்த சிறகும் உடைய அன்னங்கள் ; விளையாடு கமலப் பொய்கை எனக் கூட்டுக. மத்தமா—மதமுடைய கசேந்திரன் என்ற யானை.

## சரஸ்வதி.

114 ஓதுமறைப் பொத்தகமும் நாதமிகுத் திட்டமுதம்
ஊறுமிசைக் குத்தகும் யாழுமடலர்க் கைக்குளுளாள்
ஓடரிமைக் கட்குவளை போலுமிணைக் கட்கடையின்
ஊமனும்வித் தைக்குரியன் ஆகவரத் தைத்தருவாள்

மூதுணர்விற் குக்கமல நான்முகனுக் குத்தலைவி
மூரல் முகத் துத்தமிபி ராமிமதிக் கொத்த மெய்யாள்
மூடர்மனத் துக்கணுகாள் பாரதிசுப் பிரகமல
மூலமணிப் பொற்றவிசின் வாணிபதத் தைப்பணிவாம்

மாதுலன்விட்டிடமத வேழமருப் பற்றுவிழ
வாண்மலர்பட் டுப்புரள ஓரறைவைத் திட்டவனை
மாதவனைத் துட்டமிகும் பாவியுரத் தைப்பகிரும்
வாளியனைச் சத்தமிகும் வாருதியிற் கற்கள்கொடு

சேதுவினைக் கட்டியெவர் காணினுமுற் பெற்றவினை
தீரவரத் தைத்தருமி ராகவனைக் கற்றவர்கள்
தேடுசிறப் பிற்பெருகும் வேணுவனத் திற்குடிகொள்
சீதரனைச் செப்புமிசை சேர்தமிழ்நூற் றுப்பெறவே. (4)

(4) பொத்தகம்—புத்தகம்; நாத மிருத்திட்ட . . . . உளாள்—ஒலி அமுதம் போன்று சுரக்கின்ற இசைக்குத்தக்க வீணையை மலர்ப்போன்ற கைக்குள் உடையவள்; கள் மைக்குவளை போலும் அரி ஓடு இணைக்கண் கடையின்—தேனுள்ள கரிய குவளை மலர் போலும் செவ்வரி ஓடிய இரண்டு கண்களின் கடைப்பார்வையால்; ஊமனும்—ஊமையாக உள்ளவனும்; வரத்தைத் தருவாள் என்க. தலைவி என்பதை உணர்வு, நான் முகன் என்ற ஈரிடங்களில் சேர்க்க. முதனுக்கு அறிவுக்குத் தலைவி என்றும் பின்னதற்குப் பிரமன் மனைவி யென்றும் பொருள் கொள்க. மூரல்—புன்சிரிப்பு; முகத்து உத்தமி என்க. பிராமி—சரசுவதி; மதிக் கொத்த மெய்யாள்—சந்திரனை யொத்த ஆடை யுடுத்த உடலை யுடையவள்; பாரதி—சரசுவதியின் ஓர் பெயர்; சுப்பிர கமலம்—வெண்தாமரை; மாதுலன்—மாமனை கம்சன்; மத வேழ்—குவலயா பீடம்; வாள்மலர் பட்டுப்புரள—ஒள்ளிய தாமரை மலர் போன்ற மெல்லிய துதிக்கை அறுந்து புரளுமாறு; பாவி—கம்சன்; வாளியன்—குறிப்பு வினையாலணையும் பெயர்; கற்கள் கொடு சேது வினைக் கட்டி—மலைகள் கொண்டு அணையைக்கட்டி; வினை—தீவினை; வரத்தைத் தரும் இராகவன் என்க; வேணு வனம்—வெண்ணெய் நல்லூர்க்கு ஓர் பெயர் போலும்.

### சிவபிரான்

115 பவளம் பழுத்த திருவுருவம்
பாதிப் பசைப்பச் சடாடவியிற்
பசும்பொன் இதழிக் கரும்பாந்தள்
பனிவெண் பிறைதன் நிறம் விரிப்பத்

தவளம் படர்நீ றணிமிடற்றில்
தடஞ்சேர் குவளை நிறங்காட்டச்
சரணந் துதிப்பார்க் கெவ்வணமுந்
தன்பால் தெரிப்பான் பதந்துதிப்பாம்

கவளங் குதட்டுப் பெருங்கவுட்டுக்
கரடக் களிற்றுக் கருள்பெருமான்
கயல்பாய்த் தடமும் செழுஞ் செந்நெல்
கதிரார் வயலு முபவனமும்

திவளம் புலியைத் தொடவுயர்ந்த
செம்பொன் மதிலுந் தடந் தெருவும்
செழிக்கும் வெண்ணெய்க் கதிபனிசை
சேருந் தமிழ்ப்பா தழைத்திடவே. (5)

(5) பவளம் . . . பசைப்ப:—சிவபெருமான் செந்நிறமும் பார்வதி பசுமை நிறமு முடைமையால் இங்ஙனம் கூறினர். முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 310 ஆம் பாட்டிலும் காண்க. இதழ்—கொன்றை; பாந்தள்—பாம்பு; தவளம் படர் நீறு—வெண்ணீறு; மிடற்றில், . . . . . காட்ட—கழுத்தில் கறுப்பு நிறமானது ஆல கால விஷம் உண்ணலாலாகும். தெரிப்பான்—அறிவிப்பான்; கவளம்—உருண்டையான உணவு; களிறு—ஈண்டு கசேந்திரன்; உபவனம்—சோலை; திவள் அம்புலி—விளங்கும் சந்திரன்.

**உமையவள்**

116 இமையநெடு முடிதுகின வுருவரை
இறைவன்மக ளென வெய்துங் குமாரியை
இலகுமிர சிதவரையின் முடிவளர்
எழில்கொடு ஈர்முலைமெய் கொண்டதேவியை

எதிருமட லுடைமயிட னெடுமுடி
இடறி நட மிடுமொய் கொண்ட நீலியை
இணையில் குற மகள்களப முலையுழு
தெழுபனிரு புயவைதந்த வேலனும்

அமையும்மத மழை யொழுகு புகர்முக
அவனும்மக னெனவைகும் பவானியை
அவிருமட மயிலியலும் வடிவமும்
அடியர்தொழ வருள்செய்சிங்க வூர்தியை

அரவினணை மிசைவளரு மவனிளை
யவளையிமை யவர்கொய் கின்ற தேமலர்
அடியின்நனி சொரிதரநல் வரமருள்
பவளைமன மொழிமெய் கொண்டு தாழுதும்

117 கமையின்நிரு தர்பொன் னகரில் அழலிடு
கவியினிட மருள் செய்கஞ்ச லோசனர்
கடியவம ரினில்லசு தசமுக
கடிகொள்நகர் புகுதுய்கென்ற வாசகர்

கடலினழல் எழவுலகு குலையவோர்
கணையை விட வளைவெய்துஞ் சராசனர்
கமலமட மகள்களப முலையுழு
கதிர்கொள்மணி வெயில் செய்துங்க மார்பினர்

சமையகலை இயரலைய வெகுவித
சரிதையினின் மருளெய்தும் புராதனர்
சகடுபொடி படவுதையும் வனருக
சரணமறை முடிவைகும் பராபரர்

தருணமணி யொளிர் திகிரி வனநகர்
தமதுமன மகிழ்வைகுந்த நாயகர்
தருதெள்ளமு தினுமினிய புகழ்சிறு
தகைவெண்தமிழ் செய்புன்சொல் வாழ்கவே (6)

(6) துகினம்—பனி ; இமைய இறைவன்—பருவத் ராசன் ; இலகும் . . . .மெய் கொண்ட—விளங்கும் பொன்மயமான மேரு மலையின் சிகரம் போன்று வளரும் அழகு மிகுந்த இரண்டு முலைகளை உடலில் கொண்ட ; அடல் உடைமயிடன்—முன் பிள்ளை தமிழ்க் கொத்து 440 ஆம் பாட்டின் குறிப்பில காண்க ; மொய்ம்மை—வலிமை ; நீலி—நீல நிறத் தவள் ; குறமகள்—வள்ளி ; பன்னிரு என்பது பனிரு எனத் தொக்கது. வைதந்த வேலன்—கூர்மை பொருந்திய வேலினை யுடையவன் ; புகர்முக அவன்—விநாயகன் ; புகர் முகம்—

யானை ; ஈண்டு யானைத் தலைக்காயிற்று ; முதலாகு பெயர் ; வேலனும், புகர்முக அவனும் மகன் என என்க. இயல்—சாயல் ; அரவின் . . . . .அவன் பாம்பாகிய படுக்கை யின் மேல் யோகநித்திரை செய்யும் திருமால் ; அடி—பாதம் ; கமை இல் நிருதர் பொன் நகர்—அழகற்ற விகாரமான உருவமுடைய அரக்கரது இலங்கையில் ; கவி—ஈண்டு அனுமான் ; கஞ்சலோசனர்—தாமரை யொத்த கண்களை யுடையவர் ; லோசனம்—கண் ; அமரினில் அலசு—சண்டையில் அலசுண்ட ; தசமுக—விளி, பத்துத் தலைகளையுடைய இராவணனைக் காட் டிற்று ; "கடிய . . . . . . .உய்கு" என்ற வாசகர்—"ஆளையா வுனக்கமைந்தன. . . . . இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென நல்கினன் வள்ளல்" என்ற கம்ப ராமாயண பாடலை ஓர்க. கடலின் . . . .சராசனர்—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 198 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. சர+ஆசனர்—சராசனர், தீர்க்க சந்தி பெற்ற வட மொழித் தொடர் ; கமல மடமகள்—தாமரையில் தோன்றிய சீதை ; உழு மார்பு என வினைத் தொகை யாக்குக ; துங்கம் மார்பு—மலையொத்த மார்பு ; இராவணன் சிவலிங்கத்திற்குத் தாமரைப்பூ கொண்டு வரச் சென்ற போது திருமகள் ஓர் குழந்தையாகி மலரின் மேல் இருக்க அக்குழவி யின் அழகு கண்டு எடுத்து வரப் பின் அதனுடன் இருந்த ஓர் ஓலையில் "சீதை பிறந்ததால் இலங்கை அழியும்" என்று எழுதி இருந்ததால் அவன் பயந்து ஓர் பெட்டியில் இட்டு விட்டு விட்டான்; புராதனர்—பழமையானவர் ; வனருக சரணம்—தாமரை மலரொத்த பாதம் ; திகிரி வனநகர்—இது வெண்ணெய் நல்லூர்க்கு ஓர் பெயர் போலும்.

## முருகன்

118 மாவலந் தவிரவுயர் வெற்பகம் பிளவுபட
வற்ருத அவுணவெள்ளம்
மாக்கடல் படைசுவற வடிவேல் கரத்தேந்தி
மயில்வயப் பரிநடாத்துஞ்

சேவலங் கொடியனைச் சேவலோன் புதல்வனைத்
தேவர்சேனைக்கதிபனைச்
சேல்விழிக் குறமகள்ம ணாளனைத் தாளினைத்
தினம்துதித் தன்புபுரிவாம்

நாவலந் தீவினிடை செங்கோல் செலுத்துமுடி
நரபாலர் குழுவைவெல்வாய்
நவியப் படைக்கலத் திருபத்தோர் காலட்டு

கேவலம் புகுதந்தை கடனாற்றி மகிழ்வெய்து
இளர்தவத் தவனை வெண்ணெய்க்
கேசவனை வைகுந்த நாதனைப் பரவுமென்
கேண்மைமுத் தமிழ்தழைகவே (7)

(7) மாவலம்தவிர—மாமரமான சூரபத்மன் வெற்றி நீங்கி (அதாவது தோல்வியடைய) வெற்பு—கிரவுஞ்சகிரி ; மாக்கடல்படை—பெரிய கடல்போன்ற சேனை ; சுவற—வற்ற ; மயில் வயப்பரி—மயிலாகிய வீரமிக்க வாகனம் ; சேவலோன்—எருதின்மீதேறி அதை நடத்தும் வல்லமையுள்ளவன் ; சே—எருது ; தேவர் சேனைக்கதிபன்—தேவசேனாதிபதி என்ற பெயர் தரித்தது காண்க. மணாளனைத்தாளினை—உருபுமயக்கம். நாவலந்தீவு—பரத கண்டம் ; நரபாலர்—அரசர் ; வெல் வாய் நவியப்படைக்கலம்—வெல்லுகின்ற கூர்மை யுள்ள வாயையுடைய மழுவாகிய ஆயுதம் ; இருபத்தோர்கால் அட்டு—இருபத்தோரு தலை முறை கொன்று ; கேவலம்புகு - மோட்சம் அடைந்த, ஈண்டு [ இறந்த ] என்பதைக் காட்டியது ; தந்தை—சமதக்கினி முனிவர் ; தவத்தவன்—பரசுராமன்.

## இந்திரன்

119 ஒருநாலு நுதிமுனை மருப்புறு களிற்றனை
உயர்வானி லுலவிரு சிறைக்கரு மலைக்குலம்
உலகூடு படிதர வறுத்தவ யிரத்தனை
ஒருநூறு பெருமகம் முடித்தருள் சிறப்பனைப்

அருள்மீறு கமலவிழி பற்பல வுளத்தனை
அயிராணி இணைமுலை திளைத்தபுய வெற்பனை
அமராடும் அவுணவிரு ளைத்தெறு விகர்த்தனனை
அலர்தூவி இருபதம் விருப்புடன் வழுத்துவம்

கருநாரை வயலுறு கயற்களை யெடுக்கவும்
கடைமாதர் குவளைகம லக்களை எடுக்கவும்
கனிவான பழமுடை மதுப்புனல் பெருக்கவும்
கதிர்மீறி வளர்செந்நெலின் முத்துதிர் வளத்தவாய்

நரர் நாலு வருணரும் மகிழ்ச்சியின் மிகுத்த் சீர்
நவநீத புரமுன மியற்றிய தவத்தினன்
நலமாக வுறைதிரு மகட்குரிய கர்த்தனுர்
நயமேவு மிசைமொழி இயற்றமிழ் தழைக்கவே. (8)

(8) நுதிமுனை—ஒரு பொருட்பன்மொழி; நாலு முனைகளையுடைய மருப்புடையகளிறு—ஐராவதம்; உயர் வானில்......வயிரத்தனை—மலைகள் சிறகு முளைத்துப் பறந்து சென்று துன்பம் செய்ய இந்திரன் அவைகளின் சிறகுகளை யரிந்தான். மைநாக பர்வதம்மட்டும் கடலில் மறைந்தது. மகம்—யாகம்—நூறு அசுவமேதயாகம் செய்தவரே இந்திரனுவார். நகுஷன் இவ்வாறு ஆனது காண்க. அருள்....உள—அத்தனை—கௌதமர் சாபத்தால் நேர்ந்த ஆயிரங்கண்களையுடைய தலைவனை, அவுண இருளை தெறு விகர்த்தனன்—அரக்கராகிய இருட்டை அழிக்கின்ற சூரியனையொத்தவன்; நாரை வயலிலுள்ள கயல் மீன்களாகிய களைகளைத் தின்ன எடுக்க, மருதநிலப் பெண்கள் குவளையும் தாமரையுமாகிய களைகளை எடுத்தனர். கடைசியர் என்பதற்கு ஆசிரியர் [கடைமாதர்] எனக் கூறினர்; குவளைகமலம்—உம்மைத் தொகை. உடைமதுப்புனல் பெருக்க—உடைந்து தேன்பெருக்க. உடைந்து என்பது உடை என நின்றது. ஈண்டு செந்நெல்—முத்துக் கொடுத்தலால் வளமிக்கதென்க. செந்நெல் முத்தீனும் இடங்களுள் ஒன்று; நரர்—மனிதர்; இசை—புகழ்.

## ச்ப்தகன்னியர்

120 சங்காழி கொண்டவுரு வொன்றுமான் மழுவைத்த
சடிலமொன் றமுத கரகந்
தாங்கும்வடி வொன்றுவயி ரப்படை கரத்தேந்து
தனுவொன்று வடிவெயிற்றில்

பொங்காழி யுலகந் தரித்ததா பரமொன்று
பொருமயில் சுமந்த தொன்று
பூணர்கபா லங்கொளும் உடம்பொன்று பெறுமாதர்
பொன்னடிகள் சென்னிவைப்பாம்

அங்காழ் இலங்கும் அகல் அல்குல்மென் கொடியிடை
அலத்தகச் செஞ்சீறடி
ஆர்முலை மைக்குழல் பிறைநுதல் துவரிதழ்
அமைத்தடந் தோளிடைமினார்

கொங்காழ் இணைக்கமல மனைகைப் பிணைந்தாடு
குழகனைப் புவியினைத்துங்
கொண்டாடு சிவகுருந்த நாதனைத் தொண்டனென்
கூறுமுத் தமிழ் தழைக்கவே. (9)

(9) சங்கு· ஆழி கொண்ட வடிவு ஒன்று பெறுமாது—நாராயணி ; மான்மழு வைத்த சடிலம் ஒன்று பெறுமாது—மகேஸ்வரி, சடிலம்—சடை ; அமுத கரகம் தாங்கும் வடிவு ஒன்று பெறும்மாது—அபிராமி ; அமுதகரகம்—வெள்ளைக் கமண்டலம் ; வயிரப்பிடை கரத்து ஏந்தும் தனு ஒன்று பெறுமாது—இந்திராணி ; வயிரப்படை—வச்சிராயுதம் ; தனு—உடல் ; வடி எயிற்றில் பொங்கு ஆழி உலகம் தரித்த தாபரம் ஒன்று பெறுமாது—கூரியபல்லில் கடல்சூழ்ந்த உலகத்தைத் தாங்கின உடலைப் பெற்ற மாது, வராகி, தாபரம்—உடல் ; பொரும் அயில் சுமந்தரு—கௌமாரி ; அயில்—வேல் ; புணர் கபாலம் கொளும் உடம்பு ஒன்று பெறும் மாது—காளி ; கபாலம்—தலையோடு ; இவள் மண்டையோடுகளை மாலையாக அணிந்தவள். பெறும் மாதர் என்பதை மிகுதி அறுவருக்கும் கூட்டுக. இதன் வரலாற்றினை முன் பிள்ளைத்தமிழ்க் கொத்து 446-ஆம் பாட்டினுரையிற் காண்க. அம்காழ் இலங்கும்—அழகிய எண்கோவை மேகலாபரணம் விளங்கும் ; அலத்தகச் செஞ்சீறடி—செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பட்ட சிறிய பாதங்கள் சிறுமை + அடி—சீறடி ; மை—மேகம் ; துவர் இதழ்—பவளம்போன்ற உதடு ; அமை—மூங்கில் ; கொங்கு ஆழ் இணைக்கமலம் அனை கை பிணைந்தாடு—மகரந்தம் தங்கியுள்ள இரண்டு தாமரை போன்ற அம்மின்னலை யொத்தவர் கைகளோடு கைகோர்த்து விளையாடுகின்ற ; அன, மினார்—அன்ன, மின்னார் என்பவைகளின்

## முப்பத்து முக்கோடி தேவர்

121 கருநிற நெட்டுடல் எருமை மதுச்சொரி
கமல முழக்கியு மெண்மலரார்
கடிகமழ் மைச்சிறு குவளை கறித்தடர்
கதிர் பகை பற்றிய செந்நெல் உகு

இருபுற முற்றமு தொழுக மதக்களி
றெணவுல வப்பெறும் வெண்ணெயின் வாழ்
இமையவ ருக்கதி பதியை யுரைத்தவென்
இயல்வள ரச்செயும் எண்ணமதால்

பெருவரை சுற்றிய வுலகின் இருட்குவை
பிரிவு படுத்திய தன்மையினார்
பிரச முகக்கடிக் கமல மலர்த்திய
பெருமை படைத்துள பன்னிருபேர்

பருதிகள் எட்டெனும் ஒருகணி தத்துறு
பரம வசுக்கள் நல் வண்மையினார்
பதினொரு ருத்திரர் இருவர் மருத்துவர்
பதம் இதை யத்துற வுன்னுதுமே (10)

(10) கருநிற....வெண்ணெய்—கரியநிறத்தையும் நீண்ட உடலையுமுடைய எருமையானது தேன் சொரியும் மெல்லிய மலர்களையுடைய தாமரைகளைக் காலினால் சிதைத்தும், வாசனை வீசும் கரிய குவளை மலரைக் கடித்து மிக்க கதிர்கள் உடைய சாலி நெற்பயிரை உண்ணாமல் வண்டாகிய பகைகளோடுகூடிய வாயின் இருபுறங்களினின்றும் தேன் ஒழுக மதம்பொருந்திய யானைபோன்று உலவப் பெறுகின்ற வெண்ணெய்நல்லூர் என்க. மென்மலர் ஆர் கமலம் எனவும், பகைபற்றிய இருபுறம் எனவும் பிரித்துக் கூட்டுக. உணா—ஈறுகெட்ட எதிர் மறை வினை யெச்சம். இயல்—இயற்றமிழ் ; பெருவரை....தன்மையினார்—பெரிய எட்டுமலைகளும் சூழப்பெற்றுள்ள உலகில் இருட் கூட்டத்தைப் பிரித்து ஓடச்செய்த குணத்தினர் (சூரியர்) பிரசம் உகக் கடி கமலம் மலர்த்திய என்க. பிரசம் உக—தேன் சிந்த ; தன்மையினாராகிய பன்னிருபேர் பருதிகள் என்க. எட்டு எனும் ஒருகணித்தது உறுவசுக்கள். எட்டு என்ற ஒப்பற்ற கணக்குள்ள மேலான வசுக்கள் (அஷ்டவசுக்கள்) ; வண்மை—புகழ் ; இதையம்—இடைப்போலி ; உன்னுதும்—நினைப்போம். இத்தேவர்கள் வகைக்கொரு கோடியாக முப் பத்து மூன்றுகோடி யாவர். மருத்துவரிருவரை அச்வினி தேவர் என்பர்.

## செங்கீரைப் பருவம்.

122 நந்தா மணிப்பணி வரைப்புயத் தினிலாட
நறுமலர்த் தொடையலாட
நன்னுதற் சுட்டியும் பட்டமு மிசைந்தாட
நகுமணிக் குழைகளாட

அந்தாம அரைவடங் கிண்கிணி கல்லென்றாட
அவிர்தரள மாலையாட
ஆர்வத்தோ டன்னைய ரணைத்தேந்தி முத்தாட
அடுபுலியி னகமுமாடக்

கொந்தார் குழற்கற்றை முகமதிக் கெதிருலவு
கொண்டலின் அசைந்தாடவுன்
கோலவிளை யாட்டினைக் கண்ணுதல் முதற்றேவர்
கொண்டாட வண்டாடுபூஞ்

செந்தா மரைத்திருவை மார்பில்விளை யாடநீ
செங்கீரை யாடியருளே
தெண்ணன்மணி யொளிர்வீதி வெண்ணெய்நகர் வளர்தேவ
செங்கீரை யாடியருளே. (1)

(1) நந்தா மணிப்பணி—கெடாத ஒளியுள்ள இரத்தினங்களாகிய ஆபரணம். நகுமணிக் குழை—ஒளிவிடும் மாணிக்கக் குண்டலம், [அம்தாம....என்றாட] மாலையும் அரையில் கட்டிய அரைநாணாகிய கயிறும் காலிலிட்ட கிண் கிணிச் சதங்கையும் கல்லென்று ஒலிக்க, தாமம் வடம், கிண்கிணி—உம்மைத் தொகை ; தரளமாலை—முத்துமாலை ; அடுபுலியின் நகமும்—கொல்லுகின்ற புலியின் நகத்தைக்கோத்து ஓராபரணமாகச் சிறு குழந்தைகட்குக் காப்பாகக் கட்டிவைப்பர். இதைக் கொண்டே பழங்காலத்தில் தாலி செய்ததாக சங்க நூல் களில் கூறப்பட்டுளது. "புலிப்பற்றாலி புன்தலைச்சிறார்" (புற—நானூறு, 374.) குழல்கற்றை, கொண்டலின் அசைந்தாட என்க. கொண்டலின்—மேகம்போல ; இன் ஐந்தாம் வேற்றுமை உவமப்பொருள் ; மதிக்கெதிர் உலவு கொண்டலொத்து முகத்தின் எதிர் உலவுகற்றைக் குழல் என்க. குழந்தைகட்கு முகத்தின்மீது மயிர் வந்து விழுவதனை இங்ஙனம் கூறினர், முகமதி—உருவகம். கண்ணுதல்—நெற்றிக்கண்ணுடைய சிவன் ; திருவை மார்பில் விளையாட நீ—இலக்குமியை மார்பினில் விளையாடுமாறு வைத்த நீ. தெள் நல்மணி ஒளிர் வீதி—தெளிவான நல்ல மாணிக்கமொத்து ஒளிரும் தெரு.

123 தாராடு முடிநிருப ரெதிராடி யநிரா௩
சமராட வுயிர்விடுகுறைத்
தலையாட நிலையாத குருதிப் பெரும்புணரி
தனில்நீந்தி யலகைக் குழாம்

நீராட விசயமகள் நடமாட நிணமுண்டு
நிமிர் கழு௩ கொடிபருந்து
நிழலாடு பந்தரி னொதுங்கிமுகம் வெயர்வாட
நின்றவரை யஞ்சல்போமின்

போராட லொழிமினென வுரையாடி நகையாடு
பொருதலர்தம் மருவமுருவப்
புகையாட மேவினிரு கூருட விவ்வாறு
போர்மூட்டி விசையனிசையும்

தேராடன் மாவினொடு சீராடி நின்றவன்
செங்கீரை யாடியருளே
தெண்ணன்மணி யொளிர்வீதி வெண்ணெய் நகர் வளர்சோதி
செங்கீரை யாடியருளே. (2)

(2) நிருபர்—அரசர்; ந்ரு—மனிதர் ; குறைத்தலை—கவந்தங்கள் ; அலகைக்குழாம்—பேய்க் கூட்டம் ; விசய மகள்—வெற்றித்திரு, துர்க்கை ; நிணம்—கொழுப்பு ; கொடி - காக்கை ; கழுகு—பருந்து - உம்மைத்தொகை ; பந்தர்—பந்தல், கடைப்போலி ; கழுகு, பருந்து முதலிய பறவைகள் நிழலைச் செய்த பந்தரின்கீழ் போருக்குப்பயந்து முகம் வெயர்த்து ஒதுங்கின பகைவீரரை அப்பகைவரது புகையொத்த அருவமாகிய வுருவம் [ போராடுவதை ஒழியுங்கள் அஞ்சாது புறங்காட்டியோடுங்கள் ] என்று பேசி நகைத்து ஆடியது. ஆடல் மா— அடல் என்பதன் நீட்டல். ஆடல் என்று கொண்டு வலிமையுள்ள குதிரையென்றும் கூத் தாடிக்கொண்டு செல்லும குதிரை யென்றும், உத்தம இலக்கணமுடைய சிறந்த குதிரை யென்றும் பொருள் கொள்ளலாம். ஈண்டு குருக்ஷேத்திரப் போர்க்களத்தை வருணித்தவாறு காண்க. அப்போது கண்ணன் அருசுனனுக்குத் தேர்ச் சாரதியானதால் இவ்வாறு கூறி னர்.

124 முத்திக்கு வெஞ்சிலையை நிகர்புருவம் வளையவீழ்
முறுவலின் நிலவுபொழிய
முளரிமல ரைச்சினவி யரிபரந் திருகுழையின்
மோதும்விழி கருணை பெருகத்

தத்திக் குறங்கிடை யிருக்கெனச் செவிலியர்
தடுக்கவும் அசோதை மடிமேல்
தாவும்இரு கரம்நிலம் பதியவைத் திணையடித்
தளிர்விரல் குனித்தூன்றி மேல்

வத்திக்கு முழுமதி மறுத்துடைத் தனையமுக
மண்டலம் சிறிதெடுத்து
மலர்மாது நிலமாது முண்டுண் டுவட்டாது
வாயூறி நிற்பவமுதில்

தித்திக்கும் இதழூறல் இடையிடை துளிப்பநீ
செங்கீரை யாடியருளே
தென்னன்மணி யொளிர்வீதி வெண்ணெய்நகர் வளர்சோதி
செங்கீரை யாடியருளே. (3)

(3) முத்து இக்கு வெஞ்சிலை. முத்தினையுடைய கரும்பாகிய கொடியவில்—இவ்வில் காமமுழந்தவரை வருத்துவதால் [வெம்மை] கூறப்பட்டது; வளை அவிழ்முறுவல். முத்தினை யொத்து விளங்கும் பல்; ஈண்டு வளை அதுவீன்ற முத்துக்காயிற்று, அரி - செவ்வரி; இருகுழை—இரண்டுகாதுகள், குறங்கு—துடை ஈண்டுமடி; வத்திக்கும்—வளரும்; மறு துடைத்து அனைய—களங்கம், நீங்கியதுபோன்ற; மலர்மாதும் நிலமாதும்—எண்ணும்மை; உண்டு உண்டு—அடுக்குத்தொடர்; உவட்டாது வாயூறி நிற்ப அமுதில் தித்திக்கும் இதழ்—திகட்டாது இன்னும் உண்ண இரு தேவியரும் வாயில் நீர் பெருகிநிற்க அமுதைக் காட்டிலும் தித்திக்கும் உதடு; ஊறல்—இதழினின்று சிந்தும் எச்சில்; இதில் செங்கீரை ஆடுதலின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

125 கந்தம்வளர் சந்தப் பொருப்பில் பிறந்துலகு
காதல்பெறு சங்கமேவிக்
கருதுமைந் திணையகப் பொருளையுந் துறைமுகம்
காணவிட் டொழுகு தொடர்பில்

சந்ததமும் அலங்கார முஞ்சிறந் தமுதினும்
தண்மையாய் மதுரமாகித்
தாழாது சீர்பெற் றடிக்கடி பெருக்கந்
தலைக்கொடு மிகத்தெளிந்தே

அந்தமிகு பூமுதல் மங்கலப் யொருள்படைத்
தந்தரங் கத்தோடே வரும்
ஆடுதற் குரிமையா யோசையுட னழமும்
அணைந்துபெரி யோர்கள் புகழச்

செந்தமி ழெனப்பெருகு பெண்ணைச் செழுந்துறைவ
செங்கீரை யாடியருளே
தென்னன்மணி யொளிர்வீதி வெண்ணெய்நகர் வளர்சோதி
செங்கீரை யாடியருளே. (4)

| | பெண்ணை நதி. | செந்தமிழ். |
|---|---|---|
| 1 | வாசனைமிக்க சந்தன மரங்களையுடைய மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றும். | வாசனையுடைய சந்தன மரங்கள் சூழ்ந்த பொதிய மலையில் தோன்றும். |
| 2 | உலகினர் விரும்பும் அழகுள்ள சங்குகளை அடையும் (சங்கம் - சங்கு). | உலகினர் விரும்புகின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடையும். |
| 3 | கருதுகின்ற குறிஞ்சி, முல்லை என்ற ஐந்து வகை நிலங்களினிடமுள்ள சந்தனம், அகில் முதலிய பொருள்களைக் கடற்கரைத் துறைமுகத்திற்குக் கொண்டு சேர்க்கும். | அகப்பொருளில் கூறியவாறு கருதுகின்ற ஐந்திணைப் பொருளும், துறையும் பொருந்தப் பாட்டில் நிறுத்தும். |
| 4 | செல்லும் வேகத்தில் எப்போதும் அழகு சிறக்கும், | பாட்டுப்பாடுங்கால் எப்போதும் உவமை, உருவகம் முதலிய அணிகள் சிறந்திருக்கும். |

| | |
|---|---|
| 5 இதன் நீர் அமிர்தத்தைக் காட்டிலும் குளிர்ச்சியாய் இனிமை கொடுக்கும். | பாட்டுப் படித்தால் அமுதத்தைக் காட்டிலும் மகிழ்ச்சியும் இனிமையுமிகும். |
| 6 அடங்காது ஒலிமிகும் சீர் - ஒலி .. .. | பாட்டுப்பாடுங்கால் குறையாமல் சீர் பெற்றுவரும். சீர் - செய்யுளின்ஓருறுப்பு. |
| 7 அடிக்கடி வெள்ளம் வருதலைத் தாங்கும். | அடிக்கடி வளர்வதைத் தாங்கும். |
| 8 மிகவும் மலர் வனங்களில் ஊடுருவி அழகு மிகுந்த பூ முதலிய நல்ல பொருள்களை உடைத்தாயிருக்கும். | மிகவும் ஆராய்ந்து அழகுபெற்ற பூ முதலிய மங்கலச் சொற்களை முதலிற் கூடிய பாட்டுக்களை உடைத்தாயிருக்கும், |
| 9 அழகிய அலைகளுடன் வரும் (தரங்கம் - அலை). | அழகிய கலிப்பாவில் தரவு, தாழிசை, அம்போதரங்கம் முதலிய உறுப்புக்களைப் பெற்றுவரும் (தரங்கம் - அம்போதரங்கம் என்ற உறுப்பு). |
| 10 நீராடற்கேற்றதாய் புண்ணியதீர்த்தத்திற் குரியதாயுளது. | கூத்து என்னும் நாடகத்தமிழிற்கு உரிமையாயுளது. |
| 11 அலையொலியும் ஆழமும் அடைந்திருக்கும். | செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை முதலிய ஓசைகளும் சொற்செறிவும் பொருட் செறிவும் அடைந்து இருக்கும். ஆழம் - சொல்லாழம், பொருளாழம். ஈண்டு பெண்ணை நதியைச் செந்தமிழிற்கு ஒப்புமை கூறிய திறம் பாராட்டற் பாலது. |

126 வெண்டிரைக் கடலகழி லங்கையாள் நிருதர்கோன்
வேதனால் பெற்றவரமும்
வெள்ளியங் கிரிபெயர்த் திட்டதிண் டோள்வலியும்
வெஞ்சின இயக்கர் கோமான்

கொண்டமலர் மானமும் மானமுங் கைக்கொண்ட
கொடுமையும் கருநிறத்துக்
கூற்றையும் சமரிடைக் கூத்தாடல் கண்டுவிடு
குறைவிலாண் மையு மமரகோன்

மண்டியவ ரத்தலைப் பிணிபடச் சிறையிலிடு
மகவலியும் மூவுலகமும்
வந்தடி பணிந்துதன் ஏவல்முறை கேட்பவுயர்
வண்மையுஞ் செல்வமுமெலாந்

திண்டிறலோ ரம்பின்வலி யால்வாங்கு கொண்டலே
செங்கீரை ஆடியருளே
தெண்ணன்மணி ஒளிர்வீதி வெண்ணெய்நகர் வளர்சோதி
செங்கீரை ஆடியருளே. (5)

(5) கடல் அகழ் இலங்கை—கடலே அகழியாகவுள்ள இலங்கை; நிருதர்கோன்—இராவணன்; வேதன்—பிரமன்; வெள்ளியங்கிரி—கைலைமலை; இயக்கர் கோமான் கொண்ட மலர் மானமும் மானமும் கைக்கொண்ட—இயக்கர்கட்குத் தலைவனாகிய குபேரனிடமிருந்த

புட்பக விமானத்தையும் அவனது பெருமையையும் அபகரித்த ; குபேரன் இராவணனிடம் தோற்றதனுல் பெருமை கெட்டது. கூற்று—யமன் ; இராவணனிடம் யமனும் தோற்றனன். இதுபோது கால தண்டத்தை ஏவாது தடுத்தவர் பிரமன். இடும் அகவலி என்க. அகம்—மனம் ; கொண்டல்—உவமையாகுபெயர்.

## வேறு

127 குருமணி மேகலை வைத்த சுருங்கிடை
கொம்பர் குந்தேமல்
குடிகொளும் வார்முலை முத்து வடம்புனை
குன்றே யும்பூவின்

வருமது வூறல் பெருக்கு மரும்ப
வளம்ப லென்றுனுன்
வரிவிழி யாருயி ரைக்கொளும் நஞ்சிது
வம்பா மென்றே சொல்

ஒருமதி யோடு முதித்த விளங்கொடி
உன்கோ பம்போதும்
ஒளிமணி மார்பி னிருத்தி மகிழ்ந்தெனில்
உய்ந்தே னென்றாடு

திருமகள் வாணகை பெற்று மகிழ்ந்தவ
செங்கோ செங்கீரை
செழுநவ நீத புரத்தில் அமர்ந்தவ
செங்கோ செங்கீரை. (6)

(6) குரு—நிறமமைந்த ; சுருங்குஇடை—மெல்லிய இடுப்பு ; வார்முலை—கச்சுப் பொருந்திய முலை ; வம்பு—புதுமை ; ஒருமதியோடுமுதித்த இளங்கொடி—ஒரு சந்திரனேடும் பாற் கடலில் தோன்றிய இலக்குமி ; இடை கொம்பாகும் ; முலை குன்று எயும் (ஒத்திருக்கும்) ; பல் அரும்பினை ஒத்திருக்கும் என்று கூறினுல் இலக்குமியின் விழிகள் உயிரைக் கொள்ளு இன்ற புதுமையான நஞ்சாம் என்று கூறும்படி இருக்கும்.

128 கரைபொரு காத லளித்த மடந்தையர்
கண்போ லுங்காவி
கருகிய நீல நிறத்தறல் கொந்தள
கம்போ லுந்தோயம்

நிரை தொறு மூடு சுழித்திட லுந்தி
நிறம்போ லுங்காணின்
நிறைகவர் மாதரை யொக்குமி தென்று
நினைந்தே திண்டோளின்

வரையுடை காமுகர் புக்குளை யுந்தொறும்
வண்டரர் பண்பாடி
மலர்முகம் ஆர்வம் மிகுப்ப மலர்ந்து
மகிழ்ந்தா கந்தோயும்

திரைகொள் பிணுகி நதித்துறை கொண்டவ
செங்கோ செங்கீரை
செழுநவ நீத புரத்தி லமர்ந்தவ
செங்கோ செங்கீரை. (7)

(7) பெண்கள் கண்போல் நீல மலரும் அவர்களது கூந்தல் போன்று கருகிய நீல நிறமுடைய மணலும் அவர்கள் கொப்பூழின் நிறம் போலும் நீர் இடையில் சுழி கொள்ளலுமுடைய பெண்ணையாறுனது மலை யொத்த வலிய தோளுடைய காமுகர்கள் சென்று தழுவும் காலம் வரை வண்டுகள் ரீங்காரஞ் செய்தலை யொத்த இனிய இசைபாடி தாமரை மலர் போன்ற முகம் விருப்ப மிக மலர்ந்து மகிழ்ந்து அவர்களது மார்பினைப் புணரும் பொது மகளிரை யொக்கும். பிணுகி நதி—பெண்ணை நதி ; நிறை கவர் மாதர்—பொதுமகளிர். பொது மகளிர் என்றுல் பணம் வரும்போது அவர்கள் முகமலர்ந்து இசை முதலியன பாடுவதொப்ப. இதிலும் வடகிழக்குப் பருவகாற்று வரும்போது வெள்ளம் வருதலால் ஓசை முதலியன உண்டாதலான்.

129 மரகத மேனி நினைக்குநர் நெஞ்சலர்
வண்டே சங்காழி
வரிசிலை வாள்கதை வைத்த தடம்புய
மஞ்சே யஞ்சாத

குரகதம் வாய்தக ரக்கை நிமிர்ந்திடு
குன்றே யன்பான
குவிமுலை யாயர் கொடி கள் பெறுங்கொழுங்
கொம்பே யெம்போல்வார்

பரகதி சேர வடிக்கம லந்தரு
பண்பா மண்பாவை
பாமர வாளவு ணக்களைச் சிந்து
பணைத்தா ரெங்கோவே

திரகம லாசன னைத்தரு புங்கவ
செங்கோ செங்கீரை
செழுநவ நீத புரத்தி லமர்ந்தவ
செங்கோ செங்கீரை. (8)

(8) நினைக்குநர்—வினையாலணையும் பெயர், நினைப்பவர்கள் என்று பொருள். நெஞ்சு அலர் வண்டு—அத்தகை உன்னை நினைப்பவர் நெஞ்சமாகிய மலரை மலர்த்துகின்ற வண்டினை யொத்தவனே. மஞ்சு—மேகம் ; குரகதம்—குதிரை ; ஆயர் கொடிகள்—கோபியரான கொடி யொத்தவர் ; மண்பாவை. . . சிந்து—பூமி தேவி விரும்பியவாறு அசுரர்களை அழிக்கும் என்க. மண்பாவை—பூமிதேவி. பாமரவாள் அவுணக்களை—அறிவற்ற வாளாயுதத்தை யுடைய அசுரராகிய களைகள், வாள் உபலட்சணமாக மற்றப்படைகளையும் காட்டியது ; பணை—பெருமை ; திரகமலாசனன்—முத்திகொடுக்கும் தாமரை மலரிலுள்ள பிரமன். புங்கவன்—கடவுள்.

130 தேனிமிர் கற்பக நாள்மல ரைப்பொழி
தேவர்கள் நின்றூர்பார்
தீமை திருத்திய நான்மறை நற்றவர்
தேடினர் வந்தார்காண்

பானல் விழிச்சசி கேள்வன் விழித்தெழு
பார நெடுஞ்சோனை
பாழ்பட வெற்பொரு தாழ்விரல் வைத்தது
பாடினர் கண்டாமே

கூனல் மருப்பிள மேதிசெந் நெற்கதிர்
கோதி நறுங்காவி
கோக நகத்திரள் வாவி யுழக்கியோர்
கோல விளந்தாழை

ஆனிழ லிற்றுயில் வேணு வனத்தவன்
ஆடுக செங்கீரை
ஆரண உட்பொருள் ஆன தனிச்சுடர்
ஆடுக செங்கீரை. (9)

(9) தேன் இமிர்—வண்டுகள் ஒலிக்கும் ; நல்தவர்—பிராமணர் ; தேடினர் வந்தார்—முற்றெச்சம். பானல்—நீலோற்பலம் ; சசி—இந்திராணி ; எழுபார நெடுஞ்சோனை—எழுவகையான கருக்கொண்டு பாரமுற்றுள்ள விடாமழையைப் பெய்யும் மேகங்கள் ; சோனை—தானியாகு பெயர். வெற்பு—கோவர்த்தனமலை ; கூன் நல் மருப்பு—வளைந்த நல்ல கொம்பு ; மேதி—எருமை ; கோகநகம்—தாமரை ; உழக்கி—கலக்கியடித்து ; "தாழை நிழலில் ஆன் (ஒடு) துயில் " என்க. ஆன்—பசு ; ஆன் என்னும் போது மூன்றும் வேற்றுமையுருபு விரிக்க,

131 நாறு மகிற்புகை வானவர் மெய்க்கணி
நாவி னிறங்காண
நாக மணித்தல மேவு மதிக்குடல்
ஞாயிறி தென்றுக

ஏறு துகிற்கொடி பாக னிளைப்பற
ஏழ்துர கஞ்சாட
ஏடவிழ் மைக்குழல் மாத ரடிப்பதில்
ஏறிய பந்தோடி

வீறு மிமைப்பிலர் மார்பி னுதைத்தெதிர்
மீளுதல் தன்கேள்வன்
மேனி திளைத்தொளி யாள்முலை யொப்புறு
மேடையின் விண்பாயும்

ஆறு புனற் சொரி வேணு வனத்தவன்
க
ஆரண வுட்பொருள் ஆன தனிச்சுடர்
ஆடுக செங்கீரை. (10)

(10) நாறு . . . . துகிற்கொடி :— வாசனை வீசும் அகிற் புகை தேவர்கள் உடலுக்கணியும் கஸ்தூரி வாசனைப் பொருள் நிறங்காண தேவவுலகத்தைப் பொருந்துகின்ற சந்திரன், சூரியர்களுக்குப் பூக்குடல் என்னும் படி ஏறும்படியான சீலைக்கொடிகள். பாகன்—பாகனாகிய அருணன் ; ஏழ்துரகம்—ஏழு பச்சைக் குதிரைகள் ; சாட—மோதித்தடுக்க ; ஏடு—இதழ் ; ஏடு அவிழ் . . . .

விண்பாயும்—இதழ் மலர்ந்த பூக்களை யணிந்த கூந்தலையுடைய பெண்கள் மெத்தை யது பந்தை ஓங்கி அடிப்பதனால் விண்பாயுமாறு எழும்பிய அப்பந்து ஓடி தேவர்களது பெருமை யுடைய மார்பில் உதைத்து எதிர் மீண்டு வருவது தன் கணவன் உடலில் கலந்த ஒளிமிக்க கூரிய முலையை ஒப்புறும் மாதர் மேடையின் கண் அடிப்பதில் விண்பாயு மெனறிய எனப் பிரித்துக் கூட்டுக. ஆரணம்—வேதம்.

## தாலப்பருவம்.

132 தகரங் கமழுங் குழன்மடவார்
சலவைக் கலையி னேந்தியன்னை
தளிர்க்கை களிப்ப நெய்யாட்டித்
தளர்வில் களபப் பொடிதிமிர்ந்து

நிகரங் கதலிக் கெனுங்குறங்கின்
நிறுத்திப் பசும்பொன் தசும்பின்வெந்நீர்
நிரைவெள் வளைக்கை முகந்தாட்டி
நெடுநீர் சுழற்றிக் கழைபுரைதோள்

மகரம் பொதித்த கலைமுனையால்
மணிமெய்த் துடைத்துச் சியினூதி
மடியி னிருத்தி அயினிசுற்றி
வளரும் கொழும்பாற் றனமருத்திச்

சிகரம் புரைதொட் டிலில் வளர்த்த
சேர்ந்தாய் தாலோ தாலேலோ
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்
செல்வா தாலோ தாலேலோ. (1)

(1) தகரம்—மயிர்ச் சாந்து ; சலவைக் கலை—சலவை செய்த ஆடை ; நெய்யாட்டி—எண்ணெய் பூசி ; இங்கு ஆட்டி பூசி என்பது மட்டுமே நின்றது. திமிர்ந்து—பூசி ; அம் கதலிக்கு நிகர் எனும் குறங்கு என்க. பொன்தசும்பு—பொற்குடம் ; நீர் சுழற்றி—நீராட்டு தலின் பின்னர் குழந்தைக்கு நீர் சுழற்றி ஊற்றுதல் வழக்கு. கழை புரை தோள்—மூங்கிலை யொத்த தோள் ; இங்குத் தோள் என்பது கைகளைக் காட்டியது. மகரம்—சுருமீன் ; மகரக் குழையர் ஆனது பற்றிப் போலும் ; கலை—ஆடை ; உச்சியின் ஊதி—நீராட்டித் துடைத்த பின்னர் தாயார் தலையுச்சியில் ஊதுதல் வழக்கு. அயினி சுற்றல்—சோறு கலந்த ஆலத்தி நீர் சுழற்றி ; கொழும்பால தனம் அருத்தி—என்க.

133 மறிக்கும் தரங்கப் பெரும்புனலில்
வனசப் பொகுட்டு முனிமுதலா
மன்னும் புவனத் தனைத்துயிரும்
மடங்கும் இறுதிக் கொடும்பொழுதில்

குறிக்கும் சமையப் பல்பிணக்கர்
குறும்பு மவர்தம் கடவுளரும்
குறிய சிறிய வயிற்றடங்கக்
குலவும் சுருதித் தாலாட்ட

எறிக்கும் பசுங்கேழ் வடத் திலையின்
இருக்கை மலரின் எடுத்தொருதாள்
இனமெல் விரல்செவ் விதழ்சுவைப்ப
இன்பத் தலைமை சிறப்ப முத்தந்

தெறிக்கும் கடலில் அறிதுயில்கூர்
சிறுவா தாலோ தாலேலோ
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்
செல்வா தாலோ தாலேலோ (2)

(2) தாங்கம் மறிக்கும்—அலைமடங்கும் ; வனசப் பொகுட்டு முனி—தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் ; இறுதிக் கொடும் பொழுது—யுகப்பிரளயம் (ஊழிக் காலம்) ; பிணக்கர்—மாறுபடுபவர் ; சுருதி—வேதம்; பசுங்கேழ் எறிக்கும் வடத்திலை—பச்சை நிற வொளி வீசும் ஆலிலை ; இருக்கை—ஆசனம் ; மலரின் ஒரு தாள் எடுத்து என்க. இதழ்—ஈண்டு அதனையுடைய வாய்க்கு ஆயிற்று. இன்பத்தலைமை சிறப்ப—இங்ஙனம் யாவரையும் உண்டு ஆலிலையில் துயில்வதால் யாவர்க்கும் தலைவர் இவரே என்பது தேற்றமாயிற்று ; கடல்—பாற்கடல் ; அறிதுயில்—யோக நித்திரை ;

134 வள்ளக் கமலம் முறுக்குடைந்து
வழிந்த செழுந்தேன் இதழ்குவிந்த
மலர்ச்செங் குமுதத் திடை பொழிதல்
மணிப் பொற் கலசத் துறுநறவைக்

கள்ளக் கயற்கண் தளிரியலார்
கனிவாய் குனித்துப் பருகலொக்கும்
கடிப்பந் தடத்தில் சினைச்சுறவு
ககனத் தெழும்ப வதுதடுப்பான்

பள்ளப் பழனத் துழவ ரெறி
பகடு துரகுங் குறியதின் கோல்
பழுக்காய்க் கமுகின் குலைசிதறிப்
பலவு தகர்த்துக் கனிக்கதலித்

தள்ளச் சிறக்கும் வெண்ணெய் நல்லூர்
தலைவா தாலோ தாலேலோ
தண்ணங் கமலப் பெண்ணமுதின்
தவமே தாலோ தாலேலோ. (3)

இப்பாட்டு பிரளய காலத்தில் திருமால் யாவரையும் உண்டு சிறுகுழந்தையாகி ஆலிலை மீது கால் விரலை வாயில் வைத்துச் சுவைக்க வேதங்கள் தாலாட்டும் நிலையைக் காட்டுகிறது முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 128-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

(3) வள்ளம் கமலம்-கிண்ணம் போன்ற தாமரை மலர் ; கள்ளக் கயல்கண். "கயல் கள்ளம் கொள்ளா" (தஞ்சை கோவை 31) நோக்குக. கடி—வாசனைமிக்க ; பம்—விண்மீன். ஈண்டு நீரிலுள்ள மீன்களையே காட்டிற்று. கிண்ணம் போன்ற தாமரைப்போது மொட்டவிழ்ந்து, தேன்இதழ் குவிழ்ந்துள்ள செங்குமுத மொட்டின்மீது பொழிவது பொன் குடத்திலிருக்கும் கள்ளைக் கயற்கண்களையுடைய பெண்கள் வாய்குவித்துப் பருகுவதை ஒத்திருக்கும் தகைமையையுடைய வாசனை மிக்கதும், மீன்களையுடையதுமான தடம் என்க. சினைச்சுறவு-வலிய கோரப்பல்லைப் பெற்ற சுரு மீன். சினை—ஓர் உறுப்பு ; தடுப்பான்-பானீற்று எதிர்கால வினை

யெச்சம் ; பள்ளிப்பழனம்—தாழ்ந்த நிலத்து வயல்கள்; சுறுமீன்மேலெழும்ப அதனை உழவர் மாடுகளை ஓட்டும் தாற்றுக்கோலும், பாக்கு மரக் குலைகளும், பலாக்கனிகளும், வாழைக்கனிகளும் தடுப்பான் புக முதலிரண்டையும் வாலால் சிதறுமாறுவடித்து, பாவக்கனியைப் பிளந்து, வாழைப்பழத்தைக் கீழே தள்ளுமாறு சிறந்து மேலே சொல்லுகின்ற வளமுடைய வெண் ணெய் நல்லூர் என்க. கமுகின் பழுக்காய்க்குலை என்க. பழுக்காய்—பாக்கு ; இதில் கடிப்பம் என்பது கருப்பம் என இருந்தால் பொருள் கொள்ளலாம்.

135 பாணித் தமைத்த மரகதத்தின்
பலகைச் சட்ட மிவை சமைத்துப்
பவழக் கடைகால் நான்கு மொன்றப்
பசும்பொன் நாணி இசைந்திறுக்கி

வாணித் தலத்தின் விளிம்பு தெற்றி
வயிரம் இழைத்துக் கொழுங்கனக
வடங்கள் நாற்றிப் பலவிதமார்
வன்னக் கலையின் விதானம்வைத்து

நாணிக் கமல முகிழ்க்கும்முக
நற்றாய் யசோதைக் கைவளர்த்த
நளிர்மெல் லணைசேர் தொட்டின்மிசை
நலஞ்சேர் குழவித் திருவுருவாய்ச்

சேணிற் கலந்த வுருவடக்குந்
தேவா தாலோ தாலேலோ
செந்நெற் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்ச்
செல்வா தாலோ தாலேலோ. (4)

(4) பாணித்து அமைத்து—உயர் மதிப்பிட்டுப் பொருந்திய; நாணி—கயிறு; பொன் கயிற்றி னல் மரகதச்சட்டங்களையும் பவளத்திலான நான்கு கடை கால்களோடு சேர்த்து இறுகக்கட்டி என்க. கடைகால்—தொட்டிலின் நான்கு புறத்து முள்ள கால்கள் ; வாணித்தலத்தின்—நாதந்தோன்றும் இடம் போன்ற ; தெற்றி விளிம்பு—மேட்டிடத்தின் ஓரம் ; வடங்கள்—தொட்டில் கட்டும் கயிறு ; நாற்றி—தொங்க விட்டு ; வன்னக்கலை—சித்திரக் கலை ; விதானம்—மேற்கட்டி ; கமலம் நாணி முகிழ்க்கும் முகம் என்க. நளிர்—விளங்குகின்ற ; சேணில் கலந்த உரு—திருவிக்கிரமாவதாரம் ; இதன் வரலாறு 118, 189-ஆம் பாட்டுக்களின் குறிப்பு (முன் பிள்ளைத்தமிழ்க் கொத்து) காண்க.

136 விரிக்கும் பணப்பஃ றலைமணிகள்
விளக்கிட் டெனத்துன் னிருள்கிழிப்ப
வெண்டோட் டம்போ ருகத்தலரில்
விரைப்பாற் படுத்த மெல்லணைமேல்

அரிக்கும் பணிலப் பயோததியின்
அலையிற் சிதறுங் குறுந்திவலை
அவிழ்பைந் துளவத் திருவுரத்தின்
அணிந்த தரள வடம்புரையத்

தரிக்கும் களப முலைத்திருமான்
தளிர்மெல் வளைக்கைத் தொடச்சிவந்த
தாட்டா மரைகள் மறைத் தலையில்
தயங்கப் புவனம் தழைக்கவருள்

தெரிக்கும் யோகத் துயி லுவந்த
தேவா தாலோ தாலேலோ
செந்நெற் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்
செல்வா தாலோ தாலேலோ. (5)

(5.) பணம் பல் தலை மணிகள்—ஆதிசேடனிடம் உள்ள ஆயிரம் படமுடைய பல தலைகளி லுமுள்ள மாணிக்கங்கள்; துன் இருள்—நெருங்கிய இருள். வினைத்தொகை; பயோததி—பாற்கடல்; வெள்ளிய இதழையுடைய தாமரை மலராகிய படுக்கை மீது பொழுது கழிக்கும் சங்குகளையுடைய பாற்கடல் என்க. "பயோததி . . . . . . புரைய—கடலின் அலைகளால் சிதறுண்ட சிறிய திவலைகள்; திருமாலின் துளபமாலை தரித்த மார்பில், அணிந்த முத்து மாலையை ஒத்திருக்க; தரிக்கும் . . . . . . தயங்க—மார்பில் தரிக்கும் வாசனைச் சாந்து பூசிய முலைகளையுடைய திருமகளின் தளிர் போன்ற மெல்லிய வளையுடைய கைகள்தொடச் சிவந்த பாதமாகிய தாமரைகள் விளங்க பிரமன் மேலிடத்தில் விளங்க; தயங்க என்பதைத் தாட்டா மரைகளுக்கும், மறையுடைய வேதனுக்கும் கூட்டுக; மறை—தானியாகுபெயர்; இப்பாட்டு திருமால் பாற்கடலில் ஆதி சேஷ சயனத்தில் திருமகள் கால் பிடிக்க, உந்தியினின்று தோன்றிய தாமரையில் பிரமனைச் சிருட்டித்துப் உலகைப் படைக்கும் நிலையைக் காட்டுகிறது.

(வேறு)

137 அருமாமறை தேடு முதற்பொருள்
ஆவாய் நீயேநா
அமுதூரநின் னுயிர மெய்ப்பெயர்
ஆர்தா னோதாதார்

கருமா முகில் மேனி விழிக்கெதிர்
காணு தார் வீணே
கருவூ டுழல் வாரலதத் துயர்
காய்வா ரோபூமேல்

திருமா மகள் காமுறு பொற்புய
சீராளா வானோர்
சிரமேல்ஒளிர் பாத மலர்ப்பர
தேறார் போர்சாயத்

தருமாதியர் நாடு கொடுத்தவ
தாலோ தாலேலோ
தமிழ் சேர்நவ நீத புரத்தவ
தாலோ தாலேலோ. (6)

(6.) கருவூடு உழல்வார் அலது அத்துயர் காய்வாரோ எனப்பிரிக்க. கரு ஊடு உழலல்—பிறந்து வருந்துதல். தேறார்—ஈண்டு பகைவர்; தரும ஆதியர்—தருமனை முதலாகக் கொண்ட பாண்டவர்; தருமாதியர் நாடு—நான்காம் வேற்றுமைத் தொகை.

138 பவமேயலை வாருதி புக்கவர்
பார்சேர் நாவாயே
பணகாசன மால்வரை யிற்றிகழ்
பாதா வானேறே

யவமேயுழல் வேனை யளித்திடு
மாதா ராகாமே
லமராடிய போகி யிமைப்பிலர்
ஆனோர் போர்சாய

நவமேயரு கோடி முழுச்சசி
நாணு வாள்மேனி
நகைசேர்வளை வாயின் முழக்கிய
நாதாந் தாநீள

தவமேபுரி கோசலை புத்திர
தாலோ தாலேலோ
தமிழ் சேர்நவ நீத புரத்திறை
தாலோ தாலேலோ. (7

(7.) பவமே . . . . . . நாவாயே—பிறப்பாகிய அலைகளையுடைய கடலில் சென்றவர்களைப் பூமிக்கண் கொண்டு வந்து சேர்க்கும் மரக்கலமொத்தவனே ; பணக ஆசனம்—ஆதி சேடனாகிய படுக்கை ; வான்+ஏறு—வானிலுள்ளார்க்கு ஏறினை யொத்தவனே, வான்—இடவாகு பெயர்; அவமே . . . . . ஆதாரா—வீணாகத் துன்பப்படும் என்னைக் காப்பாற்றும் பற்றுக் கோடான வனே; காமேல்—கற்பகச் சோலைக் கண்; அமராடிய—சத்தியபாமைக்காக கண்ணன் பாரிசாத மரத்தைக் கவர்ந்த போது சண்டை செய்த ; போகி—இந்திரன்; இமைப்பிலர்—இமையாக் கண் களையுடைய தேவர் ; நவமே வரு . . . . நாணு—புதுமையும், அருமையுமாய் அலங்கரித்த இந்திராணி நாணி ; நாணு—செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சம் செய்து எனத்திரிந்தது. வாள் மேனி நகை சேர் வாயின் வளை முழக்கிய என்க. வளை—சங்கு.

(வேறு.)

139 அருண மணிக்கதிர் தவழ்நெடு மாடத்
தணுகிக் கதிரவன்மா
அழலென வெருவிப் படிகத லத்தொளிர்
அருவிப் புனலெனமோந்

திருணவி வுற்றில திவணென நீலத்
திலகு தலத்தின் மருண்
டெறிகதிர் செறிமரகதமணி நிலவொளி
யிளவறு கெனவார்த்து

மருண்டை யிடர்விட இந்து மணித்தலம்
வழிபழ நீர்பருகி
வடவரை யெனவுயர் கனக தலத்தை
வளைத்திடு மேடைதொறுந்

தருணமின் னூர்பயில் வெண்ணெய் நகர்க்கிறை
தாலோ தாலேலோ
தங்கச் சலருக மங்கைக் கதிபதி
தாலோ தாலேலோ. (8)

(8) அருண மணிக்கதிர் தவழ்—செந்நிற ஒளி வீசும் மாணிக்கக் கல்லின் கிரணங்கள்வீசும்; கதிரவன்மா—சூரியனது தேரில் கட்டப்பட்ட ஏழு பச்சைக் குதிரைகள்; அழலனெ வெருவி—மாணிக்கம் ஒளிமிக்க தாதலால் நெருப்போ எனப்பயந்து; படிகதலத்து—பளிங்கினாலாகிய இடம்; கண்ணாடி பதித்த இடமாதலால் மலை அருவி நீரோ என ஐயுற்று முகர்ந்து பார்த்தது இருள் நலிவுற்றது . . . . மருண்டு—நீலக்கல்லினால் கட்டப்பட்ட இடத்தில் நாம் சூரியனை இழுத்து வந்தும் இவ்விடத்தில் இருள் தொலைந்து போகவில்லையே என்று மருட்சி யடைந்து. நீலக்கல் கருமை ஒளி வெளிவிடும். எறிகதிர் . . . . வார்த்து—கிரணங்கள் நெருங்கி ஒளி வீசும் பச்சைக்கல்லின் ஒளி இளம் அறுகம்புல்லோ என உண்ணச் சென்று; கதிர் செறி எறி மரகதம் என்க; ஆர்த்து—உண்பித்து; இந்து மணித்தலம் வழி பழ நீர் மருள் நடை இடர் விடப்பருகி—சந்திரகாந்தக் கல்லினின்று வழிந்த பழைய நீரை மருண்டு நடந்த இளைப்பு நீங்கக் குடித்துப் பழநீர் என்றார். இரவில் சந்திரகாந்தக் கல் சந்திரனைக் கண்டு நீர்காலுதல் பற்றி அந்நீர் இன்னும் இருந்ததென்க. வடவரை—மேருமலை; கனகம்—பொன்; தருணம்—இளமை; சலருகம்—தாமரை.

140 கத்துங் குருகடை கமல வயற்குட்
கடைசியர் களைகடிவார்
களிநறை வெள்ளிக் கலனிற் பருகுதல்
கண்டொரு சினைமந்தி.

முத்து நதிப்பணி லத்தை யெடுத்து
முதிர்ந்த சுளைப்பலவின்
மூரிக் கனியிடை கீறிப் பொழிதரு
முதுவிரை நறைபருகிக்

கொத்துந் தியமலர் நிமிர்தரு தருநிழல்
குறுகி மயங்கிவிழக்
கொடிபடர் தன்பதி சேய்மி னூர்வயல்
குறுநகை புரிபொழில் சூழ்

தத்தும் புனல்செறி வெண்ணெய் நகர்க்கிறை
தாலோ தாலேலோ
தங்கச் சலருக மங்கைக் கதிபதி
தாலோ தாலேலோ. (9)

(9) குருகு—நாரைகள்: அடைவயல் என் வினைத் தொகையாக்குக. நதி முத்துப்பணிலம்—நதியிலிருந்த முத்து தரும் சங்கு; மூரிக் கனி—பெரியபழம்; உந்திய—பொருந்திய; நிமிர் தரு தரு—உயர்ந்தோங்கிய மரம்; வயல் சேய்மினார் படர்கொடிதன்பதி குறுநகைபுரி—வயலிலுள்ள சிவந்த மின்னலையொத்த பெண்கள் படர்கின்ற கொடி கொம்பினைச் சேர்தல் போன்று தத்தம் கணவர்களையடைந்து புன்சிரிப்புச் செய்யும்; கத்துகின்ற நாரைகள் அடைகின்ற தாமரைகளையுடைய வயலில் மருத நிலப் பெண்கள் களைகளை நீக்குபவராய்க் கள்ளினை வெள்ளிக்கிண்ணத்தில் ஊற்றிச் சொல்லி குடிப்பதைக் கண்ட பெண் குரங்குகள் சங்கு எடுத்து வாயில் வைத்துக் சுளைகளையுடைய பலாப்பழத்தைக் கீறி அதினின்று பொழியும் தேனைக் குடித்து மலர்க்கொத்துக்கள் பொருந்திய உயர்ந்த மரத்தின் நிழலை அடைந்து களி மயக்கத்தால்

விழ, அங்குள்ள வேலை செய்யும் பெண்கள் தத்தம் கணவரைச் சார்ந்து குரங்குகளின் செய்கைகளைக் கண்டு சிரிக்கும் சோலை சூழ்ந்த வெண்ணெய் நகர் என்க. மதுவைக் கணவன் மரார்கள் மனைவியர்க்கு வெள்ளிக்கிண்ணத்தில் ஊற்றுவதுபோல மந்திக்கு ஆண் குரங்கு மேற் கூறியவாறு கீறி ஊற்றியது என்னலுமாம்.

141 செந்தழல் புகுமென விசையனு முடன்வரு
தேர்கட விக்கடலுந்
தீவும் பசியபொன் னிலமும் பலவுந்
திணியிருள் ஒரு புடைசூழ்

அந்தநெ டுந்திகி ரிப்பெயர் வரையும்
அகன்று கருங்கிரிமேல்
அஞ்செம் முகிலென வளர்தரு பரனை
அடைந்து புகழ்ந்துதரு

மைந்தர்க ளொருபதின் மரையு முடன்கொடு
வருநெறி பலகடவா
மதிள்தொறு மழைதவழ் துவரை புகுந்துநல்
வைதிகன் மகவையெலாம்

தந்தவ னாசி பெறுங்கரு ணைக்கடல்
தாலோ தாலேலோ.
தங்கச் சலருக மங்கைக் கதிபதி
தாலோ தாலேலோ. (10)

(10) செந்தழல் புகும் என—நாளை சூரியன் மறைவதற்கு முன்பு என் மகனைக் கொன்ற சயத்திரதனைக் கொல்லாவிட்டால் அக்கினி மூட்டி அதில் புகுந்து இறப்பேன் என ; தேர்கடவி . . . . . . அகன்று—தேர் நடத்தி கடலும், தீவும், மண்ணுலகம் பலவும் ஒரு புறம் நெருங்கிய இருள் சூழ்ந்த சக்கரவாள மலையையும் அகன்று, கருங்கிரி மேல் . . . . பரனை—கரிய கைலை மலை மீது அழகிய சிவந்தமுகில் போன்று தங்கும் மேலான சிவனை, வைதிகன் மகவை அருச்சுனனுக்காகத் தந்தது—பிள்ளைத்தமிழ்க் கொத்து 125-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க, "பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து. . . . . என்ற ஆழ்வார் வாக்கில் நால்வரே காணப்படுதல் ஓர்க. தந்து அவன் ஆசி பெறும் என்க. ஆசி—ஆசீர்வாதம்.

## சப்பாணிப் பருவம்

142 இடிக்கும் வெங் குரலொலிக் கண்டகூ டஞ்சிதற
இருசெவி முறக்காற்றினுக்
கெட்டுக் குலாசலமும் உட்கித் துகட்பட
இணைச்சிறு விழித்தழலினால்

பொடிக்கும் சுருமறிந் தெழுகடலும் வற்றிமேல்
புகையெழக் கடுநடைக்கும்
பொழிகதிர் மணிச்சுடிகை மிகுதலைப் பாந்தளும்
புவனமும் தலைநெளிப்ப

1344 1908/2 ₹41.00

வெடிக்கும் பகட்டுவால் விசையிலே மாசலமும்
வேர்பரிய உயரநீட்டும்
வெற்றிப் புழைக்கை யராவெனக் கதிர்மறைய
வெஞ்சினக் கஞ்சனேவும்
தடிக்கும் சினக்கரி விழப்புடைக் குங்கையால்
சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவருத நவநீத புரநாத
சப்பாணி கொட்டியருளே. (1)

(1) எட்டுக்குலாசலம்—எட்டு மலைகள். உட்கி—அஞ்சி, பாந்தள்—ஈண்டு எட்டு பாம்புகளை உணர்த்திற்று; விசையில் எம அசலமும் வேர் பரிய என்க. எமாசலம் எட்டு மலைகளிலொன்று மேல் நீட்டும் துதிக்கையை இராகுவோ என்று சூரியன் மறைந்தோடுகின்றுனும். கரி—கரத்தையுடையது. ஈண்டு குவலயாபீடம். அரா—ஈண்டு இராகு. ஈண்டு யானையினது வருணனை பெரிதும் நோக்கத்தக்கது.

143 பாரேந்து பாற்றலைப் பணிவேந்தின் மணிமுடி
பதைத்துவாய் நஞ்சுகொட்டப்
பார்க்கவன் விழியொன்றில் நீர்கொட்ட வொன்றில்
பசும்புலால் குருதிகொட்டக்
கூரேந்து படைநிருபர் நெஞ்சுபறை கொட்டவொளி
குன்றிமுகம் வெயர்வு கொட்டக்
குறுநடைக் கரடிக்கு மன்னனு யிரவலங்
கொண்டுசெய முரசுகொட்டச்
சீரேந்து வானவர் புயங்கொட்டி நறைகொட்டு
செய்யமலர் மாரி கொட்டச்
செங்கமல மேலவன் விளக்குதாண் மலரினில்
தெய்வநதி நறவுக்கொட்டத்
தாரேந்து மா வலிகை நீரேந்து கைகளால்
சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவருத நவநீத புரநாத
சப்பாணி கொட்டியருளே. (2)

(2) பணி வேந்தின் வாய் நஞ்சு கொட்டியது—பின்னர் திருவிக்கிரமாவதாரமாகி பூமியை அளக்கப்போவதால் பாரம் தாளாதது குறித்து. பார்க்கவன்—சுக்கிரன், இவன் மாவலி தாரை நீர் வார்க்கும் போது வண்டாகிக் கெண்டிகை வாயைத்தடுக்க வாமனனுகிய விஷ்ணு குச்சியால் குத்த சுக்கிரன் ஒரு கண் குருடாயிற்று. எனவே ஒரு கண்ணில் பசும்புலால் குருதியும் ஒரு கண்ணில் இவ்வாறு கொடுத்து விட்டானே என்று கண்ணீரும் கொட்டியது. கூரேந்து . . . . . . . கொட்ட—திருவிக்கிரமவதாரத்தைப் பார்த்ததும் இவ்வாறு ஆனார்கள், கரடிக்கு மன்னவன்—ஜாம்பவான் நறை—தேன் ; செங்கமல . . . . . . . கொட்ட—முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 118-ஆம் பாட்டு உரை காண்க. தெய்வநதி—கங்கை ;

144 மனஞ்சல மிகுந்தமற மன்னருடன் மென்றசை
மணங்கமழ வுண்டுமாங்கே
வழிபுலால் வெறிநீர் சுடச்சுடப் பருகியும்
மதமிக்க சிறுகூளிகள்

கனஞ்செறி பிணக்கிரி யிவர்ந்துவீழ்ந் துதிரவெங்
கலுழியாற் றிடைநீந்துவ
காலினெழு படமெனக் குடைகளைக் குடர்பிணை
கயிற்றினின் இசைத்து விடுவ

சினஞ்செறி மதக்கரி மருப்பிணை யெடுத்தருள்
சிரங்கள்பந் தெனவடிப்பத்
தேருருளை யச்சிலிட் டாட்டுபம் பரம்நிகர்
திரிப்பவிவ் வாறுவெம்போர்

தனஞ்செயன் வயப்புரவி கோல்கொளுங் கைகளால்
சப்பாணி கொட்டியருளே.
தவநீதி தவறுத நவநீத புரநாத
சப்பாணி கொட்டியருளே, (3)

(3) சலம்—தணியாக்கோபம், உடல் மென்தசை என்க. வெறி நீர்—மதநீர் ; கூளிகள்—பேய்கள் ; பேய்கள் இரத்த வெள்ளமாகிய ஆற்றில் நீந்துவதற்காகிக் காலுடன் கூடிய பாம்பின் படமோ எனக் கூறும வெண் கொற்றக் குடைகளைக் குடல் பிணைக்கும் தசை நாரினுல் கட்டிவிடுதலும், யானைத் தந்தங்களைப் பந்தடிக்கும் கட்டையாகவும் மனிதர் சிரங்களைப் பந்தாகவும் கொண்டு அடித்தலும் தேர்ச் சக்கரத்தை அச்சில் இட்டுச் சுழல்கின்ற பம்பரம் போன்று சுழலவைத்தலும் செய்தன பேய்கள். இத்தகைய போர்க்களத்தில் அருச்சுனனுக்குத் தேர்க் குதிரை நடத்தக் கோல் கொண்டகையினுல் சப்பாணி கொட்டுக் என முடிக்க.

மழைக்குங் கருங்கூந்தல் கைசெய்து மலர்வேய்ந்து
வாணுதல் திலதமெழுதி
மன்றலங் கமலமலர்க் குவளையுஞ் செய்த்தென
மைதீட்டி முழுவயிரமிட்

டிழைக்கும் பொலன்தோடு வள்ளையிற் சேர்த்தியோர்
இழைக்குமிட மறநெருங்கி
இளகிவிம் மிப்புளக ரும்பிப் பணைத்திறுகி
இணைமணிக் கலசமேயென்

றழைக்கும் பெயர்க்குரிய கொங்கையில் களபமிட்
டணிவரித் தொய்யிலெழுதி
யவிர்பிறைப் பிள்ளைபல வென்னநக ரேகைவைத்
தம்போருகப் பெணின்பந்

தழைக்கும் படிக்குவிளை யாடுமிரு கைகளால்
சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறுத நவநீத புரநாத
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) மழைக்கும் கருங் கூந்தல்—மழை நிறைந்திருக்கும் மேகம் போன்ற கூந்தல். கை செய்து—அலங்கரித்து ; கமல மலர் குவளை. உம்மைத் தொகை ; வள்ளை—வள்ளைப்பூ வொத்த காது ; உவமவாகு பெயர் ; இழை—ஆபரணம். புளகு—மகிழ்ச்சி ; இணை மணிக் கலசம்—இரண்டு மாணிக்கக்குடங்கள் ; தொய்யில் மகளிர் தனங்களில் சந்தனக் குழம்பால் எழுதும் கோலம். நகரேகை—கலவிக்காலத்தில் மகளிர் அவயவத்தில் ஆடவர் நகத்தினுல் பதிக்கும்

அர்த்த சந்திரன் மண்டலன், புலி நகம் மயூரபதம். முயலடி. உற்பலம் என்று அறுவகை அடையாளங்கள். ஈண்டு அர்த்த சந்திரன் அடையாளத்தை வைத்தார். அம்போருகப் பெண் இன்பம் தழைக்கும்படிக்கு என்க. அம்போருகம் பெண்—திருமகள் ;

146 விளிக்குங் கடுங்குரலின் உரும்ஏறு தீய்ந்துக
வெறித்துவிழி யழல்கொளுந்த
மென்மயிர் சிலிர்ப்பமுன் கால்நிலங் குழிபட
மிதித்துத் துகட்குவை யெழத்

துளிக்குங் கமஞ்சூற் கருங்கொண்டல் தன்னிறந்
தோற்கக் கறுத்தபகடு
துரக்குங் கொடுங்கூற்று வருபொழுது நெஞ்சந்
துணுக்கிட்டு மதிமயங்கி

யொளிக்கும் புலன்கடம் நிலைதளர்ந் தாருயிரும்
ஊசலா டுறு மளவின்முன்
ஊழ்வினை நலத்தினின் தொல் பெயரின் ஒன்றுவந்
துதவவத் துயரம் நீங்கித்

தளிர்க்குந் தொழும்பருக் கஞ்சல்புரி கைகளால்
சப்பாணி கொட்டியருளே
தவநீதி தவறுத நவநீத புரநாத
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) உரும் ஏறு—ஆணிடி ; கொளுந்த—பற்ற கால்நிலம் குழிபட—கால்கள் நடப்பதனால் அவைகள் நிலத்தில் குழிகளை ஏற்படுத்த ; கமஞ்சூல்—நிறைந்த கருப்பம் ; கறுத்தபகடு—கருநிறமுற்ற எருமைக்கடா ; புலன்கள் தம் நிலை தளர்ந்து ஒளிக்கும் என்க ; நலத்தில் நின் என்க. தொழும்பர்—அடியார் ; ஈண்டு பாகவதத்திலுள்ள அஜாமீளன் கதையை ஞாபகப் படுத்தல் நன்று.

### வேறு

147 நாறு நடப்புகு வாளோர் உழத்தி
தனத்தா சைக்காற
நாறு முடிச்சென வாரிச மொக்குளை
நட்பாகிப் போட

ஏற விழித்தவள் ஓர்களை கட்ட
தெனக்கா விப்பூவை
ஈடில் வரைப்புய மீதெறி தற்கவன்
எய்தா னைப்போல

மாறி வரப்பினில் வீழ எடுக்கும்
வரத்தா னைப்போல
மார்பி லணைத்தித ழூறல் சுவைக்கும்
வளத்தான் மிக்கோர்கள்

கூறு தமிழ்க்கிசை வேணு வனத்தவ
　கொட்டாய் சப்பாணி
கோக நகத்தவள் மோக மிகுத்தவ
　கொட்டாய் சப்பாணி. (6)

(6) வாளோர் வாளைக் கையிலேந்தும் வீரர்கள். நாற்று நடுதற்குவந்த வானேர்கள் உழத்தியர்களின் தனத்தைக் கண்டு அவ்வாசை நிறைவேற நாறுமுடிச்சுபோடுவதுபோல தாமரை மொட்டுக்களைத்தனத்தின் மீது போட புருவம் நெற்றியில் ஏறக் கோபித்து அவள் களை நீக்கியது என்னும்படி கூறும் ஓர் நீலோற்பலமலரை வரப்பில் போடாது அவனது ஈடில்லாத மலை போன்ற புயத்தின் மீதெறிய அவனம்பு எய்யப்பட்டவனைப் போன்று தடுமாறி வரப்பினின் வீழ்ந்துவிட அவ்வுழத்தியர் "ஐயோ ! விழுந்து மூர்ச்சித்துக்கிடக்கிருரே" என்று எடுக்கும் போது வரத்திறல் எழுந்திருப்பவனை யொத்து அவளை மார்பில் தனமழுந்த அணைத்து அவளது அதரத்தையும் சுவைத்து அமிர்தம் பருகும் அத்தகை வளமிக்கோர்கள் வாழும் வெண்ணெய் நல்லூர் என்க. களை எடுக்குங்கால், பயிர் நெருங்கியில்லாத இடங்களில் நாற்றுக் களை நடுவதுண்டு, எனவே வயல்களில் தாமரையும் குவளைகளும் இருந்தன என்பது பெறப் படும்.

148 வேத வரைக்குவ டேறி யிருக்கும்
　விளக்கே பொற்பூவின்
வேதன் மதிச்சடை யோன்முதல் வர்க்கொரு
　வித்தே தக்கோர்கள்

மூதறி விற்கொடு நாடி யிருக்கும்
　முதற்சோ தித்தேவே
மூரல் முகத்திடை மாதர் முலைக்கணி
　முத்தே முற்ருத

வாத மயக்கினர் போத மதித்திடு
　மத்தே யெப்போதும்
மாயை தவிர்த்தநல் லோரிதை யத்தில்
　வரக்கா மிப்போனே

கோதில் குணத்தவ வேணு வனத்திறை
　கொட்டாய் சப்பாணி
கோக நகத்தவள் மோக மிகுத்தவ
　கொட்டாய் சப்பாணி. (7)

(7) வரைக்குவடு—மலைச்சிகரம் ; முதல்வர்க்கு—முதலாகத் தொடங்கின தேவர்கட்கு ; கொடு—கொண்டு ; மூரல்—புன்சிரிப்பு ; போதமதித்திடு—நிரம்பக் கடைந்திடுகின்ற ; காமிப் போன்—ஆசைப்படுபவன்,

## வேறு

149 தேசலை வுற்றனை போதியெனச்
　சீறும் மைக்காவி
தேனிதழ் துய்த்திரி வூடு
　செருக்கு மிசைக்கீதம்

வாசலின் நிற்பது நாடி
மலர்க்க தவத்தாளை
மாசறு கற்பினர் போல
நெகிழ்த்து மதுப்பூவின்

வீசலை யிற்குளிர் வாடை
விரைத்தட மிக்காக
வேணு வனத்தருள் சேரும்
விருப்ப மிகுத்தோனே

கோசலை பெற்ற குணகர
கொட்டுக சப்பாணி
கோக நகப்பெண் மனோகர
கொட்டுக சப்பாணி. (8)

(8) கரிய காவிமலர் வண்டுகளைக்கண்டு பொருந்திறாய் எனவே அங்குச் செல் எனக் கோபிக்கும், இசைக் கீதம் பாடி இதம் துய்க்கத்திரிந்து மயங்கும், வாசலில் தன்னை நாடி மலருமாறு (வண்டுகள்) நிற்பதைக் கண்டு தவத்தினையுடைய குற்றமற்ற கற்பினையுடைய தலைவியர்போல இதழ்களை நெகிழ்த்து உள்ளிருக்கும் இன்பமாகிய தேனைத் தரும் பூவை யுடையதும் குளிர்ந்த வாடைக்காற்று வீசுவதால் வாசனை மிக்கதுமான தடங்கள் அதிகமான வெண்ணெய்நல்லூர் என்க. காவிமலர் தலைவியாகவும், வண்டு தலைவனாகவும், கூறப் பட்டிருப்பதும் காவி மலர் ஊடல் கொண்டு கதவுகளை மூடலும், ஊடலை வண்டு தீர்க்கத் தவம் கிடத்தலும் பின்னர் குவளை மலர்ந்து (மகிழ்ந்து) இன்பம் தாலும் நோக்கி யுணரற் பாலன்.

தேனுக னற்றுயர் வானடை
யச்செய் திடத்தோனே
தேவகி பெற்ற அசோதை
வளர்த்த திருப்பாலா

வானதி புத்திரன் வாய்மை
மேற்றகு வயப்போரின்
வானர சர்க்கெதி ராழி
யெடுத்த மறத்தோனே

மீனு வரிக்குளி ராவணன்
நட்பு விடுத்தேகும்
வீடண னுக்கருள் வேணு
வனத்து விருப்போனே

கூனுடை விற்கை யிராகவ
கொட்டுக சப்பாணி
கோக நகப்பெண் மனோகர
கொட்டுக சப்பாணி. (9)

(9) தேனுகன் அற்று —தேனுகா சூரன் உயிர் அற்று ; உயர் வானடையச் செய்திடத் தோனே என்க ; இவன் கம்சனேவலால் கழுதையுருக்கொண்டு பலராமருடன் போர் செய்ய வந்தனன். இவனைப் பலராமர் காலைப் பிடித்து எறிய மாண்டான். வான்நதி - வானிலுள்ள

உயர்ந்த கங்காநதி அவள் புத்திரன் ஈண்டு சந்தனுவிடம் பிறந்த வீடுமன் (பீஷ்மன்) வாய்மை மேல் தகு வயப்போரின் —உண்மை நெறி கடவாத வீரமிக்க சண்டை; வான் அரசர் - சிறந்த பல அரசர்கள். ஆழி எடுத்த மறத்தோன்—கண்ணன் தான் தூரியனுக்கு ஆயுதம் தொடுவதில்லையென வாக்களித்ததைப் பொய்ப்பிக்க பீஷ்மர் அருச்சுனனோடு கடுமையாகச் சண்டை செய்ய அவன் எவ்வாயுதத்தையும் தொட முடியவில்லை. அந்நிலையில் கண்ணன் அருச்சுனனிடம் யாது கூறியும் பயனில்லாததால் தானே தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளச் சக்கரத்தைத் தாங்கினார். எனவே " ஆழியெடுத்த மறத்தோன் " என்றார். மீன் உவரிக்குள்—மீன் உள்ள கடல் சூழ்ந்த இலங்கைக்குள் இருந்த; கூன் உடைவில்—வளைவு பொருந்திய வில்.

151 சீதள மிக்க துழாயசை
யச்செறி பொற்றாமம்
தேசுள கவுத்துவ மார்
வடத்திரள் கொத்தாடக்

காதள விட்டழ கான
கடைக்க ணருட்பார்வை
காணு மவர்க்கமு தாசன
மோதக் களிப்பேறி

மாதளம் வித்தென வாண்முறு
வற்கு மயக்காகும்
மாதர் விருப்பொடு சூழ
மறுத்திடு மப்பாரி

கோதம னுக்கருள் மாயவ
கொட்டுக சப்பாணி
கோக நகப்பெண் மனோகர
கொட்டுக சப்பாணி. (10)

(10) கவுத்துவம்—கௌஸ்துப ரத்தினம்; அமுதாசனம்—பால் நிறைந்திருக்கும் முலை; மாதளம்விதை போன்ற பற்கள் என்க. மாதர்—அழகு; பாரி—மனைவி; கோதமன் பாரிக்கு அருள் என்க. கோதமன் பாரி - கௌதமன் மனைவியான அகலிகை; துழாய்த் தாமமும் கௌஸ்துபம், ஆரவடமும் ஆட பார்வையினையும், மோதக் களிப்பேறும் அமுதாசனத்தையும், வாண்முறுவலையும் உடையவளாதலால் அழகால் மயக்கமடையும் விருப்போடு பலரும் சூழ அவர்கள் விருப்பத்தை மறுத்திடுகின்ற கௌதமன் மனைவியாகிய அகலிகை (இந்திரன் மாய ரூபத்தில் வந்து கெடுக்க அதனால் கௌதமர் சாபம் கொடுத்துக் கல்லாக) அவளுக்கு அருள்கின்ற மாயவ என்க. அல்லது மேற்கூறிய போன்றவாறுள்ள மாதர்கள் அணையும் ஆசையால் உன்னைச் சூழவும் மறுத்திடும் மாயவனே எனவும் கோதமன் பாரிக்கு அருள்கின்ற அம்மாயவனே என்றும் பொருள் கொள்ளுமாம். மாதர்—அழகினையுடைய பெண்களுக்காயிற்று.

## முத்தப் பருவம்

152 முருகு விரி பங்கய முறுக்குடைந் துதிர்முத்த
[illegible]
மூரிவெண் சங்குளைந் தீன்றமுத் துன்னுழவர்
முன்றில் புறத்து மல்கும்

குருகு செறி பண்ணையில் செந்நெல்முத் தங்களைஞர்
கூட்டுறு களத்தினிறையும்
குறைவில்பைங் கழைமுத்து ஞாலைவாய்க் காணலாம்
கொல்கரி மருப்பின் முத்தம்

பெருகுமுன் னந்தியங் கிரியெலாங் குவிதரும்
பெட்புநிறை வெதிரின்முத்தம்
பெருமைசெறி வேணுவன மாதலால் எங்கணும்
பிறழ்தலால் இருமை யென்றே

பருகுமின் அமுதனைய மழலைதரு நின்திருப்
பவளவாய் முத்தமருளே
பண்ணவர் தினந்துதிசெய் வெண்ணெய்வளர் செங்கண்முகில்
பவளவாய் முத்தமருளே. (1)

(1) முருகு—வாசனை ; குருகு—நாரை ; களைஞர்—வேலைக்காரர் ; உனது வாவி தோறும் தாமரை மலர்ந்து உதிர்ந்த முத்துக்கள் நிறைந்திருக்கின்றன. உன் நாட்டிலுள்ள உழவர்கள் முன்றிலின் புறத்தில் சங்கு ஈன்ற முத்துக்கள் நிரம்ப இருக்கின்றன. வேலைக்காரர் சேர்க்கும் நெல் களத்திலே செந்நெல்லினின்று விளையும் முத்துக்கள் நிறைந்திருக்கும். உனது ஆலையினிடம் கரும்பின் முத்துக்களைக் காணலாம். உன் அழகிய நந்தி மலையில் (இடபமலை—திருமாலிருஞ் சோலைமலை) யானைத் தந்தத்தினின்றுண்டாகும் முத்துக்கள் குவிந்து கிடக்கும். இத்தலம் வேணுவனம் (வேணு - மூங்கில்) என்று கூறப்படுவதால் மூங்கிலினின்று தோன்றிய முத்தம் எங்கணும் செறிந்து கிடக்கின்றன. எனவே இருமை (இம்மை, மறுமை)க்கும் பயனுகும் என்று பருகும் இனிய அமுதத்தையொத்த மழலைச் சொல் கூறும் வாயினின்று முத்தம் தருவாயாக என்கிறுர். முத்தம் முத்து என்பன ஒற்றுமை கருதிக் கூறப்படுவதாதலால் இங்ஙன் கூறுவது கவி மரபு. முத்துத் தோன்றும் இடங்களை முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 580 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. பண்ணவர்—தேவர்.

153 அளிதை மலர்த்தவள முகையனைய சிறுநகை
அரும்பியிள முறுவல் நிலவால்
அன்புச் சகோரக் குழாங்குள் விருந்தூட்டி
அமுதெனத் திவலைசிந்திக்

களிதரு மிளங்குதலை மதுவொழுகு செய்யபங்
கயமல ரெனச்சிவந்து
கன்னியர்கள் கரதலங் கொடியவிடம் நீங்கவுயிர்
காட்டுகட வுண்மணியுமாய்த்

தெளிதர மதிக்கிலகி லாண்டகோ டிகளுமுட்
சேரினும் சிறிது நிறையாத்
தெளிவுதரு முத்தங் கொளத்திரி பவர்க்குனிதழ்
சேர்முத்த மன்றியுண்டோ

பளிதவிரை கமழவெங் கழையிசை வடித்தநின்
பவளவாய் முத்தமருளே
பண்ணவர் தினந்துதிசெய் வெண்ணெய்வளர் செங்கண்முகில்
பவளவாய் முத்தமருளே. (2)

(2) அளிதை தவள மலர்—குளிர்ச்சி பொருந்திய முல்லை மலர்; வெண்மை பண்பாகு பெயராய் முல்லை மலர் மேல் நின்றது. சகோரம்—நிலவினை யுண்ணும் ஓர் வகைப் பறவை; குழாத்திற்கு உளவிருந்தூட்டி என்றபாலது குழாங்குஉளவிருந்தூட்டிஎன நின்றது. களிதரும்; இளங்குதலை அமுதெனத்திவலை சிந்தி எனக்கூட்டுக. கடவுண்மணியைக் காட்டின் விடம்நீங்கி உயிர் வரும்போலும். கடவுண்மணி - சிந்தாமணிபோன்றது. பனிதம்விரைகமழ—கருப்பூர வாசனை வீச; கழை—மூங்கில். ஈண்டு ஆகு பெயராய்அதனுல்செய்த புள்ளாங்குழலைக்காட்டியது; முல்லைஅரும்பு போன்ற பற்களைக்காட்டி அதினின்று தோன்றிய நிலவால்ஆசையோடு வரும் சகோரப்பறவைக்கூட்டங்கட்கு மனத்திற்கேற்ற விருந்து செய்து (உண்பித்து) களிப்பு மிகும் மழலைச் சொற்களாகிய அமுதம் போன்றவைகளைச் சிந்தி தேனொழுகும் சிவந்த தாமரை மலரைப்போன்ற கைகள் சிவந்துள்ள இளம் பருவமுடைய பெண்களது கைகளை ஆண்களின் காதலாகிய கொடியவிடம் நீங்கி உயிரை வரச் செய்தற்கு காட்டப்படுகின்ற தெய்வமணியாக உறுதியாக மதித்தால் (சொன்னால்) அகிலாண்ட கோடிகளும் ஒன்றுய்ச் சேர்ந்தாலும் கொஞ் சமும் சமமாகாதென்று தேற்றம் தருகின்ற முத்தத்தை (முத்து) தேடித்திரிபவர் களாகிய அப்பெண்கட்கு உன்னிதழ் சேர்ந்த முத்தமல்லாமல் உயிர் நிற்குமோ எனவே புள்ளாங்குழலூதி இசை வடித்த உன் வாயினின்று முத்தம் கொடுப்பாய் என்கிறார். மதிக்கில் அகிலாண்ட கோடி, என்க.

154 புனிற்றிளங் கன்றினைப் பிணிநெகிழ்த் தனனெனப்
புழுதியின் அணைந்தனனெனப்
பொழிமுடை நறைச் செறும் பாலடுங் குழிசியைப்
பொடிபட உதைத்தனனெனத்
தனித்திளங் குதலையின் ஞர்களைக் கொடுசென்று
தகவில வியற்றின னெனத்
தளர்வுடன் அடிக்கடி முறைப்படும் பொதுவியர்
தமக்குவப் பாதல் வேண்டி
அனித்திய வுடற்பொறை தவிர்ப்பவர் நினைக்குமுன்
அஞ்சனத் திருமேனிமீ
தன்னைகைத் தாம்பினில் அடிப்பதற் பொருமிமெல்
அலரிதழ் துடிப்பவுண்கண்
பனித்திட விரைந்தவள் அணைப்பதின் நகைக்குநின்
பவளவாய் முத்தமருளே
பண்ணவர் தினந்துதிசெய் வெண்ணெய்வளர் செங்கண்முகில்
பவளவாய் முத்தமருளே. (3)

(3) புனிற்று இளம்—மீமிசைச் சொல்; முடைநறை—முடை நாற்றம் வீசும்; குழிசி—பானை; தகவில இயற்றுதல்—சேலைகளைக் கொண்டு சென்று மரத்தின் மீது வைத்துக் கோபியர்கள் நிர்வாணத்துடன் வணங்கக் கொடுத்தது முதலியன. பொதுவியர்—இடைச்சியர் முல்லை, மருதம், குறிஞ்சிக்கு இடைப்பட்ட நிலமாதலால் பொது என்று பெயர் பெற்று அங்கு வாழ்பவர்க்கு பொதுவர், இடையர், பொதுவியர், இடைச்சியர் எனப் பெயர் நின்றது. நினைக்கும் முன் அஞ்சனத்திருமேனி—நினைக்கு முன் எதிரில் வருகின்ற கரிய உடல்; தாம்பு—கயிறு. அடிப்ப அதன் பொருமி என்க. அகரம் தொகுத்தல்; உண்கண் - மையுண்ட கண்; விரைந்து அவள் அணைப்பதின்—விரைந்து அசோதை அணைப்பதனால்.

155 கடல்முத்தம் உவர்நாறும் மழைமுத்தம் மின்னோடு
கலந்தாலும் இடிபட்டதாம்
கன்னல்முத் தம்மதனன் வில்லங்க மேல்வரும்
கமலமலர் ஈனும்முத்தம்

மடலுற்ற மதுநிறம் ஞெண்டின்முத் தம்குழியும்
வளைதரும் பங்கமடையும்
மாதர்கள் முத்தமோ போகித் திருக்கும் வெள்
வளைமுத்தம் ஈனப்படும்

அடலுற்ற வெங்கட் களிற்றின்வெண் கோட்டுமுத்
தார்க்குமுயி ரோடுகிடையா
அம்புலியின் முத்தமோ சடிலநெடி யால்வருவ
தாதலால் இவை விரும்பேம்

படலைப் பசுந்துளவு கமழ்மார்ப நின்திருப்
பவளவாய் முத்தமருளே
பண்ணவர் தினந்துதிசெய் வெண்ணெய்வளர் செங்கண்முகில்
பவளவாய் முத்தமருளே. (4)

(4) கடலினின்று தோன்றிய முத்தம் உவர் நாற்றம் வீசும். மேகம் ஈன்ற முத்தமோ மின்னலோடு கலந்து பிரகாசித்தாலும் இடி பட்டதாகும். (நசுங்கியது. இடியோடு கூடியது) (கரும்பினின்று தோன்றிய முத்தம் மன்மதன் வில்லாகிய உறுப்பாகும்.) (வில்லங்கம்—குற்றம் நீர்மேல் வரும் தாமரை மலர் ஈன்ற முத்தம் இதழ் பொருந்தியிருக்கும்) (மடல் எறுதற்கு உற்றதாகும்; மடல் எறுதல் அகப்பொருளில் காண்). தேன் நிறம் போன்ற நண்டினிடம் தோன்றிய முத்து குழிந்திருக்கும்; வளையும், சேற்றைப் பொருந்தியிருக்கும் பெண்களின் கழுத்தினின்று தோன்றிய முத்தமோ போகித்திருக்கும் (வினைப்பயனை நுகரச்செய்யும்). சங்கீன்ற முத்தமோதாழ்வுடையும் யானைத்தந்தத்தினின்று பெறும்முத்தம், அவ்வியானையைக் கொன்றுலன்றிக் கிடைக்காது. சந்திரனின்று தோன்றும் முத்தமே சடையின் துர் நாற்றத்தினின்று வருவது (சந்திரன் சிவபெருமான் சடையில் தங்கியிருந்தலால் இவ்வாறு கூறினார்). எனவே உனது திரு முத்தம் தருக என்க. படலைத்துளவு—துளவுப்பச்சிலையோடு மலர்கள் விரவித் தொடுத்தமாலை; களம்—கழுத்து; சடிலம்—சடை; நெடி—துர்நாற்றம்.

## வேறு

156 இளைக்கும் மருங்குல் குரும்பைமுலை
இடைமெல் லியலார் புடைநெருங்கு
யமுனைப் புளினத் தடங்குவட்டில்
இளவெண் நிலவு கதிர்கொழிப்பத்

துளைக்குங் கழையின் எழும் அமுதம்
சுரக்கும் இசைக்கு மனமுருகித்
துயிலும் கலையும் கலைந்தறிவு
துளங்கி யனங்கப் பெரும்பதகன்

வளைக்கும் கரும்புச் சிலைதுரந்த
மலர்வெம் பகழிக் கொழுங்கனலை
மறிக்கும் படிக்குன் இதழ்துளிக்கும்
மலர்க்கை முகிழ்ப்பக் குறுமுறுவல்

முளைக்கும் பவளச் செழுங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முகில்தோய் மதிள்சூழ் வெண்ணெய் நகர்
முதல்வன் தருக முத்தமே.

(5) மருங்குலினையும், புடைநெருங்கு குரும்பை முலையினையுமுடைய மெல்லியலார் என்க புளினத் தடங்குவடு—மணற்றிட்டாகிய சிகரம்; துளைக்குழல்—துளைபொருந்திய புள்ளாங் குழல்; கலை—மேகலை; கலைந்து—துயிலுக்கு நீங்கி என்றும் மேகலைக்குக் குலைந்து என்றும் பொருள் கொள்க. அனங்கப் பெரும்பதகன்—மன்மதனுகிய பாதகன். மறிக்கும் படி—தடுக்கும்படி; இது கண்ணன் இரவில் பூரணசந்திரன் காயும்போது யமுனை நதி தீரத்தில் குழல் வாசிக்கக் கேட்ட கோபியரெல்லாம் தூக்கம் கலைந்து மேகலையும் குலைந்து ஓடி ராசக்கிரீடை செய்ததைக் காட்டுகிறது.

157 பழுக்குங் குலைவெஞ் சினத்தவுணர்
பகட்டுச் சிரங்கள் விதிரெறியப்
பணைக்கைக் களிறு பிளிறிவிழப்
பரவிப் புரவித் திரள்புரள

இழக்குஞ் சினக்குன் றனவிரதம்
இசைப்புக் கலைந்தச் சொடிந்துருள
எதிர்க்குந் திறத்துப் படைவயவர்
இடிக்கும் உருமுக் கெதிரறத்துரகம்

உழக்கும் படிக்குக் குடற்பிதுங்கி
உதிரஞ் சொரிந்துளுயிருலைப்ப
ஒலிக்கும் பரவைப் புனல்சுவற
உரகஞ் சலிப்பத் தவள சங்கம்

முழக்கும் பவளச் செழுங் கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முகில்தோய் மதிள்சூழ் வெண்ணெய் நகர்
முதல்வன் தருக முத்தமே. (6)

(6) விதிரெறிய—நடுங்க; குன்றன இரதம்—மலையை யொத்த தேர்கள்; இசைப்புக் கலைந்து அச்சு ஒடிந்து உருள என்க. உருமு............உலைப்ப இடிக்குப் பாம்புகள் அஞ்சுதலியல்பு. ஈண்டுத் திருமால் வாயில் சங்கம் வைத்து முழக்கியதனுலுண்டான விசேடத்தைக்கூறினார்.

### வேறு

158 வண்டு குடைந்த பசுந்துள வத்தொடை
மன்றல்செய் நந்தனமே
மழலைப் பனிமொழி தளினச் சிறுகிளி
வளர்வுறு பஞ்சரமே

தொண்டு புரிந்திரு செந்தளிர் மெல்லடி
தொழுமவர் செல்கதியே
சூர்முக மலர்வித் தவுணக் களையிருள்
தொலைவுசெய் செங்கதிரே

ஞெண்டு கிளைத்திடு குழியில் வழியில்
நிரைகுவ ளைக்கழியில்
நீலக் கவரி முலைபொழி தீம்பால்
நிலைபெறு கடையர்சிறுர்

மொண்டு பயிர்க்கிடு வெண்ணெய் நகர்க்கிறை
முத்த மளித்தருளே
மும்மத யானைக் கருள்புரி குளிர்முகில்
முத்த மளித்தருளே. (7)

(7) குடைந்த - கிண்டிய ; நந்தனம்—நந்தவனம் ; நளினச் சிறுகிளி—தாமரை மலரில் உள்ள இலக்குமி, பஞ்சரம்—கூடு, சூர்முகம் அலர்வித்த அவுணர்—அச்சம் பொருந்திய முகம் கூடிய அசுரர்—அலர்வித்த அவுணர்—அகரம் தொகுத்தல். குவளைக் கழி (நீர்நிலை) என்க : நீலக்கவரி—கருநிற எருமை, மூன்றுவது அடியால் அந் நகர் வளம் காண்க.

159 பூவையின் மதுமலர் பொருவுநின் உருவும்
புண்ட ரிகக்கண்ணும்
புதியவெண் மூரலும் ஒருநெறி காணில்
பொறிவெம் பகையெறியுந்

தீவையின் முனிவரும் அனலுறு மெழுகின்
திரிகுவர் மனமென்றூர்
சிறுநுதல் வரிவிழி வெதிர்புரை மென்றோள்
தெரிவையர் உய்வாரோ

பாவைதெள் ளமுதின் பாற்கடல் நடுவில்
பதும மலர்த்த விசில்
பைம்பொன் சுடர்விடு பெண்ணமு தந்திண்
பருவரை மார்புறலான்

மூவரின் முதன்மை படைத்துள புங்கவ
முத்த மளித்தருளே
மும்மத யானைக் கருள்புரி குளிர்முகில்
முத்த மளித்தருளே. (8)

(8) பூவை—காயாம்பூவை ; தீவயின் எனற்பாலது தீவையின் என எதுகை நோக்கி நின்றது. இடைப்போலியுமாம் ; மெழுகின் - இன் உவமப்பொருவு ; மும்மதயானை—கசேந்திரன்.

## வேறு

160 அதிரப் பொருசின வாளவு ணப்படை
அவிர்திசை யெட்டும் பரவுநாள்
அறுதிக் கடையுள் வரனென மொய்த்திட
அழல்வட வைசெந் தழலென

எதிரச் சிலருடல் நீறு படச்சிலர்
இருதுணி உற்றங் குருள்வோரோ
டிரதத் தொகைவிழ வாசி நடத்தழல்
எழுவிழி மைக்குன் றனையமா

உதிரப் புணரியின் ஊடுழ லக்குறை
உடல் நிரை நிர்த்தம் புரியவார்
உயிரைக் கொடுதிரி காலன் இளைப்பற
உலகி னிடுக்கண் தவிரவான்

முதிரப் பொருகதிர் ஆழி எடுத்தருள்
முதல்வன் முத்தம் தருகவே
முதுமைத் திருந்வ நீத புரத்துறை
முதல்வன் முத்தந் தருகவே. (9)

(9) அறுதிக் கடையுள அரன் — யுகாந்த காலருத்திரன். இவன் அப்போது மிகவும் கோபித்து உயிர்களை அழிப்பான்; " அறுதி எனு " இதுவரை திருமாலுக்கடைமொழி; இருதுணி உற்று அவை உருள (அதனால்) ஓடுகின்ற இரதத் தொகை வீழ்ந்தன என்க. வாசி — குதிரை; மைக்குன்று அனையமா — கரிய மலையை யொத்த யானை; நிர்த்தம்புரிய—நடனம் செய்ய; உலகின் இடுக்கண்—உலகு என்பது இங்குப்பூமி தேவிக்காயிற்று. ஆழி — சக்கரம்.

161 பனியைத் தெறுகதிர் போலுமுன் மெய்ப்பெயர்
பரவி வழுத்தும் பெருமையோர்
பவம்விட் டுனதடி யாரோ டிருப்பது
பழமறை செப்பும் சரதமே

கனியைக் கவர்கிலர் காய்நுக ரத்திரி
கசடர் மயக்குண் டுழலுவார்
கமலப் பதம்நினை யாரவ ருக்குமோர்
கதியும் வரக்கண் டிடுவமோ

குனியைச் சிலைகொடு வாளி விடுத்தெதிர்
குறுகு குலைக்கண் டகரெலாங்
குறைவுற் றிடநிறை வேள்வியி னிற்பலி
கொளுமம ரர்க்குங் களிசெயா

முனியைப் பெருமை கொள் கோசிக னைப்பணி
முதல்வன் முத்தந் தருகவே
முதுமைத் திருநவ நீத புரத்துறை
முகில்வணன் முத்தந் தருகவே. (10)

(10) தெறு - அழிக்கும்; கனியைக் திரி - " இனியவுளவாக இன்னாத— கூறல் கனியிருப்பக்காய் கவர்ந்தற்று. என்ற குறளை ஓர்க. குனிய என்பது எதுகை நோக்கி குனியை என நின்றது; பலிகொளும் அமரர் — அவிர்ப்பாகம் பெறும் தேவர்; கோசிகன் விசுவாமித்திரன்.

## வாரானைப் பருவம்

162 விளரிச் சுரும்பர் தளையவிழ்க்கு
மென்றேட் டம்போ ருகத்தடத்தில்
விழிக்குஞ் சுழல்கட் சினவிடங்கர்
விடவாய்த் தளைப்புக் குள்மயங்கித்

தளரித் துயரந் தவிர்க்கவென்று
 தடக்கை நீட்டி மதக்களிறு
தனியே பொதுவே மூலமெனச்
 சடைப் புங் கவனும் பங்கயனும்

களரிக் கடவுள் குழாங்களுமே
 கைவிட் டிருப்பத் திகிரியைமுன்
கடுகத் துரந்து புள்ளூர்ந்து
 கருங்கார் மின்னோ டியைவதொப்ப

முளரித் திருவோ டெதிர்ந்தளித்த
 முதலே வருக வருகவே
மும்மைத் தமிழ்சேர் வெண்ணெய் நல்லூர்
 முகுந்தன் வருக வருகவே. (1)

(1) விளரி — எழிசையுள்ஒன்றுன 'ரீ' என்பது ; இடங்கர் — முதலை ; மதக்களிறு கஜேந்திரன். இது முதலையிடம் அகப்பட்டு ஆதிமூலமே எனச் சிவன், பிரமன் முதலியவர்கல் சும்மாயிருக்க நீ (சக்கரத்தை விரைந்து) ஓடிவந்து (விட்டு) காத்தாயாதலான் நீயே முதல்வன் என்கிறுர் கவி. களரி—கூட்டம் ; கடவுள் குழாம் — தேவக் கூட்டம்.

163 சுருதித் தருவிற் கிளந்தளிராந்
 துணைத்தாள் மலரில் சிலம்பலம்பத்
துணைக்கிண் கிணியும் அரைஞாணும்
 சுடர்பொற் கலையு மருங்கின் மின்னப்

பருதிக் கடவுள் கண்முகிழ்க்கும்
 பதும ராகங் கதிர்கொழிப்பப்
பச்சைப் பசிய துழாய் வனத்தில்
 பதுமைப் பூவை விளையாட

நிருதிக் கமையா மயல்பூட்டி
 நிமிரத் தடந்தோள் வலையமொளி
நிலவ மணிச்செஞ் சுடர்மவுலி
 நீலக் கிரிமேல் கதிர்கடுப்ப

வருதிக் கனைத்தும் புகழவட
 மலைமேல் நின்றுன் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய் நல்லூர்
 வாழ்வே வருக வருகவே. (2)

(2) சுருதித் தருவிற்கு இளந்தளிராம் — வேதமாகிய மரத்திற்கு இளைய தளிர் போன்ற ; சுடர் பொற்கலையின் பிரகாசத்தைக் கண்டு சூரியன் கண் மூடினுன். பதுமராகம் — செந்தாமரை மலர்ப்போலச் செந்நிறமுடைய ஒருவகை இரத்தினம். பதுமைப் பூவை — இலக்குமி நிரு(நரு) — மனிதர் ; திக்கு அமைய, மயல்பூட்டி என்க. வடமலை — திருப்பதி.

164 பண்ணைத் தரங்கஞ் சுருட்டுகரும்
 பரவைப் புனன்மொண் டெதிர்ந்துயர்ந்த
பகட்டுக் குவட்டுப் பொழியுமுகில்
 படியும் மதத்துக் களிற்றினமெண்

றெண்ணித் தினைப்பைம் புனங்காக்கும்
இருண்மெய்க் குறவர் சிறார்கவண்விட்
டெறியத் துளைமுள் ளெயிற்ற ரவம்
எழுவெண் பசியால் அங்காப்ப

அண்ணல் சினமா மடங்கலதிர்ந்
தழன்று முழைவிட் டெழச் சொரியும்
அருவி மணிபோன் முத்தலைக்கும்
அணியார் நந்தி மலைக்கரசே

வண்ணக் களப முலையலர் மென்
மங்கைக் கதிபன் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய் நகர்
வாழ்வே வருக வருகவே. (3)

(3) பண்ணைத் தரங்கம் — தொகுதியான அலை ; பகட்டுக்குவடு—உயர்ந்த சிகரங்களையுடைய மலை ; நந்திமலை — திருமாலிருஞ்சோலை மலை. தினைப்புனம் காக்கும் கரிய உடலையுடைய குறவர் சிறுவர் மேகத்தை யானைக் கூட்டமென்றெண்ணிக் கவணுல்கல்லை விட்டெறியவே பாம்புகள் ஏதோ இரை வருகிறதென வாயைத் திறக்கவும் சிங்கங்கள் குகையை விட்டு ஓடவும் நிகழ்ந்து மழையும் பொழிந்தது.

165 கள்ளக் கருங்கண் கடைசியர்தம்
கணவர்க் கருத்தி மிகுகறவைக்
கலசத் திடைவைத் தயல் வயலிற்
கமலங் குவளைக் களைகளையப்

பிள்ளைக் குருகுக் கிரைதேடிப்
பெயருஞ் சிறைமென் மடக்குருகு
பெருகப் பருகி மதிகலங்கிப்
பேதை யவர்தம் விழிநிழலை

மெள்ளக் கயலென் றணைந்துகொத்தி
வெறித்தே திரியக் கண்டுமென்மேல்
வீளைக்குந் தவளக் குறுமுறுவல்
விரிவெண்ணிலவுக் கதிர் கொழிக்கும்

வள்ளத் திரளார் முலைப்பாடி
வளநா டுடையான் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய் நகர்
வாழ்வே வருக வருகவே. (4)

(4) வள்ளத்திரளார் — வள்ளம்போன்ற தனங்களையுடைய பெண்கள் — மருத நிலப்பெண்கள் தம் கணவர்க்கு மதுவை உண்பித்து மிகுந்ததைக் குடத்திலே வைத்து களையெடுக்க அன்னமானது தன் பார்ப்புக்கு இரை தேடி வரும்போது கலசத்திலிருப்பதைப் பார்த்து அதைக் குடித்து மதிமயங்கி அப்பெண்களின் கண்களின் நிழலை கயல் மீனோவென்று கொத்தி வெறுமையாகத்திரியக்கண்டு அப்பெண்கள் சிரிக்கின்ற அத்தகை வளமுடைய முலைப்பாடி நாடு என்க. வெறித்தே — வீணே ; தவள—கொழிக்கும் வெண்மையான சிறு பற்களின் விரிந்த வெள்ளிய நிலவுக்கிரணங்களை மிகுக்கும் (சிரித்தலால் இங்ஙன் ஆயிற்று).

## வேறு

166 கொண்டலின் அலர்ந்தசெந் தாமரைக்காடெனக்
குமுத விதழ் கருணைநயனம்
குவலய மளந்ததா ளிணை செங்கை யொளிதரக்
குண்டலந் திருவில் வீச

விண்டலஞ் சுடருமதி மண்டலந் தோற்பவிள
வெயில்செய்முக மண்டலத்தில்
வெண்பளித நாமமும் சிந்துரத் திலதமும்
வெண்ணிலவு பொழிமுறுவலும்

கண்டகம் களி கூர நெஞ்சகம் குளிரயாங்
காணவொரு நாள்வருகெனக்
கருதுமன் பர்க்கெளிய ஞதலின் தளருநடை
காட்டிநூ புரமொலிப்ப

வண்டலம் பியபசுந் துளபமென் றொடையசைய
வசுதேவன் மகன் வருகவே
வண்ணன்மணி வெயிலொழுகு வெண்ணெய் நகர் வாழ்கமல்
மங்கைநா யகன் வருகவே. (5)

(5) கொண்டலின்..............நயனம் மேகத்தில் அலர்ந்த செந்தாமரைப் பூக்களிருந்தால் எப்படியோ அப்படி குமுத இதழொத்த அதரமுடைய கண்கள் இருந்தன. இது இல்பொருளுவமை ; குவலயம் — பூமி ; நூபுரம் — பாதக்கிண்கிணி.

167 தாதார் நறுந்துளவு தளவங் குராவிளந்
தளிமயில் பீலிமுதலாத்
தகைநெடுங் குழலிற் புனைந்துவெங் கழையினுமிழ்
தண்ணமுத விசைவடித்துச்

சேதா விளங்கன்று முல்லைச் சிறுர்களின்
திரளுமொரு கோடிசுற்றச்
செழுமலர்ப் பூவை நிகர் மேனியிற் புகர்நிறச்
சிறுதுகட் படலையம்ப

வேதாதி யந்தமுங் காதலங் கரைபெரு
மின்னிடைப் பொதுவர் மின்ஞர்
வேல்விழியும் நெஞ்சமும் பின்வர இணைப்புருவ
விற்கோட விளநகைவர

மாதர்முலைக் கண்வழி பாலொழுகு மாலைவாய்
வருகோ பாலன்வருகவே
வண்ணன்மணி வெயிலொழுகு வெண்ணெய்நகர் வாழ்கமல்
மங்கை நாயகன் வருகவே. (6)

(6) மகரந்தம் செறிந்த துளசி, முல்லை, குரா மரப்பூ, மயில் தோகை முதலியன மயிரில் வைத்து அலங்கரித்து புள்ளாங்குழலூதி, பசுக்களும் கன்றுகளும் முல்லை நிலத்துச் சிறுவர்களும் சுற்றிவரக் காயாம்பூவொத்த மேனியில் புழுதி பொருந்திமூட ; வேத முதலியனவும் ஆசை கொண்டும் காண முடியாது, இடைப்பெண்களது கண்களும் மனமும் தன் பின்வர இரண்டு புருவமாகிய வில் வளைய புன் சிரிப்பு வரப் பெண்களின் தனத்தில் பாலொழுகும் அத்தகை மாலைக் காலத்தில் பசுக்களோடு வருகின்ற கோபாலா வருக என்கிறார் கவி. பம்ப — நெருங்க ; பொதுவர் மின்னார் வேல் விழியும் நெஞ்சமும் பின்வர என்றார் அவர்கள் கண்ணனை எப்பொழுதும் நினைந்திருப்பதால், கன்றினை உள்ளும் பசுவொப்பக் கண்ணனை நினைத்து மாதர்க்குப்பாலொழுகியது என்க.

168 கேசவன் வருகமது சூதனன் வருகநர
கேசரியின் உருவன் வருக
கிளர்புனலின் முழுகுநில மகளை யொரு கோட்டேந்திய
கேழற்பிரான் வருகமா

பாசவெம் பிறவிவிட வடியவர்க் கருள்பரம
பாவனன் வருக கருடப்
பறவைவா கனன்வருக தாமோ தரன் வருக
பதுமநா பன் வருகமா

ரீச வஞ் சனையடரும் வில்லாளி வருகபுவி
யாவைக்கு மிறைவன் வருக
இருடிகே சவன் வருக நாரா யணன் வருக
இமையவர்க் கதிபன் வருக

வாசவன் துணை வருக மாதவன் வருககலை
வாணிபதி தந்தை வருக
வண்ணமன் மணி வெயிலொழுகு வெண்ணெய்நகர் வாழ்கமல
மங்கைநா யகன் வருகவே. (7)

(7) நரகேசரி — நரசிங்கம் ; கேழல்பிரான் — வராகமூர்த்தி ; வஞ்சனை — வஞ்சகமாக பொன்மானாக வந்தவனை ; மாரீச வஞ்சன் — இருபெயரொட்டுப் பண்புத் தொகை. கலை வாணிபதி - பிரமன்.

## வேறு.

169 இரவி மதியம் நேமிபணிலம்
இகல் கொல் கனுழன் நிரதமே
இலகு கமல மாதுநிலமின்
இருவர் மருவு தெரிவைமார்

அரவின் அரசு சீதவமளி
அகில வுலகு மயினியே
அயனுன் மதலை தேவர் முழுதும்
அடிமை புரியும் அடியவர்

பரவ வரிய வான சுருதி
பலவு முனது பெயர்களே
பதும மகள லாதுன் மகிமை
பகர வறிய வுளகொலோ

வரவும் எளியை போலு மடியர்
வருக வெனுமுன் வருகவே
வருபு வனமும் வேணு வனமும்
மகிழும் அதிபன் வருகவே. (8)

(8) இரவிமதியம் என்பதை முறையே நேமிக்கும் பணிலத்திற்கும் நிரனிறையாக்கி உவமிக்க. கலுழன் — கருடன்; நிரதம் — எப்போதும். கமலமாது நிலமின் — திருமகள், நில மகள்; உம்மைத்தொகை; அரவின் அமளி — ஆதிசேடனே குளிர்ந்த படுக்கை; அயினி — உணவாகவுண்டு. எல்லா உலகங்களையும் யுகாந்தத்தில் உண்ணுவதால் இங்ஙன் கூறினார். பதும மகள்....................கொலோ — இவ்வடியால் உன் பெருமைகூற உன் மனைவியான திருமகளுக்கேசாலும் என்றார்.

170 அறிவில் சிறுவ ரோடு தொடரில்
அலர்மெல் லடிகள் தளருமே
அலைகொள் குழலும் நீல நிறமும்
அளவில் புழுதி படியுமே

எறிவெவ் வெயிலின் ஊடுதி ரியில்
இளகு வெயர்வு சொரியுமே
இலகு திலகம் வேர்விலழியில்
எனது மனமும் உருகுமே

நறிய கனிகள் காய்கள் தருவன்
நறுநெய் தருவன் வருகென
நவிலு மெழில சோதை மனையின்
நடலை வகைசெய் சிறுவனே

மறுவின் முனிவர் தேடவரிய
மறையின் முதல்வன் வருகவே
வருபு வனமும் வேணு வனமும்
மகிழும் அதிபன் வருகவே. (9)

(9) குழல் — மயிர்; நடலைவகைசெய் — அசைவுவகைகளைச் செய்யும்; மறுஇல் — குற்றமற்ற.

171 குறிய வுருவம் வானின் முகடு
குறுகு நெடியன் வருகவே
கொடிய சிலையை மாதினுருவு
கொஞ்சு சரணன் வருகவே

முறிய மருது சகடு சிதற
முடுகு மதுலன் வருகவே
முலையை யுதவு பேயி னுயிரின்
முதல் கொள் கபடன் வருகவே

நறிய கலவை பூசும் வளமெய்
நலமுண் ணமலன் வருகவே
நமனும் வெருவு நாக முடியின்
நடன மிடு மன் வருகவே

வறிய முனிவன் வாழ அவலின்
மகிழும் எளியன் வருகவே
வருபு வனமும் வேணு வனமும்
மகிழும் அதிபன் வருகவே. (10)

(10) குறிய.....................நெடியன் — திருவிக்கிரமாவதாரத்தைக் காட்டியது. மாதின் — சீதைக்காக ; அதுலன் — கடவுள் ; பேய் — பூதகி. இவள் கம்சனேவலால் கண்ணனுயிரை முடிக்க அனுப்பப்பட்டவள் ; நாகம் ஈண்டு காளிங்கன் என்ற பாம்பு ; நமன் — யமன் ; வறிய முனிவன் - குசேலன் என்ற பிராமணன் ; முன்பிள்ளைத் தமிழ்க்கொத் 194-ஆம் பாட்டில் காண்க.

## அம்புலிப் பருவம்.

சாமம்.

172 சொன்னவரை வளைவைநீ இவனடிமை என்னுமுரை
சொன்னவரை என்றும் வளைவான்
சுழிதருங் குணகடலில் வருவைநீ இவனுமோ
சுபமிகும் குணகடலுளான்

மின்னமர் செழுங்கலா நிதிநீ மலர்த் தெரிவை
மேவிய கலாநிதியிவன்
வேளை நிழல் செய்வைநீ இவனுலகி லுயிர்களை யெவ்
வேளையினும் அருள்நிழல் செய்வான்

மன்னுமம் புயமறுத் திடுவைநீ இவனும்விறல்
வாணனம் புயமறுத்தான்
வளர்சோதி மூவர்க்குள் ஒருவன்நீ யிவனும்
மூவர்க்கு ளொரு சோதியாவான்

அன்னவகை யர்க்குநீ இவனைநிக ராதலால்
அம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாட வாவே. (1)

| (1) சந்திரன். | வைகுந்தநாதன். |
| --- | --- |
| (1) சொன்னவரை (மேருமலையை) வளைவான் (வளைந்து சுற்றுவான்). | அடிமை என்று சொன்னவரை வளைவான் (சொன்ன பேர்களைச் சூழ்ந்திருப்பான். |
| (2) சுழிக்கும் அலைகள் பொருந்திய குணகடலில் (கிழக்குத்திக்கில் கடலில்) தோன்றுவான். | இவன் நன்மை பொருந்திய குணகடல் (அறுவகைக் குணங்களாகிய கடலை) உள்ளவன். |

அம்புலிப்பருவம்.

| | |
|---|---|
| (3) பிரகாசமிக்க அழகான கலாநிதி (கலைகளைப் பெற்றவன், சந்திரன்) ஆவன். | இலக்குமியை மார்பில் பொருந்திய கலாநிதி (கல்விக் களஞ்சியம்) ஆவான். |
| (4) வேளை (மன்மதனுக்கு) நிழல் கொடுக்க உதவுவான் (சந்திரன் மன்மதனுக்குக் குடையான மைப்பற்றி, வேளை - உருபுமயக்கம்). | இவனே உலகில் உயிர்களை எந்த வேளையினும் (சமயத்திலும்) அருள்நிழல் (அருளாகிய தங்கும் நிழலை) செய்வான். |
| (5) நீரில் நிலை பெற்ற அம்புயம் (தாமரை மலர்களை) மறுத்திடுவான் (மலரவொட்டாது குவித்திடுவான்). | திறமை மிக்க வாணாசுரனது அம்புயம் அறுத்தான். (அழகிய புயங்களை (கைகளை) யெல்லாம் அறுத்துத் தள்ளினன். |
| (6) வளர்கின்ற சோதி மூவர்க்குள் (பிரகாசமிக்க சூரியன், சந்திரன், அக்கினி) ஒருவன். | மூவர்க்குள் (திருமால், பிரமன், சிவபெருமான்) ஒப்பற்ற சோதிமேல்லானவன் ஆவான். |

**வாணன்.**—பலியின் குமாரன் தன்மகள் உஷை நிமித்தம் கண்ணன் பேரன் அநிருத்தனைச் சிறையிலிட்டனன். நாரதரால் அறிந்த கண்ணன் சென்றெதிர்த்து ஆண்டுள்ள விநாயகர், முருகர், சிவன் ஆகியோர் புறமுதுகிட இறுதியில் சிவபூசை செய்த இரண்டு கைகளைத் தவிர மற்ற 998 கைகளையும் அறுத்தார். திருவரங்கக்கலம்பகம் " வாடியோட . . . . . . முக்கணீசன் மக்களைத் தேடியோட வாணனுயிரம் புயங்கள் குருதி நீர் சிந்தியோட . . " என்ற பாட்டு நோக்குக. அடலரவு - காளிங்கன் ; முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 134 ஆம் பாட்டு நோக்குக.

173 மானினி விடாதமரு மார்வமுளை நீயிவனும்
மானினி விடாதமார்பன்
மதியான நாமத்தி நீயிவன் தொண்டர் சம்
மதியான நாமத்தனும்
கானகத் தோடதி சயந்தருவை நீகங்கை
கானகத் தோடதிசயங்
காட்டுமிவ னண்டர்பதி புகுவைநீ யண்டர்பதி
கைக் கொண்ட பெருமானிவன்
யானினி யுரைப்பதெ னிவன்றனை நிகர்வையிது
விண்றிமைத்துனனு மாவாய்
இருபக்க முண்டுன்க் காயினு மிவன்பக்கம்
இன்றுவிளை யாடவேண்டும்
ஆனினந் துயர்தவிர வரை யெடுத் தானிவனோ
டம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே. (2)

| (2) சந்திரன் | வைகுந்தநாதன். |
|---|---|
| (1) மானினி (களங்கத்தை இனி எப்போதும், மான்—களங்கம்) விடாத மரு மார்வம் (விடாது தங்கும் ஆர்வத்தையுடையவன்) மார்பம் - மார்வம் போலிபற்றி சொல்லொற்றுமைக்குக் காட்டினர். | மானினி (இலக்குமியாகிய பெண்ணை, மானினி—பெண்) விடாத மார்பன் (விட்டு நீங்காத மார்பினையுடையவன் |

(2) மதியான நாமத்தன் (மதி என்ற பெயரை யுடையவன்). — தொண்டர் சம்மதியான நாமத்தன் (அடியவர் இஷ்டத்திற்கேற்ற பெயரை யுடையவன்).

(3) கானகத்தோடு (காட்டினிடம்) அதிசயம் தருவான் (பஞ்சதந்திரத்தில் ஒரு முயல் மலை மேலேறி யானைகட்குச் சந்திரனனுப்பிய தூதன் என்று கூறி இரவில் நீரில் பிம்பம் காட்டி ஓட்டியதை ஓர்க) — கங்கையைக் கானகத்தோடு (கால் நகத்தோடு) அதிசயம் காட்டுவான் (திருவிக்கிரமாவதார காலத்தில் பிரமன் காலை பூசித்ததால் உண்டாகிய கங்கை வரலாறு காண்க.)

(4) அண்டர்பதி (தேவர்கட்குத் தலைவனான இந்திரனிடம்) புகுவான். — அண்டர் பதி (தேவரது தலைநகரான அமராவதியைக்) கைக்கொண்டவன். (சத்தியபாமைக்காக பாரிஜாதம் கொணர்ந்த வரலாறு காண்க).

இவன் மைத்துனனாதல் பற்றியும், தக்ஷனிடம் சிவனும் சந்திரனும், பெண் கொண்டிருக்கும் முறையினாலும், சிவனிடம் சந்திரன் தங்கியிருத்தல் பற்றியும் மைத்துனனும் ஆவாய் என்றார். மைத்துனனும் என்றபோது மைத்துனனிடத்திலும் என்று பொருள் கொள்க. இருபக்கம் என்றார் அமரபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் சந்திரனுக்கு உண்டாதலால் கூறினார். பக்ஷம் என்ற வட மொழி பக்கம் என்ற தத்பவ வடசொல் ஆயிற்று பக்கம் - வைகுந்த நாதனுக்காகும்போது இடம் என்று கொள்க. வரை - கோவர்தன மலை ;

174 கயல்விழி இரேவதியை மருவலால் கதிரோடு
கலப்பை யுள தன்மை யதனால்
கருதிநீ லாம்பரம் பெறலா லுரோகணி
களிப்பவரு காதல னதால்

செயல் மருவு காமபா லன்முயலி யென்னுமிரு
திருப்பெயர்க் கிசையுமிதனால்
திருமேனி வெண்மையால் தனதுமுன் தோன்றலால
சேர்ந்துவிளை யாட வெண்ணிப்

புயல் பொரு தடக்கையம் பலதேவ னென்றுனைப்
பூங்கை விரல் காட்டுகின்றான்
போதாது நீசேறல் போதாது சண்பகப்
பூந்தா தருந்தாதுவண்

டயன்மலர் விரும்புநவ நீதபுர நம்பனுடன்
அம்புலீ யாடவாவே
ஆட லரவின் நடமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) சந்திரன் — பலராமன்

(1) கயல் மீன் போன்ற கண்களையுடைய இரேவதி என்ற தக்ஷன் பெண் 27 பேரில் ஒருத்தியையே மருவினவன். — இரேவதி என்பவளைப் புணர்ந்ததால் இவருக்கு இரேவதி, வாருணி என்ற இரு மனைவியர்.

(2) கதிரோடு கலப்பை (சூரியனோடு சம்பந்தத்தை) யுடைய தன்மை பெற்றவன். சூரியனிடமிருந்தே சந்திரன் ஒளி பெறுகிறான் என்ற — கதிரோடு கலப்பை (பிரகாசத்தோடு கூடிய கலப்பை யாயுதத்தை) உடையவன்.

**சந்திரன்**

புராணக் கொள்கை வான நூற் கொள்கையும் மற்றும் அமாவாசை தினம் இருவரும் ஒன்று சேருவர் என்ற புராணக் கொள்கையும் ஓர்க. சூரியனது சுகமுனை என்னும் கதிரால் ஒளி பெறுவான்.

(3) கருதி நீலாம்பரம் (நீல நிறமான ஆகாயத்தை, நீல+அம்பரம்) அடைவான்.

நீலாம்பரம் (நீலாம்பரன் ; போலி) என்ற பெயரை அடைந்தவர். யமுனை இரண்டு நீல உடைகளும் ஒரு பொன் மாலையுமளித்தனளாதலால் அதனை யணிந்து நீலாம்பரன் என்ற பெயர் பெற்றார்.

(4) உரோகணி களிப்பவரு காதலன் 27 மனைவியரில் உரோகணி என்ற அப்பெண் மகிழ்ச்சியடைய வருகின்ற கணவன்) ஆவான்.

உரோகணி களிப்பவரு காதலன் (உரோகணி என்ற தன் தாய் மகிழவருகின்ற ஆசைமிக்க மகன்) ஆவான்.

(5) செயல் மருவு . . . இசையும்" காமச் செயல் மருவும் பாலன் ஆகவும், முயலை (களங்கத்தை) உடையவனாகவும் இருந்ததால் காமபாலன், முயலி என்ற இரண்டு பெயர்களைப் பெற்றவன். காமச் செயல் மருவுபாலன் எனப் பிரித்துச் சேர்க்க. காமம் மிக்கவனானதால் தன் குருவான வியாழன் மனைவி தாரையை விரும்பினான்)

அரிய செயல் பொருந்திய காமபாலன் முசலி என்ற இருபெயர்களையுடையவன் (முசலம் - கலப்பை யாயுதம்).

(6) உடல் வெண்ணிறமுடையவன்.

வெண்ணிற உடலையுடையவன்.

(7) தனது (கண்ணன் தனது) முன்பாகப் (விளையாட்டுக் காட்டும் அச்சமயம்) உள்ளான்.

தனது (கண்ணன் தனக்கு) முன் (முன்னவன் தமையன் ஆக) பிறந்தவன்.

போதாது - எதிர்கொண்டு வாராமல் ; நீசேறல் - நீ வீணே செல்லுதல் ; போதாது - போதாத வேளையாகும்.

## பேதம்.

175 கொண்டலி னெடுங்குமுன் மேனியொளி யிவன்மேனி
கொண்டலொளி யினை யொடுக்கும்
குறையும் வெண் கலையுனக் குளதெவ் வுலகும் விலை
கூறரிய பொற்கலையுளான்

விண்டல மிரண்டிலக் கத்துயர்வை நீயிவன்
விண்முகடு கிழிய வுயர்வான்
மிகுமயல்கொ ளேழையர்கள் பகைவநீ யேழைகளை
விருதுகொடு காப்பவ னிவன்

கண்டமடை யுங்குறைப் பாந்தளுக் குளைவை நீ
கதிர்மணிச் சிரமாயிரம்
காட்டும்விட நாகணையின் வளர்வனிவ னிமைவர்
கவர்ந்துண்ணு மசனமாம் நீ

அண்டர்பெரு மானிவ னுனக்கதிக மாதலால்
அம்புலீ யாடவாவே
அடலரவி நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே. (4)

| (4) சந்திரன். | வைகுந்தநாதன். |
|---|---|
| (1) இவன் உடல் மேகத்தில் ஒடுங்குவான் (மறைவான்). | இவன் உடல் கரு நிறமானதால் மேக ஒளியையே தன்கண் அடக்குவான். " வெய்யோனொளி தன்மேனியின் " என்ற கம்ப ராமாயணப் பாட்டினை நோக்குக. |
| (2) குறைகின்ற (தேய்கின்ற) வெண்மையாகிய கலைகள் (வளரும் தேயும் பங்கு) உண்டு. | எவ்வுலகும் விலை கூறமுடியாத பொற்கலை (பொன்னாலாகிய உடை) உடையவர். |
| (3) ஆகாய இடத்தில் இரண்டு லட்ச யோசனை தூரத்தில் உயர்ந்திருப்பான். | விண்முகடு (ஆகாய உச்சி) கிழிய உயர்ந்தவன். திருவிக்கிரமாவதாரம் செய்தப்போது காண்க. |
| 4) மிகுந்த காம மயக்கங்கொண்ட பெண்களுக்குப் பகைவன். (விரகியர்கட்குச் சுடுவது பற்றிக் கூறினர்). | ஏழைகளை (எளிமையுடையேன் என்று அவையடக்கமாகக் கூறும் அடியார்களை) விருதுகொண்டு (சங்கற்பித்துக்கொண்டு) காப்பவன். |
| (5) கழுத்துவரை மட்டும் பொருந்தின அங்கக் குறையான பாம்பான இராகுவுக்கு உள்ளகப் படுவான். | மாணிக்கங்களையுடைய ஆயிரந்தலைகளைப் பெற்ற விஷம் பொருந்திய ஆதிசேடன் என்ற பாம்பின்மீது படுப்பவன். |
| (6) தேவர்கள் கவர்ந்துண்ணும் உணவு ஆவான் (அசனம் - சோறு) வளர்பிறை பதினைந்து நாளில் சந்திரன் சொரிகின்ற அமுதத்தைத் தேவர் உண்ணுவர். தேவர்களின் உணவு என்று இழிவு கூறினர். | தேவர்கட்குத் தலைவன் ஆவான். |

176 தேராத வன்றுணைவன் நீமறைப் பொருளுண்மை
தேர்ந்த பெரி யோர்துணையிவன்
தேளினிற் சிறியநீ முப்பத்து முக்கோடி
தேவரில் பெரியோனிவன்

நீராரும் நண்டினுக் கதிபன்நீ பிரமன் முதல்
நீடுயிர்க் கதிபதி யிவன்
நிறையவும் குறையவும் பெறுவைநீ யிவனென்றும்
நிறைகுறை யிலாத முதலோன்

பேராது நீகாட்டும் வழிவரின் நரகும்
பிறப்பும் வரு மிவன் வழி வரில்
பிறவிதவிர் பேரின்ப வீடுவரு மாதலால்
பேதமிக வுண்டாயினும்

மாருத கருணைமா ஞுதலின் அழைத்தானே
டம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே. (5)

(5)

| சந்திரன். | வைகுந்தநாதன். |
|---|---|
| (1) தேராதவன் (தேர் ஆதவன் - ஒற்றைச் சக்கரத்தேரினையுடைய சூரியன்; ஆராயாத அறிவினன் என்றும் ஒரு பொருள் கொள்க) துணைவன் (தோழன்). | வேதப்பொருளுண்மைகளைத் தேர்ந்த செயற்கரிய செய்யும் பெரியோர்க்குத் துணைவனுவான். |
| (2) புத்தேளிரில் செயற்கரிய செய்கலாத சிறியவன். (தேள் - முதற்குறை புத்தேள் - தேவர்). | முப்பத்து முக்கோடி தேவரில் பெரியோன் ஆவன். |
| (3) நீரில் பொருந்திய நண்டினுக்குத் (கர்க்கடக ராசிக்கு) தலைவன். | பிரமன் முதலிய உயர்ந்த உயிர்கட்கெல்லாம் தலைவன். |
| (4) வளர்வதும் தேய்வதுமடைவான். | என்றும் ஒரே சீர்மையுடன் இருப்பான். |
| (5) நீ காட்டும் வழியில் தவருது நடந்தால் நரக வேதனையும், மாறி மாறி இழிந்த சன்மம் எடுத்தலும் வரும். சந்திரன் குரு பத்தினியை மனைவியாகக் கொண்டதும் சண்டை விளைவித்ததும், அவள் மூலமாகப் புதனைப் பெற்றதும் முதலானவைகளைக் காண்க. பேராது - அடி பெயராது; " பகைபாவம் அச்சம் பழியென, நான்கும் இகவாவாம் இல்லிறப்பான்கண் " என்ற குறளை ஓர்க. கருணைமான் - மான் பெயர்ப் பகுபதவிகுதி; | இவன் காட்டும் வழி நடந்தால் பிறவி நீங்கும் பேரின்பமாகிய மோட்சம் கிடைக்கும். |

## தானம்

177 நெடுமுடிப் பஃறலைத் திரள்புயத் துறுவலி
நிசாசரர் பதிக் கொதுங்கி
நிதிமதில் இலங்கையூர் புகவெருவி ஓடுமுனை
நிலையோடு நடக்க வைத்தான்

சுடுசினத் தழல் விழிச் சடைமுடிப் பரனடித்
துகளெனத் தேய்த்த வுன்னைத்
தூணுக்கி மந்தர கிரிக்கெதிர் நிறுத்தினன்
தொடருமுன் பழைய பகையாம்

கடுமிடற் றரவையும் தலைதுணித் தானுன்வழி
காசினியின் நீங்கிடாமே
கருவினுன் குலமகவின் உயிரளித் தானினம்
கருதி யிவன் உதவிபார்க்கில்

அடுமைநீ செயவேண்டு மாதலினெனையனுடன்
அம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே

(6) நிசாசரர் - நிசியில் சஞ்சரிப்பவர் என்று பொருள்படும் அரக்கருக்குப் பெயர் நெடுமுடி . . . . வைத்தான், முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 166 ஆம் பாட்டின் குறிப்பில் இவ்வரலாறு காண்க. சுடு . . . . பரன் - வீரபத்திரன்; சுடுசின் . . . உன்னை - இவ்வரலாறு முன்பிள்ளைத் தமிழ்க் கொத்தின் 505 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. தூண் . . . நிறுத்தினன். கடல் கடையும்போது நறியாகச் செய்து காண்க. கருமிடற்று அரவு - விஷம் பொருந்திய கழுத்தையுடைய பாம்பு, இராகு. இது ஷை 504 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. உன்வழி . . . உயிரளித்தான் — அசுவத்தாமாவின் பிரமாஸ்திரம் எல்லோருடைய கருவையும் போக்க அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் கர்ப்பம் மட்டும் தங்குமாறு செய்து பின் குழவி கரிக்கட்டை போன்று பிறக்கக் கண்ணன் நித்ய பிரமச்சாரி என்று கூறி எடுத்து உயிர் கொடுத்தார். இவனே பரீட்சித்து. "மைத்துனன் மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே மன்னராக்கி உத்தரைதன் சிறுவனையும் உய்யக்கொண்ட உயிராளன்" என்ற ஆழ்வார் வாக்கு நோக்குக.

178 சோதிபெறு மேனியைக் கறையா னெனச் செய்து
தொலையாத வதுமானெனில்
துட்டமான் உயிர்பட வாளியில் போக்குவான்
தொடர்நடைக் குறுமுயலெனின்

நீதிசெறி வேட்வேக் குகனிவன் துணையதுவும்
நீக்குமிது வன்றியரவின்
நெட்டெயிறு குத்துவிட மென்னில் வெங் கலுழனொரு
நீள்சிறைக் காற்றினது போம்

வேதனை செய் நோயெனில் கூனிநிமி ரச்செய்த
விஞ்சையான் அமையுமன்றோ
மிகவினன் நீவேண்டு கருமமெல் லாமுற்று
வித்துவிழி என அளிப்பான்

ஆதியம் பொருளிவன் பெருமை நீ உணராய் கொல்
அம்புலி யாடவாவே
அடல ரவின் நடனமிடும் வைகுந்தநாதனுடன்
அம்புலி யாடவாவே. (7)

(7) கறையான் என - சிதல் அரித்தால் எங்ஙனமிருக்குமோ அங்ஙனமாக; தொலையாத - நீங்காத; துட்டமான் - வஞ்சகம் பொருந்திய பொன் மானான மாரீசன்; களங்கத்திற்கு மான், முயல், கறை என்று வழங்குவதாதலால் இவன் முன்னமே மாரீசனாகிய மானைக் கணை எய்து தொலைத்தான் ஆதலால் மானைப் போக்குவான் என்றும், குகனாகிய வேடன் இவன் தோழனாதலால் அவன் வேட்டையாடி முயலைப்போக்குவான் என்றும், இவன் வாகனமான கருடனது சிறகு காற்றினாலேயே பாம்புகள் கெடுகின்றன ஆதலால் இராகுவின் விஷக்கறையாயிருப்பின் ஓடிவிடும் என்றும் சமத்காரந்தோன்றக் கூறினார். வேதனை செய்நோய், துன்பமிகத்தருகின்ற க்ஷய ரோகத்தினால் உடல் கூனடைவதுண்டு. எனவே கூனி நிமிரச் செய்த வித்தை என்றார்.

கூனி—கைகேயின் தாதியான இவள் குடங்கொண்டு தண்ணீர் கொண்டு வரும்போது இராமன் வில்லும் மண்ணுண்டையும் கொண்டு விளையாடுவான் வேடிக்கையாகக் கூனியின் முதுகைப் பார்த்தும் குடத்தைப் பார்த்தும் அடிப்பது வழக்கம். இதனால் கூன் சிதைந்ததென" கூனே சிதைய உண்டை வில்நிறத்திற் றெறித்தாய்" என்று ஆழ்வார் கூறியருளிய வாக்கை ஓர்க. முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 127 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. மற்றும் கண்ணனவதாரத்தில் திரிவக்கிரையின் கூனை நிமிர்த்தியதைக் கூறலாம். திரிவக்கிறை —மதுராபுரியில் கண்ணபிரானவதரித்து திருவிளையாடல்

செய்த காலத்து அவர்க்குச் சந்தனம்பூசி அவரைக்கூட எண்ணங் கொண்டவள் குப்பை. இவளைக் கண்ணபிரான் நீண்டிக் கூனை நிமிர்த்தி இவளிடம் உப சுலோகரைப் பெற்றனர். கருமம் எலாம் முற்றுவித்து என்க. விழி என அளிப்பான்—சிவபெருமானுக்கு இவைகளை யெல்லாம் போக்கிப் பிரகாசமான கண்ணுக்குவன் என்பது நோக்கிப் போலும். விழி என அளிப்பன் என்பது திருவிக்கிரமாவதார காலத்தில் சூரிய சந்திரரே விழியானதால் தன்னை நோக்கிக் கூறியதாகவும் கொள்ளலாம்.

## கண்டம்

179 பாயிருட் படலம் கிழித்தெழும் பருதியும்
பனிமலர்த் தருநிழற் கோன்
பண்பறிந் தொழுகெழு மழைக் குலமும் வெண்டிரை
பரப்புதண் பரவை யேழும்

காயெரிக் கடவுளும் கனகவட கிரியையும்
கடலிடை மடுக்கும்வேகக்
காற்றினுக் கரசனும் கடவுளர்க் கிறைவனொடு
காசினி படைப்ப னென்றே

தீயெழச் சினவுதவ முனியனைய முனிவரும்
தேவரும் பிறருமஞ்சிச்
செய்கையில் திரியாது நிற்பதிவ னுனைதன்
சென்னிமேல் கொண்டதறியாய்

ஆயிரம் திருநாம முள்ளவெம் பெருமானே
டம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே (8)

(8) பருதி - சூரியன்; பனி . . . கோன் - இந்திரன்; பண்பறி . . . மழைக் குலம் - இந்திரன் கட்டளைப்படி நடக்கும் சப்த மேகங்கள்; பரவை - சமுத்திரம்; எரிக் கடவுள் - அக்கினி; கனக . . . அரசன் - வாயு; இவனுக்கும் ஆதிசேடனுக்கும் பலம் பற்றி வாதம் வந்து ஆதிசேடன் மேருமலையைப் பற்றிக்கொள்ள அதினின்று மூன்று சிகரங்களைப் பெயர்த்துப் போட்டனன். கடவுளர்க்கு இறைவன் - இந்திரன்; தவமுனி - விசுவாமித்திரன்; கடவுளர் . . . தவமுனி - திரிசங்குவைக் கௌசிகர் தபோ பலத்தால் உடலோடு சுவர்க்கம் அனுப்ப இந்திரன் அவனைப்பிடித்துத்தள்ள அவன் காப்பாற்று காப்பாற்று எனக் கூச்சலிட்டுத் தலை கீழாகவர இவர் தவ வலிமையால் அவனை அங்கேயே நிற்கச்செய்து வேறொரு தேவலோகம் ஏற்படுத்தினர்.

180 இத்தனை யழைக்கினும் விரைந்துவா ராயென்னின்
இரவியைக் கனியாகுமென்
றெயிறூன்று கவியிவன் தூதனு மிமையவர்
இருந்துகாக் கின்றவமுதைக்

கைத்தலத் திடைகொண்டு பணிகளுக் கீந்தவெங்
கலுழனிவ னூர்தியமிர்தின்
கலையுடையை தனியைவெளி யேதிரிவை வேறுமொரு
காவல்இலை யதுவுமன்றி

முத்தமணி வெண்குடை சேனாபதி யிடனெவண
முறைதிறம் பிணரைவெற்றி
மூரிப் பிரம்பினி னடித்துவெஞ் சிறையிடுதல்
முன்னமறி யார்கொலென்றே

அத்தனையும் வருமுன்னம் ஒருநொடியி லேயுவந்
தம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே (9)

(9) இரவி - சூரியன் ; கவி - குரங்கு, அனுமான் ; வாயுவுக்கும் அஞ்சனைக்கும் பிறந்தவன். பிறந்தவுடனே தன் உணவு யாதென "சிவந்திருக்கும் பழம்" என உடனே உதிக்கும் சூரியனைப் பழமெனக்கண்டு பற்றப் பாய்ந்தவன் ; இமையவர் . . கலுழன் —105 ஆம் பாட்டில் காண்க ; அமிர்தின் கலையுடையவன் ஆதலால் முன்னமே அமிர்தத்தைத் தூக்கின கருடன் உன்னைத் தூக்கிச் செல்வான் என்றும், வேறுமொரு காவல் இலை என்பதற்கு முன்பு சூரியனைப் பிடிக்க வர இந்திரன் உதவி அனுமனை வச்சிராயுதத்தாலடித்து அது முறித்தான். நீ தேவ குருபத்தினி விஷயத்தில் குற்றம் புரிந்தாயாதலால் அவன் உதவமாட்டான். வேறு யாவரும் உதவமாட்டார் என்கிறார். சேனைபதி - சேனையர்கோன். லோகாலோகப் பருவதத்தில் எழுந்தருளியிருக்கும் விஷ்ணு வினவதார விசேஷம்.

181 குணமுடன் அழைக்கவா ராதநீ நந்தியங்
குன்றுநெறி யன்றிவேறே
குறுகுநெறி யிம்மையில் செல்லையிதி லிவன்முகம்
கோடிய தறிந்தவுடனே

பணம்விரித் தொருகோடி யரவம் விழுங்குவெண்
பால்கவள மென்றுமதமாப்
பணைநெடுங் கரன்நீட்டி வாய்க்கொளும் வெம்புலிகள்
பாய்ந்துமா னைக்கொடுசெலும்

கணமும்வெங் கொலைவிடா வெயினர்முய லாசையால்
கணைதுறந் திடுவர்முனமே
காயமேற் பட்டவுடல் காயம் பெறுதுபின்
காப்பவரும் இல்லையப்போ

தணுகுவது நாளுமிப் பொழுதே யெனையனுடன்
அம்புலீ யாடவாவே
அடலரவின் நடனமிடும் வைகுந்த நாதனுடன்
அம்புலீ யாடவாவே. (10)

(10) நந்தியம் குன்று - திருமாலிருஞ்சோலை மலை ; வேறே குறுகும் நெறி இம்மை இல் - வேறு செல்லும் வழி இப்பிறப்பில் இல்லை. இதில் செல்லை - இவ் வழியில் செல்வா யானால் ; முகம் கோடியது - கோபத்தினால் முகம் மாறுபட்டது ; இவன் மலையில் வாழ் பவனாதலால் ஆண்டுள்ள பாம்புகள், யானைகள், புலிகள், வேடர்கள் ஆகிய குறிஞ்சி நிலப் பொருள்களை நண்பாயின்மை கருதி அவைகளே தாக்கும் எனக் கூறினர். காயமேற்பட்ட உடல் காயம் பெறுது - முன்னமே வடு (பழி குரு பத்தினிக்காக ஏற்பட்ட பழி) ஏற்பட்ட உடலாதலால் இப்போது கணை எய்வதால் நிலைபேறு பெறுமல் ;

## சிற்றில் பருவம்

182 அரிக்கிண் கிணிப்பொன் சதங்கை தண்டை
அலம்பத் துவசம் வளைவயிரம்
அம்போ ருகமங் குசம் திகிரி
ஆதி யிரேகை நிலம்பொறிப்ப

விரிக்கும் சுருதி தலைவி ளக்காய்
விளங்கும் திருத்தாள் சிவப்பதன்றி
மிகவும் புழுதி படவடிகள்
மெல்ல நடந்து வருவதுதான்

தரிக்கும் மடமைச் சிறுதகையோம்
தகுவெம் பாவைக் கமுதளிப்பான்
சமைத்த புளினச் சிறுவளைப்பைத்
தகர்க்கும் படிக்கோ தவமுனிவோர்

தெரிக்கும் பெருமைப் பரம்பொருளே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே (1)

(1) அரி - பரல் ; துவசம் - கொடி ; காலிலும் இத்தகைய இரேகைகளிருந்தன என்பது தெரிகிறது. மணலில் கட்டிய வீட்டைச் சிறுமியர் "புளினச் சிறு வளைப்பு" என்கின்றனர். துவசம் . . . . தாள் —ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம் உள்ளபடி பொறித் தமைந்த, இருகாலும் கொண்டு அங்கங்கு எழுதிணற்போல் இலச்சினைபட நடந்து . . " என்ற ஆழ்வார் வாக்கினை யோர்க.

183 வஞ்சப் புணர்ப்பில் சகட மன்றே
மாயா விராத னுடல மன்றே
மாமக் கொடியோன் சிரமன்றே
வளர்துந் துமியி னெனும் பன்றே

கஞ்சப் பதத்தா லடர்ப்பதற்குக்
கருநுண் மணலைக் கொழித் தெடுத்துக்
கடைவா சலும்பே ரரங்குமிடை
கழியும் சிறுசோ றடுமிடமும்

விஞ்சச் சமைத்துச் சுவர் வளைத்து
விரவிப் பலபே தமை மடவோம்
விளையாட் டிடத்தைக் கலைப்பதற்கு
விதியோ விதியைப் படைத்த வுந்தி

செஞ்சக் கரக்கைப் பரஞ் சுடரே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே (2)

(2) சகடம் - சகடாசூரன் ; விராதன் - இவன் சாபத்தால் இலிஞ்சன் குமாரனாய்ப் பிறந்து இராமமூர்த்தி காட்டில் வந்திருக்கும்போது சீதா பிராட்டியைத் தூக்கிச் சென்று இராம லக்குமணரால் கையறுப்புண்டு சுவர்க்கம் புக்கவன். மாமக்கொடியோன் - மாமனாகிய கொடிய கம்சன் ; துந்துமி : மயன் குமாரன் வாலியால் கொல்லப்பட்டிறந்தவன். இவன் எலும்பின் குவியலை இராமர் காலால் தள்ளித் தம் வலிமையைச் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தனர். இடைகழி - வாசற்றிண்ணை ; இங்ஙனமே முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 711 ஆம் பாட்டில் "விதியோ உந்தன் விளையாட்டோ" என வருவது காண்க.

184 நறைகொட் டலர்மென் பொகுட்டுறையும்
நல்லா ளுவப்ப வெழுதீவு
நன்கு வளைந்த கடலேழு
நடுவண் வளைத்திங் கிதைவளைப்பக்

கறைகொட் டுலோகா லோகவரைக்
கற்பித் திவ்வா றகிலாண்டம்
காட்டி யிருவீர் விளையாடக்
கருது மிதற்கு மாறன்றே

பறைகொட் டவுணப் பெரும்புணரிப்
பசையற் றுலரக் கரிபரிதேர்
பஞ்சில் கிரிவெஞ் சூறையினில்
பறக்கும் அவைபோல் திசைசிதற

சிறைகொட் டுவணப் புள்வலவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே (3)

(3) நறை - தேன் ; அலர் - தாமரை ; நல்லாள் - இலக்குமி ; உலோகா லோகவரை ; சேனை முதலியார் எழுந்தருளியிருக்குமிடம் ; இருவீர் - நீயும் இலக்குமியும் ; பஞ்சில் . . பறக்கும் - கொடிய சூறைக் காற்றில் பஞ்சு பறப்பது போன்றும் மலை பறப்பது போன்றும் ; உவணப்புள் - கருடன் ;

185 குருளும் சிறிது முடிகூடாக்
குலையும் களவும் விழிபயிலா
கொங்கைத் துணையும் புனலிலெழும்
குமிழி யெனமார் பிடையரும்பா

மருளும் மருளுந் தரநகைக்கும்
வண்ணம் தெரியோம் பயிலுரைக்கு
மாற்ற மில்லோம் குறிப்புணரும்
மனமும் படையோம் மதனிருபன்

அருளும் தனியா ணையைமதியோம்
அறிவில் மடவோம் குழாத்தணுகி
அடிகேள் குறும்பு செயத்துணிந்தால்
ஆகத் திருப்பாள் நகையாளோ

தெருளும் தவத்தோர்க் கருமருந்தே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. (4)

(4) குருள் - பெண்டிர் தலை மயிர்; குலை - நடுக்கம்; மருளும் மருளும் - அடுக்குத் தொடர்; குறிப்பு - காமக் குறிப்பு; அறிவுஇல் மடவோம் - அறிவற்ற இளைய பெண்கள்; அடிகேள் - பெரியோரை விளிக்கும் விளி "எந்தம் அடிகேள் எம் முறை கேண்மோ" (மணி மேகலை மலர்வனம் புக்ககாதை) ஆகத்திருப்பாள் - இலக்குமி.

186 மகரப் பரவைக் குண்டகழி
மதிலே முடைத்தென் னிலங்கையெனும்
வளமா நகரைக் கலைப்பதற்கு
வயவா ளரத்தைச் செல்வித்தாய்

நகரத் துயர்ந்த புரம்மூன்றும்
நலியப் பகழி உருஎடுத்தாய்
நாகன் புரியும் வாணனுள
நகரும் குலையப் புள்ளூர்ந்தாய்

பகரக் கடிய நெடுந்தூரம்
பரந்த கிராதர் பதிசிதையப்
பகழி துரந்தா யவைகளைப்போல்
பகைப்பக் கருதேல் பழவடியோம்

செகரத் தினமே அருட்கடலே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செந்நெல் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. (5)

(5) மகரப்பரவைக் குண்டு அகழி - சுறு மீன்களையுடைய கடலான ஆழ்ந்த அகழி சூழ்ந்த; பகழிஉரு - திரிபுரமெரிக்கும்போது சிவபெருமானுக்குத் திருமால் அம்பாய் நின்றமை ..... பாட்டுக் குறிப்பில் காண்க. நாகன்புரியும் - தேவன் காவல் காக்கும். (சிவன், முருகன், விநாயகன், ஆகியோர் வாணன் நகரைக் காவல் காத்தனர்) பகரக் . ., . துரந்தாய் வேடர்கள் வசித்திருந்த இந்திரன் காவற்காடான காண்டவ வனத்தை அக்கினியின் பசி யடங்குவதற்காக அருச்சுனனும், கண்ணனும் கணைவிட்டு எரித்தனர்.

## வேறு

187 வாலி படக்கடு வாளி
மறப்பில் விடுத்ததும்
மாமுனி சொல்கொடு தாட
கையைப்பொரு தட்டதும்

கோலிய மாத்தலை ஓரடி
யிற்பட வைத்ததும்
கோபியர் சிக்கநெய் பால்திரு
டிப்புடை பட்டதும்

காலி துரத்திய கீழ்மையும்
மற்று முரைக்கிலோம்
காத லுனக்கடி யோமுன்
அடைக்கல மிற்றைநாள்

வேலி பயிர்த்தெறு மோசொல்
சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண
சிதைத்திடல் சிற்றிலே. (6)

(6) நீ மறைந்து நின்று வாலியை அம்பினால் கொன்றது, விசுவாமித்திரன் சொற்கொண்டு தாடகையென்ற பெண்ணைக் கொன்றது, அலங்கரித்த யானையை ஓரடியால் வீழ்த்தியது. கோபியர் - இடைப் பெண்கள் ; கோபியர்சிக்க - ஏழாம் வேற்றுமைத் தொகை ; பால் நெய் திருடி இடைப் பெண்களிடம் சிக்கி அடிபட்டது, பசு மேய்த்தது, முதலியன தாழ்ந்த செயல்களாகப் பெண்கள் கருதினர். தன்மீது சினந்து வந்த வைகுந்தநாதனைக் கண்டு நாங்கள் இவ்வாறு கீழ்மையாகச் சொல்லாமலே இருக்க இங்ஙனம் தண்டிக்கலாமா என்கிறார். தெறுமோ - அழிக்குமோ "வேலியே பயிரை மேய்ந்தது" என்பது பழமொழி வாண - வாழ்க என்பதன் மரூஉ.

188 ஆதி முதற்பிர மாவென
எப்புவ னத்தையும்
ஆக விதித்தனை நீயென
முற்று மளித்தனை

பூதி யுடல்சடை யோனென
முற்று மழித்தனை
போத வுனக்கிது வேதொழில்
எப்பொழு துக்குமேல்

வீதியி னிற்சிறு சோறட
வைத்த வடுப்புநீள்
வீடு மமைத்தவெம் மாடல்
கலைப்பது மொக்குமோ

வேதிய ருக்கனு கூல
சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண
சிதைத்திடல் சிற்றிலே. (7)

(7) பூதி உடல் சடையோன் - விபூதி பூசிய உடலையுடைய சிவன் ; இவன் அழிக்குங் கடவுள் ; அழித்தனை - சிற்றிலை அழித்தாய் ; போத - அறிவுடையவனே ; விளி ; "போத - உனக்கு எப்பொழுதுக்கும் இதுவே தொழில்" என்க.

189 ஓடு நதிப்புன லாடும்
விருப்பி னிடைச்சிமார்
ஓகையி னுற்றுடை யாடை
கரைக்கு ளிருத்துநீ

கோடுடை நற்றரு மேலதை
முற்று மெடுத்துமேல்
கோடலும் மற்றவர் நாணி
இரக்கவும் உட்கொளாய்

பாடு படுத்தினை யாமவர்
ஒப்பநி னைத்திடேல்
பாதமி சைச்சர ணுகதி
உற்ற வவர்க்கெலாம்

வீடு கொடுக்கும் விநோத
சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண
சிதைத்திடல் சிற்றிலே. (8)

(8) ஓகை - மகிழ்ச்சி ; பாடுபடுத்தினை - இது கண்ணன் யமுனைக் கரையில் காத்தியாயினி விரதம் அனுட்டித்து வந்த இடைப் பெண்கள் அவ்வாற்றில் சேலைகளைக் கரையில் வைத்து விட்டு உடையொன்றின்றி நீராடக் கண்ணன் இவர்கள் சேலைகளைக் குருந்த மரத்தின்மீது வைத்துக் குழல் வாசிக்கக் காரணம் அறிந்து அவர்கள் நீரிலிருந்தபடியே கேட்கக் கொடாது இறுதியில் எல்லோரும் நீரினின்று எழுந்து வந்து மரத்தின் கீழ் நின்று கேட்கத் தந்தனன்.

190 பூவை கிளிக்குமுன் நாமம்
உரைக்க அருத்தினோம்
பூமலர் பட்டணி காலை
உமக்கிதெ னச்சொல்வோம்

பாவை பொருட்டடு சோறு
படைப்ப துனக்குமுன்
பாடு மிடத்தினு மாடும்
இடத்தினும் மற்றினும்

சேவை உனைப்புரி வோமடி
மைக்குடி முற்றும் யாம்
சேவடி யிற்பரல் நோக
உறுத்தற நீக்கிலோம்

மேவல ருக்கெதிர் கால
சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண
சிதைத்திடல் சிற்றிலே. (9)

(9) பூவை—நாகணவாய்ப் பறவை (மைனு) ; அருத்தினோம் என்ற இது சொல்லிக் கொடுத்தோம் என்று பொருள் தந்தது. பட்டு - பட்டுப் புடவை ; பாவை - மரப் பொம்மை ; அடுசோறு - நிலாச் சோறு ; பரல் - பருக்கைக்கல் ; மேவலர் - பகைவர்.

191 காலை முறுக்கவிழ் வாரிசம்
ஒத்த கடைக்கணைக்
காண வெமக்கு முள்ளாசை
பெருத்த துரைக்கிலோம்

193 கடமுற் றிருந்தொழுகு புகர்முகக் களியானை
கைதலைக் கொடுமுழங்கக்
கவனமாய் புரவிதம் மேற்கொளும் வயவரைக்
கைத்துமருள் கொடுமுழங்க

விடமுற்று வெம்பணிக் கொடியோன் பொருட்டுயிர்
விடுப்பவரு வேந்தர் நெஞ்சம்
மிகுபறை யறைந்துதலை பொதிரெறிந் திருகரம்
விதிர்த்துளம் வெரீஇ முழங்க

மடமுற்று யோகினி யிடாகினி முதற்கூளி
மல்குவகை யின்முழங்க
மாருதி தனஞ்செயன் தேர்மிசை இருந்துசெரு
மகிழ்கணத் தொடுமுழங்க

திடமுற்று வெண்ணிற வலம்புரி முழக்குமால்
சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொருமுதல்வ
சிறுபறை முழக்கியருளே. (2)

(2) கடம் - மதம்; கைதலைக்கொடு முழங்க - தும்பிக்கையைத் தலைமேல் கொண்டு அஞ்சிப் பிளிறியோட; வயவரைக் கைத்து மருள் கொடு முழங்க - மேற்கொண்ட வீரர்களை வெறுத்துக் கீழே தள்ளி மயக்கம் கொண்டு கலைக்க; வெம்பணிக் கொடியோன் - கொடிய பாம்பின் கொடியையுடைய துரியோதனன்; பொதிரெறிந்து; நடுங்கி; விதிர்த்து - நடுங்கி; வெரீஇ - அஞ்சி; கூளி - பேய்கள்; மாருதி - அனுமன் இவன் வீமன் வேண்டுகோளால் அருச்சுனன் தேர்மீது கொடியாக இருக்க வரந்தந்து அங்ஙனமே இருந்ததால் அவனும் முழங்கியதாகக் குறித்தார். வலம்புரி முழக்கும் மால் என்க. வலம்புரிச் சங்கோதையால் இங்ஙனம் நிகழ்ந்ததாகக் குறித்தார்.

194 மருமலர்ப் பங்கய முகம் சுவைத் திதமூறு
மதுவுண்டு தாதளைந்து
வருசுரும் பினை யாம்பல் கண்டுளம் பொறுமையான்
மலரிதழ்க் கதவடைப்பப்

பெருமலர்க் கேதகை வசீகரம் செயுமாதர்
பெட்பெனப் பரிமளத்தால்
பிரசமுண் டெனவுட் புகுத்தி மென் பொடியினில்
பேதுறு மருள் கொடுப்ப

எமதுமண வாளன்வந் தனனெனப்
புன்னைநுண் தாதிறைப்பப்
பொன் சொரிய விதழிதன் விளநகை முகிழ்ப்ப மகிழ்
புதுமண விருந்து செய்யத்

திருமலி செழுஞ்சோலை வெண்ணெய்நக ராதிபன்
சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொருமுதல்வ
சிறுபறை முழக்கியருளே.

193 கடமுற் றிருந்தொழுகு புகர்முகக் களியானை
கைதலைக் கொடுமுழங்கக்
கவனமாய் புரவிதம் மேற்கொளும் வயவரைக்
கைத்துமருள் கொடுமுழங்க

விடமுற்று வெம்பணிக் கொடியோன் பொருட்டுயிர்
விடுப்பவரு வேந்தர் நெஞ்சம்
மிகுபறை யறைந்துதலை பொதிரெறிந் திருகரம்
விதிர்த்துளம் வெரீஇ முழங்க

மடமுற்று யோகினி யிடாகினி முதற்கூளி
மல்குவகை யின்முழங்க
மாருதி தனஞ்செயன் தேர்மிசை இருந்துசெரு
மகிழ்கணத் தொடுமுழங்க

திடமுற்று வெண்ணிற வலம்புரி முழக்குமால்
சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொருமுதல்வ
சிறுபறை முழக்கியருளே. (2)

(2) கடம் - மதம் ; கைதலைக்கொடு முழங்க - தும்பிக்கையைத் தலைமேல் கொண்டு அஞ்சிப் பிளிறியோட ; வயவரைக் கைத்து மருள் கொடு முழங்க - மேற்கொண்ட வீரர்களை வெறுத்துக் கீழே தள்ளி மயக்கம் கொண்டு கனைக்க ; வெம்பணிக் கொடியோன் - கொடிய பாம்பின் கொடியையுடைய துரியோதனன் ; பொதிரெறிந்து ; நடுங்கி ; விதிர்த்து - நடுங்கி ; வெரீஇ - அஞ்சி ; கூளி - பேய்கள் ; மாருதி - அனுமன் இவன் வீமன் வேண்டுகோளால் அருச்சுனன் தேர்மீது கொடியாக இருக்க வரந்தந்து அங்ஙனமே இருந்ததால் அவனும் முழங்கியதாகக் குறித்தார். வலம்புரி முழக்கும் மால் என்க. வலம்புரிச் சங்கோதையால் இங்ஙனம் நிகழ்ந்ததாகக் குறித்தார்.

194 மருமலர்ப் பங்கய முகம் சுவைத் திதழூறு
மதுவுண்டு தாதளைந்து
வருசுரும் பினை யாம்பல் கண்டுளம் பொறுமையான்
மலரிதழ்க் கதவடைப்பப்

பெருமலர்க் கேதகை வசீகரம் செயுமாதர்
பெட்பெனப் பரிமளத்தால்
பிரசமுண் டெனவுட் புகுத்தி மென் பொடியினில்
பேதுறு மருள் கொடுப்ப

எமதுமண வாளன்வந் தனனெனப்
புன்னைநுண் தாதிறைப்பப்
பொன் சொரிய விதழிதன் விளநகை முகிழ்ப்ப மகிழ்
புதுமண விருந்து செய்யத்

திருமலி செழுஞ்சோலை வெண்ணெய்நக ராதிபன்
சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொருமுதல்வ
சிறுபறை முழக்கியருளே. (

(3) கேதகை - தாழை ; பெட்பு - அன்பு ; பிரசம் - தேன் மலரையுடைய தாமரையினது முகத்தைக் கண்டு இன்புற்று இனிமை மிக்க தேனைக் குடித்து மகரந்தப் பொடிகளைப்பூசி வருகின்ற வண்டுகளை மலரையுடைய அல்லி (வேறொருத்தியுடன் இன்பம் அனுபவித்தனன் என) கண்டு மனம் பொறுமல் தங்கள் இதழ்களை அழைத்துக் கதவை மூடிவிட கவர்ச்சி செய்யும் பொது மகளிர் காதல் செய்வதைப் போன்று மலரையுடைய தாழை வாசனையால் தன்னிடம் தேன் இருக்கிறதெனக் கருதும்படியிருப்பதால் வண்டுகளை உட்புகச் செய்து தேனில்லாததால் அறியாதிருக்கும் மயக்கத்தை கொடுக்க ; அவ்வண்டுகள் மலரையுடைய புன்னை மரத்திடம் செல்ல "எமது மணவாளன் வந்தான்" என்று அவைகளிலுள்ள மலர்கள் நுண்ணிய மகரந்தங்களைத் தூவ, கொன்றை மரத்திடம் போக அவைகள் பொன் போன்று மகரந்தங்களைச் சொரிய, முல்லை மலர்கள் அண்டையில் செல்ல அவை இளைய புன்சிரிப்புச் செய்ய அத்தகை சோலை சூழ்ந்த வெண்ணெய் நகர் என்க. பகற் காலத்தில் தாழை, கொன்றை, புன்னை, பங்கயம் முதலியன மலர்வதும், ஆம்பல், முல்லை குவிந்திருப்பதும் இயல்பாயே யிருக்க அவைகள் வண்டுகட்குக் கதவை மூடுவதாகவும் மற்ற செயல்கள் செய்வ தாகவும் கூறியிருப்பது தற்குறிப்பேற்றவணி.

195 தூரத்தும் கொடுஞ்சின விடங்கருக் கஞ்சிமேல்
துள்ளும் பகட்டு வாளை
துளிமழைக் குலவகடு கீண்டிரவி பச்சைவெம்
துரகத முகம்புடைத்துப்

பரத்தும் கதிர்த்திங்க ளமுதம் குழப்பிவிண்
பாய் நதியின் மீனேடாடிப்
பாரிசா தத்தின் நிழல் மேயும் நிறைவெருவப்
பசும்பொன்மலர் சிந்திமீண்டு

வரத்துன்ன வானமீன் வழிக்கொளத் தேங்கனி
வயின் வயின் இளைப்பாற்றவெண்
மடற்கமு கடைப்பைதர மாந்தரும் விருந்து செய
வளர் செந்நெல் கவரிவீசத்

திரத்துள்ள முன் பொய்கை புகும்வெண்ணெய் நகராளி
சிறுபறை முழக்கி அருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொருமுதல்வ
சிறுபறை முழக்கியருளே. (4)

(4) இடங்கர் - முதலை ; மழை - மேகம் ; இரவி - சூரியன் ; துன்ன - ஆலோசிக்க ; கமுகு-பாக்கு மரங்கள் ; அடப்பை - வெற்றிலைப் பாக்கு, ஏலம் முதலியன ; ஓடத்துரத்துகின்ற சின முதலைகளுக்கு அஞ்சி மேலே துள்ளுகின்ற பெரிய வாளை மீன்கள் மேலேயுள்ள மேகக் கூட்டத் தின் நடுவிடத்தைக் கிழித்துச் சூரியனின் பச்சைக் குதிரைகளின் முகத்தைத் தாக்கித் தண் கதிர்களைப் பரப்பும் சந்திரனின் அமுதத்தைக் குழப்பி விண்ணில் உள்ள கங்கா நதியில் அங்குள்ள மீன்களோடு விளையாடிப் பாரிசாத மரத்தின் நிழலில் மேயும் காமதேனு முதலிய கூட்டங்கள் அஞ்சுமாறு கற்பகத்தின் பொன் மலர்களைச் சிந்தி மீண்டும் அப் பொய்கை வர ஆலோசிக்க வானிலுள்ள கங்கை நதியின் மீன்கள் எதிர் கொள்ளத் தேன் பொருந்திய பழங் கள் தன்னிடமுள்ள மதுவைக் கொடுத்துத் தங்கும் இடங்களிலெல்லாம் இளைப்பாற்றப் பாக்கு மரங்கள் வெற்றிலைப்பாக்கு முதலியன தர மக்களும் விருந்தினைச் செய்ய செந்நெல் தன் கதிர் களாகிய சாமரையால் வீச அத்தகை திறத்தோடு முன்னிருந்த குளத்திற்கு வந்து சேரும் வெண்ணெய்நல்லூர் என்க. திறம் - திரம் என எதுகை நோக்கி நின்றது. முன் உள்ள பொய்கை புகும் எனப் பிரித்துச் சேர்க்க. பொன்மலர் என்றுர் தேவலோகத்திலே உள்ளவை யாவும் பொன்மயமாதலால், ஆளி - ஆளுதலையுடையவன். இப்பாட்டு உயர்வு நவிற்சியணி.

196 வெம்பொறி பிறங்கு கண் கனகன் புடைத்திடு
மிடற்கற் றூணனைக்கு
விழிவட்ட மாயிடா முகமதி வெளுப்புறு
மிகபசு நரம்பு தோன்றுக்

கொம்போடு நுடங்குமிடை கண்ணுறு வல்குல்
கொடிஞ்சி யந்தேர் கனமுறுக
கொங்கை வரை சீயம்பால் பொதிந்தி டாக்கண்களும்
குழையுமணி வயிறு விம்மா

வம்பொடு சிறந்தவெதிர் புரைதோள்கள் மெலிவுறு
வரைகள் மூன்றுந் தெரிவுறு
வயாவுநோய் கொண்டிடா மதிபத்தும் நிறைவுறு
வந்துதித் தண்டமூகடும்

செம்பொன்வரை யும்பக முழங்குநர சிங்கமே
சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக் கொரு முதல்வ
சிறுபறை முழக்கியருளே. (5)

(5) பிறங்கு - விளங்கு; கனகன் - இரணியன் ; தூண் அனை - தூணுகிய அன்னை; கருப்பம் அடைந்தால் விழி வட்டமாகும்; முகம் வெளுக்கும் (மூன்றுமாதம்) முலை மீது பசு நரம்பு தோன்றும்; இடை இடம் பரக்கும்; அல்குல் கனக்கும்; முலையில் சீயம் பால் அடையும்; வயிறு பெருக்கும்; தோள்கள் மெலிவுறும்; வயிற்றிலுள்ள மூன்று மடிப்புக்களும் தெரியா; கருப்ப நோய் உண்டு; பத்துமாதம் ஆகவேண்டும். ஆகவே இங்ஙனம் ஒன்று மின்றித் தூணுகிய அன்னைக்கு வந்துதித்த நாரசிங்கமே என்க. முகமதி - உருவகம் ; அல்குல் கொடிஞ்சி அம்தேர் - அல்குலாகிய தேர் மொட்டுள்ள அழகியதேர், உருவகம் ; கண்களும்குழையும் அணி வயிறு - கண்களும் மாறுபட்டு நெகிழும் அத்தகை ஆபரணங்கள் கொண்ட வயிறு என்க. ஆபரணம் என்றது வயிற்றுக்கு மேலுள்ள முத்தாபரணங்கள் முதலியனவும் கீழேயுள்ள மேகலை முதலியனவும் நோக்கி. வம்பொடு சிறந்த வெதிர் புரைதோள்கள் - கச்சோடு சிறந்துள்ள மூங்கிலையொத்த தோள்கள். கொம்பொடு நுடங்கும் இடை - கொம்பினுடன் மாறுபட்டு அசையும் இடுப்பு ; கருப்பத்திற்கான குறிகளை முன் பிள்ளைத்தமிழ்க்கொத்து 542 ஆம் பாட்டில் காண்க. பொன்வரை - மேருமலை ; பக - பிளக்க;

## வேறு

197 நாகணை மீதில் யோகுசெய் வாயுனை
நத்தினர் பெறுகதி நீ
நான்முக ஞர்மறை ஓதிமமாகி
நலத்தொடு மருளிணையான்

மாகன காசுரன் ஓரறை தூணின்
மலைக்குமுன் அவனெதிரே
வாளரி யாயவன் மாமகன் வாய்மை
மகிழ்ச்சியி னிருவினை தேய்

ஆகலிஞலுனே யேசர ணுக
அடித்துணை தொழு பெரியோர்
ஆடுக பாடுக வாவென வோதினும்
அப்படிப் புரிகுவையால்

மோகன ரூப நாதர் சகாய
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. (6)

(6) நத்தினர் - விரும்பினவர் ;
"முன்னில் ஏழேழுலகுணர் வின்றியிருள்மிக உம்பர்கள் தொழுதேத்த "
அன்னமாகி யன்றருமறை பயந்தவனே."
என்றூர் திருமங்கையாழ்வார்.
அன்று அன்னமதாஞனே ; அச்சோ வச்சோ
அருமறை தந்தானே அச்சோவச்சோ. என்ற
பெரியாழ்வார் வாக்கினையோர்க.

கனகாசுரன் - இரணியன் ; அவன் மாமகன் - பிரகலாதன் ; தேய் ஆகலிஞல் - தேய்த் தாய் ஆகையால்,

198 சீதர நாரண வாமன கோவல
சிட்டர்க ளுறுதுணையே
தேவர்கள் நாயக பூமி மணுள
திருவிக்கிரம ஞகரியே

மாதவ மால்வசு தேவ குமார
மலர்க்கண் மணிவலஙனே
வாமபு ராதன ஆயிரவாய
வத்திரி துயில்ப வசா

கேதபு ராதிப மீனமோ டாமை
இருட்டிய னுருவுடையாய்
கேசவ பூரண ராகவ தேவகி
புத்திர கரியவதா

மோதா ராம கிரீடி செல்பாக
முழக்குக சிறுபறையே.
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. (7)

(7) கோவல சிட்டர்கள் - யாதவர்களாகிய நல்லவர்கள் ; புராதனன் - பழைமை மேற்கொண்ட முதற்கடவுள் ; ஆயிர வாயவத்திரி துயில்பவ- ஆயிரம் வாய்களையுடைய முகங்களையுடைய ஆதிசேடன் மீது துயில்பவனே. வத்திரம் - முகம். அதனையுடைய வத்திரி ஈண்டு இகர விகுதி வினை முதற் பொருளைக் காட்டியது. சாகேத புர அதிபா எனக் கூட்டி அயோத்தி நகரத்திற்குத்தலைவா என்க. இருட்டி - பன்றி. இருட்டியன் - வராகவதாரம் தாமோதரராம என்க ; கிரீடி செல்பாக - அருச்சுனனைச் செலுத்தும் தேர்ப்பாகனே ;

199 ஆதியு மீறுமிலாத புராண வுண்
அற்புதச் சரிதை யெலாம
ஆதி பராசரன் வேத வியாதன்
அவர்க்கரு மக னிவர்தாம

ஓதிய காதை அநேகம தேவ்வ்
உயிர்த்துணை யெனவுலகோர்
ஓதுவ ராடுவர் பாடுவர் நாடி
உளத்திடை நினைவரதால்

சோதிகொள் வீட்டை வார்பிற வித்துயர்
துய்த்திடு கில ரெனில்நின்
தோம நாம மலா தெவ ர்க்குமோர்
துப்புடை நலமுளதோ

மூதறி வானவ நாதர்கள்நாத
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. (8)

(8) பராசரனுக்கும் மச்சகெந்திக்கும் பிறந்தார் வியாசர் ; அவர்க்கு அருமகன் - சுகமுனிவர்; வியாசர் புத்திரப்பேறு வேண்டிச் சிவபிரானை நோக்கி யாகாதி காரியம் செய்யத் தனித்து அரணியைப் பிடித்துக் கடைகையில் கிருதாசி என்னும் அப்சரசு தோன்றி யவரைக் காமத்தில் மூழ்குவித்துத் தான்சுகம் எனும் கிளியுருக்கொண்டு இருக்கையில் வியாசர் வீரியம் அரணியில் விழுந்து சுகர் பிறந்தனர். வியாசரும் கிளியுருக்கொண்டு புணர்ந்து சுகர் பிறந்தனர் என்ப. தோம் அறு - குற்ற மற்ற ;

200 ஆலிலை மேலொரு பாலக னுயவண்
அற்புத முறுவடிவு
ஆர்கலி மீதர வாதன மாக
அணைத்தறி துயி லுருவு

மேலிரு நாலுட னுருள் சீர்பதி
மெச்சிய படி யுள நால்
வேதமு மோர்வரு சோதிகொள் தாமம்
விருப்புறு சடிலமும் நீள்

கோலம்தா மவ தாரநன் மேனி
குறித்ததும் இவைகளெலாம்
கோதறு சீரடி யார் தொழ நீ கொள்
குணத்திரு வுருவலவோ

மூலமு மீறு மிலா வகி லேசன்
முழக்குக சிறுபறையே.
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. (9)

(9) ஆர்கலிமீது அரவு ஆதனம் ஆக அனைத்து அறிதுயில் உருவு - கடல் மீது ஆதி சேடசயனத்தில் சேர்ந்து யோக நித்திரை செய்யும் வடிவம். ஓர்வுஅரு—அறிவதற்கு அரிய ; சடிலம் - சடை ; கோது அறு - குற்றமற்ற ;

201 சேவடி நோதர வேதரு மாதியர்
செப்பிய வுரை கொடுபோய்ச்
சீர்பெறு வாரண மாநகர் மேவு
திருக்கிலன் மகனுடனே

ஆவது பேசியும் நாடு கொடாமல்
அடர் சமர் புரிவனென
ஆயவ னோதிய வாசக நீமுன்
அமைத்தது தவிரு மதோ

கோவல னேகுட மாடும் விநோத
குகற்குயி ரின்துணைவா
கோகன கரசனை யாசைகொள் நாயக
குற்றுரு வுடையவனாய்

மூவடி மாவலி தாவெனும் மாய
முழக்குக சிறுபறையே
மோதறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. (10)

(10) தரும ஆதியர் - தருமாதியர், தருமனை முதலாகக்கொண்ட பாண்டவர், தீர்க்க சந்தி பெற்ற வட மொழித் தொடர் ; வாரண மாநகர் - அத்தினபுரம் - அத்தி - யானைக் கொரு பெயர். அதனைக் குறிக்கும் பரியாயமான வாரணம் என்பதால் அத்தினபுரத்தைக் குறித்தார் திருக்கு இலன் - கண்ணில்லாத திருதராட்டிரன் ; அவன் மகன் துரியோதனன் ; நீமுன் அமைத்தது என்பது பூமிதேவிக்கு வாக்குக் கொடுத்து அதனை வில்லிபாரதம் சூது போர்ச் சருக்கம் 204—207 பாட்டுகள் காண்க. குடம் - குடக் கூத்து தனது பேரனாகிய அநிருத்தனை வர்ணன் சிறைப்படுத்த அவனது நகர வீதியிற் சென்று கண்ணன் குட மெடுத்தாடிய கூத்து. குகன் - குகன் என்னும் பெயருடைய வேடன். இராமாவதாரத்தில் நட்புகொண்டவன் ; கோகனக ஆசனை - தாமரையை ஆசனமாகவுடைய திருமகள் ; குறுமை+உரு குற்றுரு வாமனாவதாரம்.

## சிறுதேர்ப் பருவம்

202 குங்கும மணிக்கலச விளமுலைப் பொற்றொடிக்
குறுநகைப் பசியவேய்த்தோள்
கோகனக மலர்முகப் பிறைநுதல் சுருள்குழல்
குதலையந் தீஞ்சொற்சினம்

பொங்கு மரவின்படம் புரையக லல்குல்
பொலன்சிறக் கோதிமநடைப்
புனைமடல் கமுகமிட ரரிபரந் திருகுழைப்
பொருங்கரு நெடுங்கடைவிழித்

தங்கு மிளவாழைக் குறங்கலத் தகவடித்
தளரிடைச் சுழிகொள் உந்தித்
தளிரியல் புருவவில் வள்ளைவார் குழையொளி
ததும்புசெம் மணிமேகலைச்

செங்குமுத மெல்லிதழ்க் கோபியர்க் குறுதுணைவ
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. (1)

(1) கலசம் - குடம் ; வேய் - மூங்கில் ; கோகனக மலர் முகம் - தாமரைமலர் போன்ற முகம் ; ஓதிமம் - அன்னம் ; கமுகு - பாக்குமரம் ; அரி பரந்து இரு குழை பொரும் கரு நெடுங் கடை விழி - செவ்வரி பரந்து இருகாதுகளையும் போரிடும் கரிய நெடிய கடைகளையுடைய கண்கள் ; குறங்கு - தொடை அலத்தக அடி - செம்பஞ்சுக் குழம்பூட்டப் பெற்ற பாதம் ; சுழி கொள் உந்தி - ஆற்றின் சுழியொத்த உவமைகொண்ட கொப்பூழ் ; தளிர் இயல் -மாந் தளிரினை யொத்த உடல் தன்மை ; வள்ளை வார் குழை - வள்ளைப்பூ வொத்த காதுகள் ; ஒளித்தும்பு செம்மணிமேகலை - ஒளி மிகுகின்ற சிவந்த மாணிக்கம் பதித்தமேகலை ; ஈண்டு கோபியர்களை வருணித்ததையும் நோக்கற்பாலது.

203 வஞ்சினக் கருமனக் கஞ்சமா மன்சிலை
மகங்காண வருக என்ன
வந்தகாந் தினிமகன் தேர்விடக் காளிந்தி
மாநதிக் கரைசென்றவன்

அஞ்சனப் புனல்படிந் தாடவந் நீரினிடை
ஆயிரம் படநாகமேல்
அறிதுயில் கொளு முருவம் ஒன்றுகண் டதிசயம்
அடைந்துகரை ஏறவங்கு

மஞ்சினைத் தொடவுயர மணிக்கொடித் தேரினும்
மலர்க்கண் களிப்பநோக்கி
வந்தனை புரிந்துதுதி செய்யநீ செயுமாயம்
வானவர்க் குண ரலாமோ

சிஞ்சிதப் பரிபுரச் சேவடிப் பரமனே
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தி யருளே. (2)

(2) சிலை மகம் - தனுர்யாகம் ; காந்தினி மகன் - காந்தினி என்பவளுக்கு மகனான அக்குரூரர் ; காளிந்தி - யமுனை ; அஞ்சன்பிபுனல் - கருநிறமான நீர் ; யமுனை நதியின் நீர் கருநிறமாயிருக்கும்; மஞ்சு ; மேகம் ; வந்தனை - வழிபாடு ; பரிபுரம் - சிலம்பு. சிஞ்சிதம் அசையும் ஆபரணங்களாலெழுமொலி ;

அக்குரூரர்.—சுவ பல்கனுக்கும் காந்தினிக்கும் பிறந்தவர். கம்சனின் மந்திரி, இவர் கம்சன் வேண்டுகோளால் நந்தகோபரிடம் சென்று தனுர்யாகச் செய்தி கூறிப் பலராமகிருஷ் ணரைத் தேரில் சாரதியாக நின்று அழைத்துக்கொண்டு யமுனு நதிக் கரையடைந்து தாம் தனித்து நீரில் மூழ்கி நீராடினுர். இவர் பலராம கிருஷ்ணரிடத்து அந்தரங்க பக்தியுடையவ ராதலால் பலராம கிருஷ்ணர்கள் இருவரும் இவர்க்கு நீரிற்குள் தேருடன் தரிசனம் தரத்

திடுக்கிட்டு வெளியில் வந்து அவர்களை மீண்டும் தேரிலே கண்டு களித்து மீண்டும் மூழ்கி நீராடும்போது ஆதிசேடசயனத்துடன் பரமபத நாதனாகிய திருமாலை நீரில் கண்டு தரிசித்து பலராம கிருஷ்ணர்களை அழைத்துச் சென்று கம்சனுக்கு வரவு கூறியவர்.

204 கார்நடத் துங்கொடைக் கர்ணனும் விசயனும்
காது சம ராடுபோதில்
கனலினுக் கமுதூட்டு நாளுடல் வெதுப்புறும்
காரணப் பகையுடைமையால்

போர்நடத் துஞ்சிலைக் கழன்முகப் பகழியாய்ப்
போதரும் கருமிடற்றுப்
பொறியுடைப் பணவரவு வெம்பிவரு மாகண்டு
பூமகள் நெகிழ்ந்துதாழப்

பார்நடத் துந்திருப் பதகமல மூன்றியப்
பாண்டவர்க் கரசுநல்கிப்
பாந்தள்வெம் கொடியவன் குலமடங் கலுமறப்
படையொன்று கைக்கொளாது

தேர்நடத் துந்தொழில் கண்ணமணி வண்ணனே
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. (3)

(3) கார் நடத்தும் கொடை - மேகத்தையும் ஒப்புமையில் துரத்தி நடத்துகின்ற அத்தகைய கொடை; காதுசமர் - கொல்லுகின்ற சண்டை; இது 17-ம் நாள் சண்டை; கனலினுக்கு....................அரவு—கண்ணனும் அருச்சுனனும் தனித்திருந்த போதில் அக்கினி பிராமணவடிவங் கொண்டு யாசித்து அதன்படி காண்டவ வனத்தை (இந்திரன் காவற்காடு, யமுனையாற்றங்கரை மேலிருந்து) எரிக்கும்போது அதனுள்ளிருந்த தக்ஷன் மகனான அசுவ சேனன் என்ற இப்பாம்பு அக்னியில் அகப்பட்டு தப்பியோட நினைத்து ஓட அருச்சுனன் கணையெய்ய வாலினிடம் பட்டு இந்திரனால் காப்பாற்றப்பட்டு அருச்சுனன் பகைவன் யாரென யோசித்து இறுதியில் கர்ணனிடம் சென்று வளர்ந்தான். குந்தியிடம் தந்த வாக்குப்படி 17-ஆம் நாள் சண்டையில் அருச்சுனன் தலையைப் பார்த்து இக்கணையை ஏவ, அப்போது கண்ணன் தேரைச் சிறிது கீழ் அழுத்த அருச்சுனன் கிரீடத்தை மட்டுமே கொணர்ந்தது. பின் அருச்சுனனால் கொல்லப்பட்டான். அழல் முகப்பகழி - அக்கினிக்கணை போன்று; பொறி - படப் பொறி: அரவு - அசுவசேநன்; பாந்தள் - பாம்பு.

205 பாராதி யைம்புலனு மைந்துநிலை யென்புதோல்
பசுநரம் பூன்தசையெலாம்
பருவாணி சிற்றாணி பலகைமேல் விரியாடை
பகருமிரு வினையுமச்சுப்

பேராத வாருயிரும் மனமுதல் பொறிகளும்
பெரும்பரியு மூர்வலனுமாம்
பிறப்பிறப் பின்பதுன் பங்களும் நான்குருள்
பெயர்பெற்ற மாயைவீதி

ஆராத கருமவிந் திரியமோ ரைந்துமேல்
அமரலங் காரமெனமேல்
ஆசையொரு மூன்றுமே வோட்டமிவ் வாறுசீ
வான்மா வனந்தமுமோரோர்

தேராக்கி யவைகளை நடத்திவினை யாடுமால்
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுசீர் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. (4)

(4) பாராதி ஐம்புலன் - நிலன், நீர், தீ, வளி, விசும்பு என்பன. நிலை - தேர்த்தட்டு. மனமுதல் பொறிகளைக் குதிரைகளுக்கும் தேர்ப்பாகனை ஆருயிர்க்கும் எதிர் நிரனிறையாகக் கொள்க. இங்ஙனம் கூறியது மன முதலிய பொறிகள் தன் வழிச் சென்றாலும் ஒழுக்கமுள்ள உயிர் நல் வழியே செலுத்து மாதலால் பாகனுக்குவமை கூறினார். "ஒழுக்கம் விழுப்பம் .".............படும்" என்ற குறட் கருத்தை யோர்க. உருள் - சக்கரம். பிறப்பு மிறப்பும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவன போன்று சக்கரமும் சுழன்று வருவதால் இங்ஙன் கூறினார். " துகடீர்.................... அகடுறயார் மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போல வரும்" (நாலடியார்) என்ற பாட்டினை ஓர்க. கரும இந்திரியம்.—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்பன, ஆசை மூன்று.—மண், பெண், பொன்.

206 வெங்கதிர்முன் நின்றிரத முன்செலப் பின்சென்று
விஞ்சைகள் பயின்ற வனுமான்
வேதண்ட மன்னதிண் தோள்நிற்ப வாசவன்
விடுத்திடு தடந்தேர் மிசைத்

துங்கமர கதமணிப் பெருவரை யெனநின்று
தோள்பதித் திருநிருதர்கோன்
தொகையுடை முடிச்சிரம் பத்துமற் றற்றுமேல்
தோன்றுதல் வியந்துநோக்கிப்

பங்கய னயிற்கணைக் கவனுயிர்ப் பலியீந்து
பட்டவா னரருமுய்யப்
பைந்தொடி யுடன்மலர் விமானத் தயோத்தியம்
பதியடைந் துலகோர்தொழச்

செங்கதி ரவன்குலம் தழையவர சாளுமுகில்
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. (5)

(5) கதிர் - சூரியன்; வெங்கதிர்......அனுமான்; இவர் இளமையில் சூரியன் இரதத்திற்கு முன் சென்று நவவியாகரணங்கற்றவர். வேதண்டம் - மலை; அனுமான்...... மிசை—இராவணன் தேரிலிருந்து சண்டை செய்யும்போது இராமர் அனுமான் தேரின் மீதிருந்து சண்டை செய்ய, இந்திரன் கண்டு தன் தேரினையும் சாரதி மாதலியையும் அனுப்பினான். பின்னர் அதன் மீதிருந்து சண்டைசெய்து சிரம், கரம் முதலியன பல முறை கொய்தும் விபீஷணன் உதவியால் இரகசியம் அறிந்து பிரமாத்திரத்தை மார்பில் எய்து உயிர் போக்கினார். இரு நிருதர் கோன் - கருமையையுடைய அசுரர்கட்கு அரசன், இராவணன்

(இருமை - கருமை) வாசவன் - இந்திரன் ; தொகை.................... தோன்றுதல்— இராவணன் அமுதம் உண்டதால் இவ்வாறு நிகழ்ந்ததென்பர். பங்கயன் அயில்கணை - பிரமனது கூரிய அத்திரம் ; (பிரமாஸ்திரம்) பட்ட வானரர் உய்ந்தது - மறுபடி சஞ்சீவி மலை கொணர்ந்து இறந்த குரங்குகளை பிழைப்பித்தார் இராமர் ; பைந்தொடி - சீதை, அன்மொழித்தொகை.

## வேறு

207 மன்றல் நடத்தும் மலர்களெல்லாம்
வண்டு நடத்தும் செழுங்கமல
வாவி நடத்தும் சிறையெகினம்
மடுவு நடத்தும் தவள சங்கம்

குன்றம் நடத்து முருக்களிறு
கொடுவெஞ் சினமு மதனடத்தும்
குலவும் பரியைங் கதிநடத்தும்
கொடிகொள் மறுகு விழாநடத்தும்

ஒன்ற நடத்தும் பருவமின்னார்
உள்ளம் நடத்தும் அனங்கன்வெம்போர்
உயர்பொன் மதில்கார் முகில்நடத்தும்
உலகம் நடத்தும் நீதி தண்கால்

தென்றல் நடத்தும் வெண்ணெய் நல்லூர்ச்
செல்வா சிறுதேர் நடத்துகவே
செழிக்கும் மலர்மென் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. (6)

(6) மன்றல் - வாசனை ; எகினம் - அன்னம் ; உரு - பெரிய ஐங்கதி - "விக்கிதம், வற்கிதம், வெல்லுமுப் கண்டம் மத்திமம் சாரியோடைந்து" என்பதுகாண்க ; கொடிகொள் விழா என்க ; மறுகு - தெரு ; மின்னார் உள்ளம் அனங்கன் வெம் போர் நடத்தும் என்க உலகம் நீதி நடத்தும் என்றும் தண்கால் தென்றல் நடத்தும் என்றும் கொள்க. மற்ற பொருள்கள் என்னென்ன நடத்துகின்றன என்று கூறி நீயும் தேர் நடத்துக என்று கூறுவது சிறு பாலருடைய இயல்புக் கேற்பத் தாயர் முதலியர் கூறுவது போன்று அமைந்துள்ளது கருதி மகிழற்பாலது. உயர் பொன் மதில்........நடத்தும் - உயர்வுநவிற்சியணி.

208 மலையை வளைக்கு முலையுருக்கும்
மணியைத் திணிதோள் சிசுபாலன்
மன்றல் விளைக்க வரவந்நாள்
மடந்தை விடுத்த முடங்கல் முன்னூல்

கலையை வளைக்கும் கிழமறையோன்
காட்ட வுணர்ந்து தடந்தேர்மேல்
கவுரி வளைப்பில் கவர்ந்து செல்லக்
கறுவிச் சமரா டுருக்குமியைத்

தலையை வளைக்கும் சிகையைந்தாச்
சசிவாய்ப் பகழி விடுத்திறுகத்
தடந்தேர்க் காலில் பிணித்தெதிர்ந்த
தரணி பாலர் குலைந்தோடச்

சிலையை வளைக்கும் வெண்ணெய் நல்லூர்ச்
செல்வா சிறுதேர் நடத்துகவே
செழிக்கும் மலர்மென் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. (7)

(7) மன்றல் - கலியாணம் ; மடந்தை - உருக்குமணி ; முன்னூல்கலையை வளைக்கும் - பழைய வேதமாகிய கலையை நன்கு கற்ற ; வளைப்பு - குடியிருப்பிடம் ; சசிவாய்ப்பகழி - அர்த்த சந்திரக்கணை ; தடந்தேர்க்காலில் இறுகப் பிணித்து என மாற்றிக் கூட்டுக. உருக்குமணி—பீஷ்மகன் குமாரி, தமயனாகிய உருக்குமிதன்னைச் சிசுபாலனுக்கு மணப்பிக்க இருந்ததை ஒரு பிராமணர் மூலமாய்க் கண்ணனுக்கறிவித்துக் கௌரி பூசையெனக் கூறி அக்கோயிலுக்குச் செல்ல அங்குக் கண்ணன் வந்து தேரிலேற்றிச் செல்லத் துவாரகை சென்றனள். அப்போது உருக்குமி பொறுமல் போர்க்குவர அவனை அர்த்த சந்திரபாணங்களால் கலங்க அடித்து ஐந்து விதமாகக் குடுமி வைத்துத் தேர்க்காலில் கட்டினார். பின் உருக்குமணி வேண்டக் கொல்லாது விட்டார்.

" உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு விருப்புற் றங்கேக விரைந்து எதிர் வந்து செருக்குற்றான் வீரஞ் சிதையத் தலையைச் சிரைத் திட்டான் வன்மையைப் பாடிப்பற தேவகிச் சிங்கத்தைப் பாடிப்பற. "

என்ற ஆழ்வார் வாக்கினையோர்க.

209 நிறக்கும் வடநூல் மொழியதனால்
நிகழ்த்தும் வில்வப் பெயர்முனிவன்
நெடுநாள் முயன்ற தவத்தினுக்கு
நீவேண் டுவன வுரையென்ன

மறக்கும் கருத்தி னடியனுக்கு
மச்சம் முதலாய்ப் பரியீறாய்
வடிவம் பத்தும் கண்டுதொழ
வரம்வேண் டுமெனப் பணித்தனுமே

பறக்கும் பறவைக் கரசன்மிசைப்
பதும மடந்தை பக்கநிற்பப்
பகரும் முனிவர் விண்ணோர்கள்
பரவப் புவனம் தழைப்ப நன்மை

சிறக்கும் வெண்ணெய்ப் பதியுவந்த
செல்வா சிறுதேர் நடத்துகவே
செழிக்கும் மலர்மென் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. (8)

(8) பரி - கல்கி அவதாரம் ; பறவைக்கரசன்—கருடன் ; வில்வ முனிபன் - இவ்வரலாறு இவ்வூர் தலபுராணத்திலுள்ளது போலும்.

0 மனையும் மதிலும் மாதங்கம்
மறுகெங் கணுமா மாதங்கம்
வாவி தொறு நந் தனவனங்கள்
வாடை செறிநந் தனவனங்கள்

நினையற் கரும்வான் தொடுந்துவசம்
நிறைகற் புடையார் தமது வசம்
நிதிபூண் சொரியு மெவர் கரமும்
நிகரன் றிமையோர் பொன்கரமும்

புனையும் மணியா லிருள்விலகும்
புத்தேள் விழாக்கள் மிக விலகும்
பொழியும் செல்வம் திருவனிதை
போதன் தானே புகழ்வனிதைத்

தினமும் செழிக்கும் வெண்ணெய் நல்லூர்ச்
செல்வா சிறுதேர் நடத்துகவே
செழிக்கும் மலர்மென் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே (9)

(9) மனையும் மதிலும் மாதங்கம் - மனை, மதில் முதலியன பொன்; மறுகு எங்கணும் மா மாதங்கம் - தெரு வெல்லாம் பெரிய யானைகள்; வாவிதொறும் நந்தன வனங்கள் (நந்து + அன + அனங்கள்)—குளங்களிலெல்லாம் சங்கினையொத்த வெண்மையான அன்னங்கள்; வாடை செறி நந்தன வனங்கள் - வாசனை மிகுந்த நந்தவனத் தோட்டங்கள்; நினையற்கு அரும்வான் தொடும் துவசம் - நினைத்தற்குமரிய தூரத்திலுள்ள ஆகாயத்தைக் கொடிகள் தொடும்; நிறை கற்புடையார் தமது வசம் - கற்புடைய பெண்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவது அவர்களது வசமே; "சிறைகாக்கும் . . . . . . . தலை" என்ற குறள் நோக்குக. இமையோர் - தேவர்; மணி - மாணிக்கம்; இருள்விலங்கும் - இருள் கெடும்; புத்தேள் விழாக்கள் மிக இலங்கும் - தெய்வத திருவிழாக்கள் மிகவும் விளங்கும்; போதன் - பிரமன்; வனிதை - திருமகள்; புகழ்வனிதை - வினைத்தொகை;

## வேறு

21 நல்வருணை நான்கினும் மானிடவர் தந்தொழில்
நடாத்திவுயர் புகழ்தழைப்ப
நன்மை பெறு திருமுனைப் பாடிநா டெங்கனே
நாளும்விளை செந்நெலோங்கப்

பல்வகைய மணிகளும் சாந்துமகி லும்மலர்ப்
பந்தியும் சிந்தியலையில்
பாவையர்க ளுந்திவரு பெண்ணைமா நதிபுனல்
பரந்து குறை யாது பெருகக்

கல்வி நிறை மாந்தரும் கற்பு நிறை மங்கையர்
கணங்களும் வயமைந்தரும
கனகமணி மேடையும் தேவர்மங்கல விழாக்
காட்சி மிக நனி சிறந்து

செல்வம் வளர் வெண்ணெயம் பதிதழைய மருவுமுகில்
சிறுதேர் நடத்தி யருளே
தேவாதி தேவவை குந்தநா யகர்வாழி
சிறுதேர் நடத்தி யருளே (10)

(10) மணி - இரத்தினங்கள் ; சாந்து - சந்தனம் ; பாவையர்கள் உந்திவரு பெண்ணை - பெண்களின் கொப்பூழ் போன்று சுழித்து வருகின்ற பெண்ணை நதி.

(திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.)

## மணவைத் திருவேங்கடமுடையான் பிள்ளைத் தமிழ்

### காப்புப் பருவம்

#### நம்மாழ்வார்.

212 பொன்னு ராழிப் படைசுமந்து
புவனம் காக்கும் பூவை வண்ணப்
புத்தேள் மணவை நகர் பொருந்தும்
புயலைத் திருவேங் கடமுகிலைத்

தென்னு ரமுதத் தமிழ்ப் பனுவல்
தெளிந்து பிள்ளைத் தமிழ்ப் பாடுஞ்
செய்ய பதந்தோ றினும் காக்கச்
செய்யும் கருணை திளைத்தோங்கி

முன்னுள் மறைநா லாயிரமாய்
முறையாற் றுறைச் செந் தமிழ்மாலை
மொழியுந் தோறு மனங்களிப்ப
மொழிந்த கனிவாய் முகிழ்முறுவல்

பண்ணு ளடியா ருளம் விளங்கப்
பாணித் துறையும் பராங்குச நூல்
பாவேந் தருக்கும் வேந்த னினைப்
படரும் கிரணப் பதயுகமே (1)

(1) ஆழி - சக்கரம் ; பூவை வண்ணம் - காயாம் பூ ஒத்த நிறம் ; தென் - அழகிய ; பாணித்து - நிறைவேற்றி ; பராங்குசர் - நம்மாழ்வார் ; முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து, 102-ஆம் பாட்டு, 562-ஆம் பாட்டு குறிப்பு காண்க.

#### திருமகள்

213 பாரும் புனலும் விசும்புஞ் சுசியும்
படர்தரு படியேழும்
பதமலர் முளரிகொ டளவிடு துளபப்
பச்சைப் புயல் மேனி

வீரம் புரிதரு வீரன் வேங்கட
முகில்மிசை யின்னிசையால்
விள்ளப் புகழ்பெறு பிள்ளைத் தமிழ்ச் சொல்
விரகொடு புகழ்பெறவே

காருந் துளியமு தாரும் பிறையுங்
காணரு மலையமலைக்
கால்முந் திரதமுன் னூருஞ் சேய் பெறு
காரணி யாரணி நேர்

வாரும் பூணும் பூணுங் கனதன
மலர்மயி லிலகொளிசேர்
மலரடி கள்மென் மனமிசை கனிய
வழுத்தி யழுத்தவனே (2)

(2) சுசி - ஈண்டு அக்கினி ; படி - பூமி ; பத முளரி மலர் - உருவகம் ; பதமலர் . . . . அளவிடு - திருவிக்கிரமாவதாரத்தில் ; விரகொடு - உற்சாகத்தோடு காரும். . . . . சேய்-மேகமும் துளிக்கும் அமுதமும் பொருந்திய சந்திரனும் காண்பதற்கரிய உயரமுள்ள பொதிய மலையினின்று வரும் தென்றல் காற்றுன மனத்தைக் காட்டிலும் முந்திச் செல்கின்ற தேரை முன்னதாக ஊர்ந்து செல்கின்ற மன்மதன் ; மலையமலை - பொதிய மலை மன்மதனுக்குத் தென்றல் தேராகும் ; சந்திரன் தேவர்கட்கும் பிதிரர்க்கும் அமுதம் கொடுப்பது தெரிந்ததே. சேய் பெறுகாரணி.—கண்ணனுக்கும் திருமகளவதாரமான உருக்குமணிக்கும் மன்மதன் சிவனால் எரிக்கப்பட்ட பின்னர் மகனாக வந்து பிறந்து பிரத்தியும்னன் என்று பெயர் கொண்டதால் இங்ஙனம் கூறினர். வார் - கச்சு ; மலர் மயில் - மலரின் தங்குகின்ற மயிலினை யொத்தவர்.

## கலைமகள்

214 சில்லியந் தேர்மே ...... கதந்
திங்கள் நிறம் பாசடையதாய்ச்
செறிகதிர்க் கிரணநிறை யருவிசாய்த் தெழுமிரவி
செங்கமல மென்னுப்பணே

புல்லியந் திரையே......வுததியிற்
பொறியுடற் கறையணைத்தே
பொங்குகண் ணவனையின் றித்துயி லுணர்ந்து வளர்
பொழிகருணை யங்கடலினைச்

சொல்லியல் கொழித்ததமிழ் தேர்மணவை நகர்மேவு
சுந்தர பரந்தாமனைத்
துதிசெயும் பனுவற்றொடைக்கவிதை நாவினில்
தொன்று தொட் டினிதிருக்கும்

வல்லியபி ராமிவெண் கமலா சனத்திவெண்
வடிமனைத் துதிகமேன
வடிசுடரி ளுள்தண்டா மரைத் தழுவு மன்னமிரு
மலரடித் துணைசரணமே (3)

(3) சில்லி - சக்கரம் ; பாசடை - பசிய இலை ; இரவி - சூரியன் ; உத்தி - கடல் ; கறையணைத்தோ - விஷம் பொருந்திய ஆதி சேடனாகிய படுக்கையில், அணை - படுக்கை ; வெண்கமலம் - வெண்டாமரை ; அன்னம் - அன்னம் போன்ற சரசுவதி.

### திருமங்கையாழ்வார் முதலியோர்

215 கல்வேழ முண்ணவெதிர் நல்வேழ முதவுமொரு
கண்வேழ மடுத்தமுன்னுள்
காயிரவைத் தீர்த்தருளும் மாயனைத் தூயனைக்
கருதுமல ருள்நேயனைக்

கொல்வேழ மிருகோ டொடித்தகோ ளரியினைக்
கோசலைக் கிருகண் மணியைக்
குன்றுத வளமைதரு மணவை வளர் கொண்டலைக்
கூறுமென் கவிதழையவே

பல்வேத முதலான வாறங்க மான நிரைப்
பரவையைக் கரை கண்டுமே
பாசிலைத் துளவமலர் வாசனைத் தமிழ் கொண்டு
பாடுமொரு பன்னிருவர்தாள்

சொல் வேலை யமுதமென நினைதோறும் புளகமொடு
தோத்திரம் செய்து கல்லில்
தோற்றுத வகையதனை மாற்றினே னடிமையில்
தோன்றுமுன் னடிமை பெறவே (4)

(4) கல்வேழம் - கல்யானை ; நல்வேழம் - நல்ல கரும்பு ; கண் வேழம் - கணுக்களையுடைய மூங்கில் சிவபிரான் திரு மூங்கிலாய்ப்பிறந்தது முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 369-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. கல்வேழம் . . . . . . . . . . . உதவும் ; எல்லாம் வல்ல சித்தராய் எழுந்து மதுரைக்கண் திருவிளையாடல் செய்த சிவபெருமானைப் பாண்டியன் சோதிக்கும் பொருட்டு "இக் கல்லானையைக் கரும்பு தின்னவைப்பீரா" என அங்ஙனமே தின்னக் காட்டிப் பின்னும் அவனது தாரையும் பிடுங்க ஆரம்பிக்க பழையபடி செய்தார். (திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம்). காய் இரவு - வருந்தும் பசிக்காக யாசிப்புத் தொழில் ; . . . . . . . . .ஆம் பாட்டின் குறிப்புக் காண்க. கொல் வேழம் - குவலயாபீடம் ; அரி - சிங்கம் ; பின்னிருவர்களின் பெயர்களை முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 110-ஆம் பாட்டின் குறிப்பில் கண்டு தெளிக.

### பன்னிரு சூரியர்கள்

216 போராழி சூழுலகி லிருபோதும் நிறைதந்து
போக்கினும் போகாதுநேர்
பொங்கிவரு நிருதரிருள் பருகு சுடர் நேமியைப்
பொன்னணியும் மணிமருமனைத்

தேராழி பார்த்தனுக் கூருமது சூதனைத்
திருவேங் கடப்புயலினைத்
தென்மணவை நகர்மேவு குழகனைத் துதிசெய்யும்
செய்யதமிழ் காத்தருளவே

பேராழி நீள்சயில வெயிலுடுத் தோங்கிவரு
பின்னுதிரை யாழியுடைசேர்
பெருஞால வாழியும் வெற்பேழும் வாழிய
பிறங்குதிசை யொருபத்துமே

ஓராழி கொண்டதேர் கொண்டிருட் கடலுடைய
ஊருமொரு பன்னிருவர்தாள்
உட்கமல மலருவகை யளவிலன் புடனேத்தி
உவகையின் பரவுவேனே (5)

(5) போர் ஆழி - அலைகள் ஒன்றோடொன்று தாக்குகின்ற கடல்; இரு போதும் நிறை தந்து - பகல் இரவு என்ற இரண்டு காலங்களிலும் வெயில் காய்ந்து; நிருதர் - அசுரர்; நேமி - சக்கரம்; குழகன் - இளையவன்; சயிலம் - மலை; எயில் உடுத்து - அரணாக உடுத்து; திசைப்பத்து; எட்டுத் திக்குக்களும் மேல் கீழ் என்ற இரண்டும் நோக்கிப் போலும்; ஓராழி - ஒற்றைச் சக்கரம்; பன்னிருவர் - பன்னிரு சூரியர்.

### சப்த கன்னியர்

217 பால்வா யொழுகி வழிகுழவி
பச்சைப் பிள்ளை பிறைதவழும்
பவளச் சடைச்செவ் வரனைவல
மாகத் திருத்தி வளரவளர்

மால்வாய் வளைந்தாங் குயர் செங்கை
மணவைத் திருவேங் கடநாதன்
மலருங் கஞ்சச் சேவடிக்கே
வனையும் பிள்ளைத் தமிழ்மாலை

நூல்வாய் திரையூர் நிலவூர்ப்பில்
நுணந்த கேள்வி சிறிது மில்லேன்
நுவலக் கருணை புரிந்தருள்வார்
நுடங்கி யொசியின் தூசுபடி

சேல்பாய்ந் தெனவே களித்துவள்ளை
சென்று மீண்ட செவ்வரிக்கண்
செல்வி யெழுவர் மங்கையர்தாள்
சிரத்தி லிருத்திப் பரவுவனே (6)

(6) பிறைவாதமும். . . . . . . .திருத்தி ஊழிக் காலத்தில் இவ்வாறு சிவனை வைத் தருளினர்; கஞ்சம் - தாமரை; திரையூர் நில ஊர்ப்பில் நூல்வாய் நுணந்த கேள்வி சிறிது மிலேன் என்க; நூல் - பலவித சாத்திர நூல்கள்; தூசுபடி சேல்பாய்ந்தென - வெளியே துள்ளின சேல் மீன்கள் தூசுபடிந்தால் மறுபடி நீரில் பாய்ந்து போக்கிக் கொள்வதைப் போன்ற, வள்ளை - வள்ளைப்பூ போன்ற காதுகட்கு உவம வாகு பெயர்; காதினை யெட்டும் கண்களுடைமை மாதர்கட் குரிய உயர் லட்சணம்.

### சிவபெருமான்.

218 குலவரை தவர்எனக் கோட்டுவார்
குழவிவெண் மதிசடைச் சூட்டுவார்
கொடுவிட மதுகழுத் தேற்றிநேர்
கொடியிடை யொருபுறத் தாற்றுவார்

அலகில அருவுருக் காட்டியே
அடியவர் பவமறப் போக்குவார்
அணிபொது வினில்நடக் கூத்து நேர்
அரனடி மலரிணைப் போற்றுவாம்

இலவிதழ் வனிதையர்க் காட்படா
தெனைமுதல் அடிமையில் போற்றியே
இருவினை ஒழிதரத் தீர்க்குமால்
இணரவிழ் மலர்மகட் கேற்றதோர்

மலரவிழ் துளபமெய்ப் பூத்தகார்
வளர்சதி பெறுகுடக் கூத்துநேர்
மணவையில் முகில்பதத் தேற்கவே
வனைதமி ழியலினைக் காக்கவே. (7)

(7) குலவரை — ஈண்டு மேருமலை ; தவர் — வில் கோட்டுவார் — வளைப்பார். . . ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. குழவிவெண்மதி என்றார் மூன்றாம் பிறைச்சந்திரன் ஆனதால். ஆலகாலவிடத்தைப் பாற்கடல் கடைந்தபோது பருகியது. கொடியிடை — கொடிபோன்ற இடையையுடைய உமாதேவி, அன்மொழித்தொகை. ஒருபுறம் — இடப்புறம் ; பவம் - பிறப்பு ; இலவுஇதழ் — இலவம் பஞ்சொத்த மென்மையான இதழ் ; வனிதையர் — பெண்கள் ; இணர் அவிழ் மலர்மகள் — பூந்தாது தெரிய மலர்ந்த தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் ; குடக்கூத்து . . . . அம் பாட்டின் குறிப்பில் காண்க.

## சக்கராயுதம்.

219 தண்சுடர் வெண்சுடர் கருமுகில் தாங்கித்
தங்கக் கிரிமீதில்
தங்கிய போலக் கலுழன் பிடரியில்
தனிதோன் றியபெருமான்

பெண்சுடர் கல்லில் கண்ட பதப்புயல்
பின்னு திரைப் பொருநைப்
பேரா றினிதூர் மணவை முகுந்தன்
பிள்ளைத் தமிழ்ச் சொலவே

ஒண்சுடர் மகமுறை மறைவழி யொழுகிய
ஏழேழ் புவனமெலாம்
இனிதிற் பல்லுயிர் தழையக் குளிர் கொண்
டிமையவ ரிமையாநேர்

கண்சுடர் வளையும் வளைகடல் ரவிநிகர்
கருணைக் கடலங்கைக்
கவினொடு திகழ்வல னாழிப்படையே
காத்தருள் புரிவதுவே. (8)

(8) தண்சுடர் ; வெண்சுடர் ; கருமுகில் — முறையே சங்கு சக்கராயுதம் தாங்கிய திருமாலுக்குவமையாய் நின்றது ; கலுழன் — கருடன் ; சுடர்கல்லில் பெண் கண்டபதப்புயல் இராமாவதாரத்தில் கல்லைப்பெண் (அகலிகை) ஆக்கினது காண்க. மகம் — யாகம் ; ஏழேழ் - பதினான்கு ; ரவி — சூரியன் ;

## ஆழ்வார்கள்.

220 குருகையாழ் வார்பெரி யாழ்வார் மிகுத்தநெறி
கொண்டதிரு மங்கையாழ்வார்
கூறுதிருப் பாணும் வாருடன் பொய்கையார்
கூறுபூ தத்தாரினேர்

உருகுமன ஞானபே யாழ்வார் கருத்திலருள்
ஓங்குதிரு மழிசையாழ்வார்
உலகு புகழ் குலசேக ராழ்வார் பழுத்ததமிழ்
உடையதிரு மதுரகவியார்

முருகுவிரி பதகமல மலர்மகள் முறைபரவி
முழுதடிமை யுழுவல்புரிவாம்
முளைமதியின் நிலவொழுகு வளையிலகு கமலமலர்
முழுவாவி சூழ்கதலிமீ

தருகுவரும் இரவிதேர் அருணனுடல் வெயர்தணிய
அசை யால வட்டமென்ன
அழகுதரு திருமணவை வருவேங் கடக்குழவி
அணிதொடைக் கவிதழையவே. (9)

(9) குருகையாழ்வார் – நம்மாழ்வார் ; முளைமதியின் நிலவொழுகு வளை – தோன்றிய சந்திரனைக்காட்டிலும் நிலவு அதிகமாக வீசுகின்ற சங்குகள் ; வாவி........அழகுதரு மணவை :—சங்குகளும், தாமரைகளும் உள்ள தடாகத்தைச் சூழ்ந்த வாழை மரங்கள் மீது அங்கு வரும் சூரியன் தேரை நடத்தும் பாகனுன அருணன் உடலின் வெயர்வு தணிய அசைகின்ற ஆலவட்டம் (சாமரை) போன்று அழகாக நிறைந்திருக்கின்ற மணவை நகர் என்க. (உயர்வு நவிற்சியணி) இப்பாட்டில் ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார் பற்றிக் கூறப்பட வில்லை. உழுவல் – இடைவிடாது தொடர்ந்த (அன்பு). எழுமையுந் தொடர்ந்த.

## பெரிய திருவடி.

221 கோசலை யளித்ததொரு தாசரதி யான்வந்து
குலவுகவி யரசு முதலாய்க்
கொண்டசய வானத.... வானர வீரர்
கொற்றநிறை இளையவீரன்

பாசறை யுடற்றிவரு மேகநா தன்விட்ட
பாசமது தளைபடுத்தப்
படுதளை களைகணுய்ப் படருமொரு கருடனிரு
பங்கயப் பதம்நினைகுவாம்

வாசநிறை பாசிலைத் துளவமலர் மூசிவளி
வண்டுவரி பாடுமாலை
மரகதச் சிகரநிகர் மணவைவேங் கடவாணன்
மகிழ்பெறத் தெள்ளு தமிழால்

தேசுபெற வேபேசு பிள்ளைக் கவித் தொடையல்
தேசத்தில் நின்றோங்கியே
தென்குமரி வடவேங் கடத்தளவும் இனிதூழி
தினமுமிக வாழி யெனவே. (10)

(10) தாசரதி – இராமன்; தத்திதாந்த நாமம். கவிஅரசு – குரங்குக் கூட்டங்கட்கு அரசனான சுக்கிரீபன்; இளைய வீரன் – இலக்குமணன்; மேகநாதன் – இந்திரசித்து; பாசம் – நாகபாசம்; இலக்ஷ்மணன் இந்திரசித்தைக் கொல்ல தேரினையழித்ததும் அவன் ஆகாயத்தில் மறைந்து நாகாஸ்திரம் விட்டு அதனால் வானரங்களையும் இலக்குமணனையும் கட்டிவிட்டான். இராமபிரான் இவைகளைக் கண்டு விபீஷணனோடு கூறிப் புலம்பும்போது கருடன் வந்து நாக பாசத்தை நீக்கி பழைய நண்பனென்பதை உணர்த்திச் சென்றனன். பாசிலைத்துளவம் – பச்சை இலைகளையுடையதுளவமாலை; மூசி – மொய்த்து; வடவேங்கடத்திலும் இவர்காலத்திலும் தமிழ் ஓங்கியிருந்தது என்பதற்கு இவர் கவி சான்று காட்டுகிறது.

222 உழலும்வெம் பவமாயக் கடலில் புகுத்துநேர்
மனைவி மைந் தரெனுது கதியெற் களிக்குமால்
ஒருவனென் பதைநாடி யடிமைக் கெதிர்த்த நான் (அருப்படா)
ருழலும்வெங் கதிர்வீசு......த்தை யுற்றதோர்

கனியதென் றெதிர்பாயும் நெறிபெற்ற வெற்றிசேர்
உளி நெஞ் சணைசெயி னடியைத் துதித்துமால்
குழவிவெண் பிறைசூடி இரவைத் தணித்தகார்
கமலைதங் கியவர்க வெழில்பெற்ற வெற்றிமால்

கொடியநெஞ் சரையாளும் அடிமைக் கொருப்படார்
மழலைவண் டுகள்பாடு நளினத் தடத்துநேர்
எகினம்வண் படைத்தடி மருவிக் களித்துவாழ்
மணவைவேங் கடவாணன் இயலைப் புரக்கவே. (11)

(11) குழவி வெண்பிறை சூடி – இளையபிறைசந்திரனைத் தரித்தவன். இதாவிகுதி வினைமுதற் பொருளைக் காட்டியது. இரவு – யாசித்தல் தொழில். முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 121-ஆம் பாட்டின் குறிப்புணர்க. கமலை – இலக்குமி; நளினம் – தாமரை; இயல் – இயற்றமிழ். வாணன் – வாழ்நன் என்பதன மரூஉ. சா.

## செங்கீரைப் பருவம்

223 தருமங்கை தருவென்ற சனகன்க ணன்மங்கை
தாளஞ்செய் முலைமுங்கவே
தழுவும்பொன் வரைவென்று வளரும்பு யசுகந்த
தனதந்த வெனவிஞ்சையால்

நிரைகொண்டு வரிவண்டு துளவின்கண் நறையுண்டு
நிறைதொங்கல் புனைநந்தனே
நிலனும்பு லனுமங்கி வெளியண்ட மிவையன்றி
நிமிருங்க ருணைநம்பனே

உரைகொண்ட தமிழ்நண்பி னவர்பின்பு நீநடந்தும்
உயர் சங்கப் பிரசங்கனே
உரலுந்தி மருதின்கண் நடுவின்கண் னுதைதந்த
உகளஞ்செய் பததந்திரனே

திருமங்கை திரைமங்கை புணர்கொண்க புயவிந்த
செங்கீரை யாடி யருளே
செரு வோங்க டலிபஞ் சொல் திருவேங்கடமுகுந்த
செங்கீரை யாடி யருளே. (1)

(1) தருவென்ற தருமம் கை சனகன் – கற்பக மரத்தையே வென்ற தருமம் செய்யும் கையையுடைய சனகன்; கண் நல்மங்கை என்க கண் – 7-ஆம் வேற்றுமை உருபு; தாளம் செய்முலை – முத்தாபரணங்களணிந்து ஒப்பனை செய்யப்பெற்ற முலை மூழ்க; பொன்வரை – மேரு; வளரும்புய சுகந்த – என்க; கண்ணன் குழல் வாசித்துப் பாட்டுப் பாடியதை "தனதந்த" என்று பாடும் ஓர் வித்தை என்றார் ஆசிரியர். நறை – தேன்; நந்தன் – நந்தகோபன்மகன், திருமாலுக்கொருபேர்; நிறை தொங்கல் – வண்டு உண்ண நிறைந்த மாலை என்க, உண்டு என்ற இறந்த வினையெச்சத்தை உண்ண என நிகழ்காலமாகத் திரிக்க; நிலனும்......நம்பன் :—திருவிக்கிரமாவதாரம் கருதியது இவ்வடி; "உரை கொண்ட........சங்கப் பிரசங்கன்; முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 593–ஆம் பாட்டின் குறிப்பில் காண்க; மருது – நளகூபரமணிக்கிரீவர் என்றவர் சாபத்தினால் மருதமரமாய்த் தோன்றினார்கள்; உகளம் – இரண்டு; திருமங்கை திரைமங்கை – இலக்குமியாகிய பாற்கடலில் தோன்றிய பெண், மங்கையென்பது பருவப் பெயரை உணர்த்தாது பொதுவாய்ப் பெண்ணை உணர்த்தியது; திரை – சினையாகுபெயராய்க் கடலைக் காட்டிற்று; கொண்கன் – கணவன்; விந்தம்புய – விந்தியமலையையொத்த புயமுடையவனே.

224 குறியங்கை படமகளிர் புழுகுகனி குழல் முருகு
குலவ வெதி ரெதிர் வீழவே
குளிதுரையின் முழுகமண மொழுகு புனல் ம....திசெய்
குருகு பெடை யருகு செலவே

வெறிகொள்புது மணம்விரவ மருவுகில புலவியொடு
விரைய வய லயல்மறையவே
விரியுமுகை யவிழ்வனச மதுமகளிர் முகமிதென
மிளிரவளர் சமுக கமுகார்

நறியமடல் கிழியநடு வொழுகுபுனல் பலபலவின்
நறியகனி நறையினுடனே
நளிர்கதலி கவிழ் குலையி னுமிழுநவ ரசபிரச
நதியுலவு குளநிறைவநேர்

செறியுமத கிடைப்பெருகி யலையெறியும் மணவை முகில்
செங்கீரை யாடியருளே
செருவோங்க டலிபஞ் சொல் திருவேங்கடமுகுந்த
செங்கீரை யாடியருளே. (2)

(2) படக்குறி அம்கைமகளிர் – பாம்பின் படம் போன்ற அல்குலினையும், அழகிய கையினையுமுடைய பெண்கள்; புழுகுகனி குழல் முருகு குலவ – ஓர்வித வாசனைப்பண்டமான புழுகு மிகுந்த கூந்தலின் வாசனை சேர; குருகு பெடையருகு செல – ஆண் அன்னம் தன் பெட்டையினிடம் செல்ல; மருவுகில புலவியொடு விரைய – புணராது ஊடலோடு வேகமாய்,

"வனசம் அது மகளிர் முகம் இது என" என்க ; சமுகம் – கூட்டம் ; மணம் வீசும் கூந்தலை யுடைய மகளிர் முழுகும் வாவியில் முழுகிய ஆண் அன்னம் பெண்ணன்னத்திடம் செல்ல புதுமணத்தைக்கண்டு அது புணராது ஊடல் கொண்டு ஓடி அயலில் மறைவதும், மகளிர் முகம்போன்று தாமரைமலர்கள் விளங்க வளரும் கூட்டமான பாக்குமரங்கள் மடல் இழிய அதினின்று ஒழுகும் தேன் பல பலாப்பழங்களின் தேனுடனே கலந்தும், வாழை தன் குலையினின்று வெளிப்படுத்தும் புதியரசமான தேன் முற்கூறியவைகளோடு கலந்து நதி சென்று குளம் நிறைய பின்னர் மதகினிடையில் செறிந்து அலையெறிவதுமான மணவை நகர் என்க.

225 பூவேழு வரையேழு கடலேழு வானேழு
பூத்ததிரு வுந்திமேவும்
போதனைத் தந்தவன் தன்னால் சராசரம்
பொலியவே செய்வித்துமே

காவேழு நீழலின் வளரரிவிண் ணோர்முதல்
கடவுளர் தமைத்தாவுமே
கருணைசெய் தறிதுயில் உணர்ந்தண்ட கோளகைக்
கற்பாந்த வெள்ளம் நடுவே

மாவேழு வீழவிடு கவடுடைக் கான்மரத்திளகி
வளருமொரு முறியின் வழியே
வதியவெங்கு மொருபச்சைப் பசுங்குழவி யாகவரு
மாயனே வாயர் மனையில்

சேவே ழடர்த்தபுய தண்டகோ தண்டனே
செங்கீரை யாடியருளே
சேருவோங்க டலிபஞ்சொல் திருவேங்கடமுகுந்த
செங்கீரை யாடியருளே. (3)

(3) கீழுலகத்தைப் பூவேழு என்றும், மேலுலகத்தை வான் எழு என்றும் கூறினர் ; போதன் – பிரமன் ; கா – சோலை, ஈண்டு "எழு" நிழல் என்பன எழு நீழல் என நீண்டன ; அரி – இந்திரன் ; மாவேழு வீழ – எழு மராமரங்களும் வீழவிடுத்து (இது இராமாவதாரத்தில் சுக்கிரீபனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்க இராமர் ஓரம்பில் எய்து காட்டினார்) ; கவடுடைக் கான்மரம் – கிளைகளையுடைய ஆலமரம் ; முறி – தளிரிலை ; வீழவிடு பச்சைப்பசுங்குழவி முறியின் வழிவதியும் பச்சைப் பசுங்குழவி எனச் சேர்க்க ; சே எழு அடர்த்தது :— நப்பின்னைபொருட்டு கன்யாசுல்கமாக ஏற்படுத்தப்பட்ட எழு எருதுகளையும் (காலகேதுவின் குமாரர்களின் அம்சம்) எழுருக் கொண்டு கீழே தள்ளி நப்பின்னையை மணந்தனர்.

226 பரசமைய திமிரதின கரவுதைய வண்டுமொய்
அந்தாம வாம முகிலே
பனிதமிர்த மதமொழுகு முலைவிமலை நண்பனே
சங்காழி மேவு கடலே

அரசர் பதி தசரத னருள்மவலி கொண்டநாள்
அன்றே கை கேசி கொடியாள்
வளமொழியின் வழிகவன மதின் முடுகி
வந்தவா தாவாத நீதிமனுவே

குரைதிரைய வரநதியை விரிசடை புனைந்ததோர்
குன்றுத வார்சிலேயினுர்
குழகரிர வொழிய நகை நிலவு பொழி கொண்டலே
பிந்தாத வீரவரியே

செருவி லெதிர் அசுரர் கிளை ஒருகணையில் வென்றவா
செங்கீரை யாடியருளே
செருவோங்க டலிபஞ்சொல் திருவேங்கடமுகுந்த
செங்கீரை யாடியருளே. (4)

(4) பரசமைய திமிர உதைய தினகர – வேறுபல மத இருளுக்குத் தோன்றும் சூரியனை யொத்தவனே ; வண்டு மொய் அம்தாம வாம முகிலே – வண்டுகள் மொய்க்கின்ற அழகிய மாலேயணிந்த அழகிய மேகமே (வாமம் – அழகு) ; விமலே – திருமகள் ; வளமொழியின் வழி கவனம் அதில் முடுகி – வளமொழிப் பிரகாரம் காட்டில் விரைந்து ; தாவாத – கெடாத ; வரநதி – கங்கை ; வார்சிலேயினுர் – மேருமலேயைச் வில்லாக்கினவர் ; இரவொழித்தது...... மூன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 121–ஆம் பாட்டின் குறிப்பில் காண்க ; வீர அரி – வீரம் பொருந்திய ஆண் சிங்கம்.

227 மீனுர்கார்க் கடலின்நடு வாணிலங் கைநகர்
வேந்தனைப் பொருகளத்தில்
வீறடக் கித்தனி நிராயுத னெனக்கண்டு
வீட்டுதல் செ யாமலின்றே

போநாளை வாவெனச் சொல்லுமொரு சேவக
புங்கானு புங்கமுறவே
பூமாரி பெய்யவரு காமாரி காத்தவா
புதுப்பிறை வளைத்த தெனவே

காரனுர் கடற்படைக் கரதூட ணன்திரி
சிராவினைக் கண்டமாகக்
கண்டருளும் விறல் வீர வீராகரத்துணைவி
காந்தனே யெந்தைவாகை

தேனுரு மெய்க்குழவி மேனக ரத்துளவ
செங்கீரை யாடியருளே
செருவோங்க டலிபஞ்சொல் திருவேங்கடமுகுந்த
செங்கீரை ஆடியருளே. (5)

(5) மீன் ஆர் கார்க்கடல் – மீன்கள் பொருந்திய கரியகடல்; வீறு – கருவம் ; வீட்டுதல் – அழித்தல் ; புங்கானுபுங்கம் – மேன்மேல் தொடுக்கும் அம்புத் தொகுதி ; பூமாரி – அசோகு, தாமரை, நீலம் முதலிய ஐந்து கணைகளாகிய மழை ; காமாரி – மன்மதனை எரித்தழித்த சிவன் ; கரன், தூடணன், திரிசிரா :—இவர்கள் மூவரும் சகோதரர் ; தந்தை விசுரவசு, தாயர் முறையே இராதை, கலே, காலே என்பவர். இவர்கள் சூர்ப்பநகையால் தூண்டப்பட்டு தண்டகாரண்யத்தில் இராமபிரானிடம் வந்து எதிர்த்து இறந்தனர். திரிசிரா பற்றி 40–ஆம் பாட்டில் காண்க.

### வேறு

228 பனகன துடல்நெளி கொள்முடி நின்றே
அன்றும் கோவே
பயவுத தியில் நடு வமுதுக டைந்தே
தந்தா ளன்போனே

மனவணி கோசலை யுயிரென முன்சேர்
மைந்தா பயந்தாராய்!
அற இறை கௌசிக முனிபிற கின்றே
சென்றே வந்தோனே

அனமென நனிமறை மொழிதரு கன்றே
நீள் சீரும் கோலா
அகலிகை யெழில்கொடு வரிசிலை யின்பால்
வந்தரு ளுந்தாளா

தினகர னெனவளர் பருதி முகுந்தா
செங்கோ செங்கீரை
செகதல முழுவதும் அளவிடு நெடியவ
செங்கோ செங்கீரை. (6)

(6) பனகன் – ஈண்டு காளிங்கன் என்ற பாம்பு ; பய உததி – பாற்கடல் ; அமுது கடைந்து – அமிர்தத்திற்காக கடைந்து ; கௌசிகன் – விசுவாமித்திரன் ; அனமென........கன்றே :— 197–ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

229 காலெழுகு கரியகுழ லிடை மகளிர் முடை நாறு
கரியதுகி லதுவாரியே
கானெடிது வயங்கும் குருந்தேறி விளையாடு
கருமேக வார்கொழுந்தே

மாலெழுகு கற்பகக் கொம்பிற் கனிந்தநறை
வாரியே மாறை நகர்வாழ்
வள்ளல் முதியநம்பி பிள்ளை மலர் விரியவே
வளருமொரு திருமார்பனே

மீலெழுகு வாரிநடு வளறுபட நெடியதொரு
விற்குழைத் தருள் சிங்கமே
வெடியா நிசாசரக் கங்குலைப் பருகிவெயில்
விரியுமொரு கருஞாயிறே

தேலெழுகு துளவநவ நீதமயில் கள்வனே
செங்கீரை யாடியருளே
திருவேந்து புயவிந்த திருவேங்க டமுகுந்த
செங்கீரை யாடியருளே. (7)

(7) முடைநாறு – தயிர், பால் முதலியவை கலப்பதால் வீசும் ஒருவித நாற்றம் ; குருந்து – குருந்தமரம் ; " கான்........கொழுந்து " பாட்டின் குறிப்பில் காண்க ; " மாறை நகர்........மார்பனே " இது தலபுராணத்திலுள்ள ஓர் பக்தர் பெயரோ ! இங்ஙனமே

297–ஆம் பாட்டிலும் வருவது காண்க. மீன் ஒழுகு........சிங்கமே :—கடலுக்கு அணை கட்டுதற்காக வருணன் வாராததால் அக்கினிக்கணை விடக் கோபித்து எடுத்த நிலையைக் கூறுகிறகிது. வெடியா நிசாசரக் கங்குலே – பொழுது விடியாமல் செய்யாமல் அரக்கராகிய இருட்டை ; கரு ஞாயிறு – இல் பொருளுவமை ; நவநீதம் அயில் – வெண்ணெய் தின்கின்ற ; திரு – இலக்குமி ;

230 கொங்கார் பசுஞ்சோலை சொரிதளிரின் நாப்பணில்
குலவுமதி நிலமங்கை கைக்
கொண்டுதன் னுருநாட வாடியேந் தியதெனக்
கூர்வளங் கொண்டபுடையில்

சங்கார் தடம்பணைச் செய்ய செந் தாமரைத்
தாவுபெடை யோடணைத்தே
தவள நில வுதறு சிறை யரசவனம் கண்துயில்
தரவளிகள் தாலாட்டவே

பொங்கார மாரமொடு குரவைபுரி கடைசிமார்
புதியமதி வதன நிழலில்
பூத்த செங் காவியு மவர்கண்மைக் காவியும்
பொலிமணவை வளநாடனே

சிங்காத னக்கனக னுகிரிவளை சிங்கமே
செங்கீரை ஆடி அருளே
திருவேந்து புயவிந்த திருவேங் கடமுகுந்த
செங்கீரை ஆடி அருளே. (8)

(8) கொங்கு—வாசனை ; நாப்பண் – நடுவிடம் ; ஆடி – கண்ணாடி ; புடையில் – பக்கத்தில். பணை சங்கு ஆர்தடம் என்க. செய்ய செந்தாமரை – மீமிசைக்கிளவி ; தவள நிலவு உதறுசிறை அரச அனம் – வெண்மையான நிலவினைக் காலுதற்கு உதறுகின்ற சிறகுகளையுடைய ஆண் அன்னம். அளி – வண்டு ; பொங்கு ஆரம் ஆரமொடு – மிக்க ஆரவாரத்துடனும் முத்துமாலைகள் அசைதலோடும் ; குரவை – காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபுனைந்தாடும் ஒருவகைக் கூத்து. காவி – நீலோற்பலமலர். சிங்காதன........சிங்கமே—சிங்காதனத்தையுடைய இரணியனை நகத்தினால் வளைத்துக் கொன்ற நரசிங்கமே. வாசனை பொருந்திய சோலைகள் சொரிகின்ற இலைத் தளிரின் நடுவில் உள்ள சந்திரன் பூமி தேவியானவள் தன் கையில் கொண்டு தன்னுருவத்தைப் பார்க்க விரும்பிக் கண்ணாடியை எடுத்ததைப் போன்று மிக்க வளங் கொண்ட அப்பக்கத்தில் பருத்த சங்குகள் பொருந்திய தடாகங்களில் சிவந்த தாமரையில் தாவுகின்ற பெண்ணன்னத்தை அணைத்து வெள்ளை ஆணன்னங்கள் தூங்க வண்டுகள் ரீங்காரஞ்செய்து தாலாட்ட மிக்கு ஆரவாரத்துடன் குரவைக் கூத்துச் செய்கின்ற மருதநிலப் பெண்கள் தங்களது சந்திரனைப் போன்ற முகமாகிய நிழலில் தோன்றிய நிலத்தில் பூத்த செம்மையான காவிமலரும் அவர்கள் கண்களாகிய கரியமை பூசிய காவி மலரும் விளங்கும் அத்தகை வளஞ் சிறந்த மணவைநகர் என்க.

231 எறிகுழை யெதிர்ந்து போய் மறியும் விழி மங்கைமார்
பந்தாடும் மேடையிடையே
எழில் மதியம் வந்துசா ளரநுழைவ கண்டனுர்
சிந்தூர வாணுதலின் நேர்

குறியழகு கண்டுதாம் மனமகிழ் தவழ்ந்துலாய்
வந்தூரு மென்மைபெறவே
குளிர்திவலை சிந்தியே மணமொடு தவழ்ந்துலாய்
வந்தாரு மேன்மை பெறவே

நறியகர நின்றுசா மரையென வசைந்து சாய்
நந்தூர நீர்வயல் சூழ்
நளினமலர் பந்தியாய் மகளிர் முகம் வென்றுசேர்
நந்தாத நீதிவளமே

செறிமணவை வந்துவாழ் சினகர முகந்தவா
செங்கீரை யாடியருளே
திகழுமொளி நந்தனே துளபமலர் கந்தனே
செங்கீரை யாடியருளே. (9)

(9) எறிகுழை........மங்கைமார் – ஒளி வீசுகின்ற குழையுள்ள காதினிடம் எதிர்த்துச் சென்று பின்பு மடங்கும் கண்களையுடைய (காதளவு பரந்த) பெண்கள் ; சாளரம் – சன்னல். சிந்தூரக்குறி – பொட்டு அடையாளம் ; இரண்டாவது அடி சரிவர எழுதுவோரால் எழுதப் படாமல் எழுதினதையே மறுபடி எழுதியுள்ளனர் எனத் தெரியவருகிறது. நந்து – சங்கு ; சினகரம் – கோயில் ;

232 கலைபயில் நாவலர் வேந்திசை மீதே
அன்பா ருந்தூயா
குரவைகொ ளாய்மனை யேந்திழை யார்பால்
நின்று டுந்தாளா

கரையறு மாவின மேய்ந்திட வேயே
கொண்டே துந்தூயா
மலர்மகள் வார்பொரு பூந்தன நேயா
வண்டே துந்தாமா

ஒரு சிலை நேருரு வாய்ந்தெழ வேதாள்
கொண்டே கண்டோனே
மழுவுடை யான்வலி வார்ந்தவன் றவமே
வென்றே நின்றோனே

அலர்கதிர் நேமியி னுங்கிருள் சாய
அன்றே தந்தோனே
கடல்நடு வேவழி போந்தரி யோடே
பண்டே சென்றோனே

அரவணை நேர்துயில் கூர்ந்தருள் தேவே
என்பா லன்பாளா
சிலைமலி போரெதி ரேந்திய தோளா
பண்கூர் வெண்கோடா

234 அளவில் மகிழ்ச்சி யசோதைக் கிருவிழி
அணிமணி யேயரசே
அழகுக் கழகே யரைமணி போத்திமுன்
ஆயர் மனைச்சீரால்

களவு விளைத்திழு தூறக் காய்பால்
கடவளை தடவெண்ணெய்
கையில் முகந்துண் டவர்கள் சிறுரொடு
கன்று துடர்ந்தேகித்

துளவ சையச்சிறு தெருக்களின் முன்றில்
தொறுமின் னுளமுருகத்
தோள்தலை சாயக் கால்பின் னிச்சுடு
துளையூ தியவாயா

தளவ மலர்ச்சிறு குடுமிப் புயலே
தாலோ தாலேலோ
தாங்கிய சிலைவிறல் வேங்கட வாணா
தாலோ தாலேலோ (2)

(2) இழுது – நெய் ; இழுது உற என்பது ஊற என நீட்டித்தது. இனம் – பெண்களின் கூட்டம் ; சுடுதுளை – சுட்ட துளையையுடைய வேய்ங்குழல் ; தளவ........குடுமி :—ஆயர் சிறுவர் முல்லை நிலத்தவராததால் முல்லை மலர்ச் சூடுவர். அங்ஙனமே இவரும் சூடின ராததால் இங்ஙன் கூறினர்.

235 அருவென வுருவென வறிவென வறிவூ
டளவிய தெளிவெனவே
அடியவ ருளமிசை குடிகொளும் நெடியா
அலர்நில மகள்முலைதோய்

இருபுய மரகத மணிநிற வண்ணா
இளவெயில் பொழிகதிரே
இகல்புரி யசுரர்தம் மனவிடி யேறே
இசையளி நிறைதுளவா

கருவுத தியினுன தடியரு ருவகை
களைதரு களைகண்ணே
கண்ணா விண்ணவர் கோவே தண்ணங்
கதிர்மதி யேயாள்க

தருமிட றவிழ்தரு மணவை முகுந்தா
தாலோ தாலேலோ
தாங்கிய வில்விறல் வேங்கட வாணா
தாலோ தாலேலோ. (3)

(3) அவர் மகள் நிலமகள் எனக் கூட்டுக ; இடி எறு – ஆணிடி ; கருவு உததி – கர்ப்ப மாகிய பிறவிக்கடல் ; மதி – சந்திரனையொத்தவனே. ஆள்க – வியங்கோள் வினைமுற்று. தரும் இடறு அவிழ்தரு – வரும் துன்பங்களைப் போக்கி மலரச் செய்யும்.

234 அளவில் மகிழ்ச்சி யசோதைக் கிருவிழி
அணிமணி யேயரசே
அழகுக் கழகே யரைமணி போத்திமுன்
ஆயர் மனைச்சீரால்

களவு விளைத்திழு தூறக் காய்பால்
கடவளை தடவெண்ணெய்
கையில் முகந்துண் டவர்கள் சிறுரொடு
கன்று துடர்ந்தேகித்

துளவ சையச்சிறு தெருக்களின் முன்றில்
தொறுமின் னுளமுருகத்
தோள்தலை சாயக் கால்பின் னிச்சுடு
துளையூ தியவாயா

தளவ மலர்ச்சிறு குடுமிப் புயலே
தாலோ தாலேலோ
தாங்கிய சிலைவிறல் வேங்கட வாணு
தாலோ தாலேலோ (2)

(2) இழுது – நெய் ; இழுது உற என்பது ஊற என நீட்டித்தது. இனம் – பெண்களின் கூட்டம் ; சுடுதுளை – சுட்ட துளையையுடைய வேய்ங்குழல் ; தளவ........குடுமி :—ஆயர் சிறுவர் முல்லை நிலத்தவராததால் முல்லை மலர்ச் சூடுவர். அங்ஙனமே இவரும் சூடின ராததால் இங்ஙன் கூறினுர்.

235 அருவென வுருவென வறிவென வறிவூ
டளவிய தெளிவெனவே
அடியவ ருளமிசை குடிகொளும் நெடியா
அலர்நில மகள்முலைதோய்

இருபுய மரகத மணிநிற வண்ணு
இளவெயில் பொழிகதிரே
இகல்புரி யசுரர்தம் மனவிடி யேறே
இசையளி நிறைதுளவா

கருவுத தியினுன தடியரு ருவகை
களைதரு களைகண்ணே
கண்ணு விண்ணவர் கோவே தண்ணங்
கதிர்மதி யேயாள்க

தருமிட றவிழ்தரு மணவை முகுந்தா
தாலோ தாலேலோ
தாங்கிய வில்விறல் வேங்கட வாணு
தாலோ தாலேலோ. (3)

(3) அவர் மகள் நிலமகள் எனக் கூட்டுக ; இடி எறு – ஆணிடி ; கருவு உததி – கார்ப்ப மாகிய பிறவிக்கடல் ; மதி – சந்திரனை யொத்தவனே. ஆள்க – வியங்கோள் வினைமுற்று. தரும் இடறு அவிழ்தரு – வரும் துன்பங்களைப் போக்கி மலரச் செய்யும்.

236 போரணி ரதகச துரக பதாதி
பொலிந்த களத்திடையே
புயல்தவழ் மலையென வருகருணையுடல்
புழைபட வடுகளிறே

நாரண வாரண காரண காரியம்
நடுவிடை கடையுமிலான்
நாத பராபர வாமன பால்மதி
நடுவுறை கருமணியே

தோரண வீதியில் நடுவளர் கதலிகை
துவள்தரு கதலிகைபோல்
சுடரவன் இரதமும் எழுதுர கதமிசைத்
தொடுபுகழ் வளமையினுல்

தாரணி புகழ்மண வாபுரி முகிலே
தாலோ தாலேலோ
சங்கணி கரதல வேங்கட வாணு
தாலோ தாலேலோ. (4)

(4) கரன்......227-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. பால்மதி – பால் போன்ற மதி தோன்றிய கடல்; துரகதம் – குதிரை; கதலிகை – வாழை. மூன்ருமடி உயர்வு நவிற்சியணி. வாமனன் :—முன்பிள்ளைத்தமிழ்க்கொத்து 118, 189–ஆம் பாட்டுக்குக் குறிப்புக் காண்க.

237 புகலடைந்த இரவிமைந்த னிகல்புரிந்த பகையைவென்ற
வீரா வீராநீர்
பொதுவர்மங்கை யொருமடந்தை மகிழமுன்பு தருவழங்கு
லீலா நூன்மார்பா

அகிலமுண்டு முமிழுகின்ற தொழில்புரிந்த வதனசந்திர
வாமா பூமானேர்
அழகுகொண்டு வளரிரண்டு வரையைவென்ற புயவனந்த
பாயா காயாநேர்

முகிலைவென்று கருமைகொண்ட வுருவசங்கு வளையணிந்த
பாலா நால்வேதா
முருகருந்து பொறியவண்டு குடியிருந்த துளவிலங்கு
தாரா சோராசேர்

சகடுதைந்து விறல்புரிந்த நிமலநண்ப தினவசந்த
தாலோ தாலேலோ
தமிழ் தெரிந்த மணவைவந்த திருமுகுந்த கமலைகொண்க
தாலோ தாலேலோ. (5)

(5) இரவிமைந்தன் – சூரியனுக்குப் புத்திரனுன சுக்கிரீபன்; பகை – வாலியாகிய பகை; பொதுவர் மங்கை ஒருமடந்தை – சத்தியபாமை; தரு – கற்பகத்தரு – 43 – ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. நூல் மார்பா – பூநூல் தரித்த மார்பன் – க்ஷத்திரியர்கட்குப் பூநூல

உரித்து. அகில........வதனசந்திர – உருவகம். முன்பிள்ளைத்தமிழ்க் கொத்தின் 128-ம் பாட்டின் குறிப்பில் காண்க. வாமன் அழகன்; பூமான் – பூமிதேவி; வரை – உவமவாகு பெயராய் முலையையுணர்த்திற்று. அனந்தபாயா – ஆதிசேடனாகிய படுக்கையையுடையவனே காயாநேர்—காயாம் பூவையொத்த காயாநேர் உருவ என்று முகிலை..கொண்ட உருவ என்றுங் கூட்டுக. வளை —சக்கரம்; முருகு – தேன்; பொறிய – புள்ளிகளையுடைய; கோரா – வெண்ணெய், தயிர் திருடியுண்டதால் இவ்வாறு கூறினர். சகடு – சகடாசூரன்.

238 புரளும் கயல்வென் றிலகும் குழையின்
புடைசென் றுலவும் கண்
பொருமங் கையர்செங் கையின்மென் கமலம்
பொதிவின் டவிழ்தரவே

திரள்கொண் டுழுவெங் கொழுநன் படைமுன்
சிதறும் கழனியுளே
செருமுங் கமுகின் குலையின் புடையின்
திகழும் பழமுடனே

குரவம் கமழும் பொழிலின் பனையின்
குடநன் கனியுதிரும்
குமுதம் கமழும் குளனுந் தெருவும்
குளிர்தண் புனல்மதகும்

தரளஞ் சொரியும் பணிலம் குமிறும்
தகுவள முறை மணவைத்
தருமம் தழையுந் திருவேங் கடமுகில்
தாலோ தாலேலோ. (6)

(6) குழை – காது; கையின் – 5–ஆம் வேற்றுமை உவமப் பொருவு; செருமும் – நெருக்கும்; கொழு நன்படை – கூர்மை மிக்க கார் கட்டிய கலப்பை; பணிலம் – சங்கு.

239 சூழும் திருவரை மணியும் பூணும்
தொங்கிய சுட்டிநுதல்
சோதித் திலதமும் முகிழ்நகை நிலவும்
துவர்வரு செவ்வாயும்

யாழும் குழலும் பணிய மழலையின்
இனிமை தருஞ்சொல்லும்
இருள்கனி குஞ்சியி னழகும் தெரிவையர்
எழில்கவர் மார்பணியும்

ஊழின் றருவினை யிருள்விரி யத்தனி
ஒளிரும் பதவுகளத்
துறுகுரல் நூபுர மணிபங் கயமலர்
ஒளியும் தோளிணையில்

தாழும் குழையும் தோயும் புயலே
தாலோ தாலேலோ
திசவரை மகள்புணர் மணவை முகுந்தா
தாலோ தாலேலோ. (7)

(7) நுதற்சுட்டி என்க. குஞ்சி — மயிர் ; ஊழின் — விதிமுறையால் தசவரை மகள் என்றுர் எட்டு மலைகளோடு மேலுமிருமலைகளும் உடைய பூமிதேவியை நோக்கிப் போலும் ;

240 குழைகர மரியினர் பொதுவிய ரவரவர்
குறைசொல வனமிடையே
குறுகா நிரையொடு துடரிசை யொடுபடர்
கோலச் சிறுபுயலே

புழைதரு கரமலை யதிர்குரல் செவிவழி
புகுமுனம் எதிர்கொடுபோர்
புரிகரா வினையொரு திகிரிக் கொடுபுகழ்
புனையருள் பொழிகடலே

சுழியெறி திரைபொரு பகிரதி நதிமகள்
துயல்வரு பதகமலா
துணையென இணையில் குகனையீன் றருள்கொடு
துணையென வுரைசதுரா

தழைதரு பசுநிற மரகத மணியே
தாலோ தாலேலோ
தமிழ்தெரி மணவையில் வருதிரு முகிலே
தாலோ தாலேலோ. (8)

(8) குழைகரம் அரியினர் — குழைந்த கரத்தில் மத்தாகிய ஆயுதத்தையுடையவர்களாய் ; அரி — ஆயுதம் ; புழைதருமலை — ஈண்டுகசேந்திரன் ; கரா — முதலை ; துயல்வரு — அசைந்து வருகின்றன. குகன் — இராமரிடத்துநட்புப் பூண்ட வேடவரசன்.

241 முரணு லெழுமெழு மரமூ டுருவா
முனியா லொருகணையால்
முனியா தெதிர்விடு முதிர்சே வகனே
முலையா னடர்புயனே

கருணு கரவுப நிடதா மறைகனி
கனியே தமனியமே
கலையார் கடலே யமுதே யடியார்
கதிசே ருந்தவமே

பொருநா நதிதிகழ் மணவா புரிவளர்
புயலே தமிழினியல்
பொருளே தெருளே வெளியே ஒளியே
போற்றரு மனவிருளே

தருணுத பன்னகி ரிறணு பரணு
தாலோ தாலேலோ
தாங்கிய சிலைவிறல் வேங்கட வாணு
தாலோ தாலேலோ. (9)

(9) உருவா — செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சம் செய்து எனத்திரிந்தது. முனியால்— வில்லால் ; முனியாது — வெறுக்காது ; தமனியம் — பொன் ; பன்னசி — தாமரை ;

242 கதழொரி யெரிதர வான்கடல் மீதே
யேவாலே வாளா
குரைகழ லடியவர் வேண்டிய வாழ்வே
தாயா நேயாநீ

எதிர்பொரு வான்கரி கோடே கவடுக
போரா நேர்தோளா
எதிர்வரு நிதியுழை காண்டலு மேபோய்
மீள்வோய் மாமாலே

சததள மலரவள் பூங்கொடி கேள்வா
நாதா நீள்காதா
சபரிமெய் யுறுகதி போந்திட நேர்சேர்
வீரா தார்மார்பா

தமனிய நிறம்வளர் பூந்துகில் மீதே
சூழ்வோய் தாலேலோ
தமிழ்மண வையில்வரு வேங்கட வாணா
தாலோ தாலேலோ. (10)

(10) எதிர்பொருவான்கரி – குவலயா பீடம்; சததளம் – தாமரை; மலரவன் – திருமகள்; பூங்கொடி – பூமியாகியகொடி – பூமிதேவி; சபரி :—மதங்காச்சிரமத்திலிருந்த வேடுவச்சி. இவள் சுவைத்து வைத்திருந்த பழங்களை இராமர் தின்று அவளுக்கு முத்தியீந்தார்.

---

**N.B.**—இவ்வடி கீழே மிகையாகக் காணப்படுகிறது :—
அரவுறு கொடியவர் சேண்பொதி தூதோ
தாய வேய்வாயா

## சப்பாணிப் பருவம்

243 மின்னுமுகில் தவழும்வரை பிறைகவ்வி யண்ணாந்த
வீறுபோல் சிறுகடமா
வெண்குருகு கோட்டுண்ட வரசகே சரிசுவடு
வேட்ட மெதிர் தருகிராதர்

மன்னியுறை குடிமுன்றி லறைமீ துணங்குமெய்
வனமேய வந்தசெந்தண்
வளையும் வாய்க கிள்ளையெழில் வாலன்ன வரிநிறம்
வாய்ந்தகுரல் கவ்விவிடநேர்

பொன்னிறந் தருதினையும் வேங்கைவீ யுங்கொண்டு
பொலன்வரைச் சாம்பு நதிபோல்
புடைபரந் திருகரையு மாரம்வீ சிக்குலவு
புகழ்பெற்ற புதுவளமையால்

தன்னிகரில் பொருநைநிகழ் கன்னிவளர் நாடனே
சப்பாணி கொட்டியருளே
தமிழ்பொங்கு மணவைநகர் வருவேங்க டேசனே
சப்பாணி கொட்டியருளே (1)

(1) மின்னு........கடமா – மின்னுகின்ற மேகம் தவழ்ந்த மலை பிறைச் சந்திரனைக் கவ்வி யண்ணுந்துள்ள பெருமை போலும் கோபிக்கின்ற மதமுடைய யானைகள் பிறை – தந்தத்திற்கும், மின்னுதல் பிளிறுதற்கும், மேகம் – கருமைக்கும், வரை உருவத்திற்கும் மிகப்பொருத்தமாக உவமைகள் விளங்குகின்றன. வெண்குருகு – வெள்ளிய யானையின் மூளை ; கேசரி – சிங்கம் ; சுவடு – ......கிராதர். யானையைக் கொன்று தின்ற சிங்கம் சென்ற காலடிச்சுவட்டினைக் கண்டுசென்று வேட்டையாடுகின்ற வேடர் ; அறை – கற்பாறை ; உணங்கும் – உலரும் ; வேங்கைவீ – வேங்கைப்பூ ; பொலன்வரைச்சாம்புநதி – மேருமலையி லுற்பத்தியாகும் சாம்புநதி போல ; ஆரம் – முத்துக்கள் ; நிகர் இல் – தனக்கு ஒப்பில்லாத ;

244 கழையுடைக் குந்தோறு மிடிக்கும் கடுங்குரல்
காணுமிதி யாலைவாயால்
கான்றுசொரி பாலால் நிறைக்கின்ற கூனையுட்
காரண்டம் முழுகியொழுக

இழையிடைப் பேதையர் இழைக்கின்ற வண்டல்மனை
ஈர்த்துமருங் கெங்கு நிறைவாய்
இளகின்ற மரகதப் பாசடைக் கமலவயல்
எதிர்பாய வோங்கு செந்நெல்

குழைவுண்ட கருமேதி மேய்தோறுங் கடைவாய்
குதட்டவழி பாகுவழியும்
குலமணிப் பூண்சிறுர் கால்வழுக் காதுமலர்
கொண்டுபூந் தாதுசொரியும்

தழையுடைப் பொழிற்குலவு மணவைநக ராதியே
சப்பாணி கொட்டியருளே
சயமங்கை நேசனே திருவேங்க டேசனே
சப்பாணி கொட்டி யருளே. (2)

(2) கழை – கரும்பு ; மிதி ஆலை – அழகிய கரும்பாலை ; கூனை – கருப்பஞ்சாறடுகூன் ; காரண்டம் – நீர்க்காக்கை ; மரகதப்பாசடை – மரகதம் போன்ற பச்சை இலை : மேதி எருமை ; குலவு–பொருந்திய ; கரும்பு உடைக்கும்போது சப்தத்தைக் காணும் அழகிய ஆலைகளின் வாயினின்று ஒழுகுகின்ற பாலால் நிறையும் கூனை என்ற பாத்திரத்திற்குள் நீர்க்காக்கை முழுகி அதனால் ஒழுகின சாறு பெண்கள் இழைகளினால் செய்கின்ற விளையாட் டிடத்தை அடித்துக்கொண்டு பக்கமெல்லாம் பரவி பசிய இலைகளையுடைய தாமரை சூழ்ந்த வயலில் எதிர்த்தும் பாய அதனால் ஓங்கின செந்நெலானது குழையும்படி உண்ட எருமை யானது மேயும் போதெல்லாம் கடைவாய் குதப்ப அதினின்று வெல்லப்பாகு வழிய அதனால் சிறுவர் கால் வழுக்காதவாறு அங்குள்ள மலர்கள் மகரந்தங்கள் சொரியும் அத்தகை வளமிக்க சோலைகளும் பிறவும் சூழ்ந்த மணவை நகர் என்க.

245 காதல்நறை வீசுகுழல் யாழின்மொழி யாய்மகளிர்
காதலுள மீதுதரவே
காணவிழி யாயிரமும் வேணுமென வேகுழைகொள்
காதுதவழ் தோளசையவே

நாதமறை வேயினிசை யூதுகனி வாய்குவிய
நாண்மலரின் மூரலெழவே
நாலுகவி தேர்குருகை மாறனருள் கூர்கவிதை
நாளுமிக வேவளரவே

பாதமலர் சூடுமவர் நாடும்வர மேயுதவு
பார்வை யருள் மாரிதரவே
பாரவட மேருசிலை வீரமனு சீதமுறு
பாலநவ நீதகள்வா

தாதுலவு தார்துளவ மேவுமுகில் மாயனே
சப்பாணி கொட்டியருளே
சதுமறையி னொலிகடலி னொலியின்வளர் மணவைமுகில்
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) நறை – மணம்; ஆய்மகளிர் – இடைப்பெண்கள்; நவநீதம் – வெண்ணெய்;

246 ஆறுபத நடுபேடை யோடிசைகள் தேர்நறை
வற்றுத பொற்கமலமே
ஆரநிறை நீர்பெருகு வாவியுகள் வாளைஎதிர்
முட்டா வயற்கடைசிமார்

நாறுநடு வாரிடை தளாட வயலேகியே
நத்தார் திடற்புளினமேல்
நாள்மலரின் நாளமது வால்நறைக ளாரவே
துய்ப்பார் மயக்கமுறுவார்

சேறளையும் நீள்வயல்கொள் சாலிகழை போலவே
முற்று விளைத்தகதிரே
தேனொழுகு பூகமடல் மீதுகொடு வாள்கள்போல்
உற்றே பழுத்தகுலைநேர்

தாறினிடை சேர்வளமை கூர்மணவை மாயனே
சப்பாணி கொட்டியருளே
தாள்பிறவி தீரவருள் கூர்கருணை மேகமே
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) ஆறுபதம் – வண்டுகள்; சாலிகழைபோல் – சாலிநெல் கரும்பினைப்போன்று; பூகம்– பாக்குமரம்; ஆறுபத........முறுவார் :—சங்குகள் நிறைந்த வாவியினுள் வாளை தாவி வயலிலுள்ள உழத்தியரை முட்டிடவும் அவர்கள் நாறு நடும் மற்றவர்களிடையே தள்ளாடி விழுந்து வயலை விட்டுச் சென்று மணற்றிட்டின்மேல் மலரினின்றெடுத்தகளை தண்டினையே உறிஞ்சு கருவியாகக் கொண்டு குடித்து மயக்கமடைவார் என்க. தாறு – குலைகள் கொண்டது; வாழை, பாக்கு, தென்னை முதலியவைகட்குக் கூறுவது. தாள்பிறவி தீர – உனது தாளை நினைத்தாலே பிறவி தீருமாறு; "தனக்குவமையில்லாதான்தாள் சேர்ந்தார்க்கு...." என்ற குறள் காண்க.

247 துவளுமிடை நிலையாது வளருமுலை குறியாது
துரிதமொடு சுழல்போதநேர்
சொருகுமிருள் கனிகோதை யவிழும்வகை யுணராது
சுறவினெதிர் புடைபாயவே

குவளைவிழி யோகுருகு புனைகமல மோதளிர்செய்
குலவுபத மோபுடைமின்னோ
குனிவில்தொழி லால்முறை யின் முறைவழுவி லாதுகதி
குறுகும்வகை யானதெனவே

பவளவிதழ் வாய்முறுவல் படர்நுதல நீவுகுறி
பணிவெயர்வி னுலழியவே
பவுரிகொடு பாவையர்கள் தரளம்வினை வாகமிளிர்
பந்தாடு நீடுவளநேர்

தவளமணி மாடநிறை மணவைநக ராயனே
சப்பாணி கொட்டியருளே
தணிசந்திர தூசனே திருவேங்க டேசனே
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) சுறவு—மகரக் குழை; ஈண்டு காதுகளைக் காட்டிற்று. கோதை—மாலை; பவுரி—மண்டலமிடுகை; தரளம் வினைவாக மிளிர் பந்து—முத்தினால் செய்த பந்து; குருகுபுனை கமலம்—அன்னம் வீற்றிருக்கின்ற தாமரை. நீவு—தடவின, (இட்ட), இடை நிலையாமலும் முலையைப் பாதுகாவாமல் விரைவாகச் சுற்ற மாலை கூந்தலினின்று அவிழும் விதமும் பாராது குவளையொத்த கண்கள் காது வரை பாய அவர்கள் அன்னங்களுள்ள தாமரையோ, தளிரைக் கோதுகின்ற அறுபதமுடைய வண்டுகளோ, மின்னலோ என்று கூறுமாறு கணித் தலில்லாத தொழிலால் முறை வழுவாமல் வேகம் பெற்றது என்று கூறுமாறும் நெற்றியி லுள்ள திலகங்கள் வெயர்வினாலழியவும் வட்டமாயிருந்து பெண்கள் முத்துப்பந்து ஆடு கின்ற வெண்மை நிறமுள்ள அழகிய மாடங்கள் நிறைந்த மணவை என்க. தூசன்—உடையையுடையவன்;

248 இன்னு மிலங்கியே மெழிலி னிலங்கைவாழ்வு
பெற்று யுனக்கருள்வன்யான்
எனமுன் நடந்தவீ டணனை மகிழ்ந்துகாத்
தல்வைத்தாய் மகிழ்ச்சிபெறவே

நனவினு நெஞ்சின்மேவு கனவினும் வந்துகோல
மிக்கான பச்சைமுகிலே
நதிபதி முன்புசேர பயமும் வழங்குஞாலன்
மற்போர் தொலைத்தபுயனே

அனக வனந்தபாயல் மருவும னந்தரூப
பச்சா லிலைத்துயிலுவோய்
அழகுக னிந்தகோ கனகமகள் நண்பதே
சகயக்கார் முகக்கடவுளே

சனக சனந்தராதி முனிவர்கள் தங்கள்நேய
சப்பாணி கொட்டியருளே
தணிபொ னிலங்குதூச மணவையில் வேங்கடேச
சப்பாணி கொட்டியருளே. (6)

(6) நதிபதி—ஈண்டு பாற் கடல்; பயம்—அமுதம்; அனக—குற்ற மற்றவனே; காரிமுகம்—வில்; சனக—ஆதி; சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்பவர்கள்;

249 விண்பொருந விறல்நிசா சரர்நெஞ்சு பறைகொட்ட
வெங்களத் தெழுகூளிபோர்
மீளிக ளுடற்றசைக ளுண்டுகை கொட்டவே
மிகுசோரி விழிகொட்டவே

புண்குடைந் துறுகழுகு சிறைகொட்டி யாடவே
பொங்குடற் குறையொட்டியே
பொருதாவி லங்கொட்ட வவர்கள்சிர மூளைசொரி
பூளையென வேகொட்டவே

கண்குடைந் துண்டலறு கடியகுரல் விடுகொடிகள்
கரியமணி வாய்கொட்டவே
களிகொட்டி வானரப் படையாட வார்சிலைக்
கணைதொட்ட கருமேகமே

தண்பொருந் வம்பணில மணிகொட்டு திருநாட
சப்பாணி கொட்டியருளே
சயமங்கை நேசனே திருவேங்க டேசனே
சப்பாணி கொட்டியருளே. (7)

(7) விண் பொருத—தேவர்களோடு போரிட்ட; விண்—இடவாகு பெயர். கூளி—பேய்; சோரி—இரத்தம்; பூளை—இலவம் பஞ்சு; கொடி—சாக்கை; வாய் கொட்டல்—கத்துதல்; பொருந்—பொருநை நதி அண்மைவிளி; பணிலமணிகொட்டம்—சங்குகள் முத்துக்களைக் கொட்டும்; ஈண்டு போர்க்கள் வருணனை காண்க.

250 குனிசிலையை நிகர்புருவ நெரியநில வொழுகிவழி
குளிரும்நகை யிதழ்துலவவே
குழைகிழிய வெதிரும்விழி புரளநுத லெழுதுகுறி
குறுவெயர்வு விளைய வமுதார்

பணிமதிய முகமிலகு மலரளகச் சுருளழகு
படர்பிடரின் மிசையசையவே
பரதவிதி யுறுசதியி னதிர்முழவு சுருதியொடு
பயிலுமிட றுலியும்மிகவார்

தொனிவிளைய விசையொழுகு துளைமுரல நடனமொடு
துரிதவகை யொடுதொடரவே
சொரியுநறை யெ.........மைகுரலின் மனமும்வண
துறுகல்நிரை களுமுருகவே

துனிமகளிர் மகதியிசை பயில்மணவை யாதியே
    சப்பாணி கொட்டியருளே
தரைமங்கை நேசனே திருவேங்க டேசனே
    சப்பாணி கொட்டியருளே. (8)

(8) நகை—பல்; நகை இதழ் குலவ—பல்லோடு உதடுகள் சேர; குழை—குண்டல மணிந்த காது; குறி—திலகம்; சுருள்—கூந்தலின் ஐவகை ஒப்பனையில் ஒன்று; பிடர்—கழுத்து; சதி—நடனம்; பரத விதி—பரத நூலிற் கூறியுள்ள விதி; முழவு—மத்தளம்; மிடறெலி—கண்டப் பாடல்; துளை—துளையொடு கூடிய புள்ளாங் குழல்; கல்நிரைகள்—கல் கூட்டங்கள்; மகதி—வீணை; இதில் இசை பயிலும் வகை கூறப்பட்டுளது காண்க.

251 அருமறைகள் வாழவே யசுரர்கிளை மாளவே
    அமரர்பதி தான்மகிழவே
அலகிலுயிர் நீடவே யடியர்வினை யோடவே
    அபயம்எளி யோர்கள்பெறவே

திருவனிதை பூணுலாம் முலைபுளகம் மேவவே
    செழுமுனிவர் ஞானமுறவே
தினகரனு மானமோ டெழுமதிய மேருவே
    தினமும்வல மாகவரவே

கருவின்மழை தூவவே குலமகளிர் சாலிநேர்
    கவையின்முறை மென்மைபெறவே
கருதிமகம் வானுளோ ரவியுணவு கூறவே
    கதிமிகவும் வாழ்வுபெறவே

தருமபரி பாலனே மணவைநக ராயனே
    சப்பாணி கொட்டியருளே
தரைமங்கை நேசனே திருவேங்க டேசனே
    சப்பாணி கொட்டியருளே. (9)

(9) எழுதினகரனும் மதியமும் மானமோடு மேரு தினமும் வலமாகவர என்க. மானம்—விமானம் (தேர்); சாலி—அருந்ததி; மகம்—யாகம்; அவியுணவு—யாகத்தில் தேவர்கள் பெறும் உணவு; கதி—செல்வம்.

252 அலகில் கருணைசெய் குருகையில் வகுள்மல
    ர்த்தொடை பெற்றோனே
லமுதொழு கியதமிழ் மறைமொழி புனைபுயக்
    கட்ட முநிற்காரே

மலையென மலைநிசி சரர்பதி பலதலை
    வெட்டு சரத்தோனே

.. .. .. .. ..
.. .. .. .. ..

எழிலடி மையர்தமை விலையெழு தியவட்
டத்திர விலைப்பால

குலமறை யவர்பயில் மணவையில் வருமுகில்
கொட்டுக சப்பாணி
குவலய முழுவதும் அளவிடு நெடியவ
கொட்டுக சப்பாணி. (10)

(10) குருகை . . . . பெற்றேன்—நம்மாழ்வார் 568-ஆம் பாட்டினுரையில் காண்க.

## முத்தப் பருவம்.

253 அகிலூ ராவி குடியிருந்த
அம்மெல் லோதி யணங்கனையார்
ஆவி யன்ன கொழுநருளம்
ஆடக் குழைதோ ளசைந்தாட

நகிலூர் முத்த வடமசைய
நளிர்வெண் மதியம் நகையாட
நானம் திருத்தி வரித்தகுறி
நனைந்து நுதல்வே ரெழுந்தாடத்

துகிலூர் கொடியா டியவீதித்
துவர்த்த பவள மரகதம்போல்
தூக்குந் தாற்றும் கமுகரடித்
துவள வூசல் துதைந்தாடு

முகிலூர் பொதும்பர் திகழ்மணவை
முகுந்தா தருக முத்தமே
முத்தா ரணியும் பொத்துபத
முகுந்தா தருக முத்தமே. (1)

(1) அகில் . . . ஓதி அணங்கு அனையார்—அகிலினின்று பெருகிய புகை குடியிருந்த அழகிய மென்மையான கூந்தலையுடைய தெய்வப் பெண்களை ஒத்தவர். ஆவி—புகை. கூந்தலின் ஈரம் புலர அகிற் புகை யூட்டுவதியல்பு. நகில்—முலை; மதியம் நகை—சந்திரனையொத்து நிலவு காலும் பற்கள்; நானம் திருத்தி—வாசனைப் பொடியாலலங்கரித்து; குறி—திலகம், தூக்கும்—தொங்கும்; த்ாற்றும் கமுகு—தாற்றினைப் பெற்றிருக்கும் பாக்கு மரம். பாக்கு மரத்தின் கீழ்க் கட்டிய ஊஞ்சல் என்க. பொதும்பர்—சோலை. இப்பாட்டில் மகளிர் ஊசலாடும் சிறப்புக் கூறப்பட்டிருத்தல் காண்க.

254 தத்தும் திரைவா யோவாது
தனியே கதறுந் தடங்கடலில்
தணிசூல் குடக்கூன் முள்வெள்வாய்ச்
சங்கம் கோடி தவழ்ந்துகரை

துத்தும் பொருநை யுவட்டெடுத்துக்
குலவும் சங்கத் துறைவழியே
குறுகி மறுகா தெதிரேகிக்
கூண்டு மணிக்குப் பைகாலத்

தொத்து விரியும் கமலமிசைச்
சுருள்விண் டொளிரும் செம்முறியில்
துளங்கும் துளிபோல் கருவிமழை
சொரிந்து விரிந்த நிலாக்கற்றை

முத்த மிலங்கு வயல்மணவை
முகுந்தா தருக முத்தமே
முகுந்தா திருவேங் கடநாதா
முத்தம் தருக முத்தமே. (2)

(2) சூல்—கருப்பம் ; குடக்கூன்—சங்கம்—குடம் போன்று வளைந்த முள்ளையுடையதும் வெள்ளிய வாயினை யுடையதுமான சங்கு ; சங்கத்துறை—சங்கமமாகுமிடம் ; மறுகாது—பல காலுந்திரியாது ; கருவி மழை சொரிந்து துளங்கும் துளி போல் முறியில் விரிந்த நிலாக் கற்றை முத்தம் இலங்கு எனப்பிரித்துச் சேர்க்க. கூண்டு—சேர்ந்து ; மணிக் குப்பை காலமாணிக்கத் தொகுதிகள் ஒளி வெளியிட ; முறி—இலை ; தொத்து—பூங் கொத்துக்கள் ; கடலிலுள்ள சங்குகள் பொருநையாற்றின் சங்கமமாகுமிட வழியே தவழ்ந்து வந்து கரை மீதேறி வயலிலுள்ள தாமரை யிலையில் முத்துக்களைச் சொரியும் சிறப்பினைக் காணலாம்.

255 காவா யாதி மூலமெனக்
கறைக்கால் பிறைக்கோட் டிபமழைப்பக்
காலும் விரும்புங் கவனமுடைக்
கலுழன் பிடரில் தனித்தோன்றி

தீவாய் வடவை தீத்தழலும்
சிகைவாய்ப் பருதி யொன்றேவித்
தீரா யிரவா ளனவாலால்
சினங்கூர் முதலை தனையடர்த்த

கோவா மணியே தீங்கரும்பே
குறிப்பா ருளத்தில் குடியிருக்கும்
குணவா ரிதியே பிறவாத
கோலப் பூவை மணிவண்ணு

மூவா முதலே மணவைநகர்
முதல்வா தருக முத்தமே
முகுந்தா திருவேங் கடநாதா
முத்தம் தருக முத்தமே. (3)

(3) இபம்—யானை ; கறைக்கால்—உரலடி போன்ற கால் ; கால்—காற்று ; பருதி—வட்டமாயுள்ள சக்கராயுதம் ; தீர் ஆயிரம் வாள்அனவாலால் எனப்பிரிக்க.

256 வழங்குஞ் சங்கச் சுதையிழுகி
வாய்த்த நெடுவாய்த் தளைப்புனல்நேர்
வழங்கா வாறு பருவானை
மறியப் பெருக்கி யிருகரையும்

பழங்கொண் டோங்கு முப்படைக்காய்ப்
பரஞ்சேர் முடத்தா ழைகள்நெருங்கும்
பழனம் பெருகப் பொருகயல்கள்
படர்ந்து கரைசெய் சுருங்கைவழி

ஒழுங்கோ டொழுகு நீர்பொசியா
உகளும் செங்கண் வரிவரால்
ஊடே நுழைய மள்ளரொலி
உரல்வாய்ப் பம்பை போலிடித்து

முழங்கும் பொருநை திகழ்மணவை
முதல்வா தருக முத்தமே
முகுந்தா திருவேங் கடநாதா
முராரி முத்தம் தருகவே (4)

(4) சுதை—சுண்ணம்பு ; சுருங்கை—கள்ள வழி ; வரால்—மீன் வகை ; முராரி—முரனை அழித்த திருமால் ;

257 சீத நறுங்கடல் விளைமுத்து வலைப்படும்
சிறுமுத் தேகண்ணார்
செங்கழை தங்கிய முத்தெனிலாலை
செறிந்துடை படுமுத்தே

தாதுறு பங்கய முத்தோ பங்கந்
தானுறு கறை முத்தே
தந்தா வளமுத் தாமிட நடுவுட்
டங்கிய குறைமுத்தே

சோதி நறுங்கழை முத்தே தீவாய்ச்
சுடுதுளை படுமுத்தே
சொரிமுகில் முத்தோ விடியுறு முத்தே
தோமில் குணத்தொளிசேர்

மூதுரை வேதம் கனிகனி வாயால்
முத்த மளித்தருளே
முகிலே புகழ்மண வாபுரி மாலே
முத்த மளித்தருளே. (5)

(5) கண் ஆர் செங்கழை—கணுக்கள் பொருந்திய கரும்பு ; பங்கம்—சேறு ; தந்தாவளம—யானை ; சோதி நறுங்கழை—மூங்கில் ; முகில்—மேகம் ; இங்குப் பல விடங்களிலும் முத்துத் தோன்றுவதாகக் கூறி அலைபடும் (அலைக்கப்படும்) உடைபடும் ; சேறுறும், குறைபடும், தீவாய் சுடு துளைபடும், இடியுறும் என்றும் குற்றம் கூறி உனது முத்தம் குற்றமில்லாத்தால் கொடுப்பாய் என்கிறார்.

258 விளரி யளிகள் பயில்துளப
விதுரன் மனையி லுற்றவா
விரவு மமரர் முடியுமுத
கழல்க ளொளிரு மற்புதா

தளரு மடிமை யுறுபிறவி
　　தவிர வருள்செய் யச்சுதா
சனக னுதவு மகள்கொழுந
　　தனுவை முனமி றுத்தவா
அளவில் மகளி ரொடுகலவி
　　அளையு மொருவ வுத்தமா
அழகு கனியும் மூகலளித
　　இரவி குலமு தித்தவா
முளரி நயன திருமணவை
　　முகிலே யருள்க முத்தமே
முனிவர் பரவு முருவவருவ
　　முதல்வ தருக முத்தமே. (6)

(6) அளி—வண்டு; விதுரன் மனையில் உற்றது, கண்ணவதாரத்தில் தூது சென்ற போது, கழல்கள்—கழலணிந்த பாதங்கள்; சனகன் மகள்—சீதை; அளவில் . . . உருவ—கண்ணவதாரத்தில் பதினாயிரம் கோபிகையரோடு ராசக்கிரீடை செய்தது காண்க. இரவிகுல முதித்தது—இராமனாகத்தோன்றியது.

259 கோவாத முத்தம்விலை கூறாத வச்சிரமணி
　　கூடாத கற்பதருவே
கோடாத பற்பமெழில் கோணாத பச்சைவரை
　　கூசாத சக்கிர வரையே
பேவ வெற்றியிபம் வீயாத புத்தமுத
　　மே......வெறுக்கமலரே
யான்வாய் மிழற்றுமொலி வீரா விசித்திரமணி
　　யே......மனத்திலிடியே
நாவீரர் சொற்ற தமிழ் வீரா கரக்குரிசில்
　　ஞானு கரப்புணரியே
நாதா தொகுத்த மனுகீதா மலர்த்துளவ
　　நாலா ரணத்துபநிட
தேவாதி மெய்பொருட் கோலாக லப்பிரவுட
　　திருவாயின் முத்தமருளே
தேனூறு பொற்றுளவ நாலா ரணக்குழவி
　　திருவாயின் முத்தமருளே. (7)

(7) பற்பம்—தாமரை, நீலம், பச்சை, கருமை, முதலிய நிறங்களைப் பேதமின்றிக் கூறுவது கவி மரபு. பச்சை வரையென்றுர் நீல நிறமுடைமையார் சக்கரவரை—சக்கராயுதம் தாங்கிய மலை யொத்தவன்; இபம்—யானை; நாவீரர்—நம்மாழ்வார்; வீராகரம்—வீரத்திற் குறைவிடம்; பிரவுடன்—பெருமையுள்ளவன்; நால் ஆரணம்—நான்கு வேதம்.

260 தா நீக....யும் வாளிற் பட்டுந்
　　தரங்கத் திடையே மொத்துண்டும்
தாழும் துலையில் தூக்குண்டும்
　　தணிந்தும் கருஞ்சேற் றிடைப் புதைந்தும்

....ர மீக்கூர்த் துளைபட்டும்
உடலம் கவைக் கொண் டுரைபட்டும்
ஒளிமட் கியும்கொடி யும்விளர்த்தும்
ஒதுங்கி யதுங்கி யுரலசுழி

வர போக்கா......திதிரு....லபுரை
வழங்காக் கரைப்போக் கீனமனுண்டு
மதிக்குந் தரமாய்ப் பகரதலே
வணிகர் பழிக்கப் பழிப்புண்ணு

மூரல் வேய்கீ தங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முகுந்தா மணவை யுகந்ததிரு
முகிலே தருக முத்தமே. (8)

(8) துலே—தராசு ; உரைபடல்—உரை கல்லிலிட்டுப் பார்த்தல். விளர்த்தும்—வெண்மையாகியும் ; ஈண்டு முத்தினை வணிகர் விலை மதிக்கும் நிலையைக் காட்டுகிறது. பெரும் பாலும் சிதைந்துள்ளது.

261 இழைக்கும் நுண் ணூல் சிறியமருங்
கேந்தச் செம்மாந் தெழுமுலேயோர்
இல்வத் துவர்வாய்த் தவள நிறம்
எய்த வெய்தும் கலவிநலம்

விளைக்கும் பொழுதி லிறைவிழித்தன்
மெய்யி னழலைக் குறித்துளத்தில்
விரும்பும் மடவா ரிருந்ததென
வெறுத்து மிகுந்த புலவியினால்

திளைக்கு மாகக் குங்குமத்தைத்
திமிர்ந்த முன்றில் செங்காந்தள்
செறிவெண் குருகை யுடைத்த வதிற்
சேரச் செவ்வான் பலகோடி

முளைக்கும் பிறைபோல் மிளிர் மணவை
முகுந்தா தருக முத்தமே
முதலே திருவேங் கடநாதா
முகிலே தருக முத்தமே. (9)

(9) இழைக்கும் நுண் நூல் சிறிய மருங்கு—இழைக்கின்ற நுண்ணிய நூலினும் சிறிய இடை ; கலவி விளையும் பொழுது பவளம் போன்ற சிவந்த அதரம் வெளுக்கும். எனவே " தவள நிறம் எய்த " என்றார். பெண்கள் ஊடல் கொள்ளுதல் போல அன்னங்களும் ஊடல் கொண்டு முன்றிலில் உள்ள குங்குமத்தைப் பூசிச் செங்காந்தள் பூவில் சேர அவை சிவந்த வானத்தில் பல கோடி பிறைச் சந்திரன் தோன்றுவது போலிருந்தது என்க. செங்காந்தட் பூ சிவந்த வானத்திற்கும் குங்குமம் திமிர்ந்த குருகுகள் சிவந்தெழும் சந்திரனுக்குமுவமை.

262 மைக்கட் குவளை குழை வள்ளை
வன்னக் குமிழ் வெண் டளவு கொவ்வை
மதிக்கீற் றரக் காம் பனுந்தாங்கு
மதியம் வல்லி பூத்ததெனக்

கைக்கட் கமலங் கழங்காடிக்
கமழுந் தாழிக் குவளை (சிந்தி)
கோவது கனிந்த......மூல் சும்மை
காரில் மின்போ லிடையசையத்

தொக்க மடவார் பயில்மேடை
சுதைவெண் ணிலவு வழிந்தொழுக
துலங்கு கழுத்தில் மைவதியத்
தூய மதிமா முடி தவழு

முக்கட் கனிபோல் பொலி மணவை
முகுந்தா தருக முத்தமே
முத்தா ரணியும் பொத்துபத
முதலே முத்தந் தருகவே. (10)

(10) மைக்......என :—கரிய கண்போன்ற குவளையையும், காதுகள் போன்ற வள்ளைப் பூவினையும், அழகிய குமிழம்பூவும் (மூக்கிற்கு உவமை கூறுவது) வெள்ளிய முல்லையும் (பல்லுக்குக் கூறுவது) கொவ்வைப் பழங்களும் (அதரத்திற்குக் கூறுவது) பிறைச் சந்திரனும் (நெற்றிக்குக் கூறுவது) செவ்வல்லியும் (வாய்க்குக் கூறுவது) தாங்கிய ஒரு சந்திரன் கொடியில் தங்கியது போன்று இல்பொருளுவமை; தாழிக்குவளை - தாழியில் போட்டு மலர்விக்கும் குவளைப்பூ, சுதை - சுண்ணும்பு; மை - மேகம்; முக்கண்கனி - சிவன்; முதலிரண்டடிகளும் பெண்களுக்குற்ற அடைமொழி; மெத்தையிலுள்ள சுண்ணும்பு பூசியதால் நிலவு ஒளிவழிந்தொழுகுவது சிவபெருமான் பூசிய வெண்ணீற்றுக்கும், அம்மேடைகளின் மேல் நடுவிடத்தில் மேகம் தங்குவது சிவபெருமான் கழுத்தில் நஞ்சுண்ட கறைக்கும், அம்மேடையின் உச்சியில் சந்திரன் தவழ்வது சிவபிரான் தலையில் வைத்துள்ள பிறைச் சந்திரனுக்கும் உவமையானமை காண்க.

## வாரானைப் பருவம்.

263 குழையிற் றுலங்கு குழையசையக்
குறுக்குத் தசைக்காற் கிண்கிணியும்
குரல்வாய் மணியும் மிக முழங்கக்
கோலப் பதநூ புரமலம்ப

இழைத்தொத் தியபே ராகத்தில்
இளகுந் துவர்வா யமுதொழுக
இலகு முறுவல் நிலாமகளிர்
இருகண் சகோர வினந்தெரிப்ப

நிழலிற் பொலியு மரைமணி நேர்
நிறைத்த சுட்டி நுதலசைய
நெய்த்த புழுகார் மயத்த குஞ்சி
நிரைக்கும் நீலச் சுரும்பார்ப்ப

மழலைக் குழல்வாய்ச் சிறிய மொழி
மழவே வருக வருகவே
மணவா புரிவேங் கடவாண
வரதா வருக வருகவே. (1)

(1) குழையில் - காதில் ; ஆகம் - மார்பு ; சகோரம் - நிலவை யுண்ணும் பறவை.

264 அல்லி மணக்கும் நறைக்கமல
அலரே மணக்கும் குளத்தருகே
ஆரம் மணக்கும் ச....க்கின்ற
அள்ளல் மணக்கும் வயல்மணக்கும்

சொல்லின் மணக்கும் குலைநீழல்
தூவி யன்னப் பெடைமணக்கும்
சோலை மணக்கும் கரும்பொடியத்
தூண்டில் மணக்கும் பருவரால்

முல்லை மணக்கும் சுரும்பார்ப்பக்
குதிக்கும் பெருமை மணத்தவளங்
கூர்ந்து மணக்கும் திருமணவைக்
குழகா கோக னகமணக்கும்

வல்லி மணக்கும் பச்சைநிற
வரையே வருக வருகவே
வரதா திருவேங் கடநாதா
மாலே வருக வருகவே. (2)

(2) ஆரம் - முத்து ; அள்ளல் - குழை சேறு ; சொல் - நெல் பயிர் ; கரும்பொடிய சோலை மணக்கும் என்க. அரால் - ஓர் வகை மீன் ; தூண்டில் - மீன் பிடிக்கும் கருவி ; முல்லை - ஓர்வகைப்பண். ஈண்டு மணக்கும் என்ற சொல் பல முறை வந்து பொருள் வேறு பட்டதால் சொற் பின் வரு நிலையணி ; கோகனகம்......வரையே - தாமரை மலரில் சேர்ந்த வல்லிபோன்ற திருமகளை மணம் புரிந்த பச்சை மலையொத்த மாலே.

265 வேரிக் கனியே கனி கனிந்து
மிகுந்த ரசமே ருசிப்பொழுக
விள்ளுந் தமிழே தமிழினியல்
விரித்த பொருளே பொருள்ஞான

மூரித் தருவே தருவித்தே
முத்தே முத்தின் மூலம்மே
மூலச் சுடரே சுடர்க்கொழுந்தே
முதுநான் மறைக்குவை யேகொழுந்தே

தேரப் படுவுண் ணுவமுதே
அமுதே வமுதத் தெளியடியார்
சிந்தைக் கொளிர்சிந் தாமணியே
செல்விச் செல்வ வருள் மணியே

வாரிக் கடலே கடலின்மணி
வண்ணு வருக வருகவே
மணவா புரிவேங் கடவாணு
வரதா வருக வருகவே. (3)

(3) வேரி - தேன் ; மூரி - வலிமை ; மகாறுவருகவயே எங்க.

266 தளையார மலர்கஞ்ச நடுவிடை முந்தமுத்
........னன விண்ணோர்
தருகற் பகக்கொடித் தனைந்தவண் டெனவே
தழல்நிறத் தழைநிந்நரமே

விளேவே . . . . , . . .
. . . . . . . . . . . .
வழுகொழுத் தாய்செவிலி நற்று வதென மிக்க யெனத்தக்க
மேண்மையா குடங்கை மிசையே

அளேவாரி யுண்டகைத் தாமரைத் துணையினால்
அவர்முலே புடைத்துண்டுமே
அண்டாண டம் . . . . . . . த்தா மரைச்சிலம்
பார்ப்பமுகிழ் நகைபூப்பவே

வளையாழி திகழ்வைய மொருபத்தன் மொய்ம்புவரை
வளருமழை முகில் வருகவே
மதகூடு வரிவாளே யெதிர்பாயும் மணவைநகர்
வளருமா தவன் வருகவே. (4)

(4) அளே - வெண்ணெய் ; அவர் - கோபியர் ; வளேஆழி - சங்கு சக்கரம்.

267 அரிலூடு படர்கானி னிடைசீதை யொடுபோகி
அடல்மீறி வருமொருவனே
அறிவளார் மனநேய கொடியாரு ளதிதூர
அடைமீது துயில்குழவியே

முருகூறு மணம்நாறு துளவவேறு தொடைமார்ப
முதிராத கதிரிரவியே
முளேமேவு துளேயூது கனிவாய முனிவோர்கள்
முறையாக வடிபரவுவோய்

தரைமேவு வரையேழு மெனலான தருவேழு
தனதூடு விடுகணையனே
தமிழ்தேரு மலேமேவி யொழுகாறு புடைவேவு
தடநீடு மணவைமுகிலே

வரிபாடு மணிகோடி நறைபாய மலர்மாது
மணவாள முகில்வருகவே
மழைமேனி யதிருப குழைக்காத முகசோப
வளர்சோதி யெதிர்வருகவே. (5)

(5) அரில் - சிறுதூறு ; அடை - ஆலிலை ; முளைமேவு துளை - மூங்கிலால் செய்த புள்ளாங்குழல் ; முளை - மூங்கில் ; மலையை யொத்த எழு மரங்களை யெய்தது - இராமவதாரத்தில் சுக்கிரீவன் ஐயத்தைப் போக்க ; தமிழ்தேரும்மலை - பொதியமலை.

268 துளிதூங்கு மாமுலைப் பால்சங்கி னிடைபெய்து
துவர்வா யதுக்கியூட்டிச்
சுடரவனை மதியம்வலம் வருவதென மணியணிச்
சுட்டிநுதல் வளைசுற்றியே

களிகூர்ந்து தரையில் சங்கங்க விழ்த்திமுலை
கான்றபால் துளியிழைத்தே
கவினும்வகை திலதமிட் டய்யவி யகிற்புகை
காண்வர வெழுப்பிமணியால்

ஒளிகூர்ந்த யரமியத் தெய்துபுன் மாலையிடை
உற்றபுட் குரல்கள்கேளா
துள்ளிருத் தித்தனி வளர்த்ததாய் கோசலைக்
குளமகிழ் பிள்ளையரசே

அளியேங்கள் காணவேங் கடவாண பூணசைய
அசையுநடை யுடன்வருகவே
அமுதொழுகு பொருநைநதி சுலவுதிரு மணவைநகர்
ஆயரே றேவருகவே. (6)

(6) தூங்கு - தங்கு ; அதுக்கி - அமுக்கி ; சுடரவனை........ சுற்றி - சூரியனைச் சந்திரன் வலம் வருவது போன்று மணியணிந்த சுட்டியென்ற ஆபரணம் தங்கும் முகத்திடம் பால் வார்த்த சங்கினைச் சுற்றி திருஷ்டி கழித்து ; நுதல் - முகத்திற்காயிற்று ; களிகூர்ந்து...... திலதமிட்டு - மகிழ்ந்து தரையில் சங்கினைக் கவிழ்த்துப் பால் துளியினால் மண்ணைக் குழைத்து அழகாகத் திலகம் வைத்து ; அய்யவி - வெண்சிறுகடுகு, ஐயவி என்பதன்போலி ; அரமியம் - நிலாமுற்றம் ; புட்குரல்கள் - வௌவால், கோட்டான் முதலியவற்றின் குரல்கள். இங்ஙனம், பார்ப்பதும் கேட்பதும் குழவிகட்கு "பக்ஷிதோஷம்" நேரு மென்பர். இப்பாட்டில் கோசலை இராமரை வளர்த்த திறம் காட்டப்பட்டுள்ளது. சங்கினால் திருஷ்டி சுற்றல், நிலப்பொட்டிடுதல், அகிற் புகையூட்டல், மாலையில் வௌவால் முதலிய பறவைகள் குரல் கேளவொட்டாது வீட்டினுள்ளிருத்தல், ஒவ்வொரு தாயரும் இன்றும் கைப்பற்றிவரும் முறைகளாகும். அளியேங்கள் - அளிக்கத்தக்க நாங்கள் ; சுலவு - சூழும்.

269 குனிதவழ வமுதுபொதி குழவிமதி பொன்னிதழ்க
கொன்றைநதி வளவும்வேணிக்
குடிலகோ லத்தர்நுதல் விழியழல் குளித்துருவு
கொண்டமக ரக்கொடியினன்

முனியிலழி யமுதெனத் தருமகளிர் குழையுறவு
முடுகுசடை நெடியவிழிபோல்
முழுநெறிக் குவளைமுகை புரிமுறுக் கவிழவளி
மூசுவா சத்தடமெலாம்

பனிபொதியும் வள்ளைவளை கொடுமாது தரநேரு
பவளவாய்த் தூரியன்னம்
பங்கயக் கோதையர்கள் . . . மலராக் கவினொடும்
பல்காலு மெதிர்காட்டியே
வனிதையர்கள் குழுவினொடு நடைபயிலும் வயல்குலவு
மணவைமா நவன்வருகவே
வண்டுநிறை தண்டுளவ கொண்டல்நிற வேங்கட
மலைக்கொழுந் தேவருகவே. (7)

(7) குனிதவழ........மதி - வளைவு பொருந்திய அமிர்தம் பொருந்திய இளைய சந்திரனை யும்; பொலனிதழ்க்கொன்றை - பொன்போன்ற இதழ்களையுடைய கொன்றைப்பூ; நதி - கங்கை; வேணிக்குடிலம் - ஒருபொருட்பன்மொழி; இவ்வடைகள் சிவபெருமானைக் காட்டுகின்றன. நுதல் விழி......கொடியிறன்—சிவனது நெற்றிக் கண்ணின் தீயில் மூழ்கி உருவு அழிந்துக் கொண்ட மன்மதன்; சிவபெருமான் கோபித்துப் பார்க்க அழிந்த மன்மதனை யொப்ப மகளிரும் கோபித்தால் அழிகின்ற ஓர் அமுதத்தை (நஞ்சினை)க் கொடுப்பது போன்ற காதினிடம் உறவுகொண்ட விழிகளைப் பெற்றிருந்தனர் என்றும், அக்கண்களை யொத்துக் குவளைகள் முறுக்கவிழும் எனவும் விரித்துப் பொருள் கொள்க. புரி - கட்டு; அளிமூசு - வண்டுகள் மொய்க்கின்ற; தடத்திலுள்ள அன்னங்கள் மடவார்கள் நடைபோல நடக்கப் பயிலுகின்ற மணவை நகர் என்க.

கோலச் சிலைப்புருவ நுதல்நாம மெழுதவிழி
கூருமஞ் சனம்வரிப்பக்
குஞ்சிமிசை மஞ்சினிடை சேருமதி போற்றளவு
கொண்டணிய விண்டமலர்நேர்
காலிற் சதங்கைநூ புரமணி மணியணிக்
கலன்வகை திருத்த வழகார்
கனகவரை நாணரையி னணியமஞ்சள்பொடிக்
களபமுட லதுப்பவகலந்
தாலத் திணங்குமய் படையணிய விருகரத்
தாமரைத் தொடிநிரைப்பத்
தையலார் கண்ணெச்சில் தோயாம லுப்பிலைத்
தாலமெதிர் தலைசுற்றவே
வாலப் பிறைப்பருவ மாகவள ரொருவுருவ
மழைநிறப் புயல்வருகவே
வண்டுநிறை தண்டுளவ கொண்டல்நிற வேங்கட
மலைக்கொழுந் தேவருகவே. (8)

T 44.00
1908/2
1344

(8) அஞ்சனம் - மை; மஞ்சினிடை சேருமதிபோல் குஞ்சிமிசை தளவு கொண்டணிய என்க. தளவு - முல்லை மலர், இது கண்ணவதாரத்தில் அணிந்தார். தாலத்து இணங்கும் அய்(ஐ) படை அணிய - உலகத்திற்கொத்து ஐயம்படை (திருமாலின் ஆயுதங்களை ஐந்தும் பொருந்த ஆபரணம் செய்து குழவி கழுத்திலிடுவது மரபு); அணிய தாலம் - உலகம்; கண் எச்சில் - திருஷ்டி தோஷம்; உப்பு இலைத்தாலம் உப்புடன் கூடிய பனையோலை; தாலம் - பனை; மூன்றுவீட்டிலுள்ள பனையோலைக்கூறை வேய்ந்த வீடுகளினின்று ஓலை ஒடித்து வந்து உப்புவைத்துச் சுற்றித் திருஷ்டி போக்குவது தாயார் வழக்கம்; வாலப்பிறை - வெள்ளிய பிறை.

271 கற்பூத் தெதிர்ந்த வகலிகைக்குக்
கதிர்பூத் தலர்ந்த வனசமலர்
கழல்பூத் தெழுந்த துகள்கதுவக்
கலைபூத் திலங்கு மதிவதனம்

தற்பூத் தெழுந்த கரந்தையென
தரும்பூத்து வரக்கண்ட
சதுரே மதுர முறும்வசனத்
தருணம் பூத்த பதகிரண

விற்பூத் தெழுந்து கருணைவெள்ளம்
விழிபூத் திலங்கு மழைமுகிலே
விருது பூத்துப் பொருகளத்து
வெற்றி பூத்த போர்விளைத்து

மற்பூத் தெழுந்த திணிதடந்தோள்
மலையே வருக வருகவே
மணவா புரிவேங் கடநாதா
வரதா வருக வருகவே. (9)

(9) கதிர் பூத்தலர்ந்த வனசமலர் கழல்பூத்து எழுந்ததுகள் கதுவ - சூரியனால் பூத்து அலர்ந்த தாமரை மலரை யொத்த கழல் விளங்கும் காலில் பொருந்தி எழுந்ததுகள்பட ; கல்லாயிருந்த அகலிகையை இராமர் பாததூளி நீக்கியது காண்க. அதனால் இலங்கு மதி வதனம் என்க. கரந்தை - ஒரு பூண்டு. இதன் பூ மாலையை நிரைமீட்போரணிவர். வில் - ஒளி ; விருது - வெற்றிச் சின்னம் ; மல்-மல்யுத்தம்.

272 கரமும் விழியும் முகமு மலர்செய்
கமல மெழிலி யுருவனே
கனக னகல முகிரி லளைசெய்
கடின கருணை யொருவனே

உரமு னுடைய வசுரர் பதிமெய்
உருள வடல்செய் விசயனே
அருளு மிரத விரவி மதலை
உறவு புரியும் வரதனே

குரவை புரிய விடையர் மகளிர்
குழுவி னளையு நடனனே
குருதி யொழுகு மழுவி னரசர்
குணமு னடரு நெடியனே

வரமு மளவி லருளு முதவு
மணவை வரத வருகவே
மருது பொருத விருத சதுர
மழவ வருக வருகவே. (10)

(10) எழிலி - மேகம் ; காமர் ஊரானின், எழிலி ஊர்ந்தான் எனக் கூட்டுக. கனகன் - இரணியன் ; உரம் - பலம் ; இந்திராணி மகிழ்ந்த - ஏழ்பரி சக்ரத் தேரினையுடைய சூரியன் மகன் ; சூரவை பாட்டிற் காண்க. மழு - பரசு ; பரசுராமர் வரலாறு 232-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. மருது - மருத மரங்கள், 34-ஆம் பாட்டின் காண்க.

273 தோற்றிய திருக்கோயில் வாசலில் தமனியத்
தூணங்க டைந்தமைத்துச்
சுடர்வயிர மரகதச் சாளர மிணைக்கிமணி
தூங்குகொ டுங்கை சேர்த்து

நாற்றிசை முகங்கொண்டு தாமரைக் கடவுளுறை
நாட்டையு மதட்டி நீண்ட
நவமணி குயிற்றிய திருச்சித்ர கூடமும்
நவரங்க சப்பரமுமெண்

மாற்றரிய செம்பொன்மக ரக்குழையு மரவிந்த
மங்கையுறை யாபரணமும்
மற்றுள திருப்பணிகள் முற்றவும் கண்ட புகழ்
வைகுந்த நாதனுதவும்

போற்றியடி யான்மகிப ரேத்தமன மகிழ் கொண்டல்
பூதலந் தொழவருகவே
பூங்கமு கிளம்பாளை தேங்கமழ மணவைபுன
சீதுழாய்க் கடல் வருகவே. (11)

(11) தமனியம் - பொன் ; சாளரம் - சன்னல் ; மணி - இரத்தினம் ; தாமரைக்கடவுள் உறைநாடு - பிரமன் வாழும் சத்திய உலகம். சித்ரகூடம் - சித்திர சாலே ; சப்பரம் - மேற் கட்டமைந்த சிங்காரக் கட்டில் ; “ அடியான் மகிபர் ஏத்த ” என்க.

## அம்புலிப் பருவம்

### சாமம்.

274 மண்டல முனக்கு முள திவனுக்கு மோவளவில்
மண்டலமு முளதுனக்கே
மரணமுண் டிவனுக்கு மரணமுள த........
மருவர விவனுழியான்

புண்டரிக பதியுற வுனக்குமிவ னுக்குமோ
புண்டரிக பதியுறவுகாண்
பொழியமுத கலையுண் டுனக்குமின் றெழுகுசெம்
பொற்கலையி னுடையனிவனே

எண்டிசையு நிலவுநில வுண்டுனக் கிவனுக்கும்
இளநகையின் நிலவுண்டுகாண்
இரவொழித் தருள்வை நீ இவனுமோ காமாரி
இரவொழித் தானுதலால்

அண்டர்பர வுங்கிரண சரணமண வைப்புயலோ
டம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (1)

(1) (1) சந்திரன் மண்டலம் (பரிவேடம்) பெற்றுள்ளான்—வேங்கடநாதன் அளவில்லாத மண்டலம் (தங்கி யிருக்கும் ஊர்) உண்டு.

(2) மரணம் (அமாவாசை நாளில் காணப்படாததால் இங்ஙன் கூறினர்) பெறுவான்—(வீடுபட்டுள்ளது).

(3) புண்டரிக பதியை (தாமரைக்குக் கணவனை சூரியன்) உறவு பெறுவான்—புண்டரீகபதி (தாமரையில் தோன்றிய தலைவனை பிரமன்) உறவினன் (மகன் முறை) ஆவான்.

(4) அமுதம் பொழிகின்ற கலை (வளரும் பங்கு தேயும் பங்கு) உண்டு—பிரகாச மிகும் சிவந்த பொற்கலை (பொன்னாலான உடை) உடையவன்.

(5) எல்லாத்திக்கிலும் நிலவுகின்ற குளிர்ந்த நிலவு பெற்றிருப்பான்—இளநகை (பல்லின் ஒளி)யின் நிலவு பெற்றுள்ளான்.

(6) இரவு (இராத்திரி) ஒழித்தருள்வான்—சிவபிரானது இரவினை (இரத்தல் தொழிலை) ஒழித்தவன்..........ஆம் பாட்டுக் குறிப்பு காண்க.

அண்டர் - தேவர்.

## தானம்.

275 தாரணியி னொடு செம்பொன் வரைவலஞ் செய்வதுந்
தனுவென வுடற்கோடலுந்
தவளநிற மாய்வுற்று வளர்வதுந் தேய்வதுந்
தணிவட்ட நடுவணுறலும்
வாரண வுரிப்போர்வை யரனடிப் பட்டதும்
வானவர்க் குணவாவதும்
மையலுறு தையலார் வாய்வசைப் படுவதும்
மந்தர மிடத்தாவதுங்
காரண மிலாதுகா கோதர முணக்கடிது
காய்வதுங் கங்கைமடுவில்
கலையொன்றில் நரலலையி னலையுண்ப துந்த விர்வை
காரிய முணக்கல்ல காண்
ஆரணம் பயில்மணவை நாரண னழைத்தனன்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (2)

(2) செம்பொன்வரை - மேருமலை ; தனுவென உடல்கோடல் - தக்ஷன் சாபத்தால் பிறைச் சந்திரன் வில்லைப்போன்று உடல் வளைந்துள்ளது காண்க. தவள நிறம் மாய்வுற்று - வெண்மை நிறம் அழிந்து ; தணிவட்ட நடுவண் உறலும் - குறைந்த களங்கம் நடுவிடத்தில் பொருந்துவதும் ; உரி - தோல் ; வானவர்க்குணவு - முதல் 15 நாள் சந்திரன் அமுதத்தைத் தேவர் அருந்துவர் ; வசைப்படுவது - திட்டுவது ; மந்தரம் இடத்தாவது - மந்தரமலை மத்தாகிக் கடையும்போது சந்திரன் தறியாகி இருந்தான் ; காகோதரம் - பாம்பு ; நரல் அலை - ஒலிக்கும் அலை ; ஆரணம் - வேதம்................

### தண்டம்.

276 வெம்புகட் டழலொழுகு சுடிகையா யிரமுடைய
வெள்ளரவ மேலிலகல்வாய்
மென்றுமென் றுமிழாது வெம்பசியி னுலுனை
விழுங்கும் விரி கதிராழியான்

உம்பருற் றெழுமிரவி வெயில்மறைத் தவன் எண்ணில்
உனதமுத நிலவரியதோ
உரகநாட் டமுதகட நல்குபுள் ளரசினுக்
குனைநல்க மொழியி லெளிதோ

இம்பரிற் செலநிற்பன் ஓரிமைப்பி லருளுவன்
உனை......குமிதாதலால்
ஏழேழு புவனமும் மதிக்கவருமதியமே
எய்துத லுனக்கு மதிகாண்

அம்புயத் திருவளரும் மணவை நகர் முகிலுடன்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்த புய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) கண்+தழல் - கட்டழல் ; கண்ணினின்று எழும் அக்கினி ; சுடிகை - சூட்டு ; அரவம் ஈண்டு - ஆதிசேடன் ; ஆழி - சக்கரம் ; இரவிவெயில் மறைந்தது 232-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. உரகம் நாடு அமுதகடம் நல்குபுள் அரசு - பாம்புகள் விரும்பின அமுத குடத்தைக் கொணர்ந்து தந்த கருடன் ; நல்க - தூக்கிவர ; உனக்கு மதி- உனக்குத் தக்க புத்தி ; அம்புயத்திரு - தாமரையில் வாழுமிலக்குமி ;

### தானம்.

277 காலையெழு தரணிகதிர் காலொளி மழுங்காது
கதிராயி ரஞ்சோரிவாய்
கனல்திகிரி யுண்டுனது கலைநிறையி லாவுணக்
கருதிலருள் கருடனுளன் காண்

மாலையெழு போதினுடல் கூனெழிப் பனினிது
மந்தரைக் கூனெழித்தான்
வளராது தேய்வுண் டுனக்கெனில் கலைமதி
வளர்க்குமிவ னேயாகுமால்

வேலையடை கல்லெனக் கொண்டமு தெழக்கடைய
வேண்டிலிவன் மொழியமுதமே
விண்ணுட னுக்கருள்வ னதுவன்றி யேயுனது
மேம்பாடு சொல்ல வெளிதோ

ஆலைவயல் சூழ்மணவை மாதவ னழைத்தனன்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (4)

(4) காலை........உண்டு - காலையில் எழுகின்ற பூமிக்கொளிவீசும் சூரியனைப்போன்று வெளிவிடுகின்ற ஒளி மழுங்காமல் ஆயிரம் கிரணங்களைச் சொரிகின்ற கூர்மையையுடைய கனல் இன்ற சக்கரப்படை உனக்கு ஒளி கொடுக்க உண்டு. சூரியனிடமிருந்து சந்திரன் ஒளிபெறுவதால் இங்ஙன் கூறினார். கலை. . . . . . . காண் :—கலை நிறையாதபடி தேவர்கள் சாப்பிட நினைத்தால் தேவர்களுடைய அமுத குடத்தைக் கொண்டுவந்து நிரப்பக் கருடன் உள்ளான். மாலை. . . . . . . ஒழித்தான் :—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 127-ஆம் பாட்டினும் . . . . . . . ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. வேலை அடைகல் என - பாற்கடலில் தரியாக ; மேம்பாடு சொல்ல என்றார் நண்பனுயின் என்பது பற்றி.

278 மஞ்சினைக் கிழியவெழு நொச்சிபுனை மதிலாழி
வளையிலங் கைக்கூடுபோம்
வழிகண்டு தந்தவந் நாள் முத லிநாள் வரையும்
மானமொடு நீயிருந்தாய்

தஞ்சனக் கிவனலது வேறில்லை...... பகா
தங்களுக் கபாரமே
தருவரே மதியுடையர் இனிவேறு காரணம்
தக்கசொல் மிக்கவகைகேள்

நஞ்சினிற் கருகுமிட றனைவலம் வைத்தருளும்
நாதனிவ னூர்ந்த மாமன்
நான்மறைப் பொருளுமிவன் ஞானசற் புருடருள்
நகுகமல முகையிநடுவார்

அஞ்சனக் கிரிமணவை நகர்வரு முராரியுடன்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்பிலீ யாடவாவே (5)

(5) மஞ்சு - மேகம். மஞ்சினை. . . . இருந்தாய் :—முன் பிள்ளைத் தமிழ் கொத்து 166-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. தஞ்சு - தஞ்சம் ; நஞ்சு - ஆலகாலவிடம் ; நஞ்சினில் . . . . வைத்தருளும் சிவனை வலப்பக்கமாக வைத்தருளும். 70-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

279 ஊறுபால் நறையொழுகு கழைகணு வெடித்தநிரை
ஒளிர்முத் திறைக்கவுழுவார்
ஊடே யொடித்துநிரை யே....சசி விடிகுரல்
உரைப்பவெரு விக்கவரியின்

ஏறுபாய் மடுவினெதிர் வாளைபா யக்கமு
கிளம்பாளை நறைபாயவே
எதிர்பாயும் வரிமருப் பார்கவரி முலைபாய
இனிதுநிறை பால் பாயவே

நாறுபாய் பாசிலைச் சுருள்விரிய வரியளிகள்
நறையுண்டு மலர்பாயவே
நகுகமல முகையவிழ நடையோதி மம்பாறு
நரலைநிகர் பொருநை நன்னீர்

ஆறுபாய் புகழ் மணவை யச்சுதனுடன்கடிதின்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்த புய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (6)

(6) கழை - கரும்பு ; கவரியின் ஏறு - எருமைக்கடா ; வாளை - வாளை மீன் ; மறுப்பார் கவரி - எருமை ; நாறு - நாற்று ; அளி வண்டு ; முகை - அரும்பு ; ஓதிமம் - அன்னம் ; நாலை - கடல் ;

280 அரவிந்த மெனவளரு முலைமாத ருயிரென்ன
வருகொழுந ரொடுகலவியால்
மகிழ்களவை செய்து மாற்றுவகை யால்வந்து
வளர்பழ வினைப் பகுதியும்

இரவுந்தன் கைந்நிலவு பாய்மலர் குமுத விதழ்
எழில் மாதர் வதன மொவ்வா
என்னவுல கத்தினில் இசைப்பதுங் கடல் நடுவண்
எற்றுதிரை மொத்துண்பதும்

பொரவுந்து சோதி விழி யழல் முழுகி யடலையாய்
புரமற்றுன் வெண் கவிதையாய்
போந்தனை யெனக்கண் டிசைக்கின்ற கொடுமையும்
போக்கிமிகு புகழ் மேவலாம்

அரவிந்த மலர் மங்கை கொழுநன்மண வைப்புயலோ
டம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்புலீ யாடவாவே. (7)

(7) அரவிந்தம் - தாமரை யரும்பு ; வருகொழுநர் உயிரென்ன முலைமாதரொடு கலவியால் மகிழ களவைச் செய்து. இது சந்திரன் குருபத்தினி தாரையை புணர்ந்தது காண்க. . . . ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. பழவினை - ஊழ்வினை ; "இரவு. . . . இசைப்பதும்" இவன் களங்கமுடையவனுதலால் மாதர் முகத்திற்கு ஒப்பில்லை என்பர் கவிகள். இரவிலே சந்திரன் தன் நிலவால் குமுதத்தை மலர்த்துவது காண்க. குமுதவிதழொத்த அதரமுடைய மாதர் என்க. எற்று - வீசும் ; சந்திரன் எழும்போது கடற்கண் எழுவதுபோலுள்ளது காண்க. பொர உந்து. . . . . . வெண் கவிகையாய் போர் புரிவதற்காக முன்னதாகச் சென்று சிவனது நெற்றிக் கண்ணின் நெருப்பில் மூழ்கி சாம்பலாய் சரீரமற்றவனின் (மன்மதனின்) வெண் கொற்றக்குடையாய். அடலை - சாம்பல் ; புரம் - சரீரம் ;

281 விரைசெறி யிருட்கற்றை வாணளக பந்தியார்
விரைமலர் பொதுள குழல்வாய்
மிளிரு நீ லக்கழங் காடல்போல் வரியளிகள்
வீழ்ந்தெழுங் கஞ்சமிசையே

முரசொலி யெனக்குமிறு கருவிமுகில் துளியரு
முன்றில் மறு கெங்கு நிறைபோல்
மொய்த்தமா டத்தினிரை நெற்றிதோய் பவர்குழலின்
முழுகு பூ மாரி சொரிய

கரசரிகள் சரியும் வகை பந்தாடு போதுகலை
    கான்றமணி மாரி பொழியாக்
கடிமனை யிடந்தோறுந் தோவுடிப் பவளவாய்க்
    கடிகைவெண் தூவி தாங்கு

மரசவன நிறையும்வள மணவை நக ராயனுடன்
    அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
    அம்புலீ யாடவாவே. (8)

(8) அளகம்–கூந்தல் ; பொதுள-நிறைய ; நெற்றி-கட்டடத்தின் மேனிலை முகப்பு ; காசரிகள் கரம்-கை ; கலைகான்றமணி–கலைத்திறன் நிறம்பிய மணிகள் பதித்தமேகலை ; கடிகை-துண்டம், தூவி-இறகு மாதரிடத்தில் வண்டுகள் சுழற்சிக்காய் ஆடுவது போல் விழுந்தெழும், தாமரையிடத்தில் முரச வாத்தியம் போன்றொலிக்கும். தெரு, முன்றில் எங்கணும் சூழ்ந்து மேகம் நீங்காது மொய்த்த மெத்தையின் மேனிலை முகப்பு இருக்கும் மாதர் கூந்தலினின்று பூக்களை மழை போன்று சிந்தும். அவர்கள் கர முதலியன ஓயும் வகையான பந்தாடும் போது கலைத்திறம் நிரம்பிய மேகலையினின்று மணிகளாகிய மழை பொழியும். அங்ஙனமுள்ள வீடுகளிலெல்லாம் வெள்ள சிறகுகளுடைய அன்னங்கள் தங்கும் அத்தகைய வளம் பொருந்திய மணவை நகர் என்க.

282 ஈரநறை யருவியுமிழ் தேம்புனற் கமல மலர்
    ஈன்ற நீள் கூலமூடே
ஏருழுத தொளியிழுது போன்றநற் கழனியிடை
    சந்தமார் சோலை மீதே

வாருலவு புளகமுலை யேந்துபொற் கொடி மகளிர்
    வண்டல்கூர் நிழல்வாயே
வானளவு கமுகுமிட றேந்துமெய்க் குலையின்மிசை
    துங்கநீள் வாழைமாடே

காருலவு வரையை நிக ரோங்கு சொற் குவையினிடை
    திங்களூர் மாடமீதே
காசின்மணி குலவுமதில் சூழ்ந்தசித் திரவுருவின்
    மன்றலார் வீதிநேரே

ஆரவளை தவழ்மணவை சேர்ந்தமைப் புயனுடன்
    அம்புலீ யாடவாவே
ஆதிமறை பரவுதிரு வேங்கடக் கடவுளுடன்
    அம்புலீ யாடவாவே. (9)

(9) கூலம்-மகரந்தக்குவியல். சந்தம்-சந்தனம், காசு இன் மணி - குல பொன்னிஞ்சி, மணிகள் விளங்கு **வண்டல்** விளையாட்டு ; மன்றல் + ஆர்வீதி - கலியாணங்கள் நிறைந்த வீதி.

283 வீழியங் கட்கனியி னிதழ்விமலை இருநிதிய
மிருளாத தருவினுடனே
வெள்ளிவெண் பாற்கடலின் நடுவிவன் மதிக்கவே
மேவிவினை தொகுத்த செவ் (வ) ல்

வாழியன் புற்றுமுன மவனிடம் பயில்கின்ற
வாறறிந் தும் சிறியர் போல்
வரவழைத் தருளவும் வாராத தென்னை நீ
வண்மையிலை வெண்மையுடையாய்

ஊழியங் கற்பனை கடந்தகா லத்துமுனை
ஒருவர்நலி யார்கருணையால்
உபநிடப் பொருளிவ னெனக்கொண்டு வருவதே
உறுபொரு ளுனக்கு மிதுவே

ஆழியங் கைக் கொண்ட புயல்மணவை யாதியுடன்
அம்புலீ யாடவாவே
ஆங்கடல் மிகுந்தபுய வேங்கட முகுந்தனுடன்
அம்புலி யாடவாவே. (10)

(10) " அம்கள் வீழிக்கனி " என்க வீழி-விழுதி. ; மதிக்க-கடைய ; இருநிதி-சங்க நிதி, பதும நிதி ; தரு-கற்பகத்தரு ; பாற்கடல் கடைந்த போது இலக்குமி, சங்க நிதி, பதும நிதி, கற்பகத்தரு முதலியவைகளுடன் சந்திரன் தோன்றியது காண்க, ஊழி-யுகங்கள் முடிவடையும் காலம் ; ஆழி - சக்கரம் ; செம்மல் என இருப்பின் பொருள் இனிதுக் காணப்படும்.

## சிற்றில் பருவம்

284 பூப்பாய் புடவி முழுது முனம்
பூத்துக் கவினும் திருவுந்திப்
பொன்னூர் கமலப் புத்தேளால்
பொலியும் வகை செய் தந்நெறியைக்

காப்பாய் நீயே துடைப்பதுவுங்
கருதில் தமியேங் கைவருந்த
கவினி யிழைத்த வண்டல்மனை
காலால் துடைக்குங் கருணையனே

நாப்பா டியநான் மறைத்தமிழால்
நவின்ற குருகை நாவீறன்
நயனங் களிப்ப வுளங்களிப்ப
நல்குஞ் தொடைச்செந் தமிழ்மாலை

சேப்பார் கமல மிகச் சிவக்கும்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேங்கூர் துளப வேங்கடமால்
சிறியேம் சிற்றில் சிதையேலே. (1)

(1) பூப்பாய்ப் புடவி-அழகுமிக்க பூமி ; உந்தி கமலப் புத்தேள்-நாபித் தாமரையில் தங்கியுள்ள பிரமன் ; துடைப்பது-அழிப்பது ; நாவீறன்-நம்மாழ்வார் ; தேம் கூர்-தேன் மிக்க ;

285 நிறக்குங் குமப்பொற் குடக் கொங்கை
நீல வுண்கண் திருமகளை
நிறத்திற் பரித்த ததுவன்றி
நிலமா மகளென் றறியார் போல்

மறக்குந் தொழிலா லுனதுபதம்
வருந்த மிதித்தால் புலவிமிக்காய்
வருந்தும் வாரஞ் செய்வதுவும்
மனு நூல் வரம்பின் வழக்காமே

பிறக்கும் பிறவி துடைத்தருளும்
பெருமா னிராம னுசம்பிள்ளை
பெற்ற வரத்தா னழகப்பன்
பேணுஞ் சடகோ பனுளத்துறுஞ்

சிறக்கு மிருக்கு மிருக்குமுகில்
சிறியேம் சிற்றில் சிதையேலே
திருமா மணவை வருபெருமான்
சிறியேம் சிற்றில் சிதையேலே. (2)

(2) நீல உண்கண்-மையுண்ட கண்கள் ; நிறத்தில் பரித்தது - மார்பில் தாங்கியது ; " நிறக்குங்கும்................................வழக்காமே " திருமகளை மார்பில் தாங்கினாய். அங்ஙனம் நிலமகளை அன்புடன் காக்க வேண்டும். அதுவன்றி மறந்து உனது பாதமும் வருந்தும்படி அவளை மிதித்தால் அவள் ஊடல் கொண்டு வருந்துவாள். எனவே நீ அன்பு செய்வது மனுநூல்படி வழக்காக உள்ளது. ஈண்டு நிலமீது மணலில் சிற்றில் கட்டி விளையாடிய சிறுமியர் தங்கள் வீட்டைக் கலைப்பது கண்டு " நிலமகளா யிற்றே. உன் மனைவியாயிற்றே " என்றனர், இராமானுசம் பிள்ளை. இரமானுசம் பிள்ளான் பிரபந்தத்திற்கு அரும் பதவுரை எழுதியவராய் இருக்கலாம் போலும். சடகோபர்-நம்மாழ்வார். ஈண்டு அழகப்பன் என்று கூறியவர் யாரென்பது ஆராயத்தக்கது. மாறை அழகிய நம்பி என்பவரோ !

286 தீரா நேயத் துடன்தாயர்
தீட்டுந் திலத நுதல்வேர்வை
சிந்தச் சிந்தா மணிப் பொற்றோள்
திருமா னிலமின் சேர்வுதென

நேரார் பாகம் பொதிய வெல்வாய்
நிறைக்குங் கிரண மெய்யுறைக்க
நிலவந் திசையைப் பிளந்ததென
நெடிய மறுகி னிடை குறுகி

தாரா திரங்கப் பதஞ்சிவக்குந்
தகமோ வென்னச் சதங்கை யெதிர்
தழங்க வொழுங்......மழவர்
தம்மோ டொன்றித் தனிமேவி

ஆரா வமுதே மணவை நகர்
அமலா சிற்றி லழியேலே
அருள்சேர் திருவேங் கடநாதா
அளியேம் சிற்றி லழியேலே. (3)

(3) தாயர்-ஐவகைத் தாயர் ; " திருமான் நில மின் " என்க ; **நேரார்-பகைவர் உறைக்க-சிந்த** ; நிலவம்-நிலவு அம்சாரியை ; மறுகு-தெரு,

287 மத்தால் நெடிய மந்தரத்தால்
வரிசேரொ டரவம் கடைகயிறாய்
மண்டி யெறிதெண் டிரையமுத
மதிக்கத் தெறித்த சுதைத் துளிபோல்

கைத்தா மரையும் நாபிமலர்
கடித்தா மரையும் கருணை வெள்ளக்
கட்டா மரையும் செழுங்கனிவாய்க்
கனித்தா மரையும் முகிறுங்கி

ஒத்தா லென்னத் திருவுருவத்
தொழுகு வேர்முத் தொளிர் நல்லா
ருடன்பின் றொடர வண்டரண்ட
மூடே பொதிந்து மலர்ந்த செம்பொன்

அத்தா மரைத்தா ளோகருந்த
அளியேம் சிற்றி லழியேலே
அருள் கூர் மணவை வேங்கடமால்
அளியேம் சிற்றி லழியேலே. (4)

(4) அரவம்-வாசுகி ; மதிக்க-கடைய ; கட்டாமரை-கட்டாமரையானது ; முகில் + தாங்கி - முகிறுங்கி ; வேர்-வியர்வு ; சுதைத் துளி போல் கைத்தாமரை என்றார் உள்ளங்கை வெண்மையாயிருத்தல் நோக்கி ; நாபி-கொப்பூழ்.

288 கனனி றந்தரு நிசிசரர் கோன்கிளை
யோவா மயத்த கடல்நீர் சூழ்
கடியி லங்கை யீதல முன்வான
பதியா மெயிற்றை யிடமதான

இனனு மிந்துவு முனைமெழு வான் கொடி
நிறுகத்தன் இலிடமிதோ
ஈரணிந் திகழ வடிவினன் வீங்கிய
மார்போ போற்ற முடிதானோ

சினவி வந்தெதிர் கரன்முதலே யந்த
ஆவா றொத்த நிலைவதானோ
சிறிய மிங்கிவை புரிதொழி லோர்ந்திலை
யாதோ மிக்க செயலீதோ

வனச மண்டப மயில்மகிழ் கூர்ந்தருள்
மார்பா சிற்றில் சிதையேலே
மணவை யம்பதி வருதிரு வேங்கட
மாலே சிற்றில் சிதையேலே. (5)

(5) கனல் நிறம் தரு-நெருப்பின் புகையொத்த நிறம் தருகின்ற ; இந்து-சந்திரன் ; ஒவர்-நீங்கா ; கரன் - ஆம்பாட்டின் குறிப்பில் காண்க. சிறியம்-சிறுமையை யுடையோம் ; வனச மண்டபம் மயில் - தாமரை மலர் மண்டபத்திலுள்ள மயில் போன்ற திருமகள்.

289 நெறிந்து கருமை கனிந்து மிக
நெய்த்து நீண்ட கடை குழைந்த
நீலச் சுருளோ தியற்புடைபோய்
நிலவி வள்ளைக் கடிப்பெதிர்ந்து

மறிந்த விழிக்கோ வியரிழைத்த
வண்ட லிடத்தும் பழகியநீ
வளைநீர்ப் புவியில் சராசரத்தை
வகுத்துக் காக்கும் வகைசெய்ய

அறிந்த சிறுவா திருமேனி
அலரும் வனசப் பதஞ்சேப்ப
அரையில் மணிக்கிண் கிணிபோத்தி
அளவிற் களவால் வளவில்வளஞ்

செறிந்த மணவை வருமுகிலே
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேங்கூர் துளப வேங்கடமால்
சிறியேம் சிற்றில் சிதையேலே. (6)

(6) நெறிந்து-சுருண்டு ; நெய்த்து-எண்ணெய்ப்பசுமையுற்று ; ஓதி-கூந்தல் ; வள்ளை-வள்ளைப் பூப் போன்ற காதுகள் ; கோவியர் இடைப் பெண்கள் ; வண்டல் ; விளையாட்டு ; வளை நீர் - சங்குகளையுடைய கடல் ; பொத்தி-நிறைத்து ;

290 எண்ணத் துயர்ந்த பலவண்டம்
யாவும் பெருகும் புனலிடையே
எழும்புற் புதம்போ லுடைந்திடவே
றெய்தி யால விளந்தளிரின்

கண்ணுற் றிருகண் வளர்ந்திமைப்பில்
கண்ணி யெல்லாப் புவித்தோற்றம்
கணத்தில் கருதிக் காட்டியருள்
கருணை படைத்த களைகண்ணே

பண்ணிற் சிறந்த தமிழ் வேதப்
பரவை தோன்றும் தெளியமுதே
பரவு மடியார் பவக்கடலைப்
பருகுங் கிரணப் பனிப்பகையே

தெண்ணித் திலங்கூர் வயல்மணவைச்
செல்வா சிற்றில் சிதையேலே
தேங்கூர் துளப வேங்கடமால்
சிறியேம் சிற்றில் சிதையேலே. (7)

(7) புற்புதம்- நீர்க்குமிழ் ; ஆல இளந்தளிர்-ஆலிலை ; இருகண் வளர்ந்து என்க. இமைப்பில் கண்ணி-கண் இமைக்குட் நேரத்திற்குள் கருதி ; களைகண்-துன்பத்தைப் போக்குபவன் ; பவம்-பிறப்பு ; " தென் நித்திலம் கூர் "—என்க, நிலத்திலம்-முத்து.

291 கலைநாண் மதியின் மறுத்துடைத்த
தென்னக் கவினும் நுதல்திலதம்
கரைந்து வழியச் செங் கனிவாய்க்
கான்ற நகைவெண் ணிலவொழுக

முலைவா யுண்ட பால்வழிந்து
முழுச்செம் மணிப்பொன் னிறம்புரை
முருகார் துளபத் திருப்படலை
முழுகிப் பழகுஞ் சுரும்பார்ப்ப

அலையா ருமுதே தமனியமே
அரசர் மகளிர் கருப்பமுடன்
வரமங் கலநாணுள நாணே
டாவி வாங்க வாங்குகுதை

சிலைநாண் சிலைக்கும் புயப் புயலே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செறிந்த வளங்கூர் திருமணவைச்
செல்வா சிற்றில் சிதையேலே. (8)

(8) மறு-களங்கம்; மறுத்துடைத்த மதியமொத்த திலதம் என்க. கான்ற-உமிழ்ந்த; முருகு-வாசனை; படலை-பச்சிலையோடு மலர் கலந்த மாலை. சுரும்பு-வண்டு; அலை ஆர்பாற் கடலில் பொருந்திய; அலை-சினையாகு பெயர்; மங்கல நாண்-தாலி; உள நாண்-மன வலி; ஆவி-உயிர்;

292 மனநெக் குருகிப் பூண்பழகி
வளரு மொட்டு முலைப்பீரே
மாரு தொழுகி மறுகினிடை
மறுகித் தாயார வரவர்கண்

டினனிற் கதிர்கால் நிறத்தின்மணி
இருகை யளையும் புழுதியினால்
இமையா தாகக் கனித்துவர்வாய்
இழியு மமுதத் தால் விளங்கக்

கனலிற் றுறைமா மகம் வளர்க்கும்
கருணை யிராமா னுசமுனிவன்
களிகூ ரத்தான் சடகோபன்
கருத்தி லுறைந்தே யடியவர்தம்

சென்னக் கடலைச் சுவற்றியநீ
சிறியேஞ் சிற்றில சிதையேலே
தேங்கூர் துளப வேங்கடமால்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (9)

(9) முலைப்பீர்-முலையினின்று தெறிக்கும் பாலின், பீர்; அளையும்-தொட்டு அழுக்காக்கும்; இழியும்-ஒழுகும் வரும்; "கனலில் துறை மாமகம்-" என்க; மகம்-யாகம்; களிகூரத்தான்-களிக்கும் கூரத்தாழ்வார்; கூரம் என்ற ஊரிலே 'இராம சோமயாசி' என்பவருக்குப்

பிறந்தார். உடையவரிடம் பக்தி பூண்டவர். சோழனால் கண்ணிழந்து திருவரங்கத்திலிருந்து பெருமாளைப் பிரார்த்தித்து உடையவர் திருப்பாதத் தீர்த்தம் பெற்று திரு நாட்டுக் கெழுந்தருளி னவர். சடகோபன் - நம்மாழ்வாருக்கு ஒரு பெயர். இராமானுசன்-முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 111-ம் பாட்டின் குறிப்பில் காண்க.

293 அறுபத மூழ்கிய பூந்துண ரேதாள்
கொப்புள மருவாதோ
அமுதுகு மாமதி போன்றரு ளோகலல்
வத்திரம் வெயராமே
மறிவிழி கோசலை யீன்றருள் பாலா
மெய்த்தொடை புலராதோ
மணிநிற மேவெயில் காய்ந்திடு போதே
புக்கெனச் சினவாளோ
உறுதுணை யேயடி யேம்புகழ் வாழ்வே
தற்பர ரெகுராமா
உபநிட தாமறு கேந்திழை யாரோ
டுற்றெதிர் வரலாமே
சிறுபத நோவுற வேந்திழை யார்நேர்
சிற்றிலை யழியேலே
திருமண வாபுரி வேங்கட மாலே
சிற்றிலை யழியேலே. (10)

(10) அறுபதம்............................துணரே-வண்டுகள் மூழ்கிய அழகிய துண ராலான மாலையை உடையவனே. தாள் கொப்புளம் மருவாதோ-(எங்கள் சிற்றிலைக்கலைத்தல் அதிலிருக்கும் கற்களழுத்திக்) காலில் கொப்புளம் ஏற்படாதா. அமுது உகு............ வத்திரம் - அமுதினைச் சிந்தும் சிறந்த சந்திரன் போன்று அருளொலி விடும் முகம்; வத்திரம் - முகம்; வெயில்.....................சினவாளோ-வெயில் காய்கின்ற போது வந்தாய் என்று (மேனி கன்றுவதால்) கோசலை கோபிக்க மாட்டாளா. உபநிடதா; மறுகு ஏந்திழை யாரோடு--என்க. மறுகு-தெரு; ஏந்து இழை-வினைத்தொகை.

## சிறுபறைப் பருவம்

294 இரவியொரு பன்னிருவ ரிருவரென மாகனகத்
திணைவரையி லிறைவதெனவே
ஏந்துதோள் மிசையொளிகள் சாய்ந்துகுழை மணியொளிர
இளநீல மேனிகுழையா
அரையணி மணிக்குரல் முழங்கவெண் ணுயிரத்
தகல்வாய பாம்பணையின்வாய்
அறிதுயி லமர்ந்தசிறு குழவியே விண்ணவர்க்
கமுதீந்து சேந்த கையால்
நிரைநிரைத் தளிமுரல் கருங்கூந்த லாய்மகளிர்
நெய்த்திலகு கைத்தளிரின் நேர்
நின்றுதொட் டேகுரவை புரியுநீ புடவியில்
நெடுங்கடல் உடுத்ததெனவே

திரைபொருது வருபொருநை நதிகுலவு மணவை முகில்
சிறுபறை முழக்கியருளே
திறலோங்கு விற்குழக திருவேங் கடக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே (1)

(1) இரவி . . . . ஒளிர—ஒப்பற்ற பன்னிரண்டு சூரியர்கள் இரண்டு சூரியர்களாய் சிறந்த இரண்டு மேருமலைகளின் மீது கலந்து தோன்றுதல் போன்று தாங்கிய தோளின் மீது ஒளி பொருந்திய குழையொன்றும் மணிக் குண்டல மொன்றும் பிரகாசிக்க ; இல் பொருளுவமையணி; குழையா—செய்யா வென்ற வாய்பாட்டு வினையெச்சம் செய்து எனத் திரிந்து நின்றது. அரை அணி—இடுப்பில் கட்டிய ஆபரணம் ; பாம்பணை—ஆதிசேடனாகிய படுக்கை; நிரை நிரைத்து அளி முரல்—வரிசை வரிசையாக நின்று வண்டுகள் சப்திக்கின்றன ; ஆய் மகளிர்—இடைப் பெண்கள் ; குரவை : பாட்டின் குறிப்பில் காண்க ; புடவி—பூமி.

295 குவளைவிழி யெதிர் பொருது குழைமுடுகு குழல்மழலை
குளிரமொழி தருணமடவார்
கொடியிடைகள் துவளநட முறைபுரிய முழவு சதி
குமிறுநெடு மறுகினிடையே
தவழுமதி நிலவனைய சுதைமெழுகு வரையநிகர்
தகுமாட மேணிலைமினார்
தனதனன வெனமகர விசையாழ் முழக்குமொலி
தார்ப்புரவி யார்ப்பினொலியும்
கவளயிபம் வெடிபட யிடிக்குரல் முழக்கமுங்
கழனியுழு வோர்துழனியும்
ககுபத்தர் செவிடுபட வேகடல் முழக்கென
கடிமண முழக்கமுடனே
திவளும்வளை பலபல முழக்குமண வைக்குழக
சிறுபறை முழக்கியருளே
திறலோங்கு விற்குழக திருவேங் கடக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே (2)

(2) குவளை விழி . . . . மறுகினிடை—காதுகளெதிர் சென்று போர் செய்து ஓட்டும் குவளை மலர் போன்ற கண்களும், புள்ளாங்குழலிசை போன்று மழலை மொழி கூறி மகிழச் செய்யும் மொழியையுடைய இளம் பெண்கள் தங்களது கொடிபோன்ற இடுப்புகள் துவளுமாறு நடனம் முறையே செய்ய மத்தளம் ஒலிக்கும் நீண்ட தெருவினிடையில் ; சுதை—சுண்ணாம்பு; இடிக்குரல்—இடி சப்தம் போன்ற குரல் ; துழனி—சப்தம்; ககுபத்தர்—திசையிலுள்ளார் ; ககுபம்—திசை ; வளை—சங்கு.

296 அந்தர முதித்தமுத மருவிசாய்த் தெழுமதி
யன்னலார் வதிமேனிலத்
தருகுசா ளரநுழைந் தாடியென மெய்யெழிலை
யவர்நோக்க மருவிமருவும்
நந்தன வனத்துநிறை சண்பகத் தாதாடி
நடையசைத் தென்றிளங்கால்
நாகுவரி வண்டோடும் போந்துமறு கெங்குமே
நறைதெளித் தூரமலையப்

பைந்தமிழ் மணக்குமண வைப்பதி விளங்கிய
பரந்தாம தாமவகுளப்
பாவலர்கள் தம்பிரா னெம்பிரான் திருமொழிப்
பண்ணமுத முண்டசிறுவ

சிந்துர நுதற்கமலை விமலைபுண ரமலனே
சிறுபறை முழக்கியருளே
திறலோங்கு விற்குழக திருவேங் கடக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே (3)

(3) சாளரம்—சன்னல்; ஆடி—கண்ணுடி; நாகு—இளமை; வகுளத்தாமம்—மகிழம்பூ மாலை; தென்றிளங்கால்—தென்றற்காற்று; நறை—தேன்; சிந்துரம்—பொட்டு.

297 கோவாத வாரநறை கொட்டுமிரு கோட்டிளம்
கொங்கைவரை தாங்கி யொசியும்
கொடிநுண் மருங்கிலிள நகையசோ தைக்குவிழி
குளிரவிளை யாடுகளிறே

நாவீறர் கூறுதமிழ் நறைபாய வோங்கிவளர்
நாண்மலர்க் கற்பதருவே
நகைவளைகள் தவழ் மாறை வள்ளலழ கியநம்பி
நாடோறும் பரவுநிதியே

மூவாது வளர்திரு மறைக் கொழுந் தேஞான
முத்தனே முத்தமெதிர்பாய்
முந்நீரி லூடுபிற வாததெள் ளமுதமே
முத்தரணி யும்பாலவே

தேவாதி தேவதிரு மணவைநகர் மேவுமுகில்
சிறுபறை முழக்கியருளே
திருவேந்து புயவிந்த திருவேங் கடமுகுந்த
சிறுபறை முழக்கி யருளே (4)

(4) கோவாத. . . . கொங்கை வரை—கோக்கப்படாத முத்துக்கள் உடையதும் வாசனை வீசுவதும் ஆன இரு யானைத் தந்தங்களைப் போன்ற முலைகளாகிய மலைகள்; உவமையுருவகம்; நாவீறர்—நம்மாழ்வார்; தமிழ் நறை—தமிழ்த் தேன்; மாறை வள்ளல்—மாறை நாட்டிலுள்ள; மூவாது—அழியாது; முந்நீர்—கடல்; முத்தரணி உம்பால—மூன்று உலகங்களும் உம்மிடம் உள்ளன.

298 முக்கணு னுலகமுத லண்டகோ டிகள்பலவும்
முறைநீக்கி மறையோதுவோர்
முன்னர்தன் நாமமே யோதவே தானருளு
முத்திமே தக்கசிறுவன்

மிக்கநா தக்குடிலை மொழியுமவ னைச்சினவி
மெய்ப்பொருள் தெரித்தியென்று
வினவு நிரு தக்கனகன் முன்மதலை வெடிபட
வெடிக்குர லெழுப்பி யெதிரே

புக்கனுன் நகமுகிரி ல்ளையும்நர வரியுருவு
பொலியுமுடல் பூத்தவல்லி
பொன்னிறத் தாதுகமழ் கமலநிகர் கையினுல்
போற்றடிய ருளமுருகவே

தெக்கணு பூமியில் விளங்கும்வேங் கடவிமல
சிறுபறை முழக்கியருளே
சிலைதாங்கு புயவிந்த திருவேங் கடமுகுந்த
சிறுபறை முழக்கியருளே (5)

(5) முக்கணுன் உலகம்—சிவலோகம்; முறை நீக்கி—நெறி முறை தவறச் செய்து; 'மறையோதுவோர் தன் நாமம் முன்னர் ஓத முத்தி தான் அருளும்' என்க. மேதக்க சிறுவன்—மேன்மை படத்தக்க பிரகலாதன்; நாதக்குடிலை—நாத தத்துவமாகிய பிரணவம் (ஓம் நமோ நாராயய); நிருதக்கனகன்—அசுரனுகிய இரணியன்; மதலை—தூண்; புக்கு + அனுன் + நகம்—சென்று அந்த இரணியனின் மலை போலொத்த உடலை; அனுன்—அன்னுன் என்பதன் தொகுத்தல். நகம்—மலை; ஈண்டு உவமவாகுபெயர். உகிர்—கைந்நகம்; நரஅரி—நரசிங்கம் 'போன்று அடியார் உளம்' என்க. தெக்கணு பூமி—தட்சிணபூமி.

299 தருவொரு மகள்முன் முனமீந் தருள்வர
தரைமயில் மணத்தபுயனே
தடவரை குடையென நிரைவாய்ந் திடவரு
பா......ழை தடுத்தபுயலே

கருமணி யுருவின் வலைதாங் கியகர
கமலமலர் மயத்தகடலே
கடமுறை நவநித மனையுண் பொதுவர்தம்
மனைதொரு மெடுத்தகள்வா

வரிசிலை மகளுரு வுறவேய்ந் துயர்சிலை
மிதிலையி லிறுத்தசிறுவா
வளைகடல் நடுவரண் மதில்மூன் றிடிபட
ஒருகணை தொடுத்த சதுரா

திருமணி நிறைநின்ற முறைபூந் துளவின
சிறுபறை முழக்கியருளே
செழுமணவை யில்வரு திருவேங் கடமுகில்
சிறுபறை முழக்கியருளே (6)

(6) தரு—கற்பகத்தரு; ஒருமகள்—சத்தியபாமை; தரைமயில்—பூமிதேவி; தடவரை—கோவர்த்தன மலை; நிரை—பசுக்கூட்டங்கள்; வளை—சக்கரம்; நவநிதம் அனை—ஒரு பொருட் பன் மொழி; பொதுவர்—இடையர். வரிசிலை—அகலிகையாகிய கல்; உயர்சிலை—உயர்ந்த சிவதனுசு; இறுத்த—ஒடித்த; வளைகடல் . . . . மூன்று—திரிபுரம். இதனை யெரிக்கச் சிவனுக்குத் திருமால் கணையானுர்.

300 பொற்பரா கந்திகழ்வ தென்வுததி பூத்துவளர்
பொம்மல்முலை யம்மெலோதிப்
பூவையர் பயில்தரு வள்ளையிசை நாடொறும்
பூவைகள் படித்து வளரும்

கற்பகா டவிநிறை முருக்கல ராக்கொழுகு
கவிழ்தலைத் துண்டவளைவாய்
காரனக் கிள்ளைகட் கேயுரைக் குந்தொறுங்
கரியகுயில் கூவாதுவாய்

நிற்பரா கப்பொறிய வரியளிகள் மிஞிறொடும்
நிரைகொண்டு சுருதிசெய்ய
நெடியகாற் பிறகிட்ட பீலிமயி லாலவே
நெடுமாட கூடநெற்றிச்

சிற்பரா கந்திகழும் மணவைநக ரதியே
சிறுபறை முழக்கியருளே
சிலைதாங்கு புயவிந்த திருவேங் கடமுகுந்த
சிறுபறை முழக்கியருளே (7)

(7) பராகம்—தூள் ; உததி—கடல் ; பொம்மல்—பருமை ; வள்ளையிசை—உலக்கைப் பாட்டு ; பூவை—மைனு ; கற்பக அடவி—கற்பகக்காடு ; நிற்ப ராக வரிப்பொறிய அளிகள் என்க. ராகம்—' ரீ ' என்ற ராகத்தையுடைய ; மிஞிறு—வண்டிலொரு சாதி ; நெற்றி மேனிலை முகப்பு; சிற்பம்—சிற்பக்கலை; ராகம்—நிறம்—சிற்பத்தில் அலங்கரித்த நிறம் என்க. பெண்களின் உலக்கைப் பாட்டை மைனுக்கள் படித்து வளரும் கற்பக மரங்கள் நிறைந்த முருக்கம் பூவிதழ். அரக்கு போன்று சிவந்த துண்டமாகிய வளைந்த வாயையுடைய கிளிகட்குச் சொல்லும் போது மேகத்தையொத்த கரிய குயில்கள் வாய் கூவாது அடைத்து நிற்ப, இராக மிசைக்கும் வரிக ளோடுகூடிய வண்டுகள் மிஞிறோடு வரிசையாகக் கொண்டு கீதமிசைக்கக் காற்றும் பின்னிடும்படி பறக்கின்ற தோகைகளையுடைய மயில்கள் ஆரவாரிக்க மாட கூடங்களில் சிற்ப வேலைப்பாடுகள் திகழும் மணவைநகர் என்க.

301 காவதங் கமழளக அயிராணி முதலான
கன்னியரும் நாமகளிரும்
கற்பினிற் கவைபடா தென்றுளம் குளிரழ
கையேந்து கோலதிரித்தே

நாவகங் கொள்ளாத வாசிசொலி முனிவரர்
நடிப்பமறை யாதியெவையும்
நாமறை . . . . யிலாது வாழ்த்துயர்ந்த
. . . . . மெக்கருமமுந்

யாமவல கின்மேனக . . . சுரர்
சினையற்ற கொற்றமேகூ
. . . காற்றவை துதிக்கவடை யார்தங்கள் பவனீனவோ
மாயா மௌனமவே . . . வே

தேவதும் புருநார தன்பரவு மணவைமுகில்
சிறுபறை முழக்கியருளே
சிலைதாங்கு புயவிந்த திருவேங் கடமுகுந்த
சிறுபறை முழக்கியருளே. (8)

(8) காவதம் கமழ்—காதம் (10 மைல்) வரை வாசனை வீசும் ; நாமகள்—சரசுவதி ; தும்புரு நாரதர்—யாழ்வாசிப்பதில் வல்லவர் ; இப்பாட்டு, பெரும்பாலும் சிதைந்துள்ளது.

302 கஞ்சன்விடு சகடுருளை நின்றவிரு மருதுபொரு
சதுரமுதிர் வெற்றிமக
வங்கநீழ லிடைவரு கபந்தகண் ணிணமயில
அசுரர்கிளை யட்டவிறலா

நஞ்சுநதி குமிழியெழு வெங்கணர வினில்நடன
சதிகொடு விதித்தநம்ப
அடியவர் சனனநன் பந்தமற மிகுதியை
உதவுகரு ணைப்புணரியே

மஞ்சகடு தொடுகுடுமி யிஞ்சிதிகழ் தருமிததிலை
முனிவரொடு புக்குறுபவா
மண்டியெறி திரைபொருத சிந்துநடு வழிபுகுத
கோடணை யிட்டவிமலா

செஞ்சரண கிரணவெயில் தங்குமணி மருமனே
சிறுபறை முழக்கியருளே
தெறிக்கின்ற வளைகுலவு குணபழன மணவைமுகில்
சிறுபறை முழக்கியருளே. (9)

(9) கஞ்சன்—கம்சன்; சகடு—சகடாசுரன்; மருது—நள, கூபரன், மணிக்கிரீவன் என்ற இருவர். கவந்த கணம் நிணம் அயில—பேய்க்கூட்டங்கள் தசையைத்தின்ன; நஞ்சு நதி குமிழி யெழு அரவு—விஷமாகிய நதியினின்று குமிழியெழுவதைப் போன்று விஷம் சொரியும் காளிங்கன்; பந்தம்—கட்டு; மஞ்சு அகடு தொடு—மேகத்தின் நடுவிடத்தைத் தொடும் ; குடுமி இஞ்சி—உச்சியை யுடைய மதில் ; மண்டி எறி . . . . விமலா—நெருங்கித் திரை வீசுகின்ற கடலின் நடுவில் செல்ல மலைகளை அணையாக இட்ட குற்றமற்றவனே. சிந்து—கடல் ; கோடு—மலைச்சிகரம் ; ஈண்டு மலையைச் சுட்டியது. இது இராமாவதாரத்திலாகும்.

## சிறுதேர்ப் பருவம்

303 வாரென . . . . . . . சலைக்கெட
. . . பயத்தே
ருலவுகா னுறுவனென விஞ்சொல் வ . . .
. . . . . . . புறுத்திக் கூறியே

பாரொ . . . . . .
. . . , . . சென்றுமீள்
பரதனுறு கனல்முழுகு முன்னம்வந்து தாய்மனம்
படுகவலை யஞ்சுகோ . . .

நீரத் . . . . . . . . .
. . . . . . . . . . . திரையிரு
நிதிக்குவை சொரிந்தே யிலகுவீதிகடிது
நெட்டது தேரோட் ரொன்றில்

காரீதேர் பத்தும் வென்றான் சிறுவ
சிறுதே ருருட்டியருளே
. . . . . . . . . . . வேங்கட விமல
சிறுதே ருருட்டியருளே. (1)

(1) பரதன்—இராமன் தம்பி ; கான்—காடு ; கார் தேர் பத்தும் வென்றான் சிறுவ—கரிய தேர்கள் பத்தையும் வைத்துக்கொண்டு வென்ற தசரதன் மைந்தனே ; முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 199-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

(முற்றுப்பெறவில்லை.)

# இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ்

## சிறப்புப்பாயிரம்.

*இந்நூலாசிரியர் மருகாரசிய சைவப்புராணிகர் சிதம்பரம் வடிவேல் பிள்ளையவர்கள் இயற்றியது.*

304 அன்பின்மய மானவரு ளுருவாகி யன்பர்மனத்
துவகை யாக்கும்
அரியதிரு வருட்பாவி னருமையெவ ருரைப்பரின்ப
மளித்து ஞான

இன்பதனால் நிறைந்தவருட் பிரகாச வள்ளலெனும்
இராம லிங்கம்
எங்கள்குரு தேசிகன்தன் கீர்த்தியெலாம் அடியார்கள்
ஏத்திப் போற்ற

மன்புகழும் செந்தமிழா மொருபிள்ளைத் தமிழதனுள்
மாண்பு வாய்த்த
வண்மைபெறு மலங்கார கற்பனைக ளாதிநயம்
மலிந்து மேவ

மின்பொலியுஞ் சடைமவுலிச் சரிதமது யாவருக்கும்
விளங்கக் கூறும்
வியனகர்பொன் னேரியுறு சுந்தரநற் புலவன்தான்
விளம்பி னானால். (1)

(1) தேசிகன்—குரு ; சடை மவுலிச் சரிதம்—சிவனுடைய சரிதங்கள்.

**இந்நூலாசிரிய குமாரர் பொ. பரமசிவம் பிள்ளையவர்கள் இயற்றியது.**

305 அருள்மயமாஞ் சமயகுர வர்கள்நால்வர் அருளுருவாய்
அவனி தோன்றி
அரும்பாவுக் கரசான விராமலிங்க அரிய வள்ளல்
அன்பாற் சொன்ன

தெருள்வளர்நல் திருவருட்பா வெனுமாறு முறைகளினால்
தெளிந்த ஞானச்
சிவபத்தி காருண்யம் வளர்த்தவருட் பிரகாசச்
செல்வன் மீதே

மருவுபல சொல்நயமும் பொருள்நயமும் தொடைநயமும்
மருவ யாரும்
மகிழ் பிள்ளைத் தமிழெனுமோ பிரபந்த நவரசமும்
மலியச் சொன்னான்
அருமறையா கமப்பொருளாம் புராணகதை யன்பர்களுக்
கன்பால் கூறும்
அண்ணல்சுந் தரக்கோமான் அவனடிகளென் சிரசிற் (2)
கணிக ளாமால்.

**சென்னைக் கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலைத் தமிழ்ப் புலவராயிருந்த சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியாரவர்கள் இயற்றியது.**

306 சீர்வளரும் தென்வடலூர்ச் சிவஞானத்
தெள்ளமுதந் தெவிட்ட வுண்ட
பேர்வளரு மிராமலிங்கப் பிள்ளைமே
லப்பெயர்கொள் தமிழைச் சொன்னான்
தேர்வளரும் பலகலையின் தேர்ச்சியினால்
சிவபுரா ணங்க ளோர்ந்தே
ஏர்வளரு முபநியடந் தஞ்செய்யும்
சுந்தரனு மியல்வல் லோனே. (3)

(3) ஏர்—அழகு ; தேர்—ஆராய்ந்து.

**அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றியது.**

307 கலியுகத்தின் வயத்தினையும் காலன்தன் தரத்தினையும்
காலகீ ழாக்கிக்
கருணைவளர் சிவானந்தக் கடற்பெருக்கித்
திருவருளின் காட்சி நோக்கி
மலியுமரம் மண்மலையா தியுமுருக்கி யன்புமயும்
வாய்ந்த பாக்கள்
மகிழ்ந்தளித்த நம்ராம லிங்கமுனி வரனாரும்
வள்ளல் மீது
சொலியுவந்தான் செந்தமிழி லுளநயங்க ளவ்வளவுந்
துலங்கித் தோன்றத்
துதிகவிஞர் சிரமேற்கும் புகழ்பிள்ளைத் தமிழெனுநூல்
முனிசூ தன்போல்
பொலியுஞ்சொல் புராணிகப்பேர் கொண்டுசைவப் பிரசங்கம்
புகல வல்ல
பொன்னேரிக் கருணீகர் மரபின்வரு சுந்தரநல்
புலவன் தானே. (4)

(4) காலன்—யமன் ; வரன்— சூதன்—சூதமகாமுனிவர்.

### விநாயகர் துதி.

308 கார்கொண்ட மேனிக் கரும்பனைக் கைக்களிறு
கண்டுரித் ததுபரித்த
கனசகள வுருவாகும் முக்கட் கரும்பினைக்
கண்பொத்தி விளையாடல்செய்

வார்கொண்ட முலையம்மை காமாட்சி யாள்தண்
வளைத்தழும் பொடுமுலைக்கண்
வளமுறப் பெற்றருட் டிருமேனி யங்ஙனே
வாடிக் குழைந்திடப்பெற்

றேர்கொண்ட வருளுருக கொண்டோங்கு சிவபிரான்
எந்தையரு ளும்பலுருவாம்
இன்பவறு பவவருட் பிரசன்ன மாம்ப்ரணவ
ஈசனைப் போற்றிநிற்பாம்

தேர்கொண்ட நடராசர் கோபுர வடிப்பார்வை
தெரியுமே வடபாலெனத்
தேர்ந்தோது திருவருட் பிரகாச வள்ளல்
திருத்தமி ழெடுத்தோதவே. (1)

(1) கண் பொத்தி விளையாடல் செய்தது :—அபிதானசிந் தாமணி 349-ஆம் பக்கத்தில் 5-வது செயல் காண்க. வார் கொண்ட . . . . . . சிவபிரான் :—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 459 ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. 'பெற்ற+எர் கொண்ட' என்க. அகரம் தொகுத்தல். உம்பல்—யானை ; பிரணவ ஈசன் ; முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 69-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

## காப்புப் பருவம்.

### திருமால்.

309 சீர்வளர் பராபரை யதில்பரந் தோன்றுமதில்
சிவமதில் சத்தியதிலே
செம்மையுறு நாதமதில் விந்துவதி லுயர்சதா
சிவமதில் மகேசுரத்தில்

பேர்வளர வந்துறு முருத்திர னதிற்பெரிய
பெருமைவளர் சித்தில் சிறிதும்
பீடுறத் தோன்றியது வதுவாதல் முத்திநிலை
பேசுமொரு சித்தாந்தமே

நேர்நிலை யெனுங்கரிய மால்பதம் கருதியே
நேர்பணிந் திடுதல் செய்வாம்
நித்தியவ ருட்பிரகா சத்தலைமை யெங்குமே
நீண்டொளி விரித்தோங்குநல்

தார்வளர் சடாமுடிப் பெருமா னுருக்கொளுஞ்
சாமிகுரு சாமி வடலூர்
தண்ணருளிராமலிங் கப்பிள்ளை தன்னையே
தயவுடன் காத்திடுகவே. (1)

(1) சீர் வளர் . . . . . சித்தாந்தம் :—இதனைச் சித்தாந்தப் புலவர்களிடத்துக் கேட்டுத் தெளிக.

மால்—திருமால் ; சடா முடிப் பெருமான்—சிவன்.

**பரசிவம்.**

310 நந்துமைம் பூதபௌ திகமெலா மோங்கவே
நாடுமைந் தொழிலியற்றும்
நாயக மெனுந்தேவ ரைரதி காரவினை
நாடிப் பரிந்தொடுக்கும்

விந்துசிவ தத்துவம் பரத்தினி லொடுக்குதலை
வேண்டுபர சிவ மங்கனே
விரிபொரு ளனைத்தும ருளுருவாய் விளக்குமவ்
விமலனடி போற்றி நிற்பாம்

பந்தமுறு மாறத்து வாமுத லடக்கிவளர்
பரதத்து வாதீதமேல்
பரவுரு சிவானந்த வெள்ளந் ததும்பிமேல்
பாய்ந்தொழுகு மங்கனமுறூஉம்

சிந்தையி லுறுஞ்சீவ செகபரமவ் வருளுருச்
செம்பொருள தாகவமருந்
திண்மைவட லூரருட் பிரகாச வள்ளலெம்
சேயைப் புரக்கவென்றே. (2)

(2) ஐந்தொழில்—சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அநுக்கிரகம்.

ஆறத்துவா—மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்வா, கலாத்துவா என ஆறு.

**சிற்சக்தி.**

311 திருவருட் பிரகாச ஞானவனல் தன்னிலே
தெளிவிலஞ் ஞானமுழுதும்
தேய்ந்துறச் சுட்டுவெறு வெளியாகு சிவத்திலே
சேர்க்கு மருளுருவாகியே

உருவளர்ந் தோங்குசிவ சீவமது தானாகி
ஓங்குமெய்ஞ் ஞானமகலா
துயர்ஞான வமுதத்தை யுண்டருளி யென்னுமே
ஓங்கியருள் சத்ய ஞானம்

மருவுமுயர் சீவன்முந் நரையே வளர்த்தோங்கி
வாழுமொரு சிற்சத்தியை
மறவா திருந்துதொழு தேத்துவா மென்னருமை
மாணிக்க மாத்துயர்ந்து

வருமருளி ராமலிங் கப்பெயர்கொள் மெய்ஞ்ஞான
வள்ளல்வட லூரிருந்து
வாழுமுயர் மெய்ஞ்ஞான வாழ்வையருள் மெய்ஞ்ஞான
மைந்தனைக் காக்கவென்றே. (3)

(3) சுட்டு—பொசுக்கி.

## முருகவேள்.

312 செவ்வே ளெனுந் தொடர்முன் மொழியொரு பொருட்குணஞ்
சேரவதி னிறுதிமொழியே
செம்மைநல முறுநற் குணிப் பொருளதாக மருள்
சேர்ந்துலவு மதனல னெனும்

அவ்விய மிலாப் பொருள் பண்புடைமை பெறவளரும்
அப்பன்முத்து விதானனத்
தாநந்த முறுமுமதோ முகநடுப் பிரணவ
அதீதனடி போற்றி நிற்பாம்

செவ்விய மறைப்பொருள் சொல்பொருள தாகிவளர்
சிவஞான சித்தர்கணமே
செயசெய வெனப் போற்றி நாளும் பரிந்துவாழ்
செல்வச் செருக்குடையரைத்

திவ்வியவுற வாக்கியே செகமெலாம் பரவுமவர்
தீவினையகற்றி வடலூர்
தெளிவுடை யிராமலிங் கப்பிள்ளை தன்னையே
தேடிப் புரக்கவென்றே. (4)

(4) முத்துவிதானனம்—முத்துப் பந்தல். முத்துப் பந்தல் பெற்றவர் திருஞான சம்பந்தர். இவர் முருகனின் அவதாரமென்பர். அதோமுகமே பிரணவ மென்பர். அதோமுகம்—கீழ் நோக்கிய முகம். பிரணவம்—முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 309 ஆம் பாட்டில் காண்க. அதீதன்—எல்லாவற்றையுங் கடந்தவன்.

## சித்தி விநாயகர்.

313 எள்ளா வடலூ ரிருந்துமருள்
அள்ளாத வருட்பிர காசனையே
தள்ளாது புரந்தருள் சித்திதரும்
பொள்ளாப் பொருணயக போதகனே. (5)

(5) மருள் அள்ளாத-மயக்கமடையாத. பொள்ளா—உளியால் பொள்ளாத.

## நீறு.

314 மாதங்க மகலாத மாதேவன் நெற்றி விழி
மாப்பெரு வனல் கொளுத்த
மன்னிவளர் புவனங்கள் நீறு யரன்திரு
மணித்திரு வுடற்பூத்துநன்

மாதங்க மொத்துயர்ந் தோங்கு முயர் மெய்ஞ்ஞான
மன்னுமத் வைதநீறுய்
மாசுடைய வாணவ விருட்பிழம் பறவே
வளர்க்குமொரு மாபூதியாய்

மாதங்கு றக்கொண்ட மாலுறுச் சடகோபன்
மாண்புறு முரைப்பனுவலில்
மாதங்க மாநீறு செவ்வே யிடக்காணின்
மாலடிய ரென்றேடு மென்

மாதங்க மென்றேது மாத்துல்ய நீறுதனை
மாண்புடன் போற்றி நிற்பாம்
மன்னும்வட லூரருட் பிரகாச வள்ளலென்
மைந்தனைக் காக்கவென்றே. (6)

(6) மாது அங்கம் அகலாத மாதேவன் என்க. மாது—உமாதேவி; நன் மா தங்கம் ஒத்து—நன்கு சிறந்து தங்கம் போன்று; ஆணவ இருள்—ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்றில் ஒன்று. மாதங்கு . . . . . என்—"எறிய பித்தனோடு எல்லாவுலகும் கண்ணன் படைப் பென்னும், நீறு செவ்வேயிடக்காணன் நெடுமாலடியா ரென்றோடும், நாறு துழாய் மலர்க் காணில் நாரணன் கண்ணி ஈதென்னும். . . . ." என்ற நம்மாழ்வார் வாக்கை நோக்குக. இதில் நீறு என்பதனைத் திருமண் எனப் பொருள் கொள்வர் வைணவர்.

## உருத்திராட்சம்.

315 அணிகொளர ணமரர்கள் செயுந்தவங் கண்டுருகும்
ஆனந்த நீர்க்கண்மணியாம்
அரிய சைவத்தாழ் வடக்கல னன்கறு பந்தம்
ஆணவிரு வினையறுக்கும்

மணியெனது மலவிருளறு க்குமுயர் பூதிதனை
மாறு தணிந்துயர்ந்த
மாதங்க மேனியரன் மேனி கொளும் மாமணி
மறைப் பொருள் தனக்கு மெட்டாத்

திணிகொண்ட மாமணி திகைப்பறுத் தருள் செய்மணி
தெய்வந் தனைப்போற்றுவாம்
தெளிவுடைய திருவருட் பாமுறை திரட்டியே
திண்ணிய வருட்கவியது

பணிவுடைய மெய்விளக் கேவிளக் கென்பதது
பார்க்கில் தண்ணீர் விளக்காய்ப்
பரங்காக வேற்கு மருளா ட்சிபெற் றிமதனைப்
பாடுமக னைக்காக்கவே. (7)

(7) தாழ் வடக்கலன்—உருத்திராக்கமாலே ; இரு வினை யென்றுர் நல் வினையும் பிறத்தற் கேது வாகலின் ; மாது அங்கம் மேனி என்க. "மெய் விளக்கே விளக்கென்பது" "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு." என்ற திருக் குறளை யோர்க. மெய் விளக்கே. . . . ஏற்கும் :—இராமலிங்க சுவாமிகள் கருங்குழிக்கு வந்து தமதினைய சோதரர் பரசுராம பிள்ளைக்கு நீர்க்கடனையாற்றிய அந்நாளில் தண்ணீரால் விளக்கெரித்துக் காட்டினர். பின் சென்னையிலுள்ள நண்பருட் சிலர் தாமிருக்குமிடம் வரும்படி வேண்ட, "மெய் விளக்கே விளக்கல்லால் வேறு விளக்கில்லை யென்றுர் மேலோர்" என் னும் பாடலை வரைந்து விடுத்து அகமுக வழியே தாம் பெற்ற அருள் நிலையுடைமையை வெளிப்படுத்தினர். தண்ணீர் விளக்கெரித்த தன்மை போல் மாந்தர் கடமுண்ணிர் சிவம் விளக்க வோங்குவிக்கும்—கண்மணியாம் நங்களுளிராம லிங்க னல்ல வருட் பாமுறையைத் துங்க முற மாணு தொழு . என்ற மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனம் சிதம்பர சுவாமிகள் வாக்கினைக் காண்க.

**பஞ்சாக்கரம்.**

316 திருவெழுத் தைந்திலுயிர் த்ரோதைமா சருள்சிவம்
தேர்ந்த வுயிர் மனமலமொரீஇ
திவ்ய வகரத்தருளி லுற்றதுசிவ் விறையினில்
சேர்ந்துறச் சிவ்வொன்றிலே

மருவுமுப் பொருள்சச்சி தானந்தமு றுசூக்ம
மந்திரந் தனையேற்றதும்
மன்னுருச் சிறுதிருகண் ணிருபுறஞ் சாய்வுறீஇ
வாடாத வாட்டமுறு மோர்

குருமேனி செம்மைகொண் டிருசெவி பரந்துகால்
கோப்புண்ட பாதரட்சை
கூடுதல கன்றுநன் குறுவளா கச்சித்தி
குறுகிகற் பூரதீபம்

பெருசிவ வெளிக்கேற்றிப் பேரின்பக் கூத்தாடிப்
பிரியா திருந்தவு ருவாம்
பேசரிய திருவருட் பிரகாச வள்ளலைப்
பெருமையொடு காக்க வென்றே. (8)

(8) திருவெழுத் . . . . . . . மருவும் :—சிவபெருமான் திருநாமமாகியநமச்சிவாய என்ற ஐந்தட்சரங்களில் நகாரத்தில் திரோத சத்தியம் மகாரத்தில் மலமும் சிகாரத்தில் சிவமும் வகாரத்தில் அருளும் யகாரத்திலான் மாவும் நிற்கும். முப் பொருள் :—இவ் வைந்தும் பதி, பசு, பாச மூன்றிலடங்கும். வளாகச்சித்தி—சித்தி விளாகம் என்ற திருமாளிகை. இது கருங்குழிக் கருகிலுள்ள மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரிலுள்ளது.

**சமயகுரவர்.**

317 ஆறுமுக மேசாந்த முகமெனும் தெய்வமாம்
அருள்ஞான சம்பந்தநல்
அருள்மொழி மறக்கொணு நாவினுக் கரசு மரன்
அரியவருள் பெற்றேங்கியே

தேறுமரு ளாலால சுந்தரன் மாணிக்க
தேசிக னருட் பதங்கள்
தினமுமற வாதிருந் தேத்திக் கனிந்துருகித்
தேடிப் பணிந்து நிற்பாம்

பேறுதரு வேதாந்த சித்தாந்த மாகிப்
பெரும் பொருட் பீடகலுருப்
பேசாத மோனவெளி ஞானவெளி தன்னையே
பேசா திருந்து பேசும்

வீறுபெறு சன்மார்க்க மேயரிய நன்மார்க்க
மென்றே விளம்பு மரிய
வீட்டுநெறி காட்டுறு மிராமலிங்கப்பிள்ளை
வித்தகனைக் காக்கவென்றே. (9)

(9) மறக் கொணு—ஈறு கெட்ட எதிரமறைப் பெயரெச்சம்; பீடு—பெருமை.

**சந்தான குரவர்.**

318 கயிலைமலை தன்னி லுயர் நந்திமுதல் நால்வரைக்
காண்பதங் ஙனமரியநல்
கருணைமொழி மெய்கண்ட தேவர்முதல் நால்வரைக்
காண்பதிங் ஙனமே யெனப்

பயிலுரைசெய் சந்தான குரவர்தம் பாதமலர்
பண்பொடு பரிந்தேத்துவாம்
பண்பகலு ளுதவருள் மோனவெளி தன்னில்
பரந்தொளி பரப்புகிரண

வெயிலொளியி னைச்சொர்ன்ன பொக்கிச மெனுஞ்சபை
விளங்கும் வட லூரடுத்த
மேல்சித்தி யாம்வளர கத்தமரு மாமணியை
வேதாந்த முதலாறுமே

துயிலறுத் திடுமரிய பீடமென வதன்மேல்
துணிந்துறு மிராமலிங்க
துரியவெளி யனுபவச் சோதியுரு வாங்குழவி
தூயனைக் காக்கவென்றே. (10)

(10) மெய் கண்ட தேவர் முதல் நால்வர்—மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்பவர். துரியவெளி—யோகியர் தன் மயமாய் நிற்கும் உயர் நிலை.

## செங்கீரைப் பருவம்.

319 வாஞேங்கு மருள் மணம் மணக்குமலர் வளர்ஞான
வாசமருள் நீரின் மூழ்கி
மாற்றுயர்ந் திடமருள் பட்டாடை கொண்டருள்
மாமேனி மேலுடுத்தித்

தாஞேங்கு மாணவ விருட்பந்த மற வருள்
தண்ணருள் விளக்கி யெழுமோர்
தண்ணொளி விரிக்குமருள் முத்தணி தரித்தினிய
சாந்தபத வியோமநிலையாய்த்

தாஞேங்கு மெய்ஞ்ஞான வஞ்சன சலாகையால்
தானென்னு மாத்மவிழியின்
தன்மலத் திமிரந் தெறச் செய்து வத்வைத
தண்பூதி தனையணிந்தே

தேஞெழுகு பொழில் சூழும் வடலூ ரமர்ந்த நீ
செங்கீரை யாடியருளே
செம்மை நல முறவளர்ந் தோங்கும் வட லூர நீ
செங்கீரை யாடியருளே (1)

(1) ஆணவ இருள்—ஆணவ மலம், ஐந்து மலங்களில் ஒன்று. வியோமம்—ஆகாயம் ; **சலாகை**—இரண வைத்தியக் கருவி வகை ; திமிரம்—இருளாகிய குற்றம் ; தெற—அழிய ; **பூதி—விபூதி** ;

320 தெள்ளறல் கொழித்திடு திருப்பால் தடங்கடல்
தேடிவட வாலுறங்கும்
தேனளி முரன்று மொய்த் தூறும் திருத்துழாய்ச்
செந்தொடைத் திருமார்புடைப்

புள்ளிறையொ டகலாத புருகூத னய னுறும்
புவனங்கள் மூன்று முத்தி
பொருள் தரும் சாமிவளர் புண்யவட லூரெனப்
போற்றுமுயர் சித்திபுரமாய்க்

கொள்ளுமுத் தர்ஞான முயர்சிதம் பர மதில்
குருஞான வள்ள லாகிக்
குரைகடல் புவிராச தவராச கவிராசர்
கூடியடி போற்று மரிய

தெள்ளியர்களுள்ள மகலாப்பெருந் தேவன் நீ
செங்கீரை யாடி யருளே
செம்மைநல முறவளர்ந் தோங்கும் வட லூர நீ
செங்கீரை யாடியருளே. (2)

(2) அறல் - கருமணல்; தேன் அளி - ஒரு பொருட் பன்மொழி; தேனுக்காக அளி என்றலுமாம். புள்ளிறை - கருடப் புள்ளுக்குத் தலைவனுன திருமால்; அவனோடகலாத புருகூதன் என இந்திரனைக் கூறினார். திருமால் அதிதி வயிற்றில் உபேந்திரனாக பிறந்தமை நோக்கி. குரை - ஒலிக்கும்.

321 உன்னுதற் கரிய வொளி வீசும் பெருங்கருணை
உருவருட் பணிதரித்தே
ஒல்லென வசைந்தசைந் துள்நகைத் தும்பி விரை
வோடும் தவழ்ந்து சென்று

நன்னல முறப்பெற்ற வென்னம்மை சின்னம்மை
நற்றாய் மடித்தலத்தே
நன்னயத் தொடுமிருந் தோங்கு மருள் நாயக
நயக்குமுன தினன் சொலதுகேட்

டின்புறும் தந்தைமடி மீதிருந் தோங்கி விளை
ஆடு மருளெந்தை யன்பால்
இன்புட னழைப்பவர்க் கின்புதவு மென்கணே
எங்கள் குரு ராமலிங்க

தென் தமிழ் மணக்கும் வட லூரருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
செம்மை நல முறவளர்ந் தோங்கும் வடலூரநீ
செங்கீரை யாடியருளே (3)

(3) சின்னம்மை - அடிகளின் தாயார்; நயக்கு - ..........தந்—" குழலினிது யாழினிதென்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் " என்ற திருக்குறள் ஓர்க.

322 நெட்டுடல் நிணச்சுவர் தனக்கிசைய வென்புதனை
நீள்சுவர்க் காலென நிறீஇ
நீண்டபெரு முதுகிடை நிமிர்ந்தபழ விணைதனை
நேருறு பெருந்தூ ணெனப்

பட்டுற வமைத்து நடு வோங்குமுக டெனுமேற்
பரப்பைத் தசைக்கொடதனுல்
பாங்கு பெற மூடியிரு ளாங்கற விளக்குமதி
பகலிரவி மண்டலத்தை

இட்டுமற் றுளதத்து வப்பெருநன் மேடைகள்
எடுத்தடுக் கிப்பெரியதோர்
இவ்வுடல்களென்னு மொரு சிறுவீ டமைத்தவையுள்
இன்புயிர்த் திரள்கள்தமையே

திட்டமொ டுறச் செய்து விளையா டருட்குழவி
செங்கீரை யாடியருளே
செம்மைநல முறவளர்ந் தோங்கும்வடலூரநீ
செங்கீரை யாடியருளே (4)

(4) மதி பகலிரவி மண்டலம் - முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து......ஆம்பாட்டுக் குறிப்பில் காண்க. தத்துவம் - பூதமைந்து முதலிய 25 தத்துவங்கள்.

323 கொந்தார் மலர்க்குழ லளிக்குழாம் சூழ்ந்துறு
கொழுந்தே னயின்று நிற்க
கொங்கையுறு பாரமது கொண்டிடை யிளைக்கும்
கோமாட்டி யென்றறிந்தே

வந்தொரு மருங்கணைந் தொருகைதனை யோச்சியே
வாள்நகை யொடுங்களித்தே
வருமுடல் தனையற வொழித்த நம் கடவுளை
வளைக்கரம் கொண்டு தழுவும்

எந்தா யருட் குரிய பார்வதி புரப் பெயர்
இயைந்த வட லூரில் வாழும்
இனிமையக லாதமுக் கனி யிரதமாயுள்
இனிக்குமரு ளொழுகும் நல்ல

செந்தேன் மணக்கு முயர் திருவருட் பிரகாச
செங்கீரை யாடி யருளே
செம்மைநல முறவளர்ந் தோங்கும் வடலூர்நீ
செங்கீரை யாடியருளே (5)

(5) அயின்று - உண்டு ; ஓச்சி - ஓங்கி ; வாள்நகை - ஒளிபொருந்திய பற்களையுடைய பார்வதி. பார்வதிபுரம் - வடலூருக்கொரு பெயர்.

**வேறு**

324 நகமுறு மமணர் முகம்கவி முறமத
நாளும் நலிந்தாட
நாயக மாமருண ஞானம் விளங்கி
நயந்து நயந்தாடத்

தகதக எனு மரு ளொளிமுழு தோங்கித்
தழைந்து தழைந்தாடத்
தயையுடை நின்னரு ளழகொளிவேத
சதங்கை யசைந்தாடச்

சகமகிழ் சத்திய ஞான முறும் பொருள்
தண்ணருள் சாயாதே
சாந்த மிகப் பொலி வார்ந்து வளர்ந்தெழு
சத்திய ஞானமுறீஇ

அகமதி னின்று வளர்ந்துட னுடிட
ஆடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
ஆடுக செங்கீரை (6)

(6) நகம் உறும் அமணர் – மலைகளில் வாழ்தலைப் பொருந்திய சமணர்கள் ; சமணர்கள் முகம் கவிழ்ந்தனர். இவர் சைவ சமயமோங்க வைப்பதால். சகம் – உலகம்.

325 அணிகிள ரகிலநல் லுயிர்கள் பெறுஞ்சிற்
றவல மசைந்துறவே
அவ்விய மாயுறு பூத மசைந்துற
ஆடைம் புலனசைய

பிணியுறு வாதம் பித்தம் சீதம்
பேர்ந்து புரண்டாட
பிங்கலை யிடைகலை யென்னு மிரண்டும்
பேர்ந்து துவண்டாட

தணிவில் சடப்பொரு ளெழுவகை தாது
தளர்ந்து தளர்ந்தாடத்
தடையுறு கரண முழந்துதி யங்கி
தசைந்து தசைந்தாட

அணிவளர் வடலூ ரருட்பிர காச நீ
ஆடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
ஆடுக செங்கீரை (7)

(7) அவலம் – துன்பம் ; பிங்கலை – வலது மூக்கு வழியாய் வரும் மூச்சு ; தாது 7–இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், என்பன.

326 பண்டரு நற்புரு டந்தனில் மூலப்
பகுதி நலிந்தாடப்
பண்புறு பர சொப் பனமதில் மாயை
பதைத்துப் பதைத்தாட

விண்ணுறு வியோம மதில்பெரு மாயை
விலங்கி யசைந்தாட
விதியுறு சிவசாக் கிரமதில் விந்து
வெளிப்பட நின்றாட

கண்மணி நிகர்சிவ சொப்பன மதிலே
காண்புறு நாத மதே
காண்பற நின்று கலங்கித் தளர்ந்து
கசிந்து கசிந்தாட

அண்ணு லுறுஞ்சிவ சத்தி புரத்தினில்
ஆடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
ஆடுக செங்கீரை (8)

(8) சாக்கிரம் – சொப்பனம் ; முதலியன கீழாலவஸ்தைகளில் கூறப்படுவன. முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து 722-ம் பாட்டின் குறிப்பில் காண்க.

327 செம்மைகொ ளுபசாந் தம்மதின் மாமயல்
சேர்வை சிதைந்தாடச்
சீர்மை பெறுங்குரு சாக்கிர மதிலிருள்
சிந்தி நசிந்தாட

நம்புறு சீவவு பாதி நலிந்து
மெலிந்து நலிந்தாட
நாயக மாம்பர மானவு பாதி
நடுங்கி நலிந்தாட

விம்மித மற்ற விடந்தனி லோங்கி
விளங்குறு பிரமமதாய்
மேவின மென்பது போயற நின்று
விளங்கல் விரிந்தாட

அம்புய மலர் வயல் வடலூ ரப்பநீ
ஆடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
ஆடுக செங்கீரை. (9)

(9) உபசாந்தம்—மனவமைதி, உபாதி - இடையூறு.

328 நன்றரு ளாந்தனை நாடுத லற்று
நயந்ததின் மீதேறி
நங்குரு சுருதியின் முடிபி லிருந்ததின்
நாயக மாஞ்சிவமாய்

நின்றருள் பேத மகன்றக லநுபவ
நேர்மை யுறப் பெற்றே
நின்மல சொரூப சுபாவ மகன்றருள்
நித்திய சத்தியமாய்

அன்றங் கருளு மத்தன் நீ முத்தன் நீ
அருளாய் நின்றவன் நீ
ஆண்டவன் நீயருள் தாண்டவன் நீயெனை
ஆள்பவன் நீ வடபால்

அன்பக லாதருள் சித்திபு ரத்தன் நீ
ஆடுக செங்கீரை
அழகுற நின்றருள் பழகுறு குழவி நீ
ஆடுக செங்கீரை. (10)

(10) சுருதி - வேதம்; சித்திபுரம் - சித்திவளாகமாளிகையை இங்ஙன் கூறினார் போலும்.

## தாலப் பருவம்

329 சத்தாம் பொருளில் சகசீவ
பரங்கள் தோன்றும் பேதமது
சத்தாம் பொருள்தா னன்றிவே
றிலவென் றேதும் சதசத்தே

சித்தாய் விளங்குஞ் சிவஞானம்
தெளிந்த வறிஞ ருளத்தூறித்
தித்தித் தொழுகு மருளமுதே
தெவிட்டா வமுதொத் தோங்குமொரு

கொத்தார் மலர்சூழ் குழல்சத்தி
குமரி யருட்சீர் மெய்ஞ்ஞானக்
கொழுந்தாய் விளங்கு மரியகுலக்
கொழுந்தே வென்னுட் குறை தவிர்க்கும்

அத்தா வறிஞர் மகிழவரும்
அப்பா தாலோ தாலேலோ
அருள்மெய்ஞ் ஞான சித்திபுரத்
தரசே தாலோ தாலேலோ. (1)

(1) சதசத்து – உள்ளதும் இல்லதும்.

330 சோதி மரஞ்சேர் சிலமந்தி
சோர்வங் கடையா தெழுந்து மரச்
சோதிப் பிழம்பால் நோக்குறவிண்
தோன்றும் கடக ராசிதனை

நீதி நிலஞ்சே ரலவனென்
நினைத்தங் கஞ்சி நிலையின்றி
நீண்ட தெங்கின் நேருற வீழ்ந்
திருந்து நிமிர்ந்தங் குறுமதுவை

பாதி யறவுண் டுறமயங்கிப்
பாளை யுடனக் குலைபறித்துப்
பார்த்தங் கிறங்கும் பழஞ்சோலை
பழம்பூ மணக்கும் பண்பகலா

ஆதி யாகும் வடலூருக்
கரசே தாலோ தாலேலோ
அருள் மெய்ஞ் ஞான சித்திபுரத்
தரசே தாலோ தாலேலோ. (2)

(2) சோதி மரம் – இரவில் ஒளியுடன் விளங்குவதாகக் கருதப்படும் மரவகை. தெங்கு – தென்னை மரம்; சோதி மரத்தை யடைந்த குரங்குகள் அம்மரத்தினொளியால் விண்ணில் தெரியும் கடகராசி (நண்டு)யை நிலத்திலுள்ள நண்டு என நினைத்துப் பயந்து அங்கு நிலைக்க முடியாமல் தென்னை மரத்தின்மீது விழுந்து சிறிது தங்கி ஆண்டுள்ள கள்ளைக் குடித்துப பாளையோடு குலைகளைத் தூக்கிக்கொண்டு இறங்கும் அத்தகை வளஞ்செறிந்த வடலூர் என்க.

## வேறு.

331 காரணு கும்பொழில் மாங்கனி நைந்து
கசிந்தொழு குறுமணமே
கால்கொடு வீசிக் கடுகி நடந்தொரு
கடிதட நின்றதிலே

நீரணு வுஞ்சிறு மேன்மணம் நீக்கி
நிமிர்ந்தே விளையாடும்
நேரிழை யணியிரு கொங்கைகொள் மகளிர்
நெகிழ்ந்த விடைக்குளுறும்

சீரணி வளர்சிறு குழிகள் மணக்கச்
செய்துறு பொழில் நீங்காச்
செம்மை மிகுங்குயில் பாடக் கேட்டுடன்
ஆடும் செழு மயில் வாழ்

தாரணி புகழ்வட லூருக்கரசே.
தாலோ தாலேலோ
தங்கு மருட்பிர காசத் தலைவ நீ
தாலோ தாலேலோ. (3)

(3) கால் - காற்று.

332 பொற்புரை சுருதி யகப்பொருள் சத்துப்
பொன்றுத லின்றியுறும்
போக்கறு சித்தினை விட்டக லா யர்
பொருளா நந்தமதே

நற்பொரு ளென்றுனு மன்பர் நயந்து
நயந்தே நாளுமரு
நழுவுறு தண்ணீ ரைப்போல் நினைவது
நயமல வென்றிங்கே

அற்புத மொடுவொழு குறுதயி லம்போல்
அன்புற வகமதனில்
ஆங்கே நின்று நினைந்து நினைந்திட
அழிவி லரும்பொருளாம்

தற்பர மாயச மாதியெ னப்புகல்
தகையே தாலேலோ
தங்கு மருட்பிர காசத் தலைவ நீ
தாலோ தாலேலோ (4)

333 எண்டிசை யோரு மெழுந்து துதிக்க
எழுந்தரு ளும்மரசே
இன்புட னுற்ற விருங்கழல் தன்னை
இறைஞ்சும் தவமுடையோர்

உண்டரு ளமுத வொழுக்கினை யகலா
துறுசிவ வநுபவமாம்
உள்ளழ கொடுநின் ளோங்கி வளர்ந்தருள்
ஒழுகு மருட்பொலிவைக்

கண்டவர் தங்க ளகங்கனி வுறவருள்
கண்ணுள் மணியே நல்
காட்சி யுடைப்பே ராட்சி யுறும்பொருள்
கதிபெற வந்தோடித்

தண்டமெ னப்பணி வார்க்கரு ளரசே
தாலோ தாலேலோ
தங்கு மருட்பிர காசத் தலைவன் நீ
தாலோ தாலேலோ.

(5) கழல் - தானியாகு பெயராய்க் கால்களை யுணர்த்திற்று.

334 கயிலைப் பதியிறை யாமர ளுரிரு
கண்ணுட் கருமணியே
கைதொழு மடியர் பவப்பிணிய றவருள்
கற்பக நற்பரமே

பயிலுறு மினிய பரம்பொரு ளென்று
பதம்பணி யும்பண்பில்
பத்தர்க ளுக்கருள் போக மனைத்தும்
பாங்குட னருள் சிவமே

இயலிசை கொண்டு துதிப்பரி தாமெழில்
கொண்ட விறைப் பொருளே
என்பு கரைந்து கரைந்து தவஞ் செயும்
இன்புடை யாளர்களும்

தயவிற் பொலிவுறு வடலூர்க் கரசே
தாலோ தாலேலோ
தங்கு மருட்பிர காசத் தலைவ நீ
தாலோ தாலேலோ.

(6) பவப்பிணி - பிறவியாகிய துன்பம் ; கண்ணுட் கருமணியென்றார் கண்ணுக்கு மணி முக்கியமாதலின்.

**வேறு.**

335 தற்பர வெளியருள் அற்புத முடையாய்
தாலோ தாலேலோ
தானெனு முண்மை தயங்கொளி யுடையாய்
தாலோ தாலேலோ

அற்பக லாத வருட்கதி தந்தருள்
அய்யா தாலேலோ
ஆன வகண்ட வருட்பரி பூரண
அப்பா தாலேலோ

பொற்புற வளரருள் பூரண காரண
புனிதா தாலேலோ
பூத்த வருட்சிவ பூரண வின்பப்
பொருளே தாலேலோ

சற்குரு வேயருள் சிற்பர நாதா
தாலோ தாலேலோ
சத்திய வடலூர் சித்தி புரத்துறை
சதுரா தாலேலோ. (7)

(7) சதுரன் – சமர்த்தன்.

336 அஞ்ஞா னப்பெரு மதகரி தனையடும்
அரசே தாலேலோ
அருளமு தம்பொழி யானக் தப்பொருள்
அரசே தாலேலோ

மெய்ஞ்ஞா னப்பொருள் வேண்டுப வர்க்கருள்
விமலா தாலேலோ
மெய்யரு ளின்பம் முப்பொரு ளொன்றெனும்
மெய்யாய் தாலேலோ

எஞ்ஞான் றன்பர்த மிதயந் தனிலுறும்
எந்தாய் தாலேலோ
என்னுளி ருக்கும் மலப்பிணி தீர்த்தருள்
இறைவா தாலேலோ

தஞ்ச முறுந்திரு வடலூர் தனில்வாழ்
தனியே தாலேலோ
சத்திய வடலூர் சித்திபு ரத்துறை
சதுரா தாலேலோ. (8)

(8) அஞ்ஞானம் – அறியாமை ; மலப்பிணி – ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலமாகிய நோய்.

337 துன்னிய கரணத் துகளற வென்னுள்
துன்னுவை தாலேலோ
தூய்மை யரும்பொருள் வாய்மை தருங்கதி
தூயா தாலேலோ

மன்னிய சைவச் சற்குரு வாகிய
மணியே தாலேலோ
மாதவ மோதுறு வாத மகற்றிய
வாழ்வே தாலேலோ

தன்னிலை யேயருள் நன்னிலை யென்றருள்
தவமே தாலேலோ
தயவுடை நாயக மான தயாபர
தற்பர தாலேலோ

தன்மய மாகித் தயங்கு மொளிக்குள்
தயங்குவை தாலேலோ
சத்திய வடலூர் சித்திபு ரத்துறை
சதுரா தாலேலோ. (9)

(9) துன்னுவை – பொருந்துவாய்.

338 துன்மார்க் கப்புலை கொலையற் றவர்தம்
துணைவா தாலேலோ
துன்பக லருளுரு வாகிய வின்பத்
துரையே தாலேலோ

பன்மார்க் கப்பரி சற்ற வதீதப்
பரமா தாலேலோ
பண்புறு நண்பு கலந்த வருட்கதி
பரமே தாலேலோ

நன்மார்க் கம்பெறு வார்க்குளி ருந்தருள்
நட்பே தாலேலோ
நாடுதல் வாடுத லற்ற விடத்தருள்
நலமே தாலேலோ

தன்மையிடப் பொரு ளற்ற விடத்தொளிர்
தனியே தாலேலோ
சத்திய வடலூர் சித்தி புரத்துறை
சதுரா தாலேலோ. (10)

(10) துன்............துணைவா என்றார் இவர் சீவகாருண்ய வொழுக்கம் கூறலாம். அதீதம் – மேற்பட்டது.

## சப்பாணிப் பருவம்

39 உண்ணயந் தொழுகுமிரு கண்களுற் றெங்கணும்
ஒளிப்பிழம் பாலிருளொழித்
தோங்குறு மருட்டா யுனைப்போன றுறுந்தெய்வம்
உண்டென வுரைக் கொணுமை

கண்டுமும் மலமங் குடைச்சீவர் தாமுளக்
காட்சிபெற வேக்கமுற்றே
காதலொழி யாதிரு கழற்றுணி தந்தொழல்
கடைப்பிடித் தொழுகும வர்தம்

பண்டைவினை முழுதும் பறந்திடச் செய்வைசிவ
பரமவனு பவநிலையெனும்
பண்புதனை வாயால் புகழ்ந்தினி தறிந்துனைப்
பாடுவோர்க் குதவுநல்ல

தண்மல ரிதழ்த்தா மரைப்பொருவி ணைக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (1)

(1) அருள்+தாய் - அருட்டாய் எனப் புணர்ந்தது. கழல்தாள் - நிதம் தொழல் என்க. அனுபவ நிலை - திருவருட்பா ஆருவது திருமுறை அனுபவ நிலை. 617-ம் பக்கம் பார்க்க.

340 பங்கயா சனனுமரி யாயிரங் கண்ணன்
பரந்திடு பணுமுடிச்செம்
பாந்தளுரு வங்கொண் டிரும்புவி பரிக்குமொரு
பண்ணவன் வியாக்ரபாத

புங்கவன் தும்புருவ நாரதா தியருமே
புகழ்நந்தி யொடுபிருங்கி
பொருவில்விண் ணவருமெண் ணுறுப்ரமத கணமொடும்
புவனநா தாக்களுடனே

தங்கள்தங் கட்குரிய விருதுபே ரிகைவீணை
தண்ணுமை பெருங்குடமுழாச்
சச்சரியுடன் சங்க மாத்திடச் சிவகணத்
தலைவர்தொழ நடனஞ்செயும்

சங்கரன் அருட்படிவ மாகிவளர் சற்குருநீ
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (2)

(2) பாந்தள் - பாம்பு ; பண்ணவன் - பதஞ்சலி ; வியாக்ரபாதர் - முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து ......-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

பிருங்கி ..இம்முனிவர் வீடு விரும்புபவராய் சக்தியை விட்டுச் சிவனை மட்டும் தரிசித்துச் செல்ல உமாதேவியார் இவரிடம் தமது கூறுகிய உதிர மாமிசங்களை வற்றச் செய்ய சிவன் ஒருகோலுங் காலுந் தந்து கருணை செய்யப் பின் உமாதேவி தவஞ்செய்து பாதிப்பாகம் பெற்றனள். நாதாக்கன் – ஞானியர் ; சச்சரி – ஒரு வாத்தியம்.

341 சித்தனெல் லாம்வல்ல தீரனரு ளால்சங்கம்
சேர்ந்துறும் புலவர்சூழச்
செற்றமில் காய்சின வழுதிமுத லீறெனச்
செப்பும் கடுங்கோன்மகன்

வித்தெனவி ளங்கும்வெண் டோட்செழியன் முதலீறு
வேய்முடத் திருமாறனும்
வேண்டுமம் மன்னன்முத லீறென விளம்புமொரு
வீரமுறு முக்ரவழுதி

சத்யமுறு வங்க்யசே கரனென்னு முச்சங்க
சார்புடைய பாண்டி வெள்ளம்
தான்வழுத் துறுலிங்கம் சொக்கலிங் கப்பெரும்
சாமியருள் வடிவானவா

சத்திய மகன்றுறுச் சிததாந்த முத்தனே
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) எல்லாம் வல்ல சித்தன் – சிவபெருமான் திருவிளையாடற் புராணம் கூடற்காண்டத்தில் இப்படலத்தைக் காண்க. காய்சின வழுதி – இவன் முதற்சங்கமிருத்தினன். இவனை உக்கிரபாண்டியன் என்பர். கடுங்கோன் – தலைச்சங்கமிருத்திய பாண்டியர்களிலிறுதியானவன் வெண்டோட் செழியன் – இப்பாண்டியன் இடைச்சங்கமிருத்தினன். முடத்திருமாறன் – இடைச்சங்கம் நிறுவிய பாண்டியர்களில் கடையானவன். உக்ரவழுதி – இவன் காலத்தில் கடைச்சங்கமழிந்தது. வங்கிய சேகரபாண்டியன், நக்கீரர் முதலிய 49 பேரை ஆதரித்துக் கடைச்சங்கம் வளர்த்தவன்.

342 பஞ்சஞ்சு மெல்லடி பரந்தவிழி யருள்நீர்
பரிக்தொழுகு முக்கணுடையெம்
பார்ப்பதிம ணாலின் பரஞ்சோதி யென்னுட்
பதித்தொளிர் பராபரன்மறைக்

கொஞ்சுறு சதங்கையணி குஞ்சித பதாம்புயக்
குரிசிலென் நெஞ்சதுவிடாக்
குருநாத நடராச மணிவேத வொலிநாத
குணத்தவ வொலிபோலெழும்

எஞ்சலி லாதார மாறிலே ஆதார
மூர்த்திகளை யேத்திநாளும்
இன்புறூஉம் யோகியர்க ளுள்ளே யெழுந்தோங்கி
எங்குநிறை கின்றபொருளே

சஞ்சலம் மகற்றியருள் திருவருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) வேதங்களே சதங்கையென்க. குஞ்சிதம் - ஒரு காலைத் தூக்கி நிற்றல்; எஞ்சலில் ............மூர்த்தி - முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 660-662-ம் பாட்டின் குறிப்பில் பார்க்க.

343 சீர்கொண்ட பூதபௌ திகவண்ட பிண்டாண்ட
செம்மைவளர் பகிரண்டமாம்
செகமெலா மீன்றவொரு பகுதிக்கு மேலான
தெய்வநட ராசமணிதன்

பேர்கொண்ட பதிகமரு ளிச்செய்து திருவருள்
பிரகாச மாகிஎன்னுள்
பிணிமல மகற்றியரு ளானந்த வெளிதனில்
பேரா திருத்துமரசே

சூர்கொண்ட சற்குரு அருட்பொலி வுறும்தலைவ
துரியந் தனக்குமேலாம்
சுத்தமெய்க் கதியருளி ராமலிங் காயநம
தூய்மையுறு மூலபந்தச்

சார்போத மகலச்செய் தருள்சத்ய மூர்த்தி நீ
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழுட்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) தெய்வ..........பதிகம் - திருவருட்பா 256-ம் பக்கம் பார்க்க (1902-ம் வருஷப் பதிப்பு) .

## வேறு.

344 கண்டவர் விண்டவ ரென்றிடு ஞானிகள்
காணுங் கதியகலாக்
காரண பூரண நாரண னரணன்
காணக் காட்சியருள்

பண்ணமை தண்ணி யருட்பா வொன்றும்
பார்த்ததி லோங்குகதிப்
பண்புறு ஞான வருட்பயன் துய்க்கப்
பரிவுறு மறிஞர்க்கே

தண்ணளி புரியு மருட்பிர காசத்
தலைவநீ தாங்குமருள்
தந்தை தயாபர வுத்தர ஞானச்
சபைதனி லோங்கு முருக்

கொண்ட அருட்சிவ ஞானச் செல்வநீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி (6)

(6) தண்ணளி – கருணை ; <u>உத்தரஞானசிதம்பரம்</u> – வடலூரில் நாற்பது காணி அளவுள்ள விடத்திற்கு உத்தரஞானசிதம்பரமென இராமலிங்கர் கடவுட்டிருவருட்டுணையால் பெயரிட்டார்.

345 கல்லா தவரனு பவியாக் கதிதனைக்
காட்டும் கருணையுருக்
கண்மணி விண்மணி தெய்வசி காமணி
காண்புறு காட்சிதரும்

பொல்லா மணியுயர் கொல்லா மணியென்
புன்மை தவிர்த்தருளும்
பொன்மணி நன்மணி யென்மணி யென்றும்
பொய்ம்மை யொழித்தருளும்

சொல்பொரு ளாயதி னுட்பொரு ளாம்மணி
சொல்பிழை தனையறவே
சொல்லித் துதிசெய் பவர்க்கருள் நாயக
சோதியுள் சோதியன்நீ

கொல்லா விரதியர் போற்றுங் குருமணி
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (7)

(7) பொள்ளா என்பது பொல்லா என நின்றது.

346 மணமக ளாவருள் கற்பக நற்கனி
மாண்புட னருள்ஞானம்
மன்னுறு நன்மை மறுத வருட்கதி
வாய்க்க வழங்குறுநீ

பணவர வல்குல் பாவையர் மயலொழி
பண்புடை யவர்தொழுநல்
பரம வருட்குரு வாகியென் னுள்ளம்
பார்த்தருள் யோகியருள்

கணகண வெனுநல் நாத வொலிக்கும்
காண்பரி தாயவருள்
கண்மணி யுத்தர ஞானச் சித்தி
புரத்தே காண்புறுசற்

குணரகி தப்பொருள் அருண்மணம் வீசிநீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (8)

347 அருண்மணம் வீசுறு மொருதனி மலரே
அற்புத வானந்தம்
அகலா துறுநல் லதீத நிலைக்கே
அன்புகொ ளனுபவநல்

பொருள்நிலை தத்வமசிப்பொரு ளுறுபொருள்
போக்கறு பூரணமாம்
பொய்ம்மையி லாப்பொருள் புண்ணியர் நண்ணுறு
போதம் விளக்குறு நல்

கருணைக் கற்பக நற்பொரு ளதனைக்
கண்ணுள் மணியாகிக்
கருணையொ டுரைசெய வல்லா யென்னுள்
கரவா தொளிருமருள்

குருநிலை யொருநிலை யென்றருள் ஞானிநீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (9)

(9) போதம் - ஞானம் ; கரவாது - மறையாது.

348 சூரக லுறவருள் சுப்பிர மப்பொருள்
சுகசொரு பானந்தச்
சுத்த வெளிப்பொருள் தன்னை மறைக்கும்
துர்க்குண மாமண்டம்

பேரக லாக்கலை வித்தையெ னும்பெரு
அண்டம் பேசவொணுப்
பிணிவளர் காலமி ராகம் புருடன்
பேசுறா பலவண்டம்

நேரக லாச்சிவ தத்துவ வண்டம்
நேருறு பலவண்டம்
நிற்கும் நிலைக்குள் வெளிப்பட லாகா
நீடொளி தனையறியக்

கூரக லறிவை விளக்கும் குருபர
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (10)

(10) சுப்பிரமம் - ஒளி ; இராகம் புருடன் - வித்தியா தத்துவம் ஏழனுள் கூறப்படுவது, கூர் - மிக்க.

## முத்தப் பருவம்.

349 கால நியதி கலைகடந்த
கருணை யுருவாம் சிவபோகக்
காட்சி முடிவில் கனிந்தவருள்
கனியின் விளைவித் தாகியென்றன்

தூல வடிவைக் கரைத்துருக்கும்
துரிய வெளிக்கப் பாலாகும்
துரியா தீதப் பொருண்மோனம்
துளும்பு மிராம லிங்கனெனும்

மூல குருநீ உண்மகிழ்ந்து
முத்தம் தருக வெனும்முன்னே
மூலப் பகுதி யற்றிடத்தே
முளைத்த முத்தம் தந்தருள்செய்

மூலப் பொருளே வடலூர்வாழ்
முதல்வா முத்தந் தருகவே
முதலீ றில்லா விடத் தொளிரும்
முதல்வா முத்தந் தருகவே. (1)

(1) துரியம், துரியாதீதம் - முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 722-ம் பாட்டின் குறிப்பில் காண்க. முத்தம் - முத்தி (மோட்சம்).

350 கமல யோனி செயுஞ் சிருட்டி
கழன்ற விடத்தங் கொளிருமருள்
கருணை முத்தாய் விளைந்த வருள்
கடலே யென்னுள் கலந்தோங்கும்

நிமல தோற்றம் கடந்தப்பால்
நீண்ட பிரம வனுபவத்தில்
நிமிர்ந்தாங் கொளிசெய் நிசாநந்த
நித்ய மாகி யென்னுள்ளே

அமரும் முத்தே யென்னருமை
ஆணி முத்தே யானந்த
அருள்சீ ராகி விளையமுதம்
ஆகித் தனித்த வருண்முத்தே

மும்மல மறுக்கும் வடலூர்வாழ்
முதல்வா முத்தந் தருகவே
முதலீ றில்லா விடத் தொளிரும்
முதல்வா முத்தந் தருகவே. (2)

(2) கமலயோனி - பிரமன் ; மும்மலம் - மும்மலம் எனத் தொக்கது.

351 முத்தாய் விளைந்த வருள்மோன
முத்துள் முளைத்த முத்தினுக்கு
முத்தா மிராம லிங்கமெனும்
முத்தே முதலீ றில்லாத

முத்தி தானு முயர்முத்து
முளைத்த சிவசாக் கிரசுழுத்தி
முதலாய் நின்று நிகழ்பிரம
முனையின் நீங்கா தொளிர்முத்து

சத்தாம் பிரம சாக்கிரத்தே
சார்ந்தங் கொளிரும் சாந்தபத
சத்யா னந்த வருண்முத்தே
சரகா விடத்துச் சாயாத

முத்தே தருமோர் சித்திபுர
முத்தே முத்தந் தருகவே
முதலீ றில்லா விடத்தொளிரும்
முதல்வா முத்தந் தருகவே. (3)

(3) மோனம் – பேசாமை ; சாக்கிரம், சுழுத்தி – முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 722-ம் பாட்டின் குறிப்பில் காண்க. சாயாத முத்து, – அழியாத முத்தி நிலை.

352 சொக்கப் பெருமான் வெள்ளிமன்றுள்
சோதிப் பெருமான் தன்னருளால்
தோன்றி விளங்கும் நின்வடிவம்
தோன்றாத் துணையாம் சோதியனல்

பக்க வழியால் பரந்தோங்கும்
பார்வைக் கனலால் பாகமுறப்
பண்டை மூலப் பகுதிமுளை
முனையைப் பழுக்கப் பார்த்தங்கே

ஒக்க மிளிரும் பிரம வொளி
தானே யதுவா யொளிவிடச்செய்
துன்னற் கரிய குருமுனையில்
ஒளிவிட் டோங்கு மொருமுத்தே

முக்கண் பெற்ற வரன ருளால்
விளைந்த முத்தந் தருகவே
முதலீ றில்லா விடத்தொளிரும்
முதல்வா முத்தந் தருகவே (4)

(4) மூலப்பகுதி – சுத்தா சுத்த தத்துவம் ஏழனுள் போக்கிய ரூபமாய் நின்ற தத்துவப் பிரபஞ்சங்கட்கெல்லாம் மூலகாரணமாவதும் கலாதத்துவத்தின் விகுதியாவதுமான பிரகிருதி.

353 சொருபந் தனையு மச்சொருபம்
தன்னை யறிநல் லுயிர்தனையும்
சொல்லு மிருபத் (5)தொருநான்கு
கருவி தனையும் சோர்வின்றி

உருவ தரிச னஞ்சுத்தி
ஒளிவிட் டோங்க வுறச்செய்து
உன்னற் கரிய பரம்பொருளை
உன்னி யுன்னி யுறங்குமவர்

மருவு மறிவில் பூத்தொளிரும்
மணியே யன்பர் மறவாத
மன்னும் பிரம வொளிதானாய்
மலர்ந்த முத்தே மறைப்பொருளே

முருகு மணக்கும் நிலவொளி செய்
முத்தந் தருக முத்தமே
முதலீ றில்லா விடத்தொளிரும்
முதல்வா முத்தந் தருகவே.

(5) இருபத்தொரு நான்கு கருவி 24 பிருதிவி, அப்பு, தேயு, வாயு முதலிய ஆன் தத்துவமாம்.

### வேறு.

354 சந்தத மென்செயல் நின்செயலி யானறி
தன்மைநின் தன்மையதாம்
சமரச நிலையா கமவே தாந்தத்
தத்துவ நிலையெனு மோர்

பந்தமி லாநிலை துவிதாத் வைதப்
பரநிலை யெனுமந்தப்
பண்புறு மருள்நிலை மெய்ந்நிலை யதுவே
பரமா னந்த நிலை

இந்தநி லைச்சுத் தாத்வித சமரசம்
இந்நிலை மேனிலையே
என்றறி யெனுமரு ளுத்தர ஞான
இலக்கண முறுவெளியே

முந்திமு திர்ந்து கனிந்து பழுத்தருள்
முத்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே.

355 முச்சக முழுதும் மகிழ்ந்துனை யேத்த
முருக்கரு ணைக்குளுறும்
மோகமோ டொழியாச் சோக மொழிந்து
முழுப்பொருள் முத்திபெறும்

சொச்சம தான சுகக்கடல் தன்னைச்
சுகித்தெழு ம்றிஞர்குழாம்
சொந்தஞ் சொந்தமெ னப்புடை நின்று
துதித்தெழ வருளமுதே

பொச்சமில் மோன முழுப்பொரு ளேயென்
பொய்ப்பிணி யெய்ப்பறவே
புந்தியுள் நின்றருள் சிந்தா மணியென்
பொற்புவி சாந்தமணி

முச்சக சீவ பரம்பொரு ளானநீ
முந்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முந்தந் தந்தருளே. (7)

(7) முச்சகம் - மூன்றுலகம் ; பொச்சம் - குற்றம்.

356 தத்துவ நீக்கம் சரிதையின் முடிபைத்
தண்ணரு ளாலறிதல்
சாலோ கந்தான் தற்போ தந்தான்
தானற வேநீக்கி

சத்திய அருளுரு வாகிநீ தங்குதல்
சாமீ பம்மெனவே
சாற்றித் தற்போ தங்கெட நிற்பது
தண்ணருள் யோகமதில்

சத்துவ முறுபரை தானய் நிற்பது
சாரு பம்மெனவே
சற்குரு வருளா லங்ங னறிந்தே
தற்பரை நீக்கமதில

முத்தெனு ஞானம தீதஞ் சாயுச்
சியமுத் தந்தருவாய்
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே. (8)

(8) இப்பாட்டில் சாலோக, சாமீப, சாருப, சாயுச்சிய பதவிகளை விளக்கியிருத்தல் காண்க.

357 அண்டர்கள் தொழுதெழ வருளுரு வாகிய
ஆதிய நாதியதாய்
அற்புத மாகு மருள்குரு வாகியென
அகமதை விட்டகலா

விண்டுறு மலரை நிகர்த்திடு மடியிணை
வேண்டுறு சித்தாந்தம்
வேதாந் தப்பொருள் நாதாந் தம்வெளி
யோகாந் தப்பொருளே

உண்மை யகன்றுற லாகா வுத்தமம்
ஓங்கிய போதாந்தம்
உருவெளி யருவெளி யுருவரு வெளியாய்
ஓங்கிய வொருபொருளே

முண்டக மலரோன் கண்டுண ரரப்பொருள்
முத்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே (9)

(9) அண்டர் - தேவர் ; உருவெளி........வெளி : முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 69-ம் பாட்டின் குறிப்பில் காண்க. இப்பாட்டில் ஆசிரியரைச் சிவனாகக் கூறியிருத்தல் காண்க.

358 சொன்னிலை பொருணிலை யறியவொ ணாநிலை
சொல்லுங் கதிநிலையைச்
சொல்லு மருட்பா சொல்லச் சொல்லச்
சுகஞ் சுக மென்றுரைசெய்

மன்னுறு மனுபவ நிலையருள் நிலையது
மாறா நிலையதனை
மாண்புட னுணரும் மகானு பவர்க்கருள்
மாதவ னேயருள்வாய்

பொன்னம் பலமே யென்னம் பலமென
போற்றுப வர்க்கருளும்
புண்ணிய னேயுயர் திண்ணிய னேபுகழ்
போகாப் பொருணிலையே

மூன்னிலை வடவூ ருத்தம னேயருள்
முத்தந் தந்தருளே.
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே (10)

(10) மாண்பு - பெருமை.

## வருகைப் பருவம்

359 ஏழிலம் பாலைதனை சீறிக் கடம் கவிழ்த்
திறுமாந் துயர்ந்து செல்லும்
இருகையா னைப்பிடியின் நடைசெருக் கறவன்னம்
இளநடை தளர்ந்துறச்செய்

தோழிமட வார்மய லகற்றியருள் மெய்ஞ்ஞான
சோதிச் சுயம்ப்ரகாசச்
சுத்தமா மயிலாட வம்மயில் குயிலான
சொருப வனு பவமதனையே

ஏழிரண் டுலகமுழு துற்பவல யமபோன
எந்தை யருள் நாட்டமும் உடையோர்க்
கின்புடன் தந்தருளி ராமலிங் கக்குரு
இயற்கையரு ளாட்சிநாளும்

வாழியரு ளோங்கும்வட லூவரிலுறை வள்ளல்நீ
வருகநீ வருக நாளும்
வண்மையருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருகவென் மணி வருகவே. (1)

(1) ஏழிலம்பாலை - மகளிரான் மலருமரம் பத்துளொன்று. இது மகளிர் நட்பாட மலரும். இதன் வாசனை யானைகளுக்காகாது. கடம் - மதம்.

360 ஒருபொருள் தத்வமசி யெனும்மகா வாக்யமதை
உணரிலஃ துள்ளதத்வம்
ஓங்கிவளர் தானதா யுள்ள வானந்தமாய்
உறுபொருள தீதமாகி

வருபொருள் சச்சிதா னந்தமா யழியாது
வாழுமுப்பா மொன்றதாய்
வளர்துரிய மூன்றுமொன் றுயதின் மீதிலுறு
வாழ்வுதா னுகிநின்ற

குருவனுப வாதீத குணரகித விசுவமுதல்
குறைவிலா நிறைவதாகி
குணமாயை வேறதாய் வேறென்ப தில்லதாய்
கோதின்முப் பொருளொன்றதாய்

மருவியே யொளிர்மூல காரணப் பொருளான
மறையினுள் மணிவருகவே
வண்மையருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருகவென் மணிவருகவே (2)

(2) இதிலுள்ள சித்தாந்தக் கருத்துக்களை 1932-ம் ஆண்டில் வெளியிட்ட ஆறும் திருமுறையில் வசனபாகத்தை நோக்குக.

361 பதிநீத்ய வறிவாம் பகுத்தறிவ தேபசு
பகர்ந்திது வெனச் சுட்டவே
பாசமெனும் முப்பொருளு மொன்றே யெனக்கண்டு
பகர்ஞான வள்ளலுரை நல்

கதியருளு மண்ணல்தா ளத்வைத மாதலே
காணிரண் டின்மையென்றே
கழறுமொரு சிவஞான போதவெண் பாப்பொருள்
கருத்திற் கிசைந்த நல்ல

மதிவழி யுயிர்த்தொகை மதித்திடா வழியுக்தி
வழியால் விளங்கு முண்மை
மாட்சிதனை நோக்கிமுப பொருளொன் றெனக்கொண்டு
வாழு மறை சித்தாந்தநன்

மதிதனை யெமக்கருள் செய் யுத்தர சிதம்பர
மகானுபவ நீவருகவே
வண்மையருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருகவென் மணி வருகவே.

(3) ——————————.

362 உலகநிலை தானறும் சுருதிதனில் மருணீங்கும்
ஒருசா தகந்தன்னிலே
உலைவிலிருள் சாத்திய மதிற்போ மதீதநிலை
ஓங்கிவளர் சகச ஞானம்

கலகமொரு சிறிதுமில் லாதோங்கு மநுபவக்
கருணையுரு ஞானம கலாக்
கனிவுபெற் றிடுசாந்த முகக்காட்சி நாளுமே
கரவாது காட்டியருளும்

நலமுடைய குருவே நின் முகம்வற்றி வளர்காட்சி
நாததத் துவமுழுதுமே
நாடுறு மடக்கமுறு தருணமதறியார்கள்
நாளு விதங்களாக

வலனற்ற வாதமே பேசுவ ரவர்க்கு மருள்
மணியேநீ வருகமுத்தி
வண்மையருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருகநீ வருகமணியே.

(4) நாளுவிதம் – பலவிதங்கள்; வலன் – வெற்றி.

363 திருவருட் பிரகாச வள்ளல்நீ திருநீ
றணிந்துருத் ராக்கமணியால்
திருமந்தரம் நாளும் செபித்துவிழி நீர்பெருகி
நிந்தமி ழெடுத்தோது நீ

ஊருவங்க மொத்தசிவ ஞானியா யொரு சித்தி
உயர்வளா கத்தமர்ந்து
உண்மைசிவ ஞான வனலொளியா லுண் மாசொழித்
தோங்கு பசு மலச் சாம்பல்தான்

ஒருபசும லத்தினுக் கொருபுறப் பொருளென்
றுரைத்ததனை யணியாது விட்
டோங்குமத் வைதவெண் நீறணிந் துயர் கருணை
உருவான பின்னரு ருவாய்

வருக்கம ணிதனை யகற்றி யரு ளப்பனே
வருகநீ வருகஞான
வண்மை யருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருககண் மணிவருகவே. (5)

(5) தீம்தமிழ் - இனிய தமிழ் ; வளாகம் - சித்திவளாகம் என்ற மாளிகை ; உள்மாசு மனக் குற்றம்.

364 அருளுருக் கொண்டவொரு வடிவுசிவ யோகிவடி
வானநின் னரிய முடிமேல்
அங்கே வளர்ந்த சிகை மூன்றுபிரி வுள்ளே நின்
அரியதாய் சின்னம்மைதான்

அருள்சிவ னடிச் சேர்ந்த பின்னரொரு சிகை கொண்டு
அரியவெண் துகில்மேற் கொளீஇ
அருட்பாத மேற்கும் நன் இருபாத ரட்சைதனை
அங்ஙன மகற்றியா ளும்

இருளறு வளாகமது சித்தி யெனு மோ ரிடம்
இருந்துகற் பூரதீபம்
ஏற்றிபா ராதித் தானந்த மேலிட்(டு)
இனிய கூத் தாடி நின்று

வருமுடல் மறைத்து வெளி யானவர சேவருக
வருகநல் லரிய சித்தி
வண்மை யருள் திருவருட் பிரகாச வள்ளலே
வருக வென் மணி வருகவே.

(6) கொளீஇ - கொண்டு, சொல்லி சையளபெடை.

## வேறு

365 சீரார் கருணைக் கற்பகநல்
தெய்வத் தருவே வருகவருட்
செம்மல் வருக மன்பதைக்கோர்
தெய்வப் பொருளே வருகபவத்

தீராப் பிணிக்கட் டவிழ்த்துமயல்
    தீர்த்துக் கதிதந் தருளுமென்றும்
தெவிட்டா தென்னுள் தித்திக்கும்
    தெய்வக் கனியே வருகநல்ல

ஏரார் பிரம வெளிக்குள் வளர்
    இனிய சச்சி தாநந்த
இன்பக் கடலே வருக வென்னுள்
    இனிக்கு மெந்தாய் வருகவெழில்

காரார் சோலை புடை வளரக்
    காக்கும் வடலூ ரரசேயெம்
கண்ணே வருக விராமலிங்கக்
    கருணா நிதியே வருகவே.

(7) மன்புதை - உலகத்துயிர்கள்.

## வேறு

366 சிறந்தி டும்பொ ருட்குளுத்
    தரச்சி தம்ப ராவருள்
சித்திதா னியற்ற வல்ல
    தெய்வ ஞான வள்ளலே

இறந்து ளோர்கள் தமையெழுப்ப
    வல்ல வெங்க ளீசனே
எல்லாம் வல்ல ஞான சித்த
    இடர் செய் பாவ நாசனே

மறந்த விர்த்த வன்பருள்
    மறந்தி டாதி ருந்தவா
மாதவம் செய் பெரிய ருன்னை
    வாழ்த்த வாழும் மன்னவா

வறந்தி டாத நீர் வளங்கொள்
    வடலூ ரெந்தை வருகவே
வளர ருட்ப்ர காசவள்ளல்
    வருக வருக வருகவே. (8)

(8) இறந்துளோர்.....................ஈசனே. இராமலிங்கர் இறந்வர்களையெல்லாம் எழுப்புவேனென்று விடுத்த செய்தி சமாதிவற்புறுத்தும் பத்திரிகையில் இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார்........ எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில்....இருந்து இறந்தவர்களையெல்லாம் எழுப்பிக்கொடுத்தும்........" என்பதை 566-ம் பக்கம் ஆருந் திருமுறை (1932-ம் வருஷம பதிப்பு) உள்ளது காண்க." செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்து மகிழ்ந்திருப்பார் " பக்கம் 379. செத்தாரையெல்லாம் திரும்ப வெழுப்பபுதலிங்கெத்தான் முடியுமெனில்..........சத்திய மிதே ;" என்ற அவரது திருப்பாடல்களை நோக்குக.

367 நீதியுடைய தாகு மரிய
நிமல சித்தி செயவலாய்
நீண்ட வுலகி லெய்துங்காட்சி
நேர்ந்தி டச்செய் நித்தனே

சாதி சமய மாமசத்ய
சதிரழிந்து றச்செயும்
சத்ய நித்ய முத்த சித்த
சாமி யிங்குச் சார்ந்தருள்

சோதி யாகி நின்றருட்கண்
சொரந்த மாய்வி ளக்கியாள்
சுத்த ஞான சித்தனே
சுயம்ப்ர காச முத்தவீண்

வாதி வாய்கள் மூடவேநீ
வருக வருக வருகவே
வளரருட்ப்ர காசவெந்தை
வருக வருக வருகவே. (9)

(9) நிமலன் - குற்றமற்றவன்.

368 வேத வாக மச்சமத்த
வித்த கப்பொ ருட்குணம்
வேண்டு சித்தர் கணமதைப்
பணிந்த வேத வித்தகன்

மாத வஞ்செய் தாயுமான
வள்ளல் ஞான மூர்த்திபால்
மன்னு சமர சானுபூதி
வாழ்வு பெற்று வந்தவா

நாத தத்வ முடிபிறந்த
நல்ல ருட்ப்ர காசனே
நாடு நானெ னும்தியக்கம்
நாசமாக்கும் நல்லவா

வாதமற்ற நல்லருள்
கதிக்குள்ளாக்க வருகவே
வளரருட்ப்ர காச எந்தை
வருக வருக வருகவே (10)

(10) தாயும் ஆன வள்ளல் - திருச்சிராப்பள்ளி சிவபிரான். இதன் வரலாறு அபிதான சிந்தாமணி முதற் பதிப்பு 503-ம் பக்கம் காண்க. நான் எனும் தியக்கம்—" "யானென தென்னும் செறுக்கறுப்பான்.............புகும் " என்ற குறள் காண்க. கதி - மோட்சம்.

## அம்புலிப் பருவம்

369 திருவளர் திருப்பாற் கடற்கு ளுதித்தனைச்
செம்மைவளர் திருவருட்பால்
தீங்கட லுதித்தவ னிவன்பேர் திரைக்கடல்
தீங்கிலிமகிரணவமுதம்

உருவள ருடற்குள்ள மைத்தொழுகு மதிநீயுள்
ஒழுகுமநு பூதிமதிகாண்
உயரிரவி வொளிகொளீஇ வோங்குமதி நீயிவன்
ஓங்குசிவ வொளியிெனளிகாண்

இருளகல வெழுமொளிகொள் ளினியமதி நீமூல
இருளொழித் தருளும் மதிதான்
இன்பமுதொ ழுகுமதி நீயிவன் மூலவழி
எழுமமுத கற்றி யென்றும்

அருளமுதொ ழுக்குமதி ராமலிங் கச்சேயோ
டம்புலீ யாடவாவே
அரியவட லூரருட் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (1)

| (1) சந்திரன். | இராமலிங்கா. |
|---|---|
| 1. திருப்பாற்கடலில் தோன்றினவன். | செம்மை மிக்க திருவருட்பாலாகிய இனிய கடலில் தோன்றினவன். |
| 2. பாற்கடலிலிருந்த தீங்கற்ற குளிர்ந்த அமுதத்தை உடற்குள் வைத்திருக்கு மதியாவன் (சந்திரன்). | மனத்தை அடக்கியொழுகும் அனுபவமிக்க மதி(புத்தி)யுடையவன். |
| 3. சூரியனின் ஒளிகொண்டு உயர்பவன். | சிவவொளியின் ஒளியாவன். |
| 4. உலக இருள் நீங்க எழும் ஒளிகொண்ட மதியாவான். | மூலமாகிய அஞ்ஞான விருளை ஒழித்தருளும் மதி (புத்திசாலி) யாவான். |
| 5. இனிய அமுதத்தை தேவர்கட்கும், பிதிரர்க்கும் கொடுக்கும் மதியாவான். | மூலவழி உண்டாகும் அமுதை நீக்கி என்றும் அருளமிர்தத்தைக் கொடுப்பவன். |

### பேதம்

370 மதிமண்ட லந்தனி லிருந்துகுறை மதியாகி
வாழ்வா யிவன் தனக்குள்
மதிமண்ட லந்தனி லிருந்தொழுகு மமுத்தனை
வாங்கியீந் தெங்கும் நிறைவான்

மதி விண்முழு தெங்கும் மயங்குமதி நீயிவனுள்
மாயையை மிதிக்கும்மதிகாண்
மன்னிரவி தன்னுள் கலந்தின்மை யாவையிவன்
மாறு வகண்டமதிகாண்

புதியபூச் சாயா களங்கமுறு வாயிவன்
பொருமாயை தன்களங்கம்
புரையற விடுத்தின்ப பூரண நந்தமாய்
பொலிவுபெற் றோங்குமதிகாண்

அதிகமுறு மெஞ்ஞான வாநந்த போதனுடன்
அம்புலீ யாடவாவே
அரிய வடலூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (2)

(2) மதிமண்டலந்தனிலிருந்தொழுகும் - முன்பிள்ளைத் தமிழ்க்கொத்து 663-ம் பாட்டுக் குறிப்பில் காண்க. இரவி. - சூரியன்; இன்மையாவது அமாவாசையன்று; இப்பாட்டில் பேதங் கூறியமை காண்க.

## தானம்

371 விண்ணுலகில் வந்துனைப் பற்றும்விட தாரிபால்
வேதனை விடாதுதிரிநீ
விதிவிலக்கி னையறிந் துறுமறிஞர் விடுகாம
வினைநோ யுழன்று கயநோய்

நண்ணுறும் முடல்கூ னடுத்துலவு முனைமாதர்
நாடிப் பழிக்குமதனை
நாடிமனம் நொந்துடலம் வாடிப் புழுங்கியே
நாடிநா டித்திரிந்தே

எண்ணுநீ யருளுறு மிராமலிங் கப்பெயர்கொள்
எந்தையரு ளமுதமுண்டு
இன்புறுத் துன்பமுறு பசிநோயகன் றுநீ
எந்நாளு முலவ வருள்செய்

அண்ணலரு ளாநந்த வமுதுடையென் னப்பனுடன்
அம்புலீ யாடவாவே
அரியவட லூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) விடதாரி - இராகுவெனும் பாம்பு; கயநோய் - க்ஷயம்; இது தக்ஷன் சாபத்தால் கலைகுறைவது நோக்கியது. மாதர் பழிப்பது - காமதாபத்தின்போது சந்திரன் சுடுவதால்.

372 பூதமுறு மாயையை யொறுத்துமேல் கீழான
புவனதத் துவமடக்காய்
பூண்டவரி சைகள்தமை யெடுத்தெறிந் துலமொரு
பொருவில்மெய்ஞ் ஞானவீரன்

பூதபௌ திகவுயிர்க் குளளுறுமஞ் ஞானவதை
போகாத மோகவதையும்
போகப் புடைத்தெறிந் தோங்குமுய ரருள்ஞான
போதம் வளர் வீரனெனவே

வேதனை யகன்றுமெய்ப் புலவர்பர ணித்தமிழ்
விளங்கப் புகழ்ந்துபாட
விண்ணவர்கள் மண்ணவர்க ளேத்த வருள்செய்தே
விளங்குபவ னென்றறிகிலாய்

ஆதித்த னேங்கமறை யுங்குழவி யாகிவளர்
அம்புலீ யாடவாவே
அரிய வடலூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (4)

(4) பௌதிகம் - ஆறும் திருமுறை 89-ம் பக்கம் (1932-ம் வருஷப் பதிப்பு) கர்ண்க. பரணி - 96 பிரபந்தங்களில் ஒன்று.

373 நீண்டவைம் புலன்நாலு கரணங் கழன்றுமன
நேருறக் கண்டுவாயு
நேருறு துழலுத லகன்றுமல விருளற
நிமிர்ந்துகூ டத்தணுகி

காண்தொறும் துரியவெளி தனையும் கவர்ந்துமேல்
காணுறும தீதவெளியும்
காணாது காணுமம் முத்திநிலை தன்னையே
காட்டுமொரு மூலகுருவாய்

ஈண்டமர்ந் தருள்சுத்த வீரனொரு பாவனை
எனும்மூல ஞானவனலால்
இன்புடன் மதிமண்ட லந்தாக்கி யின்பமுதம்
ஏற்பது விலக்கியுள்ளே

ஆண்டவரு ளுடையமையால் தாண்டவ னழைப்பனுனை
அம்புலீ யாடவாவே
அரியவட லூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (5)

(5) அழைப்பன் - காலவழுவமைதி.

## தண்டம்

374 நீறுபட மலவிரு ளொதுக்கி யருள் தாவரிய
நிமலகுரு வாகி யென்னுள்
நின்றுமுக் குணமவை யொழித்தவைக் காதார
நேர்ந்துறு வியக்கமதனைக்

கூறுபட் டறவொழித் தங்கன மெழுந்தரிய
கூடத்த னைக்குப்தமாய்க்
கொண்டெழுந் துறுமாயை வெந்தறு படம்போல்
குழைந்துற வொழித்தருவமாய்

வேறுபடு தனுமற வொழித்துசுப் பிரமமாய்
வீற்றிருந் திடவருள்செயும்
வித்தகன் தானுனே யொழிப்பதரி தோவினைகொள்
வீங்குமயல் கொண்ட வுயிர்கள்

ஆறுதத் துவசட மகற்றியரு ளப்பனுடன்
அம்புலீ யாடவாவே
அரியவட லூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (6)

(6) நீறுபட - சாம்பராக ; முக்குணம் - சத்துவம், இராசசம், தாமதம் என்பன. வியக்தம் - புலன்கட்கு விஷயமாவது.

375 தெருளோங்கு தெண்ணில வெறிக்கும் முழு மேனிகொடு
தேர்ந்துலவு மொருமகனெனச்
சென்றுறு செருக்குடையை யுனசெருக் குடைய வுயர்
செம்மலரு ளமுத மகலாப்

பொருளருள் மதவெள்ள மொழுகிய பெருங் கருணை
போகாத பொருகளிறெனும்
புண்ணிய விராமலிங் கத்தலைவனுட் சினம்
பொங்கிப் பொழிந்துற வெழீஇப்

பருகிலொரு கவளமாய்ப் பாங்காய் முடிந்திடுவை
பார்த்திலை கொலைய னருளாம்
பார்வைக் கொதுங்கிமெல் லென வெழுந் துலவியுறு
பண்பிலாத் திருடன் நீயென்

றருளமுத முண்டவ னறிந்தானின் றுதலால்
அம்புலீ யாடவாவே
அரியவட லூரருள் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (7)

(7) ஒருமகன் - ஒப்பற்ற மகன் ; தேவர்க்கு அமுதங் கொடுத்தல் ஓஷதிகட்கு இறைவனாதல், சிவனின் முடியில் விளங்குதல் முதலிய சிறப்புக்கள் களிறெனும் இராமலிங்கம் என்ற உருவகத்திற்கேற்ப கவளம் என்றார்.

**வேறு—தானம்.**

376 குழக னகண்ட சிவானு பவந்தரு
கோதி லருட்குருவாம்
கொற்றவன் நற்றவ முற்றிட வோங்கும்
குருவரு ளுருவாகிப்

பழநிகர் சிவகதி யுற்றவ னருளால்
பார்த்தருள் நீர்பாய்ச்சிப்
பண்புறு மனவயல் தன்னி லருட்சிவ
பதமுறு வித்திடவே

அழகுற நின்று வளர்ந்து விளைந்தருள்
அமுத வொழுக்கதனை
அங்ஙனம் நின்று புசித்தரு ளன்பர்க்
கான் வருட் சிவமாம்

மழகளி றுெத்திடு பவனோ டாடிட
வாவம் புலிவாவே
மழலை யருட்பிர காசன தருகே
வாவம் புலிவாவே. (8)

(8) அருள் நீர்பாய்ச்சி, மன்மாகிய வயலில் சிவபதமாகிய வித்திட்டு அருளமுதமாகிய விளைவை அன்பர்கட்கெல்லாமருளும் இராமலிங்கன் என்ற உருவக நயத்தைக் காண்க.

377 சிந்தனை நைந்து கசிந்திடு வோர்க்கருள்
செய்பவன் திருவகலாச்
செம்பொருள் சற்குரு வனுபவ மதனில்
துவிதாத் வைதநிலை

தந்திடு வதுபய னென்றருள் பவனெனைத்
தானுக் குறுபவன் நம்
தற்பர சிற்பர தகரா காயம்
தானது வென்பது மோர்

சொந்த மெனப்படு முபதே சப்பொருள்
சொல்லிப் பணிவித் தெனச்
சொல்வழு பொருள்வழு வென்பது முழுதும்
சோர்வடை வுற வாங்கே

வந்தான் கொண்டருள் பவனுட னாடிட
வாவம் புலிவாவே
மழலை யருட்பிர காசன தருகே
வாவம் புலிவாவே. (9)

(9) ——————————.

378 மோனம தாகி முளைத்தெழு முதலாய்
முன்பின் மலைவறவே
மூண்டெழு துயரற வாங்கெழு பவனெம்
முனிவு தொலைத்தருளி

ஊனம தாகு முடற் சுமை யாவும்
ஒழித்தரு ளோங்குறவே
உண்மலம் முழுது மகற்றி யெனக்கருள்
உத்தமன் முத்தி யெனும்

தூணது வாமென நாணற நின்று
தனித்திட வருள்பவ னெம்
தண்ணரு ளாம்பர மானத யாபர
சாமி யெனத் தலையால்

வானவர் தொழுதெழு பவனுட னுடிட
வாவம் புலி வாவே
மழலை யருட்பிர காசன தருகே
வாவம் புலி வாவே. (10)

(10) முனிவு - வருத்தம்.

## சிற்றில் பருவம்

379 கல்லார் தமக்கும் கற்றவர்க்கும்
களிப்பை யருளும் களிப்பெனுமோர்
கருணைப் பாட்டும் கற்பூரம்
மணக்கு முடலில் கலந் தெனுமோர்

சொல்லார் கவியும் சொலச் சொலவுள்
இனிக்கு மினிப்புக் கொருகவி நீ
சொல்லி முடித்த தனித்தனி முக்
கனியும் போதும் சுயகதிக்கு

வல்லார் மதிக்கும் மணவாளா
வடலூர்க் கரசே வழுத்துபவர்
வாழ வருள்செய் திருமழியா
வாழ்வே யெனக்கும் வாழ் வருளும்

செல்வா ஞான சிகாமணியே
சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே. (1)

(1) கல்லார்................பாட்டு - திருவருட்பா 577-ம் பக்கத்தில் காண்க.

380 கொல்லா விரதங் கொண்ட வர்க்கும்
குணமாம் மேரு வாகியருள்
குழகா வருள்நோக் கதனாலே
குறிக்கும் பொருள் நல் துரியபதம்

வல்ல வருட்பா வொன்றும்மே
வாழ்த்து மடிய ருட் புகுந்து
வழங்குங் கதிக்கு மணி போலும்
வள்ளா லுனது மலரடி யென

பொல்லா முடியின் மீதேற்றிப்
பொல்லாச் சிறியேன் புன்மலங்கள்
போக விடைதந் தருள் செய்யுமென்
பொல்லா மணியே புலைப் பிறவி

செல்ல வேண்டு மவர்க்கருள்வாய
சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(2) கதி - மோட்சம் ; சத்தியவான் - “சத்தியவான் வார்த்தையிதுதானுரைத்தே கண்டாய்.........”என்ற பாட்டு ஆருந்திருமுறை 379-ம் பக்கம் பார்க்க.

381 அம்மை யப்ப ஞருமெங்கள்
அரிய பெருமான் தோன்றி வளர்
அருமை யகலாச் சிவஞான
அருட்பா லமுதம் தரவுண்டார்

தம்மை யுணர்ந்த வனுபவத்தால்
தயங்கு மருளால் நீ யுரைத்த
தாயா மருட்பா நூலதிலே
தான்நீ யுரைத்த சத்தியவான்

வெம்மை யகல் மெய்க் கவியொன்றை
விளம்பிற் றம்முள் விளக்கமுறும்
வேதப் பொருளின் முடிபுணர்ந்து
வேண்டும் பெரிய ருட்களிப்பர்

செம்மை யவரால் புகழவரும்
சிறுவா சிற்றில் சிதையேலே
சீராம் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(3) ————————

382 வாட்ட மோடு சிறியனெனும்
வள்ளல் கவிக்குள் வளரருள்தேன்
வழுத்து மடியர் உளஞ் சுரந்து
வழிந்து திரண்டு வாழ்த்துபவர்

தேட்ட மொழித்துத் திகைப் பொழித்துத்
தினமு மாறு வின்ப வெள்ளம்
தேக்கித் திளைத்தங் கொழுகு மருள்
தெய்வப் பொருள்தான் என்றன் மனக்

கோட்ட மொழிக்குங் குணமளிக்கும்
　　குறையாப் பேரின் பளிக்குமது
குறித்த குறிப்பின் வழிநின்ற
　　குணமாம் மேரு வனையபொருள்

திட்டு மறிஞ ருளந்தேடும்
　　தேவே சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
　　சிறியேம் சிற்றில் சிதையேலே. (4)

(4) ' வாட்டமோடு சிறியன் '].—இப்பாட்டு திருவருட்பா 700-ம் பக்கத்தில் காணக. கோட்டம் – குற்றம்.

383 குறிகள் குணங்கள் கடந்ததனிக்
　　கூத்த னுருநல் லைந்தெழுத்தாய்க்
குறிப்ப தொருவா சகமதனுள்
　　கூடும் பொருள்தான் வாச்சியமென்

றறிய உணர்த்து மநுபவத்தின்
　　அருமை யகலா வதீதநிலை
ஆளும் பொருள்தா னரசாட்சி
　　ஆத லறிந்திங் கெமக்கருள் நீ

செறிந்த வுயிர்தா னிறந்தபினும்
　　திரும்ப வெழுப்ப வருட் சோதித்
தெய்வ வழியா லாகுமெனத்
　　தெரிக்கு முண்மைத் திருப்பாட்டே

சிறியேன் றனக்கும் சாட்சியது
　　தெரியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
　　சிறியேம் சிற்றில் சிதையேலே. (5)

(5) மசறநத.......................பாட்டு :— செத்தாரையெல்லாம்..........அருட் பெருஞ்சோதியதனுன் முடியுந் தெருட் பெருஞ் சத்தியமிதே. என்ற பாட்டு.

384 கரண வண்டம் புலனண்டங்
　　காணும் பஞ்ச பூதமுதல்
காணு மாத்ம தத்வமறுக்
　　கால தத்வம் கருவுற்று

மரண மறியா தெழுஞ்சுத்த
　　வித்தை முதலாய் மருவுமண்டம்
மன்னும் விந்து முதல் நான்காய்
　　மருவு மண்டம் வளர்ந் தோங்கி

இரண முதலா யுறுபிண்டம்
    ஏற்ற பகிரண் டங்களுமே
ஏற்ற மூலப் பகுதிகொடு
    இயற்று மெந்தாய் மறை நான்கின்

சிரங்கொண் டமரும் செல்வமே
    சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
    சிறியேம் சிற்றில் சிதையேலே. (6)

(6) ஆத்ம தத்துவம் 24 முன் கூறியது காண்க.

385 அகரந் தானேம் பாற்குமுதல்
    ஆகி யுயிரா யமைந்துறுமவ்
ஆற்ற லுடைமை போன்றமரும்
    அப்பா வரசே வருளுதய

தகர வித்தை ஆகுமது
    தானுங் கதிதா னுகுமுனே
தானு யுறுவோர் தாமறிவார்
    தானல்லாத நானறிந்து

பகரப் படுமோர் பசு ஞானம்
    பாச ஞானம் பதி ஞானம்
பரந்த மூன்றுள் பதிஞானம்
    பாங்கா யுணரே ணகலமுறும்

செகங்கண் டுணரா மணம் புணர்ந்தாய்
    சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
    சிறியேம் சிற்றில் சிதையேலே (7)

(7) அகரம்............அமைந்துறும் – 'ஆருந்திருமுறை வசனப் பகுதி 108, 109-ம் பக்கங்களில் காண்க. தகரவித்தை – இறைவனைத் தகராகாசத்தில் வைத்து தியானஞ் செய்யும் முறையை உணர்த்தும் வித்தை. பசு – ஆன்மா, பதி – கடவுள்.

386 தப்பி லதுநீ யாமென்று
    தனித்து மறைகள் கூறுமருள்
தானய் விளங்குஞ் சிவனே நீ
    ஆனு யென்னுஞ் சைவமது

ஒப்பில் சைவஞ் சிவத்தோடும்
    உறுசம் பந்த மென வுரைத்து
ஓங்குஞ் சைவ மத்துவிதம்
    உயர்வே தாந்தப் பொருட்கூறென்

றிப்பார் தனில்நின் றியம்பும் வள்ளல்
இனிய சுருதிக் கெதிரிலே யென்
றெடுத் தென் போல்வார்க் கியம்புமருள்
எந்தா யின்ப வுருவாகும்

செப்புங் கல்வி ஞானமிலாச்
சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே. (8)

387 உயர்வில் சனனம் கருப்பைதனில்
உறைதல் மரணம் மது நீங்கல்
ஒழியா நரக மாயாசம்
உயர்வாம் சொர்க்கம் நாயாசம்

மயக்கும் மலமே மறைக்குமொரு
மாயை விளக்கும் மயலகலா
மாளாக் கன்மம் விகாரமது
மருளச் செய்யும் மாண்பதனால்

தயங்கு மான்மா சனன மொடு
மரண மடையும் தரமகன்று
தானாய் விளங்கு மநுபூதி
தானென் றுரைக்கும் மறைஞானச்

செயங்கொள் வள்ள லுரைமெயெனும்
செல்வா சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே.

388 அருளாம் வெளியின் வடிவாகும்
ஆதி சிகர வாநந்த
அரிய மவுனந் தனிலாகும்
அதுவே வுண்மை என வுரைத்துக்

கருவி யறுக்கு முருத்திரனே
காணும் சாகாத் தலை யரிய
கண்ணுள் மணிமா யேசுரனே
கருதற் கரிய வேகாக்கால்

மருவு மரிய சதாசிவமே
மண்ணுள் போகாப் புனலன்றி
மாண்ட வுப்பின் வகைபேத
வழியன் றெனநீ உரைத்து மனச்

செருக்கை யகற்றி யருள்வாய் நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே. (10)

(10) சாகாத்தலை, வேகாக்கால், போகாப் புனல், என்ற இதன் வரலாற்றை ஆறுந் திருமுறை 16-ம் பக்கத்தில் கண்டு தெளிக.

## சிறுபறைப் பருவம்

389 அம்மையருள் முலையமுத முண்டசம் பந்தர் போல்
அய்யநின் தாயின் முலையுண்
டங்ஙனம் வளர்ந்தநின் னருண்மேனி யுள்ளே
அமுத வருள் ஞானமதனால்

வெம்மைவளர் மூலவனல் வேதனை யகன்றுலகம்
வேண்டாத ஞானகுருவே
வேந்தேயென் னப்பாநல் வடலூ ரிருந்து நீ
விளையாடு மேன்மை யதுதான்

வெம்பவ மிலாக்குரு தருஞ் சோற்றைச் சின்னம்மை
வேண்டியுட் கொண்டதிறனே
வேண்டுமிவ் வுலகமதில் மோனகுரு வாகும் நீ
விமலகதி யருள்வை கண்டாய்

செம்மைவட லூரருட் பிரகாச வள்ளலே
சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கி யருளே. (1)

(1) வெம்பவ..............ஆகும். சின்னம்மையார் சிவயோகியாரொருவர்க்கு அமுதிட அவர் திருநீறளிக்க அதன் காரணத்தால் இவர் உதித்தார்.

390 பிச்சுலகம் மெச்சப் பிதற்றுகின் றேனேனும்
பெருமைகொள் விருத்த மதனில்
போராத வாந்த நித்திரை செய்யுந்திறம்
பேசுமவ் வுண்மை யறியேன்

நச்சுவிழி மாதரொடு கூடியெந் நாளுமே
நாடித் துயின்ற துயிலும்
நாய்க்குமொரு பேய்க்குமுள ததனையெந் நாளுமே
நாடிக் களித்து நாளும்

இச்சிக்கு மென்மனத் தாசைதனை நீக்கியே
எளியேன் தனக்கருள் செயாய்
என்செய்கே னெந்தைநின் னருட்பாவி லொன்றினை
இயம்பிலென் நெஞ்ச முருகும்

செச்சைமலர் சூடியருள் நச்சுமறு பவமுடையை
    சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவள யற்புதச் சோதிநீ
    சிறுபறை முழக்கி யருளே

(2) பிதற்றுகின்றேனென்றதற்கேற்ப பிச்சுலகமென்றார், பிச்சு - பைத்தியம். நஞ்சு - நச்சு என ஆயது. செச்சை - வெட்சி.

391 சத்துசித் தாநந்த வநுபவச் சோதியருள்
    சரிதைநிலை நான்கு முதலாய்
சார்ந்தநிலை நந்நான்கு நானறிந் தேனெனும்
    சாந்த வநு பவ வருட்பா

சத்தறிகி லாவெமை யுருக்கு மவ் வுண்மைதனை
    சாமிநீ யறியாய் கொலோ
சந்நிதி தனிற்சென்று நான்பெற்ற பேறதனைச்
    சாமியறி வாரடி யெனும்

சித்திதரு நின்பாவின் நிலைதனை நினைந்துருகிச்
    சின்மயா நந்த நிலையைச்
சேர்வதெந் நாளரிய சாமியரு ளாய் கொல்நீ
    சித்தநிலை முழுது மருளும்

சித்தாந்த வேதாந்த சமரசப் பொருளே நீ
    சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
    சிறுபறை முழக்கி யருளே (3)

(3) சரிதை நிலை......அறிந்தேன் :—முன் பிள்ளைத் தமிழ்க்கொத்து......ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. "நான்........அறிவாரடி". ஆம் பக்கம் திரு வருட்பா காண்க.

392 சுத்தசன் மார்க்க மெச் சமயசன் மார்க்கமொடு
    சோர்வில்மத சன்மார்க்கமும்
சொற்பொருள் விடுத்தோங்கி நிற்கு மரு ளநுபவச்
    சொற்பிரகா சத்தலைவனே

அத்தனரு ளாலேம சித்தியுடல் சித்தியுடன்
    அழியா திருக்க வருளும்
அருமையக லாமையுறு சுத்தசன் மார்க்கனே
    அப்பனே யருமருந்தே

வித்துமத சன்மார்க்க மாற உட்டாமே
    விளைந்தமத மளவில் கோடி
வேண்டாது மேலுயர்ந் துறுபொருள் விளக்குமொரு
    வேதமுடி வான பொருளே

சித்தி யருள் முத்திநிலை நன்றருள்செய் செல்வமே
சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதி நீ
சிறுபறை முழக்கி யருளே (4)

(4) அத்தன் - சிவபிரான் "சுத்தசன்......மார்க்கனே" ஆறறிவு படைத்த மனிதன் தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக்கொண்டு எக்காலத்தும் எவ்விடத்தும் எத்ததுணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப்பெற்று வாழ்தல் வேண்டும் என்பது. அதை எப்படிப் பெற முடியுமெனில் வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது. எல்லாமுடைய கடவுளது திருவருள் சுதந்தரம் ஒன்றாலேயே பெறுதல் கூடும். அத்திருவருள் சுதந்தரம் ஜீவனுக்குள்ள மூன்றான தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் ஆகியவைகளை விட்டொழித்தாமல்லாது சித்திக்காது. மற்றும் சுத்த சன் மார்க்க சாதனையான ஜீவகாருண்யம் என்றதைக் கடைப்பிடிக்கவேண்டும்.

393 புகல் கர்ம்ம சித்திசா காக்கல்வி அணிமாதி
புகழ்யோக சித்தி யகலாப்
புனிதமுறு மெய்ஞ்ஞான சித்தியுய ரகலாத
புவியுள் புதைத்த பிணமிச்

செகமீ தெழுப்புமச் சுகஞான சித்தியின்
சீர்மைபன் னிருவாண்டமே
சேர்ந்தமுத லிருநூற்றே டெட்டாண்டி லாமெனச்
செப்பியருள் ஞானசித்தி

சுகமுறக் கொண்டிரண் டரை கடிகை யளவிட்டுச்
சுகமா யிருந்த குரு நீ
சொல்லுமா சித்திக ளந்தமுஞ் செய்யாது
சுகியா யிருந்த வுளவு

சிகரமலை வாழ் சித்தர் முனிவரறி வார்கள்நீ
சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கி யருளே (5)

(5) சாலைக்கல்வி —ஆறுந்திருமுறை 17 ஆம் பக்கம் காண்க.

394 நெற்றிக்கு நேர்நீண்ட புருவந் தனில்கொண்ட
நிமலஞா னக்கண்ணையே
நேராய் திறக்கப் பெறில்புவிகள் யாவுமே
நேர்நிற்கு மன்றி யந்த

நற்றவ முறும் பெரியர் தயவோடு பார்க்கிலோ
நாசமுற் றிடு பிணங்கள்
நலியா தெழுந்துயிர்கள் பெற்றெழுந் துறுமென்று
நாடிப் புகன்று பின்னும்

சற்றே சினங்கொள்ளி லுயிர் நாசமாகுமச்
சக்தியர்கள் கண்ணுக்குமே யருளான
சார்ந்தகத வும்பூட்டு முளதததனை யருளான
தாழ்வின்நல் திறவுகோலால்

செற்றே திறந்திடுதல் வேண்டுமென் றருளியநீ
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவளர் ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கி யருளே (6)

(6) ஞானக்கண் - சிவபிரான் நெற்றியிலுள்ள திருக் கண் ; முன்பு காண்க.

395 முழுமல முறப்பெறுவர் மூடப் பசுக்கள்மலம்
மூன்றுபங் குடையவர் சீவர்
முதிருமுய ராதமமல மொருபங் குடைத்தாய்
முடிந்துமும் மல மற்றதாய்ப்

பழுதுருச் சிவமொன் றெனக்கூறிப் பரமார்த்த
பரஞான வொளி சபையதில்
பண்புறு மொளிக்கு மொளியாம் தெய்வ வொளியாகி
பாங்கான நடமதாகி

ஒழுகா வெளிக்குள் வெறு வெளியா யுயர்ந்தோங்கி
ஒருசச்சி தாநந்த நல்
ஓங்கார வடிவாகி சிவனீச் சுரனுகி
ஓங்குமறு பூதிதன்னை

செழுமையுற வோதிய விராமலிங் கக்குருநீ
சிறுபறை முழக்கி யருளே
சிற்சொருப மாகிவளர் ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கி யருளே (7)

**வேறு**

396 தரைமுதல் நாதம தீறுக் காணுதல்
தான்றிய மந்தாளும்
தானது நீங்குறல் நியம மரும் பொருள்
தனையறி வதுஞானம்

வரையுறு மாதன மருள்வளர் ஞானம்
வளர்ந்துறு தரிசனமே
வளமுறு ப்ராண யாமம் தண்ணருள்
வாய்ந்துறு பரைநோக்கம்

புரையறு ப்ரத்யா காரம் பொலிவுறு
போக்கக்று பரையோகம்
புலனுறு தாரணை யப்பரை நீக்கம்
புகழ்த்தியா னமதாகும்

குரையில் சமாதியவ் வின்பம தாமெனக்
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூ ரருட்பிர காசநீ
கொட்டுக சிறுபறையே

(8) பரைஞானம், பரையோகம்—முன் பிள்ளைத்தமிழ்க் கொத்து 657-ஆம் குறிப்பில் காண்க.

397 திருவளர் ஞானப் பிள்ளைமு தற்பொருள்
தேசுறு நால்வருமே
தீதக லொருமல மிருமலம் மும்மலம்
தெளிவுறு மலநான்கற்

றருவா யுருவா யருவுரு வாங்கதி
அழகக லாதுறவே
அன்புடன் பெற்றவ ராதலி லிங்ஙனம்
அவர்பின் னவராகும்

ஒருமை பெறும் பொருள் தேறுதி யென்றருள்
உயர்ஞா னக்குறியின்
உயர்வறி யாவுல கம்பே யென்பதும்
உண்மைகொ லென்றருள்நீ

குருவளர் ஞான்சி காமணி யருள்மணி
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூ ரருட்பிர காசநீ
கொட்டுக சிறு பறையே

(9) ஞானப்பிள்ளை—திருஞானசம்பந்தர்.

398 கலைவளர் ஞாள முறும்பெரரு ளாம் சிற்
ககனவே ளிப்பொருளைக்
காணு துலகமெ லாம்போ யுழலும்
கற்பனை யாகுறுமிவ்

அலையுறு மன்முள் நெகிழ்தலு மாகிநன்
காகும் பொருள்பத்தி
ஆருவன்பஃ தாத்ம நெகிழ்ச்சிகொள்
அறிஞ ரவர்க்குளொளி

வலையு ளகப்படும் வள்ள லரும் பொருள்
வாசக வாச்சியமாய்
வாழ்பொரு ளேழ்நிலை மாட மிருந்ததில்
வளரதி சயமறிவாய்

கொலைபுரி யாவட லூரி லிருந்தநீ
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூ ரருட்பிர காசநீ
கொட்டுக சிறுபறையே. (10)

## சிறுதேர்ப் பருவம்

399 தூலவுடல் பிண்டாண்ட பகிரண்ட முழுதுமே
தூக்கிச் செயுந் தெய்வநல்
தொழிலைந்தி னுல்பாச மல பந்த மறவே
தொலைத் தருள்செய் தூயஞான

மூலமெனு மொருபொருள் திருவருட் பிரகாச
மோனகுரு வானமுதலே
மூதறிஞ ருள்ளின்ப வாநந்த வெள்ளம்
முதிர்ந்தோங்க வங்ஙன முறாஉம்

ஆலமொத் துறுமூல பந்தங் கழற்றி யருள்
அமுதகுண சாந்தமகலா
அமல வத் துவிதமுய ராநந்த வநுபவ
அருட்சோதி யானகுருவே

சீலமுறு வேதாந்த நாதாந்த போதனே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்பிரகா சத்தலைவ
சிறுதே ருருட்டியருளே. (1)

(1) உறாஉம் - இன்னிசையளபெடை.

400 தங்குமுய ரகலாத வுலகரத மதனிலே
தாங்குமரு ளாநந்தமாம்
தண்ணருள் சச்சிதா நந்தவுரு வாகும்நீ
தண்மறைப் பரிபூட்டியே

அங்ஙனம் சாந்தியா தீதகலை யயனுல்
அடுத்தூர்ந் துறச் செய்துநீ இ
ஆதித்த வருள்ஞான மண்டலந் தனையாழி
ஆக்கிப்பொன் சோதிமலையைப்

பொங்கறிவெ னுஞ்சேட ஞல்வளைத் தச்சேடன்
புந்திதனு ளறிதுயிலு(ம்)மால்
புண்ணியனை ஞான வம் பாக்கி யருளிரதம்
பொருந்தி நகை ஞானவனலால்

சிங்கமே சீடர்முப் புரமுட லெரித்தருள்வை
சிறுதே ருருட்டியருளே
செம்மைவளர் வடலூ ரருட்பிரகா சத்தவை
சிறுதே ருருட்டியருளே. (2)

(2) புந்தி - அறிவு ; ஈண்டு திரிபுரமெரித்த சிவனுக்கொப்பிட்டு இராமலிங்கரைக்கூறிய திறமுணர்க.

401 அப்பன் வரு தருணமிஃ தெனுமருட் பாவதனில்
அடியில் குறித்த பொருள்தான்
ஆர்க்குமரி தாகுமரி பிரமர் முத லியவறிஞர்
அகமகிழ்ந் திடவங்ஙனே

செப்புமுறு திருவருட் குருகளிப் பாலிங்குச்
செத்தவர்கள் தாம்எழுதலே
திண்ணமுணர் மனனேயெ னப்புகன் றிட்டதனைத்
திண்மையென் றுணர்வதெந்நாள்

இப்புவியி லெந்தையா மெங்கள்குரு சாமியருள்
இன்னருட் பாவிலொன்றில்
எல்லா மறியவே யென்சாமி யெனதுதுரை
என்றதில் குறித்தபடியே

செப்புநா மிகையிரண் டரையில்வெளி யாக்குநீ
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்பிரகா சத்தவை
சிறுதே ருருட்டியருளே. (3)

(3) திருவருட் . . . . திண்ணம் . . . . . ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

402 செத்தார்க ளெழுவரெனக் கைத்தாளம் போடெனும்
திருஅருட் பாவொன்றுமே
செகமுழுது மேபரவி செயமெனும் பண்பதனைத்
தேர்ந்திடாச் சிறியர் தமையும்

பெத்தமுறு மலவுட லழித்திட் டுறும் சிறுமை
பேராத நரகமுத்தி
பேர்த்துமுயி ருடலாதி தந்தவர்க் காமரிய
பேரின்ப முதவுமரசே

புத்தமுதம் மொழுகுமதி காரமல சுத்தமாய்ப்
போந்தவருள் ஞானமணியே
பொய்ம்மையுறு மிப்புவியில் பொய்யுட லெடுத்தே
பொருந்திவாழ் பவர்கள் தமையே

சித்துருவ மாக்கி யருள் சிவஞான வள்ளலே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூர் ரருட்பிரகா சத்தலைவ
சிறுதே ருருட்டியருளே. (4)

(4) பெத்தம் - கட்டு.

403 கலைவல்ல கருணீக குலமுழுழ்ந் துறவந்து
கருணைப்பிர காசமுறுநல்
கலையோகப் பிராணலய சர்ம்மத்தை நாட்டாது
காண்புறு நிராசை யொன்றை

மலைவற வுணர்த்தியருள் மகராச சிவயோக
மாண்புறு மிராமலிங்க
மாதேவ தேவன்நீ மாளாத தபுதுவ
மலக்கூட்டை மாளுறச் செய்

தலைவற விளக்குமரு ளைந்தொழி லியற்றியது
அதுவாதல் முத்தியெனு நன்
கானயொரு ளுபதேச மங்ஙன முரைத்தாசை
அதனைப் பறித்துமதனூர்

சிலைவில் கரும்பொடித் துறுநா ணறுத்தவா
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்பிரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (5)

(5) தபு - அழியும்.

404 கொந்தார் மலர்க்குழ லளிக்குழாம் குழறிமது
கோத்துண்டு தனைமறந்த
கொள்கைபோ லாநந்த முறுமருள் தேனுடு
குவலயா நந்தமாகும்

பந்தமறு மெய்ஞ்ஞான வாநந்த முடையாய
பகர்ந்திடி லரிக்கு மரிதாம்
பார்கொணு வரியபர சாக்கிரங் கருணைவளர்
பரமசொப் பனமுதலதாம்

நந்தாத குருதுரிய வறுபவப் பொருளேயே
நாடியுறை வேதாந்தமே
நாடொறு து றுமகா வறுபவ நடுப்பொருளே
நான்பெறுவ தெங்ஙனரசே

இந்தா வருட்சோதி மலைவீதி தன்னிலே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்பிரகாசத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (6)

(6) அளி - வண்டு.

## வேறு

405 நானற நீநா னென்றரு ளநுபவ
ஞான மொழிக்குருநீ
நன்குய ரறிவநீ யானுத மாநம்
சிவமா நன்கதனைத்

தானறி வேதப் பொருள்மா வாக்யத்
தன்மை யுணர்த்தி யருள்
தானே யதுவா யதுதா னாகும்
தன்மை யுருச் சத்தின்

மானருள் விந்துறு மோகினி யெனுமும்
மாயை யகற்றி யருள்
மன்னு மலைப்பொருள் மாருக் கதிதரு
மணியென் கண்மணியே

ஊனற வேயரு ளுண்மைப் பொருளே
உருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்திபு ரத்த
உருட்டுக சிறுதேரே. (7)

(7) பொருளே - பொருளினையுடையாய்.

406 முப்பா மும்பா மென்றருள் மூலர்
முடிந்த பொருட்குளுறும்
மூதறி யுடையவர் நாடுறு மமல
முதிர்ந்திடு சடகோபர்

அப்பா லும்பா மென்று மறிவினில்
அங்கறி பொருளதனை
ஆரறி வாரது தானறியுமது
தானே தானதுவாம்

தப்பா வநுபவ சாதக சாத்திய
சத்ய முறுங்கதியைத்
தந்தருள் சமரச வேதசன் மார்க்க
சமர்த்த சதாநந்த

ஒப்புயர் வில்லா வொருவ வென்னப்ப
உருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்திபு ரத்த
உருட்டுக சிறுதேரே. (8)

407 கொல்லா விரதக் குலநல் குலமெனக்
கூறும் பெரியவர்தம்
குருமொழி யருள்மொழி யென்னுள் கொண்டே
கொலைசெய் வார்தமையும்

கொல்லுதல் பாவம் பாழ்த்த வினைக்குள்
கோப்புறு தோல்முகமே
துரிசுற நோக்குதல் பாவம் பாவம்
தூய்மையி லாவந்தப்

பொல்லாப் பாவிக ளைத்தொட லுந்துயர்
போகாப் பெரும்பாவம்
புலைகொலை செய்பவ னிடமுண் பவனும்
புலைகொலை யுடையவனென்

றெல்கலி லருள்மொழி யோதும் பிள்ளை
உருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்தி புரத்த
உருடடுக இிறுதேரே (9)

(9) பெரியவர் - திருவள்ளுவர் ; இப்பாட்டில் கண்டவைகளை ஆருந்திருமுறை பக்கம் 1 முதல் 48 பக்கம் வரை காண்க.

408 வேத முதல் பொரு ளாறந் தம்மதில்
மீதா னம்மதுவே
வேறு காத விதிப்பொரு ளுண்மை
விலாச மறைப்பொருள்நல்

பேதமி லாபபொருள் ஞானவி நோதப்
பீடுறு சிவயோகம்
பேசறு மோனப் பெருவெளி யாகும்
பேராச் சிவபோகம்

ஏதமி லாச்சிவ தரிசன மாத்மமாய்
இலிங்க சிதம்பரமாய்
எங்கும் பொங்கி வழிந்து புரண்டு
எழுந்துய ரெங்தருவென்

ரூத வளர்ந்த வருட்பிரகாச
உருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்திபு ரத்த
உருட்டுக சிறுதேரே. (10)

(10) சிதம்பரம் இராமலிங்கவென மாறுக. ஆநந்தம் - நாதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், யோகாந்தம், காலாந்தம், வேதாந்தம் என்பன.

---

இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

# யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ்

## சப்பாணிப் பருவம்

409 விரைசெறி மலர்பொலி இரசத கிரி யாய்
வெற்றி மிகுத்தோனே
விரிசிலை நதியாய் அடிசையில் வளமுயர்
மிக்க திசைக்கோவே

வரையள இடையாய் பரியுடை யவனே
மத்த கெசத்தோனே
வரிவிழி மடவா ருளமகிழ் வோனே
மல்புய வில்காமா

நிரைமணி யணியிடை யசையுற வொலியெழ
நிறத்து.. .. .. .. .. ..
நிதமிகு ரணமுர சொடுவிசை யமுமதிர்
நீற்ற............கோலம்

குரைகட லெனவரு மழைமுர சுடையவன்
கொட்டுக சப்பாணி
குலதா வடிசையி லரியர குமரா
கொட்டுக சப்பாணி. (5)

(5) இரசதகிரி - மேருமலை ; சிலை நதி . . . . . . . வரி விழி - செவ்வரி படர்ந்த கண்கள் ; செவ்வரி - கண்களுக்குள் படர்ந்திருக்கும் சிவந்த நரம்புக் கோடுகள். மல்புயம் - மல்யுத்தம் செய்யும் வலி மிகுந்த புயம் ; வில் காமா - கரும்பு வில்லையுடைய மன்மதனை யொத்தவா.

## முத்தப் பருவம்

410 ஓசைக் கடலில் திரையேறி
ஒதுங்கிக் கரையில் வலம்புரிசூல்
உகந்தே யுகுத்த வெண்தரளம்
உவப்ப மதிக்க விலையிடலாம்

கோசக் கரட மதமாவின்
கூன்வெண் பிறைக்கோட் டிடைபிறந்த
குளிர்வெண் மணியை விலையிடலாம்
கொங்கார் சோலை வயல்சிறந்த

ஆசைப் பயிர்க்காய்க் குலைச்சாலி
அதில்சேர் தரளம் விலையிடலாம்
அய்யா வுனது வாய்முத்தம்
ஆர்க்கும் மதிக்க விலையில்லைத்

தேசுற் றினிய மழலைமொழித்
    திருவாய் முத்த மருள்வாயே
சிறக்கும் யோக சாத்தயநின்
    திருவாய் முத்த மருள்வாயே. (1)

(1) சூல் - கருப்ப நோய்; கோசக் கரடம் - கோசத்தினுல் விடும் மதம்; கோசம் - குறி; கூன் - வளைவு; கொங்கு - தேன்; தேசு - ஒளி.

411 வர்த்தித் திருக்கும் பெருங்கடலில்
    மணிமுத் தலைபட் டுழன்றமுத்தம்
வானில் பிறந்த முத்தமடர்
    மாசில் பிறந்த முத்தமது

குத்தித் திருக்கும் மதயானைக்
    கோட்டில் மணிமுத் தமர்க்களத்தில்
குருதி தோய்ந்த மணிமுத்தம்
    கோக நகத்தி லுறைமுத்தம்

சுத்தித் திருக்கும வண்டுநகில்
    சுவைத்த பருமுத் தம்மூங்கில்
துளையில் மணிமுத் தனல்கொண்முத்தம்
    துதிகொளு முனது மதிமுகவாய்

தித்தித் திருக்கும் கனியதரத்
    திருவாய் முத்தம் அருள்வாயே
சிறக்கும் யோக சாத்தய நின்
    திருவாய் முத்தம் அருள்வாயே. (2)

(2) வர்த்தித்தல் - அதிகரித்தல்; கோடு - தந்தம்; நகில் கோகநகத்தில் என்று கூட்டி ஸ்தானம் போன்ற தாமரை என்க. கடலில் பிறந்த முத்து அலைபட்டுழன்றது, மேகத்தில் பிறந்தது குற்றம் நிறைந்தது, யானைத்தந்தத்தின் முத்தம் போர்க்களத்தில் சண்டையிடுவதால் இரத்தம் தோய்ந்தது, தாமரையின் முத்தம் வண்டுகள் சுற்றிச்சுவைத்தது, மூங்கில் கணுவில் பிறந்தது நெருப்புகொள்வது என்று குற்றங்கள் கூறி உனது முத்தம் அங்ஙனமுடையது அல்ல. அது தருவாய் என்கிறார் ஆசிரியர்.

412 காதூர் கயற்கண் விலைமடவார்
    காலில் சிலம்பார்ப் பொலிபுலம்பக்
கமலத் தடத்தி லனம்சிலம்பக்
    கன்னற்சா றடுவெம் புகையினமர்

மீதூர் குயில்கள் காரெனவே
    விள்ளா தொடுங்க மயில்கள் சிறை
விரித்துக் கூவி விளையாட
    வேரித் தாளை மலர்க்கணகத்

தாதூர் மலர்செண் பகந்தேடித்
 தருப்பைம் பூகம் கனியரம்பை
தண்தே னொழுகும் சுளைவருக்கை
 தனிலே கவிதா வித்திரியும்

மூதூ ரடிசை வளருமுயர்
 மொய்ம்பா முத்த மருள்வாயே
முனைவர்க் குகந்த சாத்தய்ய
 முதல்வா முத்த மருள்வாயே. (3)

(3) காதூர் கயற்கண் - காது வரை நீண்டிருக்கும் கயல் மீனை யொத்த கண். கார் காலத்தில் மேகந்தோன்றலால் குயில்கள் அடங்குதலும், மயில்கள் தோகை விரித்தாடுதலும் வழக்கம். ஈண்டு புகையினை மேகம் என நினைத்தன குயில்களும் மயில்களும். பைம் பூகத்தரு எனக். பூகம் - பாக்குமரம். வருக்கை - பலா ; கவி - குரங்கு ; முனைவர் - முனிவர்.

413 பாடஞ் சிறந்த வெண்மேனிப்
 பசும் பொன் னுடனே மணிதுலங்கும்
பவளக் கொடியா லிரசதப்பூண்
 பணியா லிலங்கும் மணிமேடை

சூடுஞ் சிகர முடிமீது
 தோகை நடிக்கு மகில்வாசந
தூபங் கமழும் வண்டு நறை
 சுவைத்தே வெறியால் சுழன்றுடும்

சேவடஞ் சிறந்த கயல்மதர்க்கண்
 வியன்சேர் களப முலைமடவார்
வீணை பயிற்று மிசையொலியால்
 விளங்கும் நெடுந்தோ ரணவீதி

மாடஞ் சிறந்த திரு வடிசை
 வரதா முத்த மருள்வாயே
வளரும் யோக சாத்திய நின்
 மணிவாய் முத்த மருள்வாயே. (4)

(4) பாடம் சிறந்த - பதனஞ்செய்து சிறந்த விபூதியால் ; வெண்மேனி என்றார் விபூதி பூசியுள்ளதால், மணி - உருத்திராக்கமணி ; தோகை - மயில் ; அகில் - ஓர் வாசனைப்பொருள் ; நறை - தேன் ; வியன் - பெருமை ; மாடம் - மெத்தை.

414 கத்துந் தரங்க விரிசிலைநீர்
 கரையிற் காவி லிருமருங்கில்
கமழ்பூம் பாளை கமுகடியில்
 கன்னல் வனத்தில் கழைநெருக்கில்

மத்த மாவின் தறியிடத்தில்
வளருஞ் சாலி வயல்வரப்பில்
மருவார் வனசப் பூம்பொகுட்டில்
வளைசேர் குவளை மடுவதனில்

வைத்த வணைக்குள் ளுத்தோளி
வரப்பில் மடையில் மறுகாலில்
வானிற் சிறந்த மழைத்துளியில்
மதித்தார் . . . . . . குளி மந்தநிலா

முத்தந் திகழுந் திருவடிசை
முதல்வா முத்த மருள்வாயே
முனைவர்க் குகந்த சாத்தய்ய
முதல்வா முத்த மருள்வாயே (5)

(5) தரங்கம் - அலை ; சிலை நீர் - ஒலியையுடைய கடல் ; கழை - மூங்கில் ; மத்தமா - மதம் பொருந்திய யானை ; தறி - கட்டுத்தறி ; வளை - சங்கு ; மறுகால் - மதகு ; அணை - மடைபோடுவது ; இப்பாட்டில் முத்துக்கள் ஈனும் பல விடங்களைக் கூறி ஆண்டும் மற்ற சில இடங்களிலும் முத்துக்கள் செறிந்திருப்பதைக் கூறுவதனைக் காண்க.

## வாரனைப் பருவம்

415 பொற்பார் பசும்பொன் மணி யரைஞாண்
பூட்ட வருக விரலாழி
புனைய வருக வுடம்பினில தூள்
போக்க வருக தளர்ந்தநடை

சொற்பார் துதித்த முலைக்குளமு
தூட்ட வருக வொருவசனம்
சொல்ல வருக புதுப்பனிநீர்
சொரிய வருக விணைக்களப

வெற்பார் புயங்க ளசையமடி
மிசையில் இருக்க வருகவஞ்சா
மீறு தொழிய . . . . . .
. . . . . . வருக வரிக்குயில் நேர்

கற்பார் மடவா ரிதையத்துக்
கதிபா வருக வருக வருகவே
கடவுள் யோக சாத்தய்யநீ
கனிவாய் வருக வருகவே. (1)

(1) ஆழி - மோதிரம் ; முலைக்குள் அமுது ஊட்ட என்க. அமுது - பால் ; கடவுள் - தெய்வத்தன்மையுடைய.

416 எண்டலந் தன்னிலே வெகுகாரணப் பிரபல
எந்தைநீ மிகவருகவே
ஏழை யடி யார்தங்கள் பங்கிருந் தவரவர்க்
கிடர்தீர்க்கும் நிதிவருகவே

விண்டலந் தனிலமரர் துதியோது புயல்வருக
வேதநா யகன்வருகவே
மேலான நன்மதுர வாக்கறிந் துயர்வரிசை
மிகவருள்செய் தவன்வருகவே

குண்டலம் திகழ்சந்திர விம்பவா . . . .ணருள்
கூரல . . . . வன் மிக வருகவே
குஞ்சரம் தனிலேறி யஞ்சாதி ரென்றுறுதி
கூறினேன் மிக வருகவே

மண்டலந் தனிலுள்ள சகலசன ரட்சகன்
வாசியான் மிகவருகவே
மிஞ்சுதிகழ் கோபுரஞ் சூழுஞ் சினேந்திரபுரி
மாசாத் தயன் வருகவே. (2)

(2) குஞ்சரம் - யானை ; வாசியான் - அடிசையில் வசிப்பவன் ; மஞ்சு - மேகம் ;

417 அண்டமா மதிகதிரை யிருபுறத் திலுமணிய
தாகத் தரித்துவடவெற்
பதிரவே நடைகள்கொண் டீரிரு மருப்பினால்
அட்டகுல கிரியைமோதி

எண்டிசையில் வேழங்கள் பின்காட்டி யோடவே
எழில்வால் பிடித்துவீசி
இகல்சுரர்கள் மதியமுச லாயுதத் தாலிடித்
தோடவே விரட்டி , . .

மண்டுவா ருதித்வ மனத்திரள் பணைக்கையால்
வ . . . . . . றுண்டு சேடன்
மணிமவுலி யுதிர்வே குண்டெட்டி விசியெதிர்
மழையெனப் பிளிறி யுதவும்

சண்டமா ருதவேக மும்மதவெள் ளானையாய்
தாமரைக் கயல்வருகவே
தருமபுரி காவலா யோகசாத் தய்யநீ
தயவுடன் மிகவருகவே. (3)

(3) வடவெற்பு - மேருமலே ; அட்ட குலகிரி - எட்டு மலைகள் ; முசலாயுதம் - வச்சிராயுதம். பணைக்கை - பருத்த தும்பிக்கை ; மவுலி - கலே ; மணி - மாணிக்கம். " அண்டமாம் . . ஆனையாய் " யானைக்கடைமொழி.

418 இன்பக் கதித்தே வேவருக
இடர்தீர்த் தெமையாள் பவன்வருக
இருள்நீக் கியவர் கோன்வருக
இமையோர் குலத்துக் கிறைவருக

துன்பக் கலிதீர்த் தவன்வருக
சோதி யருள்நிச் சயப்பொருளின்
துணிவோன் வருக மிறையுணரும்
தூயன் வருக வருகவே

வன்பர்க் கிரங்கா தவன்வருக
மாசி லாத மணிவருக
வறுமை . . . . . . தவன்வருக
வாம நெறிகாப் பவன்வருக

அன்பர் . . . ராய புயல் வருக
அறிவில் பெரிய முதல்வருக
ஆதி புரத்தில் வளர்மாசாத்
தய்யன் வருக வருகவே. (4)

(4) மிறை - குற்றம் ; வன்பர் - கொடுமையாளர் ; வாமம் நெறி - வாம மத நெறி ; ஆதிபுரம் அடிசை நகருக்கொருபெயர் போலும்.

419 விண்ணி லமரர் துதிபகரும்
வீரன் வருக வருகவே
வேசை செய்கூ வலில் வீழ்த்தி
மீட்டோய் வருக வருகவே

நண்ணு தீம்பால் பாம்பாக்கும்
நாதன் வருக வருகவே
நவ்வீ வீட்டோன் மனைவிபோறி
லபித்தோய் வருக வருகவே

வண்ணமலர்ச். . . . . . . . . . . . .பு...
வடிவோன் வருக வருகவே
மாங்கா யகலான, . . . . .
வைத்தோன் வருக வருகவே

அணணல் வருகத் தென்னடிசை
அய்யன் வருக வருகவே
அழகு வளரும் யோகசாத்
தய்யன் வருக வருகவே. (5)

(5) கூவல் - குழி ;

## அம்புலிப் பருவம்.

### தானம்

420 முண்டகா சனமூர்த்தி யெண்குணத் தலைமையான்
மூர்த்தியில் செல்வனறிவன்
மூவாத முதல்வனுயர் தாவாத நெறியுதவு
மூடச் சசிரெரிற்றின்முன்

பிண்டிவர் மட்செளிய தொண்டர் நாயகன் நிபன
பீடுயரு மாதிபகவான்
பெம்மான் திகம்பரன் முனிவரன் கயிலையான்
பிஞ்சுமதி புனைவேணியன்

பண்டுமா ரன்பட னுதல்விழி விழித்தவன்
பகர்மாதி னொருபாகனூர்
பங்கன்விடை யேறிவரு திங்கள்முக் குடையுளோன்
பண்ணவ னாதீசுபரன்

அண்டர்நா யகனைநித மர்ச்சனைசெய் மெய்யனுடன்
அம்புலீ யாடவாவே
அடிசையம் பதியில்வளர் யோகசாத் தய்யனுடன்
அம்புலீ யாடவாவே. (1)

(1) முகன்டகாசன மூர்த்தி - தாமரையில் வீற்றிருக்கும் பிரமன்; எண்குணம் - தன் வயத் தனுதல், தூயவுடம்பினனுதல் முதலிய எட்டுக் குணங்கள் (குறள் - 9) ; நின்பீடு என்றூர் சந்திரனை அணிந்ததால் வளரும் கலை குறித்து. பிஞ்சுமதி - பிறைச்சந்திரன் ; மாது - உமாதேவி ; ஆதி - ஈசுபரன் என்க.

### சாமம்

421 மறைவலவ நீயுமொரு மறைவலவ னல்லனது
வயங்கேழ் விமானமுடையோன்
வானிலே நீயுமபி மானமுடை யோனின்ப
வாரியில் முளைத்த சோதி

எறிதிரையி லேமுளைத் தெழுசோதி வடிவுநீ
இகல்மஞ்சு திகழ்மேனியான்
எந்நாளு மஞ்சுபல மூசவே வருதன்மை
இருவரது மொன்றுகலால்

பொறிவிழி யிறுக்கியுயர் முனிவோர்கள் துதியோது
புங்கவன் பிண்டிவாமன்
புகலரிய மூவுலகில் நால்வகைத் தேவரும்
போற்றுமிரு சரணநெடுமால்

அறிவன்நெறி தழைகவரு தேவகுரு நாதனுடன்
அம்புலீ யாடவாவே
அடிசையம் பதியில்வளர் யோகசாத் தய்யனுடன்
அம்புலீ யாடவாவே (2)

| சந்திரன் | யோகசாத்தய்யர். |
|---|---|
| (2) (2) வலி மிகுந்த புட்பகவிமானத்தையுடையவன். | வெற்றிமிக்க தேரினையுடையவன். |
| (3) வானிலே (ஆகாயத்திலே) அபிமானம். (நேசம்) உடையவன். | வானிலே இயங்குதற்கு (யோக சத்தி யால்) நேசமுடையவன். |
| (4) இன்பமாகிய வாரியில் (பாற்கடலில்) தோன்றிய சோதியாவான். | இன்பமாகிய கடலில் தோன்றிய சோதி யாவான் (யோகத்தினால் இன்பம் விளைத்தலை நோக்கி). |
| (5) வீசுகின்ற அலைகள் கொண்ட கடற்கண் தோன்றி எழுகின்ற சோதியாவான். (சந்திரன் தோன்றும்போது கடலில் தோன்றுவது போன்றதால்). | வீசுகின்ற அலைகள் கொண்ட நீர்க் கண் தோன்றி எழுகின்ற சோதியா வான் - யோகத்திறமையான நீரிலும் மிருப்பான். " கந்துமதத்க்கரியை சலமேல் நடக்கலாம், கனல்மேலிருக் கலாம் . . . . . . " என்ற தாயுமானவர் பாட்டினை நோக்குக. |
| (6) மேகம் போன்றுள்ள களங்கம் திகழ் கின்ற உடலையுடையவன். | மேகம்போன்று கருமை விளங்கும் உடலை யுடையவன். |
| (7) எப்போதும் மஞ்சு (மேகங்கள்) பல சூழ இருப்பான். | எந்நாளும் மஞ்சு (ஆபரணம்) பல சூழ இருப்பான். |

பிண்டிவாமன் - மாமரத் தடியிலிருக்கும் அழகுபெற்றவன் (காஞ்சிபுரம் ஏகாம்பர நாதரைக்காண்க) நால் வகைத் தேவர் - யக்ஷர், கந்தருவர், கின்னரர் போன்றவர். கேழ் - நிறம்.

422 தயவுயர்செய் மெய்யர்க்கு மெய்யெனத் தோன்றலார்
தயவிலார் தமையறிந்தே
சந்ததம் தோற்ரு திருந்துவளர் தண்மையார்
தண்மதி குறைந்தநிலவாய்

உயர்மகிமை திகழ்மேனி யோய்விலர்கள் தருகாகி
உலகினில விளங்குமொழியால்
உல்லாச சம்பிரம மிகுந்ததிரு வழகினுல்
ஒக்குமிரு வர்க்குமதனுல்

வியன்மேனி பகர்ந்தமுதல் எண்குணத்......ளி
வேதசிற் பர்சொரூபன்
மீறு மறவாழியன் குளிர்தழில் பிண்டியான்
விரிமலர்த் தாள்பரவியே

அயமேறி வருவென்றி வீரகெம் பீரனுடன்
அம்புலீ யாடவாவே
அடிசையம் பதியில்வளர் யோகசாத் தய்யனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) சந்ததம் - நிதம் ; அறவாழியன் - " அறவாழி யந்தணன் - அரிது " குறள் நோக்குக.

## தானம்

423 இருள்வரவு கண்டுவந் துழலுமதி நீபெற்ற
ஈரெண் கலைப்பிரபலமா
மிதுவும்நிச மிலைமற்று நிலைபெற்ற வன்வளர்ந்
திடமேனி ஞானுதவன்

தெருளுநிறை மதியென்று நாட்பெற்று மென்னநின்
றேகளங் கமலவோ......
தேகவுன் களங்கம் தவிருமென் றுமேதீர
நிறைமதிசேர்..........ர்

பொருள்வடிவு தோணவெப் போது
புனிதனே ணெண்கலைகளும்
போற்றுமன் பாதங்கள் களங்கமற் றுதவியே
புகழ்பெருகு மிகவாழ்வையும்

அருள்புரியும் மகிமைகண் டினிதுகொண்டாடியே
அம்புலீ யாடவாவே
அடிசையம் பதியில்வளர் யோகசாத் தய்யனுடன்
அம்புலீ யாடவாவே (4)

(4) " கண்டு உவந்து " என்க. தோன்ற என்பது தோண வென நின்றது. எண் எண் கலைகள் - 64 கலைகள் இகவாழ்வு - இவ்வுலக வாழ்வு ;

## பேதம்

424 துதிசெய்யு முனதுவெண் முகதரி சனத்தினால்
சோரிமதுக் குவளையலரும்
சோதியிவ னழகுமுக தரிசனத் தினலத்
தொண்டர்பூ விழிமலர்வுறும்

புதியவெண் நிலவுகதி ரொளிர்பிரபை யினனுலனைப்
பூதலமெ லாம்போற்றினோம்
....ல்கீர்த்திவெண் கதிரினல் இவனையே
புவியேழு மேபோற்றினோம்

......வலறக் இருநிதியு முதவுவான்
இரவலரிடம்...........
முன்வந்து தோன்றுவாய் வளர்தண்மை யா.....,
...............முகையால்)

அதிசெயம் நிறைந்ததரு ம . . . ரிக் கதிபனுடன்
அம்புலீ யாடவாவே
அன்பர்க்கு மெய்யான யோகசாத் தய்யனுடன்
அம்புலீ யாடவாவே (5)

(5) மது சொரி குவளை என்க. பூவிழி - தாமரைப்பூப் போன்ற கண்கள் ; பிரபை - ஒளி ;

## சிற்றில் பருவம்.

425 காமே வுயர்சண் பகஞ்சூதம்
கைதை பாரி சாதகம்நற்
கமுக சோகு வலம்புரிநீள்
கனிமா தளைகற் பகவல்லி

பூமே வலரி இருவாட்சி
புனைபூங் குரவம் புன்னாகம்
பொற்பார் நறைமல் லிகைமுல்லை
பொன்னார் கொடிஞ்சி. . . . . . ர்

மாமே வுயர்பொற் புரிசையின்மேல்
மா. . . . . . . . . . . . . . . கு
மகிழ்குங் குமஞ்சவ் வாதுசுண்ணம்
மருவாட்சி. . . . . . மலியும்

தேமே வளைசைத் திருநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே யோக சாத்தய்யா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (1)

(1) சூதம் - மாமரம் ; கைதை - தாழை ; கமுகு - அசோகு என்க. வலம்புரி - நந்தியாவட்டச்செடி ; குரவம் - குருக்கத்திச் செடி ; புன்னாகம் - புன்னைமரம் ; அளைசை நாட்டில் அடிசை நகர் போலும் இவர் ஊர். ஈண்டு பல மரங்களும், செடிகளும் கூறப்பட்டிருத்தல் காண்க.

426 பாரே சிறந்த நெடுஞ்சோலைப்
பண்டு டெறிந்து குதித்துமந்தி
பலவின் கனிமாங் கனிவாழைப்
பழங்கள் சிதற மதுவோட

நேரே யுடைந்த செழுந்தேனும்
நெகிழ்ந்த மலர்க்கா வுறைதேனும்
நெருங்கிக் கலந்தே மழைபொழிய
. . . . . . . . நீர்ப்பாய் மடுப்பெருக்க

காரே சிறந்த மணித்தோகை
க. . . . . . . . . . . களித்தாட வதுகண்டே
கருங்கோ கிலம்பா டக்கேட்டு
. . . . . . . . . . . . கள்களிக்க

ஈரே சிறந்த திருவடிசைச்
செல்வா சிற்றில் சிதையேலே
தேவே யோக சாத்தய்யா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (2)

(2) கோகிலம் - குயில் ; மந்தியுடைத்த முக்கனிகளின் தேனுடனே சோலையில் மலரிலுள்ள தேனும் சேர்ந்து வெள்ளம் பெருக்கியது என்க.

427 மஞ்சுடர் புயவெற் புயர்சீ ருள்ளாய்
வர்த்தனை நற்றருமா
வஞ்சனை யலகைத் தீர் வய்யா
மற்கிருபை யுற்றவனே

அஞ்சன விழிமேற் புயமா னுள்ளாய்
அப்பு விழித்திருமா
தம்பிகை யுயர்முக கனிபொற் சொல்லாலுறை
ய(ற்)புத புட்கலைசேர்

வெஞ்சின வெகுளிக் கடமா வல்லாய்
வெற்றி மிகுத்தோனே
வேம்பன் நிழலில் பெருமா னல்லோன்
வெ . . . . தியவாய்ச்

செஞ்சர ணிணையைப் பணிமால் மெய்யா
சிற்றில் சிதையேலே
செந்தமி ழடிசைப் பதியோ கய்யா
சிற்றில் சிதையேலே. (3)

(3) மைந்து - மஞ்சு எனப்போலியாயது. வஞ்சனையலகை - வஞ்சனையாகிய பேய், உருவகம்; அஞ்சனம் - மை ; வேம்பன் - பாண்டியன்; ஈண்டு சிவபிரான் சுந்தர பாண்டியராய் வந்ததைக் குறித்தது போலும் ;

428 காருங் கடலும் கலிப்பொருபால்
கடிமுழம் முரசி ஞார்ப்பொருபால்
கழனி நடுகைக் குரலொருபால்
கால்வாய்ப் பம்பை யதிரொருபால்

கூரும் சங்கத் தமிழொருபால்
குலவு மறைகூ றொலியொருபால்
கோகநக . . . . டிசையொருபால்
குமிறும் மேளத் தொனியொருபால்

வாரும் வடமும் அணிந்த கொங்கை
மடவா ராடன் த. . . . .
. . . . . . . . . . . .யாழி னிசையொருபால்
மகிமை விளங்கும் மிகுந்தவளம்

சேரு மடிசைத் திருநகராய்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே யோக சாத்தய்யா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (4)

(4) கலிப்பு - மிகுதி ; நடுகை - நாற்று நடுவது ; வார் - கச்சு ; இப்பாட்டில் அடிசை நகரிலுள்ள வளத்தை ஒலி மூலம் கூறியுள்ளது காண்க.

429 அம்பொன் புரிசைக் கொடியாடை
அறிவில் லாரை நீப்பவுயிர்
அறிஞோர் தம்மை மகிழ்ந்தழைப்ப
அடருஞ் சோலைத் தடமனைத்தும்

வம்பிற் பொலிந்த மலர்த்தருக்கள்
மகிழ்ந்து கூர்ந்து முடிகுலுங்க
வாமக மென்றி யாகமெல்லா
மாவிற் குயில்கள் மிகப்பயிற்றக்

ல் கதிரோன் தேர்ப்புரவி
விரைந்து செலும்போ....தலி
விசையால் விலக வெண்மதிதோய்
விளங்கு பிரபைசே ருயர்தூபிச்

செம்பொன் சிகரத் தருமபுரித்
திறலோய் சிற்றில் சிதையேலே
தேவ யோக சாத்தய்யா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (5)

(5) புரிசை - மதில் ; அம்பொன் . . . . . அழைப்பவர் கிருஷ்ணன் தூது—வில்லி பாரதம் காண்க.

முடிகுலுங்கின - தோரண நாட்டினாற்போல. மாவிற் குயில்கள் என்றார் குயில்கள் மாமரத்தில் விரும்பிப் பயில்வதால். பிரபை - ஒளி ; தூபி - ஸ்தூபி ; அடிசைக்குத் தருமபுரி என்றும் பெயர் போனும்.

## சிறுபறைப் பருவம்.

430 வருத்திட்ட தனமாதர் நடநா டகஞ்செய்ய
மகிழ்பஞ்ச வாத்தியங்கள்
வரிசையாய் வெவ்வேறு தொனிகள்மிக வதிரவே
மாற்றலர்கள் தம்மை விம்மி

உருத்தோட்டி வீசிவரு வீரகுஞ் சரமீதில்
உக்கிரமுட னேறிமீறி
உம்பர்புடை சூழவரப் பவனிவந் தடியவர்க்
குண்மைவார நல்குமுரவோய்

கருத்தோட்டி யுண்டென்று நம்புமன் பார்க்குவெங்
கனவுகள் கடும் பெய்வனுக்
கர்மரோ கங்கள்வஞ் சனைபில்லி சூனியம்
கதிர்முனிருள் போலநீக்கி

திருத்தேர்டடி மண்மருந் தாற்பிணி தவிர்த்திட்ட
சிறுபறை முழக்கியருளே
திருஞான குருபரா யோகசாத் தய்யனே
சிறுபறை முழக்கியருளே (1)

(1) வருத்திட்ட தனம் - பிறரை வருத்தத்திற்குள்ளாக்கும் ஸ்தனம் ; பஞ்ச வாத்தியம். தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி ; மாற்றலர் - பகைவர் ; உருத்தோடு அடி வீசி - கோபத்தோடு பாதங்களை விசையாக எடுத்து வைத்து ; குஞ்சரம் - யானை ; உம்பர் - பின்னும் இடையிலு முள்ளபலர் ; உரவோய் - மனத்திண்மையுள்ள வனே ; கதிர் முன் இருள்போல் - சூரியன் முன் இருள் ஓடுவதுபோல ; மண் மருந்து - மண்ணாகிய மருந்து ; தவிர்த்திட்ட - நீக்கியவனே ;

431 கும்பநிரை கொண்டசிக ரங்கள்மதிள் கோபுரங்
கொடுங்கைநீ ளணிமண்டபம்
குதிகொண் டுலாவுகயல் வாவிசுற் றுலையம்
கோகநக வெண்பதாகைக்

கம்பமுத லகளங்க மாளிகைகள் நவரத்தின
கசிதமாய் வளர்கநாளும்
கட்டளை யுயர்கநித்தி யோர்ச்சபம் வாத்தியமொடு
காலமுறை பூசைபுரிய

நம்புமுன தடியவர்கள் இனைபெருக வேசேது
ராசனும் வளர்கநாடும்
நகரமும் பெரியோர்கள் கல்வியும் செல்வமும்
நன்மையே வளர்கநாளும்

செம்பொன் னொளிர்செங்கைகள சிவந்திடா வண்ணம்நீ
சிறுபறை முழக்கியருளே
செகதலம் புகழடிசை யோகசாத் தய்யனே
சிறுபறை முழக்கியருளே. (2)

(2) குதிகொண்டு - துள்ளி ; பதாகை - கொடி ; அகளங்கம் - சுத்தம் ; இதில் சேதுராசனைப் பற்றிக்கூறியுள்ளது காண்க.

432 தொன்னலம் பெருகிரவி தேர்ப்பரிக் காற்குரம்
தோயவிள நீர்கள் சிதறித்
துய்யசெவ் வந்தி முல்லைமல் லிகைபாயத்
தூர் மொய்த்து வளர்நெடமலைக்

T4).ல
1908|2
1344

கன்னலங் கழனிகார் காலமே கோமையாய்க்
 கருஞ்சேத கஞ்செழிக்கக்
கனமாக பெருவுரஞ் சேர்ந்துபக டுழுதசால்
 கட்டிகோ தற்கரைந்து

நன்னலம் புனையென்ன வேமுளை வித்து
 நாண்முதற் கணிகூர்ந்துநீர்
நல்லமுர்த மீந்துநிதம் பாதுகாத் தெனையென்று
 நண்பினுர் படிப்பாகவே

சென்னலங் கதிர்முத்த மிடுமிடிசை காவலா
 சிறுபறை முழக்கியருளே
திருஞான குருபரா யோகசாத் தய்யநீ
 சிறுபறை முழக்கியருளே. (3)

(3) இரவி - சூரியன் ; குரம் - குளம்பு ; சேதகம் - சேறு ; கோதல் - கொழித்தல். இப் பாட்டில் சூரியன் தேரின் குதிரைக் குளம்புகளால் தென்னையின் இளநீர்கள் சிதறி செவ்வந்தி, முல்லை, மல்லிகை முதலியவைகளின் மலர்களாகிய வண்டலோடு சேர்ந்து கரும்பு இருந்த கழனியில் கரியசேறு செழிக்குமாறு இவ்வெருக்கள் சேர்ந்து மாடுகள் ஏர் உழுத கட்டிக ளெல்லாம் கரைய பின் நெல் முளையை விதைத்து அதனைப்பாதுகாக்க செந்நெல்லின் கதிர் கள் முத்துக்களைக் கொடுக்கும் அத்தகைய அடிசை நகர் என்க.

## வேறு.

433 குருகுயர் பொழிலுறை மலரொழு கியதேன்
 குளிர்ச்சியருள் செய்யவே
குலமக ளௌனநில மதில்முடி யுறவே
 குலைக்கதிர் மிகுவயல்சூழ்

வருகய லுகளில் புனல் நளி னியிலே
 வனப்பெரு மைகள்பலவே
மலருளு பொழுதினி லுலவிய கயலுற
 மடுச்சொரி மிகுகனபால்

பருகிய மடவனம் மலரம ளியிலே
 படுத்துயர் துயிலுறவே
பழகிய மதுகரம் மிகுமிசை யதனுல்
 படுத்தின நினவுறவே

முருகலர் மணமிகு மணைசையி லதிபஈ
 முழக்குக் சிறுபறையே
முதுபுக ழடிசையி லரியர குமரா
 முழக்குக சிறுபறையே. (4)

(4) குருகு—நாரை, உகள்—குதி, நளினி—தாமரை, வனப்பு எருமைகள்—அழகு வாய்ந்த எருமைகள், அமளி—படுக்கை, முருகு—அழகு, வாவியிறங்கிய எருமைகளைக் கயல் மீன்கள் முட்ட பாலைவிட அதனை அன்னங்கள் பருகித் தாமரை மலர்ப்படுக்கையில் துயில வண்டுகள் இசைக்கீதம் பாடின அத்தகை வளமிகுந்த அணைசை நாடு என்க.

434 கொங்குலவு முல்லைமல் லிகைவல்லி சாதகநறு
கோபுரம் கொடுங்கை தென்னம்
குலைமஞ்ச ளிஞ்சிபழ முதிர்மா தளைதருக்
கோதையர் குடங்கொங்கையில்

அங்கமல வாவிகரை செங்கருப் பந்தட
மடர்கோ மகாறக்
கேணிமணி தேர்த்திரு மதிட்புறம் கூவல்சுனை
அவிர்பலாக் கனிமீது நீள்

பைங்கமுகு கோழரைக் குங்குமத் தருவாழை
பாரிசா தகமசோகம்
பானலம் பூவயல் நீண்டமதகு கால்தங்கு
பணமணிப் புரிசை மறுகில்

செங்கய லுலாவுதரு மபுரிக் கதிபனே
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் புகழடிசை யோகசாத் தய்யாநீ
சிறுபறை முழக்கியருளே. (5)

(5) கொங்கு - தேன் ; வல்லி - படர்கொடி ; கூவல் - கிணறு கேணி - குளம் ; பாரிசாதகம் அசோகம் என்க ; கோழரைக்குங்குமம்-மரத்தின் வழுவழுப்பாகிய அரையுடைய குங்கும மரம் ; பானலம் - குவளை ; மறுகு - தெரு ; இப்பாட்டில் கயல் மீன்கள் பல விடங்களிலும் உலாவுதல் கூறப்பட்டுளது காண்க.

## சிறு தேர்ப்பருவம்.

435 சந்திரன் முத லானநவக் கிரகங்க ளேழுமிகு
சகுணநவ நாதசித்தர்
சட சக்கிர வர்த்தி கண நவகோடி முனிவர்கள்
தையலர்க ளேழ்கன்னியார்

மந்திரமிகு கணநாதர் நாகரா சன்துட்ட
வயிரவன் வீரகாளி
வரையிலர மகளிர்கள் தேவரம் பையர் நீல
மஞ்சுதவழ் கிரியில் வாழும்

கந்தருவர் கின்னரர் மாயட்சவித் தியாதரர்மா
கணபூத ரத்தமரர்கோன்
கைதொழுது துதியோது கடவுளர்க் கிறைவனே
கமலா சனத்தின் நாளும்

செந்திரு விளங்கு தரு மாபுரிக் கதிப நீ
சிறுதேர் நடத்தியருளே
செனநா யகர்க்குரிய யோகசாத் தய்யநீ
சிறுதேர் நடத்தியருளே (1)

(1) சகுணம் - நற்குணம் ; நவநாதசித்தர் - சத்தியநாதர் ; சதோகநாதர், ஆதிநாதர், அனாதிநாதர் முதலிய ஒன்பதின்மர்.

ஏழ்கன்னிமார் - சப்தகன்னியரான அபிராமி, வராகி முதலியோர் ; வரையில் அரமகளிர் - மலைமீதில் வசிக்கும் தேவமகளிர் இவர்களை வரையரமகளிரென்பர் ; நீலமஞ்சு - கருமேகம் ; கின்னரர்— . . . . பாட்டின் குறிப்பில் காண்க. யட்சர் - குபேரனை முதலாகக் கொண்டவர் ; கந்தருவர் . . . . வித்தியாதரர் - தேவர்களில் பல பிரிவினர்கள் ; அமரர்கோன் - இந்திரன். ஈண்டு தன் குருவை யாசிரியர் சிவபிரானுகக் கருதியுள்ளமை காண்க.

436 விண்டோய் கொடிச்சிகரி மேல்மஞ் சுறங்கவொளிர்
வெண்ணிலாக் குழவிதவழ
விரிதலைத் தெங்கினின் வாளைகுதி கொள்ளநல்
மிருபாளை வாய்க்கமுகின்மேல்

கண்டார் விருப்பமுற நாகவல் லிக்கொடிகள்
கன்னியுங் கணவனும்போல்
கவிபெற்று வளர்கநீள் சுரபுன்னை மலரமங்
கலப்பொடிகள் போற்சிதறவே

தண்டளிய . . . பரந்
தழைக்குமடி சைக்கடவுளே
சகலசன ரட்சகா மெய்யர்க்கு மெய்யனே
சத்தரம் பரிபாலகா

செண்டாயுதப் பிரபல வீரியா வாரியா
சிறுதேர் நடத்தியருளே
செனநா யகர்க்குரிய யோகசாத் தய்யநீ
சிறுதேர் நடத்தியருளே (2)

(2) சிகரி - மாளிகையுச்சி ; மஞ்சு - மேகம் ; குதிகொள்ள - தாவ ; நாகவல்லி - ஓரிதழ்த் தாமரை ; செண்டாயுதம் - ஓர்வகை வளைந்தவாயுதம் ; கரிகாலன் செண்டால் கிரிதிரித்தது காண்க.

437 பண்டமர் ஞோர்சாப முற்றேன மாயுற்
பவித்துவளர் கின்றநாளில்
பண்ணவனை யாரணியந் தன்னிலே கண்டடி
பணிந்தர்ச்ச னைகள்செய்கவே

கண்டிறை யருட்படி பவுத்திரபுரி வணிகனோர்
கழனியை யளித்துமகிமை
காட்டியே கூட்டிவர வவனிறையவர் காரணக்
காட்சி யீதென்றறியவே

விண்டமே தரிசனங் கண்டுதரு மாபுரி
விலையெனக் கொண்டுசெய்தல்
மேலான கோவிலெழு மதிள்சிகர கோபுர
விமானமுன் வருவீரனே

தெண்டிரைத் தரளமணித் திண்புயத் திறைவன்நீ
சிறுதேர் நடத்தியருளே
சின்னய கர்க்குரிய யோகசாத் தய்யநீ
சிறுதேர் நடத்தியருளே. (3)

(3) ஏனம் - பன்றி ; பண்ணவன் - முதற்கடவுள் ; ஆரணியம் - காடு ; கண்டு - தரிசனங் கண்டு, இறை அருள்படி பவுத்திரபுரி என்ற ஊரிலுள்ள வணிகன் கழனியைக் கொடுத்தான் என்க , தரளம் - முத்துக்கள் ; இதில் ஆசிரியர் சாபத்தினால் பன்றியாகப் பிறந்ததும் பின் முதற்கடவுளை காட்டிலே கண்டு அர்ச்சனை பல செய்ய அவரருள்படி சாப விமோசனம் பெற்று வணிகன் நிலம் கொடுக்க யோகசாத்தய்யர் மகிமை பல காட்டி தன்னோடு கூட்டி வந்தார் என்று கூறப்படுகிறது.

438 கனகவரை போல்வரு பொற்றேரு ளாலிக்
கடற்புவியி லமரர்காணக்
கருதலர்கள் நெஞ்சம் கலங்கநீர் ரதமேறு
காட்சியான் காணவேண்டி

அனகனுறை மாளிகையும் நீடூழி வாழ்கவுன்
அதிசெயந் தன்னைநம்பி
அழகுசிங் கார(ர)தமி யற்றுருகுப் பையவணங்
காமுடி பணிந்துபோற்றும்

மனகதியி னீள்புரவி பூண்டேழு கோட்டையெனு
மாநகர வீதிதனிலே
வரமினுறை யுந்திருக் கோவில்வல மாகவே
வானினெழு கோட்டையூர்தேர்த்

தினகரன் போலுனது முன்காண நிறைதேரா
சிறுதேர் நடத்தியருளே
சின்னய கர்க்குரிய யோகசாத் தய்யநீ
சிறுதேர் நடத்தியருளே. (4)

(4) கனகவரை - மேருமலை ; ஆலிக்கடல்புவியில் - ஒலிக்கும் கடல் சூழ்ந்த பூமியில் ; கருதலர் - பகைவர் ; அனகன் - கடவுள் ; மனகதியின் - மனவேகமொத்த ; தினகரன் - சூரியன்.

439 வந்தா சலற்றைநிகர் மணிமாட கூட . . .
. . . கொடிதோரண
மின்னுலவு ராசனே . . . டாவென்றி வேந்தர்நெடு
வீதிதொறு . . .

. . . குளப்பாவை மாதர்செம் பஞ்சினகு . . .
. . . மடிதோய்ந்து
செங்கோகனக மலர் வா . . . வண்டுகூட
மொய்த்திடும் வளமைசேர்

செல்வமிகு திருவடி . . . மோ
. . . யோகவீரா
நவைசெய்த வஞ்சகர்கள் . . . முனதுகிருபை
நாடெல்லா மவர்

செந்தாமரை களொத்த திருமுக மலர்ந்தினி
சிறுதேர் நடத்தியருளே
சின்னய கர்க்குரிய யோகசாத் தய்யனே
சிறுதேர் நடத்தியருளே. (5)

(5) நவை - குற்றம்.

(யோக சாத்தய்யர் பிள்ளைத்தமிழ் முற்றிற்று)

# முத்துவீரப்ப சுவாமி பிள்ளைத் தமிழ்

## காப்புப் பருவம்

### திருமால்

440 கார்மேவு மார்கலியி லரவ சயனத்தில்
கண்வளர்ந் தருளும்நிதியைக்
கவுத்துவ மணிமாலிகை புயத்திலணி மாயனைக்
கருணை கடாட்சமுகிலை

மாமேவு சீதேவி பூதேவி யெனுமிருவர்
மருவுதிரு பாலகிருட்டிண
மாதவனை நந்தகோ பாலனைக் காயாம்பூ
வண்ணனைப் போற்றல்செய்வாம்

பூமேவு செய்யசெங் குவளைமார் பன்திவ்விய
புருடன்வச் சிரசரீரன்
புண்ணியன் முத்துவீ ரப்பமகி பாலனருள்
புத்திர னெனச்செனித்தோன்

பாமேவு செந்தமிழ்க் கைந்தருக் கிணையான
பாக்கிய சிலாக்கியனுன்னோன்
பண்பாளன் முத்துக் கறுப்பணவி வேகசம்
பன்னனைக் காக்கவென்றே. (1)

(1) ஆர்கலி - கடல் ; ஐந்தரு - கற்பகம், மந்தாரம் முதலிய ஐந்து மரங்கள்.

### சிவபெருமான், விநாயகன், முருகன்

441 கார்கொண்ட கந்தர சந்திரா சடைதரக்
கயிலாச கிரிவாசனைக்
கந்தமும் மதமொழுகு புகர்முக விநாயகக்
கடவுளைங் கரநாதனை

வார்கொண்ட களபகுங் குமமுலைக் குறமகள்
மணந்தபன் னிருபுயத்து
வாலகும ரேசனைக் கார்த்திகே யசுப்பிர
மண்ணியனைப் போற்றல் செய்வாம்

தார்கொண்ட புயசயிலன் மூத்துவீ ரப்பமுகில்
தன்கிளை தழைக்கவந்த
சற்புத்திர னவன் விற்பத்தி யுள்ளவன்
சத்தியத் தரிச்சந்திரன்

பார்கொண்ட புகழ்கொண்ட கங்கைகுல திலகன்வெகு
பாக்கியசி லாக்கியனானோன்
பண்பாளன் முத்துக் கறுப்பணவி வேகசம்
பன்னனைக் காக்கவென்றே. (2)

(2) கார்கொண்டகந்தா - கருமைகொண்ட கழுத்தினையுடைய; வாலமை - இளமை; விற்பத்தி - கல்வியறிவு.

### உமை, மதுரை வீரன், சரசுவதி முதலியோர்

442 அங்கயற் கண்ணிகௌ மாரிதிரி சூலியிவ்
அகிலாண்ட முழுதுமீன்ற
*அம்பிகைச் செல்விதென் நாலூர் விளங்கிவளர்
அங்காள தேவியுமையை

மங்கைரூ பப்பொம்மி யம்மனொரு பாகத்தில்
வளர்மதுரை வீரய்யனை
வாலசரசு வதியுக்கிர விரபத் திரசு
வாமியைப் போற்றல்செய்வாம்

கங்கைகுல திலகனென விந்தவுல கத்தில்வரு
கர்ணவ தாரதுல்லிய
காம்பீரிய சாம்பிராட்சன் முத்துவீ ரப்பமுகில்
கனதைபெறு புத்திரரத்தினம்

பங்கயச் செல்வியால் தங்கியெக் காலுமுயர்
பாக்கிய சிலாக்கியனானோன்
பண்பாளன் முத்துக் கறுப்பணவி வேகசம்
பன்னனைக் காக்கவென்றே. (3)

(3) கௌமாரி - சப்தகன்னியர்களில் ஒருவர் (தென்நாலூரில் எழுந்தருளியுள்ளவர் அங்காளதேவி); பொம்மி - மதுரைவீரனைக் காதலித்த பாளையப்பட்டு சிற்றரசன் குமாரி, மதுரைவீரனால் சிறைக்கொள்ளப்பட்டு மணம்பூண்டவள்; கர்ணன் - இடையெழு வள்ளல்களி லொருவன். (துரியோதனன் நண்பன்); சாம்பிராட்சன் - சக்கரவர்த்தி (தருமனுக்கு இப்பெயர் இராயசூய யாகத்தால் கிடைத்தது காண்க).

---

பிரதி பாடம் :—*அன்பான தாயகி சிங்காரி தென்னலூர்
அங்காள தேவிஉமையை

## செங்கீரைப் பருவம்.

443 முருகார்ந்த திருவணி முத்தாற்றி நீரால்
முழுக்காட்டி யீரமாற்றி
முறையாய நுதற்குவெண் ணீறு நிலக்காப்பு
முகமிலங் கத்தரித்துத்

தருதாயர் மடிவைத்து வுச்சிநெய் பொத்திவிழி
தன்னிலமை யிட்டுமேலாம்
சங்கினில் முலைப்பால் புகட்டியே சுற்றுச்
சடைப்பில்லை சுட்டிகட்டிக்

குருவான தங்க விரத்தினக் காப்புடன்
கொலுசுமிரு கையிலணிந்து
கோலமிகு தம்பித் துளானரை ஞாணுங்
குலுங்கவே தண்டையிட்டுத்

திருமேவு தொட்டில்வைத் தாட்டவள ரும்பிள்ளை
செங்கீரை யாடியருளே
சீதரனை நிகர்கறுப் பண்ணமகி பாலனே
செங்கீரை யாடியருளே. (1)

(1) முருகு - அழகு ; பொத்தி - தடவி ; சடைப்பில்லை-ஒருவகைத் தலையணி ; குருவான - திறமமைந்த ; தம்பித்தல் - இட்டுதல்.

444 அந்தமிகு வளையாழி இருகரத் தணிதலால்
ஆழிதுயில் மாதவனைப்போல்
*அய்ம்பூவி லொருநான்கு பூவினை விளைத்தலால்
அதிரூப மன்மதனைப்போல்

வந்தவர் களுக்கெலாம் தியாகம் கொடுத்தலால்
மாசற்ற கன்னனைப்போல்
வளமையுள திரவிய மிகுத்தலா லளகைக்கு
வாய்த்திடு குபேரனைப்போல்

சொந்தமாம் கிளைகளைத் தாங்கலால் வானிலகு
தூயவைந் தருவினைப்போல்
சொல்லுறுதி யாகையா லயோத்தி நன்னகரச்
சொல்லரிச் சந்திரன்போல்

செந்தமிழ்க் குபகாரி யாகச் செனித்தவன்
செங்கீரை யாடியருளே
சீராமன் முத்துக் கறுப்பண்ண தீரனே
செங்கீரை யாடியருளே. (2)

* பிரதிபாடம் அய்ம்பூவில் நான்கினால் போர்விளைத் திருதலால்.

(2) அந்தமிகு . . . மாதவனைப்போல். அழகுபெற்ற சங்கு சக்கரங்களை இரண்டு கைகளில் தரித்துள்ள திருமாலைப்போல் இவனும் சங்கு ரேகைகளையும்; மோதிரங்களையும் இருகைகளிலும் பெற்றுள்ளான். எனவே இங்ஙனம் கூறினர். அம்பூவில் (ஐம்பூவில்) . . . . மன்மதனைப்போல் - முல்லை, அசோகு, தாமரை முதலிய ஐந்து மலர்களைக் கொண்டு காமத்தை விளைவிக்கும் அழகுவாய்ந்த மன்மதனைப்போன்று இவனும் ஐந்தில் நான்கு பூமிகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய வைகளைக்கைப்பற்றி விளைவைப் பெருக்குதலால் இங்ஙன் கூறினர். பூ - மலர், பூமி என்ற பொருள் கொண்ட சொல்லொற்றுமை நயங்கருதி இங்ஙன் கூறினர். கிளை - சுற்றம், மரத்தின் கிளை சொல்லொற்றுமை கருதி கற்பகத்திற்கு ஒப்புவித்தார் கற்பகம், மந்தாரம் முதலிய ஐந்து மரங்கள் வேண்டியன கொடுத்தலால்.

அரிச்சந்திரன் —அயோத்தி நாட்டை யாண்ட திரிசங்கு குமாரன். "பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் . . . . கட்டுரையிழக்கிலம் என்ருர் மதியிழந்து வாயிழந்து அருந்தவன் மறைந்தான்" என்ற புராணச் செய்யுளை நோக்குக.

445 தூயசொர் ணத்தினுல் செய்துநித் திலமதால்
தொங்கலிடு சுட்டியாட
சொர்ணமய மாகிய சரப்பளி பதக்கனும்
தோளிலிரு பக்கமாட

நாயகி தென்நாலூ ரங்காள தேவியை
நயந்துகும் பிடுமிருகையில்
நன்மையா யணிகின்ற காப்புகொலு சுஞ்சந்திர
நகைமுகப் பிரபையாட

தாயருன் பெருமையைக் கொண்டாட விடையிலணி
தம்பித் துளானரைஞாண்
தாளுட முத்துக் கடுக்கனு டத்தண்டை
தங்கச் சதங்கையாட

சேயசெந் தமிழ்தார் பீடு சிறுவன்நீ
செங்கீரை யாடியருளே
சீராம முத்துக் கறுப்பண்ண தீரனே
செங்கீரை யாடியருளே. (3)

(3) தொங்கல் - நெற்றிக்கண் தொங்குதல். சரப்பளி - வயிரமழுத்தின கழுத்தணிவகை. நகைமுக சந்திரபிரபை என்க. சந்திரபிரபை, சூரிய பிரபை என்பன தலையணிகள்.

## தாலப் பருவம்.

446 வண்ண மலர்ச்செஞ் சரண்மீது
மகிழவணிந்த சிலம்புதண்டை
மருவி யொலிக்க நடந்தாயர்
மனையிற் புகுந்து வுரலடுக்கிப்

பண்ணு முரியைத் தொட்டேறி
பதுமக் கரத்தால் வெண்ணெய்தனைப்
பரிந்தங் கெடுத்து மனமகிழ்ந்து
பருகும் பொழுது கண்டுநெஞ்சம்

கண்ணே வெகுண்டங் கோடிவரும்
கலைவாள் நுதற்பெண் கோபியரைக்
கண்டு மிகுந்த காதலினால்
கருதி யணைந்து மகிழ்ந்துவரும்

தண்ணங் குழலா ளசோதையருள்
தனையா தாலோ தாலேலோ
தாமா முத்துக் கறுப்பண்ணா
சோமா தாலோ தாலேலோ. (1)

(1) ஆயர்மனை - இடையர்வீடு ; பதுமக்கரம் - தாமரை மலர் போன்ற கை ; நெஞ்சம் வெகுண்டு, கண்வெகுண்டு என்க. கண்வெகுளலாவது கோபத்தினால் கண் சிவத்தல். உரல் அடுக்கி . . . . பருகும். 27-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க. கோபியரை . . . . . மகிழ்ந்து :—" பாடினான். . . . பாவையர் மனைதொறும் வெண்ணெய் காடினவர்கள் முகந்தொறும் எச்சிலாக்கினான் . . ." என்ற வில்லிபாரதச் செய்யுளை நோக்குக. இங்குத் திருமாலாகாக்கருதிக் கூறியது. மையார் கண்மடவாய்ச்சியர் மக்களை . . . . . கொய்யார் பூந்துகில் பற்றித்தனிநின்று குற்றம் பலபல செய்தாய். . . " என்ற ஆழ்வார் வாக்கு நோக்குக.

447 காவின் கமுகும் பசுந்தெங்குக்
கதலித் தருவும் வளர்ந்துவிண்மேல்
கதிரோன் வெப்பந் தனைமாற்றி
கதிக்கும் செந்நெல் கழனியெங்கும்

மேவும் கயவா யெருமைமடி
மீதி லிருந்து வொழுகியபால்
வெள்ளோ திமங்கள் பார்ப்புடனே
விரும்பி விரும்பி யுண்டுகளி

கூவும் தனது பேட்டுடனே
குளிர்மா மலர்த்தண் சேக்கையின்மேல்
கூடிப் புணர்ந்து கண்துயிலும்
குலவும் கோடி வளருநலந்

தாவும் துவரா பதிநாட்டு
தலைவா தாலோ தாலேலோ
தாமா முத்துக் கறுப்பண்ணா
சோமா தாலோ தாலேலோ. (2)

(2) கயம் - நீர்நிலை ; பார்ப்பு - குஞ்சுகள் ; சேக்கை - படுக்கை ; இப்பாட்டில் சோலை வளமும் நீர்வளமும் கூறப்பட்டிருத்தல் காண்க. " மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று வீட்டளவும் பால் சொரியும். " என்ற கம்பர் தனிப்பாடலை நோக்குக. நீரில் கலந்த பாலை அன்னங்கள் நீர் வேறு பால் வேருகப் பிரிக்குமாதலின் பாலை மட்டும் குடித்தது.
" . . . , பாலுண் குருகின் தெரிந்து," என்ற நாலடியாரை நோக்குக.

448 கந்தம் மிகுந்த பசுந்தேனே
கருணை நிதியே யற்புதமே
காவே மதியே யாணிமுத்தே
கமழ்பாற் கடலே குலக்கொழுந்தே

கொந்தார் மலரே பசுங்கரும்பே
குளிர்பொன் மலையே நவமணியே
குறிக்குந் தாளோர்க் கிருநிதியே
கொடுக்குந் தியாக திரவியமே

பைந்தே னொழுகும் செழுங்கனியே
பதும மலரே மணிவிளக்கே
பருகி லுவட்டா தெள்ளமுதே
பார்க்க ருசிக்கும் சித்திரமே

சந்த முலையார் மடலெழுதும்
தனதா தாலோ தாலேலோ
தாமா முத்துக் கறுப்பண்ண
சோமா தாலோ தாலேலோ. (3)

(3) கந்தம்—வாசனை ; ஆணி - மேன்மை ; மணி - மாணிக்கம் ; மடல் எழுதுதல்—625-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

## சப்பாணிப் பருவம்.

449 முன்னம் வடுகையரைச் சாத்தரைச் சூரனுடன்
முரணழித் திடுவேலரை
மும்மத விநாயகரை நேமிசூ ழகிலாண்ட
முழு வரையு மீன்றெடுத்தும்

இன்னமும் முதிராத பச்சிளம் பெண்பிள்ளை
இமையமலை யரசன்மதலை
எழுதுநாற் பத்துமுக் கோணபீ டத்தர
சிருக்கும் * பராசத்தியாள்

தன்னடி வணங்குதன் குடியோரை ரட்சித்த
தாயாள்தென் நாலூரில்வாழ்
சங்கரி யங்காள தேவி யெந்நாளும்
தழைக்கும் திருக்கோயிலின்

சன்னதியை முன்னின்று கும்பிடும் சிறுகையால்
சப்பாணி கொட்டியருளே
தருமவான் முத்துக் கறுப்பண்ண தீரனே
சப்பாணி கொட்டியருளே. (1)

பிரதிபாடம் ; * திரிசூலி நீலி

(1) சூரன் உடல் முரண் அழித்திடு வேலரை என்க. சூரன் - சூரபதுமன். வடுகையர் - வைரவர் ; சாத்தர் - ஐயனார் ; வைரவர், ஐயனார், முருகர், விநாயகன் ஆகியவரைப் பெற்றவர் உமாதேவி. வைரவர், ஐயனார் ஆகியவர்கள் வரலாற்றை முன் பிள்ளைத்தமிழ்க் கொத்தில் முறையே . . . . . . . . . . ஆம் பாட்டுக்களில் காண்க. மதலை - பெண்பிள்ளை, பார்வதி யாகப் பிறந்தமை காண்க. நாற்பத்து . . . . . . பராசத்தி. முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 318-ஆம் பாட்டின் குறிப்பில் காண்க.

450 கஞ்சமலர் வாவிதனில் நின்றுகுதி கொண்டிரு
கடைக்கண் சிவந்தெழுந்து
கன்னல்மேல் பாய்ந்துபின் கதலிமேல் பாய்ந்துயர்க்
கமுகின்மேல் தாவிமேலாய்

மிஞ்சுசிறை விசையினால் ககனத்தின் மேல்தாவி
மேகத்தின் வயிறுகிழித்து
வெள்ளந் திரண்டந்த வெள்ளத்தி னோடிந்த
மேதினியில் வந்துமீறு

செஞ்சாலி நிலமெலாம் வாளை மீன் விளையாடு
தென்புதுவை வயலாதிபா
சிவசிந்தி தனமுத்து வீரப்ப மதிமந்திரி
சித்தமகிழ் புத்திரரத்தின

தஞ்சமென வந்தவரை யாதரிக் குங்கையால்
சப்பாணி கொட்டியருளே
தருமவான் முத்துக் கறுப்பண்ண தீரனே
சப்பாணி கொட்டியருளே. (2)

(2) சிறை - சிறகு ; ஈண்டு வாளை மீன் மேக மீது சென்று வயிறு கிழிக்க அங்கிருந்து வெள்ளம் பெருக அவ்வெள்ளத்தினூடே வாளை மீன் வந்து விழுந்தது. நீர் வளம் கூறப்பட்டிருத்தல் காண்க.

451 செகமண்ட லீகர்கள் திரண்மண்ட வந்துவெகு
திறைகொண் டளந்து போற்றும்
செயசக்கிர பதிநத்தம் வளர்முத்து லிங்கய்ய
சிம்மாச னாதிபதியான்

மகபதி தன்கொற்ற சீர்மைசூழ் மேலான
மாடமா ளிகை கோபுரம்
வளர்செக்கி பட்டியில் பட்டிக்கு நிகராக
வந்துகா ணிகம்செய்தே

அகமகிழ் வெகுமுனார் காரியக் காரர்
அனைவருஞ் சூழ்ந்திருக்க
அன்பான குடிபடைகள் வாயிதா கட்டவுடன்
அவரவர்கள் பட்டையத்தில

தகதகென மோதிர மிலங்கொப்ப மிடுகையால்
சப்பாணி கொட்டியருளே
தருமவான் முத்துக் கறுப்பண்ண தீரனே
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) மண்டலீகர் - 40 ஊர்களையாளுபவர்; செக்கிபட்டி - ஓர் ஊர். பட்டி - விக்கரமாதித்தன் மந்திரி. கர்ணீகம் - கணக்கு தொழில். வாயிதா - நிலவரி; பட்டயம் - பத்திரமுதலியன; இலங்குகை ஒப்பமிடுகை என்க.

## முத்தப் பருவம்.

452 தந்தி மருப்பில் விளைந்த முத்தும்
தழையுங் கதலி தந்த முத்தும்
தருவி லுயர்ந்த கமுகின் முத்தும்
சலத்தில் வளர்மீ னீன்ற முத்தும்

நந்தின் வயாசூ லீன்ற முத்தும்
நளின வாச மலரின் முத்தும்
நலஞ்சேர் கழனிச் செந்நெல் முத்தும்
* ரசிக்கும் கன்னல் கொடுத்த முத்தும்

பந்தின் முலையார் மிடற்றின் முத்தும்
பருவ ராக மருப்பின் முத்தும்
பணக முடிமேல் சொரிந்த முத்தும்
பாரோர் விலையாய் மதிப்பதனால்

சந்திர வதனு கொஞ்சி யவுந்
தன்வாய் முத்தம் தருகவே
தமிழ்சேர் முத்துக் கறுப்பண்ண
சதுரா முத்தம் தருகவே. (1)

(1) தந்தி - யானை; நந்து - சங்கு; சூல்வயா - ஒரு பொருட்பன்மொழி; பந்தின்முலையார் மிடறு - பந்தினையொத்த தனமுடைய பெண்களின் கழுத்து; பருவராகம் - பருத்த பன்றி; பணகம் - பாம்பு கொஞ்சிய உந்தன் என்க. உன்றன் எனற் பாலது இவ்வாறு மருவியது.

453 காலின் விலங்கை வெட்டிவிட்டுக்
காரைக் காத்தா னென்ன வந்தாய்
கருது மதுரத் தமிழ் காக்க
கட்கா தரவின் மணி கொடுத்தாய்

சூலி முதுகில் சொர்ணித்தும்
தூய முளைநெ லனமிட்டும்
தொல்லை நாளுந் தவிராமல்
துடர்ந்து வணிகன் பின்வந்து

பிரதிபாடம்; * ரசனை மிகுந்த கருப்ப முத்தும்,

நீலி பழியை ரெட்சித்து
    நிலைக்கும் கீர்த்தி நீபடைத்தாய்
நீடுங் கதலி கமுகு கன்னல்
    நெருங்குஞ் சோலை வளநேங்கும்

சாலி வயல்சூழ் செக்கிப்பட்டித்
    தலைவா முத்தம் தருவாயே
தமிழ்சேர் முத்துக் கறுப்பண்ண
    சதுரா முத்தம் தருவாயே. (2)

(2) கார்காத்தவேளாளர்;—உக்கிரகுமாரபாண்டியன் மேகங்களை விலங்கிட்ட போது இந்திரன் " மழை பெய்விக்கிறேன் அவைகளை விடுவிக்க " என வேண்டியும் அவன் சொல்லில் நம்பிக்கையில்லாதிருக்க வேளாளர் இந்திரனுக்குப்பிணையாய் நின்று மேகங்களை விடுவித்த அச்சார்பினர் கார்காத்தவேளாளர் என்ற பெயர் பெற்றனர். காரைக் காத்தான் - கார் காத்த வேளாளர் என்ற பிரிவினரைப் பற்றிக் கூறுகிறது. கட்காது அரவின்மணி - கண்களையே காதாக உடைய பாம்பின் மாணிக்கம். ஒரு தமிழ்ப் புலவருக்குத் தன்னால் கொடுக்க முடியாததால் பாம்புப் புற்றில் கைவிட்டு இறக்க நினைக்க அது மாணிக்கம் கொடுத்தது. கொணர்ந்து புவலருக்கு வழங்கினார்.

வணிகன் . . . . . . . படைத்தாய் :—செட்டியொருவன் திருவேலங்காடு நோக்கிச் செல்ல அவனை முன் பிறவியில் அநியாயமாகக் கொல்லப்பட்ட இவன் மனைவி பேயாகிப் பின் தொடர்ந்து பயங்காட்டினாள். இறுதியில் இச்செட்டி பழையனூரையடைந்து ஆண்டிருந்த அறுபது வேளாளரிடம் தன் குறை கூற அவர்கள் பேயாய் அதுபோது பெண்ணுருக்கொண்ட பெண்ணுடனே ஓரிரவு இருக்கும்படி கூற அப்பேய் அவனைக் கொன்றுவிட்டது. அப்பழியால் ஒப்பந்தப்படி யாவரும் இறந்தனர். சாலி - செந்நெல்.

454 கனதா டகையும் எதிரேவரக்
    கண்டு பகழி யாற்செயித்துக்
கவுசி கனுக்கு வேள்விதனைக்
    கரையேற் றியரா கவனானேன்

அனதா னம்செய் சத்திரபதி
    ஆகச் செனித்த முத்துவீ
ரப்பன் மகிபன் மகிழவரும்
    அருமைப் புதல்வா நலஞ்சேரும்

. . . . .
. . . . .
. . . . .
. . . . .

தனதா வளஞ்சேர் செக்கிப்பட்டித்
    தலைவா முத்தம் தருகவே
தமிழ்சேர் முத்துக் கறுப்பண்ண
    சதுரா முத்தம் தருகவே. (3)

(3) கனதாடகை - பருத்தவுருவமுடைய தாடகை; பகழி - அம்பு; அனதானம் - அன்னதானம்.

---

குறிப்பு.—மூன்றாவது அடி மூலத்தில் விடுபட்டுப்போயது.

## வாரானைப் பருவம்.

455 பொன்னுல் சுடிகை நெற்றிதனில்
புனைய வருகச் சிந்தூரப்
பொட்டு மிருகா திற்கடுக்கன்
பூட்ட வருக வுனக்கழகாய்த்

தென்னூர் மார்பில் சரப்பணியும்
சிறிய விடையி லரைஞாணும்
சிலம்பு தண்டை நின்காலில்
சிறக்க வணிய நீவருக

மின்னு ரயினி சுற்றியன்பு
மிஞ்சிக் கொஞ்சி முத்தமிட்டு
மேலாம் தொட்டில் வைத்தாட்ட
விரும்பி வருகச் செக்கிபட்டி

மன்ன வருக குவளைமணி
மார்பா வருக வருகவே
மார முத்துக் கறுப்பண்ண
தீரா வருக வருகவே (1)

(1) தென் ஆர் - அழகு பொருந்திய ; அயினிசுற்றல் - ஆலத்தி சுற்றல்.

456 பங்க யமலர் முகமிலங்கப்
பவள வாயின் நகைதுலங்க
பைம்பொன் பதக்க மொளிவிளங்கப்
பாதச் சிலம்பி னொலிமுழங்கச்

செங்கை வளைகள் கொலுசுமின்னத்
திவ்விய பால கிருட்டிணனென்னத்
தேனைப் போலும் மொழிசிறக்கத்
திலக முனது நுதலினிற்க

கங்கைக் குலத்தில் வந்துதித்த
கண்ணே யெனது கண்மணியே
கனவான் முத்து வீரப்ப
கர்ணன் மகிழும் புத்திரனே

மங்கை ரதியா சைக்கிசைந்த
மதனு வருக வருகவே
மார முத்துக் கறுப்பண்ண
தீரா வருக வருகவே. (2)

(2) நகை - பற்கள் ; பதக்கம் - பதக்கள் எனப் போலியாயது ; கங்கைக் குலம் - வேளாளர் குலம் ; ரதி- மன்மதன் மனைவி, அழகி ;

457 நதிசேர் கமல வாவியினும்
நாளி கேரத் தோப்பினிலும்
நலஞ்சேர் கமுகின் படப்பையினும்
நான மிகுபூங் காவனத்தும்

நிதிசேர் மாளி கையின்புறனும்
நீடும் கொட்டா ரங்களினும்
நிறைய வளஞ்சேர் செந்நெல் கன்னல்
நெருங்கி யோங்கும் கழனியினும்

கதிசேர் வேற்கண் மள்ளருடை
கன்னி மாதர் குடங்களினும்
கம்புள் தவழ்ந்து முத்தீனும்
கமழும் துவரா பதிநாடா

மதிசேர் வதனு கார்காத்த
வம்மிச பதியே வருகவே
மார முத்துக் கறுப்பண்ண
தீரா வருக வருகவே. (3)

(3) நாளிகேரம் - தென்னை மரம்; கமுகின் படப்பை - பாக்குமரத்தோட்டம்; நானம் - வாசனை; மள்ளர் - உழவர்; கம்புள் - சங்கு; இப்பாட்டில் முத்துகளின் மிகுதி—21-ஆம் பாட்டைப்போல கூறியுள்ளது காண்க.

## அம்புலிப் பருவம்

### சாமம்.

458 நயமாம் மானையுளன் நீயிவன் தாய்வழியின்
நல்லஅம் மானை யுள்ளோன்
நத்தத்தின் நாட்டிலே வருவைநீ யிவனுமே
நத்தத்தின் நாட்டில் வருவான்

பயனுன சக்கர முளாயிவன் புதுவயல்
பயனுன சக்கரமுளான்
பாலகன் ஆவைநீ முத்துவீ ரப்பமால்
பாலக னுவனிவனே

வயமான கங்கைவழி வருவைதான் நீகங்கை
வழியாக விவனும் வந்தான்
மதியென்று பேர்படைத் தாய்நீ யிவன்புத்தி
மதி என்று பேர்படைத்தான்

அயராது வுவமைசொல நீயுமிவ னுஞ்சரி
அம்புலீ யாடவாவே
அழகுமதன் முத்துக் கறுப்பண்ண பிள்ளையுடன்
அம்புலீ யாடவாவே. (1)

| சந்திரன். | முத்துகறுப்பணன். |
|---|---|
| 1. விரும்பும் மானை (களங்கத்தை உடையவன்) .. | தாய் வழியில் வந்த நல்ல அம் மானை (மாமனை) உள்ளவன். |
| 2. நத்தத்தில் (இருளின்) நாட்டில் (மிகுதியில்) தோன்றுவான். | நத்தத்தின் (புன்கமரம் சூழ்ந் துள்ள) நாட்டில் (தேசத்தில்) தோன்றினவன். |
| 3. பயன் பொருந்திய சக்கரம் (பரிவேடம்) உடைய வன் சந்திரனைப் பரிவேடம் சூழ்தல் உலகிற்கு நன்மைதரும். 259-ஆம் பாட்டு சூ. சருக்கம் வி. பாரதத்தில் சூரியனைச் சுற்றிய பரிவேடம் தீங்குக்குக் கூறப்படுதல் காண்க. | புது வயல் பொருந்தி பயன் விளை யும் சக்கரம் (பூமி) உடையவன். |
| 4. பாலகன் (பால்+அகன், பால் போன்ற வெண் ணிற முள்ளே உடையவன்) ஆவான். | முத்துவீரப்பனுக்குப் பாலகன் (மைந்தன்) ஆவான். |
| 5. நீரான கங்கை வழிவருவான் (சிவபெருமான் சடையில் கங்கையும் சந்திரனுமிருப்பது நோக்கி). | கங்கை வழி (வேளாளர் குல வழியில்) வந்தவன். |
| 6. மதி (சந்திரன்) என்று பெயர் படைத்தான் .. | இவன் புத்திமதி (அறிஞன்) என்று பெயர் பெற்ருன். புத்தி மதி - புத்தியால் மதித்தறிய வன். |

அயராது - தளராது.

## பேதம்.

459 ஒருபொன் னுடன்பிறந் தாயிவ னளவில்பொன்
னுடனே பிறந்திருப்பான்
ஒருவட்ட மாத்திர முடையநீ இவனோ
உபர்ந்தகன வட்டமு டையான்

வருபோது மலைவா யிருப்பைநீ இவன் யார்க்கும்
மலையா திருப்பனென்றும்
மாகலைக ளீரெட்டு வுள்ளவன் நீயிவன்
மாகலைக ளெட்டெட்டுள்ளோன்

கருதுபகை யாளியுண் டுன்னிட மிவனிடம்
கருதுபகை யாளியில்லை
களங்கமுடன் னிடமுண்டு விவனிடம் யாதொரு
களங்கமு மில்லாதவன்

அருமையுட நின்னினு மிவனதிக மாகலான்
அம்புலீ யாடவாவே
அழகுமதன் முத்துக் கறுப்பண்ணப் பிள்ளையுடன்
அம்புலீ யாடவாவே, (2)

| சந்திரன். | முத்துகறுப்பணன். |
|---|---|
| 1. ஒரு பொன் (இலக்குமி) உடனே (பாற்கடலில்) பிறந்தவன். | அளவற்ற பொன் (செல்வம்) னுடன் பிறந்தவன். |
| 2. ஒரு வட்டம் (பரிவேடம்) மட்டுமே உடையவன் .. | உபாந்தகன வட்டம் (உப+அந்த +கன+வட்டம், இரண்டு அந்த பெருமையுடைய ஆலவட்டங் களை) உடையவன். |
| 3. தோன்றும்போது மலைவாய் (மலையிடம்) இருப் பான், " மலைமிசைத் தோன்றும் மதியம்போல் " என்ற நாலடியார் காண்க. மலைவாய் என்பது தியங்குதலுடையனாய் என்ற பொருளும் தறிது இழித்தது. | யார்க்கும் மலையாது (தியங்காது) இருப்பான். |
| 4. கலைகள் ஈரெட்டு (பதினாறு கலைகள்) உள்ளவன். (கலை - வளரும் தேயும் பங்கு). | 64 கலைகளை யுடையவன். (கலை - நூலறிவு). |
| 5. பகையாளி (இராகுவெனும் பாம்பு) உண்டு .. | பகையாளி இடையாது. |
| 6. களங்கம் உண்டு. | யாதொரு களங்கமும் (குற்றமும்) இல்லை. |

## தானம்.

வந்தடுத் தவர்கள்குறை மாற்றலா னுன்னிடம்
மாருத குறைமாற்றுவான்
மறுவிலா தவனிவ னுகையா னுன்னையும்
மறுவிலா தவனுக்குவான்

தந்தமது பகையெலாம் வாராது தீர்க்கும்
சமர்த்தனிவ னுகையானுன்
தன்னிடம் பன்னகத் தால்வரும் பகையினைத்
தளராது தீர்த்துவைப்பான்

இந்தவிசை யிவனிடம் வாராம லங்கே
இருப்பதுவும் ஞாயமில்லை
இவ்வுலகில் வாழ்பவர்கள் யாரிலும் பெரியவன்
என்பதற் கையமில்லை

அந்தமிகு ரதிபால மன்மத சொரூபனிடம்
அம்புலீ யாடவாவே
அழகுமதன் முத்துக் கறுப்பண்ணப் பிள்ளையுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) குறை—முத்துகறுப்பணனுக்கு "துன்பக் குறைகள்" என்றும் சந்திரனுக்குக் "வளர்தல் தேய்தலாகிய குறை" என்றும் பொருள் கொள்க. மறு அங்ஙனமே முறையே குற்றம், களங்கம் எனப் பொருள் கொள்க. பன்னகம் - இராகுவெனும் பாம்பு; இந்த விசை - இந் தத் தடவை; ஞாயம் - நியாயம் என்பதன் மரூஉ.

## சிற்றில் பருவம்

461 தைய லிலகு கொடுங்கையுள்ள
தங்க அடுப்புத் தானமைத்துத்
தயங்கும் பவள விறகடுக்கித்
தழைக்கும் மணியா லனல்மூட்டி

துய்ய வயிரக் குழிசியினில்
சுவைப்பைந் தேனு லுலையேற்றிச்
சுரையா வின்பால் கொண்டரித்துச்
சுவேதத் தரள வரிசியிட்டுக்

கையால் பதத்தில் வடித்திறக்கிக்
கமழுஞ் சட்ட ரசவர்க்க
கறியும் சமைத்து நாங்களெலாம்
கனிவா யுனக்கு வழுதிடுவோம்

செய்ய குவளை மணிமார்பா
சிறுவா சிற்றில் சிதையேலே
தீரா முத்துக் கறுப்பணவ
சீரா சிற்றில் சிதையேலே. (1)

முடியவில்லை.

(1) தையல் இலகு கொடுங்கையுள்ள அடுப்பு - அழகு விளங்கும் வெளிப்புறம் நீட்டியுள்ள அடுப்பு ; மணி - மாணிக்கம் ; குழிசி - பானை ; சுரைஆ-மடியையுடைய பசு ; சுவேதம் - வெண்மை ; சட்டரசம் - அறுசுவை ; கறுப்பண வசீரா என்க.

# வேங்கடேசுவரன் பிள்ளைத் தமிழ்

## காப்புப் பருவம்.

### விநாயகர் துதி.

462 மாமேவு தெய்வப் பெருங்கோயி லெனுமூல
மன்றத்துண் மானதாதி
வண்டிமிர நெட்டிதழ்க் கதவந் திறந்துமண
மகரந்த மொழுக வனசப்

பூமேவு கவுண்மதப் பிரளயமுங் கட்கடைப்
பொருஉங்கடைக் காலாக்கினியும்
புராளாது சிறுகாற் றசைக்குமிகு தழைசெவிப்
புகர்முகக் களிறுகாக்க

கோமேவு மசுபதியை முதலான உடுபதி
குலாதிபதி தனபதி பொருங்
குறுகலார் பதிநெளிய முறுகிமேல் வரும்வலிய
கும்பகேச பதிமனுபதி

காமேவு மகபதி கிரீடபதி ரத்தினசிங்
காசனு திபதி பெரிய
கங்கைசூழ் புவிகட்டும் வேங்கடே சுவரட்ட
கசைமுக பதிதழைகவே (1)

(1) மானதாதி வண்டு இமிர-மனம் முதலாகிய வண்டுகள் சப்திக்க ; வனசப்பூமேவு களிறு என இயைக்க. கவுள் மதப் பிரளயம் - கன்னத்தினின்று ஒழுகும் மதவெள்ளம் ; காலாக்கினி - யுகாந்த முடிவில் தோன்றும் தீ ; செவியினின்று வரும் காற்று சிறுமையாயிருப்பதால் மத வெள்ளம் பெருகி காலாக்கினி போன்ற கண் கடையில் தோன்றும் நெருப்பை அணைக்காமல் அது அது அவ்வந்த நிலையிலேயே நிற்க மாறுபாடடையாமல் நின்றது என்க. காற்று அதிகம் வீசின மதத்திவலை கலந்து நெருப்பு அணைந்துவிடும். அங்ஙனமில்லாதிருந்தது என்பதற்கே "சிறுகாற்று அசைக்கும் இரு தழை செவி" என்றார். புகர்முகக் களிறு - விநாயகன். உடுபதி - சந்திரன் ஒத்தவன் ; தனபதி பொரும் - குபேரனை யொத்த ; குறுகலார்பதி - பகைவர் ஊர்கள் ; முறுகி - சினந்து ; காமேவு மகபதி - கற்பகச் சோலை சூழ்ந்த யாகத்திற்குத் தலைவனை இந்திரன் ; மகம்-யாகம் ;

## திருமால்.

463 திருகுபுரி கோட்டிருந் தாழ்செவிக் கவையடிச்
சினவுவாய்ப் பொறித்துணைக்கட்
டெய்வதம் கோதையத் தகரவரு முலாவுந்
திசைதிசையு மண்டலங்களும்

உருகெழு கதிர்க்களு முடுக்குலமு மலம்வர
வுகைத்தெழுஞ் சிறைவிசையினுன்
உகள்பசுந் தோகையி னுலாவுஞ் சிறந்தவெம
துவண வெற் பிறைவர்காக்க

பொருகரிகள் மும்மத வொழுக்கினால் நதிசெய்தப்
புரள்கடைக் கால்விசைப்பிற்
போழ்படக் கடுநடைக் கொடுசெலு மளக்கருட்
புரவிவிடு சாரிதருதூள்

பருகமறு கெங்கும் புதுக்குதென் னிளசையம்
பதிநிருப னரசர் பெருமான்
பங்கையா சனேயிஷ்ட வேங்கடே சுவஎட்ட
பாண்டியன் மகப்பெறுகவே. (2)

(3, 4 பாட்டுக்களுள்ள ஓலை இல்லை.)

(2) திருகுபுரிகோடு - முறுக்குதலைச் செய்த தந்தம் ; கவைஅடி - நகங்களைப் பெற்ற பாதம்; துணைக்கண் - இருகண்கள் ; கதிர்களும் - சூரியன், சந்திரனுகிய இருசுடர்கள் ; உடு - நட்சத்திரம் ; அலம்வர - சுழல ; உகைத்து - செலுத்தி உகள் - நழுவுகின்ற ; உவணவெற்பு ; இறைவர் - மலையை யொத்த கருடனுக்குத் தலைவர், திருமால் - "நதி செய்து அப்புரள் கடைக்கால் விசைப்பின் போழ்பட" என்க ; போழ்பட - பிளவுபட தெருவில் யானைகள் மும்மத சலத்தால் நதி போன்று செய்து மாறுபடுகின்ற கால் வேகத்தினுல் அந்நீர் தேங்கிச் சேருக, விரைந்து செல்லும் குதிரைகள் அந்த சேற்றுள் இடசாரி வலசாரியால் தந்த மண் துகள்கள் அந்நீரைப் பருகத் தெரு (பழையபடி) புதுமையாக விளங்கும் இளசையம்பதி என்க.

### திருமகள்.

464 கொந்தளக பந்திப் புகைப்படல முந்தெளி
கொழுந்தீச் செழுந்திலதமும்
குவளைவிழி யின்கடலு மக்கடற் கரையன்ன
கூன்புருவ முங்குழைகளும்

தந்தபந் தியுமுகமு முப்யபுய முஞ்செண்டு
தாங்குகர முஞ்சரணமுஞ்
சரணகரு ணுகரமும் வீரியப் பெயருந்
தரித்த திரு லட்சுமிகாக்க

கந்தசுந் தரசந்த சொந்தமந் தரபந்த
காமசம வாமதாம
கம்பகம் பிதகும்ப விம்பசம் பிரமஇன்ப
காம்பீர்ய புயபாரனைத்

தொந்தமுந் தியசந்திர குலசில்ல வாரகோத்திரத்
துருபநிரு பத்தருமனைச்
சொற்றமிழை யறிவேங்க டேசுவரரெட் டேந்திரவென்
துரையைத் தயாவரையையே. (3)

(3) கொந்து அளகபந்தி - பூவை யணிந்த கூந்தல் தொகுதி ; கொந்து - பூங்கொத்து ; திலதம் - பொட்டு ; குவளை விழியின் - இன் ஐந்தாம் வேற்றுமை உவமப் பொருவு ; கூன் - வளைந்த ; தந்தம் - பல் ; உபயபுயம் - இரு மூங்கில் போன்ற தோள்கள் ; சரணம் - பாதம் ; கரு+ணு+ஆகரம் - கருணை தங்குமிடம் ; கந்த, சுந்தர, காம, கம்பித முதலியவைகள் ; விளிகள் - கந்த, காம முதலியவைகள் உவம வாகுபெயர். தொந்தம் முந்திய சந்திரகுலம் என்க. தொந்தம் முந்திய - பழமை மேற்பட்ட ; தயாவரை - தயையுடைய மலையொத்தவன்; வரை - உவமையாகு பெயர்.

## செங்கீரைப் பருவம்

465 தண்ணமுத மஞ்சனங் குளிரவைத் தாட்டித்
தமிழியுமீ ரம்புலர்த்தித்
தருநுத லிடைப்பூதி யிட்டுமேற் காணவொரு
தனிநிலக் காப்புமிட்டுக்

கண்ணிலெப் பொருள்களுந் தெரியநிறை யஞ்சனங்
கலவித்து மடியில் வைத்துக்
கனிவாயி னமுதம் புகட்டிநெய் பெய்தரு
கதிர்க்குஞ்சி யுச்சிமோந்து

பெண்ணணங் கினர்சூழ வைகுநின் றுயரில்
பேராசை பெருகவிண்ணில்
பெறுகுறி தெரிந்துபி னிலக்குறியின் மெல்லப்
பெயர்ந்துநெஞ் சாற்றவழ்ந்து

தெண்ணிலா மதிவதன் மண்டல மசைத்தினிய
செங்கீரை யாடியருளே
செங்கண்மா லெனுவேங்க டேசுவரெட் டேந்திரசுய
செங்கீரை யாடியருளே. (1)

அமுதமஞ்சனம் - பாலாகிய நீர்.

(1) தழீஇ - தழுவி, சொல்லிசையளபெடை ; நிலக்காப்பு - மண்ணைக் குழைத்துவைக்கும் பொட்டு ; அஞ்சனம் - மை ; நெய் - எண்ணெய் ; குஞ்சி - மயிர் ; பெண் அணங்கினர் - தெய்வப் பெண்போன்ற தோழிப் பெண்கள் ; தாயர் - ஐவகைத் தாயர் ; ஈன்றதாய், ஊட்டுந் தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் ; நெஞ்சு - மார்பு ; மதிவதனம், உவமைத் தொகை ;

466 பனுவலின் மழைபொழி கவிஞர்கட் டமிழ்கொடு
பைம்பூ ணும்பரமே
பல்லக் குங்கன சொல்லொக் கும்படி
பண்பாய் நண்பாயே

அனுதின முதவியும் வெகுபுகழ் பெருகி
யலங்கா ரஞ்சேர்வோய்
அள்ளற் கடலிடை மெல்லச் செல்வனை
அன்றே கண்டோய்நீ

இனசன வளமையி லுடுநன் மதியிவன்
என்றே துங்கோவே
யேலவார்த் தனைபெறு செல்வச் சிவகிரி
எந்தாய் என்போய்நீ

சினமிகு மதமழை பொழிதரு கெசபதி
செங்கோ செங்கீரை
தேசுபெற் றிடும்வேங்க டேசுவ ரெட்டேந்திர
செங்கோ செங்கீரை. (2)

(2) பனுவல் - பாட்டு ; கவிஞர்கள் தமிழ்கொடு, எனப்பிரிக்க ; பைம்பூணும் - பசிய ஆபரணமாக அணியும் ; அள்ளல் - சேறு ; செல்வன் என்றது திருமாலை நோக்கியதுபோலும். உடுநடுமதி - நட்சத்திரங்களினிடையிலுள்ள சந்திரன் ; ஏலவார்த்தனை - ஏலம் ஆர்ந்த குழலுடைய, அன்னையான உமாதேவி ; பெறு - இடப்பாகத்திலே பெற்ற ; சிவகிரி எந்தாய் என்போய் - கைலைமலையிலுள்ள சிவனைப்போன்றவன் நீ. காஞ்சியிலுள்ள அம்மைக்கு ஏலவார்க் குழலி என்ற பெயரிருத்தல் காண்க. தேசு - ஒளி (புகழ்) ;

467 நினைவிற் பலபல பன்னி யெழுந்து
நிமிர்ந்து வளைந்தாட
நெற்றியின் மிசையிடு சுட்டியை வருடி
நெளிந்து தவழ்ந்தாடச்
சனதத் தொடுமுறை சரணப் பெருவிரல்
தன்கை சுவைத்தாடத்
தண்டை புலம்பவோர் பண்டி யலம்பத்
தாழ்மண்டலமாடச்

சினமுற் றடல்புரி சோமத் தலையொரு
செஞ்சர ணந்தனிலே
செயவிரு தெனவிது செயமென மிகுமதி
செயமோ டிசைந்தாட

அனசத் திரபதி யாயொரு துரை நீ
யாடுக செங்கீரை
அங்கச நிகர் வேங்க டேசுவரெட் டேந்திர
ஆடுக செங்கீரை. (3)

(3) பன்னி - ஆராய்ந்து ; சுட்டி - நெற்றியில் தொங்கவிடும் ஓராபரணம் ; சரணம் - கால் ; பண்டி - வயிறு ; சோமத்தலை - சந்திரபிறை யென்னுமாபரணம் மிகும் அதிசெயமோடு என்க சினம் உற்று அடல்புரி சரணம் எனக் கூட்டுக. அனசத்திரம் - அன்ன சத்திரம் ; அம்கசம் எனப் பிரித்து அழகிய யானை யென்க. அங்கசன் - மன்மதன் - னகர ஈறு கெட்டு வந்து மிருக்கலாம்.

468 சாரங்க மென்றுந் தளிர்க்கைகொண் டோங்கலால்
தந்தியோ லங்காணலால்
தன்கண்வர நதிபிரிய முற்றுவ ரித்தலால்
சக்கர வினைப் பொறுப்பால்

காரங்க மென்றும்பர் காணநின் றுற்றலால்
ககனத்தி னமையாளலால்
காட்சிபடு தாமரைக் காடுமே லேறலால்
கனகாம்ப ரம்பையணைவால்

மாரங்க டாதுதிர மாகமே லாதலால்
மரக்கனி யுரந்தோன்றலால்
வைகுந்த மால்போலும் வைகுந்த வேலனை
வணங்கு தமிழ் முனி பொருந்துஞ்

சீருஞ் சிறந்துவாழ் பொதிகைவரை யாதிபா
செங்கீரை யாடியருளே
தென்னிலிசை யாள்வேங்க டேசுவ ரட்டேந்திரா
செங்கீரை யாடியருளே (4)

(4) வேங்கடேசுரரெட்டன்— திருமால்.

| | | |
|---|---|---|
| 1. வில்லைக் கையிலுடையவன் .. .. .. | சாரங்கமென்னும் வில்லை எப் போதும் கையில் தாங்கி யிருப்பார். |
| 2. போரில் யானைகள் அலரும்படி செய்பவன் .. | சந்திரன் என்ற யானை ஓல மிட்டதற்கு உதவியனவன். |
| 3. ஆஜ்ஞா சக்கரம் உண்டு .. .. .. .. | பாஞ்சசன்னியம் என்னும் சக் கரப் படை தரித்தவன். |

4. நாங்களும் உங்களில் ஓர்குடியாகி, உறுப்பாய் தேவர்கள் உங்களுடைய உறுப் உள்ளோம் எங்களைக் 'காப்பீர்' என்று பாகிய எங்களை அசுர பயத்தி

| | |
|---|---|
| அரண்மனை வெளியே பலருங் காணப் பகைவர்கள் நின்று பல கூறுவர். “படைகுடி கூழமைச்சு. . . . .” என்ற குறள் நோக்குக. | யின்று காப்பாயாக என்று பலருங்காணக் கூறுவர். |
| 5. பொன்னால் புலவர்களை ஆளுவான் .. .. | ஆகாய உலகமாகிய வைகுண்டத்தை ஆளுவான். |
| 6. அழகிய ஒழுங்குவாய்ந்த தாமரை யொத்த மயிரொழுங்கு உந்தியினின்று மேலேறுகிறது. | அழகிய தாமரை ஒன்று உந்தியினின்று பிரமனைப் படைக்க எழும்புகிறது. |
| 7. இவன் நாட்டில் மரங்கள் மகரந்தம் சிந்த ஆகாயம் வரை உயர்ந்து வளரும் வளத்தை யுடைவன். | கற்பக மரங்கள் மகரந்தங்களைச் சிந்தும் ஆகாயமேலாவன். இங்கு மரங்கள் மாரங்கள் என நீட்டல். |
| 8. மரத்தின் கனிகளின் தேன் முதலியன பெருகி இவன் நாட்டு நிலத்தில் உரமாகும். | விளா மரத்தினின்று கனியுதிர அடித்தபலம் தோன்ற விருப்பான். வத்ஸாஸூரன் கண்ணனைக் கொல்ல விளாமரமானது காண்க. |

‘வை+குந்த+வேலன்’ என்க வை - கூரிய ; குந்தம்வேல் - ஒரு பொருட் பன்மொழி. தமிழ்முனி - அகத்தியர்.

469 தாறுபாய் கதலிப் பசுந்தோகை யூடுற்ற
தாழைமட லூடுதாக்கித்
தண்கமுக மடல்விரி பசுந்தோகை துவளவது
தலைதுளக் கிச்சுழற்றிப்
பாறுபாய் சூலம் பிடித்தணங் காட்டியொப்
பனையிட் டடுக்கடுக்காய்ப்
பைங்குழை விரித்தகம் பந்தலைக் கொண்டுடல்
பதுங்கிநின் றுடுமாபோல்
வீறுபாய் சோலையுட் கருமந்தி பாயவதன்
மேற்பாய் குலக்கவியின் வால்
வீச்சிற் பலாக்கனி யுடைந்துநறை பாயவதில்
விளையருவி பாயவதன்மேல்
சேறுபாய் வாளைமீன் பாய்வைகை நதியுளாய்
செங்கீரை யாடியருளே
தென்னிரெசை யாள்வேங்க டேசுவ ரெட்டேந்திரா
செங்கீரை யாடியருளே (5)

(5) தாறு - குலை ; கதலி - வாழை ; துளக்கி - அசைந்து ; பாறுபாய் சூலம்- பருந்து மாமிசத்திற்காகப் பாயும் சூலம் ; அணங்கு ஆட்டி ஒப்பனையிட்டு - பேய்பிடித்ததைப் போல ஆட்டி ; அதன்மேல் பாய் - அப்பெண் குரங்கின்மேல் பாயும் ; குலக்கவி - உயர்ந்த ஆண்குரங்கு ; இப்பாட்டிலுள்ள இயற்கை வருணனை போற்றத்தக்கது :—வாழையின் குழை பரவப் பெற்ற மேற்றுள் தன்னிடையுற்ற தாழை மடலைத் தாக்கி மேலும் தாக்க பாக்கு மரத்தின் மடல் விரிந்த மேற்றுல் துவளும் செயலாகிய அதுப் பருந்து சுற்றுகின்ற சூலத்தை

பிடித்துப் பேயோட்டுதலை ஒத்துள்ளது. அடுக்கடுக்காய் பசிய தளிர் விரித்த கம்பங்களின் மீதேறி கழைக் கூத்தாடிகள் உடல் மறைந்து நின்றுவேதுபோல வேறொன்றற்கில்லா அழகு பெற்ற சோலையில் கரிய பெண் குரங்கு மரத்திற்கு மரம் பாய, அப் பெண் குரங்கின்மேல் பாய்கின்ற ஆண் குரங்கின் வால் வீச்சினுல் பலாக்கனி உடைந்து தேன் ஊற்ற அதில் மலையில் தோன்றிய அருவிகள் பாய, அதன்மேல் சேற்றில் பொருந்திய வாளை மீன்கள் பாய்கின்ற வைகை நதியிலுள்ளவனே செங்கீரையாடுக என முடிக்க.

## தாலப் பருவம்

470 ஆடகச் செம்பொன் பசுங்கிண்ண மேந்தியதின்
அமுதையிட் டுபசரித்தே
அம்புய முகட்டின்மிசை வெள்ளனந் துயில்வகண்
டள்ளிமுத் திடுவபோலுஞ்

சூடகக் கையா லெடுத்துவிளை யாட்டின்
சுகத்தான் மயக்கி யூட்டிச்
சொல்லால் விளைந்த பொருள் செவியா லருத்தியுறு
சூழ்வார் பாரக்கினின்றுய்

கோடக முகத்தில்முக மெட்டணி விளங்கமேற்
கொண்டமுத் துத்துராயுங்
கோலுமாப் பட்சியு மணிவாகை யோடுமணி
குயிற்றுகல் லணையுமிட்டு

நாடறிய வுலகெழலாம் வையாளி கொண்டபரி
நகுலநீ தாலாடவே
நங்கள்துரை யெனும்வேங்க டேசுவ ரெட்டேந்திரா
நரேந்திரநீ தாலாடவே. (1)

(1) ஆடகச் செம்பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம் எனும் நான்கு வகைப் பொன்களில் முதலது. வெள்ளனம் - அன்னத்தின் தொகுத்தல் சூடகம் - (கை) வளை ; அருத்தி - உண்பித்து " செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும் " என்ற குறளை நோக்குக. பராக்கு - விளையாட்டாகப் பார்ப்பது ; கோடகம் - சிகரமாகச் செய்த முடிவகை ; துராய் - முத்து முதலியவற்றால் அமைக்கப்பட்ட தலையணிவகை ; மணிகுயிற்று கல்லணை - முத்துப்பதித்து செய்யப்பட்ட சேணம் ; வையாளி - குதிரை யேற்றம் ; நகுலன் அசுவசாஸ்திர மறிந்து திறம் பெற்றவனுதலால் அவனை உவமித்தார்.

471 நிலமகள் கலைமகள் மலர்கள் பழகிய
நிருபா தாலேலோ
நிக்கிரக மொடுநல னுக்கிரக முலகினும்
நிகழ்வோய் தாலேலோ

கலைபெறு நிலவினு மிலகிய மலர்முகக்
காமா தாலேலோ
கம்பித் திலகிய செம்பொற் புயதர
கனகா தாலேலோ

உலகினி லெவர்களு மனது குளிரவளர்
உத்தம தாலேலோ
உவணகி ரிக்குகன் இருசர ணேப்பணி
உசிதா தாலேலோ

சொலுநிச வசனமும் விசயமு மருவிய
சுமுகா தாலேலோ
சொற்பொரு ளறிவேங் கடேசுவ ரெட்டேந்திர
துரைநீ தாலேலோ. (2)

(2) நிக்கிரகமொடுநல் அனுக்கிரகம் எனப் பிரிக்க; நிலவின் - இன் உறழ் பொருவு (5-ம் வேற்றுமை) கம்பித்து இலகிய - (பார்ப்பவர்கட்கு) நடுக்கத்தைக் கொடுத்து விளங்குகிற;

472 வீதி தோறுங் கடவுமன
வேகக் கலின வாம்பரியால்
விளைந்த துகளின் படலமொடு
மென்மா ளிகையிற் பன்மடவார்

ஓதி தோறு மகிற்புகையிட்
டுறுவெண் படல முகிற்படலத்
துடல்கீண் டேறித் திசைத திசை போய்
உச்சிக் கதிரி னுடல் மறையச்

சோதி மணிமேற் கட்டியெனத்
துலங்க வளரும் இளசை நகர்த்
துரையே நிறையைப் புரந்த இருட்டினர்
துணையே யிணையே சொலுந்தருவே

சாதி மணியே கற்பகமே
தவமே தாலோ தாலேலோ
தமிழ்தேர் வேங்க டேசுவ ரெட்டேந்திர
சாமி தாலோ தாலேலோ. (3)

(3) கடவும் - செலுத்தும்; கலினம் - கடிவாளம்; வாவும்பரி - வாம்பரியென நின்றது "செய்யுமெனெச்ச . . . ." என்ற நன்னூல் விதியால்; கீண்டு - கிழித்து; மேற்கட்டி - விதானம்; குதிரையால் எழுந்த மண்புழுதியோடு மடவார் கூந்தலை ஈரம் புலர்த்தும் அகிற் புகையாகிய வெண்படலமும் சேர்ந்து மேகத் தொகுதியைக் கிழித்துச் சூரியனின் உடல் மறைய இவைகள் விதானம் போல நிற்க மேலும் எழும்பும் இளசை நகர் என்க.

473 மண்டலமெங்கனு மண்டிய வுன்புகழ்
வளர்விற் கோடாமே
வங்கர் குலிங்கர் கலிங்க ரிடுந்திறை
வருவது தாளாமே

கண்டகர் நெஞ்சிடை கண்டக முந்தொடு
கைத்தொழில் சோராமே
கண்குளி ரும்படி பெண்க ளளந்தறி
கவனமு நாணுமே

விண்டல மண்டல மென்றே யிரண்டினும்
வெங்கலி பாயாமே
வென்றியி லன்றியும் நன்றியி லென்று
மிகுங்குறை வாராமே

தண்டமிழ் கொண்டு தினந்தரு கின்ற
சவுந்தரா தாலேலோ
தரைகட்டும் வேங்க டேசுவரெட் டேந்திர
சௌமிய தாலேலோ. (4)

(4) கண்டகர் - கொடியோர் ; நெஞ்சு - மார்பு ; கண்டகம் - வாள் ; கைத்தொழில் - ஈண்டு போர்த்தொழில் - வெம்கலி - கொடிய துன்பம் ; தரை கட்டும் - பூமி தேவியைத் தழுவுகின்ற ;

474 மலைமே லிடுதீ பாகாரா
மதிமே லிடுசீ தாராமா
பலகா வியபூ ரணதாரா
பதுமா சனைசேர் தார்மார்பா

வலவா வளவா தாலேலோ
மதனு விசயா தாலேலோ
கலைதேர் வேங்கடே சுவரெட்ட
காமா பூமா தாலேலோ. (5)

(5) தீப ஆகரா - தீபம்போன்று தங்கியிருக்கின்றவனே ; ஆகரன் விளி ஆகாரா. "குன்றின்மேலிட்ட விளக்கு" என்பர் தமிழில். மதிமேல் இடு சீதாராமா - மதியொத்த வெண்கொற்றக் குடையை மேலே வைத்த ராமனை ஒத்தவனே. ; பதுமாசனை - இலக்குமி ; வலவன் - வெற்றிமிக்கவன் ; பூமன் - பூமா என விளித்தது. பூமிக்கு மன்னவன் என்று பொருள்.

## சப்பாணிப் பருவம்

475 சமரிடு படைமுர சொடுகொடை முரசொலி
சத்த மெடுத்தாட
சாமித் துரகர் வெண்டைய வோதை
தனிப்பரி துற்றுட

நிமலனை வழிபடு கரதல வொலிமுயன்
நிற்கரம் வைத்தாட
நீதி தரும்சக தேவி பதத்தினும்
நேய மிகுத்தாட

பமரமு முனதிரு புயல்வழி விளரிசெய்
பற்றொலி யுற்றுடப்
பாவலர் பூவலர் காவல ரென்று
பழக்கொலி மொய்த்தாடக்

குமரவு ளிருகைகொண் டொலிதர மலிவொடு
கொட்டுக சப்பாணி
குணநய மிகுவெங்க டேசுவ ரெட்டேந்திர
கொட்டுக சப்பாணி. (1)

(1) சாமித்துரகர் - வேங்கடேசுவரனின் குதிரை வீரர்; துரகம் - குதிரை; வெண்டயம - வீரர் காலணி; சகதேவி - ஜக்கம்மா என்னும் வீரபாண்டிய கட்டபொம்மன் வணங்கிய தேவி போலும். பமரம் - வண்டு; 'உனதிரு புயம்வழி என்றிருப்பி'ன் புயமீதலங்கரித்த மாலை யெனக் கொணடு வண்டு இசைத்ததற்குக் கூறலாம்.

476 புண்ட ரிகங்க ளலர்ந்து கமழ்ந்திடு
புட்ப முகிழ்த்தூறும்
புதுநற வங்களில் விழுமிய வண்டு
பொறிச்சிறை யுற்றுட

மண்டிய சங்க முழங்கி அலம்பு
மணித்தொனி நெட்டேற
மண்டு கச்சுதி கண்டோ கைப்பட
மத்தள மொப்பாக

விண்ட பெரும்பல வின்கனி மந்தி
வெடிக்க வடித்தாட
வியனிது வாமென மயில்நட மாடும்
விரைச்சுனை யிற்கானிற்

கொண்ட வளம்பயி லிளசைக் கதிபா
கொட்டுக சப்பாணி
குணநய மிகும்வெங்க டேசுவ ரெட்டேந்திர
கொட்டுக சப்பாணி. (2)

(2) பொறிச்சிறை - புள்ளிகளையுடைய சிறகு; மண்டூகம் - தவளை; ஓகை - ஓசை; வியன் - இடியோசையுள்ள ஆகாயம்; வண்டுகள் புள்ளிகளையுடைய சிறகுகளை உதறி தேனை விரும்பிக் கூத்தாட அருவிகளில் நெருங்கிய சங்குகள் நீரில் அலம்புவதால் முழங்கும் ஒலி அதிகமாக, தவளை தாலிம்போன்று ஓசையிட, பலாப் பழத்தைக் குரங்கு மத்தளம்போன்று பிளக்குமாறு அடிக்க இச்சப்தங்களைக் கண்டு மயில்கள் இடியோடு கூடிய மேகந்தான் என நினைத்து மகிழ் வுடன் ஆடும் சுனையையும் காட்டையுமுடைய இளசை நகர்க்கதிபனே என்க.

477 குடவளைகள் சூற்கொண் டுயிர்க்கும்வெண் முத்துங்
குறுங்கா ணமள்ளரிற்
கொண்டபறி யாற்சேரது தரித்துவெள் ளிடைதோறும்
கொட்டிமீன் கொள்ப அவ்வெள்

இடையினுஞ் சைவலக் குப்பையிற் கற்றைகொண்
டிளவெயி லெறிப்பமற்றுங்
கெய்துங் கரும்பொற் கருங்காப் பொலிக்கமள்
ளியரஃதெ டுத்தெறியவோர்

திடரென வுயர்க்க வதிலாமை கண்டுயினுந்
திருப்பழன முஞ்சோலையுஞ்
செங்கமல மிடையறப் பூத்துநீ ராமகளிர்
திருமுக மெனப் பொலிவுறுந்

தடமும்வெகு வளமுமிசை சேருமுது குடிநாட
சப்பாணி கொட்டியருளே
சந்திரகுல வெங்கடே சுவரரெட்ட சாமியொரு
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) சூல்கொண்டு - கருப்பவேதனை கொண்டு ; பறி - மீன் பிடிக்கும் கருவி ; வெள்ளிடை - குப்பையில்லாத இடம் ; சைவலம் - பாசி ; கரும்பொன் - இரும்பு குடம் போன்ற சங்குகள் கருப்ப வேதனை கொண்டு ஈனும் முத்தும், மீனையும், பாசியினையும் மள்ளா மீன் பிடிக்கும் கருவியால் ஒரு சேரக் கொணர்ந்து நல்ல நிலத்தில் கொட்டி மீனைமட்டும் எடுத்துக்கொள்ள அந்நிலத்தில் பாசிக் குப்பையில் அம்முத்துக்கள் தொகுதிகொண்ட இளவெயிற் கிரணங்களை வீச அங்கு வரும் உழத்தியர் அவைகளை எடுத்து ஒருபுறம் வீச அது ஒரு திட்டு என்று சொல்லு மாறு ஆக அதில் ஆமைகள் தூங்கும் வயலும் சோலையும் உள்ள நாடு என்க.

478 தீயெனக் கட்கடை சிவந்துபொறி சிந்தச்
செருக்களம் புக்குநோக்கிச்
சிரமுருள வுடல்புரள மாற்றலார் பேரணி
சிதைத்தேறி யாக்கிரமித்து

தூயவெண் சாமரை யிரட்டலென வேலவர்
துகைத்துமேற் சென்றுழக்கிச்
சுடரிரத வாசிக் குழாந்தத் தளிக்கத்
துடிக்கமேற் கடலில் வீழ்த்திப்

பாயொளிர் தருமணிக் கண்சூட்டி மோட்டாங்கப்
பணுடவிப் பஃறலைப்பொற்
பாந்தளுடல் சட்டைவிட் டோடநெட் டேறிநிரை
பாயும்வாம் புரவி நகுலர்

தாயெனத் தயவுபுரி இளைசைநக ராதிபா
சப்பாணி கொட்டியருளே
சந்திரகுல வெங்கடே சுவரெட்ட சாமியொரு
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) பொறி - நெருப்புப்பொறி ; மாற்றலார் பேர் அணி - பகைவர் செய்த உயர்ந்த வியூகம் ; வேல் மின்னியது சாமரை இரட்டியது போலும் என்றார். வேலவர் - வேற்படையையுடைய வீரர் ; வேல் — இது மற்றப் படைகட்கும் உபலட்சணம். வாசிக்குழாம் - குதிரைக்கூட்டம் ; மணி- மாணிக்கம் ; பாந்தள் - ஈண்டு ஆதிசேடன் ; குதிரை செல்லும் வேகத்தால் பூமியைத் தாங் கும் ஆதிசேடனுடைய மேற்றோல் உடலை விட்டு ஓடியது என்க.

479 வண்டுவிழி மடவியர் குழாங்கரம் கொட்டிநன்
மங்கலக் கும்மிகொட்ட
மணமுரசு படைமுரசு கொடைமுரசு மூன்றுநின்
மணிமுன்றி னின்றுகொட்ட

எண்டிசையின் வேந்தரும் தஞ்சமஞ் சேலெனை
இறைந்துதிறை கொட்ட வெதிரும்
இகலரசர் நெஞ்சமும் பறைகொட்ட வான்முகில்
என்றுமும் மாரிகொட்ட

விண்டலத் தமரர்மலர் மழைகொட்ட மாச்சுடர்
விரிக்குமொரு தினகரர்க்காய்
வேதியர்க ளுந்தர்ப் பணத்துநீர் கொட்டவிளை
யாட்டின்மெய் வெயர்வுகொட்டச்

சண்டப்பிர சண்டகோ தண்டக் கரங்கொண்டு
சப்பாணி கொட்டியருளே
சந்திரகுல வெங்கடே சுவரெட்ட சாமியொரு
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) தினகரன் - சூரியன் ; கோதண்டம் - வில் ; இகலரசர் நெஞ்சமும் பறைகொட்ட - "பூதல நடுங்க. . . . . . . விருவர்மாமனமும் பறையறைந்ததயர்வுடன் நடுங்க" என்ற இராயசூயச் சருக்கம் வில்லிபாரதம் 24-ஆம் பாட்டு காண்க.

## முத்தப் பருவம்

480 புடைபட விரட்டுந் தழைச்செவி யுவர்க்கிம்
புரிக்கோட்டு முத்துமேன
யுன்கோட்டு முத்தும் பணைத்திகிரி முத்துமம்
புயமுத்து மீனின்முத்தும்

தடைபடா தோங்குசெஞ் சாலிமுத் தும்பாஞ்ச
சன்னியத்தின் முத்தும்விடத்
தருகட் கடுங்கோப கட்செவியின் முத்துஞ்
சதிக்கராத் தலையின்முத்தும்

துடைபடும் குழலார் கழுத்துமுத் துங்கமுகு
தோன்று மணி முத்து மிப்பித்
துளிமுத்து மதிமுதது மீரமொன் றின்றிமேற்
சூட்டுக்கு ளாகிவிலையாய்க்

கடைபடுமிம் முத் தெலாம் முத்தன்று மதலைநின்
கனிவாயின் முத்தமருளே
கலைகற்ற வேங்கடே சுவரெட்ட மேந்திர நின்
கனிவாயின் முத்தமருளே. (1)

(1) உவர்க்கிம்புரிக்கோட்டு - பார்த்தற்கினிய கிம்புரிப்பூண் கட்டிய தந்தம் ; எனம் - பன்றி; பணைத்திகிரி முத்து - மூங்கிலில் தோன்றி சக்கரம் போலொளிவிடும் முத்து ; அம்புயம் - தாமரை ; மீன் - சுறுமீன் ; பாஞ்ச சன்னியம் - ஓர் வித சங்கு ; கட்செவி - பாம்பு ; கரா - முதலை ; குழலார் - குழலையுடைய பெண்டிர் ; கமுகு - பாக்கு மரம் ; இப்பி - சங்கு ; மதி - சந்திரன் ; ஈண்டு முத்துப் பிறக்கும் பல இடங்களையும் கூறியமை காண்க. இங்ஙனம் வரும் முன்னைய கொத்தின் 567-ஆம் பாட்டின் குறிப்பு காண்க.

481 மதிக்கின்ற நாற்சுருதி அந்தணர்ப வித்திரகர
வனசமலர் மலரவுயர்பன்
மணிமகுட ராசர்கர வனசமலர் குவியத்தி
வாகரனு மதியுமாகக்

கொதிக்கின்ற பொருநரிற் பொருகளத் தடுபடைக்
கோபத் திரைக்குரைகடல்
குட்டத்தி னுக்கொரு தழற்பகழி யாகவெதிர்
கொண்ட ரணவீரருக்குத்

துதிக்கின்ற வானுட் டரம்பையர்கள் மணமாலை
சூட்டநா டகக்காலுமாத்
தோன்றிடிற் கீர்த்தியொடு தோன்றுபுகழ் மேற்கொளத்
தோன்றுகொழு கொம்புமாகக்

கதிக்கின்ற இங்கிலீ சுக்கொடி யுயர்த்தவர்
கனிவாயின் முத்தமருளே
கலைகற்ற வெங்கடே சுவரெட் டேந்திரவுன்
கனி வாயின் முத்த மருளே. (2)

(2) வேங்கடேசுவரன் தானமளித்தலால் பிராமணர் கைகள் விரிந்து எற்றலால் சூரியன் முன் தாமரை மலர் விரிவது போன்றும் பகையரசர் தோற்று கரம் குவித்தலால் மதியின்முன் தாமரை குவிவது போன்றும் இருந்ததால் திவாகரனும் மதியுமாக என்றார். திவாகரன் - சூரியன் ; பவித்திர - பரிசுத்தம் ; பொருநர் - வீரர் ; குரை கடல் - சப்திக்கும் கடல் ; குட்டம்- திரள் ; தழல் பகழ் - நெருப்புப் போன்ற கணை ; 'ரணவீரருக்கு தேவப் பெண்கள் மண மாலை சூட்ட' என்க. கீர்த்தியொடு தோன்றுபுகழ் என்றார் கீர்த்திக்குச் சிவப்பு நிறமும் புகழுக்கு வெண்மை நிறமும் கூறப்படுவதால்.

482 வண்டார் கவுண்மத குண்டோ தரமுழு
மதமா மத்தகமேல்
வருசண் டாவுட னிருகண் டாமணி
மணியோ லிட்டசையக்

கொண்டா யுதமொடு தண்டா வயிரியர்
குழூமே லிட்டு வரக்
குரைமைக் கடலன்ன துரைமக் களுமுயர்
குடைமே லிட்டுவரத்

தெண்டா யுதனிரு தண்டா மரையடி
திசைநா டிப்பரவி
செங்கோ லொடுசுய விந்திராதிபர்
திருவோ லக்கமென

கண்டாய் பவனீதி ரண்டா ருனையுன்
கனிவாய் முத்தருளே
காசினி புகழ்வெங்க டேசுவ ரெட்டேந்திர
கனிவாய் முத்தருளே. (3)

(3) குண்ட+உதரம் - குண்டோதரம்–குடம் போன்ற வயிற்றை யுடையது, குணசந்தி; கண்டா - கொடி; கண்டாமணி - யானைக் கழுத்தில் கட்டும் மணி; வயிரியர் - பாடகர்; 'கண்டு ஆய்பவன்' நீ உனை(க்காண) திரண்டார்' எனக் கூட்டுக.

483 அஞ்சிவ ணங்கிய மன்னர் தமக்கினி
அஞ்ச லெனப்புரிவாய்
ஆர்கலி யுஞ்செல் வானர் வரும்பொழு
தார்கலி யுந்தெவ்வாய்

மிஞ்சிய துட்டர்கள் கிட்டர்க ளுக்கதி
விதரண முந்தருவாய்
விண்ணவர் மன்னவர் தருதுர கம்மென
விண்டிட மேல்வருவாய்

நெஞ்ச மகிழ்ந்து குகன்பதத் தாமரை
நினைதரு மபிராமா
நீடிய செல்வ வளம்பெறு மிளசை
நிறைந்த பரந்தாமா

கஞ்சம லர்த்திரு நாயக வொருநின்
கனிவாய் முத்தருளே
காசினி புகழ்வெங்க டேசுவ ரெட்டேந்திர
கனிவாய் முத்தருளே. (4)

(4) ஆர்கலி - கடல்; இவர் தன் கப்பலில் சென்றவர் சுகமே திரும்பி வந்தபோது மகிழ்ந்து பகையாய் மிகுந்த துஷ்டர்கட்கும், மற்ற நண்பர்கட்கும், கொடையளிப்பார் என முதலடியின் இறுதி அறிவிக்கிறது. தெவ் - பகை; விண்ணவர். . . . வருவாய் - தேவேந்திரன் செலுத்துகின்ற உச்சைச் சிரவம் எனும் குதிரைமேல் வருவது போன்று குதிரைமேலேறி வருகின்றாய். குகன் - முருகன்; கஞ்சம் - தாமரை.

484 கதிருங் கதிர்கா லுனதுமுகக்
கலைவெண் டிங்க ளமதுதிருக்
கரிய புருவச் சிகப்புமதில்
கலந்துவி சித்த விழிக்குணமும்

எதிர நடுக்கொண் டதிற்பூட்டி
இருந்த படிபார் வையின்கணையும்
எய்தும் படித்த குதியெனக்கா
தியைந்த துளையுங் கணையுருவி

விதிருங் குருதி மஞ்சனையாய்
மிகலும் பெறுமெம் முகமதிக்கே
மேலும் வெருவித் தன்னுளூற்ற
வெண்முத் தெடுத்துத் திறைதரல்போல்

முதிரும் பவள நிரை குவித்தோர்
முத்தந் தருக முத்தமே
மொழிதேர் வெங்கடே சுவரெட்ட
முகுந்தன் தருக முத்தமே. (5)

(5) விசித்த - கட்டிய ; கிரணங்களை வெளிப்படுத்தும் உனது முகக் கலையான வெண்மையான சந்திரனில் எங்களது கரிய புருவச் சிகப்பும் கலந்து கட்டிய கண்களது குணம்போன்று கோபத்தினால் வளைந்த அப்புருவ வில்லிலே பார்வையின் கணையைப் பூட்டி எய்வதற்குத் தக்கது என்று கூறுமாறு காதில் பொருந்திய குழையை ஊடுருவி நடுங்கும் இரத்தம்போன்று சிவந்த மேகம் போன்றவனே ; எம்முகச் சந்திரனைக் கண்டு இவ்வாறு கோபிக்கதகும். மற்றும் முகச் சந்திரனுக்கு மேலும் பயந்து தன்னுள் இருக்கும் முத்தினை எடுத்துத் திறை தருவதுபோல பவளம்போன்ற உதட்டினைக் குவித்து ஒப்பற்ற முத்தம் கொடு என்கிறார் கவி. தேர் - ஆராயும்.

## வாரானைப் பருவம்

485 அனகா வருகப் புகழுயர்ந்த
அதுலா வருக மனுநீதி
அய்யா வருக இளசைநகர்க்
கதிபா வருக விருநிதிசேர்

கனகா வருக ஐங்கணைப்பூங்
காமா வருக உதவுகொடைக்
கர்ணா வருக மடவியர்க்கோர்
கவனா வருக அறிதுயில்செய்

பனகா வருகச் சன்மார்க்க
பரணா வருக ககன்வசிய
பலிதா வருகப் புத்திரசம்
பன்னா வருக சிவக்கியான

சனகா வருக மிக்கசமஸ்
தானா வருக வருகவே
தமிழ்தேர் வெங்கடே சுவரெட்ட
சாமி வருக வருகவே. (1)

(1) அதுலன் - ஒப்பில்லாதவன் ; கர்னன் - இடையெழு வள்ளல்களில் ஒருவன் ; கவனன் - வேகமுடையவன் ;

486 சிந்தா மணியே குலவிளக்கே
செந்தா மரையே வலம்புரியே
தேனே பாலே சருக்கரையே
தெவிட்டா வமுதே கற்பகமே

சந்திரோ தயமே செண் பகமே
தனிவச் சிரமே மரகதமே
சாதிக் கரும்பே மருக்கொழுந்தே
சந்தக் குழம்பே நிறைகுடமே

நந்தாத் தவமே ஆணிமுத்தே
நறுந்தீஞ் கனியே நவரசமே
ஞானோ தயமே குணக்கடலே
நங்கட் கரசே நாயகமே

மந்தா நிலமே பரிமளமே
மகவே வருக வருகவே
மகிப வெங்கடே சுவரெட்டா
மகுடா திபநீ வருகவே. (2)

(2) சிந்தாமணி - தேவ இரத்தினம் ; இது நினைத்தாலே வேண்டியதைத் தரக்கூடியது. சந்தம் - சந்தனம் ;

487 துவளு மருங்கி னிலமடந்தைத்
துணைமென் களபப் பசுந்தேமல்
துள்ளிப் புள்ளிக் குவிமுலைமேல்
தொடும் வெண் கச்சுக் கவிந்ததெனத்

தவள மாட மிலங்கமின்னூர்
தனிப்பொன் னுலகத் தரம்பையர்பால்
தன்கை ரேகை காட்டவொரு
தளிர்க்கை நீட்டும் வேட்டமெனுப்

பவள நெடுவெண் கிளைமேலாய்ப்
படர்ந்த மகரக் கொடியுற்றுப்
பாவை யுடுத்த நீலமணிப்
பட்டா டையைப்போல் நிரைநிரையாய்க்

குவளை மலருந் தென்னிளசைக்
கோவே வருக வருகவே
கோல வெங்கடே சுவரெட்ட
குபேரா வருக வருகவே. (3)

(3) துவளும். . . . இலங்க - துவளுகின்ற இடையையுடைய பூமி தேவியின் இரண்டு மெல்லிய சுணங்கு படர்ந்து சந்தனக் குழம்பால் எழுதும் எழு அடையாளங்களில் ஒன்று பெற்றுக் குவிந்த நகில் மீது கட்டிய வெண்மையான கச்சு கவிந்தது போன்று வெண்மையான மெத்தைகள் விளங்க மின்னூர். . . . . வேட்டம் எனு - அத்தகைய மாடத்திலுள்ள பெண்கள் சுவர்க்க லோகத்திலுள்ள தேவப்பெண்களிடம் தனது கைரேகை காட்டுதற்காக தளிர்போன்ற கைகளை நீட்டுதற்கு விரும்பியது என்று சொல்லுமாறு ; சொல்லுமாறு குவளை மலரும் என்க. ஈண்டு காந்தள் மலரையே கைகளுக்கு ஒப்புமை கூறுவதாயினும் குவளை மலரைக் கூறியது செந்நிறம் பற்றிபோலும். பவளப் பாவை நெடுவெண். . . . குவளை மலரும் - பவளம் போன்ற சிவந்தநிறமுடைய ஆம்மாதர்கள் வெண் மெத்தைகள் மீது (பவளம் போன்று அடிப்பாகம் சிவந்து வெள்ளிய கிளையைப்பற்றி) தங்கிய சுறுமீன்போன்ற ஆபரணம் பெற்று (தங்கிய மகரந்தத்தை தன் கொடியிலே பெற்று) அவர்கள் கட்டிய நீல மணி பதித்த பட்டாடையைப்போன்று (நீலப்பூக்களை வெளிப்படுத்தின) வரிசை வரிசையாய் நீலோற்பலம் மலரும் இளசை நகர் என்க. பாவை - பாவனைச் சிறுமியராகும் பொம்மையு மாம்.

488 கைப்பட்ட மிகுமுழங் காற்பட்ட மிட்டுக்
கடாம்பட்ட வீரபட்டக்
கம்பவே ழுத்தில்வரு மெய்த்துரைப் பட்டங்
கதித்தபட் டாபிராமா

மெய்ப்பட்ட நற்புகழ் வெளிப்பட் டடங்காமல்
மேற்பட்ட மண்டலத்தில்
வெண்பட் டெனப்பாற் கடற்றிரை யெனத்தனி
விரிந்தகப் பட்டதென்னச்

செய்ப்பட்ட புவனம் படைக்கத் தலைப்பட்ட
தேவனுக் கேற்பட்டவோர்
செஞ்சூட்டு வெள்ளோ திமக்குழா மென்னச்
சிறக்கவளர் சமுகசுமுகா

மைப்பட்ட கண்ணார் மயல்பட்ட மால்கொண்ட
மதனமத னுவருகவே
மகுடா திபவெங்க டேசுவரெட் டேந்திரா
வாலசந் திராவருகவே. (4)

(5-ஆம் பாட்டின் ஓலை இல்லை)

(4) கைப்பட்டம். . . . கதித்த - இவ்வடியினின்று யானைக்குத் தும்பிக்கையில் ஓர் பட்டமும், முழங்காலில் ஓர் பட்டமும் நெற்றியில் வீர பட்டமும் கட்டுவரென்றும் இவன் துரை யென்று பட்டம் பெற்றவன் என்றும் தெரிகிறது. புகழுக்கு வெண்மை கூறுவது கவிமத மாதலால் மண்டலத்தின் வெண்பட்டென, பால் கடல் திரையென பிரமனது வாகனமான அன்னம் அன்ன வளர்கிறது என்று கூறுகிறார். ஓதிமம் -அன்னம் ; தேவன் - ஈண்டு பிரமன்.

## அம்புலிப் பருவம்

(முதல்பாட்டின் ஓலை இல்லை.)

489 பதினாறு கலையுன திடத்திலுண் டிவனிடம்
பல்கலை அனேகமுண்டு
பட்சமுன் னிடத்திலு மாறவுண் டிவனிடம்
பட்சமா றமலுண்டு

மதியே உனக்குமொரு கோட்டையுண் டிவனுக
வளர்கருக் கோட்டையுண்டு
வானிலக் கணமுணர்ந் தாய்நீ யிவன்கணித
வானிலக் கணமுணர்ந்தான்

கெதிகூடு முயலுன்ன திடத்திலுண் டிவனிடம்
கேள்விமுயல் மெத்தவுண்டு நீ
கிளையின்மிகு சந்திரகு லாதிபன் சந்திர
கிரிக்கதிப னெனவந்தவன்

அதியோக வானிவனும் நீயுமொப் பாமீவனோ
டம்புலீ யாடவாவே
அண்டர்கோ னிகர்வெங்க டேசுவரெட்டேந்திரனுடன்
அம்புலீ யாடவாவே. (2)

(2) சந்திரன்—

| | |
|---|---|
| (1) பதினாறு கலைப்பெற்றிருப்பான் .. .. | வேங்கடேசுவரன் பலகலைகளும் பெற்றிருப்பான். |
| (2) அமரபட்சம், கிருஷ்ண பட்சம் என்ற இரண்டிலும் வளர்வது தேய்வதுண்டு. | இவன் பட்சம் (அன்பு) மாறாமல் (எப்போதும் ஒரே நிலையாக) இருப்பான். |
| (3) ஒரு கோட்டை (பரிவேடம்) உண்டு. | மதில்களோடு கூடிய கோட்டை உண்டு. |
| (4) வானின் இயல்பினை அறிந்துள்ளான் .. | வான நூலிலக்கணங்களைக் கணித அறிவுடன் உணர்ந்தவன். |
| (5) வேகமாயோடும் முயல் (களங்கம்) பெற்றுள்ளான். | கேள்வி முயல் (முயலுவதை) உடையவன். (கேள்வி கற்றார் வழிக்கேட்டல்.) |
| (6) கிளைத்துவந்த சந்திர குலத்துக்குத் தலைவன் .. | சந்திரகிரி என்ற மலைக்குத் தலைவன். |

## தானம்.

490 பூதரம் பலதிரிந் துழந்தயர்ந்தா யுனது
பொருமலை முகம்பார்த்தருள்
புரிதலை யியற்றிக் களங்கம் துடைப்பனுயர்
பொற்கலையு ளோறுதலால்

பேதுறு முனக்கிசை பழங்கலை வளர்க்கலே
பெருநூற் பழக்கஞ் செய்வான்
பெற்றகூ னிமிர்கிலா யிவனோரா சிறியரின்
பெறுகூன் திருத்தியறியும்

சீதர னிவன்பாற் சவுக்கிய முண்டொருகட்
செவிப் பகையு மில்லையுன்போல்
தெள்ளமுத தருத்தியுடல் மலிவிப்பன் நீவந்து
சேரலே தென்னிளசையூர்

ஆதரம தாமுனது குறைதீரு மிவனுடன்
அம்புலீ ஆடவாவே
அண்டர்கோ னிகர் வெங்க டேசவரெட் டேந்திரனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(4, 5 பாட்டுக்களின் ஓலை காணப்படவில்லை.)

(3) பூதரம்—மலை. (மேருமலை) பொருமல்—அழாது விம்முகை. அருள்புரிதலை இயற்றி என்க. பொன்கலை—பொன்னாலாகிய உடை; இங்குக் கலை என்னும் சொல் ஒற்றுமை குறித்து உணக்கும் கலை அருள்வன் என்றார். பேதுறும்—மயங்கும்; பழங்கலை—தேய்ந்த பழைய

கலைகள் ; கலை—ஈண்டு சந்திரனின் வளரும் பங்கும் தேயும் பங்கும் இவன் தமிழ் நூல் பயிலுபவனாதலால் உனக்கும் பழங்கலை (படிப்பு) கலை வளர்ப்பான் என்றார். நூல் கற்று கலை பயிலுதல் நோக்கி. கூன்—வளைவான பாகம். சிறியர்—தன்னை மதியாப் பகைஞர் ; கூன்—ஈண்டு அறியாமை ; கட்செவிப் பகையில்லை என்றார் சந்திரனுக்கு இராகு வென்னும் பாம்பின் உபத்திரவமும் இவனுக்குக் கண், செவி (காது) குறையில்லாமையும் நோக்கி ; உன் போல் தெள் அமுது என்றார் வெள்ளிய பாலைக் கருதிப் போலும் ; ஆதரம்—விருப்பம்.

## சிறுபறைப் பருவம்

491 (முதலிரு பாட்டுக்களின் ஓலை காணப்படவில்லை.)

உற்றவர் கண்டு கிளைக்கணி யென்றகம
உருகி யணைத்திடவே
உய்த்த வுடந்தையர் சுற்றி வளைந்திடும்
உயர்மனை முற்றமலால்

மற்றை நெடுந்தெரு முற்று குறுந்தெரு
மதகரி கட்டியதேர்
மத்தக பந்தி முகப்பொடு பந்தடி
மணிதரு முற்றமெலாஞ்

சுற்று சதங்கை குலுக்கி நடந்திரு
சுவடு பதித்தணிதேர்
தொட்டு வளர்ந்த விரற்கிடு மிஞ்சிகள்
சுடர்விரி யத்தனியே

சிற்றடி மண்டல மிட்டு நிரந்தொரு
சிறுபறை கொட்டுகவே
செயசிங்க மெனும்வெங்க டேசுவ ரெட்டேந்திர
சிறுபறை கொட்டுகவே. (3)

(3) அகம்—மனம் ; பந்தி—கட்டுமிடம் ; மிஞ்சி—கையில் மோதிர விரலிலும் காலில் இரண்டாவது விரலிலும் அணியும் மோதிர வகை.

492 வெறிக்குங்கு மக்கலின் முதுகருந் தோள்மள்ளர்
விளைபுலத் துறுதொளிக்குள்
வீச்சிற் பரம்பினூர் பகடொன்று வால்சுழல்
வெறிவிப் பிணைமருப்பில்

குறிக்கும்வெள் ளல்லிமுகிழ் சுற்றிநீண் டசையவது
கூண்டவெண் சல்லிபோலும்
குளநீர்ப் படிந்திட வதிற்குரு கெழுந்தொரு
குறும்பலா மீதிருப்பப்

பறிக்குமாங் கனியா லெறிந்துகவி தாவப்
பறந்துகுரு கோலமிட்டுப்
பகர்வெள் ளிடைச் சேர வக்குருகை யயல்விளை
பருங்கரும் புறுமொழிகளில்

தெறிக்குமுத் தோச்சுதென் னிளைசைமுது குடிநாட
சிறுபறை முழக்கியருளே
செயசிங்க மெனும்வெங்க டேசுவரெட் டேந்திர
சிறுபறை முழக்கி யருளே. (4)

(4) வெறி குங்குமக் கலின்—வாசனை வீசும் குங்கும மலை போன்ற ; தொளி—சேறு ; பரம்பின் ஊர் பகடு ஒன்று சுழல் வால் வீச்சில் என்க. கூண்ட—கூடிய ; வெண் சல்லி—வெள்ளிய முத்தாபரணங்களாலான மாலை ; குருகு—அன்னம் ; கவி—குரங்கு ; உழவர் வயல் சேற்றினைச் சமப் படுத்த எருமைக் கடாக்கள் கட்டி பரம்படிக்க அதன் சுழல் கின்ற வால் வீச்சினால் இரண்டு கொம்பிலும் வாசனை குறிக்கும் வெள்ளல்லி அரும்புகள் சுற்றி நீண்டு அசைய அது கூடிய வெண்மை பொருந்த முத்தாபரணங்களாலான மாலை போலுமிருக்க, பின்னர் அவை குளத்தில் மூழ்க அதிலுள்ள அன்னங்கள் எழுந்து ஒரு குறும்பலா மீது உட்கார மாமரத்திலிருந்த குரங்குகள் மாம்பழத்தினலடித்து அம்மரத் திற்குத் தாவ அன்னங்கள் பறந்து ஒலமிட்டு ஒன்றுமற்ற நிலத்தில் சேர அவைகளை மாதர்கள் பக்கத்தில் விளைகின்ற பரிய கரும்பினைப் போன்ற இனிய மொழிகளில் பேசி முத்தினைக் கொண்டு ஓச்சுகின்ற இளைசை நகர் என்க.

493 கூர்க்கின்ற நெல்லின் முளைகுறு முளைக்கொள்ள
குடம்படு தடம்பணிலவாய்க்
குலமணிகள் மேல்மூட வலையா லரித்துமறு
கொல்லையி லணைத்தடைத்துப்

போக்கின்ற வண்டற் பெருங்குப்பை யிடையிடைப்
பெருவரம் பெனவளர்க்கப்
பெடைஞெண் டினுக்கமளி யென்றுகண் வளரப்
பிடிக்குமன் னியர் செங்கையால்

போர்க்கின்ற தவணைவீ ரித்தொரு குத்துப்
புறம்போக்கி யூதிநகையால்
பொய்கையினு முறுவலித் தவரவர் கடங்கண்மனை
புக்குண்டு கண்வளரமேல்

சேர்க்கின்ற வளமைசே ரிளைசைமுது குடிநாட
சிறுபறை முழக்கி யருளே
செயசிங்க மெனும்வெங்க டேசுவரெட் டேந்திரா
சிறுபறை முழக்கியருளே. (5)

(5) குடம்படு தடம் பணில வாய்க்குல மணிகள்—குடம் போன்று பொருந்திய சங்குகள் ஈன்ற சிறந்த முத்துக்கள் ; அமளி—படுக்கை ; மூன்றுவதடி சரிவர முதலிலேயே பிரதி செய்தவரால் எழுதப்படவில்லை. "அவரவர்கள் தங்கள் மனை" என்க. வயலில் விதை ந்த நெல் முளைகள் சிறிய முளைகளைக் கொள்ள, அவைகளைக் குடம் போன்ற சங்குகள் ஈன்ற முத்துக்கள் மேலே மூட வயலில் தோன்றிய நீரலைகளால் அரித்து அரித்து மறு வயலில் சேர்க்கின்ற வண்டல் குப்பையிடையிலே இம்முத்துகளும் நெல் முளைகளும் வரப்பைப் போன்று செய்ய ; அவ்வரப்பில் பெண் நண்டுகள் தமக்கேற்பட்ட படுக்கையென நினைத்துத் தூங்க தனைப் பிடிக்கும் உழத்தியர் என்க.

## சிற்றில் பருவம்

494 பொங்கோ தையின்நீர்ப் பெருக் கெனநாற்
　　புறமும் வளைந்த பொருநர்பெரும்
போரிற் புகுந்து யானைகண்ட
　　புகழ்க்கே சரிபோல் மாருடி

வெங்கோ பத்தின் யெதிர்ந்தசுத்த
　　வீரர் சிரத்தைப் பந்தாடி
வேழ மொருபால் பரியொருபால்
　　விருது மொருபால் சிதறவடித்

தெங்கோன் நீயே மீதூர்ந்தங்
　　தெதிர்ந்த பகைஞர் குடியிருந்த
எல்லைப் போரில் சிதைப்பது நல்
　　லியல்பா மிதுவுஞ் சிற்றிலன்றோ

செங்கோ லரசே யினிமுனியேல்
　　சிறியேம் சிற்றில் சிதையேலே
சிலைமால் வெங்கடே சுவரெட்ட
　　சேந்தர சிற்றில் சிதையேலே. (1)

(1) பொங்கு........பெருக்கு—மிக்க அலைச்சப்தமுள்ள கடல்; பொருநர்—வீரர்; யானை கண்ட புகழ்க் கேசரி போல்—யானையைப் பார்த்த சிங்கம் போன்று; விருது—வெற்றிச் சின்னம்.

495 குருத்த பெருவண் டலிற்றாளங்
　　கூட்டி மனையும் மனைச்சுவருங்
கோலிச் சங்கப் புதுக்கலத்திற்
　　குமுதத் தேனை யுலைப்பெய்து

பொருத்துங் குடக்கூன் பணிலத்தைப்
　　போத வடுப்பா யதிலேற்றிப்
பொருஞ்செங் காந்தட் கனல்மூட்டிப்
　　பூம்ப ராகப் புகைதிளைத்துக்

கருத்துக் கிசைந்த கன்னல்முத்தைக்
　　கையா லரிசி யெனப்புகட்டிக்
காம ரடிசி லெனவடித்துக்
　　காவிற் பலபூக் கொய்துகறி

திருத்திச் சமைத்த விளைவுகண்டாய்
　　சிறியேம் சிற்றில் சிதையேலே
சிலைமால் வெங்கடே சுவரெட்ட
　　சேந்தர சிற்றில் சிதையேலே. (2)

(2) வண்டலில் முத்துகளைக் கூட்டி வீடும் வீட்டுச் சுவரும் செய்து சங்கமாகிய பானையில் அல்லித் தேனை உலை நீராக வார்த்து குடம் போன்று வளைந்த பணிலத்தை அடுப்பாகவும் அதில் அப்பானையை ஏற்றி செங்காந்த பூவாகிய நெருப்பை மூட்டி பூவினது மகரந்தத் தூளாகிய புகை பெருக, மனத்திற்கிசைந்த கரும்பினின்றெடுத்த முத்துக்களை அரிசியாகக் கொண்டு கையால் அரித்துப் போட்டு அழகிய சோறு வடித்து, சோலையில் பல பூக்களைக் கொய்து கூட்டு, குழம்பு முதலிய கறி வகைகளைச் செய்து அமைத்தனர் சிறுமியர். பராகம்—மகரந்தம்; அடிசில்—சோறு.

496 கையாற் செறித்த பணிக்கிற்றில்
கற்றைத் தரளக் கல்லழுத்திக்
கழல்மெல் லிதழ்த்தா மரைக்காலுங்
கண்ணுஞ் சேப்பக் கன்றுவோ

மெய்யால் வெயர்த்த குறுவெயர்ப்பின்
வெள்ளப் பெருக்கால் மணிமார்பின்
மேலாய்த் தரித்த வல்லவட்ட
மெல்லா டைகளும் நனையர்வோ

அய்யா விதுரா வாதுலர்கட்
டழகா குழகா தாரணிக்கோர்
அதிபா துதிபா வலர்தமிழ்சேர்
அனகா சனகா வகளங்கா

செய்யா ரிளசை நகர்க் கிறைவா
சிறியேம் சிற்றில் சிதையேலே
சிலைமால் வெங்கடே சுவரெட்ட
சேந்தர சிற்றில் சிதையேலே. (3)

(3) கற்றைத் தரளம் கல்—தொகுதியான முத்துக்களான கற்கள்; கன்றுதல்—நோதல்; வல்ல வட்டமெல்லாடை—பூணூலைப் போல இடத்தோளின் மேலிருந்து அணியும் ஆடை; கழுத்தைச் சுற்றித் தொங்க விடும் ஆடையாகவும் கொள்ளலாம். ஆதுலர்—வறியவர்; அகளங்கன்—களங்கமற்றவன்.

497 வேரிச் சுனையிற் பாசடைமேல்
விரிந்த கமலத் தடைகிடக்கும்
வெள்ளோ திமந்தன் பிள்ளையென
விரித்த சிறகின் எடுத்தணைக்க

வாரித் தவளக் குடவளைகள்
வாய்விட் டொலிப்பக் கண்டுவெரீஇ
வான்போய் மீள வொலிவளைகள்
மலரி ஞெதுங்க வதுகண்டு

சாரிற் பெறுமெல் லடையிலிட்ட
தமது கருவென் றயிர்த்தயர்ந்து
தன்முட் டையிஞே டணைத்தணைக்குந்
தகைசே ரிளசை நகர்க்கதிபா

சீரிற் சிறந்த புகழ்க்கதிபா
சிறியேம் சிற்றில் சிதையேலே
சிலைமால் வெங்கடே சுவரெட்ட
சேந்தர சிற்றில் சிதையேலே. (4)

(4) வேரி—தேன்; பாசடை—பசிய இலை; தேன் பொருந்திய சுனையில் பசிய இலை மீது விரிந்த தாமரையில் சேர்ந்திருக்கும் வெள்ளையன்னம் தன் பிள்ளையோவென்று குடவளைகளைத் தன் விரித்த சிறகின் கண் வாரி எடுத்து அணைக்க வெள்ளி அச்சங்குகள் வாய் விட்டுக் கதற அச்செயல் கண்டு பயந்து ஆகாயம் பறந்து மீள அதற்குள் வளைகள் மலர்க்குள் மறைந்து விட கரையில் இருக்கப்பெற்ற மெல்லிய இலைகளில் இட்ட தமது முட்டைகளோ என்று முத்துக் களைக் கண்டு சந்தேகித்துத் தளர்ந்து தன் முட்டைகளோடு அணைக்கும் தகையுள்ள இளசை நகர் என்க. சார்—அணைக்கரை.

498 புனலி னடுமள் ளியர்வதனப்
பூந்தா மரையும் விழிக்குவளைப்
பூவுந் துவர்வாய்க் குமுதமுமம்
பூவி னிடைவெண் ணகைமுத்துங்
கனகக் குழைவான் வள்ளைகளுங்
கருங்கே சத்தின் சைவலமுங்
கானமிடற்றின் வரிவளையுங்
களபக் கலவைக் கவின்விம்மத்
தனமுண் டகமொக் குளுந்தெரியத்
தகுந்தண் ணக்காற் கடைஞரதில்
தன்கை யளாவக் காணுது
தடஞ்செய் சூழ்வந் துடன்கோணுத்
தினமும் வளங்கூ ரிளசை நகர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிலைமால் வெங்கடே சுவரெட்ட
சேந்தர சிற்றில் சிதையேலே. (5)

(5) தண்ணங்கால்—நீரையுடைய நாற்றங்கால்; தண்—நீர்; நாற்று நடுகின்ற உழத்தியர் வதனமாகிய தாமரைப்பூவும், கண்களாகிய குவளைப் பூவும், பவளம் போன்ற உதடுகளையுடைய வாயாகிய அல்லி மலரும் மேற் கூறிய பூக்களினிடையே வெள்ளிய பற்களாகிய முத்தும் பொன் குண்டலமணிந்த காதுகளாகிய வள்ளைப் பூக்களும் கரிய கூந்தலைப் போன்ற பாசியும், பாட்டிசைக்கும் மிடற்றினை யொத்த சங்குகளும் வாசனை சாந்து பூசி அழகு பொருந்தி விம்மும் முலைகளாகிய தாமரை அரும்பும் நீரில் தெரிய உழவர் அம்மலர்களையும் அரும்புகளையும் பறிக்க நினைத்து கையைத் துழாவ காணுது பரந்த வயலைச் சுற்றி வந்து முகம் கோணும் அத்தகைய வளமிக்க இளசை நகர் என்க. தடஞ் செய்—பரந்த வயல், தட—உரிச் சொல் கோணு—செய்யா என்ற வாய்ப்பாட்டு வினையெச்சம் செய்து எனத் திரிந்து; முண்டகம் மொக்குள்—தாமரை யரும்பு.

## சிறுதேர்ப் பருவம்.

499 கூர்க்கின்ற வண்டப் பரப்பினை விளக்குமொரு
குலவிளக் கென்ன செங்கட்
கோரவட் டப்பருதி யொருவட்ட வாழிக்
கொடிஞ்சிமான் தேருருட்டப்

போர்க்கின்ற மெய்க்கட் பெரும்பாக சாதனப்
புத்தேளிர் தொல்லைமான
புரிசுடர் விமானப் புலன்சக டுருட்டநிறை
புவனசக் கிராதிபதிநீ

ஆர்க்கின்ற தன்னுணை வழிசெலச் சக்கரத்
தகல்வட்ட மேலுருட்ட
அருள்பெருகு கழுகுமலை முருகர்திரு நாள்விழா
அணிகொடு கொடுங்கைகுடமேல்

சேர்க்கின்ற சித்திரப் பெருந்தே ருருட்டவிச்
சிறுதே ருருட்டியருளே
சிம்மா தனுவெங்க டேசுவரெட் டேந்திரா
சிறுதே ருருட்டியருளே. (1)

(1) பருதி—சூரியன்; கூர்க்கின்ற........வட்ட இது வரை சூரியனுக்கடை; ஒரு வட்ட ஆழி—ஒற்றைச் சக்கரத் தேர்; மான்—மான என்பது இனியன நின்றது பாக சாதனன்—இந்திரன்; புத்தேளிர்—தேவர்; கொடுங்கை—வெளிப்புறம் நீண்டு வளைந்துள்ள தேரின் ஓர் உறுப்பு; சூரியன் ஒற்றைச் சக்கரத் தேருருட்டுவது போன்றும் இந்திரன் முதலிய தேவர்கள் தேரில் ஊர்வது போன்றும் உருட்டுவாய் என்னும் கழுகுமலை முருகர் திருநாள் விழாவில் சித்திரத் தேர் உருட்டுவதற்கு இப்போதே தேரினை உருட்டுவாய் என்றும் கூறுகிறார். இவன் முருகர் விழாவில் தேர் விழாச் செய்வதோ தேர் வடம் பிடிப்பதோ உண்டு எனத் தெரிகிறது.

அதிரத மகாரதச் சமரத ரர்த்தரதமென
ஆனநால் வகையிரதமேல்
ஆயதொல் லதிபர்தார்க் கோனும்வட முங்கொண்
டணிந்துறு திசைதிசையினும்

கதிபெறக் கடவுமொரு சாரத்திய மாத்தொழில்
கடந்துநின் கரசரணதீர்க்
கப்பெரு விசித்திரங் கண்டுகண் களிகொளக்
காலிடு கழற்கலிப்பப்

பதியுந் தடத்திடை துகள்படல மண்டவெழு
படல்மேதப் பொழிமுகிலெனப்
பாய்கழற் கலிசகட வட்டநெட் டேறப்
பணிச்சர ணழுத்தியீட்டித்

திதிதரு தயித்தியரை வென்றபொற் காண்டீப
சிறுதேர் உருட்டியருளே
சிம்மா சனுவெங்க டேசுவரெட் டேந்திரா
சிறுதேர் உருட்டியருளே. (2)

(2) அதிரதன்...........அர்த்தரதம்—வீரர்களை நோக்கி இரதமும் நால்வகையாகப் பிரித்தார்; வடம்—குதிரைக் கயிறு; சரணம்—கால்; மேதம்—தசைக் கொழுப்பு; திதி தரும் தயித்தியர்—காசிபன் மனைவியான திதி என்பவள் பெற்ற அசுரர் இப்பாட்டில் அருச்சுனனுக்கு ஒப்பிட்டிருத்தல் காண்க.

501 கச்சணி மகுட முலேக்குட மடவியர்
கட்டழ குடனுசை
கற்பித முறமட லிட்டணே மிசையொரு
கைச்சுருள் தரும்வேளே

யச்சன முபரி தொடுத்தெழு கல்வியி
தற்புத மெனமேலே
அச்சுறு சகடென மெய்த்திரு கணிசெய்
ததிற்கரி கரம்நீடி

வச்சித மறவரு மெய்ச்சுக பரவச
வர்த்தனே பெறுபோகம்
வர்க்கமொ டொழுகு தமிழ்க்கடல் பெருக
மணத்தொடு புணர்காமா

உச்சம சுபமோ டுரத்தொரு சரணின்
உருட்டுக சிறுதேரே
உற்பன மிகுவெங்க டேசுவ ரெட்டேந்திர
உருட்டுக சிறுதேரே. (3)

(3) மடவியர்—பெண்கள்; மடல் இட்டு அணே மிசை; அணே—படுக்கை; சுருள்—வெற்றிலேப் பாக்கு; (தாம்பூலம்); உபரி—அதிகமாய்; அச்சனம்—அக்ஷணம் என்பதன் வடசொல் போலும்; சகடு—சக்கரம்; கரிகரம்—சுரத லீலே வகை; அச்சுடன் கூடிய சக்கரம் போன்று பெண்கள் காதிலணியும் திருகாணி என்க. செய்தாவது—அலங்கரித்து என்க; உரம்—வலிமை; உற்பனம்—கல்வி; காமா—மன்மதனேயொத்தவனே.

502 வள்ளற் குச்சரி யாய்நிதி தரவரு
வரதனேப் பெறுதியாகா
வள்ளத் திற்றிரள் பாலன முதவி
வளர்த்திடு மனுகூலா

கள்ளப் பற்றலர் மார்பிடை யுருவு
களிப்புடை வடிவேலா
கல்விக் குப்பெரி தாயதனருமை
கணித்தவி தரணீக

விள்ளச் சொற்பிச காநிச வசன
விதட்சண சுகுணுளா
வெல்வித் தைக்குல கோர்புகழ் பொதிகை
அகத்தியர் நிகர்வோய் நீ

உள்ளத் திற்கனி வாய்வளர் நிருப
உருட்டுக சிறுதேரே
உற்பன மால்வெங்க டேசரெட் டேந்திர
உருட்டுக சிறுதேரே (4)

(4) வள்ளத்தில் திரள் பாலனம்—கிண்ணத்தில் திரண்ட பாற்சோறு.

# புதுவை அருணாசலம் பிள்ளைத் தமிழ்

துதி

### குருகையிலுள்ள திருமால் (ஆதிநாதர்)

503 பூமேவு தவள நிற மாங்குயில் விரும்பிவாழ்
புனிதன் சிறக்கவுந்தி
பூத்தோனை வாலிபங் காத்தோனை யொப்பில்மணி
பூண்டோனை வண்ணமுகிலைத்

தேமேவு பச்சைச் செழுந்துளப மார்பனைத்
திருமங்கை மணவாளனைத்
தென்குருகை நகராதி நாதனைப் போற்றியே
திருவடி வணங்குவனியான்

பாமேவு செந்தமிழ்ப் புதுவைநக ராதிபதி
பாக்கியநிறை யோகசாலி
பரராசர் மெய்த்தசர வண......னவர்
பாலனனு கூலலோலன்

நாமேவு கலைவாணி யருள்பெருக வளருமரு
ணாசலந ரேந்திரன் மீதில்
நவரசந் தருமினிய........பிள்ளைத் தமிழ்ப்பாடல்
நாளுநாளும்பாடவே. (1)

(1) தவள நிற பூமேவு மாங்குயில் விரும்பி வாழ் புனிதன்—வெண்ணிறத்தாமரையில் அடைகின்ற குயிலொத்த கலைமகள் விரும்பி நாவில் வாழ்கின்ற பிரமன். உந்தியில் பிரமனைப் படைத்தது காண்க. வால் இபம்—பெரிய யானை (கசேந்திரன்). ஒப்பில் மணி—விலை மதிக்க முடியாத கௌஸ்துபரத்தினம்; குருகை நகர்—நம்மாழ்வார் பிறந்த சிறப்புடையது (இங்குள்ள திருமாலின் பெயர் ஆதி நாதர்); நவரசம்—உவகை, வெகுளி முதலியன.

## காப்புப் பருவம்.

### திருமால்

504 உக்கிரநர சிங்கவடி வாகமத லைத்தலை
உதித்தகரு மணிவண்ணனை
உம்பரக......தி பரமபத நாதனைவிண்
ணோர்க்கமு தளித்தமாலை

விக்கிரம சொரூபனைப் பகற்கதிர் மனத்துடன்
வெளிவிட்ட சூத்திரதரனும்
விமலனை....பரை யாழிநீர் வண்ணனை
வியந்தனு தினந்துதிப்பாம்

சக்கர கரதல சுழகனிர வலர்கள்கலி
　　கோபதாட் டீகணீத
குணுவ சரசநய......வன்முத்து பூபனருள்
　　தனம்புத்தி ரன்மேன்மையா

மூக்கியவத ஞம்புய வசீகர மடந்தையர்
　　மோகிக்கு மதனராசன்
முப்புவி யே......திகழு மருணு சலாதிபதி
　　முத்தமிழ்க் கவிதழையவே. (1)

(1) மதலைத் தலை—தூணிடம்; விக்கிரமம்—மிகு பலம்.

## சிவபெருமான்

505 கயிலைப் பனிவரை யுரைத்த பிரவாகங்
　　கங்கை வுவந்தபிரான்
கலைமான் மழுவிலை வேல்..............
　　...............தலவித்தாரன்

மயிலைக் கடவும் குருதே சிகனை
　　வணங்கிய நம்பரமன்
வான்பிறை சூடுந் தாண்டவ ராயன்
　　மலர்த்துணை போற்றுதுமியாம்

குயிலைப் பணிமொழி கொண்டுடன் வென்றிசை
　　கூறுஞ் சிறு மடவார்
கோமான் பூமான் இணைபிரி யாதருள்
　　கூருஞ் செகராசன்

வெயிலை..............டையான்
　　மேன்மையில் நன்குடையான்
வேள்ரு ணுசலப் பூபன் மகிழ்ந்த
　　விசைத்தமிழ் நன்குறவே. (2)

(2) கங்கைப் பிரவாகம் என்க. உவந்த—தலைமேல் வைத்து வந்த; மயிலைக் கடவும் பரமன்—பிரணவத்திற்குப் பொருள் தெரியாத பிரமனைச் சிறை செய்த முருகன் பின் சிவன் அதன் பொருள் கேட்கக் கூறினவன் எனவே "குரு தேசிகன்" என முருகனைக் கூறினார்; தாண்டவராயன்—நடனமாடுபவன்.

## முருகன்

506 கற்பகச் சோலையுஞ் சாலையுஞ் சூழ்ந்த
　　.............ங்
காரிகே ளவுமாரி திரிசூலி பழநீலி
　　முக்கட் கபாலிபாலன்

பொற்பிலகு வடிவேல் விடுத்தசுரர் கிளையெலாம்
  பொன்றுவித் திடு........
பூர்ணோத யசொரூ பானந்த முருகனிரு
  பொற்பதம் வழுத்துவன்யான்

சற்புருட மகமேரு நிகர்சொலபி மானவுத்
  தண்டபிர சண்ட....ல்
சனரட் சைடிரி யுத்தம குணதரன்
  சவுலப்பிய தியாகவாரி

உற்பன மிகுத்தவறி வாகர தயாபரன்
  உற்ற தரங்கமுரவோன்
........ச்சந்திர னருணச லேந்திரனன்
  புற்றபிள் ளைத்தமிழ்க்கே. (3)

(3) முக்கன் கபாலி—மூன்று கண்களையுடைய சிவன் ; விடுத்து அசுரர் என்க ; சவுலப்பியம்—சுலபமாந்தன்மை ; உற்பனம்—கல்வி.

## திருச்செந்தில் முருகன்

507 புகரற்ற பச்சிளந் தோகைமயில் வெற்றிவாம்
  புரவிவேற் குமரேசனைப்
புகர்முக மதுகொண்ட விருசெவிக் கவுள்மதப்
  போர்வா ரணத்துணை வனைக்

ககனமட் டுயர்கோ புரத்திரு மருங்குமொளிர்
  கதிர்மதி மருண்டுலாவக்
காதல்கூர் செந்திலம் பதிவந்த கந்தனை
  உகந்துயாம் சிந்தைசெய்வாம்

நிகரற்ற பிரதாபப் பிரசங்கக் கடற்புலவர்
  நெறிகுணங் குலமுணர்ந்து
நேரறிந் துபசரித் துபகார சிறந்தாரம்
  நித்திய மளிக்கும் வள்ளல்

தகரக்கு ழற்பெண்ணர் மதணனரு ணசல
  தயாபரன் வாசுபுத்திரன்
சரச்சர வணமுத்து ராசேந்திரன் மதலைபெறு
  தண்டமிழ் தழைவதற்கே. (4)

(4) புகர் அற்ற—குற்றம் அற்ற, மயில் வாகனமாதலால் மயில் புரவி என்றார் ; புகர் முகம்—புள்ளிகளையுடைய முகப்படாமுள்ள முகம் ; கவுள்—கன்னம் ; வாரணம்—சண்டு விநாயகன் ; கதிர்மதி—சூரிய சந்திரர், உம்மைத் தொகை ; பிரதாபம்—கீர்த்தி ; ஆரம்—முத்து மாலைகள் ; தகரம்—ஒரு வகை மயிர்ச் சாந்து.

### விநாயகன்

508 மருப்பைத் தனித்தொன் றொடித்தூசி
வடிவத்தி னாக்கிக் கரத்தெடுத்து
மாபா ரதமாங் கதைப் பொருளின்
பகுப்புத் தொகுத்து விரித்தொளிர்பொற்

பொருப்பைப் பணித்துத் திருத்தியதில்
பொறித்த திறத்த மதத்த துணைப்
புழைக்கைத் துதிக்கை களிற்றையுவப்
பொடுசிந் தித்துத் தொழுதெழுவாம்

தருப்பைச் சயினத் தெழுநாண்மெய்த்
தடங்கண் வளர்வான் போன்றுறங்காத்
தாமோ தரநன் மருகன்மலர்ச்
சரணம் மறவாத் தகுதிபெற்றான்

கருப்பைத் தரித்தாட் டியசாற்றைக்
கலந்த சுவைப்பால் மொழிவிளம் பூரி
கருணை யருணா சலம்பிள்ளைக்
கவியைப் பாடித் துதிப்பதற்கே (5)

(5) மருப்பை............ களிற்றை ; முன் பிள்ளைத் தமிழ்க் கொத்து 34-ம் பாட்டின் குறிப்பில் இவ்வரலாறு காண்க. பொன் பொருப்பு—மேருமலை. புழைக்கை—துளையுடைய கை ; தருப்பை..................வளர்வான்—இவன் ஸ்ரீ ராமன். வருணன் கடலணை கட்ட துணை புரிதற்காக அங்ஙனிருந்தான். உறங்கா—செய்யா என்ற வாய்ப்பாட்டு வினையெச்சம் செய்து எனத் திரிந்தது. மருகன்—ஈண்டு முருகனைக் காட்டியது. கருப்பு—கருப்பு "மென்றொடர்மொழி........மன்னே" என்ற விதியால் ஆனது. பால் மொழி—உவமைத் தொகை. சுவை மொழி பால் மொழி யெனக் கூட்டுக.

### நம்மாழ்வார்

509 கற்றசொற் பாவலர் தம்பிரா னெம்பிரான்
காரியார் நங்கை புத்திரன்
ககனநெடு முகடகடு மெட்டோங்கிய திருப்புளிக்
காவணத் திலகுகதிரோன்

குற்றமற் றுலகெங்கும் ஞானப் பிரகாசக்
கொழுந்துவிட் டுப்பரந்த
குருகைநம் மாழ்வார் பதாம்புய மலர்த்துணை
குறிக்கொண்டு தொண்டுபுரிவாம்

பற்று மவற்றடரு மிருளந்த காரப்
பரப்பகற் றும்திறத்தாற்
பாற்கதிர் சிறந்தவாண் முகசுந்த ரோதையன்
பாக்கிய சிலாக்கிய நிபுணன்

உற்றவர்க் கதித்தியாக கனதானபாரியன்
புள்ளவரு ணாசலேந்திரன்
உகந்தக மகிழ்ந்தபிள் ளைக்கவிப் பாடல்
உலகமெங் கும்பெருகவே. (6)

(6) காரியார் நங்கை புத்திரன்—காரியார் என்பவருக்கும் உடைய நங்கையார் என்பவர்க்கும் பிறந்தவர். புளிக்காவணம்—அழுதல், பாலுண்ணுதிருத்தல் ஆகியவைகளைக் கண்ட தாய் தந்தையர் அவ்வூர்க் கோயிலிலிருந்த புளிய மரத்தடியில் தொட்டிலில் வளர்த்திப் போற்றினர். அனந்தாழ்வாரே அத்தகைப் புளிய மரமாக வந்திருந்தனர். குற்றமற்...... பரந்த—இவரிவ்வாறிருக்க திவ்விய தேச யாத்திரை சென்ற மதுரகவியார் அயோத்தியிலிருந்த போது ஓரொளி தெரிய அதுவே பற்றுக் கோடாக வந்து நம்மாழ்வாரைக் கண்டு கேள்விகள் பல கேட்டுச் சீடரானார். அனதானபாரி—அன்னதானம் செய்வதில் பெரியன். பாரி+அன்புள்ள என்று பிரிக்க.

## பிரமன் முதலியோர்

510 அரவணை யிற்றுயில் மரகத மணிவண்ணன்
அணியுத ரத்துந்தி
அம்புய மலர்மேல் தோன்றிய நான்முகன்
அட்ட வசுக்கள்விசும்

பிரவி யெனப்பகற் பொற்பன் னிருவ
ரிதன்றிப் படரநில
வாலி மகானென்று விளங்கும் கலைமதி
வரகன் னியர்மாதர்

பரவத் தருமருள் பெற்றவ ரெழுவர்கள்
பண்புறு பிதிர்த்தேவர்
பழைய மருத்துவ ரதுமதிரு நாதர்
பாதம் வணங்குதுமியாம்

குரவர்க் கடிமைத் திறமே புரியுங்
குவளைப் புயசயிலன்
கொங்கலர் சண்பக நாண்முகை நாசிகை
கூறுங் குமிழ்மின்னார்

*சரசத் துவதுரை சரவண முத்துள
மகிழ்ந்ததுவ் வறிவாளன்
சமுகா திபர்புகழ் அருணா சலதண்
டமிழப் பண்புறவே. (7)

(7) உந்தி – கொப்பூழ் ; இரவி......பொன்பன்னிருவர் – அழகிய பன்னிரண்டு சூரியர் ; வாலி – வெண்மையையுடையவன் (வால் – வெண்மை) வாலி கலைமதி என்க, (மதி – சந்திரன்) ; பரவ அருள் தரும் கன்னியர் மாதர் எழுவர்கள் – சப்தகன்னியர், அபிராமி, வராகி, காளி முதலியோர். மருத்துவர் – பதினொரு பேர் ; குரவர் – ஐம்பெருங்குரவர், தந்தை, தாய் முதலியோர்; குவளைப்புய சயிலன் – செங்கழுநீர்மாலை கொண்ட தோள்களாகிய மலையை யுடையவன்.

* இவ்வடி மிகையாக உள்ளது.

## செங்கீரைப் பருவம்.

511 பார்பூத்த பூம்பொகுட் டகவிதழ் நெகிழ்ந்துநறை
பாய்கமல மண்டபத்துப்
பரிவுறும் பேட்டனங் குடிகொண்ட தொப்பவிரி
பத்மமா னரசிருந்து

நேர்பூத்த கருணைவிழி மழைமாரி சொரிவதன
நிருபனட லாழியொலிபோல்
நிகழ்கால மணமுரசு செயமுரசு கொடைமுரசு
நின்றதிரு மணிமுன்றிலான்

வார்பூத்த குங்கும கதம்பப் படீரமான்
மதபயோ தரமினார்க்கு
வாலசீ வகனுை கோலாக லப்பிரவுட
மதிமந்திரி இந்திரதருவாய்

*வளமைபெறு தருவைய முத கவர்ந்த புதுவை
நகர்வந் தவதரித்தோன்
சீர்பூத்த கல்விகவி தைப்பொருள் விளங்கநீ
செங்கீரை யாடியருளே
செல்வமுகி லெங்களரு ளுசல நராதிபதி
செங்கீரை யாடியருளே. (1)

(1) பத்மமான் – திருமகள் ; நிருபன் – ஈண்டு திருமால் ; அடல் ஆழி – வலிய சக்க ராயுதம் ; அடல் ஆழி ஒலி போல் – சக்கராயுதம் விடின் சப்தித்துக்கொண்டு செல்வது போன்றொலிக்கின்ற முரசு என்றும் (அல்லது) அவன் துயில்கின்ற வலிமைமிக்க பாற்கடல் போன்று ஒலிக்கின்ற முரசு என்றும் கொள்ளலாம். வாலசீவகன் – தூய்மையையுடைய சீவகன் போன்ற ; சீவகன் – சச்சந்தனுக்கும் விசயைக்கும் பிறந்தவன். பிரவுடன் – பெருமை மிக்கவன்.

512 முக்கட் பராபரன் செஞ்சடைக் காடரவு
முதிரிளம பிறை யறுகுதேன்
துமொய்த்தசிறு தும்பையுட னக்குமணி கொக்கிறகு
முற்றுமொரு மித்தணிந்தோன்

புக்கத் தினங்குபொதி யரசவரி புற்பவப்
பைந்தொடி யுவந்த பெம்மான்
பளபளென நீற்றொலி பழுத்தமழு வாளியுற்
பனமிக்க தத்துவத்திற்

கக்கிச பிரணவப் பொருள்வினவ வுண்மைமொழி
கனிவுதர வினிதுரைத்த
கந்தனைப் பரிமள சுகந்தனைச் சிந்தனைசெய்
கற்பகா டவியொத்தநீ

* இவ்வடி மிகையாக உள்ளது.

செக்கச் சிவந்தமுர்த மொக்கச் சுரந்தொழுகு
செங்கீரை யாடியருளே
தென்புதுவை வாழுமரு ணசல நராதிபதி
செங்கீரை யாடியருளே. (2)

(2) அரவு – பாம்பு ; அக்கு – எலும்பு ; மணி – உருத்திராக்கமணி. முற்றும் ஒருமித்து – முழுவதும் ஒரு – சேர ; அரசஅரி – தலைமை பொருந்திய இமயமலை ; உற்பவம் – உற்பத்தி ; பைந்தொடி – பார்வதி ; மழுவாளி – மழுவாயுதத்தை ஆளுபவன் ; உற்பனம் – கல்வி ; கக்கிசம் – பிரயாசம்.

513 வண்டின மணுகா கனிவா யிதழ்முன் காசல
வாருதி வந்துதியா
வமுதக் கனிரச மின்சுடர் வீசிய
வான்மதி யுடையபிரான்

உண்டிலை யென்றுரை யாத குபேரன்
உததித் தடவெட்டோ
டுலவிய வாரண வாம்பரி யுள்ளம்
உணர்ந்தறி கின்றநளன்

மிண்டிய கண்டகர் தெண்ட ணிடப்பணி
விடையுத வியசோமன்
மேவலர் வலையத் தரணி புரந்துயர்
விக்கிரம ராசன்மடுத்

தெண்டிரை துன்றிய புதுவைப் பதியாய்
செங்கோ செங்கீரை
திருவருள் பெறுமரு ணசல முகிலே
செங்கோ செங்கீரை. (3)

(3) சலவாருதி வந்துதியா அமுதம் என்க. கனி ரசம் – கனியின் ரசம் போன்ற சுவை மிக்க சொற்களையுடையவன். இன்சுடர் வீசிய வான்மதியுடைய பிரான் – இனிய தண்ணொளி வீசுகின்ற உயர்ந்த மதியையணிந்த சிவபெருமானையொத்தவன் (அல்) தன் புகழால் ஒளி வீசும் உயர்ந்த புத்தியுடையவன் என்னலுமாம். உததி – கடல் ; வாரணவாம்பரி – யானையும் தாவும் குதிரைகளும் (உம்மைத்தொகை) மிண்டிய கண்டகர் – நெருங்கிய கொடியோர் ; பணிவிடை – வேலை ; மேவலர் தரணி வலையம் என்க ; துன்றிய – நெருங்கிய.

514 காமா(வு) தருகா வடுவிழி பாய்ந்து
கலக்க வலக்கணுறுங்
காதகர் பாதகர் இறுமாந் திழிதொழில்
கற்ற மதோன்மத்தர்

பூமா ஞெடுமெழில் மாமா னணுகாப்
பூதா முடர்தம்மைப்
பூசா பலமக ராசனெ னக்கலி
புகலிச தவனிதொழுந்

கோமா னிவனென வலியோ ரெளியோர்
கூறுங் கொடைநிபுணு
கொங்கர் தெலுங்கர் கலிங்கர் வணங்கிய
கொற்றவா மகிழரசே

தேமாங் கனிகத லிக்கனி மொழியாய்
செங்கோ செங்கீரை
திருவருள் பெறுமரு ணுசல முகிலே
செங்கோ செங்கீரை. (4)

(4) அலக்கண் – துன்பம்; பூமான் – பூமிதேவி; எழில் மாமாள் – இலக்குமி.

515 தடமொத்த நாண்மலர்வி கற்பத்து வரவுபொற்
றுமரைத் தோற்ற மென்னச்
சந்தன தெர்குதி நாப் பண்புதிய கற்பகத்
தருவுயர்ந் தொளிர்வதென்னச்

சுடர்வச்சிர மணிதுற்று மகுடத்தி னுச்சியில்
தோன்றுமா ணிக்கமென்னச்
சுரிமுகச் சங்கக் குரேத்திடை வலம்புரி
துலங்கிய சிரேட்டமென்னப்

படரு நீ ருண்ட நெடு விண்ணில்நட் சத்திரப்
பத்தியில் சந்திரனென்னப்
பகீரதி குலத்துவே ளாண்மரபில் வந்துற்
பவித்திசை நடாத்திமருளாத்

திடபுத்தி சாலிசர வணமுத்து பாலன் நீ
செங்கீரை ஆடியருளே
சீர்பெருகு மின்சொலரு ணுசல மகிபனே
செங்கீரை ஆடியருளே (5)

(5) நாப்பண் – நடுவிடம்; கற்பகத்தரு – கற்பக மரம்; துற்று – உள்ளே அழுக்கின; சுரி முகம் – சுழிந்த முகம்; பத்தி – வரிசை; பகீரதி குலத்து வேளாண் – கங்கைகுல வேளாண் மரபு; மருளா – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்.

## தாலப் பருவம்.

516 கருவைப் புனிதப் புனலில் செலவிடு
கற்பனை யைத்தெளியார்
காதலி யுடன்மண வாள்ன் முயங்கிய
கட்டளை யைக்குறியார்

உருவைப் பருவத் தொடுபரி பாலனம்
உற்ற சமத்துணரார்
உச்சித மாயை மயக்கிய கருமத்
துறைகா ரணநினையார்

குருவைப் பணியத் துணிவற் றிருவினை
    கூடா நெறிசேரார்
குவலய வாழ்க்கையி தென்று சினந்து
    குழைந்தழல் தவிர்தி செழுந்

தருவைப் பரவைப் புதுவைப் பதியாய்
    தாலோ தாலேலோ
தருமத் துரையரு ணாசல மகிபா
    தாலோ தாலேலோ (1)

(1) முயங்கிய – தழுவிய ; உச்சிதம் – தகுதி ; பரவைப்புதுவை – கடல் ஆழ்ந்த புதுவை என்க. கருப்பிறக்கும் விதம், கணவன் மனைவி சேர்க்கை, பருவத்தின் பிரகாரம் வடிவம் மாறுகின்ற விதம், தகுதி பொருந்திய மாயை மயக்கி கருமத்தில் ஈடுபடுத்துவது. குருவைப் பணிந்து இருவினைகளும் அற்று பிறவா நெறியடையும் நெறியை எண்ணாதது, ஆகிய இவை தாம் நிலவுலக வாழ்க்கையென்று கோபித்து வருந்தி அழுகின்றாய். அவ்வழுவதைத் தவிர்வாயாக. அழல் – அல்வீற்று எதிர்மறை வியங்கோள். தருவை – கற்பகத்தருவினை யொத்த.

517 சுந்திர மின்படர் சந்திர வதனத்
    துணைவிழி மையெழுதித்
துகளறு பிறைநிகர் வாணுதல் நடுவிற்
    சோபித பாடலமாம்

சிந்துர முங்கத் தூரியு மிருவகை
    திகழத் திலதமணிந்
திந்திர விற்போ லிசையும் புருவத்
    திற்பொலிசாந்தெழுதி

மந்தர திண்புய முன்கையில் வாய்ந்த
    சுடரு மணித்தொடியும்
மரணிக் கப்பொற் கடகமு மிலகநல்
    மணிவட மசையமகா

தந்திர மந்திர துங்க வசீகரா
    தாலோ தாலேலோ
தருமத் துரையரு ணாசல மகீபர்
    தாலோ தாலேலோ (2)

(2) பாடலம் – சிவப்பு ; சிந்துரமும், கத்தூரியும் என்க. சாந்து – மை.

518 வண்டிசை பாடித் திரண் முகை யிதழலர்
    மட்டு நிறைந்துநறு
வழியுந் தருணத் துதரம் நிறைத்து
    மருண்டு வெருண்டு துதைந்

தெண்டிசை படரும் பரிமளம் விரையுட
னேற்றுறை சுண்ணமளைந்
திரவு பகற்சுழல் செங்கழு நீர்மா
லிகைதுவள் மணிமார்பா

வெண்டிரை மோதிய வதனு ரம்ப
மெனப்புகழ் சன்னிதியில்
விண்ணவர் தொழுவடி வேலவர் இனிதருள்
மீறிய சுமுகனெனத்

தண்டிகை மன்னவர் மெச்சிய மத்குஞ்
சரமே தாலேலோ
தருமத் துரையரு ணாசல மகிபா
தாலே தலேலோ (3)

(3) மட்டு – தேன்; உதரம் – வயிறு; வண்டு உதரம் நிறைத்து என்க. சுண்ணம் அளைந்து – மகரந்தப் பொடிகளைப் பூசி; செங்கழுநீர் மாலிகை – குவளை மாலை; வெண் திரை மோதிய – வெள்ளிய கடலலைகளால் மோதப்பட்ட; மத குஞ்சரமே என்க.

519 பரசத் துருவைத் திரணத் தனுவாய்ப்
பண்ணிய செயவிசயா
பணிவித் துருவைக் கனகா சலநேர்
பாவித் தருள்வலவா

அரசர்க் கரசிவ னென்றுல கத்தவர்
அவர் புகழ் கனியோகா
அற்புத மாதவா செப்பிய சொற்படி
அப்படி யாமதுலா

புரசைக் களிறுஞ் சேர்மன கமனப்
புரவியும் இருநிதியும்
பொற்பணி யுந்திறை வாங்கிய வேந்தர்
புரந்தருள் பொழிமுகிலே

சரசத் துரையே புதுவைக் கரசே
தாலோ தாலேலோ
தயவுசெய் யருணா சலமகி பாலா
தாலோ தாலேலோ (4)

(4) பரசத்து உருவை........செயவிசைா – பரசுராமன் வில்லை அற்பமான வில்லாகச் செய்த வெற்றி பெற்றவனே. (அரசரைத் திருமாலாகச் சொல்வது கவிமரபு) கனக அசலம் – மேருமலை; பணி......வலவா – தருவிக்கிரமாவதாரத்தில் காண்க. "அரசர்க்கு அரசு இவன் என்று" என்க. அதுலன் – குற்றமற்றவன். சேர்மனகமனப்புரவி – சேர்ந்த மனவேகமொக்கச் செல்லும் குதிரை. கமனம் – செல்லுகை.

520 எந்தத் திசையினு மின்று னிவனென்
றேபுகழ் பெயர் பெற்றாய்
எக்கா லமுமன சத்திர சாலை
இயற்றிக் கதியேற்றாய்

சொந்தத் துழவதில் வரு கொழு மீதில்
சோமன் போல் சேர்த்தாய்
துட்டர் மதத்தை யடக்கிக் கருணை
சுரந்திர வலர்கலிநோய்

சிந்தத் தருமத் துறைபிச காமல்
செல்வத் துறல் பார்த்தாய்
தேனும் பாலுங் கண்டும் பாகுஞ்
சீனியு மொத்தருசிச்

சந்தத் தமிழ்பழ குங்குல மணியே
தாலோ தாலேலோ
தனபதி நிகரரு ணாசல மகிபதி
தாலோ தாலேலோ (5)

(5) சோமன் – குபேரன்; கொழு – ஏர்க்காறு; "கருணை சுரந்து இரவலர் கலிநோய் இந்த" என்க. "தமிழ் பழகும் குலமணி" என்க.

## சப்பாணிப் பருவம்.

521 பளபளென மாணிக்க வெயில்விரித் திலகுபொற்
பட்டமிடு நெற்றி நடுவில்
பத்தியிடு மாகதச் சுட்டிய தசைந்துதைய
பானுவினை நிகர்க்கு மென்னக்

களபமணி மார்பில் வயிரேிய பொற்பணி
கலந்த வெண் டாளமாலை
கட்டழகு பெற்றொளிரும் வச்சிரமணி மாலைமர
கதமணி நிறைந்த மாலை

துளவமால் கவுத்துவ மணிக்கனக மாலையிவை
துன்னியே பின்னலாடத்
துடிமிடைப் பிடிநடைச் செம்பவள வாய்ப்பசுந்
தோகையர்கள் கண்டுவப்பத்

தளதளென வளையுஞெலி கலகலென நாதமிகு
சப்பாணி கொட்டியருளே
தரும நெறி பழகு மருணாசல மகிபனே
சப்பாணி கொட்டியருளே. (1)

(1) பானு – சூரியன்; தாளம் – முத்து; துளவமால் – துளபமாலையணியும் திருமால்; வளை – வளையல்.

### வேறு

522 மறுவகல் முழுமதி முகம்வெயர் வொழுகவில்
மத்தக முற்பணிய
வடமலை நிகரிரு புயமலை விற்றொழில்
மல்தொழி லளந் தேறச்

சிறுவரை பலகவர் தருகர மலரினை
செக்கர் சிறப்புபாண்மை
திகழ்தர இருபுடை வியரது குழைய
விசித்திர மலர்த்தாளில்

இறுகிய பரிபுர வொலியரை வடமணி
எண்டிசை யுங்குமுற
இதனிடை முதுகு நெளித்து நிமிர்த்து முன்
இட்டு மலர்ந்தி தழ்வாய்க்

குறுமுறு வலிள நிலவதி லிசையக்
கொட்க சப்பாணி
குருவருள் பெறுமரு ணசல மகிபா
கொட்டுக சப்பாணி. (2)

(2) மறு – களங்கம்; வில்மத்தகம் – ஒளி வாய்ந்த தந்தங்களையுடைய யானைகள்; வடமலை – மேருமலை; சிறுவரை பலகவர் – சிறிய மலைகள் முதலியன போரிட்டுக் கவர்கின்ற, வரை – ஈண்டு இடவாகு பெயராய் ஆண்டு வாழ்பவரையும் குறிக்கலாம். வியரது – வியர்வை யானது. பரிபுரம் – சிலம்பு; அரைவடம் இடுப்பில் கட்டும் ஆபரணம்.

523 குடநட மிடுமுகில் மருமகன் விண்டொடா
கொக்கென நிற்போனைக்
குறிவழி யமர்பொரு மயில்கட வியசேய்
குக்குட மட்டோனைக்

குடதிசை மறிகடல் வரிவளை தவழ்கரை
யிற்குடி புக்கோனைக்
குறமகள் புலவர்கள் குலமகள் மருவிய
கொற்றவ னைப்பாரில்

குடநிறை சுவைதரு கவிபகர் புலமைக்
கொத்திசை கற்றேனைக்
குமரனை யனுதினம் மனமுற நினைவது
குத்தகை பெற்றேனே

குடமுலை வனிதையர் விழிக வரெழில்கொடு
கொட்டுக சப்பாணி
குருவருள் பெறுமரு ணசல மகிபா
கொட்டுக சப்பாணி (3)

(3) குடநடம் – குடக்கூத்து. பாட்டின் குறிப்பில் காண்க. கொக்கு – மாமரம் சூரபதுமன் இவ்வாறு நின்றான். குக்குடம் – கோழி; குடதிசை........புக்கோனை – இது திருச்செந்தி லாகவிருக்கலாம். குத்தகை – நியமம், எப்பொழுதும் ஒருபடியாகச் செய்வது.

524 குயிலிசை பழகுபெண் ணரசியர் மகிழக்
கொட்க சப்பாணி
குலமுறை பழிவழி தொடர்நம தியல்பிது
கொட்டுக சப்பாணி

குயில்நிற வடிவுள மதலையை ருடனெதிர்
கொட்டுக சப்பாணி
குளிர்மல ரடிபல வாமரு வலர்தலை
கொட்டுக சப்பாணி

குயிலிசை கமழ்களி ரெனவளர் கரமலர்
கொட்டுக சப்பாணி
குடிதழு வியமுடி நிருபர்கள் புகழக்
கொட்டுக சப்பாணி

குயில்மயில் நிறைதிகழ் புதுவையி லரசே
கொட்டுக சப்பாணி
குருவருள் பெறுமரு ணாசல மகிபதி
கொட்டுக சப்பாணி (4)

(4) பழிவு அழி என்க ; பழிவு – பழிப்பு ; மருவலர் – பகைவர் ;

525 தண்டை சதங்கை யலம்ப வெருண்டு
தவழ்ந்து தவழ்ந்துவரத்
தாய ரெடுத்து மடித்தலை வைத்துத்
தழுவச் சிறியகுடப்

பண்டி குலுங்க வகன்று துளங்கிய
பருவா வதுவிர(வ)ப்
பணிமொழி குளறிக் கதறிப் பருகிய
பால் மணம் வீசநறுந்

தொண்டை யிளங்கனி வாய்மு தொழுகத்
துவரித ழொளிதழையத்
தூய்மணி மகரக் குழையணி பணிகள்
துலங்கு புயத்திலகக்

கொண்டை சரிந்து விரிந்துல வத்தனி
கொட்டுக சப்பாணி
குருவருள் பெறுமரு ணாசல மகிபதி
கொட்டுக சப்பாணி (5)

(5) பண்டி – வயிறு ; தொண்டைக்கனி – கொவ்வைக்கனி ; மகரக்குழை. சுறுமீன் போன்று செய்தணியும் குண்டலம்.

## முத்தப் பருவம்

526 புவியிடத் தெழுவரைக் கணுவின்முத் தனலிடைப்
பொரிவதா லதனை வேண்டேம்
புகர்முகக் கிம்புரிக் கோட்டு முத் துடல் வெதுப்
புறுவதா னீது கொள்ளேம்

அருவிமணி வெண்பணில முத்துச்சு றவின் முட்டைக்
கரத்திஞல் கண்டு தீண்டேம்
அரும்பிய கரும்பின்முத் தகல்செக்கி லுடைபடுவ
தாமென விரும்பி வாங்கேம்

குவியுமிதழ் வனசமுத் தறுகால் பதிந்துபுரை
கொண்டதென் றதுவிரும்பேம்
குமுறுதிரை வாருதியி லிப்பிமுத் துப்புநீர்க்
கொண்டதது வென்று மதியேம்

கவிரிதழ் விரிந்தசெங் குமுதவா யமுதொழுகு
கனிவாயின் முத்தமருளே
காவிமலர் மேனியரு ளுசல மகிபநின்
கனிவாயின் முத்தமருளே (1)

(1) வரைக்கணு – மூங்கிலின் கணுக்கள் ; எழுவரை – வினைத்தொகை ; புகர்முகம் – யானை ; செக்கு – ஆலை ; அறுகால் – வண்டுகள், புரை – குற்றம் ; கவிர் – முள்முருக் கம்பூ ; மூங்கிலில் தோன்றிய முத்து அனலிடைப்படுவதாலும், யானைக்கோட்டிலுண்டாகும் முத்து உடல் வெதுப்பும் மதநீரிஞல் மூழ்குவதாலும், சங்கீன்ற முத்து சுருமீனின் முட்டைகளோடு கலந்திருப்பதாலும், கரும்பின் முத்து ஆலையிலுடைபடுவதாலும், தாமரையில் தோன்றிய முத்து வண்டுகள் பதித்துக் குற்றமடைவதாலும், கடலில் சிப்பியினின்றுண்டாகும் முத்து உப்பு நீர் கொண்டதால் அவைகளை விரும்ப மாட்டோம். உனது வாயினுடைய முத்தமே சிறந்தது அதனைத் தருவாயாக என்கிருர்.

527 பொற்பிலகு நெடுமடல் லரம்பைதிகழ் முத்துவாட்
பூட்டிவெட் டுப்படுவதால்
பூண்பதற் கழகுரு தென்றுடன் வரைந்து நம்
புந்தியாலது சிந்தியேம்

சொற்றழகும் துரிதச் சுவைகனியு மாதரார்
சுந்தரக் கந்தரகத்தில்
துகள்தவிர்த் தொளிர்முத்தம் மேதையுட் பட்டுவெளி
தோன்ரு ததைக் கருதிலேம்

பற்பல வகுப்பாகும் மீனத்தின் முத்தம்நீர்ப்
பரவையுட் சேற்றில் முங்கிப்
பரதவர் வலைக்குட் படாதென்பதால் விருப்ப
பற்றதனை யிச்சித்திடேம்

கற்பூரப் பரிமளங் கமழ்பவள இதழிலகு
கனிவாயின் முத்தமருளே
காவிமலர் மேனியரு ளுசல மகிபநின்
கனிவாயின் முத்தமருளே (2)

(2) அரம்பை – வாழை ; புந்தி – புத்தி ; கந்தரம் – கழுத்து ; மேதை – தசைக்கொழுப்பு பரதவர் – செம்படவர் ; இங்கு வாழையிலுண்டாகும் முத்து வெட்டப்படுவதாலும், மாதரது கழுத்தில் உள்ள முத்து கொழுப்பில் பொருந்தி வெளித் தொன்ருததாலும், மீனத்தி

னின்று தோன்றும் முத்தோவெனின் பரதவர் வலை வீசும்போது கடற்சேற்றில் மூழ்கி வலைக்குட்படாததாலும் அவைகளை விரும்பவில்லை. உனது முத்தமே சிறந்தது அதனைத் தருக என்கிருர். பவள இதழ் – உவமத் தொகை.

528 வடியிடுந் தெனுமரச தாளிகக் கும்பாட்டில்
வழியுஞ் செழுஞ்சாறு நீள்
மடவரம் பைக்கனியு மாங்கனியு முட்படா
வருக்கைப் பலாக்கனியுமான்

பிடிமுனைத் தலைநடுக்கண் வழிசுரந் ததுநிரம்பத்
தரவிட் டொழுக்கு பாலும்
பேசுதற் கினியகற் கண்டுமொன் ருக்கிருசி
பெறுபஞ்ச தாரை விரவிப்

பொடிபடுத் தியகுளத் துட்கலந் தமுதமாம்
புணரியில் மிகுத்த செஞ்சொல்
புலவோர்க ளுள்ளங் களிப்பவிக் கீரமும்
பழகமென் மனதுவப்பக்

கடிகமழ் மலர்க்குமுத வாயிதழ் சிவப்பநின்
கனிவாயின் முத்தமருளே
காவிநிகர் மேனியரு ணசல மகிபநின்
கனிவாயின் முத்தமருளே. (3)

(3) தாளி – பனை ; அரம்பைக்கனி – வாழைப்பழம் ; வருக்கை – சுளை ; படா – செய்யா என்ற வாய்ப்பாட்டு வினையெச்சம் செய்து எனத் திரிந்து நின்றது. பஞ்சதாரை – சருக்கரை ; கீரம் – கிளி.

பாட்டில்—ஓர்வகைப்பாத்திரம், பனஞ்சாறு, முக்கனி, பசும் பால், கற்கண்டு, சர்க்கரை சேர்ந்த ஒரு கடலைக்காட்டிலும் இனிய சொல் என்க.

529 முத்தவ மொய்த்த புகழ்ப்பயிர் வைத்தநின்
முத்த மளித்தருளே
மூதுல காள்பவர் ஆதர வானநின்
முத்த மளித்தருளே

முத்தர்கள் சித்தர்கள் சித்த முவக்குநின்
முத்தமளித்தருளே
மோகமி ணர்பர தாக மடங்கனின்
முத்த மளித்தருளே

முத்தலை வர்க்குள் முதற்பொருள் பற்றுநின்
முத்த மளித்தருளே
மூடிக வாகன னீரடி பரவுநின்
முத்த மளித்தருளே

முத்தமிழ் கற்றவர் மெய்த்த திறத்தநின்
    முத்த மளித்தருளே
மோகன வேளரு ளூசல பூபநின்
    முத்த மளித்தருளே (4)

(4) மோக . . . . அடங்க - ஆசையையுடைய பெண்கள் மேலானமோக தாகம் தீர ; முத்தலைவர் - சிவன், திருமால், பிரமன், மூடிக வாகனன் - விநாயகன் ;

530 முத்தின்சிவிகையு முத்தின்கவிகையு தரக்கண் டருளுநின்
    முத்தந் தருக முத்தமே
முதிர்வள மீறிய புதுவையில் வளருமுகில்நின்
    முத்தந் தருக முத்தமே

முத்தின் கவிகை நிழற்கண் டுலவுநின்
    முத்தந் தருக முத்தமே
முகமதி சேரொளி திகழ்கனி வாயிதழ்
    முத்தந் தருக முத்தமே

முத்தின் சுடிகை துலங்குந் தலைவநின்
    முத்தந் தருக முத்தமே
முழுமதி யூகிநின் இலவிதழ் நிலவுமிழ்
    முத்தந் தருக முத்தமே

முத்தின் சுடர்விடு துப்பொன றியநகை
    முத்தந் தருக முத்தமே
முகிலரு ளூசல மகிபதி சுவைபெறு
    முத்தந் தருக முத்தமே. (5)

(5) சிவிகை - பல்லக்கு ; கவிகை - வெண் கொற்றக்குடை ; சுடிகை - நெற்றிச் சுட்டி ; யூகி :—உதயணன் மந்திரி. இவன் மிகவும் மதிபடைத்தவன். துப்பு ஒன்றிய நகை— பவளம் போன்ற உதடு சேர்ந்த பல்.

## வாரானைப் பருவம்.

531 கனகத் தழுத்திப் பதித்திலகு பச்சைமர
    கதப்பணி தரிக்க வருகக்
கன்னபூ டணமுத்து மாலைவச் சிரமாலை
    கண்டீர மணிய வருகத்

தினகரக் கதிரெறிக் குஞ்சுடர்க் கைவளைகள்
    சேர்க்கப் பணிந்து வருகச்
சிற்றடிப் பொற்பாத சாலம் சிலம்பொலி
    சிலம்பவிரை வாகவருக

மனகவன வாம்பரி மடித்தடி பதித்துவரு
    மார்க்கமிது கண்டு வருக
மார்க்கண்ட னெங்களரு ளூசல நராதிபதி
    வாழ்த்துபே ராளன்வருகப்

பனகமண் டலநடுப் படமிதித் தேறுகோ
பாலகிட்டி னன்போனிப்
படிப்புகழ வந்தவரு ணுசல நராதிபதி
பண்பாக நீவருகவே. (1)

(1) கனகத்து பொன்னில் ; கண்டீரம் - கண்டிகை என்ற கழுத்தணி, போலும். மார்க்கண்டர். என்னும் 16 வயதிருக்கப் பெற்றவர். பனகம் - பாம்பு ; (காளிங்கன்).

532 ஆர்க்கு மருமைப் பிள்ளைவனு
வானோர்க் குரிய பிள்ளையடுத்
தவருக் கினிய பிள்ளையெளி
யவர்க்குப் பெரிய பிள்ளைகட்டு

வார்க்குங் குமச்சே றொழுகுதன
மானூர் மோகப் பிள்ளைபெற்று
வளர்த்தே யெடுத்து மனங்களித்து
வருமூ வருக்குந் துரைப்பிள்ளை

பார்க்குந் தருணத் தருணவொளி
படர்ந்த நீல நிறப்பிள்ளை
பாரா சருக்குக் கண்மணியொப்
பான தருமப் பிள்ளைபுகழ்

சேர்க்கும் புதுவைச் சரவணமுத்
தீன்ற வரிசைப் பிள்ளைவச்சிர
தேக னருணா சலம்பிள்ளை
சிறந்து நடந்து வருகவே. (2)

(2) கட்டு வார் குங்குமச் சேறு ஒழுகுதன மானூர் என்க. ஒழுகு தனம் வினைத் தொகை வார் - கச்சு ; நீல நிறப் பிள்ளை என்றூர் கண்ணனைக் கருதிப்போலும்.

533 வஞ்சியப ரஞ்சிநிகர் மங்கையர் விரும்பியுன்
பால்பார்க்க வேண்டிநின்றூர்
மறுகிய டித்துகிச் சுவர்த்தலம் பற்றிமென்
மலரடி பெயர்த் தொதுங்கிக்

கொஞ்சிமெல் லன்னநடை யென்னவே தளர்நடைக்
கொண்டுவந் தேவராத
குற்றம்யா தென்னவறி கின்றிலே முள்ளக்
குறிப்பின் தெனக்கூறிலாய்

செஞ்சிவட காசிதென் குமரிமேல் மலையாள
தேசமெங் குங்கீர்த்தியாய்ச்
சித்திரசிலை வடிவழகு பெற்றதுரை ராசன்நீ
சித்தந் திரும்பிவருகப்

பஞ்சினு மணிச்சநன் பூவினுஞ் சேர்கமலா
பரவித் திருப்பதி தன்மேற்
பயப்பய நடந்துமகி ழருணு சலாதிபதி
பருவநடை கொடுவருகவே. (3)

(3) உன்பால் - உன்னிடம்; அபரஞ்சி நிகர் - புடமிட்டபொன் போன்ற ; " வந்தே, வராத " என்க. பயப்பய - பைய பைய என்பதன் சுருக்கம்.

534 மறுமை தொடரு மரியதவமும்
வரமும் நிறைய வருகவே
மதன னுருவில் எழுதவரிய
வடிவு திகழ வருகவே

சிறுமை பெருமை யுணருமரசர்
தினமும் மகிழ வருகவே
சிவனை மனத்தில் நினையுமறிவு
தெளியும் நிபுணன் வருகவே

வெறுமை தவிரு மமுதகவிஞர்
மிகவு முருக வருகவே
விசைய னபிமன் அபயன்இணைசொல்
விரத சரதன் வருகவே

பொறுமை நிலைமை தலைமைவலமை
புரியு மதுலன் வருகவே
புதுவை நகரி னழகுபழகு
புனிதன் வருக வருகவே. (4)

(4) மதனன் - மன்மதன் ; அபயன் - சோழன். சரதன் - உண்மையுள்ளவன்.

535 குணரத்தின மானசர வணமுத்து பூபன்
குமாரகெம் பீரன்வருகக்
கொற்றவ னனந்தகிருட் டிணபூப தியெனுங்
கொண்டல்நன் மருகன்வருகப்

பணமிக்க சேடனைப் பாம்ஞான தேசிகன்
பண்புபெறு மருகன்வருகப்
பாக்கியதர ஞமாதி நாதமத வேளினிய
பட்சமா மருகன் வருகக்

கண்முற்ற செல்வவான் போத்திமுத் துப்பிள்ளைக்
கனிவுதரு மருகன் வருகக்
கற்பகக் கன்றுக வளர்வீர வாகுமார்க்
கண்டன்மெய்த் துணைவன்வருக

மணமொய்த்த காவிமலர் மாலிகா பரணமணி
மார்பவுத் துங்கன் வருக
வளமைதிகழ் புதுவையரு ணசல நராதிபதி
வருக விரைவுடன் வருகவே (5)

(5) பணம் - படம் ; இப்பாட்டிலிருந்து பாடப்பட்டோர் வரலாறு சிறிது தெரிகிறது. முகவுரையில் காண்க. மாலிகா ஆபரணம் - மாலையாகிய ஆபரணம். உத்துங்கன் - உயர்ந்தவன்.

## அம்புலிப் பருவம்.

### சாமம்.

536 நாலிரண் டெண்ணிரண் டாங்கலைக் கதிபன்நீ
நானிலத் தவர்மதிக்கும்
நாலெட் டிரட்டித்த கலைவளர வளருமிவ
னோடுஞ் சுவேதவணனீ

பாலொன் றிரண்டஞ்சு வேதவண னிவனித்திய
குபேரன்நீ சொற்பாக்கிய
பாவலர் பாடலாற் சற்கீர்த்தி சேர்புகழ்
பாக்கியகு பேரனிவன் மெய்ச்

சூல்முதிர்ந் தெழுமேகப் படலத் துலாவருஞ்
சுப்பிரப்பிர காசதரன்நீ
சுப்பிரமண் யக்கடவுள் கருண கடாட்சவொளி
தோன்றும் பிரகாசனிவனும்

ஆலிருவ ருஞ்சம மெனக்குறித் தனனிவனோ
டம்புலீ யாடவாவே
ஆதரவு கூருமரு ணசல மகிபனுடன்
அம்புலீ யாடவாவே. (1)

| சந்திரன். | அருணசலம் பிள்ளை. |
|---|---|
| (1) (1) " 16 கலைகளுக்கதிபன் (நாலிரண்டாகிய எண் இரண்டுகொண்ட கலை என்க). | 64 கலை வளர வளர்க்கும் தலைவன். |
| (2) ஓடுகின்ற (சுவேதவணன் (வெள்ளைநிறநந்தவன்) சுவேதம் - வெண்மை). | பால்நிற மொத்த இரண்டு அழகிய சுவேத (குதிரை)ங்களையுடையவன். |
| (3) தினமும் குபேரன் (உடல் சிதைபவன்) ஆவன் கு - குற்சிதமான, பேரன் - உடலையுடையவன், தேய்வதும் வளர்வதும்பற்றி இவ்வாறு கூறினர்.) | புகழ்பெற்ற சொற்களையுடைய புலவர் பாடலால் கீர்த்தி மிக்க புகழ்பெற்ற குபேரன் (தனத்தில் மிகுந்தவன்) ஆவன். |
| (4) கருப்பம் முற்றிய நீர்கொண்ட மேகத் தொகுதியில் உலவுகின்ற சுப்பிரப்பிரகாசதரன் (வெண்மை ஒளிமிக்கவன்) ஆவன். | சுப்பிரமண்யக் கடவுள் கருணையொளி திகழத்தோன்றும் பிரகாசனுவன். |

ஆல் - ஆதலால் ; கூரும் - மிக்க ;

537 மாகத்தி லோர்கணப் பொழுதுதங் காதுபொன்
வரைசுற்றி யே சுழல்வதால்
மழுவாளி செந்தழிற் கண்ணிட மிருப்பதால்
மறுகளங் கப்படுவதால்

மோகத்தில் நின்மாம னிட்டசா பத்திஞல்
முழுமதி குறைந்துழல்வதால்
மூன்றுலகு மிரவாள னென்றுபெய ரிடுதலால்
மொதுகட லில் வீழ்வதால்

போகத் தருந்துதிப் பிரிந்துடல் மெலிந்துபைம்
புயலிடத் துருமறைவதால்
புரைபடா விவன்நட்பி ஞலள வற்றபுகழ்
பெற்றுயா வாழவருவாய்

ஆகத்து ளோருயிர்த் துணைவனிவ னேருவந்
தம்புலீ யாடவாவே
ஆதரவு கூருமரு ஞசல மகிபனுடன்
அம்புலீ பாடவாவே. (2)

(2) (1) ஆகாயதத்தில் ஓர் கண நேரமும் தங்காது மேருமலையைச் சுற்றித் திரிவான். — உயர்வில் ஓர்கணமும் தங்காது பொன்மலைபோன்ற செல்வம் கொட்டித் தன்னைச் சுற்றிப்பல புலவரும் சுழலச் செய்வான்.

(2) சிவபிரானின் இடக்கண்ணுயிருப்பன். — சிவபிரானின் கண்ணெனத்த முருகனிடத்துப் பக்தி யுடையவன்.

(3) மறு (களங்கம்)விஞல் ஒளி குறைவான் — தீமைக்குறியை நீக்குவான் படுதல் என்பது ஈண்டு (நீக்கப்படுதல் எனக் கொள்க).

(4) ரேவதி மீது - மட்டும் மோகத்திஞல் மாமன் தக்ஷன் சாபமிட ஒளி குறைந்தவன். — ....

(5) எல்லாவுலகும் இரவாளன் (இரவிலே ஆளுபவன்) என்று கூறுவதால். — எல்லாவுலகும் இரவாளன் (இரக்கும் ஏழைகளை ஆள்பவன்) என்று கூறப்பெறுபவன்.

(6) போகத்திஞல் அருமையான புகழ் பிரிந்து உடல் மெலிந்து கரியமேகத்தில் வடிவம் மறைவான். — ....

“ நேர்உவந்து , எங்க. புரைபடா - குற்றம்பொருந்தா.

## தானம்.

538 தமரமுறு சலராசி சூழுதைய வரையிதாத்
தான்மாயச் சென்றுதிக்குந்
தரணியீ ராறுபெயர் வாதம்மி லொருவன்மா
தாந்தமட் டொளியுடைத்தாய்த்

திமிரதின கரனெனப் பூமண்ட லத்துபைய
சேதனு சேதனத்தைச்
செந்தழற் சுடர்விடுத் துப்புறங் காய்வதைத்
தீர்ப்பதற் குற்பவித்த

குமரன்ம ரத்துநிறை குன்ருத தண்ணளி
கொடுத்தருள்வி மானமூர்ந்தாய்
கூறுபல கலைதெரிந் தமிர்தவட்டி லாகவிசை
கொண்டுலவு பெருமைபெற்ருய்

அமரர்சிறை விடுமுருக னடிபரவு மிவனுடன்
அம்புலீ யாடவாவே
ஆதரவு கூருமரு ணசல மகிபனுடன்
அம்புலீ யாடவாவே. (3)

(3) தமரம் - ஒலி ; திமிரம் - இருள் ; சேதன் அசேதனம் என்க. விமானம் - புஷ்பக விமானம். வட்டில் - கிண்ணம்.

539 ஆழிசூழ் புவனத்தில் நால்வளந் திகழ்புதுவை
ஆதிபதி யிவனென்பதால்
ஆகமெலி பாதிரவு பகல்முற்று நிர்ச்சிந்தை
யாயிருந் தகமகிழ்வதால்

ஆழிசூ டியமகுட முடிவேந்தர் சபையிலின்
னுனெனப் பெயர்பெறுதலால்
அனுசரித் தவர்மெலிந் தவர்குறை தவிர்த்தவர்க்
கமுதளித் தருள்வதால்பேர்

அழியா விரவிதோன் ருதபடி பகலையிர
வாக்கியநம் மாயன்மருகன்
அபருவா னந்தவெள் ளத்தில்மூழ் கிமனம்
அலையாத மேன்மைபெறுவாய்

ஆழிவா னுலகுவிட் டிவன்மகிமை கண்டுகண்
டம்புலீ யாடவாவே
ஆதரவு கூறுமரு ணசலப் பேருடன்
அம்புலீ யாடவாவே. (4)

(4) ஆகம் - உடல் ; ஆழியால் மாயன் - அருச்சுனனுக்காக சயத்திரதனைக் கொல்ல மறைத்தது காண்க. மாயன் மருகன் - முருகன் ; ஆழிவான் உலகு - வட்டமான ஆகாய இடம்.

540 வெவ்விரா குப்பகை தொலைப்ப கடற்குழியில்
வீழாது கலைநிரப்ப
வேதண்ட பீடநடு வுச்சிமேல் பொலிவுபெறு
வீறுனக் குண்டாகலான்

செவ்விரா வும்பகலு மகலாது தட்டெருச்
சிதறிவிட் டெறியாது வெண்
திங்களொளி மறையாது தண்ணளி குறைந்துமெய்
தேய்வுறு தமிர்த வடிவைக்

கவ்விரா கத்திவே டத்தில் முயல் பருகாது
கருணைவா ருதியளித்துக்
கார்த்திகை விரும்புமொரு சொர்க்கபோ கத்தையெக்
காலமு நினக் குதவுவான்

அவ்விரா கவன்மருக னடிபரவு மிவனுடன்
அம்புலீ யாடவாவே
ஆதரவு கூறுமரு ணாசல மகீபனுடன்
அம்புலீ யாடவாவே. (5)

(5) இராகு - சந்திரனைப்பற்றும் ஓர் கிரகம். வேதண்டம் - பொன்மலே ; எருச்சிதறு தல் - கன்னிமகளிர் நல்ல கணவனையடையச் செய்யும் நிலா வழிபாடு. முயல் - சந்திரனிட மிருக்கும் களங்கம் ; கார்த்திகை. சந்திரன் 27 மனைவியரிலொருத்தி ;

541 வஞ்சமொன் றின்றியுரை செய்யுமொழி கனவினிலு
மாறுத தொட்டயோகன்
வாசவன் விரும்புமகா ராசனும் திருவழுதி
வளநாட்டில் வாழ்வுபெற்றோன்

தஞ்சமே யென்பவர்க் கருளுமரு ணாசலவு
தாரவித் தாரனுக்குத்
தண்டிகைத் துரைபிச்சை யாண்டிவ ணிகேசவுத்
தண்டப் பிரசண்டனுக்கும்

கஞ்சமுக ரஞ்சிதன் கோபால் கிட்டிணனுங்
கன்னனுக் கும்பேரன்முக்
கண்ணனருள் மீறுசர வணமுத்து மகீபனிரு
கண்மணி யெனச்சிறந்தோன்

அஞ்சலென் றிரவலர் கொடுங்கலீ துரந்தவனோ
டம்புலீ யாடவாவே
ஆதரவு கூறுமரு ணாசல மகீபனுடன்
அம்புலீ யாடவாவே. (6)

(6) வாசவன் - இந்திரன் ; வழுதிவளநாடு - பாண்டிநாடு. கஞ்சமுகம் - தாமரை போன்ற முகம். கலி - வறுமை.

## சிற்றில் பருவம்.

542 கங்கை யமுனை சரசுவதி
கமலங் திகழ்கோ தாவிரிசங்
காற்றுங் திரைப்பா லாறுபெண்ணை
கனகா விரிவெள் வளைகுமுறுங்

னுங்க பத்திரை வைகையலே
சுருட்டும் வேக வதியிவைதந்
துணையாய்ச் சிறந்த பொருநைநதித்
தொடர்பா இயதென் கரைப்புறத்துத்

தங்க மயமாம் முறங்கொடுபோய்த்
தாமக் குழலார் சிலதியர்கள்
தவள நிலவு போற்பரந்து
தயங்கும் புளினத் திரளில்மலர்ச்

செங்கை வருந்தக் கொணர்ந்தமணல்
சேர்த்த சிற்றில் சிதையேலே
திருமா லருணு சலமகிபா
சிறியேம் சிற்றில் சிதையேலே. (1)

(1) சில தியர் - தோழியர், புளினம் - மணற்றிட்டு.

543 செம்பொற் றகட்டால் பலபலவாய்ச்
செய்யுந் தூதை சிலவருத
திருத்திப் பதித்த கூட்டடுப்பிற்
றெளிந்த புனலா லுலேயேற்றிப்

பைம்பொற் சிறுமுத் தரிசிபெய்து
பரந்து புகையாக் கனன்றட்டிப்
பாகப் படுநற் பதம்பார்த்துப்
பரிவாய்ச் சரித்து வடித்திறக்கிக்

கும்பத் திணங்கு தாழிநடுக்
கொதிக்கும் புதிய புளிங்கறியும்
குளிர்ந்த மலரிற் றுவட்டலும்பர்
கூறுங் கருணைப் பொரிக்கறியும்

அம்பொற் கலத்து நினக்குவிருந்
தளிப்போம் சிற்றில் சிதையேலே
அருணு சலபூ பாலயாம்
அமைத்த சிற்றில் சிதையேலே. (2)

(2) அட்டி - சமைத்து; கும்பம் - குடம்; சரித்து - இறக்கி;

544 வடக்குங் குமச்சந் தனக்களப
வாசத் திறுமாந் தண்ணுந்து
வார்க்கு ளடங்காப் பூரித்து
மணிசேர் செம்பொன் பணிச் செப்பாய்க்

கடக்குஞ் சரக்கிம் புரிமருப்பங்
கறுப்பப் புகையட் டதுவென்றே
கனத்துத் தடித்த புளகமுலைக்
கண்கள் கறுத்துப் பளபளத்துக்

தடக்குன் றிரண்டா மெனப்பணைத்த
தனத்தாச் சியர்காய்ச் சியபாலுந்
ததியும் புதுவெண் ணெயுமொன்றுய்த்
தட்டிக் கொட்டி யுண்டுபசி

அடக்குங் கருணா கரப்புயல்போல்
அடியேம் சிற்றில் சிதையேலே
அருணா சலபூ பாலாயாம்
அமைத்த சிற்றில் சிதையேலே. (3)

(3) வடம் - மாலை ; அண்ணுந்து - மேலெழும்பி, வார்க்குள் - கச்சுக்குள் ; செப்பு - செப்புக்குடம் ; மருப்பு - தந்தம் ; இரண்டுவரிகளும் ஆய்ச்சியர் தனத்தைப்பற்றி வருணித்துள்ளன காண்க. ததி-தயிர் ; கருணாகரப்புயல் - கண்ணன்.

545 தோற்றும் பேதைப் பருவமுற்றித்
தொடர்ந்த பேதைப் பருவத்தில்
தூய்நீ ராடித் துகிலுடுத்துச்
சொருக்கிட் டருஞ்சூ ழிகைமுடித்துச்

சேற்றுப் புதுநாண் வரக்கொழுந்து
செருகி நுதற்சிந் துரந்தீட்டிச்
செழும்பொற் பணியு நவமணிவச்
சிரத்தார வடமும் பூட்டியன்னை

பாற்றுப் பசிதீர்ந் துக்கழங்கு
புதுப்பந் தடித்து நண்பகலில்
புத்துச் சிறுவீ டெனப்பலரும்
புகலும் வண்ட லிழைத்தடிச

லகற்றுந் தருணத் துட்புகுந்து
அடியேம் சிற்றில் சிதையேலே
அருணா சலபூ பாலாயாம்
அமைத்த சிற்றில் சிதையேலே. (4)

(4) சூழிகை - உச்சிக்கொண்ட ; தாவடம் - தாவடம் - கழுத்திலணியும் மாலை " வண்டல் இழைத்து அடிசில் ஆற்றும் தருணம் " என்க.

546 தாளா ளுருள்பொற் சகடுரைத்துத்
தனிக்கட் செவிப்பொற் படமிதித்துச்
சாபக் கருங்க லகலிகையைத்
தருதற் கிசைந்த துகளெழுப்பி

வாளாற் செகுப்ப வுரத்த கஞ்சன்
மார்பிற் புடைத்துச் செழும்பவள
வரைமீ திருந்து சிலை குனித்து
வண்டைத் துரந்தோ மருக்கணெனும்

வேளாறிரண்டு கரதலத்தான்
விடுவே லசுரர் பதியனைந்து
வெறுக்கி யகா ரணங்கேட்டு
மின்னு ரிழைத்த சிறுவீட்டை

ஆளா தழித்தல் நின்முறைமை
ஆமோ சிற்றில் சிதையேலே
அருணா சலபூ பாலாயாம்
அமைத்த சிற்றில் சிதையலே. (5)

(5) சகடு - சகடாசூரன், வெறுக்கை - அருவருப்பு கட்டுசெவி - காளிங்கன் என்ற பாம்பு; சாபக்கரு . . . . எழுபிக்இராமாவதாரத்தில் கல்லாயிருந்த அகலிகையை எழுப்பின மை காண்க. வண்டு - அம்பு;

547 நின்னைப் பரவாக் குறும்பரற
நெறியிற் பிழைத்த காதகர்தன்
நிலையிற் பிறழ்ந்த வறிவீனர்
நேசத் தொடர்பில் நன்றிகுன்றித்

தன்னைப் புகழு முழுமடையர்
தனத்தா லுயர்ந்த குலவீன
தருமப் பெருமை மூதறிவு
தயவு வேற்ற வர்பொருதா

மின்னைப் புணர்ந்த காமுகர்மேல்
மேடை யாக்கு மாளிகையுள்
வீடு கூடந் தகர்த்திடித்து
வெறுக்கு தல்நின் வெற்றியோம

தன்னைக் கிணை சொ லப்பனே
அடியேம் சிற்றில் சிதையேலே
அருணா சலபூ பாலாயாம்
அமைத்த சிற்றில் சிதையேலே. (6)

(6) குறும்பர்— குறுநில மன்னர்; மதன்னை - மன்மதனை, விரித்தல் விகாரம்.

548 குடிவைத் தவர்க்கு மாளிகை மூற்
கூடஞ் சதுக்கம் நெருங்கவைத்துக்
கூபந் தடங்கள் வெட்டுவித்துக்
குளமும் புரவுந் திருத்திவைத்துத்

துடிவைத் துழுமேர்க் ரான கேரான
* * *
தூவும் பலவித் தனைத்தும் வைத்துச்
சுரக்கும் பசுகன் றுபரி வைத்துப்

† இவ்வடி விடுப்பட்டது.

படிவைத் தளந்து கொடுத்து வைத்துப்
பரிபா லனஞ்செய் துளமகிழ்ந்து
பாரிற் புகழ்சேர் கங்கைகுல
பதியே புதுவைப் பதிக்கரசே

முடிவைத் திருந்த மூவேந்தர்
முன்வைத் திருந்த பெருங்குடிக்கு
முதன்மைக் குடியாய் நிலைமை பெற்ற
முகிறத் துயர்ந்த தலைவா நின்

அடிவைத் துழக்கில் சகியாதே
அடியேம் சிற்றில் சிதையேலே
அருணு சலபூ பாசிறியேம்
அமைத்த சிற்றில் சிதையேலே. (7)

(7) சதுக்கம் - மேடை; கூபம் - கிணறு. புரவு - அரசனுல் அளிக்கப்பட்ட இறையிலி நிலம்; கங்கை குலம் - வேளாளர் குலம்;

## சிறுபறைப் பருவம்

549 வானகத் தெழுசத்த மேகமு முழக்கநெடு
வாருதித் திரை முழக்க
வால்மதி சூடிசிறு கைத்துடி முழக்கவெதிர்
வந்துவந் திடிமுழக்கத்

தானமத் தக்கசமோ ரெட்டும்பீ ரிட்டளவு
தானிலாக் குரல் முழக்கத்
தரணிமன் னவர்கள்மனு நீதிநெறி பிசகாது
சந்ததம் பறை முழக்கக்

கானவித் தியாதர ரிசைத்தொனி முழக்கவன்
கண்மைவோ வியர்கடத்தெக்
காலமும் நெய்தலம் பறைமுழக் கச்சிலைக்
காமனம் பொலி முழக்கத்

தேனகத் தூற்றெழுகுவளைப் புயாசலா
சிறுபறை முழக்கியருளே
தென்புதுவை வாழுமரு ணசல மகீபனே
சிறுபறை முழக்கி யருளே. (1)

(1) வாருதி - கடல்; வால் மதி சூடி - வெள்ளிய சந்திரனைச் சூடின சிவபிரான்; கசம் - யானை; நெய்தல்அம்பறை - நெய்தல் நிலத்திற்குரியபறை; சிலைக்காமன் அம்பு ஒலி முழக்க என்க. குவளையகத்து தேன் ஊற்றெழுகு என்க.

550 தென்பொதிய மால்வரையும் வெண்டரள ராசிதிரை
சிந்தி வரு பொருநை நதியும்
செல்வநிறை பாண்டிவள நாடுமுது நீர்த்தருவை
சேர்புதுவை மாநகரமும்

பொன்பொதி யவிழ்க்குநறு நீலமா லிகையும்வாம்
புரவியும் மதவாரணம்
புயலெட்டு மறிகே தனமும்நடு மூன்றில்வாய்ப்
புதியமும் முரசொலியும் நேர்

அன்புதரு செந்தில்வடி வேலர்கும ரேசர்தாள்
அரணையும் பெறு நிபுணனே
அழகுதிகழ் மதனனே மதிவதன சுமுகனே
அனவரத கலியாணனே.

பின்புமுன் பார்த்துவரு சிங்கமே வல்லோசை
பெறுபறை முழக்கியருளே
பேசுபுகழ் மீறுமரு ணசல நரேந்திரவொலி
பெறுபறை முழக்கியருளே. (2)

(2) கேதனம் - கொடி ; தாள் அரண் - பாதங்களாகிய பாதுகாப்பு பின்பு சிங்கமே— சிங்கம் எப்போது பின்னும் முன்னும் பார்த்துவரும்.

551 மானபர னெங்கள்சர வணமுத்து பூபதிகண்
மணியென்ன வந்துதித்தாய்
மற்புய னனந்தகி ருட்டிண வேளினிய
வசனமுத்தின் பெருமாள்மிக்

கானசீர் பெறுமிவர்க ளைச்சிறிய தந்தையென்
றன்புவைத் துளமகிழ்ந்தாய்
ஆதிநா தன்பின்வள ராதிநா தன்கலைவ
லாளன் மார்த் தாண்டமால் சொல்

பானலந் திகழ்பரம சிவனிவர்நன் மைத்துனப்
பாக்கிய மிகுத்துயர்ந்தாய்
பதுமமலர் மங்கையருள் நிரவதிக மானதன்
பதியிலன் னச்சிறந்தாய்

தேனருவி சொரிகுவளை மாலிகா பரணவிச்
சிறுபறை முழக்கியருளே
தென்புதுவை வாழுமரு ணசல மகிபனே.
சிறுபறை முழக்கியருளே. (3)

(3) மானபரன் - தன்மதிப்புள்ளோன் ; ‘ சொல் பால் நலம் திகழ் ’ என்க.

552 வேததவ போதனர்க ளாசீர் வதித்துளம்
விரும்பியொரு பாலிருப்ப
வித்துவசன மொத்துன்மேல் விருதுபா டித்தவசில்
வீற்றிணி திருப்பதொருபால்

நீதமனு ராசாதி ராசருன் வாசலில்
நிறைகொலு விருப்பதொருபால்
நேரலார் தஞ்சநீ யென்றஞ்சி யோஞ்சிநிரை
நிரையா யிருப்பதொருபால்

மாதரசி யாமிவர்க ளென்றுலகு புகழுமட
மாதர்களும் நிற்பதொருபால்
வருவிருந் தினியசுற் றத்தவர்கள் நின்னருமை
வசனத் திருப்பதொருபால்

ஆதலால் மணிமுன்றில் வெளிவந்து மனதுகந்
தணிபறை முழக்கியருளே
யார்வ மகலாதவரு ணசல மகீபனே
யணிபறை முழக்கியருளே. (4)

(4) வித்துவசனம் - புலவர்கள் ; விருதுபாடி - வெற்றிக்குரிய செயல்களைப்பாடி ; ஓஞ்சி - ஓய்ந்து என்பதன் போலி ; வருவிருந்து " " செல்விருந்தோம்பி வரு விருந்துபார்த்திருப் பான் . . . " குறள் காண்க.

553 சற்குண சலாபனரு ணசல மகீபனஞ்
சாதசர வணமுத்துமால்
தண்டமிழ்க் கருள்வீர வாகுசே னறப்பதி
தனைத்து . . . . . . . . ஞ்சபெருமாள்

நற்குலம் விளங்குமிவர் மெய்த்துணைவ னேசரச
நய லளித சுமுகமதனே
நாவலவ ரின்னிசைப் பாமுறைமை யிற்பாடு
நாற்கவியு மினிதுகேட்டுச்

சொற்குண் மறிந்துவிலை பெற்றபட் டாடையொடு
துப்பட்டி பாகை செம்பொன்
சுடர்மணிப் பணிகனக முதலான பரிசெலாந்
தோற்றமா கக்கொடுக்கும்

அற்புதக் கருண கடாட்சமுதல் வள்ளலே
அணிபறை முழக்கியருளே
ஆர்வமக லாதவரு ணசல மகீபனே
அணிபறை முழக்கியருளே. (5)

(5) சலாபன் - சல்லாபன் என்பதன் தொகுத்தல், சரசன் ; நாற்கவி - ஆசுகவி, மதுர கவி, சித்திரகவி, வித்தாரகவி என்பன. பாகை - தலைப்பாகை ; பரிசு - வெகுமதி ;

## சிறுதேர்ப் பருவம்.

554 சூலா மைப்பா லமுதுறைப்பத்
துலங்கும் படநா கப்பிடரில்
தோன்றும் ஞாலத் தலைவன் முடி
துளக்கிச் சுமக்கும் படிப்பரப்பின்

மேலாங் கனக வரைப்புறத்து
 மீனத் துவசத் தொளிவீச
வெயிலைப் பரப்புஞ் சுடர்ப்பருதி
 விசும்பூ டுருவித் தேர்துரப்பக்

காலா மொற்றைத் திகிரியயங்
 காதே யிடறக் காலெதிர்த்துக்
கலக்கப் பதுங்குங் கதிரைமதி
 கண்டு மகிழுமிந் நாட்டிலனு

கூலா கோலா கலமதனே
 கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கோவே யருணா சலவேளே
 கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே. (1)

(1) பூமியை ஆதிசேடனும் ஆமையொன்றும்தாங்குவதாகப் புராண வரலாறு. கனக வரை - உவமையாகு பெயராய் மாடமாளிகைகளை யுணர்த்திற்று. கால் - சக்கரம்; கதிர் - சூரியன் இந் நகரிலுள்ள மீனக்கொடிகள் சூரியன் தேரைத் தடுத்துப்போகாமல் செய்ய அதனைக்கண்டு சந்திரன்மகிழும் அத்தகை நாடு என்க.

555 அடுக்கு மணிப்பார் க்குள்வயிரத்
 தாலச் சிருத்திக் கடைத்தலைப்பொன்
ஆழி பொருத்தி மரகதத்தால்
 அடங்காப் பரப்பு நிலமைத்துத்

தொடுக்கும் பவளக் கால்நிறுவிச்
 சுற்றஞ் சுருவா ணியைக் கொழுவிச்
சுடர்மா ணிக்கப் பலகைதைத்துச்
 சோதி திகழும் நீலத்தால்

எடுக்குந் தனித்தட் டொருமூன்றும்
 இயற்றிச் சிங்கா சனக்குறடும்
இலங்கப் பதித்துப் பூரித்தோம்
 எவர்க்கும் தருண மறிந்துசெம்பொன்

கொடுக்குந் தடத்தா மரைக்கரத்தால்
 கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கோவே யருணா சலமாலே
 கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே. (2)

(2) ஆழி - சக்கரம்; சுருவாணி - கடையாணி, குறடு - பாதக்குறடு; ஈண்டு சிறுதேர் பல்வகை ரத்தினங்களாலமைக்கப்படுவது காண்க.

556 தேறுந் தமிழப் பாண்டியரைச்
 செலுத்தும் வழுதி வளநாட்டில்
சிறந்த குமரித் துறையீருய்ச்
 செழித்த புவனத் தவர்கள்பெறும்

பேறுண் பழமல் லாதுழுவோர்
பெரு மைத்தரக் கோர்வையினால்
பெருகப் பலன்முப் பூவும்வரப்
பெற்ற குபேர பாக்கியத்தால்

ஏறுஞ் சிவிகை கவிகைபடைத்
திறுமாந் திருப்பதொத் தன்னிறையை
ஆறு கூறு படுத்ததிலொன்
றவன் கைக்கொள்ள நின்றவைந்து

கூறுந் தரக்கைக் கொண்டவன்நீ
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கோவே யருணு சலமகிபா
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே. (3)

(3) முப்பூ - மூன்று பூமி; இப்பாட்டில் தன் வரிப்பணத்தை ஆறுபாகமாக்கி அதிலொன்றினை வெள்ளையர் பெற மிகுதி 5 பாகமுந்தான் கொண்டான் என்று கூறப்படுவது காண்க.

(வரைக்குந் திகாந்த வரைக்குமொழி)

557 மதிக்கும் பிரம கற்பமுற்று
மாறாப் பிச்சை யாண்டியென்றும்
வணிகே சனுக்கும் குலசைநகர்
வாழ்கோ பால கிட்டிணனுக்கும்

துதிக்குங் கவிமா ரியைப்பொழியுஞ்
சொற்பா வலர்க்குங் கருணைமழை
சொரிந்த வருணு சல்ராச
துங்க வகளங் கனுக்குமன்பு

பதிக்கும் பேரப் பிள்ளையென்னப்
பரிவா யழைக்கும் பெயர்படைத்தாய்
பரவைத் தருவைத் திரைக்குலிஞ்சிப்
பகட்டு வாளை துள்ளிவிண்ணிற்

குதிக்கும் புதுவைப் பதிக்கரசே
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
குலவா னருணு சலமகிபா
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே. (4)

(4) திகாந்தவரை - திக்கின் முடிவிலுள்ள மலை (சக்கரவாளமலை).

558 சூடா மணியே இருநிதியே
சுரபி தருஞ்சிந் தாமணியே
சுற்றத் தவர்சூழ் கற்பகமே
சோதித் தரள மணிவிளக்கே

வாடாத் தேவ தாரப்பூ
மலரே யலர்ந்த செழுங்காவி
மாலைக் கிசைந்த மணிமார்பாம்
மாமால் மருகன் குமரனன்றித்

தேடா மனக்குஞ் சரக்கன்றே
சீரு துவந்த சிங்கேறே
தேனு னுடைக்கக் கரும்பிருந்தின்
இசைபா டியசெங் கமலமுகம்

கோடா தெவர்க்கு மருள்புதுவைக்
கோமா னேதே ருருட்டுகவே
குலவா னருணு சலமகிபா
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே. (5)

(5) சூடாமணி - தெய்வமணி வகை ; சுரபி - காமதேனு ; தரும் - நினைத்ததைத் தரும் ; தேவதாரு - பஞ்ச தருக்களிலொன்று.

559 பார்வாழி திருவழுதி வளநாடு வாழிசுடர்
பழகுமுடி வேந்தர்வாழி
பதுமா சனத்திரு மடந்தைவாழ் புதுவையம்
பதிவாழி கீர்த்திபெற்ற

பேர்வாழி எங்கள்சர வணமுத்து ராசச
பிரமமத ராசன்வாழி
பிள்ளைத் தமிழ்ப்பாடல் கைக்கொண்டு பரிசருல்
பி....குண சாலிவாழி

நேர்வாழி பூண்டவரு ணுசல நரேந்திரன்நன்
னெறிவாழி யுபையவஸ்கிஷ
நிடூழி வாழியா முப்பத் திரண்டறமும்
நிலைநிற்க வென்றுவாழி

சீர்வாழி யாகம் தியானமற வாதநீ
சிறுதேர் உருட்டியருளே
செல்வக் குபேரனரு ணுசல மகிபனே
சிறுதேர் உருட்டியருளே. (6)

---

(புதுவை அருணுசலம் பிள்ளைத் தமிழ் முற்றிற்று).

# முருகப்ப தேவர் பிள்ளைத் தமிழ்

## துதி

### வெண்பா

560 பூமேவு செல்வி பொருந்து நெடுமாலே
மாமேவு முந்தன வாஞ்செய்வாய்—காமேவு
மன்னன் முருகப்ப மார்த்தண்டன் மாமுடிசேர்
தென்னன் செழிக்கத் தினம். (1)

(1) பூமேவு செல்வி - திருமகள் ; மார்த்தண்டன் - சூரியன்.

## காப்புப் பருவம்

### திருமால்

561 பூமேவு திருமாது புவிமாது தழுவுமிரு
புயச்சயிலா துளபமார்பா
புவனமீ ரேழுந் தழைத்திடக் கிருபையது
புரிசங்கு சக்கரபாணி
காமேவு ககனநிறை யமரருக் கமுதம்
கனிந்துதவு ரகுநாயகா
காருருவ நாரண முராரிமா தவமலர்க்
கண்ணரிசை யைப்பரவுமாம்
தேமேவு பாண்டியன் செம்பியன் சேரர்கோன்
சேர்க்கையா திக்கவேந்தன்
சீர்பெற்ற நியமைநகர் தன்னிலர சாட்சிசெறி
தேவரென வருவசீரன்
மாமேவு துரைப்பழனிப் பதிநிதி யாம்வாச்ச
மாகாளி பூவன்மைந்தன்
மார்கண்ட னுமுரு கப்பமகி பாலசெய
மன்னனைக் காக்கவென்றே. (1)

(1) பாணி - கை ; செம்பியன் - சோழன்.

### சிவபெருமான்

562 நீதிகொண்ட மலையரய னருள்கின்ற மகமாயி
நித்தியகலி யாணிவாமி
நிமலிதிரி புரைகெவுரி புவனவுயிர் தழைக்கவருள்
நியமிக்கு முமைபாகராம்
கதிகொண்ட சரணர்சபை நடனேசர் மதிகொன்றை
கங்கையணி சடிலராதி
கயிலாச நாதர்பர மேசர்சரு வேசரிரு
கமலப் பதம்பணிகுவாம்

நதிகொண்ட கலைவாச நாடிகாசை நாடுவிளை
நடுநி யமை நாடாளுமால்
நானிலம் விளங்கவரும் இரவிகுல திலகமனு
நாகரிக் யோகசாலி

துதி கொண்ட பழனியப் பக்குரிசில் பாலகன்
சுபவாச்ச மாகாளியாம்
துரைத்தனக் கொண்டல்முரு கப்பமக ராசசெய
சுமுகனைக் காத்தருளவே (2)

(2) மலையரயன் - பருவத ராசன் ; பாகர் - இடப்பாகத்திலே வைத்தவர் ; சடிலம் - சடை ; நாடு இளசை - வினைத் தொகை.

## விநாயகர் முதலியோர்

563 உரைபெற்ற மூவர்க்கு முதன்மையென வேவெயில்
உகந்தமத வேழமுகவர்
உண்மைசெறி வையா புரிக்கந்தர் துங்கமலை
உற்றுவளர் கந்தசாமி

விரைபெற்ற நளினமணிப் பேரையில் சாத்தய்யர்
வீரபத் திரர்கறுப்பர்
விமலி அங் காளிகீ ரணிமுத்து மாரியுமை
விண்ணவ ரெலாம்காக்கவே

கரைபெற்ற கடல்சுற்று புவனத்தில் யாவரும்
கண்கண்ட துருவராசன்
கவுரியன் படிதொடப் பரியினெழு நகுலனொரு
காங்கயனை விலைகொண்டவன்

பரைபெற்ற பழனியப் பக்குரிசில் பாலகன்
பகரிளசை நகராதிபன்
பச்சைமா லானமுரு கப்பபூ பாலசெய
பாஞ்சால குணவானையே. (3)

(3) நளினம் - தாமரை ; துருவராசன் - உவமையாகு பெயர்,.......ஆம்பாட்டுக்குறிப்பில் காண்க. கௌரியன் - பாண்டியன் ; நகுலன் - பாண்டவரிலொருவன். அசுவசாஸ்திரம் கற்றவன்.

## சவுந்தரமான் (உமையவள்)

564 விரையார் பிரசநதி பாய
விளையுங் கழனி சூழ்நியமம்
விளங்கும் கனகா லயத்திலுறை
விமலர் செயங்கொண் டீசர்பங்கின்

உரையார் துணைவி யெனவளரும்
உமையா ளியபெண் சவுந்தரமான்
உம்பர் பரவ வரிதான
உபைய சரண மலர்காப்பம்

தரையார் துருவப் பழனியப்ப
சனகன் தவத்தில் செனித்தமைந்தன்
தழைக்கும் நரசிங் கேந்திரமாத்
தருபண் டாரத் தார்மருகன்

திரையார் கடலைக் கடைந்தமுதம்
தேவர்க் களித்த ரகுவீரன்
சிலைக்கை விசயன் முருகப்ப
தீரன் இனிய தமிழிசைக்கே (4)

(4) பிரசம் - தேன் ; நியமநகரிலிருக்கும் ஈசன் பெயர் செயங்கொண்டீசர், அம்மை பெயர் சவுந்தரமான் ஆகும். அம்மையைப்பற்றிய பாட்டு இஃது ; உபையம் - இரண்டு ; உரை ஆர் - புகழ் நிரம்பிய, செயங்கொண்டார் வழக்கம் என்றும், செயங்கொண்டவர் சதகம் என்றும் இவ் வீசரைப்பற்றி விளித்த பாடல்கள் உள்ளன காண்க.

## செங்கீரைப் பருவம்

565 தண்ணமிகு புனலாட்டி வெண்ணீ றணிந்துறுதல்
தனிநிலக் காப்புமிட்டுத்
தருகுழந்தைச் சோமனிவனென யாவரும்
சாற்றிடச் சுடிகைக் கட்டி

நண்ணமிகு கருணைதரு கண்ணுக்கு மையிட்டு
நகுகுழை செவிக்கணிந்து
நற்றுயர் மடியில்வைத் திணைமுலைப் பால்சங்கி
னுலேந்தி யூட்டி யூட்டி

வண்ணமிகு நறுநெய்கொண் டுச்சிக்கு மேல்பொத்தி
மணிவாய் மகிழ்ந்துசொல்லும்
மழலைமொழி கேட்டுளம் விரும்பிமுத் தாடவே
மார்க்கண்ட னெனவேபுயத்

திண்ணமிகு பழனியப் பக்குரிசில் பாலன்நீ
செங்கீரை யாடி யருளே
சித்திரமத னுனமுரு கப்பபூ பாலனே
செங்கீரை யாடியருளே. (1)

(1) சோமன் - சந்திரன் ; நகு - ஒளிவிடுகின்ற ;

566 வண்டாடு குவளைமல் லிகைமுல்லை செயவாகை
மாலைப் புயங்களாட
வட்டமுறு பொன்சுடிகை யிட்டநுத லாடமணி
வாய்மழலை யாடயாரும்

கொண்டாடு கருணையம் கண்ணிணைக ளாடவொளிக்
குண்டலச் செவிகளாட
குறைவற்ற மதிவதன மாடமுன் கையிலணி
கொலுசுகாப் போசையாட

கண்டாடும் மொழியன்னை கண்டுகண் டுள்ளம்
கனிந்துதினம் முத்தமாட
கலகலென விருசரண மணிதண்டை யும்சதங்
கையுமாட வுவகையாட

செண்டாடு முலைமாதர் மடலெழுது சுமுகன்நீ
செங்கீரை யாடி யருளே
சித்திரமத னுனைமுரு கப்பபூ பாலனே
செங்கீரை யாடி யருளே. (2)

(2) செண்டு ஆடு - செண்டினை யொத்து ஆடுகின்ற ; வதனம் - முகம் ; மடல் எழுதுதல் - பெண்கள் இவன் அழகைக்கண்டு மணக்க நினைத்து இவனுடைய சித்திரத்தைச் சீலையில் எழுதி மடற் குதிரையில் ஏறுவேன் எனும் அகப்பொருள் துறையைக்காட்டியது.

## வேறு

567 அறிவுறு சுருதியை யுணரிடு நெறியினர்
அன்பா ருங்கோவே
அழகிய கவிஞர்க ளிசையது சொலவளர்
ஐந்தா ரின்தேவே

முறிவுற தரியலர் நவநிதி திறைகொடு
முன்பாய் வந்தேதான்
முறைமுறை யடிதொழ வரியணை குலவும்
முகுந்தா பைந்தாமா

பிறிவுறு மதிநுதல் மடவியர் மடல்வரை
பிந்தா நன்காமா
பிரசம தொழுகிய வனசம திலகிய
பெண்சே ரும்பூமா

செறிவுறு வளமைகொ ளிளமையில் வருதுரை
செங்கோ செங்கீரை
திருநிறை புயன்முரு கப்ப வசீகர
செங்கோ செங்கீரை. (3)

(3) சுருதி - வேதம் ; நெறியினர் ஈண்டு பிராமணர் ; ஐந்தாரு - ஐந்து தருக்கள், கற்பகம், பாரிசாதம் முதலியன ; தரியலர் - பகைவர் ; பிந்தா - பின்னிடையாத ; வனசம ........பெண் - திருமகள். திருவுடையவரைத் திருமால் என்று கூறுதல் மரபாதலால் ஈண்டு திருகமள் வசிப்பதாகக் கூறினர்.

## தாலப் பருவம்

568 வாரணி யாகமுன் வீறுசொல் வார்சிறு
வாய்கிளி கூர்வேலா
மாமழு வாசியி லேறிமெய் யாரமும்
வாமம் தணிவோனே

கீரணி யாள்மக மாயியை நாடழ
கேச மனோநேயா
கேசரி யான தளாதிப ரேவல்கள்
கேள்கொளு வாழ்வோனே

கூரணி யாள்விழி மாதக லாவனு
கூல மகாமேரே
கூவிய யானைமுன் நேமியை யேவிய
கோவெனும் மால்போலே

தாரணி யாள்துரு வாதள நாயக
தாலோ தாலேலோ
சசிவத ஞமுரு கப்பவ சீகர
தாலோ தாலேலோ (1)

1344. 1908/2

(1) வாசி - குதிரை ; கீரணியாள்....மாயி - ....பாட்டில் காண்க , தள - அதிபர் - தளாதிபர், சேனைத் தலைவர், கூர்விழி அணியாள் மாது என்க. மேரு - மேரே என விளித்தார் - யானை - கசேந்திரன் ; துருவா, தளநாயக என்க. தளம் - இதழ்-ஈண்டு தாமரையைச் சினையாகுபெயராய்க் காட்டி இச்சொற்றொடர் சூரியனைக்காட்டிற்று, தாமரைக்குக் கணவன் சூரியனானதால். சசி - சந்திரன்.

569 பூமா திருநிறை மார்பா தவமலி
பூசா பலபோசா
பூணுர் முனைமட மானுர் தழுவனு
போகா கனயோகா

சோமா திசையினர் தானே திறைதரு
தூயா மனுநேயா
சூரா தருமனோர் நூருளிடம் விடு
தூதா மனுநீதா

காமா திடன்நிறை வசகா வருளிடு
காவே வுயர்கோவே
கார்சூ ழிளசைநல் நாடாள் நிதியதி
காரா செயவீரா

தாமா தினமுப காரா யாசினி
தாறு தருதாறு
சசிவத ஞமுரு கப்பவ சீகர
தாலோ தாலேலோ (2)

(2) போசன் - வடநாட்டிலரசாண்ட கீர்த்திவாய்ந்த ஓர் மன்னன். பூமன் என்பது பூமா என விளித்தது. சோமா - சூரியனே ; திசையினர்தானே திக்குகளிலுள்ள அரசர்கள் கேளாமல் தானே தருமனோர்......தூதா - தருமன் முதலிய பாண்டவர்கள் துரியோதனுதியர் ஆகிய நூற்றுவரிடம் தூது அனுப்பிய கண்ணு ; வாகா - அழகனே ; நிதி அதிகாரன் - நான்காம் வேற்றுமைத் தொகை ஆசினி தாரு தருதாரு - மேகம் உலகோர் வேண்டாமலே தாருகவே மழையைத் தருவது போலத்தரும் கொடையையுடையவனே.

570 காவுக் கிசைந்த மகபதியே
கண்ணுக் கிசைந்த தனபதியே
காருக் கிசைந்த புதுமழையே
காணிக் கிசைந்த விளைநிலமே

நாவுக்கிசைந்த தமிழிசையே
நாட்டுக் கிசைந்த தசரதமா
ராசர்க் கிசைந்த ரகுபதியே
நகருக் கிசைந்த மணிரதமே

பூவுக் கிசைந்த திருவண்மே
புகழுக் கிசைந்த வுருவகமே
பொன்னுக் கிசைந்த நவமணியே
போதர்க் கிசைந்த வாதரமே

பாவுக் கிசைந்த பொருளினது
பதிவா ழரசே தாலேலோ
பச்சை முகிலே முருகப்பபூ
பாலா தாலோ தாலேலோ. (3)

(3) மகபதி - இந்திரன் ; தனபதி - குபேரன் ; காணி- 133 1/3 செண்ட் கொண்டதென்பர் ; போதர் - ஞானிகள்.

## சப்பாணிப் பருவம்

571 இந்துற்ற நிலவென்ன வெண்குடை நிழற்றிட
இரண்டுசா மரை யிரட்ட
எந்திய வடப்பை காளாஞ்சி பொற்குஞ்சம்
இடக்கியஞ் சிலரெடுப்பக்

கொந்துற்ற சதுரங்க சேனைபுடை சூழ்ட்டக்
கொண்டலென வாத்தியமதிரக்
கொய்யுளைக் கவனவாம் பரியின்மேல் பவனிவரு
கோலா கலாபாண்டியா

சிந்துற்ற திருவணையின் மேற்சென்று ராவணச்
சேவகனை வென்றிலங்கைச்
செல்வமும் மகுடாபி டேகமும் தனைவந்து
சேர்ந்தவிபீ டணர்தமக்கே

தந்துற்ற சாரங்க ராமனே செங்கையால்
சப்பாணி கொட்டியருளே
சத்புருட ஞனமுரு கப்பமகி பாலனே
சப்பாணி கொட்டியருளே. (1)

(1) இந்து - சந்திரன் ; அடப்பை - வெற்றிலை, பாக்கு முதலியன ; காளாஞ்சி - எச்சிற் படிக்கம் ; பொற்குஞ்சம் - பொற்சரிகையுள்ள உடை ; இடக்கியம் - தேர்க்கொடி ; கொந்து - கொத்து, தொகுதி , மெலித்தல் விகாரம் எதுகை நோக்கியது. கொண்டல் - மேகத்தின் இடி ; சிந்து - கடல் ; தனை -தன்னை என்பதன் தொகுத்தல் ; சாரங்கம் - வில்.

572 கஞ்சமென வுந்திரு நிறைந்துநித முங்குலவு
கற்கோ டெடுத்தபுயனே
கந்தினை யடர்ந்துநிழ லின்புற நடம்செய்யொரு
கைக்கா ருகக்களிறனே

வஞ்சமென வந்தகலை யின்பிறகு சென்றடர
வைக்கோல் பிடித்தகரனே
வண்டுபடி கொந்தளக மங்கையர் கனிந்துருகு
மட்டார் மலர்க்கைமதனு

புஞ்சமென நெஞ்சினி லணிந்தனை மகிழ்ந்துசிறு
பொற்பூண் மிகத்துவளவே
புன்சுடிகை குண்டல மிடும்கொளு சசைந்துடல்
பொருப்பா யசைத்திசையவே

தஞ்சமென நம்புவரை யஞ்சல்புரி செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சத்புருட ஞனமுரு கப்பமகி பாலனே
சப்பாணி கொட்டியருளே. (2)

(2) கஞ்சம் எனவும் திரு - இலக்குமி தாமரை பூ வென நினைத்து ; கல்கோடு - கோவர்த் தனமலை ; கந்து - கட்டுதறி ; கலை - பொன்மான் (மாரீசன் இங்ஙனம் வந்தது காண்க) வை+கோல் ச கூரிய அம்பு ; மட்டு - தேன் ; புஞ்சம் - கூட்டம் ; நெஞ்சு - மார்பு ; பொருப் பாய் - மலையை யொத்ததாய் ; நம்புவர் - வினையாலணையும் பெயர்.

573 தூயமறை நாவல ராசையுட னுசீர்கள்
சொல்லியட் சதைகள் கொட்ட
சுகிர்தம்செய் கின்றதுரை பழனியப் பேந்திரனின்
சொற்பகர்ந் துவகை கொட்ட

நேயர்மதி மந்திரிகள் பண்ணையில் சிறுதேட்டு
நெற்சேரின் மீதுகொட்ட
நேரிட்ட பற்றலர்நின் பொக்கிச வீட்டிலே
நிதிதிறை கொணர்ந்து கொட்டச்

சேயர்மன தால்மறுகில் விளையாட வாவெனச்
சென்று வலங்கை கொட்டச்
சித்திரமணி வாசலில் முப்போது முறைமையால்
செயவாத்தி யங்கள்கொட்ட

தாயர்மடி மேலிருந் துடலசைத் திருகையால்
சப்பாணி கொட்டி யருளே
சத்புருட னுமுரு கப்பமகி பாலனே
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) மறை நாவலர் - பிராமணர் ; சுகிர்தம் - நல்லறம் ; தேட்டு - சம்பாத்தியப் பொருள் ; நெற்சேர் - நெல் கொட்டிவைக்கும் ஓர் கருவி ; பற்றலர் - பகைவர் ; வலங்கை - வலக்கையை இடக்கையின் மீது கொட்ட.

## முத்தப் பருவம்

574 வேலையில் செறியிப்பி முத்தமிக் கடையெல்லாம்
விற்பார்கள் கண்டுகொள்வோம்.
வேயீன்ற முத்தினைக் கோயிலெல் லாம்கண்டு
வேண்டியே நெஞ்சில்வைப்போம்

மாலையில் செறிகன்னல் முத்தெருமை வாய்தின்
றசைப்பினில் கண்டிருப்போம்
மந்தரப் புயல்முத் தனேகமழை யூடுசென்
றங்கையால் சேர்த்தெடுப்போம்

சோலையில் செறிபன்றி முத்து மறுமுத்தங்கள்
தூயநகை யில்புனைகுவோம்
துளையாத கோவைமுத் துந்தன்முத் தாதலால்
துரிதமொடு வேண்டுகின்றோம்

காலையில் செறிகமல மெனமகிழ்ந் தையநின்
கனிவாயின் முத்தமருளே
கட்டழகு வாச்சமா காளிமுரு கப்பநிதி
கனிவாயின் முத்தமருளே. (1)

(1) வேலை - கடல் ; இப்பி - சிப்பி ; வேயீன்றமுத்து - சிவபிரான்........அம்பலட்டின் குறிப்பில் காண்க ; கன்னல் - கரும்பு ; எருமை வாய்தின்று அசைப்பினில் - எருமை வாயினில் உண்டு குதப்பும்போது ; மந்தரப்புயல் - மேலுலகத்திலுள்ள மேகம் மேலுலகிலுள்ள மேகம் என்றார் இந்திரன் ஏவுதலான், அகம்+கை - அங்கை, நகை - ஆபரணம் ; **உன்தன்** - **உ**ன்றன் எனற்பாலது உந்தன் என நின்றது. துளையாத - துளையிடாத.

575 பெண்சேர்ந்து மெய்யில் பிறங்குகயி லாசாரம்
பெம்மான் தருங்கிருபையால்
பிறைநுதல் செல்விகே ரணிமுத்து மாரியருள்
பெற்றுவளர் கின்றபரிசால்

பண்சேர்ந்து வண்டினம் தாவுதட வாவிசூழ்
பழமையிளை சைப்பதியிலே
பாரம் பரிக்கையா பாதிக்க முறைமைபுரி
பாக்கியலெட் சுமிவிலாசா

எண்சேர்ந்து நாங்கள்வந் திரவலர்கள் செல்வர்முன்
இரக்கின்ற வாறுபோல
இச்சித்து வேண்டினும் புன்பசிக் காயுதரம்
எக்கிமுன் கைசுழற்றிக்

கண்சேந்து தாய்முலைப் பாலுண் டரற்றுநின்
கனிவாயின் முத்தமருளே
கட்டழகு வாச்சமா காளிமுரு கப்பநிதி
கனிவாயின் முத்தமருளே. (2)

(2) கயிலா ஆசாரம் - கயிலைமலையில் அரசிருக்கை; பரிசு - தன்மை; பாரம்பரிக்கை - பரம்பரை முறையாய் எண்சேர்ந்து - எண்ணிக்கையாகச் சேர்ந்து; உதரம் எக்கி - வயிற்றினைச் சுருக்கி; கண் சேந்து - கண்சிவந்து.

576 நலனோங்கு கோனாடு கானாடு கல்வாச
நாடுபூங் குன்றை நாடு
நானாடு காவல் கொண்டிளசையம் பதியிலே
ரவிமதிய முள்ள மட்டும்

வெலனோங்கு வெகுகோடி தலமுறை விளங்கவே
பெருமை யர சாட்சிபுரியும்
பேராளி சீராளி போராளி சேனைப்
பெருக்காளி வேந்தருக்குப்

பலனோங்கு காவிமுன் னைசிட்ட தண்டிகை
பகல் பந்தம் வெண்சுருட்டி
பார்சங்கி லிசங்கு சிகண்டியிவை தேவர்பால்
பண்டு பெற்ற துருவா

கலனோங்கு நிதி பழனி யப்பமால் சேயநின்
கனிவாயின் முத்த மருளே
கட்டழகு வாச்சமா காளிமுரு கப்பநிதி
கனிவாயின் முத்தமருளே. (3)

(3) நால்+நாடு - நானாடு; ரவி - சூரியன்; ஆளி என்பதிலெல்லாம் இகரவிகுதி வினை முதற்பொருளை யுணர்த்திற்று; தண்டிகை - பல்லக்கு; பகல்பந்தம் - பகல் விளக்கு; வெண்சுருட்டி - வெள்ளிய ஆலவட்டம்; சிகண்டி - தலைமுடி.

## வாரானைப் பருவம்

577 பாலார் மதுரைத் திருநீறன்
பாகறுதற்குத் தரித்திடுவேன்
பைம்பொன் சுடிகை தனக்கிசைந்த
படிசிந் தூரப் பொட்டிடுவேன்

கோலார் விழிக்கு மையிடுவேன்
குழைக்குண்டலமும் செவிக்கிடுவேன்
கோலப் பதக்கம் சரப்பணியும்
குவடார் புயத்தி லணிந்திடுவேன்

நூலார் மருங்குல் மடந்தையர்கள்
நோக்கு மரைஞாணிடைக்கிடுவேன்
நுவல் செங் கோல்கைக் கினித்தருவேன்
நோன்தா ளிணைக்குச் சிலம்பிடுவேன்

சேலார் துவசப் பழனியப்பன்
சேயா வருக வருகவே
செம்பொன் வரையே முருகப்ப
தீரா வருக வருகவே. (1)

(1) அன்பாக துதற்கு என்க; சரப்பணி வயிரமழுத்தின கழுத்தணிவகை; குவடு மலை; செங்கோல் - முறை தழுவாநிற்கும் நிலை; அது செவ்விய தோல் போறலின் செங் கோல் எனப்பட்டது; நோன்தாள் - வலிமை மிகுந்தபாதம்; சேல் ஆர்துவசம் - சேல்மீன் வடிவெழுதிய கொடி.

578 முறையாக வோரேழு முழமுயர்ந் தொன்பது
முழச்சுற் றுடைத்தாகியே
மூசிவண் டாலிக்க மும்மத மிரைத்தூற்றி
முகபடா கம்தரித்துப்

பிறையான வெங்கோட்டின் நிறகத் திகட்டிப்
பிறங்குமிடை மணிதரித்துப்
பெருகு பொற் செல்லென விசைத்து மழைமுகிலைப்
பிழிந்துகண் மூட்டியே

துறையான பகிரண்ட வெளியினில் தாவியுயர்
சொர்ன வரை யைத்தகர்த்துச்
சுற்றாழி யறலைக் கலக்கிக் கலக்கிநீர்
தூளாக்கி யுலகின்மீது

சிறையான கெடியரச ராணை சிதைத்துவரு
சிந்துரப் பதிவருகவே
திக்கரசர் புகழுமுருகப்பதுரை யெனிம் வால
சீவகன் தான் வருகவே. (2)

(2) எழு முழம் உயரம், ஒன்பது முழச்சுற்று, மதமுடைத்தாதல் முதலியன அரயசனை யின் இலட்சணங்கள்; மூசி - மொய்த்து; முகப்படாகம் - முகபடாம்; வெங்கோடு பிறையின் ஆனநிறகத்தி கட்டி என்க. கிறையின் - இன் - உவமப்பொருவு (5 ஆம் வேற்றுமை); செல் இடி; பகிரண்டம்; அண்டத்தின் வெளி; சொர்னவரை - மேருமலை பத்ரம், ம்ருகம் மந்தரம் என்ற மூன்றுவகை யானைகளில் இங்கு கூறியது பத்ரம் என்ற யானைவகையைச் சேர்ந்தது; ஆழி அறல் - கடலின் மணல்; கெடி அரசர் - கீர்த்திமிக்க; அரசர் சிந்துரப்பதி - யானையையுடைய தலைவன்.

579 தொடரு மன்பர்கள் மனமறிந்திடு
சுகுண ரஞ்சிதன் வருகவே
துதிவிளம்புவர் கலியை வென்றருள்
சுமுக வைந்தரு வருகவே

படரும் மிஞ்சிரு ளறவிளங்கிய
பருதி வங்கிசன் வருகவே
பகைபு ரிந்தவர் வலிய வந்தடி
பணியு மிந்திரன் வருகவே

பிடருயர்ந்திடு கரட குஞ்சர
பிரபல வங்கசன் வருகவே
பிறைய ணிந்திடு பரனை நம்பிய
பிரிய நெஞ்சகன் வருகவே

அடரும் வஞ்சகர் நிறையி லங்கையில்
அசுர ரஞ்சிட முனியுமால்
அச்சு தத்துரை யாகியமுரு
கப்ப விற்பனன் வருகவே. (3)

(3) ரஞ்சிதன்-அழகன் ; கலி-வறுமை ; பருதி-சூரியன் ; வங்கிசன்-வமிசம் ; கரடம்-மதம் ; நிற இலங்கை-வினைத் தொகை ; அச்சுதன்-திருமாலை யொத்தவன் ; விற்பனன்-கல்வியுடையவன் .

## அம்புலிப் பருவம்

### சாமம்

580 மாதார வந்தவன் நீயிவ னம்மாதை
மார்பிலக லாது வைத்தான்
வற்றுக் கடல் பிறந் தாய்நீ யிவன் சுற்றம்
வளர்குடி தனில் பிறந்தான்

தாதார மலராம்பல் தேய்ன்நீ யிவன் மதம்
தருமாம்பல் நேயமாகும்
தண்நிலா வுலகினில் விரிப்பை நீ யினிசையோர்
தரணிமுன் றினுய விரிப்பான்

போதார வுடுநடு விருப்பை நீ யிவனுமிப்
புரவலரில் நடுவிருப்பான்
போற்றுவார் யாவரு முனையிவனை யாவரும்
போற்றுவார் புலவருக்கே

ஆதாரமிருவரும் சரியாகு மாதலால்
அம்புலீ யாடவாவே.
அதிவீர சூரமுரு கப்பமகி பாலனோ
டம்புலீ யாடவாவே. (1)

| சந்திரன் | முருகப்பவன். |
|---|---|
| (1) 1 இலக்குமி பின் பொருந்த தோன்றினவன். | இலக்குமியை மார்பில் நீங்காது வைத்தவன். |
| 2 வற்றாத (பாற்)கடலில் பிறந்தவன். | சுற்றம் பெருகி வளர்கின்ற குடும்பக் கடலில் பிறந்தான். குடி என்பதோடு கடல் சேர்ந்து உருவகமாக ஆக்குக. |
| 3 மகரந்தம் பொருந்திய ஆம்ப (அல்லி மலர்)லுக்கு நேயன் (மலர்வதை நோக்கி). | மதம் பொருந்துகின்ற ஆம்ப (யானை)லுக்கு நேயம் பொருந்தினவன். |
| 4 குளிர்ந்த நிலவினை உலகில் வீசுவான் .. | புகழ் நிலாவை ஒப்பற்ற மூன்று உலகங்களினும் விரிப்பான். |
| 5 (இரவுக்)காலம் பொருந்த நட்சத்திரங்களின் நடுவிலிருப்பான். | அரசர்களின் நடுவிலிருப்பான். |
| 6 கன்னியர் முதல் யாவரும் புகழ்ந்து துதிப்பார் | அரசர் முதல் யாவரும் போற்றுவார். |
| 7 புலவர்க்கு (தேவர்கட்கு அமுதம் கொடுப்பதால்) ஆதாரமானவன். | பாட்டு பாடும் புலவர்கட்கு வரிசை செய்து ஆதாரமானான். |

## பேதம்

581 தேயுமுடலாளி நீ யெந்தநாளினுமிவன்
தேயாத வச்சிரதேகன்
சீறுவிடவரவினுக் கஞ்சுவாய் நீயிவன்
தேவர்க்கு மஞ்சாதவன்

காயுமுறை யல்லினி லொளிப்பை நீ யிவனூழி
காலமும் நிறைந்திருப்பான்
காணு விமானத்தில் வருவை நீ யிவன் மன்னர்
காணரத மேல்வருகுவான்

பாயுமுவ ராழியில் தோய்வை நீ யிவன்விரைப்
பன்னீரி னில் தோய்குவான்
பாவையரை நாளும் வருத்துவாய் நீ யிவன்
பாவையரை ஆதரிப்பான்

ஆயுமுணர் வாலறிவை நீ யிவர்க் கிணையாசொல்
அம்புலீ யாடவாவே
அதிவீர சூரமுருகப்பமகிபாலனோ
டம்புலீ யாடவாவே. (2)

| | |
|---|---|
| (2) 1 உடல் தேய்வதனையுடையவன் .. .. .. | தேயாத வச்சிர தேகத்தையுடையவன். |
| 2 விடமுடைய ராகுவென்னும் பாம்புக் கஞ்சுவான். | தேவர்க்கும் அஞ்சாதவன். |

| | |
|---|---|
| 3 முறையான (அமாவாசை) இரவில் ஒளிப்பான். | .. இவன் ஊழிகாலத்திலும் நிறைந்திருப்பவன் (திருமாகலாகக் கருதி). |
| 4 யாவருக்கும் தெரியாத புட்பக விமானத்தில் வருவான் (குபேரனுக்கும் இபனுக்கும் புட்பக விமானமுண்டு). | அரசர் காணுமாறு தேரில் வருவான். |
| 5 உவர் தண்ணீரான கடலில் மூழ்குவான். (உதிப்பதைக் கருதி). | வாசனையையுடைய பன்னீரில் மூழ்குவான் (மூழ்குவதற்காக). |
| 6 காதல் கொண்ட கன்னியரை வருத்துவான். | பெண்களை ஆதரிப்பவன். |

உணர்வு-அறிவு.

### (தானமும் தண்டமும்)

582 சிறியார்கள் சிறுமையுந் தோன்றுது பெரியரைச்
சேர்ந்தவர்க் கிங்குவந்தால்
தீராக் களங்கமுந் தீரும் வெங் கலையுதவி
செய்குவான் கிங்கிலியரும்

அறியார்க ளிவன்வேத மந்திரவனு வாலிங்கு
வருகுவாய் சம்மதித்து
வாரா திருக்கில்வன் மும்மதப் பணையானை
வாய்க்கவள மாக்கிவிடுவோம்

குறியார்க ளுனையாரும் மேரைவிட்டொளிவை நின்
குணவீர டாகை யறிவோங்
கூறுன வுருவன் நீ வெள்ளையன் நீ யுனைச்சாணி
கொண்டுநா மெறிவதெல்லாம்

அறியார்க ளாதெரியு மாசேதி யிவனுடன்
அம்புலீ யாடவாவே
அதிவீர சூரமுரு கப்பமகி பாலனே
டம்புலீ யாடவாவே. (3)

(3) சிறியார்................ வந்தால் ................ஆம் பாட்டிலும் இங்ஙனம் காண்க. கலையுதவி என்றுர்கலை என்றல் உடைக்கும் வளரும் பங்குக்கும் பொருளுள்ள சொல்லொற்றுமை நயத்தால். கிங்கிலியர்-ஏவல் செய்வோர்; மேரை-மேருவை என்பது மேரை என நின்றது; டாகை-கர்வத்தை; சாணி கொண்டு எறிவது; எருக் கொண்டு கன்னியர் வீசுவது அறியார்களார், தெரியுமா என்று வினவாக்குக.

## சிற்றில் பருவம்

583 புயலே மாதம் மூன்றுமழை
பொழிந்து பெருகும் குளக்காலும்
பூகம் கதலி மாமரமுட்
பொருந்தும் பனசப் பொதும்பரிடத்

தயலே மாறிக் கவிகுதிக்க
அதிர்ந்தே கனிகள் விழுந்துதகர்ந்
தளறுய்ப் புரண்டு திரைகளெறிந்
தாறுய் மண்டிச் செழித்தேறி

வயலே பாயக் கன்னல் செந்நெல்
வளர்ந்து விளையக் கடைசியர் கூன்
வாளிட் டரியப் போரேத்தி
மள்ள ரடித்து மணிகுவிக்கும்

செயலே மாரு விளைசைநகர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே
தேவா முருகப் பேந்திர வச்சிர
தேகா சிற்றில் சிதையேலே. (1)

(1) பூகம்-பாக்கு மரம்; பனசம்-பலா மரம்; கவி-குரங்கு அளறு-சேறு; கூன்வாள்-வளைந்த அரிவாள்; மணி-நெல் மணி, முத்து மணி ஆகியன. இப்பாட்டில் அந்நகரச் சோலை, வயல் வளம் கூறப்பட்டிருப்பன நோக்குக.

584 பொன்னு லமைத்த சிறுகூஎில்
புதுப்பன் னீரா லுலையேற்றி
பூத்த முல்லை யரும்பரிசி
போட்டுப் பவள விறகிட்டு

மின்னல் கனலி மூட்டி நன்றாய்
விருந்து சமைத்தே வுனக்குமிட்டு
மிச்ச மெடுத்து நாங்க ளெல்லாம்
விரும்பிப் புசிப்போம் துணைச்சிறுவர்

தன்னல் மனத்தின் கெருவத்தால்
சருவிச் சருவி வந்து வந்து
தாளிட் டழித்தால் நாம் பிடித்துத்
தள்ளு வோம்தாட் சணியமில்லை

தென்னு பழனி யப்பனருள்
சேயா சிற்றில் சிதையேலே
தேவா முருகப் பேந்திர வச்சிர
தேகா சிற்றில் சிதையேலே. (2)

(2) கூன்-கருப்பஞ்சாறடு கூன் என்ற பாத்திரம்; ஈண்டு குடம் என்னும் மாத்திரையாய் நின்றது. கனலி - நெருப்பு; துணைச்சிறுவர் - நண்பரான சிறுவர்கள்; சருவி - தழுவி; தான் இட்டு அழித்தல்-பாதங்களினால் காலத்தால்; தென்னு-பாண்டியனே.

585 துட்டப் பகைஞர் துணுக்க மிட
துண்டின் துண்டின் றெனமுழங்கும்
தூய ரெருத்தின் மேலொற்றைத்
துடிடங் காவாத் தியவேந்தே

வட்டப் பருதி யெனவேத
வளமாங் கவிகை சுருட்டி யிடால்
மன்னும் கவரி பாவாடை
வருங்கட் டியமும் படைத்தோனே

இட்டப் படுமுன் குடிநாங்கள்
இலேயோ வெங்கள் வீடு கள்ளர்
இருக்கும் பதியோ சொல் சொல்நீ
எனவந் தளிப்பாய் இங்கிலீசுத்

திட்டப் படிக்கர் நாடகஞ் செய்
தீரா சிற்றில் சிதையேலே
தேவர் முருகப் பேந்திர வச்சிர
தேகா சிற்றில் சிதையேலே. (3)

(3) துண்டின் துண்டின்-ஒலிக் குறிப்பிடைச் சொல் ; எருது—எருத்து என விரிந்தது ; -ங்கா-ஒரு விதப் பறை ; பாவாடை-பெரியோர் வருங்கால் கீழ் ஆடையிட்டு அதன் மேல் வருமாறு செய்தல் மரபு ; கட்டியம்-அரசர் முதலியோரைக் குறித்துச் சொல்லும் புகழ் ; கள்ளர் - திருடர் ; கர்நாடம் செய்வது-தொழில் செய்வது.

## சிறுபரைப் பருவம்

586 கலேயேந்து பிறைநுதல் கன்னியர்கள் மனமெனக்
கபடம் படைத்துநாலு
காலில்ஓ ரைந்துக்தி காட்டிமனு மீறிமுள்
கடிவாளம் விட்டிறுக்கித்

தலேயேந்தி துடிக்கம்ப முகமுட்டு முருகோடு
சதங்கை கிண் கிணிபுனேந்து
தங்கநிறை கலனேவைத் தங்கவடி கட்டியிரு
தாளினில் தண்டை பூட்டி

அலேயேந்து கட்லேக் கலக்கிவெய் யோன்பரியில்
அண்டியிரு சாரியிற் பாய்ந்
தட்டகிரி யட்டதிசை யைத்தகர்த் திடுகவன
அசுவபதி யேகருப்பஞ்

சிலேயேந்து புயமும்முன் கைக்கொளுசு மசையநீ
சிறுபறை முழக்கியருளே
செங்கோல் செலுத்துமுரு கப்பவிற் பன்னனே
சிறுபறை முழக்கிய ருளே. (1)

(1) கபடம்-வஞ்சனே ; ஐந்து கதி-சிம்ஹ கதி ; மயூர கதி, வானர கதி, வியாக்கர கதி, குஞ்சர கதி என்பன ; மனு-நூல் ; முட்டு - கடிவாளம் ; கலன் - சேணம் ; வெய்யோன்பரி - சூரியன்தேரில்கட்டிய வழுகுதிரைகள் ; இருசாரி-வல சாரி, இட சாரி ; அசுவபதி - குதிரைகளேயுடைய தலேவனே இதில் குதிரையின் வருணனே குறிப்பிடுதல் காண்க. கருப்பஞ்சிலே யேந்து புயம் என்ருர் மன்மதனுகக் கருதி.

587 தரிக்கின்ற நாலுகோட் டைச்சமத் தானரா
சர்முத்து விசைய ரெகுநா
தக்கெவுரி வல்லவப் பெரியவுடை யாத்தேவ
சாமிரா சேந்திரனிடமே

பரிக்கின்ற பண்ணைக் கிராமமத யானைவெம்
பரிசிவிகை வரிசை பெற்றோய்
பழமைபெறு மல்லைக் குழந்தைநா வாணன்
பகர்ந்தபிள் ளைத்தமிழ்க்கே

விரிக்கின்ற யாடையா பரணமும் சிவிகையும்
விளைவாரி யனேந்தலால்
மிகுவயலும் வயல்சூழ்ந்த புறவையும் மாணியம்
விரும்பிநிலை பெறவுதவியே

தெரிக்கின்ற பட்டயம் தனிலொப்ப மிடுகையால்
சிறுபறை முழக்கி யருளே
செங்கோல் செலுத்துமுரு கப்பவிற் பன்னனே
சிறுபறை முழக்கி யருளே. (2)

(2) பண்ணைக் கிராமம்-பண்ணையென்ற பெயருள்ள கிராமம்; சிவிகை-பல்லக்கு; புறவு-சாகுபடி நிலம்; மானியம் - கிராம சமுதாயத்தாருக்கு செய்த நன்மைக்குப் பிரதியாக விடப்பெற்ற இறையிலிநிலம்; பட்டயம்-செப்புப் பட்டயம் முதலியன; ஒப்பம்-கையொப்பம். இப்பாட்டினின்று ஆசிரியர் வரலாறு நூல்பெற்றோன் வரலாறு சிறிது விளங்குகின்றன.

588 ஈட்டஞ்செய் நியமநகர் தனிலிருந் தேவந்நு
இளசையம் பதிபுரந்து
இசைபெற்ற தேவர் முதல் முருகப்ப தேவர்வரை
எண்ணரிய தேவரெ ல்லாம்

நாட்டஞ்செய் யுருவமொன் றுய்ப்பழனி யப்பேந்திர
நாகரீகன் மைந்த னென்ன
நாளுமிரு கண்டுசுத னைப்போல வளர்ந்தசேய்
ராசாங்க யோகசாலி

கோட்டஞ்செய் சிறுபால ரிசைமுழக் கத்தாயர்
கூர்ந்துவகை தான்முழக்கக்
கோவையிதழ் மாதர்சுப சோபன முழக்கவிக்
குவலயத் தரசர்திறையும்

தேட்டஞ்செய் நிதிகளுநர் தொகைமுழக் கிடவைய
சிறுபறை முழக்கி யருளே
செங்கோல் செலுத்துமுரு கப்பவிற் பன்னனே
சிறுபறை முழக்கி யருளே. (3)

(3) இசை-புகழ்; மிருகண்டு சுதன்-மார்க்கண்டன்; கோவை இதழ்-கொவ்வைக் கனி போன்ற இதழ்; தேட்டம்-சம்பாத்திய பொருள்.

## சிறுதேர்ப் பருவம்

589 கொள்ளரிய தேவரைப் பாண்டிநா டோங்கும்
குருக்களைத் தாய்தந்தையைக்
குணவன்னியா னந்தரைப் பணிவை யார்முனும்
குவியாத மகுடவேந்தே

வள்ளரிய செங்கமல வாவியும சோலையும்
மறையோர்கள் நிறைய கரமும்
மன்னும் சிவாலயமும் மாடமா ளிகையு மணி
மகரதோ ரணவீதியும்

தள்ளரிய குணமாதராட்டலும் பாடலும்
தனதானமும் கல்வியும்
தகு மிளசை நகர்வந்த வாச்சமா காளியன்
தான்சேர் மாஞானமே

தெள்ளரிய பரைமுத்து மாரியைப் பணியையநீ
சிறுதேர் நடத்தியருளே
செங்கண்மா லானமுரு கப்பமக ராசனே
சிறுதேர் நடத்தி யருளே. (1)

(1) யார் முனும் பணிவைக்குவியாத- உயர்ந்தவர்கள் சூழ்ந்த சபையில் யார் முன்னும் மேற் கூறியவர்களுக்கு அடங்குதலைக் குலிக்காத (குறைக்காத); வள்-வளம்-கடைக்குறைந்தது ; அரிய-அருமை உயர்வின் மேல் நின்றது ; அகரம்-பார்ப்பனச் சேரி ; தனதானம்-பொருட் கொடை ; பரை-காளிக் கொரு பெயர். ; சம்மட்டி—குதிரை யோட்டுங்கருவி.

590 நம்புற்ற வங்கிநா ராயண சம்மட்டி
நாரண வருபட்டமா
ணங்காத்த வாவெங் கலப்பரியின் மீதேறு
ராயரா குத்தமிண்டா

சொம்புற்ற வந்தம்பிற் கண்டனே யுரிகோல
சுரதானவ சகாயனே
சொல்லனு மடால் கெருட் டால்சிம்ம டால்வெ
சுருட்டிபா வாடை யுற்றோய்

கும்புற்ற காவிரிப் பூம்பட்டி னத்தில்நல்
குடியொன்று மாற னந்நாள்
கூட்டவந் திருவன்நிக ருந்தனம றியாதங்
குறித்துநூல் தனிலு கந்தே

தெம்புற்ற தருமவானன் றுதவி ஞரதில்
சிறுசேர் நடத்தி யருளே
செங்கண்மாலானமுரு கப்பமக ராசனே
சிறுதேர் நடத்தி யருளே. (2)

(2) சம்மட்டி - குதிரைஓட்டுங்கருவி; கலப்பரி-சேணமிட்டகுதிரை ; மிண்டன்-திண்ணியோன் ; சொம்பு உற்ற-அழகுற்ற; கும்பு-திரள் ; சிம்மாடல்-சிம்மக்கொடி, இக்கொடி முருகப்ப தேவருக் குரிய தல்ல, சிந்தித்தற் குரியது ; வெண் சுருட்டி - வெள்ளிய ஆலவட்டம் ; சுரர்-தேவர் ; தானவர்-அசுரர், இப்பாட்டில் சில சொற்கள் புதுமை யாயுள்ளன. என்ன திசை சொல்லோ ?

591 வெள்ளியம் சில்லியில் பொன்னிறு லச்சிட்டு
விரிதுகிற் கால் நிறுத்தி
மேற்பலகை யதனுல மைத்துச் சுவர்னம்
விளங்கும் கொடுங்கை சேர்த்துப்

புள்ளியம் கதிரின வாற்றின்மர லிகைநானு
புறமும்மென் மேல் நிரைத்துப்
பொற்பா ரலங்காரம் வைத்துநற் சங்கிலிகள்
பூட்டிச் சாலாத்தி சூட்டித்

துள்ளியம் கதிமீறு வாசினே கட்டியுஞ்
சொந்தமா கியமாமனும்
சுகிர்தவய் யக்குட்டி பூபதி யனுப்பினன்
துரிதமுற் றதிலேறியே

தெள்ளியங் கனமறுகில் விளையாடு சிறுவரொடு
சிறுதேர் நடத்தி யருளே
செங்கண்மா லானமுரு கப்பமக ராசனே
சிறுதேர் நடத்திய ருளே. (3)

(3) சில்லி-சக்கரம்; மாலிகை- மாலே. வாசி- இணை-வாசிணை-இருகுதிரைகள்; மறுகு-தெரு.

## வாழ்த்து.

592 நீர்வாழி யானசரவு ணமேல் பிறந்தபர
நிர்மலவத் துவிதஞான
நிட்களா னந்தச் சடாட்சர சொரூபமாய்
நிறைவசீ கர நிதானர்

கூர்வாழி யானவேல் கந்தர்குன் றக்குடிக்
குமரேசர் தோகை மயில்மேல்
கோடிசூ ரியரெனத் தோன்றும் தயாநிதிக்
குகனூர் தருங் கிருபையால்

பார்வாழி யானதுரை வாச்சமா காளியாம்
பழனியப் பேந்திர னீன்ற
பாலன் சுசீலன்முரு கப்பவிற் பனனை
பாண்டவர் சகாயன்வாழி

சீர்வாழி மறைவலோர் இளைவாழி பசுவாழி
திருநாடு நகரம் வாழி
செயலான மந்திரிகள் கர்ணீகர் சதுரங்க
சேனையா திக்கம் வாழி

கார்வாழி பயிர்வாழி தனதானியம் வாழிநம
கருதியுரை பிள்ளைத் தமிழ்
கவிவாழி தருமமும் கீர்த்தியும் பெருகியெக்
காலமும் வாழிதானே. (1)

(1) சரவணம்-சரவணப்பொய்கை; சடாட்சரம்-சரவணபவ என்பது; கர்ணீகர்-கணக்கர்கள் வாழி என்று வரும் அநேக இடங்களில் வாழ்க என்ற பொருளும்; சில இடங்களில் அசையுமாயுள்ளது காண்க.

# செய்யுள் முதற் குறிப்பு


| | பக்கம். |
|---|---|
| அகரந்தான் | 224 |
| அகிலூராவி | 154 |
| அங்கயற்கண்ணி | 255 |
| அஞ்சி வணங்கிய | 280 |
| அஞ்ஞானப் பெருமதகரி. | 199 |
| அடங்காத | 23 |
| அடியாற் பிறவி | 20 |
| அடுக்குமணி | 320 |
| அண்ட பகிரண்ட | 53 |
| அண்டமாமதி | 241 |
| அண்டர்கள் | 210 |
| அணிகிளரகில | 194 |
| அணிகொள் | 188 |
| அதிரத | 290 |
| அதிரப்பொரு | 96 |
| அந்தமிகு வளையாழி | 256 |
| அந்தர முதித்த | 177 |
| அப்பன் வருதருணம் | 232 |
| அமரர் இன்னரர் | 22 |
| அமிழ்தினு மினிய | 143 |
| அம் சிறைய | 3 |
| அம் பொன் | 248 |
| அம்மையப்பனுறு | 222 |
| அம்மையருள் | 226 |
| அரமகளிர் | 21 |
| அரவணை | 296 |
| அரவிந்தமென | 169 |
| அரிக்கிண்கிணி | 112 |
| அரிலூடு படர் | 161 |
| அருணமணி | 83 |
| அருண்மண | 205 |
| அருமறைகள் | 153 |
| அருமாமறை | 82 |
| அருமைப் பெருமான் | 38 |
| அருவென | 144 |
| அருளாரம் | 225 |
| அருளுருக் கொண்ட | 213 |
| அருள்மயமா | 183 |
| அலகில் கருணை | 153 |
| அலைவளைக்கும் | 15 |
| அல்லி மணக்கும் | 160 |
| அளவில் மகிழ்ச்சி | 144 |
| அளிச்சுற்றிய | 56 |
| அளிதை மலர் | 92 |
| அறுகால் வரிச்சுரும்பு | 12 |
| அறுபத மூழ்கிய | 176 |
| அறிவில் சிறுவர் | 96 |
| அறிவுறு | 326 |
| அனகா வருக | 281 |
| அன்பாற் பணிய | 59 |
| அன்பின் மயமான | 183 |
| அன்போடணைத்து | 51 |
| ஆடகச் செம் | 273 |
| ஆதிமுதற் பிரமா | 115 |
| ஆதியுமீறு மிலாத | 122 |
| ஆரணப் பொருள் | 4 |
| ஆராவமுதத்தில் | 37 |
| ஆர்க்கு மருமை | 308 |
| ஆலிலைமேலொரு | 122 |
| ஆழிசூழ் புவனத்தில் | 312 |
| ஆறுபத நடு | 150 |
| ஆறுமுகமே சாந்த | 190 |
| இடிக்குங்கடு | 18 |
| இடிக்கும் வெம் | 85 |
| இடையிற்றொடிய | 19 |
| இத்தனை யழைக்கினும் | 110 |
| இந்துற்ற | 328 |
| இமைய நெடு | 68 |
| இரவி மதியம் | 101 |
| இரவியொரு | 176 |
| இரு குழையு | 12 |
| இருமைக்கு | 64 |
| இருவினை | 9 |
| இருள்வரவு | 245 |
| இழைக்கும் | 158 |
| இளைக்கும் | 94 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| இன்பக்கதி .. .. | 242 | கங்கை யமுனை .. .. | 313 |
| இன்னு மிலங்கியே .. | 151 | கஞ்சமலர் .. .. | 260 |
| ஈட்டஞ் செய் .. .. | 338 | கஞ்சமெனை .. .. | 329 |
| ஈரநறை .. .. | 170 | கஞ்சன்விடு .. .. | 181 |
| உக்கிரகர .. .. | 292 | கடமுற்றிருந்து .. .. | 118 |
| உடுக்குந் திரை .. .. | 25 | கடல் முத்தம் .. .. | 93 |
| உண்ணயந் தொழுகு .. | 201 | கண்டவர் .. .. | 203 |
| உயர்வில் .. .. | 225 | கதழெரி யெரிதர .. | 148 |
| உருவாயுயிராய் .. .. | 58 | கதிரும் கதிர்கால் .. | 280 |
| உரைக்குஞ்சது .. .. | 57 | கத்துங் குருகடை .. | 84 |
| உரை பெற்ற .. .. | 324 | கத்துந்தரங்க .. .. | 239 |
| உலக நிலை .. .. | 212 | கந்தம்மிகுந்த .. .. | 259 |
| உலை வளைக்கு .. .. | 30 | கந்தம்வளர் .. .. | 74 |
| உழலும் வெம் .. .. | 136 | கமலயோனி .. .. | 206 |
| உழுதுழுதிசை .. .. | 55 | கமையின் நிருதர் .. | 68 |
| உள நெகிழ்ந்திரு .. | 35 | கயங்கொண்டலம்பி .. | 16 |
| உற்றவர் கண்டு .. | 285 | கயல்விழி .. .. | 105 |
| உன்னுதற்கரிய .. | 192 | கயிலைப்பதியிரவு .. | 198 |
| ஊருக்கு .. .. | 2 | கயிலைப்பனி .. .. | 293 |
| ஊறுபால் நறை .. | 168 | கயிலைமலை .. .. | 190 |
| எண்ணத்துயர்ந்த .. | 174 | கரணவண்டம் .. .. | 223 |
| எண்டலந்தன்னில் .. | 241 | கரமும் விழியும் .. | 164 |
| எண்டிசையோரும் .. | 198 | கருணை பெருகி .. .. | 20 |
| எத்திக்கும் .. .. | 14 | கருது சமய .. .. | 18 |
| எந்தத் திசையினு .. | 301 | கருநிறநெட்டுடல் .. | 71 |
| எரியுமனல் .. .. | 33 | கருவைப்புனித .. | 299 |
| எள்ளா வடலூர் .. | 187 | கரைபொரு .. .. | 76 |
| எறிகுழை .. .. | 141 | கலியுகத்தின் .. .. | 184 |
| எறிதிரைப்புனல் .. | 117 | கலைநாண்மதியின் .. | 175 |
| என்னென்று .. .. | 45 | கலைபயில் .. .. | 142 |
| எழிலைம்பாலை .. .. | 211 | கலைமணந்தொளிர் .. | 35 |
| ஒருநாலுநுதி .. .. | 70 | கலையேந்து .. .. | 337 |
| ஒரு பொருள் .. .. | 211 | கலைவல்ல .. .. | 233 |
| ஒரு பொன்னுடன் .. | 265 | கலைவளர் .. .. | 230 |
| ஒள்ளொளி .. .. | 13 | கல்லார் தமக்கும் .. | 221 |
| ஓசைக் கடலில் .. .. | 237 | கல்லாதவர் .. .. | 204 |
| ஓடு நதிப்புனல் .. .. | 115 | கல்வேழமுண்ணு .. | 132 |
| ஓது மழை .. .. | 66 | கழையுடை .. .. | 149 |
| கக்கக்கொழு .. .. | 26 | களிக்குஞ் சுரும்பர் .. | 46 |
| கங்கா நதிச்செழும் .. | 54 | கள்ளக் கருங்கண் .. | 99 |
| கச்சணிமகுட .. .. | 291 | கறைகெழுமு .. .. | 52 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| கற்பகச்சோலை | 293 | குவளைவிழி | 177 |
| கற்பூத்தெதிர்ந்த | 164 | குழகனைகண்ட | 219 |
| கற்றசொற்பா | 295 | குழைகா | 147 |
| கனகத்தமுத்தி | 307 | குழையிற்றுலங்கு | 159 |
| கனகவரை | 253 | குறிகள் | 223 |
| கனதாடகையும் | 262 | குறியங்கை | 137 |
| கனிறந்தரு | 173 | குறியவுருவம் | 102 |
| காதல்நறை | 149 | குனிசிலையை | 152 |
| காதூர்கயற்கண் | 238 | குனிதவழ | 162 |
| காமாதருகா | 298 | கூர்க்கின்ற | 286 |
| காமேவுயர் | 246 | கூர்க்கின்ற | 289 |
| காரணுகும் | 197 | கூறருந்துதியை | 42 |
| காருங்கடலும் | 247 | கேசவன் வருக | 101 |
| கார்கொண்ட | 185 | கைப்பட்ட | 283 |
| கார்கொண்ட | 254 | கையாற்செறித்த | 288 |
| கார் நடத்தும் | 125 | கொங்கார் | 141 |
| கார்மேவு | 254 | கொங்குலவு | 251 |
| காலநியதி | 206 | கொண்டலின் | 100 |
| காலின் விலங்கை | 261 | கொண்டலினொடு | 106 |
| காலை முறுக்கவிழ் | 116 | கொத்தோடசைய | 50 |
| காலையெழு | 167 | கொந்தளக | 269 |
| காவதங்கமழ் | 180 | கொந்தார் | 6 |
| காவின் கமுகும் | 258 | கொந்தார் | 193 |
| காவுக்கிசைந்த | 328 | கொந்தார் மலர் | 233 |
| காவாயாதி | 155 | கொல்லாவிரத | 235 |
| காவொழுகு | 140 | கொல்லாவிரதம் | 221 |
| கிட்டாப்பரம் | 1 | கொள்ளரிய | 338 |
| குங்கும மணி | 123 | கோசலையளித்த | 135 |
| குடநடமிடு | 303 | கோலச்சிலை | 163 |
| குடவளைகள் | 276 | கோவாத முத்தம் | 157 |
| குடிவைத்தவர்க்கு | 316 | கோவாதவாரம் | 178 |
| குணமுடன் | 111 | கோவே கோவா | 48 |
| குணரத்தின | 309 | சங்காழிகொண்ட | 70 |
| கும்பநிரை | 249 | சத்தாம்பொருளில் | 196 |
| குயிலிசை பழகு | 303 | சத்துசித்தா | 227 |
| குருகையாழ்வார் | 135 | சந்தமென் | 208 |
| குருகுயர் | 250 | சந்தப்படாமுலை | 43 |
| குருத்தபெரு | 287 | சந்தன கதம்ப | 13 |
| குருமணிமேகலை | 73 | சந்தாடவியும் | 32 |
| குருளும் சிறிது | 113 | சந்திரன் | 251 |
| குலவரை | 133 | சமரிடுபடை | 275 |

| | பக்கம். |
|---|---|
| சற்குண சலாபன் .. | 319 |
| சாரங்கமென்றுந் .. .. | 271 |
| சித்தனெல்லாம் .. | 202 |
| சிந்தனைநைந்து .. | 220 |
| சிந்தாமணியே .. .. | 37 |
| சிந்தாமணியே .. .. | 281 |
| சில்லியந்தேர்மே .. | 131 |
| சிறந்திடும் .. .. | 214 |
| சிறிய திருமடல் .. | 9 |
| சிறியார்கள் .. .. | 335 |
| சீதநறுங்கடல் .. .. | 156 |
| சீதளமிக்க .. .. | 91 |
| சீதரநாரண .. .. | 121 |
| சீரார் கருணை .. .. | 213 |
| சீர்கொண்ட .. .. | 203 |
| சீர்வளர் .. .. | 185 |
| சீர்வளரும் .. .. | 184 |
| சுத்த சன்மார்க்க .. | 227 |
| சுந்திரமின் .. .. | 300 |
| சுடர்விடு .. .. | 1 |
| சுருதித் தருவிற்கு .. | 98 |
| சூடாமணியே .. .. | 321 |
| சூரகலுற .. .. | 205 |
| சூலாமைப்பால் .. | 390 |
| சூழும் திருவரை .. | 146 |
| செகமண்டலீ .. .. | 260 |
| செங்கமல .. .. | 65 |
| செங்குருதியலே .. | 41 |
| செத்தார்கார் .. .. | 232 |
| செந்தழல் புகுமென .. | 85 |
| செம்பொற்றகட்டால் .. | 314 |
| செம்மைகொள் .. | 195 |
| செவ்வேளெனு .. | 187 |
| சேவடிநோதர .. .. | 123 |
| சொக்கப்பெருமான் .. | 207 |
| சொருபந்தனே .. .. | 208 |
| சொல்லற்கரிய .. .. | 19 |
| சொற்றநான் .. .. | 27 |
| சொற்றேறு .. .. | 2 |
| சொன்னவரை .. .. | 103 |
| சொன்னிலே .. .. | 210 |

| | பக்கம். |
|---|---|
| சோதிபெறு .. .. | 109 |
| சோதிமரம் .. .. | 196 |
| தகரங் கமழுங் .. .. | 79 |
| தங்குமுயர் .. .. | 231 |
| தடமொத்த .. .. | 299 |
| தடிக்குஞ்சிகர .. .. | 50 |
| தண்சுடர் .. .. | 134 |
| தண்டை சதங்கை .. | 304 |
| தண்ணமிகு .. .. | 325 |
| தண்ணமுத .. .. | 269 |
| தத்தும் திரை .. .. | 154 |
| தத்துவநீக்கம் .. .. | 209 |
| தத்துறுதரங்க .. .. | 65 |
| தந்தானெனக்கு .. | 60 |
| தந்திமருப்பில் .. .. | 261 |
| தப்பிலதுநீயாம் .. | 224 |
| தமரமுறு .. .. | 311 |
| தயவுயர் செய் .. .. | 244 |
| தரிக்கின்ற .. .. | 337 |
| தருக்காமலர் .. .. | 47 |
| தருநீழலிடை .. .. | 59 |
| தருமங்கை .. .. | 136 |
| தருவொருமகள் .. | 179 |
| தரைமுதல் .. .. | 229 |
| தவநெறிக் கவுதமன் .. | 43 |
| தழைமடற்பசை .. | 28 |
| தனையாரமலர் .. .. | 161 |
| தற்பரவெளியருள் .. | 199 |
| தாதவிழ் .. .. | 15 |
| தாதார்நறு .. .. | 100 |
| தாநீக .. .. | 157 |
| தாரணியினொடு .. | 166 |
| தாராடுமுடி .. .. | 73 |
| தாளாலுருள் .. .. | 315 |
| தாறுபாய் .. .. | 272 |
| திருகுபுரி .. .. | 268 |
| திருவருட்பிரகாச .. | 186 |
| திருவருட்பிரகாச .. | 212 |
| திருவளர் .. .. | 216 |
| திருவளர்ஞான .. | 230 |
| திருவெழுத்து .. .. | 189 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| தீயெனக்கட்கடை .. .. | 277 | நாறுநடப்புகு .. .. | 88 |
| தீராநேயத்துடன் .. | 172 | நாறுமகிற்புகை .. .. | 78 |
| துட்டப்பகைஞர் .. .. | 336 | நாளை நீநான் .. | 234 |
| துதிசெய்யு .. .. | 245 | நிதிகொண்ட .. .. | 323 |
| தூரத்தும்கொடு .. .. | 119 | நிரையும் .. .. | 14 |
| துவளுமருங்கின் .. | 282 | நிலமகள் .. .. | 273 |
| துவளுமிடை .. .. | 151 | நிறக்கும்வடநூல் .. | 128 |
| துளிக்குந்திரு .. .. | 32 | நினைவிற்பலபல .. .. | 270 |
| துளிதூங்கு .. .. | 162 | நின்னைப்பரவா .. .. | 316 |
| துன்மார்க்க .. .. | 200 | நீண்டவைம் .. .. | 218 |
| துன்னியகரண .. .. | 200 | நீதியுடைய .. .. | 215 |
| தூயசொர்ன .. .. | 257 | நீர்வாழி .. .. | 340 |
| தூயமறை .. .. | 329 | நீறுபடமலவிருள் .. | 218 |
| தூலவுடல் .. .. | 231 | நீறுபடுதவள .. .. | 57 |
| தெருளோங்கு .. .. | 219 | நெடுமுடிப்பஃறலை .. | 108 |
| தெளிக்கும் .. .. | 5 | நெட்டுடல் .. .. | 192 |
| தெள்ளறல் .. .. | 191 | நெறிந்துகருமை .. | 174 |
| தென்பொதிய .. .. | 317 | நெற்றிக்கு .. .. | 228 |
| தேசலைவுற்றனே .. .. | 89 | பங்கயமலர் .. .. | 263 |
| தேயுமுடலாளி .. .. | 334 | பங்கயாசனனும் .. | 201 |
| தேராதவன் .. .. | 107 | பஞ்சஞ்சு .. .. | 202 |
| தேறுந்தமிழ் .. .. | 320 | படநடுங்க .. .. | 27 |
| தேனிமிர்கற்பக .. | 77 | பண்டமரன் .. .. | 252 |
| தேனுகனற்று .. | 90 | பண்டரு .. .. | 194 |
| தொடரு .. .. | 332 | பண்டாலிலேயில் .. | 8 |
| தொன்னலம் .. .. | 249 | பண்டாலிலேயின் .. | 36 |
| தோற்றியதிரு .. .. | 165 | பண்ணுர் மதுரம் .. | 17 |
| தோற்றுபேதை .. | 315 | பண்ணேறியமென் .. | 49 |
| தையலிலகு .. .. | 267 | பண்ணைதரங்க .. .. | 98 |
| நகமுறும் .. .. | 193 | பதிநித்யவறிவாம் .. | 212 |
| நதிசேர்கமல .. .. | 264 | பதினறுகலே .. .. | 283 |
| நந்தாமணி .. .. | 72 | பம்புதிரை .. .. | 30 |
| நந்துமைம்பூத .. .. | 186 | பனுவலின் மழை .. | 270 |
| நம்புற்ற .. .. | 339 | பரசத்துருவை .. .. | 301 |
| நயமாம் .. .. | 264 | பரசமைய .. .. | 138 |
| நலனோங்கு .. .. | 331 | புரளும் கயல் .. .. | 146 |
| நல்லவருண .. .. | 129 | பவமேயலே .. .. | 83 |
| நறைகொட்டலர் .. .. | 113 | பவளம் பழுத்த .. | 6 |
| நன்றருளாம் .. .. | 195 | பளபளென .. .. | 30 |
| நாகணைமீதில் .. .. | 120 | பனகனதுடல் .. .. | 140 |
| நாலிரண்டெண்ணி .. | 310 | பனியைத்தெறு .. .. | 97 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| பழுக்குங்குலே .. .. | 95 | பொருதிரை .. .. | 29 |
| பாடஞ்சிறந்த .. .. | 239 | பொருதிறையெறி .. | 54 |
| பாணித் தமைத்த .. | 81 | பொற்பராகம் .. .. | 179 |
| பாயிருட் படலம் .. .. | 110 | பொற்பார் .. .. | 240 |
| பாரராவண .. .. | 4 | பொற்பிலகு .. .. | 305 |
| பாராதியைம் .. .. | 125 | பொற்புரை .. .. | 197 |
| பாரும் புனலும் .. .. | 130 | பொன்பூத்த .. .. | 64 |
| பாரேசிறந்த .. .. | 246 | பொன்னுராழி .. .. | 130 |
| பாரேந்து .. .. | 86 | பொன்னுலமைத்த .. | 336 |
| பார்பூத்த .. .. | 297 | பொன்னுல் கடிகை .. | 263 |
| பார்வழி .. .. | 322 | போரணிரத .. .. | 145 |
| பால்வாயொழுகி .. .. | 133 | போராழி சூழ .. .. | 132 |
| பாலார்மதுரை .. .. | 331 | பைத்தலை நெடு .. .. | 41 |
| பிச்சுலகம் .. .. | 226 | மகரப் பரவை .. .. | 114 |
| புகலடைந்த .. .. | 145 | மஞ்சினைக்கிழிய .. .. | 168 |
| புகலருஞ்சதுமறை .. | 34 | மஞ்சுடர் புய .. .. | 247 |
| புகல்கர்ம .. .. | 228 | மணமகளா .. .. | 204 |
| புகரற்ற .. .. | 294 | மண்டல முனக்கு.. .. | 165 |
| புடைபட .. .. | 276 | மண்டல மெங்கனு .. | 274 |
| புண்டரிக .. .. | 276 | மண்டு திரை .. .. | 24 |
| புயலேமாதம் .. .. | 335 | மண்மகளுமாய் .. .. | 3 |
| புவனமுமண்ட .. .. | 55 | மதிக்கின்ற .. .. | 279 |
| புவியிடத்தெழு .. .. | 304 | மதிக்கும்பிரம .. .. | 321 |
| புழைத்திண் .. .. | 61 | மதிமண்டலம் .. .. | 216 |
| புனலின்டு .. .. | 289 | மதியுடைத்தாய .. .. | 38 |
| புனிற்றிளங்கன்று .. | 93 | மத்தால் நெடிய .. .. | 173 |
| பூதமுறுமாயை .. .. | 217 | மத்தாலடிப்ப .. .. | 61 |
| பூதரம்பல .. .. | 284 | மரகத மேனி .. .. | 77 |
| பூப்பாயப் புடவி .. .. | 171 | மருப்பைத்தனி .. .. | 295 |
| பூமாதிருநிறை .. .. | 327 | மருமலர்ப் பங்கய .. | 118 |
| பூமாது குடி .. .. | 2 | மருவல்லி .. .. | 2 |
| பூமேவு செல்வி .. .. | 323 | மருவார் நறு .. .. | 62 |
| பூமேவு தவள .. .. | 292 | மலைமேலிடு .. .. | 275 |
| பூமேவு திருமாது .. | 323 | மலையை விளக்கு .. | 127 |
| பூவருங் கொன்றை .. | 52 | மழைக்குங் கரு .. .. | 87 |
| பூவேழு வரையேழு .. | 138 | மறிக்கும் தரங்க .. .. | 79 |
| பூவை கிளிக்கு .. .. | 116 | மறுமை தொடரு .. | 309 |
| பூவையின் மது .. .. | 96 | மறுவகல் .. .. | 302 |
| பெண்சேர்ந்து .. .. | 330 | மறைவிலவ .. .. | 243 |
| பொங்குவெண் .. .. | 31 | மனஞ்சல மிகுந்த .. | 86 |
| பொங்கோதை .. .. | 287 | மனநெக்குருகி .. .. | 175 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| மனையும் மதிலும் .. | 129 | வஞ்சியபரஞ்சி .. .. | 308 |
| மன்றல் நடத்தும் .. | 127 | வடக்குங்கும .. .. | 314 |
| மாகத்திலோர் .. .. | 311 | வடியிடுந்தேனு .. .. | 306 |
| மாதங்க .. .. | 188 | வண்டாடு .. .. | 325 |
| மாதார .. .. | 333 | வண்டார் .. .. | 279 |
| மாமேவு தெய்வ .. | 267 | வண்டிசைபாடி .. .. | 300 |
| மாவலந் தவிர .. .. | 69 | வண்டினமணுகா .. | 298 |
| மானபரன் .. .. | 318 | வண்டுகுடைந்த .. .. | 95 |
| மானவேலரசர் .. .. | 25 | வண்டுவிழி .. .. | 277 |
| மானினி விடாத .. .. | 104 | வண்ணந் தழைந்த .. | 24 |
| மின்னு முகில் .. .. | 148 | வண்ணமலர் .. .. | 257 |
| மீனுர்கார்க்கடலின் .. | 139 | வந்தடுத்தவர்கள் .. | 266 |
| முக்கட் பராபரன் .. | 297 | வந்தாசலற்றை .. .. | 253 |
| முக்கணு னுலக .. .. | 178 | வருத்திட்ட .. .. | 248 |
| முச்சக முழுதும் .. .. | 209 | வர்த்தித்து .. .. | 238 |
| முண்டகாசன .. .. | 243 | வழக்குஞ்சங்க .. .. | 155 |
| முடிக்கும் .. .. | 9 | வள்ளக்கமலம் .. .. | 80 |
| முடிமீதெர்ளிர் .. .. | 36 | வள்ளவாய் .. .. | 6 |
| முதியகவி .. .. | 10 | வள்ளற்குச்சரி .. .. | 291 |
| முத்தவமொய்த்த .. | 306 | வள்ளைக்குழை .. .. | 47 |
| முத்தாய் .. .. | 207 | வன்னக்களப .. .. | 48 |
| முத்திக்குவெஞ்சிலை .. | 73 | வாட்டமோடு .. .. | 222 |
| முத்தின்சிவிகை .. .. | 307 | வாரணியாக .. .. | 327 |
| முப்பாமும்பாழ் .. .. | 234 | வாரென .. .. | 181 |
| முரணெலமு .. .. | 147 | வாலப்பிறை .. .. | 62 |
| முருகார்ந்த .. .. | 256 | வாலிபட .. .. | 114 |
| முருகுவிரி .. .. | 91 | வானகத்தெழு .. .. | 317 |
| முருகொமுகு .. .. | 11 | வானுடரும் .. .. | 10 |
| முழுமலமுற .. .. | 229 | வானுருமுப்பத்து .. | 51 |
| முளைக்குந்தவள .. .. | 17 | வானோங்கும் .. .. | 191 |
| முறையாக .. .. | 332 | விடங்காலும் .. .. | 7 |
| முனியுமிளவலு .. .. | 29 | விடவாளரவ .. .. | 21 |
| முன்னம்வடுகை .. .. | 259 | விண்டடவி .. .. | 44 |
| மூவாமுதலா .. .. | 31 | விண்டோய் .. .. | 252 |
| மேல்பால் முளைக்கும் .. | 58 | விண்ணிலமரர் .. .. | 242 |
| மைக்கட்குவளை .. .. | 159 | விண்ணுலகில் .. .. | 217 |
| மோனமதாகி .. .. | 220 | விண்பொருத் .. .. | 152 |
| வச்சிரக்குலிச .. .. | 8 | விதுரன் மனையில் .. | 33 |
| வஞ்சமொன்றின்றி .. | 313 | விரிக்கும்பணை .. .. | 81 |
| வஞ்சப்புணர்ப்பில் .. | 112 | விரைசெறி .. .. | 169 |
| வஞ்சினக்கரு .. .. | 124 | விரைசெறி .. .. | 237 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| விரையார் .. .. | 324 | வெள்ளியம் .. .. | 339 |
| விளரிச்சுரும்பர் .. .. | 97 | வெறிக்குங்கும .. .. | 285 |
| விளரியளிகள் .. .. | 156 | வேண்டக்கிடையா .. | 46 |
| விளிக்குங்கடுந்துரல் .. | 88 | வேதங்களோ .. .. | 23 |
| வீதிதோறு .. .. | 274 | வேததவபோதனர் .. | 318 |
| வீழியங்கட்கனி .. .. | 170 | வேதமுதல் .. .. | 235 |
| வெங்கதிர்முன் .. .. | 126 | வேதவரை .. .. | 89 |
| வெண்டிரை .. .. | 75 | வேதவாகம .. .. | 215 |
| வெம்பொறி .. .. | 120 | வேரிக்கனியே .. .. | 160 |
| வெம்புகட்டழல் .. .. | 167 | வேரிச்சுனையிற் .. .. | 288 |
| வெவ்வராவிட .. .. | 40 | வேலையில் .. .. | 330 |
| வெவ்விராகு .. .. | 312 | | |